# சுந்தர காண்டம்

ஜெயகாந்தன்



# சுந்தர காண்டம்

ஜெயகாந்தன்

மின்னூலாக்கம் : செல்லா

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

# முன்னுரை

சுந்தரகாண்டம், குங்குமம் வார இதழில் ஐம்பது வாரங்கள் தொடர்கதையாக எழுதப்பட்டது. வாசகர்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் நாவல் முடிந்த பின் குங்குமம் இதழில் பதில் சொல்லியிருந்தேன். வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலும், சந்தேகங்களுக்கு விளக்கமும் தருவதுதான் அநேகமாக நான் எனது புத்தக முன்னுரைகளில் செய்யும் பணி.

இருப்பினும் இந்தக் கதையின் மூலம் நான் நமது பெண்மக்களுக்கு என்னென்னவோ சொல்ல முயல்கிறேன். அவை புத்திமதிகள் அல்ல. எச்சரிக்கைகளும் அல்ல. அவற்றால் எல்லாம் ஏதும்பயனிராது என்பதை நான் அறிவேன். ஆயினும் நமது பெண்கள் அறிய வேண்டிய நம்மைப் பற்றிய உண்மைகள் நிறைய உள்ளன. அதாவது பெண் என்பவள் அவளே சில சமயங்களில் எண்ணி மயங்குவதுபோல் ஒரு தனிப்பிறவி அல்லள். அவள் ஆணின் பாதி, அவள் காதல் வயப்பட்டிருந்தாலும், கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தாலும், இந்தத் தளைகளில் தன்னைப் பிணித்துக் கொள்ளாத சுதந்திரப் பறவையாக வாழ நேர்ந்தாலும் அவள் நமது சமூகத்தின் பாதுகாப்புக்கு உட்பட்டவள்தான்.

காதலும் கல்யாணமும் குடும்ப வாழ்க்கையும் ஏதோ தான் சம்பந்தப்பட்ட தனி விவகாரம் என்று எண்ணுகிற பெண்தான் பேதை. அது சமூகம் சம்பந்தப்பட்டது என்று அறிவிப்பதே இந்தக் கதையின் முதல் நோக்கம்.

பெண்களே!

நீங்கள் உங்கள் தந்தை என்றும் காதலன் என்றும் கணவன் என்றும் நம்பி உங்களை ஒப்புக் கொடுக்கிறீர்களே, அவர்கள் யார்?

அவர்களே இந்தச் சமூகத்து மனிதர்கள், அவர்கள் கொடுமைக்காரர்கள். பெண்ணை மதிக்கத் தெரியாத மிருகங்கள். பெண்ணை மண்ணுக்கு இணையாக மதித்து உழுது மிதித்து, அகழ்ந்து தூர்க்கிறவர்கள். உங்களை அவர்கள் வேண்டாத சுமையாக எங்கேயேனும் தள்ளிப்

போடவே விரும்புகிறார்கள். தலையில் வந்து விடிந்து விட்டதாக இறக்கிப் போட்டு எற்றி எறிகிறவர்கள். மாட்டை வணங்குகிற மரபுபோல் உங்களை லட்சுமிகர மாக்கி அவர்கள் தொழுவார்கள். நேரம் வரும்போது தெரியும் இந்தக் கசாப்புக்காரர்களின் காதல் லட்சணம்.

மதிப்புக்கும் அன்புக்கும் உரிய உங்கள் இனிய பாதி யான ஆண்மகன் இந்த வசை எய்தி வாழ்வது எதனால்?

வசைக்குரிய ஒரு சமூகத்தின் அடிமையாக அவனும் வாழ்கிறானே, அது பற்றிய பிரக்ஞையற்று, தான் ஒரு எசமானன் என்று உன்னிடம் வந்து ஓர் அடிமை அதிகாரி யைப் போல், சுரண்டல் வியாபாரியைப் போல் நடந்து கொள்கிறானே அதற்கெல்லாம் காரணம் அவனது சமூகத் தொடர்பேயாகும்.

சமூகம் என்பது ஏதோ தனித்துத் தெருவில் திரிவது மட்டுமல்ல; அது தந்தையாய், சகோதரனாய், சக்தி வாய்ந்த பெரிய மனிதனாய், காதலனாய், கணவனாய் ஒவ்வொரு குடும்பத்திலும் வந்து ஆரோகணித்துச் செய்கிற அட்டகாசங்களைத் திமிர்ந்த ஞானச் செருக்குடைய பெண்களே தவிர வேறு யார் அறிவர்?

இளம் பெண்களே! காதல் என்ற பேரிலும், கல்யாணம் என்ற பந்தத்திலும் இந்தச் சமூக மனிதனிடம் மோசம் போய் விடாதீர்கள் என்று எச்சரிக்கிறது இந்தக் கதை.

அப்படிப்பட்ட பந்தங்கள் ஒரு சமூக விரோதியோடு ஏற்பட்டுவிடுகிற பட்சத்தில் அது உங்களைக் கட்டுப் படுத்தலாகாது என்று உங்கள் சார்பில் அனைவரையும் போராடச் சொல்கிறது இந்தக் கதை.

உங்களை அந்தச் சமூக விரோத சக்திகள் சிறை யெடுப்பினும் சீர் கெடுப்பினும் உங்களின் நிறையை அழிக்க அவர்களால் ஒண்ணாது என்று இக்கதை எடுத்து ஓதுகிறது.

இன்னும் ஒருமுறை படியுங்களேன்.

நன்றி.

**சென்னை–78**
**2–9–82** **த. ஜெயகாந்தன்.**

# சுந்தர காண்டம்

``Rama and Sita are the ideals of the Indian nation. All children, especially girls, worship Sita. The height of a woman's ambition is to be like Sita, the pure, the devoted, the all suffering...

**நமது பெண்கள்**
ஸ்வாமி விவேகானந்தர்

## 1

*"நீ எங்கிருக்கிறாய்" என்ற சோகமான அலறல் பூமியிலிருந்து கிளம்பி ஆகாசத்திலும், திசைகளிலும் மோதி எதிரொலிக்க அவன் மூர்ச்சையானான்... என்று ஆரம்பமாயிற்று அந்தக்...கதை?...கட்டுரை? கவிதை?*

*மறுபடியும் தலைப்பைப் பார்க்கிறாள்.*

*'ஹே! சீதே... என்ற கம்பீரமான புருஷோத்தமனின் தீனமான பிளிறலாய்ச் சிதறுகிற எழுத்து...*

*அவள் கண்களில் கொப்பளித்துச் சுரந்த கண்ணீர்த் திராவகத்தில் எழுத்துக்கள் மறைகின்றன. காவிய சோகம் திரையிடுகிறது.*

*...'அவன் மூர்ச்சை தெளியாமல் வெறித்த விழிகளுடன் திசைகளை அளந்த பார்வை நிலை குத்திப் போக விழுந்து...*

*புலம்புகிறான்:*

*வைதேகி!...உனது அணிகலன்கள் எல்லாம் இந்த மண்ணில் விழுந்து கிடக்கின்றன... ரத்தினங்களும் முத்தும்*

வேண்டாமென்று உதறிப் பெண்மையின் அணிகலன்களை மட்டும் தரித்துக் கொண்டவளே, நீ எங்கிருக்கிறாய்?

துயரமும் அச்சமும் கண்ணீரும் அவமானமும் கண்களில் தேங்க வானத்தை நோக்கி தீனமாய், அவலமாய்ப் பெருமூச்செறியும் கோடானுகோடி பாரதப் பெண்களில் நீ யாராக, எந்தக் காராக்கிருகத்தில், எவர் காவலில் எங்கே, கட்டுண்டு கிடக்கிறாயோ?

ஏ! பூமியின் புதல்வியே! உனக்குத் தாய் இல்லை; தந்தை இல்லை; உடன் பிறப்பு இல்லை; உற்றார் உறவினர் இல்லை; உனக்கு ஜாதி இல்லை; மதம் இல்லை; குலம் இல்லை; கோத்திரம் இல்லை; நாடு இல்லை; மொழி இல்லை...எல்லையற்ற துன்பமே! நீயே சீதை! ஏ, இறுதி காணாச் சோகமே! நீயே சீதை!

நீ வருத்தமாகிய பாரமிக்க மலை; நிலத்தினும் விரிந்த கண்-நீராகிய மாகடல் நீ! ஜடம் நீ; உனக்கு உணர்ச்சி இல்லை; நீ பொங்குவதும் புரள்வதும் மாயத்தோற்றம். உன்னை எடுப்பவனும், இடிப்பவனும், எற்றுபவனும், சுற்றுபவனும், கிழிப்பவனும், பிளப்பவனும், உழுபவனும், தொழுபவனும் இராவணனே...

ஹே! மாயா சீதே...நீ அரசோச்சுவது ஒரு மாயத்தோற்றம்; நீ சிரச்சேதமாவதும் ஒரு மாயத் தோற்றமே... உனக்கு மரணமும் இல்லை; மெய்யாகவே நீ இராவணன் கைக்கூண்டுக்கிளி...

உனக்கிருப்பதெல்லாம் இராவணன், இராவணன்கள்! இராவணேஸ்வரர்கள்! அவன் ஒருவனே உன்னைச் சுற்றிச் சூழ்ந்து பல மாயத் தோற்றங்களாய்க் கவிந்துள்ளான்.

உன்னைச் சொந்தம் கொண்டாடவும், ஒருவனுக்குத் தாரை வார்க்கவும், பின்னொருவன் அபகரித்தோடவும், அடிமை கொள்ளவும், மாசுபடுத்தவும், மானங்கெடுக்கவும்...உன் வாழ்க்கை நெடுகிலும் அரக்கரும் அரக்கியரும் தவிர, உனக்கு வேறு யாரே உளர்? ஓ! தேவி!...நீ

அபலையாய், அனாதையாய், அடிமையாய், வாழ்க்கை முழுதும் கைதியாய், உழைத்தும் தேய்ந்தும் அழிகிற சிறுமையுற்ற ஜீவனாய், எத்திசையில், எவ்வூரில், எவ்விடத்தில் உழல்கின்றாயோ?...

ஏ! ஜானகி!...உன்னை ஈன்ற தாயின் உதரத்தை-இவர்கள் மண் வெட்டியினாலும் கடப்பாரைகளினாலும் அகழ்ந்து அகழ்ந்து அள்ளித்தருகிற பூமித்தாயின் சதையையும், எலும்புகளையும் சுமந்து கொண்டு சாரி சாரியாகப் போகிற இந்தக் கூலிக்கார மாதர்களில்-ஏ! மாதர் குலத்திலகமே! நீ எங்கிருக்கிறாய்?

கற்பின் கனலியே!...கைக்குழந்தையை இடுப்பிலும் சில கந்தல் குழந்தைகளைக் கையைப் பற்றிக் கொண்டும் நீ யாருடைய வரவை எதிர்பார்த்து, ஏங்கிய பார்வையும், ஏறித்தாழும் பெருமூச்சுமாய்க் காலமெல்லாம் காத்து நிற்கிறாய்?

ஏ! மைதிலி! உன்னைக் கவிந்துள்ள மாயைகள் கடலைப் போல் உவமை காட்டவொண்ணாதவை.

கல்வியிற் சிறந்தவளே, கலைகளில் உயர்ந்தவளே, கற்பின் பெட்டகமே! நீ கடலினும் பெரிய உனது கண்களில் மை தீட்டிக் கறைபடுத்திக் கொண்டு, வலையாக்கிச் சுழற்றிக் கொண்டு, காமச் சந்தையில் உன்னையே கடைபரப்பிக் கூவி விற்கும் கொடுமை அரக்க மாயையல்லாமல் வேறென்ன?

ஹே! மாயே!... என்னதான் நீ கோரப்பற்களும், குலுங்கும் அங்கங்களுமாய், விரித்த சடையோடு வெறியேறிக் குதித்தாடினாலும்,

ஏ! கார்குழலி!... குடிவெறியில் ஓர் அசுரன்-உன் கூந்தலைப் பற்றி இழுத்து முத்துப்போன்ற உன் பல்லெல்லாம் ரத்தம் கசியப் பாய்ந்தறைந்தபோது, நீ அங்கம் கிழியப் பெற்றெடுத்த உனது குழந்தை அலறியதே போல், நீயே கவிழ்ந்து விழுந்து பூமி கிழிய-அதை அறைந்து அலறி ஓலமிட்ட போதிலும்,

ஏ! சந்திரமதி!...உன்னை ராகு முழுமையாக விழுங்கிவிட்ட போதிலும்,

நீ மாசற்ற, கறையற்ற, புனிதமாய் — கொடுமையின் வெம்மையுள் குளிர்ந்த நிலவாய்... மந்தகாசத் தென்றலில் பற்றியெரியும் தீயாய்... இந்த மாயத்தின் நடுவே ஓர் சத்தியமாய்ச் சுடர்கிறாய்!

சாரி சாரியாய்க் கல்விக் கூடங்களுக்கு அணிவகுத்துச் செல்லுகிறபோது, நீங்கள் சுமக்கிற நம்பிக்கைகளும் கனவுகளும் எவ்வளவு மாயமானவை!

உடலையும் உழைப்பையும் சுரண்டி உன்னை ஓடாக்குகிற பழைய கொடுமையோடு, நமது புதிய ராவணர்கள் நீ உத்தியோகம் பண்ணிச் சம்பாதித்துத் தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார்களே-இதனை ஒரு பெருமையாய்க் கருதி நீ மயங்குவதும்,

இந்த அசுரர்களுக்கு நாங்களும் சமம் என்று மனமயக்கம் கொள்ளுவதும்...என்னென்ன மாயங்கள்...

ஹே! மாயே!...உனக்கு விடுதலை எப்போது?

ஹே! ஜனக புத்திரியே!...உனக்கு மீட்சி எப்போது?

அகில பாரத அசோகவனச் சீதைகாள்!... உம்மில் யாரும் அரக்கியர் அல்லர்...எனினும் உம்மில் யார் அந்தச் சீதை?...

"சீதா...சீதா...எங்கேடி... காலேஜ்லேருந்து வந்ததும் மாடிக்குப் போயிட்டியோ? அடியே சீதா!..." என்ற தாயின் குரல் அவள் செவிகளில், எங்கிருந்தோ ஒலிக்கும் எவருடைய குரலோ போல் கேட்கிறது...

காவியக் காட்சிகள் மறைகின்றன. காகிதத்தின் மீது கறுப்பு எழுத்துக்கள் தெரிய, அவளது கண்களிலிருந்து அருவி போல கண்ணீர்த் தாரை பெருகித் தாவணியின் மேலாக்கை நனைத்திருக்கிறது...

காபியும், டிபனும் கொண்டு வந்து டைனிங் டேபிள் மீது வைத்த பின் மகளைத் தேடிக் கீழே அனுப்பிவிட்டு மேல் தளத்தில் உலர்த்திய துணிகளை எடுத்துச் செல்ல மாடிப் படியேறி வந்த அம்மாள், மகள் தனிமையில் அமர்ந்து மாலை மாலையாய்க் கண்ணீர் சொரிந்து கொண்டிருப்பது கண்டு திடுக்கிட்டாள்.

"என்னடி சீதா...என்ன ஆச்சு? காலேஜ்லேருந்து வரச்சே சிரிச்சுண்டு தானே வந்தே?..."

அருகில் வந்த அம்மா, தன் முகத்தை நீர்சுரந்து தளும்பும் விழிகளால் வெறித்துப் பார்த்த சீதாவை அணைத்துக் கொண்டாள்.

சீதாவின் நெஞ்சில் "ரா...மா..." என்று கேவிய குரல் "மா...ம்மா...அம்மா" என்று அமைதியாய் வெளியே குமுறிச் சிதறியது.

அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"குழந்தை! உடம்புக்கு என்ன? தலைவலிக்கறதோடி?...காலேஜ்லே ஏதாவது..."

குழந்தை மாதிரி கேவிக் கேவி மூச்சிழுத்தவாறு தாயின் கேள்விகளுக்கு 'இல்லை...இல்லை'யென்று தலையை மட்டும் அசைத்தாள் சீதா.

தனிமையும், இன்னவென்றறியாத சோகமும், அழுதால் ஓர் ஆறுதலும் ஒரு பருவத்தில் எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுவது தானே? என்று யோசித்த அம்மா,

"என்னத்தை நினைச்சுண்டு வந்ததும் வராததுமாய் மாடி மேலே வந்து உக்காந்து அழுதுண்டிருக்கே? அப்பா ஏதானும் சொன்னாளா?..." என்று மகளின் முகத்தைத் துடைத்து, மோவாயை ஏந்தினாள்.

சீதா தெளிவடைந்து முகம் மலர்ந்து தாயைச் சாதாரணமாய்ப் பார்த்து முறுவல் செய்தாள்.

"ஒரு கதை படிச்சேன்...மனசு ரொம்ப வருத்த மாயிடுத்து. ராமன் சீதையைப் பிரிஞ்சு படற அவஸ்தை தான் கதை... என்று சீதா சொல்லிக்கொண்டிருக்கும் போது அம்மா வியந்து மோவாயில் ஊன்றிய கையோடு சிரித்தாள்:

"அடி அசடே...கதை படிச்சுட்டா இப்படி அழுதே! உனக்குக் கோழை மனசுடி...சரி சரி, போ...கீழே டிபன் வெச்சிருக்கேன். காபி...ஆறிப்போயிருந்தா குடிக்காதே. வச்சுடு, வேற கலந்து தரேன்... என்று சொல்லிக் கொண்டே கொடியில் கிடந்த உலர்ந்த துணிகளை எடுத்து மடிக்க ஆரம்பித்தாள் அம்மா.

சீதா குனிந்த தலையுடன் யோசித்தவாறே மாடிப்படிகளில் இறங்கினாள்.

அம்மா துணிகளை மடித்து எடுத்துக்கொண்டு திரும்பும் போது அந்த வாரப் பத்திரிகை மேஜையின் மீது இருந்ததைப் பார்த்தாள். விரித்த நிலையில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த 'சுந்தரி'யைத் திருப்பிய மாத்திரத்தில் அந்தப் பக்கம் "ஹே! சீதே..." என்று அலறியது. எழுத்துக்களும், அதற்கு வரைந்திருந்த சித்திரமும் அம்மாவின் விழிகளைப் பொன்னிற ஃபிரேமுக்குள் மலர வைத்தன.

"நம்ம சுந்தரியிலே வந்திருக்கிற கதைதானா? நானும் படிச்சுப் பார்க்கறேன்...பையன் கொண்டுவந்து கொடுத்தப்ப அப்பறமா படிக்கலாம்னு வெச்சேன். பிரிச்சுக்கூடப் பார்க்கலே...ஏண்டிம்மா, கதை அவ்வளவு நன்னாருக்கா? படிச்சுட்டு அழுது இருக்கயே...உங்கப்பா வந்தவுடனே சொன்னா, உன்னைக்கூட ஒரு வாசகர் கடிதம் எழுதிக்குடும்பார்" என்று பரிகாசமாகவும், தன் புருஷனை ஆசிரியராய்க் கொண்டு வெளிவருகிற அந்த 'சுந்தரி' பத்திரிகையின் மீது தனக்கிருக்கும் சொந்தத்தைப் பாராட்டுகிற தோரணையிலும் சொன்னாள் அம்மா.

அம்மாவின் வார்த்தைகள் சீதாவின் காதுகளில் விழுந்த போதிலும் அதற்குப் பதிலேதும் சொல்லாமல், மொழி புரியாதவள் போன்று, மௌனமாய்த் தாயைப் பார்த்துக்கொண்டே ஆழ்ந்த யோசனையுடன் தட்டிலிருந்த பட்சணத்தைக் கொறிக்க ஆரம்பித்தாள்.

அம்மா தொடர்ந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந் தாள். "சமையல் காஸ் தீர்ந்துபோச்சு. மூணு நாளாப் போன் பண்ணினா அங்கே எடுத்தாத்தானே? நேர்லே போற வழியிலே ஒரு வார்த்தை கார்லே உக்காந்தபடியே இவர் சொன்னார்னா அடிச்சுப் புரண்டு கொண்டு வந்து வச்சுடுவான். இவருக்கு இது ஒரு வேலையா சொல்ல வேண்டாமேன்னு பார்த்தேன்...இன்னக்கி இந்தத் தாயி வேற மட்டம் போட்டுட்டா...பாவம், நேத்திக்கே வந்து உடம்பெல்லாம் வலிக்கிறதுன்னு அழுதாள்...அவள் புருஷன் ஒருத்தன்-கட்டைலே போறவன்-தினம் குடிப்பானாம்...குடிச்சால் குடல் வெந்து ஒழியட்டும்... பாவம் அவளை இழுத்துப்போட்டு அடிப்பானோ பாவி!...பட்சணம் நன்னா இருக்கா?...காபி ஆறிப் போச்சோ?... குடிச்சுப் பாத்து சொல்லு..."

நல்லவேளை டெலிபோன் மணி அடித்தது. யார்? அப்பாதான்!...அம்மா ரிஸீவரை எடுத்து பயபக்தியுடன் "ஹலோ...யாரு...நீங்கதானா? ...சரி...சரி...டெலிபோன்லே என்ன கொஞ்சல்...விஷயத்தைச் சொல்லுங்கோ...விஷயம் ஒண்ணுமில்லையா, பின்ன எதுக்குப் போன் பண்ணேளாம்...ம் சீதா வந்துட்டா. என்ன, ராத்திரிக்கு லேட்டாகுமா?...பார்ட்டியா? சரி...பிரக்ஞையோட வந்து சேருங்கோ...ஸ் என்ன இது டெலிபோன்லே? பக்கத்திலே யாராவது இருக்கப்போறா..."என்று குரலைத் தாழ்த்திச் சொல்லிக் கொண்டே தோளை முந்தானையால் இழுத்துப் போர்த்தியவாறு மகள் தங்கள் சல்லாபத்தைக் கவனிக்கிறாளோ? – என்று திரும்பிப் பார்க்கிறாள்.

சீதா எங்கோ பார்த்தவாறு ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருப்பதால் எதையும் கவனிக்கவில்லை. விரல்கள்

நெருடி நெருடி எடுத்து வாயருகே கொண்டு தருகிற பட்சணத்தை யாந்திரீகமாகக் கொறித்தவாறு...

"ஹே! சீதே!" என்ற காலதேவனின் எச்சரிக்கை போன்ற குரல் அவள் செவிகளிலும் புலன்களிலும் அடிக்கடி மோதிமோதிச் சிலிர்த்து ரீங்கரித்த வண்ணமாயிருக்கிறது.

## 2

அப்பா வீட்டுக்கு வரும்போது இரவு மணி ஒன்றாகி இருந்தது. அம்மா இரண்டு தடவை தூங்கி விழித்துக் கடிகாரத்தைப் பார்த்தாள். என்னவோ முனகினாள். பூஜையறையில் படுத்துக் கிடக்கிற பாட்டி-அப்பாவை ஏகபுத்திரனாக ஈன்று புரந்தவள்-மூட்டையாக முடங்கிக்கொண்டே வீடே அதிர்கிற மாதிரி இருமுகிறாள். 'நாராயணா, குருவாயூரப்பா' என்று உயிரைச் சுமக்கிற உடம்பும், உடம்பைத் தாங்கும் உயிரும் ஒன்றையொன்று பிரியாமல் பின்னிக் கொண்டிருக்கும் அவஸ்தையால் அடிக்கடி புலம்புகிறாள்; இருமுகிறாள்.

"கொஞ்சம் தீர்த்தம் சாப்பிடறேளா? இப்பிடி வாய் ஓயாம இருமறதே..." என்று அடுக்களை விளக்கைப் போட்டுத் தண்ணீர்க் குடத்தில் 'ணங்' கென்ற சப்தத்துடன் தம்ளரில் தண்ணீர் எடுக்கிறாள் அம்மா. தானும் தண்ணீர் குடித்துவிட்டு பூஜையறை வாசற் படியருகே நின்று மூட்டையாய்க் கிடக்கிற மாமியாரிடம் "இந்தாங்கோ...தீர்த்தம்" என்று எழுப்பிக் குரல் கொடுத்த அம்மாவை நோக்கி மூட்டைக்குள்ளிருந்து எலும்பும் நரம்புமாய் ஒரு குச்சுக் கை மட்டும் வெளியில் நீண்டு 'வேண்டாம்' என்கிறது.

"சரி சரி. இருமி இருமி எங்க கழுத்தை அறுங்கோ" என்று அம்மா பாட்டியிடம் அதற்காகக் கோபித்துக் கொண்டு வாசற்படியருகே தண்ணீர்த் தம்ளரை வைத்துவிட்டு அண்ணாந்து பார்க்கிறாள்.

"சுந்தரம் வந்தாச்சா?" என்று பாட்டி அப்பொழுது தன் மகனைப் பற்றிக் கனிவாகக் கேட்கிறாள். அம்மாவுக்கு அலட்சியம். பாட்டியின் கேள்வியைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

மாடியறையில் விளக்கு எரிகிறது. ஜன்னல் வழியாக மாடியறை வெளிச்சம் முற்றத்துள் விழுவதை இப்போது தான் அம்மா கவனிக்கிறாள்.

சீதா இன்னும் தூங்கவில்லை; படித்துக் கொண் டிருப்பாள். அவள் எப்போதும் படித்துக்கொண்டே இருக்கிறாள்.

அம்மாவுக்குத் திடீரென, சாயங்காலம், தான் மாடிக்குப் போன போது சீதா கதை படித்துவிட்டு அழுத அசட்டுத்தனம் நினைவுக்கு வந்தது.

பொதுவாக சீதா படிப்பு என்றால்-சாதாரணப் பத்திரிகைக் குப்பைகளைக் கிளறுவதோடு சரி-இரவில் கண்விழித்துப் படிப்பது என்றால் அவளது பாடம் சம்பந்தப்பட்டதாய்த்தானிருக்கும். தமிழ் எம்.ஏ. முடித்துவிட்டு ஏதோ ஆராய்ச்சி செய்கிறாளாம். இப்போது அவள் அடிக்கடி போய் விட்டு வருவது காலேஜ் அல்ல, யூனிவர்ஸிடி என்று எத்தனை தடவை சொன்னாலும் அம்மா, மகள் காலேஜுக்குப் போய் வருவதாகத்தான் சொல்லுவாள். இங்கிலீஷ் வார்த்தையைத் தப்பாய்ச் சொல்லிவிடக்கூடாதே என்கிற பயம்.

தெரு முனையில் கார் வருகிற சத்தம் கேட்டது. சீதா மாடியறை ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள்.

அப்பாவுக்கு ஆபீசில் கார் தந்திருக்கிறார்கள். டிரைவர் வேண்டுமே எல்லா நேரத்துக்கும்? அப்பா பொதுவாக சோரன் உறங்கிவிழும் நள்ளிரவில்தான் வீடு திரும்புவார்...ஓ! அது சில சமயங்களில் ஒரு காட்சிதான்!

அப்பா சில சமயம் ஆபீஸ் காரில் வருவார்; சில சமயம் டாக்சியில், ஆட்டோவில் வருவார். சைக்கிள் ரிக்ஷாக்காரனின் கைத்தாங்கலில் வீடு வந்து சேர்ந்த நாட்கள்கூட உண்டு. இன்று எப்படியோ? என்ற ஆதங்கத்துடன் எட்டிப் பார்த்தாள்.

ஓர் அழகிய வெள்ளை நிற ஃபியட் கார் வீட்டின் முன் வந்து நிற்கிறது.

காரிலிருந்து இறங்கியதும் மாடியறையில் விளக்கு எரிவதை ஷெல் பிரேம் கண்ணாடியில் வெளிச்சம் பட்டுப் பிரதிபலிக்குமாறு அண்ணாந்து பார்க்கிறார் அப்பா.

"சீதா...நீ தூங்கலியா இன்னும்...கதவைத் திற... என்று மாடியைப் பார்த்துச் சொன்ன பிறகு, காரின் முன் கதவைத் திறந்து "வாங்கோ மிஸ்டர் சுகுமாரன்... ஆத்துக்குப் போயி மோருஞ் சாதந்தானே சாப்பிடப் போறதாச் சொன்னேள்...அதை நம்பாத்திலே சாப்பிடறது... வாங்கோளேன், சும்மா...எங்காத்துக்கு நீங்க இப்பதான் முதல் தடவை வரேள்னு நினைக்கிறேன்... என்று முன் ஸீட்டின் கதவைத் திறந்து டிரைவர் ஸீட்டிலிருந்து அந்த மிஸ்டரைப் பிடித்து இழுக்கிறார் அப்பா. இவர் அவரை இழுக்கிற வேகத்தில், மேலே மடிப்புக் கலையாமல் போட்டிருந்த அப்பாவின் கதர் அங்கவஸ்திரம் நழுவுகிறது.

...விடுங்கோ ஸார்... விடுங்கோ... நானே வருகிறேன்..." என்று அவரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அந்த மிஸ்டர் சுகுமாரன், கீழே விழுந்த அப்பாவின் துண்டை எடுத்துத் தருகிறார். இருவரும் லேசான தள்ளாட்டத்துடன் சமாளித்தவாறு காம்பவுண்ட் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும் போது

அம்மா வாசற் கதவைத் திறந்து முன்புற விளக்கைப் பொருத்துகிறாள் போலும்-கீழே வெளிச்சத்தில் அப்பாவும் அவரது நண்பரும் நன்றாகத் தெரிந்தார்கள்.

மாடி ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த சீதாவை அவர்கள் கவனிக்கவில்லை. அம்மா உள்ளே போய்விட்டாள். அப்பாவும் அவரது நண்பரும் பேசுகிற குரல்கள் மட்டும் சீதாவுக்குக் கேட்டன.

"என்ன ஸார்...நீங்க எப்பவுமே கதர்தான் போடுவேளா?"

"நாற்பது வருஷமா அப்படித்தான். 42-போராட்டத் திலே கலந்துண்டு நான் ஜெயிலுக்குப் போகலேன்னா என் வாழ்க்கையே வேறயாக்கும். எங்க அப்பா என்னை லண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைக்க நினைச்சிருந்தார். நான் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலே போயிட்டேன். காந்தி மகான் கட்டிண்ட புண்ணியம்-நானும் கதர் கட்டிண்டேன். இப்ப நினைச்சுப் பார்த்தால் நம்ப முடியலே இல்லே உங்களுக்கு! நான் ஒரு காந்தியத் தொண்டனாக இருந்தேன்னா...இந்தக் கதர் ஒண்ணுதான் இன்னும் ஒட்டிண்டிருக்கு-மத்த காந்தியப் பண்புகள் எல்லாம் ஒண்ணொண்ணா போயிடுத்து... என்று பொய்யான கவலையோடு மதுவின் நெடியோடு பொருந்தாத விஷயங்களை பேசிக் கொண்டு ஹாலில் வந்து உட்கார்ந்தனர் இருவரும்.

"இங்கே நான் புகை பிடிக்கலாமா?" என்று ஆங்கிலத்தில் அனுமதி கேட்டான் சுகுமாரன்.

"தாராளமாய்... என்று அவருக்குப் புகைபிடிக்க ஓர் ஆஷ்டிரேயை அருகிலிருந்த அலங்காரப் பொருட்கள் நிறைந்த கண்ணாடி அலமாரியிலிருந்து எடுத்து வைத்தார். அதுவும் ஓர் அலங்காரப் பொருளாய்த்தான் அங்கே யிருந்தது.

"சீதா சேகரித்துள்ள அழகுப்பொருட்கள் இவை... சீதா முழிச்சுண்டு இருந்தாளே...ஏண்டி லட்சுமி, அவளைக் கூப்பிடேன்."

அப்பா ஒரு தடவை, அம்மா ஒரு தடவை மாறி மாறி மாடியைப் பார்த்துத் தன்னைக் கூப்பிட வைக்காமல், தானே மாடிப்படிகளில் இறங்கி வந்தாள் சீதா. அவள் கையில் 'சுந்தரி' இருந்தது.

"எனது மூன்றாவது மகள் சீதா...மற்ற பெண்களுக் கெல்லாம் திருமணமாகி ஒருத்தி டெல்லியிலும், இன்னொருத்தி அமெரிக்காவிலும் வாழ்கிறார்கள்" என்ற அறிமுகத்திற்கிடையே சீதா, மிஸ்டர் சுகுமாரனுக்குப் புன்னகையுடன் வணக்கம் தெரிவித்தாள். சிகரெட் புகையும் ஒற்றைக் கரத்தால் அவனும் ஓர் அரை வணக்கம் செய்தான்.

அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். "சீதாதான் ரொம்ப அதிர்ஷ்டக்காரி. காமுவும் மீனாவும் ரொம்ப சிரம தசையிலே பொறந்தவர்கள். என்ன பாடுபட்டிருக் கோம் ஒரு காலத்திலே! ஒருமாதிரி அவர்களுக்குக் கல்யாணம் முடிச்ச பிறகுதான்-'சுந்தரி'யை ஆரம்பித் தேன்..." என்று ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டிருந்த அப்பா "இப்படி ஒரு லீடிங் வீக்லிதான், என் வாழ்க்கையின் லட்சியம்-இதுக்கப்புறம்தான் எங்க சீதாவை நன்னா படிக்கவைக்கிறதுன்னு, அவள் ஆசை எதுவானாலும் நிறைவேத்தணும்னு ஒரு சங்கற்பம்...சீதா, உக்காரேன்... என்று மகளை அணைத்தவாறு சோபாவில் சுகுமாரன் எதிரில் அமர்ந்தார் அப்பா.

அப்பாவின் இந்த வார்த்தைகள் சத்தியமானவை... சீதாவின் மீது அவர் கொண்டுள்ள அன்பு கட்டற்றது. அவளுக்காக அவர் எதையும் செய்ய மனமும் திறமையும் உடையவர் என்பதையெல்லாம் எண்ணிய பெருமித உணர்வுடன், ஓர் யுவராணி போன்ற மெத்தனத்துடன்

அப்பாவின் தோளில் தலைசாய்த்து சுகுமாரனைப் பார்த்தாள் சீதா.

அவன் ஊதுகிற புகை அப்படியே போய்ப் படிந்து ஒட்டிக்கொண்டது போல் கிராப்பின் நடுவில் அரை அங்குல அகலத்திற்கு நரையோடியிருந்தது. அவனுக்கு முப்பத்தைந்து வயசிருக்கும் என்று கணித்தாள் சீதா...அவன் சீதாவை ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் கொஞ்சலாகப் பார்த்தான்.

அவன் அணிந்திருந்த தூய்மையான பளபளக்கும் வெண்ணிற பாண்ட்டும், ஷர்ட்டும், மார்பில் ரோமத்தின் நடுவே கிடந்து மின்னித் தெரிகிற பொற்சங்கிலியும், பூணூலும், அவனைச் சுற்றிலும் கமழ்ந்து பரவுகிற அந்நிய சென்ட்டின் மணமும், கையில் வைத்திருந்த சிகரெட் டின்னும் இவன் ஒரு தொழிலதிபராகவோ அல்லது வெறும் பணக்காரனாகவோ இருக்க வேண்டும் என்று சீதாவை எண்ணமிடச் செய்தன. தெருவில் நின்றிருக்கும் லேட்டஸ்ட் மாடல் ஃபியட் காரையும் பார்த்தாள் சீதா.

அம்மா டைனிங் டேபிளின் மீது வெள்ளித் தட்டுகளை எடுத்து வைத்தாள்.

“நோ...நோ...நோ...எனக்கு இப்ப சாப்பிட முடியாது ஸார்...கொஞ்சம் மோருஞ் சாதம், ஒரு கிண்ணத்திலே ஸ்பூன் போட்டுக் குடுத்துருங்கோ. அது போறும்... என்று சொந்தத்துடன் கேட்டான் சுகுமாரன்.

“ஆமாம்...எனக்கும் அவ்வளவுதான்...வடுமாங்கா இருக்கோன்னோ...குடமிளகாய் வத்தல் இருக்கா...போடி, ரெண்டு பேருக்கும் நீ கொண்டுவா...உங்கம்மா தூக்கக் கலக்கத்தில் ஒண்ணு கெடக்க ஒண்ணு கொண்டு வருவா... ஃபிரிஜ்லே மோருஞ்சாதம் பிசைஞ்சு வச்சிருக்கி யோன்னோ?” என்று ஜீவித லட்சியமே மோருஞ்சாதம் போல் உற்சாகமாய்ப் பரபரத்தார் அப்பா.

"என்னடி, நாங்க குடிச்சு, நீ தள்ளாடிண்டு நடக்கறே!" என்று மனைவியைப் பரிகாசம் பண்ணினார். சீதா எழுந்து போய் ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்தாள்.

அப்பா என்னமோ சொல்லிக் கொண்டிருக்கிறார். சீதா ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்தபோது, அதனுள் ளிருந்து வீசிய நீல நிறக் குளிர் வெளிச்சத்தில் பிரகாசித்த அவளது உருவத்தையே பார்வையால் தொற்றிக்கொண்டு அவன் மனம் அவளிடம் பதிந்ததை யாரும் காணவில்லை?...ஏன், அப்பாவே திடீரென விழிப்பு வந்தவர் போல் அதைக் கண்டார்.

"இவளுக்கு இருபத்தியோரு வயதா?... சின்னக் குழந்தை!" என்று அவனது மனமும் உதடுகளும் முனகின. ஆங்கிலத்தில் "ஜஸ்ட் எ சைல்ட்!... என்றான் கோணல் சிரிப்புடன்.

அப்பா பெருங்குரலில் சிரித்து, அவனது மயக்கத்தைக் கலைத்தார். "என்ன சொன்னேள்? சின்னக் குழந்தைன்னா...ஆமா சின்னவள் தானே. இந்த ஆகஸ்ட்லே இருபத்தியோரு வயசு முடியறது. இவளுக்குத் தமிழ்லே தான் இன்ட்டரஸ்ட். இந்த வருஷம் தமிழ் எம். ஏ. முடிச்சாள்...இப்ப என்னமோ ரிஸர்ச் பண்றாளாம்...'நீ என்ன வேணும்னாலும் செய்'னு அவளுக்கு முழுச் சுதந்திரம் தந்திருக்கேன்...

"இப்ப ஆத்திலே பாவாடையும் தாவணியுமா இருக்கறதனாலே, சின்னக்குழந்தை மாதிரி இருக்கா... காலையிலே அவள் யூனிவர்ஸிடிக்குப் போகறச்சே, ஸாரியும், ஹாண்ட்பாக்கும், கூலிங் கிளாஸுமா...என் கண் திருஷ்டியே பட்டுடுமோன்னு இருக்கும்...

"அப்பா உளற ஆரம்பிச்சுட்டார்" என்றொரு புன்னகையுடன் அடுக்களையிலிருந்த அம்மாவிடம் சொன்னாள் சீதா.

"ஏன் ஸார், நான் கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டேளே" என்று சிறிதே தரமும் ஸ்தாயியும் தாழ்ந்த குரலில் அவன் கேட்டபோது எல்லோருடைய கவனமும் அவன் பால் திரும்பியது.

சுந்தரியிலே, ஸெக்ஸி கதையெல்லாம் எழுதுகிற 'குமாரி சுந்தரி' சீதா தானே...?"

"தூ!" என்று சத்தமாகவே காறித் துப்பினாள் சீதா.

"கர்மம்...கர்மம்... இப்படியொரு அபவாதமோடி உனக்கு?" என்று தன் தலையிலடித்துக் கொண்டாள் லட்சுமி அம்மாள்.

அப்பா மறுபடியும் பெருங்குரலில் சிரித்தார்:

"அதான் ஸார் ஜர்னலிஸத்தின் வெற்றி! சீதா மாதிரி ஒரு இளம் பெண் எழுதறதா உங்களையே நம்ப வைக்கிறது ஒரு கலையில்லையோ? குமாரி சுந்தரிங்கறது, ஒரு தலை நரைச்ச பிராமணன்னு சொன்னால் நம்புவேளா?... உண்மைப் பேர் என்ன தெரியுமோ? சாட்சாத் சுந்தர ராமசர்மாங்கிற அடியேன்தான்..." என்று பெருமிதத்துடன் பிரகடனம் செய்தார் அப்பா. சந்தோஷத்தாலும் பூரிப்பாலும், வாசகர்களை ஏமாற்றுகிற வித்தையில் காணும் வெற்றிக் களிப்பினாலும் பெரிய இரண்டு பூறான்கள் போல சுந்தர ராமசர்மாவின் புருவங்கள் சிலிர்த்து நின்றன.

"உனக்குத் தந்தை இல்லை; உனக்கிருப்பதெல்லாம் இராவணன்...இராவணன்கள்...இராவணேஸ்வரர்கள்" என்ற வரிகள் சீதாவின் நினைவில் ஒலித்தன.

அன்பே உருவான அப்பாவை இப்படி நினைக்கலாமோ என்று ஒரு வினாடி துணுக்குற்றாள் சீதா.

கைகளில் ஏந்திய இரண்டு கிண்ணங்களில் குளிர்ந்த தயிர்சாதத்தையும், இவர்களது சம்பாஷணையைக் கவனிக்காதவள் போன்று முகத்தில் இனிய புன்னகையையும் ஏந்தி வந்தாள் சீதா!

# 3

**சி**றிது நேரத்துக்கெல்லாம் மிஸ்டர் சுகுமாரன் புறப்பட்டான். போகும்போது, 'உன்னைச் சந்தித்ததில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி' என்று ஆங்கிலத்தில் சொல்லிச் சீதாவுடன் அவன் கைகுலுக்க விரும்பினான். 'நன்றி' என்று புன்னகையுடன் சீதா அவனிடம் கை நீட்டினாள். அவளது மிருதுவான விரல்களை அவன் பூச்செண்டைத் தொடுவது போல் லேசாகப் பற்றியதையும், சீதாவின் கைவிரல்கள் வெறுமனே நீண்டிருந்ததையும் அப்பா கவனித்தார். எல்லாரும் வாசற்படிவரை வந்து சுகுமாரனுக்கு 'குட்நைட்' சொல்லி வழியனுப்பினர்...

அப்பா சுகுமாரனைப் பற்றி அம்மாவிடம் புகழ்ச்சியாய்ச் சொல்லிக் கொண்டிருந்தது சீதாவுக்கும் கேட்டது.

''தஞ்சாவூர்ப் பக்கமாம்; நம்மளவாதானாம். அவரோட அப்பா பிராமண சிரேஷ்டராம். திருவாங்கூர் சமஸ்தானத்திலே ஸர். சி. பி. திவானா இருந்தபோது அரண்மனைக் காரியஸ்தர்களிலே ஒருத்தரா இருந்தாராம். சமஸ்தானம் ஒழிஞ்சப்பறம் இந்தப் பக்கம் வந்து என்னென்னமோ பிஸினஸ் பண்ணினாராம்; கட்டிடக் காண்ட்ராக்ட் என்ன, பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ் என்ன, எலெக்டரிக்கல் ஏஜென்ஸி என்ன...கோடீஸ்வர ஐயரா யிட்டாராம் மகேஸ்வரஐயர். ஏகபுத்திரன் சுகுமாரன். பால்யத்திலேயே விவாஹம் பண்ணி அந்தக் குழந்தை சுமங்கலியாப் போய்ட்டாளாம்... வேற கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னுட்டானாம்...

"ஐயோ பாவம், இந்தச் சின்ன வயசிலே இப்படியொரு விரக்தியா?" என்று அம்மா உருகிப் போனாள். அதைப்பார்த்து, அப்பா ராக்ஷஸச் சிரிப்பொன்றைச் சிதறி விட்டுச் சொன்னார்: "அடி அசடே! விரக்தியாவது வேதாந்தமாவது! ரொம்ப சௌகரியமில்லையோ...''

அப்பா கூறிய நாராசம் போன்ற விஷயங்கள் எல்லாம் சீதாவின் காதுகளில் விழத்தான் செய்தன-ரசமற்ற முறையில் ஒரு தரங்கெட்ட மனிதனின் ஒழுக்கங்கெட்ட நடத்தையை இவ்வளவு சிலாக்கியமாகத் தன் மனைவியிடமே ஒருவரால் எப்படிச் சொல்ல முடிகிறது! என்று இதுவரை அவர்கள் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த சீதா வேறுபுறம், வேறு எதிலோ கவனம் போல் திரும்பி, சுந்தரியைப் புரட்டினாள்: "ஹே! சீதே...!"

அதற்குமேல், எப்படி பெண்களைப் பெற்றவர்களும், பெண்கள் மீது அன்பு செலுத்துகிறவர்களும் இன்னொருவர் விஷயம் என்று பேசும்போது பெண்களையே அவமதித்துப் பேசி விடுகிறார்கள் என்று அவள் யோசித்தபோது, அவளது டாக்டர் பட்ட ஆராய்ச்சித் தலைப்பின்கீழ் அலசவேண்டிய ஒரு பிரச்னையாக இவற்றை மனத்துள் குறித்துக்கொண்டு - இவர்கள் சம்பாஷணையை மெய்யாகவே கவனிக்காம லிருந்தாள் சீதா.

அம்மாவின் பேச்சில் 'சீதா' என்று தன்னைக் குறிப்பிடுவதைக் கேட்ட போதுதான் அவளது கவனம் மீண்டும் பெற்றோரின் பால் திரும்பியது.

சாயங்காலம் மாடியில் அவள் 'சுந்தரி'யில் கதை படித்து மனம் ஒன்றிக் கண்ணீர் சிந்தியதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் அம்மா: "நீங்களும் எழுதறேளே...கர்மம்-அதுக்கு வர்ர படங்களும்...கண்றாவி! என்ன உங்க ஜர்னலிஸமோ?...

"அப்பா, உங்க ஃபிரண்ட் என்னை, 'குமாரி சுந்தரியா'ன்னு கேட்டது ரொம்ப ரசக்குறைவானது இல்லையோ? இந்த 'சீதே'யை நீங்க எழுதியிருந்தால், அல்லது இதை எழுதினது உங்கள் மகளான்னு கேட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும்னு கற்பனை பண்ணிண்டிருக்கேன்...சாயங்காலத்திலேருந்து நான் அதையே திரும்பத் திரும்பப் படிச்சிண்டிருக்கேன். என்

ஆராய்ச்சிக்கு ரொம்ப சம்பந்தப்பட்டதாவும் இருக்கு அதனுடைய தீம்!"

அப்பாவின் மனத்தில் சென்ற மாதத்தில் ஒரு நாள்-

முகமடர்ந்த தாடியும், பரட்டைத்தலையும், வெறியனைப் போன்ற சுட்டெரிக்கும் பார்வையுடைய ஓர் இளைஞன், 'சுந்தரி' பத்திரிகை அலுவலக வரவேற் பறையில், பார்வையாளர்களுக்காக உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த காட்சி நினைவுக்கு வந்தது.

அவன் பத்திரிகை ஆசிரியருக்கு வணக்கம் கூறி ஒரு கத்தைக் காகிதத்தைத் தம்மிடம் தர முயன்ற போது,

"இதை உதவி ஆசிரியர்கள் யாரிடமாவது கொடுங்கள். மற்ற விஷயங்களையும் அவரிடம் பேசுங்கள். எனக்கு வேறு அவசர வேலை இருக்கிறது" என்று சொல்லி ஏர்கண்டிஷன் அறையில் போய்த் தாம் தூங்கியதையும்,

சற்று நேரத்திற்கெல்லாம் உதவி ஆசிரியர்களில் ஒருவர் அந்தக் கதையைப் படித்துத் துள்ளிக் குதித்துப் புகழ்ந்து பாராட்டியதையும், தாம் அதை அலட்சியம் செய்து விட்டதையும் நினைத்துக் கொண்டார் சுந்தரராம சர்மா.

"எழுதினவன் பேர் என்ன?" என்று பார்க்க இப்போது பத்திரிகையை மகளிடமிருந்து வாங்கினார்.

'பாரதன்' என்று மேற்கோள் குறிகளுடன் எழுதப்பட்டிருந்தது. புனை பெயர் என்று புரிந்து கொண்டு புத்தகத்தை மூடினார். அதற்குமேல் அவர் அதைப் படிக்கவோ, அதனை ஏன் இப்படிப் புகழ்கிறார்கள் என்று யோசிக்கவோ முடியாத ஓர் 'ஆசிரிய அலட்சியத்துடன்' அந்தப் பத்திரிகையை மூடிப் போட்டார். சீதா அதை எடுத்துக் கொண்டாள்.

"சுந்தரம் வந்தாச்சா?" என்று நீண்ட இருமல்களுக்கு இடையில் மறுபடியும் பாட்டி முனகினாள்.

"வந்துட்டேன்...வந்துட்டேன்...நோக்கு இப்படி இருமறதே!...நாளைக்கு டாக்டரை வரச் சொல்லட்டுமா?" என்று அப்பா பூஜையுறை வாசற்படியருகே போய் நின்று குனிந்து பாட்டியிடம் ஆதரவாகப் பேசுகிறார்.

எந்த நேரத்தில் எந்த நிலையில் வீட்டுக்கு வந்தாலும் அதுவரை பாட்டியும் 'வந்தாச்சா? சுந்தரம் வந்தாச்சா? வந்தாச்சா?' என்று அம்மா எவ்வளவுதான் எரிந்து விழுந்தாலும் கேட்டுக் கொண்டிருப்பாள்–அப்பாவும் எவ்வளவு நேரமானாலும் பாட்டியிடம் போய் அன்பாக, ஆதரவாக, ஏதேனும் பேசிக் கொஞ்சி விட்டுத்தான் படுக்கப் போவார். அம்மா அப்படியே பற்றியெரிந்து போவாள். பாட்டி விஷயத்தில் அம்மாவுக்கு அப்படி யொரு மனம் பொறாத ராட்சஸித்தனம். அதே போல் பாட்டி எப்படிப்பட்ட ராட்சஸி, அவளிடம் தான் பட்ட சித்ரவதைகள், அவமானங்கள்–பற்றியெல்லாம் அம்மா சொல்லக் கேட்டால் கண்ணில் நீர் பெருகும் சீதாவுக்கு.

சீதாவுக்கும் அப்பாவுக்கும் எல்லார் மேலும் சமமான அன்பும் ஆசையும் உண்டு. அம்மாவும், டெல்லியில் வாழ்கிற பெரியவள் மீனாவும் பாட்டியை எதிர்க்கிற கூட்டணி. அமெரிக்காவிலிருக்கிற சின்ன அக்கா? அவள் பாட்டி கட்சி, நானும் அப்பாவும் பொது. அப்பா இந்த வயதிலும் பாட்டியிடம் பேசுகிறபோது சின்னக்குழந்தை ஆகிவிடுகிறார். செல்லமாக 'டீ' போட்டுப் பேசுவார்.

"இந்த மாதிரி ஒரு நாளைப் போலே, நடுராத்திரியிலே ஆத்துக்குத் திரும்பறயே...நோக்கு உடம்புக்காகுமோ?...எனக்கு டாக்டரும் மருந்தும் எதுக்கு...உன்கையாலே கொஞ்சம் தீர்த்தம் எடுத்துக்குடு..." என்று போர்வையைச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொள்கிறாள்.

"மூணு பொண்களைப் பெத்தவனாச்சே–ராத்திரி பகல் பார்த்தால் முடியுமோ?" என்று அவர் சொன்ன

பரிகாச வார்த்தைகளுக்கே பாட்டி, மகன் படுகிற பாட்டைப் பார்த்துக் கண்ணீர் சொறிந்து விடுவாள்.

பகவானைப் பிரார்த்திப்பாள். தன் மகனுக்குத் தீர்க்காயுஸும், சகல சம்பத்தும் பெருக வேண்டுமாம்!... அப்பாவுக்குத் தன்னைப் பெற்றவள் தனக்காகப் புரிகிற பிரார்த்தனையில் அலாதி நம்பிக்கை; அதற்காகவே இப்படி ஏதேனும் 'சுய இரக்கம்' கொண்டு பாட்டியிடம் பொய்யாகப் புலம்புவார்.

"போறும் உங்க சல்லாபம்-மணி ரெண்டு அடிக்கப் போறது. நிதம் இப்படியொரு சாமக்கூத்தாப் போச்சு... என்று அலுத்துக் கொள்ளுகிறாள் அம்மா.

''அப்பா, குட்நைட்'' என்று சொல்லி சீதா மாடிப்படியேறினாள்.

"மணி ரெண்டாகப் போறதுன்னா, குட்மார்னிங்" என்றார் அப்பா.

படுக்கையறைக் கதவுகள் அப்பா அம்மாவுக்குப் பின்னே மூடுகிற வரை நின்றிருந்த சீதா ஹால் விளக்கை அணைத்துவிட்டு மாடியில் தனது தனியறைக்குப் போனாள். சீதாவுக்கு நாளை யூனிவர்ஸிடிக்குப் போக வேண்டும். அறை விளக்கை அணைத்த பின் படுக்கையில் சாய்ந்து அயர்ந்து போனாள்.

அப்பாவும் அம்மாவும் படுக்கையறையில் ரகசியமாகப் பேசிக் கொண்டனர்:

"இந்த சுகுமாரனைச் சீதாவுக்குப் பிடிக்குமோ? நான் சிபாரிசு பண்ணினா எந்தப் பெண்ணையும் அவன் மறுக்க மாட்டான்...உன் பொண் மனசைத் தெரிஞ்சு சொல்லு... உனக்குத் திருப்தி தானே...?"

"எதுக்கும் முதல்லே அவரோட ஜாதகத்தைக் கேட்டு வைங்கோ-நம்ம பொண்ணுக்கு அவ்வளவு பெரிய இடம் பிராப்தி இருந்தால்-நடக்கும். அவளுக்குப் பிடிக்கறதுக் கென்ன? நன்னாத்தானே ராஜா மாதிரி இருக்கான்!...நல்ல

சம்பந்தம்தானே? சீதாவுக்கும் பிடிக்கணும். ஏற்கனவே ஆனவர் தான்னாலும் அவதான் வயசுக்கு வர்ரதுக்கு முன்னாலே போயிட்டாள்ங்கறேளே...”

அப்பா சிரிக்காமல் சொன்னார்: “சீதாவுக்காக அப்படிச் சொன்னேன். கல்யாணம் என்னமோ பால்ய விவாகம் தான்...ஆனால் அந்தப்பொண்ணு இப்பத்தான், அஞ்சு வருஷத்துக்கு முன்னாலேதான் போய்ட்டாள்– அதைப்பத்தி என்னடி?” அம்மாவின் வாயை அடைத்தார் சுந்தரராம சர்மா!

ஆயிரம் பொய்களில் இது எத்தனையாவதோ? மகளுக்குக் கல்யாணம் என்கிற மயக்கத்தில் அந்தத் தாய்க்கு அது புரியவே இல்லை!

## 4

இரவு இரண்டு மணிக்குப் படுக்கப் போனாலும் ஐந்து மணிக்கெல்லாம் துயிலெழுந்து விடுவார் சுந்தரராம சர்மா என்கிற, சுந்தரம் என்கிற, குமாரி சுந்தரி என்கிற பற்பல திருநாமங்களின் மூலம் ஜனப் பிரசித்தி பெற்ற பத்திரிகையாசிரியரும் எழுத்தாளரும் அரசியல் விமர்சகரும், நாவலாசிரியரும், என்ன இல்லை? அத்தனை கியாதிகளும் பெற்ற...அப்பா! அவருக்கு முன்னால் அம்மா எழுந்து இரவு போன்ற விடியற்காலை இருளில் வீட்டு வேலைகளை ஆரம்பிக்கும்போதே, ஸ்நானம், ஸ்லோகம், பூஜை எல்லாவற்றையும் இணைத்துக் கொள்ளுவாள்.

சூரியோதயத்துக்கு முன்னால் மடிசார் கட்டும், ஈரத்தலை காய்வதற்காகத் தலையில் கட்டிய வெள்ளைத் துண்டும், நெற்றித் திலகமும், கன்னத்தில் தீற்றிக் கொண்ட மஞ்சளின் கறையும் துலங்க நிற்கையில்–அம்மா அந்த நேரத்தில் புளி கரைத்துக் கொண்டிருந்தாலும், புகையின்

நடுவே நின்று எதையாவது தாளித்துவிட்டு இருமலும் தும்மலுமாய் அடுக்களையில் உட்கார்ந்திருந்தாலும்- சாட்சாத் லட்சுமி தேவியே தன் தாயாய் வந்து இந்தக் கோலத்தில் நிற்கிறாளோ என்று தோன்றும் சீதாவுக்கு.

சில சமயங்களில் அம்மா செய்கிற வீட்டு வேலைகளைப் பார்த்து-அலுப்புச் சலிப்பில்லாமல், தானறிந்த நாட்களாகக் கண்கூடாக அவள் சூரியோதயத்துக்கு முன் எழுந்து ஸ்நானம் செய்து அடுப்புப் பற்ற வைத்தாளானால் இரவு அப்பா வருகிற வரை-யந்திரம்போல் அடுப்பு மெழுகி, புளி கரைத்து, புகையிலும் கமறலிலும் சமைத்து, அப்பாவுக்குப் பணிவிடை செய்து, பாட்டிக்கு சிசுருஷைகள் செய்து- நள்ளிரவு வரை-அம்மா உழைப்பதைப் பார்த்து வியப்பும், வேதனையும்-தனது எதிர்கால வாழ்வு குறித்த ஒருவகைப் பயமும் சீதாவுக்கு இளவயது முதல் ஏற்பட்டிருந்தது.

அப்பாவும் காலை ஆறு மணிக்குள் பட்டை பட்டையாய் விபூதியணிந்து, பஞ்சகச்சம் தரித்துக் கொண்டு அம்மாவுக்குச் சமமாய்ப் பூஜை, சந்தியாவந்தனம் எல்லாம் செய்து விடுவார்.

அதிகாலையில் பத்திரிகை வந்திருந்தால் காபி சாப்பிட்டுக்கொண்டே அதைப் படிப்பார்; அல்லது புரட்டுவார்.

காபி குடித்ததும் மாடியறையைப் பார்த்து 'சீதா' என்றழைக்கும்போது தயாராய்க் கையில் பையுடன் வந்து நிற்க வேண்டும். சில சமயங்களில் அதுவரை குளிக்காமல் கூட ஏதாவது படித்துக் கொண்டோ எழுதிக் கொண்டோ இருந்துவிடுவாள் சீதா.

"வா வா, மணியாச்சு; பையை எடுத்துண்டு வந்தயா?" என்று பரபரப்பார்.

நாள்தோறும் அப்பாவும் மகளும் போய்க் கறிகாய் வாங்கிக்கொண்டு வருவார்கள். அப்பாவுக்குப் பச்சைக்

காய்கறிகளும் கீரைகளும் தானே பார்த்து வாங்கி வந்தால் தான் திருப்தி.

"இதை இன்ன பாகத்தில் செய்" என்று சொல்லிச் சமைக்க வைத்து, சமைக்கிற வாசனையையே சிலாகித்து அனுபவித்து, ருசித்துச் சாப்பிட வேண்டும். ஒன்பது மணிக்கெல்லாம் தட்டும், தண்ணீரும் எடுத்து வைத்து 'சாப்பிட வாங்கோ' என்று அழைக்க வேண்டும். 'பிராமணா போஜனப் பிரியா'ம் பார். நான்கு வயதி லிருந்து கடைக்குட்டியான சீதாவை உடன் அழைத்துக் கொண்டு கறிகாய்க் கடைக்குப் போன பழக்கம் இன்னும் நீடிக்கிறது.

சமையலும் ஸ்வாமி பூஜையும் அம்மாவுக்கு எப்படி ஒரு சேர ஒரே கடமையாகப் பொருந்தியிருக்கிறதோ, அதே மாதிரி கறிகாய்க் கடையும் கபாலி கோயிலும் தன் கண்ணெதிரிலேயே வித்தியாசமில்லாமல் வியாபாரச் சந்தையாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து வருகிறாள் சீதா.

கறிகாய் வாங்கப் போகிற வழியிலே அப்பா ஸ்வாமி தரிசனமும் செய்துவிடுவார். காலை நேரங்களில் அப்பா சட்டைகூட அணியாமல், மேலே ஒரு அங்கவஸ்திரத்தால் உடம்பைப் போர்த்திக்கொண்டு கோயிலுக்கும் மார்க்கட்டுக்கும் போகும்போது உடன்செல்லும் சீதாவுக்கு ராத்திரி பார்த்த அப்பா தானா இது என்று சில சமயங்களில் ஆச்சரியமாய் இருக்கும்.

ஸ்டீவன்ஸனின் நாவல், 'டாக்டர் ஜெக்கில் அண்ட் மிஸ்டர் ஹைட்' ஞாபகம் வரும்.

அப்பாவுக்கு சமஸ்கிருதம் தெரியும். மெய்யான பக்தியும், ஈஸ்வரத் தியானமும் உடையவர். அதே அளவு லௌகீகத்திலும், விஷய சுகத்திலும், வியவஸ்தையற்ற அளவு ஈடுபடுவது ஏதோ தன் அப்பா மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமாக இல்லாததால் அதைப்பற்றி

உணர்க்கைகள் ஏதும் சீதாவுக்குக் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டதில்லை.

அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. இப்போதும் கூட அப்பா அதைப்பற்றி-சீதாவின் குழந்தைப் பருவ விளையாட்டுக்களைக் குறிப்பிட்டுப் பேசுகையில் சொல்லுவார்.

இரண்டு மூன்று வயதாக இருக்கும்போது அப்பா இரவில் மது குடிக்கும்போது சீதா அவருடன் கூடத்தானும் ஒரு கிளாஸை வைத்துக்கொண்டு நிற்பாளாம். 'சியர்ஸ்' சொல்லுவாளாம்; சில சமயங்களில் அப்பா அவளுக்குக் கொஞ்சம் கொடுப்பாராம்...

"போங்கோ...போங்கோ... நான் ஒண்ணும் அப்படியெல்லாம் செய்திருக்க மாட்டேன்!" என்று வளர்ந்தபின் வெட்கத்துடன் அப்பாவின் பரிகாசத்தை மறுத்து ஓடுவாள் சீதா.

"பொய்யா சொல்றேன்?...உங்கம்மாவை வேணுமானா கேட்டுப் பாரேன்..." என்று சிரிப்பார் அப்பா.

"உங்கப்பாவைப் பத்தி நீ என்னைக் கேளு...இவர் செய்த லீலாவினோதங்கள் ஒண்ணா, ரெண்டா?" என்று அப்பாவைப் பற்றி அம்மா சொல்ல ஆரம்பித்தாளானால்,

"போறும்...போறும்! உங்க பிரதாபம்.." என்று வாய் திறந்து சொல்லாமல் முகம் திரும்பிக் கொண்டு போய்விடுவாள் சீதா.

சிலசமயங்களில் அதையெல்லாம் கேட்டு அவளுக்கு வருத்தமாய்க்கூட ஆகிவிடும். அம்மா கூட அந்த வருத்தத்தைத்தான் கொஞ்சம், 'உப்பு, புளி, காரம், போட்டு வேறு சுவையில் பரிமாறுகிறாள் என்று புரியும் சீதாவுக்கு. பாவம், அம்மா என்ன செய்வாள்.

"அடியே! ஏழு வயசிலேயிருந்து சுந்தரகாண்டம் பாராயணம் பண்ணி எனக்கு வாய்ச்சவராக்கும் உங்க அப்பா! அப்போ எனக்குப் பதிமூணு வயசு. இவருக்கு

இருபத்திரண்டு... பீமசேனன் மாதிரி இருப்பார்...உங்க பாட்டி தாடகைன்னாலும் தாடகை! அம்மம்மா! என்ன பாடு படுத்துவாள்...என் தலையெல்லாம் நெல்லிக்காய் நெல்லிக்காயா இருக்கும்...அத்தனையும் குட்டு...அத்தனை முட்டு! கையிலே என்ன இருந்தாலும் அதாலே நெத்திப்பிடுவா, நெத்தி! பிராப்தம் எதுவோ அதை நல்லமனசோட வாழ்ந்துட வேண்டியதுதான்னு, பட்டு பட்டு நேக்கு அனுபவமாச்சு!...என்ன பொண் ஜென்மம்!..." என்று கண்ணீர் சிந்தும் அளவுக்கு அம்மாவின் நெஞ்சில் இன்னும் எவ்வளவு அடிகளோ! எவ்வளவு வடுக்களோ! எவ்வளவு ஆறாத ரணங்களோ!...

அப்பாவும், பெண்ணும் பனி மூட்டம் படர்ந்த விடியற்காலையில் மைலாப்பூர் கச்சேரி ரோடில் வந்து நிற்கிறார்கள்.

"ஏண்டி தண்ணித்துறைக்குப் போகலாமா? தெப்பக் குளத்துக்குப் போகலாமா?" என்று தினசரி கேட்கும் கேள்வியைக் கேட்டார் அப்பா. "இன்னிக்கு என்ன கிழமை? சரி, வா, ஆஞ்சநேயர் தரிசனமும் பண்ணிண்டு வரலாம்..." என்று முண்டகக் கண்ணி அம்மன் கோவில் தெருவில் இருவரும் நுழைகிறார்கள்.

இவர்களைப் போன்ற பலரின் நடமாட்டம், சைக்கிள் ரிக்ஷாக்களின் இரைச்சல், எருமை மாடுகளின் வரிசை, ரேடியோவில் 'ஸுஜலாம் ஸுபலாம்' இசை, பால் கறப்பவர்களின்-வாங்குபவர்களின் சம்பாஷணைச் சப்த ஜாலங்களின் நடுவே...

"எங்கப்பா என்னடி, அந்தக் காலத்திலே?- கும்மோணத்திலே ஒரு வக்கீல் குமாஸ்தா...உங்க பாட்டிக்கு இருபது வயசிலே போயிட்டார். அப்போ எனக்கு ஆறுவயசு...பாட்டி, பதினாலு வயசிலே குழந்தை பெத்து இருபது வயசிலே இப்படி ஆயிட்டா...என்னை வளக்கறதுக்கும், படிக்க வைக்கிறதுக்கும் என்ன

பாடுபட்டிருப்பா! பெத்தவளா இன்னொருத்தியாங்கறது ஒரு பக்கம் இருக்கட்டும்...அந்த விசுவாசம்தான் அவளை இன்னிக்கும் கண்கண்ட தெய்வமாய் நினைச்சு பூஜிக்கறேன்...

-வழியெல்லாம் அப்பா தன் வாழ்க்கைக் கதையை ஒரு நண்பனிடம் சொல்லுவது மாதிரி சொல்லிக்கொண்டு வருவார் சீதாவிடம். தன்னை மதித்து இதை எல்லாம் அப்பா சொல்லிக் கேட்கிற அந்த அனுபவம் மேன்மையானதாய் இருக்கும். 'அவரது சொந்த வாழ்க்கையின் உண்மைகளையெல்லாம் அவர் உன்னதமாக எழுதாமல், ஏன் இப்படிப் பொய்யாய் எழுதி அருவருப்பான ரசனைக்குத் தீனி போடுபவராக இவர் ஆகிவிட்டார்' என்று மனத்துள் கவலையாக இருக்கும் சீதாவுக்கு. ஆனாலும் அப்பாவைக்கேட்க முடியுமா?

"நேற்று இரவு-என்னைப் போய் 'இவள்தான் குமாரி சுந்தரியா?' என்று உங்கள் நண்பர் கேட்டபோது எனக்கு எவ்வளவு அவமானமாய் உடம்பு கூசித்து, தெரியுமோ?" என்று மறுபடியும் இப்போது அப்பாவுடன் பையைத் தூக்கிக்கொண்டு கறிகாய்க் கடைக்குப் போகிற வழியில், முண்டகக்கண்ணி கோயிலுக்கு எதிரே நடந்து கொண்டிருந்தபோது சொன்னாள் சீதா. இவ்வளவு ஜனசந்தடிக்கிடையே இன்னொருவர் காதில் விழாத ஸ்தாயியில்-அவர்கள் வழக்கமாகச் சம்பாஷித்தவாறு போவார்களே, அதே ஸ்தாயியில் தான் சொன்னாள் சீதா.

ஆனால் அப்பாவின் காதில் அது பேரோசையாக ஒலித்திருக்க வேண்டும். மணியோசை முழங்கும் கோயில் முன்னால் நின்று, பாதரட்சைகளைக் கழட்டி எதிரே விட்டு, கன்னத்தில் தட்டிக்கொண்டு, கண்மூடிச் சற்று நேரம் நின்றிருந்தபோது-அவர் இதுபற்றி யோசித்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. அவரும் இமைகளைத் திறந்ததும் பக்கவாட்டில் திரும்பி மகளைத்தான் பார்த்தார். ஒரு புன்முறுவலுடன்,

"தட் இஸ் ஜர்னலிசம்" என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

"தமிழ்லே சொல்லுங்கோ" என்று-வேண்டுமென்றே அவர் ஒரு பொய்மையின் நிழலில் ஒதுங்குவதைக் கண்டு-வெளியில் இழுப்பது போல் கேட்டாள் சீதா.

"ஓ! நீ ஒரு தமிழ்ப் புலவர் இல்லையோ?" என்று கேலிக் குரலில் சொன்ன அப்பா, "புலவர்க்குப் பெண்பால் என்னவாம்?" என்று மடக்கினார்.

"அப்பா ரொம்பத்தான் வழிகிறார்" என்று மனத்துள் நகைத்த சீதா,

"புலவர்-இருபாலர்க்கும் பொருந்தும்-விடுங்கள்... அது என்ன ஜர்னலிஸம்?... 'பத்திரிகைத்தனம்'னு சொல்ல வேண்டியதுதானே?" என்றாள்.

"சீதா..." என்று கனிவுடன் அழைத்த சுந்தரராம சர்மா, ஒரு வினாடி யோசித்தார். நேற்று இரவும், அது போல் பல சந்தர்ப்பங்களிலும் தன் தாயிடம் கூறி வருகிறாரே 'நான் மூன்று பெண்களைப் பெற்ற பிராமணன்' என்று, அதையே பரிகாசமாக அல்லாமல் பரிவுடன் புரிந்து கொள்ளுமாறு சீதாவை வேண்டுவது போன்ற ஒரு பார்வை அது.

"நீ எதுக்காம் அதையெல்லாம் படிக்கணும்? உன்னைப் போல இருக்கிற புத்திசாலிக் குழந்தைகள் அதுக்காக அவமானப் படறது நேக்கு சந்தோஷம்தான் தர்ரது-அதனாலேயே இதையெல்லாம் படிச்சு யாரும் கெட்டுப்போக மாட்டாங்கிற நம்பிக்கைதான் இதைப்போல trashகளை எழுதவும் வெக்கறதுன்னு வெச்சுக்கோயேன்...ஆனா ஒண்ணு: என் பத்திரிகையிலே அது மட்டுமா இருக்கு? எவ்வளவோ நல்ல விஷயங்கள் வர்ரதே...நேத்து நீ கூடப் படிச்சு அப்பிடியே உருகிப் போனயாமே...அதுமாதிரி, ஆச்சாரிய ஸ்வாமிகளின் அருள் உரைகள்...க்ஷேத்ராடணம், தீர்த்த யாத்திரை...ஒரு

பத்திரிகைன்னா எல்லா அம்சங்களும் கெட்டது நல்லதுங்கற பேதமில்லாமல்-ஸைட் பை ஸைட் இருக்கணும்ங்கறதுதான் மாடர்ன் ஜர்னலிஸம்...

இதற்கிடையில் 'பச்சுப் பச்சினு' முளைக்கீரைக் கட்டு கண்ணைப் பறிக்கிறது...

"வா சாமி...கீரை வாங்குவியே!" என்று கீரைக்காரியின் அந்நியோன்யமான அழைப்புக்கு ஒரு புன்னகை சிந்தி கீரை வாங்கியாகிறது.

"பிடி கருணையா, இது? கிலோ என்ன விலை... ('காறும்' என்று சீதாவின் முகம் சுழிய) புளி போட்டுப் பண்ணினா காறாதுடி...உங்கம்மாவைக் கேளு" என்று நாவில் நீரூறச் சொல்லி,

"பிஞ்சு பிஞ்சா கத்தரிக்காய் இருக்கே...நாட்டுக்காய் இருக்கே...நாட்டுக் கத்தரிக்காய்...ரொம்ப நன்னாயிருக்கும்... இந்தாப்பா கடைக்காரரே...நாழியாறது... கத்தரிக்காய் எப்பிடி....கறிவேப்பிலை கொத்துமல்லி, பச்சைமொளகா வேணுமோ? உங்கம்மா வேற ஏதாவது சொன்னாளோ? ஆத்துக்குப் போனப்பறம் 'ஏன்னா, எலுமிச்சம் பழம் வாங்கிண்டு வந்தேளா'ன்னு நீட்டி முழக்கிண்டு வந்து நிப்பா...எலுமிச்சம்பழம் எப்படி... என்று பேரம் பேசி நல்லதில் நல்லதைத் தேர்ந்து எடுக்கிறார் சுந்தரராம சர்மா.

பதவிசாக அவர் பக்கத்தில் பையைச் சுமந்து கொண்டு நிற்கிறதே ஒரு பெண்-எம்.ஏ. வாக்கும்...இவரைத் தெரியாதோ? எவ்வளவு நீண்ட கால வாடிக்கையாளர்... என்பதால் கடைத்தெருவெல்லாம் மதிப்பு-மரியாதை... ஆனால் இவர்தான் 'குமாரி சுந்தரி' என்று யாருக்காவது தெரியுமா? ஒருவேளை இந்தப் பெண்தான் 'அவளா!' என்று யாராவது நினைப்பார்களோ? என்று நினைக்க ஆறவில்லை சீதாவுக்கு!

கறிகாய் வாங்கிக்கொண்டு, காரியங்களிடையே ஆஞ்சநேயரையும் சேவித்துக் கொண்டு திரும்புகிற

வழியில் அப்பாவே பாதியில் விட்ட இடத்திலிருந்து சம்பாஷணையைத் தொடர்ந்தார்.

"நிஷ்காம்யமா எதையும் செய்தால் நமக்கு எந்தக் காரியத்திலேயும் அவமானப்படவேண்டிய அவசியம் ஏற்படாது. லோகம் பல மாதிரி இருக்கும். இந்த லோகத்திலே நாம் தாமரை இலைத் தண்ணீர் மாதிரி வாழ்ந்தால் என்னத்துக்கு அவமானப் படணும்? நல்லதையும் கெட்டதையும் எங்கே எதுக்குன்னு இடம் பிரிச்சுண்டுடணுமே ஒழிய-கெட்டதே இருக்கப்படாதுங் கறது நடக்கற காரியமா, என்ன? அதுக்கு வரட்டு லட்சியம்னு பேரு... அது ஒரு வயசிலே வரும், போகும்... அது போகட்டும், நேத்திக்கு அவன் கொஞ்சம் அசடு வழிஞ்ச மாதிரிதான் அப்டிக் கேட்டுட்டான்...ஆனா அவன் ரொம்பப் பெரிய... அவன் ஃபீல்டிலே அவன் ஒரு ஜீனியஸ்..."

"அவர் என்னவா இருக்கார்?"

"பெரிய சிவில் இன்ஜினியர்...ஆர்க்கிடெக்ட், டிஸைனர் ஆர்ட்டிஸ்ட்...

சீதா ஒன்றும் பதில் சொல்லவில்லை; அவள் முகத்தில் எத்தகைய உணர்ச்சியும் பிரதிபலிக்கவில்லை.

கச்சேரி ரோடில் வந்து கலந்தபோது திடீரென அப்பா சீதாவைக் கேட்டார்: "மிஸ்டர் சுகுமாரனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"உங்கள் நண்பர்-அவ்வளவுதான். அதுக்கு மேலே நான் ஒண்ணும் நினைக்கலே, அப்பா."

"எனக்கு நண்பனா இருந்தாலும் சின்ன வயசுப் பையன்-என்கிட்ட ரொம்ப மதிப்பு வெச்சிருக்கான். என் கையிலே அடக்கம்னு கூடச் சொல்லுவேன்...ஆனால் அவனை அடக்கிக்கிற அளவு என் கை பெரிசில்லையே... இப்ப அவனுக்குப் பொண் பார்க்கிற வேலையை என்கிட்ட விட்டு இருக்கா-அவ அம்மா-இப்ப ஒரு

மாசமாவே பெண் தேடும் படலம்தான்...நான் பெண்களை வெச்சுண்டு வரனுக்கு அலைஞ்ச காலத்திலே இப்பிடி ஒரு சான்ஸ் கெடைச்சிருந்தால் நன்னாயிருந்திருக்கும்... என்று பக்கவாட்டில் திரும்பி நடந்து கொண்டே மகளைக் கவனித்தார் சுந்தரம்.

அவள் பார்வை நேராய் எங்கோ, எதையோ பார்க்க நடந்து கொண்டிருந்தாள். 'தான் சொல்லுவதைக் கேட்டு அவள் அப்படி ஆகியிருக்கிறாளா, தனது வார்த்தைகளை அவள் கேட்கவே இல்லையா?' என்று அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

சீதாவின் முகம், ஒரு சிலையின் முகம் போல் உணர்ச்சியற்றிருந்தது.

"உங்கம்மாவுக்குப் பையனைப் பிடிச்சுடுத்து!" என்று அப்பா சொன்னதும், சீதா நின்று திரும்பி சுந்தரராம சர்மாவைப் பார்த்தாள். அவளது புருவங்கள் நெறிந்திருந்தன...

## 5

இந்த விஷயம் குறித்து சீதாவிடம் அவள் அம்மாவே பேசி, அவள் விருப்பத்தை அறியுமுன், தான் இதை ஆரம்பித்திருக்க வேண்டாமோ என்று எண்ணினார் சுந்தரம்; எனினும் இந்த சுகுமாரனின் பெயரைச் சொன்னதும் தன் மகள் அப்படியே நாணிச் சிவந்து போவாள் என்று நினைத்த அவருக்குச் சீதாவின் முகமாற்றம் சிறிதே ஏமாற்றம் தந்தது. 'பெண்கள் எப்போதும் அப்படித்தான்! கல்யாணம் என்றதும் பெற்றோரைப் பிரியப்போகிற வருத்தம்தான் அவர்களுக்கு முதலில் ஏற்படுகிறது. அப்புறம் புருஷனோடும் புக்ககத்தோடும் ஏதோ ஜன்மாந்திர உறவுபோல் பொருந்தி

விடுவார்கள்' என்பதே, இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் செய்து பார்த்து அவர் கண்ட அனுபவ ஞானம்.

மூத்த மகள் மீனாவுக்கும், இரண்டாவது மகள் காமுவுக்கும் வாய்த்த வரன்களைப் பற்றி அவர் எண்ணினார். 'மீனாவின் புருஷன் சங்கரன் மத்திய சர்க்கார் அலுவலகத்தில் சாதாரண குமாஸ்தாவாக இருந்தான் அப்போது. அந்த வரனே அப்போது எட்டாத கொம்பாக இருந்தது சுந்தரராம சர்மாவின் ஏழைமைக்கு. ஏழைகளுக்கு உள்ள ஒரே மூலதனம் கடன் தானே? கடன். கடன்! நாலு பக்கமும், திரும்பின திசையெல்லாம் கடன் வாங்கித்தான் மீனாவின் கல்யாணத்தை நடத்தினார். வைரக்கம்மல் என்ன, மாப்பிள்ளைக்கு மைனர் செயின், நவரத்னமோதிரம், பத்தாயிரம் ரொக்கம், எவர் சில்வர் பாத்திரங்கள், துணிமணிகள் என்று ஒரு குறைவு மில்லாமல் அந்த வறுமை ஜீவிதத்தில் தான் நடத்திக் காட்டிய அந்த 'மந்திர ஜால மகிமை'களையெல்லாம் இந்தக் குட்டி அறியமாட்டாள்'...என்ற நினைப்பில் வீட்டுக்கு வந்து நுழைந்த போது சீதாவின் முகத்தை அனுதாபமான புன்முறுவலுடன் பார்த்தார் சுந்தரம். அவளது நெறித்த புருவங்கள் இன்னும் சுழிப்பு மாறாதிருந்தன.

"ஆர் யூ அப்ஸெட்!" என்று மகளின் தோளைத் தொட்டார்.

"நாட் யெட்!" என்று அவளும் ஆங்கிலத்தில் முணுமுணுத்துச் சொல்லிக் கொண்டாள்.

கறிகாய்ப் பையை ஹாலில் உட்கார்ந்திருந்த அம்மாவின் முன் வைத்துவிட்டு மாடிக்குப் போனாள் சீதா.

அவள் மனத்துள் ஏதோ விபரீதமாய்ப் புரிந்தது. இருந்தாலும் இந்த விபரீதத்தைத் தவிர்த்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் அவள். யோசித்தாள். அப்பா, ஒருபோதும்

தான் விரும்பாத எதையும் தன்மீது வற்புறுத்தித் திணிக்க மாட்டார் என்று-பல சமயங்களில் அவள் உணர்ந்திருந்தாள். தந்தையின் அன்பையும், அவரது விசால மனத்தையும் கருதி-அவரை அவள் நம்பினாள். 'அம்மாவுக்கு ரொம்ப, அந்தப் பையனைப் பிடிச்சிருக்கு' என்று அப்பா சொன்னதை அவள் நம்பவில்லை. தன் மனம் தெரியாமல் அம்மா தன்னைப் பற்றியும் அவ்வாறு ஏதும் சொல்லியிருக்க மாட்டாள் என்று சீதா திடமாக நம்பினாள். ஆனால் அம்மாவுக்கென்று, அப்பாவை மீறி, தனியாக ஏதேனும் விருப்பு வெறுப்பு உண்டா?-பாட்டி விஷயத்தில் தவிர? என்று நினைத்தபோது 'அப்பாவின் கைப் பொம்மைதானே அவள்' என்ற எண்ணத்துடன் தனிமையில் அவநம்பிக்கையோடு உதட்டைப் பிதுக்கிச் சிரித்துக் கொண்டாள்.

"சித்தெ மெதுவாப் பேசுங்கோ-அவளுக்குக் கேக்கப் போறது"...என்ற அம்மாவின் குரலால் சீதாவின் கவனம் அங்கே திரும்புகிறது.

"கேக்கட்டுமே? பேசறது கேக்கத்தானே, பேசறேன்! நீ சொல்லுடி... நோக்குப் பிடிச்சிருக்கோ -பையனை? இடம் ரொம்பப் பெரிசுன்னாலும் எப்பிடி? என்ன மாதிரி வெல்த்?-அதுக்கு நான் கியாரண்டி!-மீனாவும் காமுவும் என்னதான் நாம் பெருமையாப் பேசிண்டாலும், 'டெல்லியிலே இருக்கா, அமெரிக்காவிலே இருக்கா'ன்னு... எல்லாம் வயத்துப் பொழைப்புத் தானேடி? வயத்துப் பிழைப்புக்குத்தானே எங்கேயோ போயி ஆத்தை நினைச்சு ஏங்கி ஏங்கிக் கடுதாசி எழுதிண்டு இருக்கா!... இங்கே இவ ராணி மாதிரி இருக்கலாம். ஏழு தலைமுறைக்குத் தாங்கும்-அப்டி ஒரு ஐஸ்வர்யம்...

"நீங்களே பேசிண்டு போறேளே...அவள் மனசிலே என்ன இருக்குன்னு தெரிஞ்சுண்டாத்தானே, மேலே நாம பேசலாம்?" என்று அம்மா வேண்டுமென்றே உயர்த்திய ஸ்தாயியில் மாடிக்குக் கேட்க வேண்டுமென்று சொல்லி,

சிறிதே இடைவெளி தந்து ஏதோ எதிரொலியை எதிர்பார்த்துக் குரல் கொடுத்தவள்போல் காத்திருந்து மாடி ஜன்னலைக் கவனித்தாள்.

எனது நெஞ்சில் எழும் குமுறலின் ஓசையை இந்தத் தாயின் இதயம் கூட எதிரொலிக்காதோ என்ற சீதாவின் ஏக்கம், பெருமூச்சாய் உயர்ந்து தாழ்ந்தது.

பெற்றோரின் சம்பாஷணை காதில் விழாத தூரத்துக்குச் சென்று, ஏதோ ஒரு குகைக்குள் புகுந்து கொள்வது போல், மேஜையின்மேல் ஆராய்ச்சிக்காகக் கொண்டு வந்திருந்த புத்தகங்களில் எது எதை இன்று நூல் நிலையத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும், எதை 'ரீ-என்ட்ரி' போட்டு மறுபடியும் கொண்டு வரவேண்டும்... என்னென்ன புத்தகங்கள் நேற்றுக் கிடைக்கவில்லை, இன்று புதிதாய் என்னென்ன புத்தகங்கள் கொண்டு வரவேண்டும்-என்கிற விஷயங்களை ஒரு சிறுதாளில் குறிக்க ஆரம்பித்தாள் சீதா.

ஒரு முறை யோசிப்பதற்காகத் தலைநிமிர்ந்தபோது ஜன்னல் வழியே எதிரில் மொட்டை மாடியில், சுசீலா ஆத்து மாமா இடுப்பில் துண்டை மட்டும் கட்டிண்டு விழுந்து விழுந்து கோபுர தரிசனம் பண்றார்...

'நான் தெரியறேனான்னு ஜன்னல் வழியாய்த் தேடறார் போல இருக்கு' என்று உதடு நெளிந்த புன்னகை யோடு-தன் வேலையில் முனைந்து-'பெண்ணின் பெருமை' -திரு.வி.க. என்று குறித்துக் கொள்கிறாள்.

'அம்மா சுந்தரகாண்டம் படிச்சாளாம்...அப்பா வந்து புருஷனா வாய்க்கிறதுக்கு...அது அதிர்ஷ்டமோ துரதிருஷ்டமோ-பிராப்தம் என்கிறாள். நான் பண்ணுகிற காரியத்துக்கு-ஏதோ கடந்தகாலப் பெண்களின் பெருமையை இந்தக் காகிதக் குப்பைகளில் தேடிக் கண்டுபிடித்து அதற்கொரு 'டாக்டர்' பட்டம் வாங்கிக்கொள்ளவா நான் ஆராய்ச்சிப் படிப்பில் இறங்கி இருக்கிறேன்?-நானும்தான் சுந்தரகாண்டம் உட்பட

எல்லாக் காண்டமும் படிச்சிருக்கேன். எனக்கு இந்த 'ப்ளேபாய்' புருஷனா வாய்க்கறது அதிர்ஷ்டமா? பிராப்தமா? என்ன கர்மம்? என்ன இழவுன்னு இதுக்குப் பேர்?' என்று தனது வேலைகளினூடே மனத்தில் எழுந்த கோபத்தால் ஒருமுறை பற்களை நறநறத்துக் கொண்டாள் சீதா!

புத்தகங்களை ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டுத் திரும்பியபோது சுவர் அலமாரிக் கதவில் பதித்திருந்த நிலைக்கண்ணாடியில் தனது கோபமான முகத்தைப் பார்த்தாள் சீதா!

'சீ! நான் கோபித்துக்கொள்ளவே கூடாது! என் முகத்துக்குக் கோபம் ரொம்பக் கோரமாக இருக்கிறது! இப்போது என்ன வந்துவிட்டதாம், நான் இவ்வளவு கொதிப்படைய?...பெரியவா ஆயிரம் வரன் பார்ப்பா, பேசுவா...எல்லாமுமா நடந்துடப் போறது?...அவர் கடமைன்னு நினைச்சு என்னவோ பேசட்டுமே!... இறுதியில் தீர்மானம் செய்வது நீதானே? என்ன பயன்? எதற்குக் கோபம்?...எங்கே சிரி...' என்று தனது பிம்பத்தோடு மானசீகமாக ஆறுதல் பேசிச் சிரித்துக் கொண்டாள் சீதா.

"யாரென்று ராகவனை...எண்ணினீர் அம்மா!" என்ற பல்லவியைத் திரும்பத் திரும்ப யதுகுல காம்போதியில் இழை இழையென்று இழைத்து உல்லாசமும் உற்சாகமும் ததும்பச் சற்று எடுப்பான குரலில் பாடியவாறே உடை மாற்றிக் கொண்டாள்.

மொட்டை மாடியில் நின்றிருந்த சுசீலா ஆத்து மாமா நினைவு வந்தது. ஜன்னல் கதவை மெதுவாகச் சாத்தினாள்; உடைமாற்றிக் கொண்ட பின்னர், தலையை பிரஷ் பண்ணி விட்டுக்கொண்டே ஜன்னல் வழியாக மாமாவைப் பார்த்தாள். 'இங்கே ஜன்னல் மூடியதும் மாமா வேறுபுறம் கைப்பிடிச் சுவரில் கைகளை ஊன்றியவாறு குனிந்த நிலையில் என்ன காட்சியில் அப்படி லயித்திருக்கிறாரோ' என்ற நினைப்புடன் அந்த

மொட்டை மாடியை எட்டுகிற ஸ்தாயியில் யதுகுல காம்போதியை மிதக்கவிட்டாள்.

மாமா திரும்பிப் பார்த்தார்.

"சுசீலா ரெடியா?" என்று ஜன்னல் கம்பியில் முகம் பதித்துக்கொண்டு கூவிக்கேட்டாள் சீதா.

"ரெடி! ரெடி!" என்று உருட்டுச் சட்டிப் பொம்மை மாதிரித் தலையோடு உடம்பு முழுவதையும் ஆட்டிச் சிரித்தார் மாமா.

சுசீலாவும், சீதாவும் ஒரே பஸ்ஸில் ஒன்றாகவே போவார்கள்-ஹைஸ்கூலுக்கு, காலேஜுக்கு...சீதாவை விடவும் ஒரு வருஷம் முதிர்ந்த மாணவி சுசீலா... காலேஜ்வரை ஒன்றாக வந்தவர்களைப் போன வருஷம் அவள் எம். ஏ. பரீட்சை எழுதிக் கொண்டிருந்தபோதே கல்யாணம் வந்து பிரித்தது. ஆனால் ஒரு வருஷத்துக்குள் சுசீலா பிறந்தகத்துக்கே திரும்பி வந்து, எங்கோ ஒரு வங்கியில் வேலைக்கமர்ந்து மறுபடியும் காலை பஸ்ஸில் ஒன்றாகப் பிரயாணம் செய்கிற பழைய தோழியாகி விட்டாள்...

இதற்கு மேல் அவளது அவலக் கதையை அறிந்து கொள்ளவும், யோசிக்கவும் அஞ்சினாள் சீதா. ஆனால், அந்தப் பழைய சுசீலாவுக்கும், இப்போது அழகிய ஓவியம் ஒன்று கறைபட்டது போலவும், புகை பட்டது போலவும், வாழ்வின் அடியால் ஊனப்பட்டுப்போன ஒரு வாயில்லா ஜன்மம் போலவும்...நிரந்தரமான ஏமாற்றத்தால் வறண்டு போன சுசீலாவின் வெறுமை-விழிகள் பெரிதாய் நினைவுக்கு வந்தது...

'ஹே! சீதே!' என்று அலறுவது போன்ற ஒரு கற்பனையிலிருந்து அவளை விடுவித்தது, அப்பாவை அம்மா சாப்பிட அழைத்த குரல்.

மணி ஒன்பது.

"சீதா...நோக்கு இன்னிக்குக் காலேஜ் போகணுமில்லியோ?...நீயும் வந்து உக்காரேன்...தட்டுப் போடறேன். எனக்கு இன்னொருவேலை மிச்சம். இன்னிக்காவது இந்தத் தாயி வராளோ? இல்லே அந்தக் கட்டேலே போறவன் கிட்ட அடிபட்டு நகர முடியாமல் படுத்துக் கெடக்காளோ?... ஏன்னா, உங்களைச் சிரமப்படுத்தப்படாதுன்னுதான் இருந்தேன்...இப்ப வேற வழியில்லே. போன் பண்ணினா 'ஊ ஊ'ன்னு சங்கு ஊதற சத்தம்தான் கேக்கறது. ஆபீசுக்குப் போற வழியிலே நீங்க ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போனேள்னா-நொடியிலே கொண்டு வந்து வச்சுடுவான்..."என்று அம்மா எழுவாய் இல்லாமல் பேசிக்கொண்டே போவது எதைக் குறித்து என்ற அக்கறை சிறிதும் இல்லாமல் தட்டில் போட்ட பிடிகருணை-புளிக்குத்தின-மசியலைத் தொட்டுச் சப்பி எதிரொலி கேட்பது போல் நாக்கால் ஒலியெழுப்பிச் சப்புக்கொட்டிச் சுவைத்து "பேஷ்! பேஷ்!... சீதா- என்னமோ காறும்னியே... சாப்பிட்டுப்பாரேன்..." என்று உற்சாகமாகக் கூவினார் அப்பா.

சீதா அவர் எதிரில்தான் நின்றிருந்தாள். அப்பா குழந்தை மாதிரி, இந்தச் சாமான்யமான விஷயங்களை ரசிக்கிற எளிமை அவளுக்கு உன்னதமாய் இருந்தது.

"நெய் போட்டுக்கோங்கோ-அப்பா!" என்று அன்புடன் உபசரித்தாள்.

"தாங்க்ஸ்...நீயும் உக்காரு. என்னோடேயே ஆபீஸ் கார்லே வந்துடேன்...யூனிவர்சிடியிலே விட்டுடறேன்... என்று சோறும் சொற்களும் சிதற, மூக்கை உறிஞ்சிப் புறங்கையைத் திருப்பித் திருப்பி நக்குகிற மும்முரத்தோடு சொன்னார்.

"வேண்டாம். என் ஃபிரண்ட் காத்திருக்கேன்னு சொல்லியிருக்கா...

"யாரு-அந்த வாழாவெட்டி சுசீலாவா?"

“ஸ்...வேண்டாம் அப்பா, பாவம்பா சுசீலா... என்று அப்பாவைத் தடுத்தபோது, சீதாவின் கண்கள் சினேகிதியின் மேல் கொண்ட பரிவால் கலங்கிவிட்டன.

“ம்...நோக்குத் தெரியாதுடி-அவ என்ன காரியம் பண்ணிட்டு, புருஷன் துரத்தியடிச்சு, இங்கே வந்து நிக்கறாள்னு...

“நமக்கேன்-இந்த ஊர்க் கதையெல்லாம்?...நல்ல காரியத்தைப்பத்திப் பேசிண்டு இருக்கச்சே... என்று அம்மாவும் அப்பாவின் வாயை அடைத்தாள்...

“ரசத்துக்கு நெய் போடவா?...”

அப்பா மூஸ் மூஸென்று சாப்பிடுவதில் முனைந்தார். நடுவில் மறுபடியும் பேசினார்:

“உன் பொண்ணைக் கேட்டு நீ சொல்லுடி...எனக்கு ஒண்ணும் அவசரம் இல்லே; கம்பல்ஷன் இல்லே. இது ஒரு பெரிய அதிர்ஷ்டம்-தேடிண்டு வரது. அவ்வளவுதான் சொல்லுவேன். எனக்கு இந்தச் சம்பந்தத்தினாலே எவ்வளவோ பயன்கள் ஏற்படும்...எனக்குன்னா... நம்ப எல்லாருக்கும் தானே?...‘உங்கம்மாவுக்குப் பையனைப் பிடிச்சிருக்கு’ன்னேன்; உன் பொண் நம்பலே போலிருக்கு. உன் அபிப்பிராயத்தை என் முன்னாலேயே உன் பொண்கிட்ட சொல்லேண்டி” என்றார் அப்பா.

“எனக்கு நல்லது நடக்கணும்னுதான்...இந்தச் சம்பந்தம் ஏற்படணும்னுதான் பிரார்த்தனை...எல்லாத் துக்கும், நீ என்னடி சொல்றே?” என்று கொஞ்சலாகக் கேட்டாள். வெட்கப்படுகிறாளோ என்று நினைத்து, சாப்பிட்டுக் கொண்டிருந்த மகளின் முகவாயை நிமிர்த்தினாள் அம்மா!

ஓ! எவ்வளவு பெரிய கண்களில் எவ்வளவு பிரவாகம் போன்ற கண்ணீர்!

‘சீதே!’ என்று அம்மாவின் மனம் கேவினாலும்,

"அசடு...அசடு...எல்லாப் பொண்களும் முதல்லே இப்படித்தான்" என்று சொல்லும்போது அம்மா ஒரு முகமூடியை இழுத்து விட்டுக் கொண்டதுபோல் தோன்றியது சீதாவுக்கு.

'அடீ, அம்மா! நீயுமா?' என்ற சொற்கள் நெஞ்சில் அடைத்தன.

## 6

அப்பாவை அழைத்துப் போவதற்காக ஆபீஸ் கார் வந்து நிற்கிறது. தனக்கும் நேரமாவதை உணர்ந்து அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடிக்கிறாள் சீதா. வேலைகளும் அவசரமும், பேசிக்கொண்டிருந்த கல்யாண சமாச் சாரத்தைச் சற்றே ஒத்திவைத்தது போலிருந்தாலும் மூவரின் மனமும் அது குறித்த யோசனையில் ஆழ்ந்தே இருந்தன.

"அப்பா உங்களுக்குக் கார் வந்தாச்சு... என்று சொல்லிக்கொண்டே கையலம்பினாள் சீதா. அப்பா தமது விஸ்தாரமான காலை போஜனத்தை முடித்து எழுவதற்கு இன்னும் பத்து நிமிடமாவது ஆகுமே!

"நான் அவ காலேஜ்லேருந்து வந்ததும் பேசிப் பார்க்கிறேன்..." என்று அம்மா குரலைத் தாழ்த்தி அப்பாவிடம் சொல்லுவது மாடிப் படிகளில் ஏறும்போது சீதாவுக்குக் கேட்டது.

"நல்ல விலைகொண்டு நாயை விற்பார் அந்த நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?" என்ற பாடல் வரிகள் சீதாவின் நினைவில் ஒலித்தன. அம்மா தன்னிடம் தனியாகப் பேசினால் இந்தப் பாடல் வரிகளைத்தான் சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

அவளுக்கு இன்னும்கூட அம்மாவின் மேல் நம்பிக்கை இருந்தது. அதுபோலவே அப்பாவுக்கும் அம்மாவிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பது சீதாவுக்குத் தெரியவில்லையோ?

அவர் சாப்பிட்டானதும் அந்த சுகுமாரனின் பெருமைகளைப் பேச ஆரம்பித்தார். அப்பாவின் மற்ற பெண்களினாலே அவருக்கு ஏதோ பாரம் குறைந்த மாதிரிதானாம்! ஆனால் இந்தக் கடைசிப் பெண்ணாலே தான் அவருக்கு அதிர்ஷ்டமும் ஐஸ்வரியமும் வந்து குவியப் போகிறதாம்!

"அம்மா நான் புறப்பட்டுட்டேன்...அப்பா நான் போயிட்டு வர்றேன்... என்று விடைபெற்றுக் கொண்டு, தோளில் தொங்குகிற பையும், வெயிலுக்குப் பாதுகாப்பாக அணிந்த கறுப்புக் கண்ணாடியுமாக வெளியில் வந்தாள் சீதா. அப்பாவின் ஆபீஸ் கார் டிரைவர் வணக்கம் செய்தான். பதிலுக்கு சீதாவும் வணங்கினாள்.

"அப்பா வந்துண்டே இருக்கார்" என்று சொல்லித் தெருவில் இறங்கியதும், பின் வீட்டு சுசீலா தெருவைச் சுற்றிக் கொண்டு சீதாவுக்கு நேரே வரவும் சரியாயிருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் புன்முறுவல் செய்து கொண்டபின், இணைந்து நடந்தார்கள்.

அப்பா வாசலுக்கு வந்து காரில் ஏறுவதற்கு முன் சற்று நின்று தெருவில் நடந்து போகிற தமது மகளின் ஒயிலையும் எழிலையும் ரசித்துப் பார்த்தார்.

'இந்தக் காட்சியை அவன் பார்க்க வேண்டும்– பார்ப்பான்; பார்க்காமலா மனசிலே புள்ளி போட்டுண்டான்' என்று உதட்டில் ஒரு புன்னகை நெளிய...

நேற்றிரவு சீதா ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்து அந்த நீல வெளிச்சத்தில் குனிந்த போது சுகுமாரன் பார்த்தானே ஒரு பார்வை, அந்தக் காட்சி ஒரு மின்னல் வெளிச்சம் போல் அவரது நினைவில் அடித்தது.

சுந்தர சர்மா தெரு வாசற்படியிலும், அவர் துணைவி வீட்டு வாசற்படியிலும் வந்து முன்னும் பின்னும் நின்று மகளைப் பார்த்தனர்.

அம்மாவின் கையில் வெற்றிலைத் தட்டு இருந்தது. அப்பா பாக்கை வாங்கி வாயிலிட்டுக் கொண்டார். அம்மா தட்டை ஜன்னல் கட்டையின் மேல் வைத்துத் துளிரான வெற்றிலைகளைப் பொறுக்கி எடுத்து, புடவை தலைப்பில் துடைத்துச் சுண்ணாம்பு தடவி அப்பாவிடம் தந்தாள். ஏதோ நினைவில் தெருவைப் பார்த்து யோசித்தவாறாக, வெற்றிலையை வாங்கி வாங்கி மென்றுகொண்டிருந்த கணவரைப் பார்த்து ஒரு சிறு நகையுடன் "போறும்னா சொல்லுங்கோ...பாக்கு அதிகமாப் போட்டுண்டேளா? இன்னம் ரெண்டு வெத்திலை மடிக்கவா?" என்று அவரது கவலையை மாற்றுவதுபோல் உபசரிப்பும் கனிவும் குழையும் குரலில் கேட்டாள் மனைவி...

'போறும்' என்று சைகையால் சொல்லி, "யாரப்பா, யாரு வந்திருக்கீங்க கணபதியா?" என்று கார் டிரைவரை விசாரித்தார் சுந்தரம். கையில் அந்த வார 'சுந்தரி'யை ரொம்பக் கரிசனையுடன் படித்துக் கொண்டிருந்த கிழவன், "நாந்தான் சார் ஏயுமலை" என்று சலாம் வைத்து எதிரில் வந்தார்.

டெலிபோன் மணி அடித்தது. சுந்தரம் ஓடிச்சென்று ரிஸீவரை எடுத்தார். அவர் எதிர்பார்த்ததேபோல சுகுமாரன் தான்...

"வெரி வெரி குட்மார்னிங்!...உங்களுக்கு நூத்தியோரு வயசு. இப்பத்தான் பேசிண்டிருந்தேன்."

"என்னத்தைப் பேசிண்டிருந்தேளோ?" என்று கேட்டு உதிர்த்த ஒரு அவுட்டுச் சிரிப்புக் காதைக்குடைய ரிஸீவரைச் சற்றுத் தள்ளி வைத்துக்கொண்டு சுந்தரமும் சிரிக்கிறார்.

"உங்களைப் பத்திப் பேசறதுக்கு நல்லது தவிர வேற என்ன இருக்கு! தங்கம்னா தங்கமாச்சே, உங்க மனசு...ராத்திரி நன்னா தூங்கினேளோ?...ரொம்பத்தான் ஆயிடுத்து டோஸேஜ்! கொஞ்சம் லிமிட் பண்ணிக் கணும்..."

"இது ஒரு யூஷுவல் குடிகார உபதேசம்!...தூங்கினே னான்னா கேட்டேள்?...தூங்கினேனோ இல்லையோ... 'வ்ஓ!... என்ற ஒரு கொட்டாவிச் சத்தம்...தீக்குச்சியை உரசுகிற சத்தம்...புகை தொண்டையில் அடைக்கிறதோ?- சுகுமாரனின் குரல் தொடர்கிறது...

"இப்பத்தான் 'பெட்காஃபி'யை 'ஸிப்' பண்றேன்... எழுந்தவுடனே உங்க ஞாபகம்தான்...ஆபீசுக்குப் புறப்படற நேரமாச்சேன்னு 'டிரை' பண்ணேன்."

"நீங்க சொல்ற ஒவ்வொரு வார்த்தையும் என்னை ரொம்ப கௌரவப்படுத்தறது-உங்க கேரக்டர் இருக்கே!... இதோ, என் கையிலே ரோமாஞ்சலி செய்யறதை உங்களால் பார்க்க முடியாது. உங்க...என்ன சொல்றது...ஒரு பிரியம்...ஸ்நேகம்...பகவான் இந்த ஸ்நேகத்தை என்னிக்கும் நிரந்தரமா ஆக்கிப்பிடணும்... ஏதோ முக்கிய காரியமா போன் பண்ணேள் போலிருக்கே..." என்று பவ்யமாய், குழைவாய், நெளிவாய், கொஞ்சம் 'மாமித்தன'மாய் தமது வருங்கால மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்பும் அந்த சுகுமாரனிடம் தன் 'ஆத்துக்காரர்' பேசுகிற சமர்த்தில் மயங்கி, நாணி, சேலைத் தலைப்பை இழுத்து இழுத்துப் போர்த்தியவாறு நின்று ரசிக்கிறாள் அம்மா...

நல்ல வேளை சீதா இல்லை, இந்தக் கண்றாவியைக் கண்டு தலையிலடித்துக்கொள்ள!

"ஆத்துக்கு வரேளா? ஆபீசுக்கு வரேளா?..." என்று உற்சாகமாய்ப் போனில் வரவேற்கிறார் சுந்தரம்: "வாங்கோ-நாலு மணிக்குத்தானே-நானும் வந்துடுவேன்... வாங்கோ...ஈஸ்வர சங்கல்பம்தான் அவா எங்காத்துக்கு வரது-என்ன ஒரு திடம்! தெளிவு! இந்த வயசிலே...நானே

ஒரு தடவை வந்து அவாளை சேவிச்சுண்டுட வேணும்னு இருந்தேன்...அவசியம் வரணும்...இன்னிக்கு என்ன கிழமை...ரொம்ப அற்புதமான நாள்..."

"ஈஸ்வரோ ரக்ஷது!" என்று மனசில் சொல்லிக் கொண்டு, ரிஸீவரைவைத்துவிட்டு-அவருக்கு ஏற்பட்ட களிப்பில் எங்கே தன்னைத் தூக்கிக் கொண்டு குதித்து ஆடுவாரோ என்று பயந்த அம்மா சற்று ஒதுங்கினாள். அந்த ஒதுக்கத்தில் அவளைத் தாவித் தழுவி அணைத்துக் கொண்டு அவள் காதில் சுபசெய்தியைச் சொல்லி, காதோரத்தில் வெள்ளியாய்ப் படிந்திருந்த சிகையில் முத்தமிட்டுப் புளகாங்கிதத்துடன் சொன்னார் சுந்தரம்:

"சுகுமாரன் அம்மா, சீதாவைப் பார்க்க வராளாம்!"

**சீ**தாவும் சுசீலாவும் பஸ்ஸில் அருகருகே அமர்ந் திருந்தனர். சுசீலா ஜன்னலோரத்திலிருந்தாள். சீதா தனது இடது தோளின் வழியாக அவள் முகத்தை நெருக்கமாய், பின்னணியில் சரசரவென்று ஓடி மறையும் கட்டிடங்களும் மரங்களும் தெரிய-ஆழ்ந்த யோசனையுடன் உற்றுப் பார்த்தாள். அவள் பார்வை தன்னைத் தீண்டியதேபோல் சுசீலாவும்- நிரந்தரமாகத் தவழ்கிற துயரம் தேங்கிய முகத்தில் புன்முறுவல் காட்டினாள். சீதா குனிந்த தலையுடன், அவள் தன்னைக் கவனிப்பது உறுதியானபின் அவள் காதில் மட்டும், அந்த பஸ்ஸின் இரைச்சலினூடே கேட்கிற மாதிரி ஆங்கிலத்தில் முனகினாள்:

"நமது மக்கள் மத்தியில் திருமணம் என்பது என்ன பாத்திரம் வகிக்கிறது என்று நீ நினைக்கிறாய்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

"நமது மக்கள் என்றால்? நீ நமது பிராமண ஜாதியைப் பற்றிக் கேட்கிறாயா?" என்று சுசீலாவும் அதே ஸ்தாயியில் குனிந்த தலையோடு கையிலுள்ள ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டியவாறு கேட்டாள்.

'ஓ! அப்பிடியொரு விஷயமிருக்கிறதா?' என்று உதட்டைக் குவித்து மேலுதட்டை 'நறுக்' கென்று கடித்துக் கொண்டாள் சீதா.

பிறகு நேர்ந்த மௌனத்தில் இருவருமே அதுபற்றி யோசித்தார்கள்.

யூனிவர்ஸிடி ஸ்டாப்பிங்கில் இறங்குவதற்கு முன்னர் "சுசீலா, இது விஷயமாக நீ எனக்கு உதவி செய்ய வேண்டும். ஜாதி-மதம் போன்ற பிரிவுகளினாலே பெண் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் வராது. அது எப்படியும் போகட்டும். என் ஆராய்ச்சிக்கு இந்த ஜாதிமதப் பிரிவுகள் அவ்வளவு சம்பந்தப்பட்டதல்ல. ஆனாலும் அதுபத்தியும் நாம பேசுவோம். பொதுவாகவே பெண்களாகிய நமக்கு இந்தக்கல்யாணம் என்கிற சமூக பந்தத்தினாலே ஏற்படற விளைவுகள்–நல்லதும் கெட்டதும் நல்லதை எப்படிப் பாதுகாக்கறது?–கெட்டதை எப்படித் தவிர்க்கிறது?–இந்தப் போக்கிலேதான் நான் ஆராய்ச்சி செய்கிறேன்...நீ எப்பவாவது ஓய்வா இருந்தால் நானே உங்காத்துக்கு வரேன்..." என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டாள் சீதா.

கடற்கரைச் சாலையில் யூனிவர்ஸிடி காம்பவுண்ட் சுவர்க் கம்பி அழிகளின் ஓரமாய், பன்னீர் மர நிழலில், வெள்ளை நிறப் பூக்கள் உதிர, சிரிப்பொலியுடன் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்த பெண்கள் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு வெளி நாட்டுப் பெண் "வணக்கம்...குமாரி சீதா" என்று மழலை போன்ற வார்த்தைகளால் இவளை வரவேற்றாள்.

"வணக்கம் ஸ்ரீமதி சீதா அவர்களே!" என்று சீதா சொன்னதும்,

"மன்னிக்கவும், 'திருவாட்டி சீதா அவர்களே' என்று நான் சொல்லவேண்டும்" என்று திருத்தினாள் ஒரு கருநிற அழகி!

இவளையும் சீதாவுக்குத் தெரியும். மாரியம்மாள் என்று பெயர். 'மரியம்' என்பது சிநேகிதிகளின் செல்ல விளி. ஹரிஜனப் பெண். தமிழார்வம், தமிழாராய்ச்சி, தமிழ்ப்புலமை யாவும் செறிந்தவள். எனினும் 'தனித்தமிழ்ப் போக்கு' கண்டு பரிகசிப்பாள். இந்த இருவர் மத்தியிலும் சிக்கித் திணறுவாள் சில சமயங்களில். பாவம், இந்த வெளி நாட்டுப் பெண் திருமதி சீதா!

எங்கிருந்தோ, ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு சின்னஞ்சிறு குடியரசிலிருந்து தமிழ் பயில வந்திருக்கும் அவளைப் பலரும் ஒரு ருஷ்யப்பெண் என்றே நினைக்கின்றனர். அப்போதெல்லாம் 'நான் ஒரு சோவியத்பெண்' என்று திருத்துவாள் திருமதி சீதா.

அந்தப் பெண்கள் கூட்டத்தில் சிலரைச் சீதாவுக்குத் தெரியும். சிலரை முகம் மட்டும் தெரியும். முதலில் முகம் தெரிந்து, பின்னர் பெயர் தெரிந்தது. அப்புறம் ஒருவரைப் பற்றின விவரங்கள் தத்தமது மூலமே இருவருக்கும் தெரிந்து அதில் இருவருக்கும் இடையே நிலவும் பொதுமை தெரிந்து, அந்தப் பொதுவில் சிறப்புத் தெரிந்து, அறிவு பூர்வமாய், அந்தரங்கமாய் அன்பு பொருந்தி நெருக்கம் கொண்ட சீதாவின் சினேகிதிகள் என்று இந்த இருவரையும் சொல்லலாம்.

'குமாரி மாரியம்மாள்,' 'திருமதி சீதா' 'குமாரி சீதா' என்று அவர்களின் பெயர்கள் எழுதிய நூல் நிலைய அடையாள அட்டைகளைச் சேகரித்துக்கொண்டு மூவரும் புத்தகங்கள் தேடி எடுக்கப் புறப்பட்டனர். மற்ற பெண்கள் சிலர் அங்கே காத்திருப்பதாகச் சொல்லி நின்றனர். சிலர் அப்போதே இவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு போயினர். சிலருக்கு வகுப்பு; சிலருக்கு வீட்டிற்குப் போய்ப் படிப்பு!

நூல் நிலையத்திற்குள் அரை மணி நேரம் கழிந்திருக்கும். புத்தகங்களைத் திரட்டிக்கொண்டு திரும்பி வருகிறபோது நூல்நிலைய அலுவலக அறையிலிருந்து,

சீதாவை ஏற்கெனவே தெரிந்த ஐயங்கார் மாமா "நீங்க தானே சுந்தர சர்மாவோட டாட்டர்? அப்பா போன்லே கூப்பிடறார்" என்று இளித்துக் கொண்டே சொன்னார்.

அப்பாவுக்கு இங்கேயும் இருக்கிற செல்வாக்கை நினைத்து மனத்துள் வியந்து கொண்டாள் சீதா.

அவள் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தபோது அலுவலக அறையில் இருந்தவர்கள் அப்பாவின் பெயரையும், சுந்தரி பத்திரிகையையும் குறிப்பிட்டுப் பேசுவது மற்றொரு காதில் விழுகிறது. எங்கே 'குமாரி சுந்தரி'யை நினைத்துக் கொள்ளுவார்களோ என்று சீதாவின் மனம் துணுக்குற்றது.

"அப்பாவா! சீதா பேசறேம்பா...ஆத்துக்கு மூணு மணிக்கு வந்துடுவேன்...என்ன விசேஷம்?"

"நல்ல விசேஷம்தான்...உன்னைப் பொண் பாக்க வரா...

"என்னடி பெண்ணே, சத்தத்தைக் காணோம்! வெக்கமாக்கும்...சரி . சரி. மூணு மணிக்கு வந்துடுவி யோன்னோ? அவா நாலு மணிக்குத்தான் வரப்போறா! எதுக்கும் உன்னைக் கூப்பிட்டுச் சொல்லிடுவோமேன்னு தான்" என்று அப்பா உற்சாகத்திலும் மது மயக்கத்திலும் கொஞ்சம் இரைச்சலாகவே பேசுகிறார்...

"நான் வந்துடுவேன் அப்பா!" என்று ரிஸீவரை வைத்தாள்.

வெளியில் தனக்காக காத்திருக்கும் சினேகிதிகளின் நினைவு வந்தது சீதாவுக்கு.

அந்த சோவியத் பெண் தன் கையிலிருந்த புத்தகத்தின் தலைப்பை ஒவ்வொரு எழுத்தாய் உச்சரித்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

பெ-ண்-ணி-ன்-பெ-ரு-மை

# 7

**சீ**தா-புறத்தே சிநேகிதிகளுடன் புன்முறுவலும் தலையசைப்புமாய் அவர்களது உல்லாசமான சம்பாஷணையில் ஈடுபாடு கொண்டவள் போல் காட்டிக் கொண்டாலும், உள்ளூர விளைந்த கலவரமும் ஒருவகை திகிலும் அடிக்கடி அவள் முகத்தில் வாட்டத்தை ஏற்படுத்தின.

நேற்று மாலை இந்நேரம்தான் அவள் அந்த 'ஹே ஸீதே!' என்ற எச்சரிக்கை அலறலைப் படித்தாள். 'அதற்குள் என்னென்னவெல்லாம் நடந்து, எனது வாழ்வை நோக்கி நானே அலறுவது போல் ஆகிவிட்டது?

'நிச்சயம் இது ஒரு நாளில் திடீரென நேர்ந்த தீர்மானமாய் இருக்க முடியாது. அப்பா அந்த சுகுமாரனின் மீது வெகுநாட்களாய்க் குறி வைத்து இப்படிப்பட்ட தீர்மானத்துக்கு மெள்ள மெள்ளத் தள்ளி வந்திருக்க வேண்டும். நேற்று இரவு சுகுமாரனை அழைத்து வந்ததே என்னை அவன் பார்க்க வேண்டுமென்பதற்குத் தான்!...அதுதான் பார்த்தாகி விட்டதே! இன்றைக்கு அவன் அம்மா வந்து பார்க்க வேண்டுமோ! அதற்குத் தயாராக நான் முன்கூட்டியே வீட்டுக்கு வந்து பட்டுப் புடவை கட்டிக்கொண்டு, அலங்காரம் செய்துகொண்டு அடக்க ஒடுக்கமாய் நின்று 'என்னை இழுத்துண்டு போயிடுங்கோ...'ன்னு பார்வையாலே ஏங்கி ஏங்கிக் கேட்க வேணுமோ?...

'அடடா இந்த அப்பாவுக்கு என்ன பரவசம்; படபடப்பு; அவசரம்! அவசர அவசரமா இந்த ராவணன் கையிலே என்னைப் பிடிச்சுக் குடுத்துடணும்னு நினைக்கிறேளே-அப்பா, அப்பா!' என்று மனசு பலமுறை துடித்தது சீதாவுக்கு.

மூவரும் ஒரு மரத்தடியில் புல் வெளியில் அமர்ந்து புத்தகங்களைப் புரட்டியவாறும், தங்கள் ஆராய்ச்சி

சம்பந்தமாக விவாதித்தவாறும், அந்த சோவியத் பெண்ணுக்கு நமது கலாச்சார வழக்குகளையும், இலக்கண, இலக்கிய மரபுகளையும் விவரித்தவாறும்- பொழுது நகர்ந்து கொண்டிருந்தது.

"திருவாட்டி சீதா-வேறு வழியே இல்லை; நீங்கள் இருவரும் ஒன்றாக இருக்கும்போது இப்படி ரொம்பவும் 'மரியாதை'யாக உங்கள் இருவரையும் பிரித்து அழைக்க வேண்டியிருக்கிறது...காத்ரீனாவாகிய நீங்கள் எப்படி சீதையானீர்கள் என்று குமாரி சீதாவுக்குத் தெரியாது... சொல்லுங்கள்..." என்று தமிழில், தெளிவாக, ஒவ்வொரு வார்த்தையாக நிறுத்தி, தந்தி வாக்கியத்தைப் படிப்பது போல் அந்த சோவியத் பெண்ணிடம் கேட்டாள் மரியம்.

திருமதி சீதா அப்போது கம்ப ராமாயணத்தின் ஆரண்ய-சுந்தர-யுத்த காண்டங்கள் அடங்கிய ஒரு தொகுப்பைப்புரட்டிக் கொண்டிருந்தாள். அதில் கம்பனின் ஒரிஜினல் டெக்ஸ்ட் மட்டுமே பதிப்பிக்கப் பட்டிருந்தது. அரும் பதவுரைகளோ, விளக்கவுரைகளோ ஏது மில்லாதது கண்டு ஏமாற்றத்துடன் புத்தகத்தை பட்டென்று மூடினாள் திருமதி சீதா. மண்டியிட்டு புல் தரையில் ஒரு புறம் சாய்ந்து உட்கார்ந்திருந்த அந்த ஐரோப்பியப் பெண்ணின் முழங்கால்கள் வெண்மையாய் வெளித்தெரிந்தன. ஸ்கர்ட்டின் விளிம்புகளை அவள் அடிக்கடி இழுத்து மறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இப்போது அந்த விளிம்புகளின் மேல் கம்பராமாயண பைண்டு வால்யூமைப் பாரமாக வைத்துக்கொண்டு மரியத்தைப் பார்த்துச் சிரித்தாள் காத்ரீனா.

"காத்ரீனா சீதாவான கதையா?..." என்று ஒரு முறை கேட்டு முகம் சிவக்கத் தனது குழந்தைப் பிராய நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூர்ந்தாள் திருமதி சீதா.

அப்போது அவள் குழந்தைகள் காப்பகத்தில் பன்னிரண்டு வயது சிறுமியாக வளர்ந்து கொண்டிருந் தாள். காத்ரீனாவுக்குத் தாயின் முகம் கூடத் தெரியாது.

அவள் தந்தை கிரிகோரி கூட, காத்ரீனாவுக்குப் பதினைந்து வயது முடிவதற்குள் இறந்து போய்விட்டார். ஒரு சோவியத் பிரஜை பெற்றோரை இழந்து விடுவதனால் திக்கற்ற அனாதையாகி விடுவதில்லை. அது, மாபெரும் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் சோவியத் அரசால் போஷித்து வளர்க்கப்பட்டுச் சிறந்த பிரஜையாக உருவாக்கப்படுகிறது.

காத்ரீனாவின் தந்தை யுத்தத்தில் படுகாயமடைந்து ஒரு காலை இழந்துவிட்டவர். அவர் அது குறித்துச் சிறிதும் வருந்தியதேயில்லை. தன் உடம்பில் பாதியை இழந்திருந்தாலும் அவர் வருத்தப்பட்டிருக்க மாட்டார். காத்ரீனாவின் தாய் மரீஷ்யாவின் மரணம்தான் அவரது நெஞ்சில் மாறாத துயரமாய் மண்டியிருந்தது...

அவரது விரிந்தமார்பின் மேல் வரிசையாகப் பதித்துத் தொங்கும் விருதுச்சின்னங்களும், பதக்கங்களும் ஒளிவிடக் கம்பீரமாய்த் துலங்கும். அந்தத் தந்தை கிரிகோரியின் நினைவு முகம் காத்ரீனாவின் மனத்தில் தெரிந்தது...

அந்தக் கொடிய யுத்தத்தில் நேர்ந்த கோரங்கள்... அந்தத் துர்த்தேவதைக்குப் பலியான லட்சோப லட்சக்கணக்கான மக்கள்; அவர்களின் துயரங்கள்; இழப்புகள்...அந்தக் கொள்ளைப் பேய்கள் வந்து கொன்று குவித்த பிணக் குவியலின் நடுவேதான் மரீஷ்யா, காத்ரீனாவுக்குப் பிறவி தந்தாள்...பிறவி நீத்தாள்!

நாஜி வெறியர்கள் காவல் காத்து நிற்கும் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் கிரிகோரியும் அவரையொத்த-கைதி முகாமில் அடைக்கப்பட்டிருந்த தோழர்களும் சுற்றிச் சூழ நின்று மருத்துவம் பார்க்க, நாஜிகளின் பாசறையில் வெட்ட வெளிப் பனித்தரையில் பிறந்தவள் காத்ரீனா...

அடால்ஃப் ஹிட்லர் என்று கலி காலத்தில் பேர் படைத்த அந்த அரக்கர் குலத் தலைவனின் ஐம்பத்

திரண்டாவது பிறந்த நாளை அந்த நாஜி வெறியர்கள், கிரிகோரியும் அவர் குடும்பத்தினரும் அடைக்கப் பட்டிருந்த முகாமில் கொண்டாடிய கோரத்தை அப்பா சொல்லி, அவள் கேட்டுத் துடி துடித்திருக்கிறாள். நினைத்தால் இப்போதுகூட அவள் நெஞ்சுக் குழியில் புறாக் குஞ்சு துடிப்பது போல் ஓர் உணர்ச்சி படபடத்து நடுங்குகின்றது.

தோள்களைச் சிலிர்த்துக் குலுக்கியவாறு தலை நிமிர்ந்த காத்ரீனா முகத்தில் சரிந்த பொன்னிறக் கேசத்தை ஒதுக்கிக் கொண்டு ஒரு புன்னகையுடன் சொன்னாள்.

"ராமாயணத்தில் வருகிற சீதைக்குத் தாய் இல்லை அல்லவா?...எனக்கும் அப்படித்தான்; ஆனால் என் தாய் கொல்லப்பட்டாள்...அந்த சீதைக்குச் சகோதரர்களே இல்லை. எனக்கு முன் பிறந்த ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் கூடக் கொல்லப்பட்டார்கள்...அதுவும் எப்படி? ஹிட்லரின் ஐம்பத்திரண்டாவது பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக அந்தச் சித்ரவதை முகாமிலிருந்து ஐம்பத்திரண்டு குழந்தைகளைத் தூக்கி உயரத்தில், வானத்தில் எறியச் சொல்லிக் குறி தவறாமல் தனது கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்று வேடிக்கை காட்டினானாம் ஒரு ராக்ஷஸப் பேய்...அவனது சீமாட்டி அரக்கியும், அவனது அரக்கச் சிசுவும் நின்று அதைப் பார்த்துக் கை தட்டிச் சிரித்து, ரசித்தார்களாம்...ஒவ்வொரு குழந்தையும் சுடப்பட்ட பறவை மாதிரி விழுந்ததும், 'அப்பா' இன்னும் ஒண்ணு...' என்று அந்த அசுரச்சிசு கேட்குமாம்...அப்போது நான் மரீஷ்யாவின் கருப்பையில் பாதுகாப்பாய் இருந்ததால் தப்பினேன்...ஓ! அது கொடிய கதை...உங்களுக்கு அவசரமில்லை என்றால் எங்களோடு வருகிறீர்களா?" என்று எழுந்து ஸ்கர்ட்டில் படிந்திருந்த புல் துகள்களைத் தட்டிவிட்டுக் கொண்டு நின்றாள் காத்ரீனா.

அவளை அழைத்துச் செல்வதற்காக மஞ்சள் பலகையில் இலக்கம் பதித்த அந்த வெளிநாட்டுக் கார் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள் சீதா.

மணிக்கூண்டுக் கடிகாரத்தில் மணி நாலுக்கு மேலாகி இருந்தது.

'எனக்கொன்றும் அவசரம் இல்லை' என்று அழுத்தம் கொடுத்துச் சொன்னாள் சீதா.

மரியம் காத்ரீனாவிடம் ருஷ்யமொழி கற்றுக் கொள்கிறாள். அதனால் அனேகமாய் காத்ரீனாவை அழைத்துக்கொண்டு போக வரும் காரில் அவளும் உடன் செல்வாள்.

இப்போது அந்த அண்டை நாட்டுச் சீதையின் வாழ்க்கையில் நேர்ந்த கொடிய அனுபவங்களைக் கேட்டபின், பாதியில் அவளைப் பிரிய மனமில்லாத வளாய், அவளுடன் இருப்பதால் ஆறுதலும் நம்பிக்கையும் தைரியமும் பெறுகிறவளாய்-'நான்கு மணிக்கு வீட்டில் இருக்க வேண்டும்' என்று அப்பா கிழித்த கோட்டைத் தயக்கமில்லாமல் தான் தாண்டிப் போவதை நன்கு உணர்ந்தாள் சீதா. ஆயினும் அதற்காக அவள் எத்தகைய உணர்ச்சியும் கொள்ளவில்லை. மாறாக, மிகச் சுதந்திரமாக இருக்கும் உல்லாசத்தையே அவள் மனம் அனுபவித்தது.

'**வோ**ல்கா' என்ற நதியின் பேர் படைத்த அந்தக் காரில், மரீனா கடற்கரையில் போய்க்கொண்டிருக்கையில் முன் ஸீட்டில் டிரைவருக்குப் பக்கத்தில் கம்பீரமாய் அமர்ந்திருந்த அந்த சோவியத் பெண்ணை, பின்ஸீட்டில் மாரியம்மாளுடன் உட்கார்ந்திருந்த சீதா, வியப்புடன் 'இன்னும் இவளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்' என்று அறியத் துடிக்கும் ஆர்வம் பொங்குகிற விழிகளால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

காத்ரீனாவின் பொன்னிறச் சிகை காற்றின் அலைகளால் சுருண்டு புரண்டு கொண்டிருந்தது.

"ஆரம்பத்தில் என்னோடுதான் பெண்கள் ஹாஸ்டலில் இருந்தாங்க...படிக்கறதுக்கு இடைஞ்சலா யிருந்திருக்கும்...இப்ப அவங்க 'இன்ஃபர்மேஷன் ஆபீஸ்லோ, டிரேட் ரெப்ரசென்ட்டேஷன் ஆபீஸ்லோ ஒரு அவுட்ஹவுஸிலே இருக்காங்க. இவங்க எனக்கு ருஷ்ய மொழி கற்றுத் தருகிற ஆசிரியர் மட்டுமில்லே; இவங்க கிட்ட இருந்து எவ்வளவோ நாம கத்துக்க வேண்டியிருக்கு" என்று காத்ரீனாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள் மரியம்.

இவர்களிருவரும் பேச்சுத் தமிழில் வேகமாக உரையாடுவது புரியாமல், நெடிய கடல் பரப்பை அளக்கும் பார்வையுடன் தனது நாட்டையும், மக்களையும் அவர்களது தியாகங்களையும் காத்ரீனா எண்ணிக் கொண்டிருக்கிறாள் போலும்...முன் ஸீட்டிலிருந்து திரும்பி சீதாவிடம் சொன்னாள் காத்ரீனா:

"நான் கிண்டர்கார்ட்டனில் படித்துக் கொண்டிருந்த போது ராமாயணச் சித்திரப் புத்தகம் ஒன்று பார்த்தேன். என் அப்பா கீழ்த்திசை இயல் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். லெவ் தோல்ஸ்தோயின் நூல்களில் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவரோடு நான் இருந்த நேரங்களில் எல்லாம் அவர் எனக்கு நல்ல நல்ல கதைகள் சொல்வார். அந்தக் கதைகளில் எனக்கு ரொம்பவும் பிடித்தது ராமாயணம். அந்த சீதை என்ன பாடுபடுகிறாள்! ஆனால், கடைசியில் ஜெயிக்கிறாள்! நான் மேல்படிப்புக்கு-அதுவும் கீழ்த்திசை மொழியியல் கற்க வரும்போது என் பெயரை சீதா என்று மாற்றிக்கொண்டேன்" என்று நிறுத்தி நிதானமாய், ஆனால் பிழையின்றிப் பேசிய பேச்சையும் கருத்தையும் கேட்டு, கார் ஓட்டிக்கொண்டு வந்த, தமிழறிந்த டிரைவர் கூடச் சிலாகித்துக் கொள்வது அவரது பெருமிதமான புன்சிரிப்பில் தெரிந்தது.

மரங்களடர்ந்த ஒரு காம்பவுண்டுக்குள் நுழைந்து பழங்கால அரண்மனை போல் தோற்றமளிக்கிற

மாளிகையின் பின்னாலுள்ள அவுட்-ஹவுஸின் முன்னால் வந்து நின்றது வோல்கா.

மைதானத்தில் சில சோவியத் குழந்தைகள் வண்ணப் பந்துகளை வீசி விளையாடிக் கொண்டிருந் தனர். சற்றுத் தூரத்தில் சிலர் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். தள்ளு வண்டியில் ஒரு குழந்தையை வைத்துத் தள்ளிக் கொண்டு கார் அருகே வந்த ஒரு சோவியத் பெண்ணிடம் காத்ரீனா ருஷ்ய மொழியில் என்னவோ சொன்னாள்...அப்போது அந்தப் பெண் புன்முறுவலுடன் தங்களைப் பார்ப்பதிலிருந்து காத்ரீனா தங்களைப் பற்றித்தான் ஏதோ சொல்கிறாள் என்று புரிந்தது சீதாவுக்கு. சீதாவையும், மாரியம்மாளையும் அவளுக்கு அறிமுகம் செய்தபின் தனது 'அபார்ட் மெண்ட்' கதவைத் திறந்து வாசலில் நின்று இவர்களை வரவேற்றாள் காத்ரீனா.

அந்தச் சிறிய அறை, ஓர் ஒற்றைக் கட்டில், ஒரு டபிள் சோபா, மேஜை-நாற்காலி, ரெஃப்ரிஜிரேட்டர் ஆகிய வசதிகளுடன் ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டிருந்தது.

"இது ஒன்றுக்காகத்தான் நான் எனது சினேகிதிகளை யெல்லாம் விட்டு இங்கு வந்தேன்'' என்று ஏ.சி. பிளாண்ட்டைக் காட்டினாள் காத்ரீனா.

...ஆமாம்; நமது கோடை வெப்பத்தை இவர்கள் எப்படித் தாங்குவார்கள்!'' என்று ஆறுதலாகச் சொன்னாள் மாரியம்மாள்.

''குமாரி மரியம்...இன்று நமக்குப் பாடம் கிடையாது-கொஞ்சம் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருப் போம்" என்று உற்சாகமாய்ச் சொன்னாள் காத்ரீனா. இவர்களை உபசரிப்பதற்காக பிஸ்கட் போன்ற தின்பண்டங்களைச் சிறிய தட்டில் கொண்டு வந்து வைத்தாள்...

சீதாவும் மாரியம்மாளும் சோபாவில் உட்கார்ந்தனர். அவர்களுக்கு நேரே ஒரு அலமாரியில் நிறையப்

புத்தகங்கள் இருந்தன. மேஜை மீதும் புத்தகங்களே இருந்தன...அந்தச் சிறிய அறையில் அதிக அளவில் எல்லாவிடத்தும் புத்தகங்களே அடைந்திருப்பதைக் கவனித்தாள் சீதா.

திடீரென சீதா நினைத்துக் கொண்டாள்: 'ஓ! இந்தச் சீதையை இவள் தாய் யுத்தத்தின் இடிபாடுகளுக்கிடையே பெற்றாள்...இந்தச் சீதையின் தாயும், உடன் பிறந்தோரும் அரக்கத்தனமாய்க் கொல்லப்பட்டார்கள். இவளுக்கு ஓர் இராமனும் இருக்கிறான்' என்று அங்கிருந்த ஒரு படத்தைப் பார்த்துக் கண்கள் மலர காத்ரீனாவை வாழ்த்தினாள்.

"மிஸ்டர் ஆந்திரியேவ்... என் கணவர்...இவர் ஒரு ரயில்வே தொழிலாளி." என்று சுருக்கமாய்த் தன் கணவரைப் பற்றிச் சொன்னதுடன் அந்தப் படத்தை இருந்த இடத்தில் வைத்தபின் இவர்களின் எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

மணி ஐந்தரை ஆகியிருந்தது...தான் வீடு திரும்ப எப்படியும் ஏழு மணியாகிவிடும் என்று நினைத்த சீதா 'ஆகட்டும்; எனக்கொன்றும் அவசரமில்லை' என்று மனத்துள் சொல்லிக் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்து கொண்டாள்.

தன் வீட்டில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தாள் சீதா:

'என்னைப் பெண்பார்க்க வந்தவர்கள் என்னைப் பார்க்காமலே போகட்டும். அப்பா 'மூஸ் மூஸ்' என்று மூச்சு விட்டுக்கொண்டு வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைவார்.

'இதற்குத்தானே நான் போன் பண்ணினேன்...மூணு மணிக்கு வந்துடுவேன்னு சொன்னாளே' என்று பரபரப்பார்:

'அதனாலென்ன, படிக்கிற பொண்கள்-வந்துடுவா. என்று பெருந்தன்மையாகக் காத்துக் கொண்டிருக் கிறார்களோ என்ன இழவோ?'

'இத்தனை மணிக்குள் வரவேண்டும், இத்தனை மணிக்குப் போகவேண்டும், அங்கே போகக் கூடாது, அவர்களோடு பழகக் கூடாது' என்கிற கட்டுத் திட்டங்களையெல்லாம் சீதா விஷயத்தில் அப்பா விதித்ததே இல்லை.

தன் மகள் சீதா மிகவும் சுதந்திரமானவள் என்ற பெருமித உணர்ச்சி கூட அவருக்கு உண்டு.

தன் செல்வ மகளின் சுதந்திரத்தையும், சந்தோஷத்தையும் பெரிதும் மதித்து வளர்த்த அப்பா, இந்த விஷயத்தில் இவ்வளவு பழைமை மனிதராக மாறியது எதனால்? பணம்..பணமா? பணத்துக்காக அப்பா எதையும் செய்வாரா?...அப்படிஅவர் செய்ய லாமா? அதற்கு நான் உடன்படலாமா?...என்றெல்லாம் இந்த சம்பாஷணைகளின் நடுவே சீதாவின் மனம் உள்ளூர ஓலமிட்டவாறுமிருந்தது.

காத்ரீனா மூன்று கப்களில் காபியை நிறைத்துக் கொண்டிருந்த போது மரியத்திடம் சீதா சொனனாள்:

"இன்னிக்கு நாலு மணிக்கு என்னைப் பெண் பார்க்க வரான்னு அப்பா போன் பண்ணினார்-லைப்ரரிக்கு...

"என்ன, என்ன?" என்று திரும்பவும் கூறும்படிக் கேட்டாள் காத்ரீனா...

மாரியம்மாள், சீதா சொன்னதைக் காத்ரீனாவுக்கு விளக்கினாள்...'பெண் பார்த்தல்' என்றால் என்ன என்பது உட்பட!

காத்ரீனா அதிர்ச்சியுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் ஏதோ தவறு செய்துவிட்டது போல் "ஏன் என்னிடம் இதை முன்பே சொல்லவில்லை?" என்று பதறினாள்.

சீதா புன்முறுவலுடன் "இந்த ஏற்பாட்டைத் தவிர்க்க வேண்டுமென்றுதான்" என்றாள்.

'ஏன்?' என்ற கேள்வியில் காத்ரீனாவின் புருவங்கள் உயர்ந்தன.

அப்போது மணி ஆறரை ஆகியிருந்தது.

## 8

இரவு எட்டு மணிக்கு மாரியம்மாளையும் துணைக்கு அழைத்துக்கொண்டு பஸ்ஸில் வந்து இறங்கிய சீதாவுக்கு இன்னும்கூட வீடு திரும்ப மனமில்லை. கபாலி கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்தால் மனத்துக்கு ஆறுதலாயிருக்கும் போல் தோன்றியது. மாரியம்மாளிடம் சீதா தன் யோசனையைத் தெரிவித்ததும் அவள் கைக்கெடிகாரத்தைப் பார்த்தாள்.

"இப்பவே மணீ எட்டு; உங்க வீட்டுக்கு வந்தால் உடனே திரும்பமுடியுமா? உங்கம்மாவோட கொஞ்சம் பேசணும். ஒன்பது மணி பஸ்ஸை வந்து பிடிச்சால்கூடப் போதும். அரை மணி நேரம் லேட்டானாலும் ஹாஸ்டலுக்குத் திரும்பிடலாம்னு நினைச்சேன்" என்று கோயிலுக்குப் போகிற யோசனையைத் தவிர்க்க விரும்பினாள் மாரியம்மாள்.

'மரியம்' என்று திடீரென்று விளைந்த மகிழ்ச்சிதரும் இன்னொரு யோசனையுடன் ஆர்வமாய் அவள் கையைப் பற்றினாள் சீதா: "இன்னிக்கு எங்காத்திலே என்னோட தங்கிடேன்...பிளீஸ்..."

"மாடியிலே நாம தனியா இருக்கலாம்; ஒரு தொந்தரவுமிருக்காது-படிக்கிறதானாலும் படிக்கலாம். இன்னிக்குக் காத்ரீனாவையும் உன்னையும் விட்டுப்

பிரியவே எனக்கு மனசில்லேடி....அப்பிடியே பேசிண்டே, ராத்திரியெல்லாம் இருந்துட மாட்டோமான்னு... இருந்துதுடி...இன்னிக்கு நான் ரொம்ப உள்ளூரக் குழம்பியிருந்தேன்... இப்ப மனசு தைரியமாயிடுத்து. நீ என்னை ஆத்திலே கொண்டுபோய் விட்டுட்டுப் போயிட்டியானா மறுபடியும் குழம்புமோன்னு பயமாயிருக்கு...” என்று சீதா மனம் விட்டுப் பேசியதைப் பொறுமையாகக் கேட்டாள் மரியம். அவளுக்கும் அலுத்துப் போன ஹாஸ்டலிலிருந்து ஒரு நாள் ஒரு சிநேகிதியின் வீட்டில் தங்குவதில் உள்ள சந்தோஷத்தை அனுபவிக்கத்தான் விருப்பம்... ஆனால் அதற்கு விடுதியில் முன்கூட்டியே அனுமதிபெற்று வந்திருக்க வேண்டும்.

“உங்க வீட்டிலேதான் போன் இருக்கே... ஒன்பது மணிக்கு மேலே போன் பண்ணி, இந்த மாதிரி, என் சிநேகிதி சீதா வீட்டிலே தங்க நேர்ந்துட்டுதுன்னு அந்த அம்மாகிட்ட சொல்லுவோம். நல்ல குணத்திலே இருந்தாங்கன்னா ‘என்னம்மா இப்பிடிப் பண்றீங்க... இனிமே இந்த மாதிரி அனுமதிக்கமுடியாது’ன்னு முனகிட்டுச் சரிம்பாங்க... “அதெல்லாம் முடியாது.... எப்படியாவது இன்னும் அரைமணி நேரத்திலே நீ ஹாஸ்டலுக்கு வந்தேயாகணும்”னு சத்தம் போட்டால்?... பொறப்பட்டு-ஒரு ஆட்டோவோ டாக்சியோ பிடிச்சுப் போயிடறது...ஓ.கே!” என்று சீதாவுக்கு அனுசரணையாகச் சொன்ன மரியத்துடன் கைகோத்துக் கொண்டு உல்லாசமாகக் கோயிலுக்குப் போனாள் சீதா.

கோயிலுக்குள்ளே ராமாயண உபன்யாசம் நடந்து கொண்டிருந்தது-ஒரு பக்கம்...

மைக் சத்தமும் ஜனசந்தடியும் உபன்யாசகரின் விளக்கத்தைக் கேட்க வொட்டாமல் வெறும் இரைச்சலாயிருந்தது. சத்தம் காதை அறுக்காமலிருக்க சந்நிதிக்குள் ஓடினர் சீதாவும் மாரியம்மாளும். ஏதேதோ நினைவுகளுடன், பக்தி சிரத்தைபோன்ற மௌனத்துடன்

ஸ்வாமி தரிசனம் செய்தனர். தீபாராதனைத் தட்டு அருகில் நீண்ட போது வெப்பமான கற்பூர சுகந்தத்தை இரு கைகளிலும் தொட்டு முகத்தில் ஒற்றிக்கொண்டனர், விபூதி குங்குமப் பிரசாதம் எடுத்துக்கொண்டு-எல்லாம் யாந்திரீகமாக நிகழ-கடவுள் பற்றிய பிரக்ஞை கூட இல்லாமல் எல்லாரையும் மாதிரி தானும் கோயில் பிராகாரத்தில் திரிந்தலைவது போலிருந்தது சீதாவுக்கு.

விசாலமான பிராகாரத்தின் கருங்கல் தள வரிசையில், ஜனக் கூட்டத்தினிடையே சில வயதான பெண்கள், பிச்சைக்காரிகள், கோயிலை அண்டிப் பிழைக்கிற ஏழைகள் எல்லாரும் சமமாக உட்கார்ந்திருந்த ஒரு மூலையில், சுவரோரமாய்க் குவித்திருந்த மணற்பரப்பில் சீதா உட்கார்ந்திருந்தாள். மாரியம்மாள், 'இவள் என்ன இப்படி வீட்டுக்குப் போக விருப்ப மில்லாதவளாய்ப் பொழுது கழிக்கிறாள்!' என்ற நினைப்புடன் நின்றிருந்தாள்.

"கோயிலுக்கு வந்தால்-கொஞ்சம் இங்கே உட்கார்ந்து தான் போகணும்னு ஒரு ஐதீகம்-உக்காரு மரியம்" என்று அவள் கையைப் பிடித்து இழுத்து அருகே உட்கார வைத்தாள் சீதா. போவோர் வருவோரை வேடிக்கை பார்த்தவாறு அவளுடன் உட்கார்ந்தாள் மாரியம்மாள். அவள் மனம் தன் அருகே இருக்கும் சீதாவைப் பற்றியே யோசித்தது.

'இவளைப் பெண் பார்க்க வீட்டில் யாரோ வந்திருக்கும் போது-இவளுக்கு ஏன் மனம் இப்படி விரக்தியுற்றிருக்கிறது? இவளுக்கு இந்தக் குறிப்பிட்ட வரன் பிடிக்கவில்லையா, அல்லது கல்யாணம் பண்ணிக் கொள்ளவே விருப்பமில்லையா? அப்படியென்றால் அதற்கு ஏதேனும் முக்கியக் காரணம் இருக்க வேண்டும். அது பற்றியெல்லாம் அந்தரங்கமாக இவள் தன்னிடம் ஏதோ சொல்லப் போகிறாள்' என்று எதிர்பார்த்தாள் மரியம். அதற்கு அனுசரணையான மௌனத்துடன்

புன்முறுவலுடன் ஆதரவாக இவளுடன் இன்று இரவு தங்குவது என்ற தீர்மானம் அவளுள் உறுதியாயிற்று.

"உனக்கு ஏன் இந்தக் கல்யாண ஏற்பாடு பிடிக்கலை? அதை நீ உங்க வீட்டிலே சொல்லியிருக்கலாமே!" என்று மணலில் கோலம் வரைந்து கொண்டிருந்த சீதாவிடம் கேட்டாள் மரியம்.

"முதலிலே சொல்றதைவிட, இறுதியிலே சொல்றது தான் சரின்னு பொறுமையா இருக்கேன்...என்னைக் கேட்கிற போது சொல்லுவேன். ம்...நான் சொல்றதை அவா கேக்கலேன்னா?...அவா இருக்கிற மும்முரத்தைப் பார்த்தால் என் விருப்பத்தைப் பத்திக் கவலைப் படறவாளாத் தெரியலே... எல்லாம் பணம்டி மரியம், பணம்! அதுக்குப் பாசம், பண்பாடு எல்லாம் உண்டோ?...அதெல்லாம் எதுக்கு? அவாதான் ரொம்பப் பெரிய பணக்காரா ஆச்சே...அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்றார் அப்பா.... 'ஆ ஆ'ன்னு வாயைப் பொளந்துண்டு நிக்கறா அம்மா. இதுக்கு நடுவே நான் என்னடி சொல்லுவேன்?... சொல்றது அவ்வளவு முக்கியம் இல்லே; நடத்தையிலே உறுதியா 'மாட்டேன்'னு காட்டிட வேண்டியதுதான்...மரியம், எங்க அப்பாவும், அம்மாவும் ஏதோ அவா கையிலே இருக்கிற - அவாளுக்குக் கட்டுப்பட்டு அடங்கின அபலைதானேன்னு என்னை எவன் கையிலாவது பிடிச்சுக் குடுக்கறதுக்கு ஏற்பாடு பண்ணினால், நான் வீட்டை விட்டு வெளியேறி உன்னோட வந்து ஹாஸ்டல்லே தங்கிடுவேன்...நீ எனக்கு உதவி செய்யணும்..." என்று மாரியம்மாளின் கையைப் பற்றித் தனது இரண்டு உள்ளங் கைகளிலும் வைத்துக் கொண்டு பரிதாபமாய் வேண்டினாள் சீதா.

"நிச்சயமாக..." என்று அவளுக்கு உறுதியளித்தபின் சிறிதே யோசித்து விட்டுச் சொன்னாள் மரியம்; "அப்படியெல்லாம் ஆகாது. உன் அப்பா ஒண்ணும் அவ்வளவு பிடிவாதக்காரர் இல்லே. தற்கால உலகமும்

பெண்களின் மனசும் தெரியாதவரா அவர்? எவ்வளவு பெரிய ஆசிரியர்!...இந்த நாகரிகமெல்லாம் தெரிந்தவர் உன்னை உன் விருப்பத்துக்கு விரோதமா யாருக்கும் வற்புறுத்திக் கட்டிவைக்க மாட்டார். நீதான் ரொம்பவும் அதீதமா கற்பனை பண்ணிக்கிட்டுக் கஷ்டப்படறே!" என்று சமாதானமும் கூறினாள்.

சீதாவின் உதடுகள் நம்பிக்கையற்ற வறட்சியுடன் ஒரு புன்னகையில் கோணலாய் நெளிந்தன.

"வற்புறுத்துவார்களா, என்ன? அதெல்லாம் மாட்டார்கள். தப்பமுடியாத ஓர் இக்கட்டில் மனமொப்பி மாட்டிக் கொள்வதுபோல் சிக்க வைத்து விடுவார்கள்... 'அன்பு, பாசம், என்னுடைய எதிர்காலத்துக்காக, பெற்றோருக்காக, பெரியோர்க்குக் கீழ்ப்படிவதற்காக' என்று இல்லையா என்ன ஆயிரம் சரடுகள்... இந்தத் தொழுவத்தில் நம்மை இழுத்துப் பிடித்துக் கட்டிவிட?... ஆனால் நான் உறுதியாக நிற்பேன் மரியம்" என்று சுடர்விடும் விழிகளால் கோபுர விளக்கை வெறித்துப் பார்த்தவாறு சொன்னாள் சீதா.

அப்போது கோயில் மணி அடித்தது. 'சத்தியம்–சத்தியம்' என்று ஒவ்வொரு மணி முழக்கத்தின் போதும் சொல்லிக் கொண்டாள் சீதா. அவள் திடீரென விழித்தவள் போன்ற தெளிவுடன் "நாம ஸ்வாமி தரிசனம் செய்தோமோ?" என்று கேட்டாள். கொஞ்சம்கூட ஸ்வாமியைப் பற்றிய நினைவே இல்லாமல், தான் சந்நிதானம் வரை போய் நின்று விட்டு வந்த நினைவும் வர, "வா மரியம், போய் இன்னொரு முறை கற்பகாம்பிகையைத் தரிசனம் பண்ணிண்டு போகலாம்" என்று எழுந்தாள் சீதா.

அவளைத் தொடர்ந்து சென்ற மாரியம்மாளுடன் அவள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. மனத்துள் கடவுளைத் தியானித்தவாறும், அப்போது நினைவுக்கு வந்த பக்திப் பாடல்களைச் சிறு குரலில் பாடியவாறும்

கோயிலை விட்டு வெளியில் வருகிறவரை அவள் காட்டிய பக்தி மிக உக்கிரமாயிருந்ததை மாரியம்மாள் உணர்ந்தாள். மாரியம்மாள் கோயிலுக்குப் போவாள்; விபூதி குங்குமம் தந்தால் வாங்கி இட்டுக் கொள்ளுவாள்; என்றாலும் 'உள்ளூர தெய்வ நம்பிக்கை ஏதும் எனக்கு இல்லை' என்று வாதிப்பாள்.

இப்போது கோயிலிலிருந்து வீடு திரும்புகிற வழியில் மாரியம்மாள் சீதாவிடம், "உனக்கு நிஜமாகவே தெய்வ பக்தி இருக்கிறது"...என்று பாராட்டினாள்.

"திக்கற்றவர்களுக்கு வேறு துணை?" என்று கேட்டுப் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்த சீதாவின் விழிகள் நீர் சுரந்து நிறைவதைக் கண்ட மாரியம்மாள் அவளது புஜத்தை ஆதரவுடன் இறுகப் பற்றினாள்...

சந்திலிருந்து பெரிய சாலைக்கு வந்ததும்-நல்ல வேளை! வீட்டு முன்னால் கார் ஏதும் நிற்காததைக்கண்டு, வந்தவர்கள் போய்விட்டார்கள் என்ற நிம்மதியில் சற்று நின்று மூச்சு விட்டு, தெய்வத்தை எண்ணி வணங்கி மகிழ்ந்தாள் சீதா.

"அவாள்ளாம் போய்ட்டா...எங்காத்து மனுஷாளை இனிமே நான் சமாளிச்சுண்டுடுவேன்...அப்பா ஆத்திலே இருப்பாரோ? இருக்கட்டும்...நீ சொன்னது போல முடிவா என் அபிப்பிராயத்தைச் சொல்லிடலாம். இனி ஒரு தடவை இந்த மாதிரி அவஸ்தைக்கு ஆளாகப்படாது" என்று தான் மனத்துள் நினைப்பதை அந்த சினேகிதியிடம் சொல்லியவாறு வீட்டருகே வந்த சீதாவை, அவள் சற்றும் எதிர்பாராத விதமாய் "என்னடி பொண்ணே, இப்படிப் பண்ணிட்டே?...உனக்காகக் காத்திண்டு இருந்துட்டு இப்பத்தான் எல்லாரும் போனா" என்று சற்றும் பாதிப்பு இல்லாதவராக வழக்கமான பரவசத்துடன் உரத்த குரலில் சொன்னார் அப்பா.

சீதா முகம் சிவந்து குழம்ப, "அப்பா, என்னோட ரஷ்யன் ஃபிரண்ட்னு சொல்லியிருக்கேனே, அவளோட

ரூமுக்கு வர்றதாக நேத்தே சொல்லியிருந்தேன்... என்று ஏதோ கூறிச் சமாளித்தாள்.

"அதனால் என்ன? நீ ஆத்துக்கு ஒரு போன் பண்ணியிருக்கலாம்... என்று சொல்லிக்கொண்டே அறைக்குள் போய்ப் பாதிப் பருகி வைத்திருந்த மதுபானத்தை அண்ணாந்து தீர்த்தம் சாப்பிடுகிற மாதிரி சாய்த்துக் கொண்டு, சீதாவுடன் வந்திருக்கும் சினேகிதியை அறிமுகம் கொள்ள ஓடி வந்தார்.

"அப்பா!...இது என் ஃபிரண்ட் மாரியம்மாள்... என்னைப் போலவே ஓர் ஆராய்ச்சி மாணவி" என்று சொல்லிவிட்டு "அம்மா" என்று அழைத்தவாறு உள்ளே ஓடினாள். அப்பா மாரியம்மாளை உட்காரச் சொல்லி, விசாரித்துக் கொண்டிருந்தார்.

"சொந்த ஊர்...?"

"ராணிப்பேட்டைக்கு பக்கத்திலே கிராமம்"

"அப்பா என்ன பண்றார்...?"

"தோல் மண்டியிலே வேலை செய்கிறார்...நாங்க ஏழைகள்...எங்க குடும்பத்திலே நான் ஒருத்திதான் இந்த அளவு படிக்க முடிஞ்சது...அந்தத் தோல் மண்டிக்கார சாயபு உதவியிலேதான் படிச்சேன்" என்று ஒரு பத்திரிகை ஆசிரியரிடம் பேசுகிறோம் என்ற கவனத்துடன் பேட்டிக்குப் பதில் கூறுவது போல் சொன்னாள் மாரியம்மாள்.

அடுக்களையிலிருந்த அம்மாவை இழுத்து வந்து ஹாலில் மாரியம்மாளின் முன்னால் நிறுத்தி அறிமுகம் செய்து வைத்தாள் சீதா. உடனே ஆரம்பித்துவிட்டாள் அம்மா:

"நீயே சொல்லுடியம்மா...நீயும் ஓர் வயசுப் பொண்ணுதானே! பொண் பாக்க வந்தால் இப்பிடி அவா மூஞ்சியிலே கரி பூசி அனுப்பற மாதிரி ஊரைச் சுத்திட்டு வருவாளோ ஒருத்தி?...அவா பெரிய மனுஷா-பெரிய

மனசோட அதனாலென்னன்னு ஜாதகத்தை வாங்கிக்கொண்டு போயிருக்கா... இது மரியாதையான்னு நான் கேட்கறேன்... இந்தக் காலத்திலே அதுவும் எங்க ஜாதியிலே வரனுக்கு ஒரொருத்தரும் படற கஷ்டம் நோக்குத் தெரியாதா? நீங்கள்ளாம் படிச்சவா, பட்டம் பெத்தவா, ஆராய்ச்சி பண்றவா-பெத்தவா மனசைக் கொஞ்சம் புரிஞ்சு அனுசரிச்சு நடந்துண்டா உங்களுக்கு என்னடியம்மா குறைஞ்சு போயிடும்..."

"போறும்டி, போறும்!" என்று அப்பா, அம்மாவுக்கு மட்டும் உபயோகிக்கற அந்த மிரட்டல் குரலில் அதட்டினார்:

"கொழந்தை வந்ததும் வராததுமா வறுக்க ஆரம்பிச்சுட்டியா?...அப்பிடி என்ன இன்னிக்கு நிச்சய தாம்பூலமா வெச்சுட்டோம்?...நேத்து நம்ப சீதாவைப் பாத்துட்டுப் போயி 'பண்ணினா இவளைத்தான் பண்ணிப்பேன்'னு சொல்லியிருப்பான், உடனே அம்மா பொண்ணைப் பார்க்கணும்னு சொல்லியிருப்பாள். வந்தா-ஜாதகத்தை வாங்கிண்டு போயிருக்கா. இதுக்கு சீதா இருந்தால் என்ன? வெளியில் போயிருந்தால் என்னவாம்?" என்று அப்பா எல்லாருக்கும் சமாதானம் கூறினார்.

"எனக்கு ஒரு போன் பண்ணணும்" என்று எழுந்தாள் மாரியம்மாள்.

"கமான்...கமான்...இதை உங்க வீடுமாதிரி நினைச்சுக்கோம்மா... என்று அறைக்குள் அழைத்து, போன் இருக்கும்' இடத்தைக் காட்டினார் சுந்தரம். மாரியம்மாள் போன் பண்ணுகிற போது அந்த அறை நடுவே மேஜையின் மீதிருந்த ஸ்காட்ச் விஸ்கி பாட்டிலையும், பாதி நிறைந்திருந்த கண்ணாடித் தம்ளரையும் கவனித்தாள்.

"ப்ளீஸ் டோண்ட் மைன்ட்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்த சுந்தரம் முன்பு போலவே

அண்ணாந்து தம்ளரை வாயில் கவிழ்த்துக் கொண்டார். இன்னும் கொஞ்சம் நிரப்பினார்...

பெண்கள் விடுதித் தலைவி இன்று நல்ல 'மூடி'லிருந்திருக்க வேண்டும். மாரியம்மாள் ஹாஸ்டலில் அனுமதி பெற்ற மகிழ்ச்சியுடன் போனில் பேசிவிட்டு வெளியில் வந்தாள்.

"என்னடி சீதா, இன்னிக்கின்னு பார்த்து இவளை அழைச்சிண்டு வந்திருக்கே. உங்க அப்பா வீட்டிலேயே பாட்டிலைத் திறந்து வைச்சுண்டு கூத்தடிக்க ஆரம்பிச்சுட்டாரே..." என்று சமையல் உள்ளில் சீதாவின் காதருகே சங்கடத்துடன் முனகிக் கொண்டிருந்த அம்மா மாரியம்மாளைப் பார்த்துவிட்டு அடங்கினாள்.

"அதனாலே பரவாயில்லே. மாரியம்மாள் எனக்குக் கூடப் பிறந்த இன்னொரு சகோதரி மாதிரி...மரியம், இங்கே வா... எங்கள் வீட்டுத் தலைவியை உனக்கு அறிமுகம் செய்து வைக்கலியே" என்று கூறி "பாட்டி! பாட்டி!" என்று அழைத்து பூஜையறை இருளில் மூட்டையாய்த் தெரிந்த பாட்டியை மரியத்துக்கு அறிமுகம் செய்வது போல் சொன்னாள் சீதா: "எங்க அப்பாவோட அம்மா..."

மாரியம்மாள் அந்த வயோதிகத்தைக் கைகூப்பி வணங்கினாள்.

'தெய்வம் இல்லை என்று சொன்னாலும் வணங்கத் தகுந்தவை உண்டு' என்று நம்புகிறவள் இந்த மரியம் என்று நினைத்துக் கொண்டாள் சீதா.

மாரியம்மாளை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனாள் சீதா. இருவரும் மொட்டை மாடியில் மங்கிய நிலவொளியில் நின்று, நகரெங்கும் தெரிகிற ஒளிக்கோலங்களையும், ஜாலங்களையும் ரசித்தனர்...

"உன் அப்பா அம்மா இருவருமே இந்தக் கல்யாணத்தில் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் போலத்தான் தெரிகிறது... இதை மறுக்க நீ என்ன தகுந்த

காரணம் சொல்லுவே?'' என்று கேட்டாள். சீதா புருவங்கள் நெரிய மரியத்தைப் பார்த்தாள்.

'ஆமாம், நான் சரியான காரணம் சொல்ல வேண்டும், இவனைப் பிடிக்கவில்லை என்றால் வேறு எவனையாவது தேடி அலைந்துகொண்டிருப்பார்கள். இந்தக் கல்யாணப் பேச்சுக்கே இடமில்லாதபடி சரியான காரணம் ஒன்று சொல்லி விடவேண்டும். அது என்ன' என்று யோசித்துக் குழம்பினாள் சீதா.

"-கல்யாணம் வேண்டாம். உன் எதிர்காலத்தைப் பற்றி உன்னோட திட்டம் என்ன? அதைத் தெளிவா நீ சொல்லிடலாம் இல்லியா?" என்றாள் மாரியம்மாள்.

"ஒரு பெண்ணின் எதிர்காலம் என்ன? இந்தக் கேள்விக்குக் கல்யாணம் ஒரு பதிலோ, தீர்வோ இல்லை. உனக்குப் புரியுதா? கல்யாணம்கிற ஒரு பந்தம் நம் சமூகத்தில் எப்படியிருக்குதுன்னு நான் ஆராய்ச்சி பண்ணுகிறவள் இல்லையா?...நான் இதில் அவசரப்பட முடியாது" என்று உறுதியாகச் சொன்னாள் சீதா.

"ரொம்ப சரி. எதிலும் அவசரம் வேண்டாம் சீதா. உன் மறுப்பை இப்போதே சொல்லிவிடாதே. உன் அப்பாவும் அம்மாவும் மனமுடைந்து போவார்கள். வாங்கிக்கொண்டு போன ஜாதகம் பொருந்துகிறதா, என்று பொறுத்திருந்து பாரேன். ஒரு வேளை ஜாதகம் பொருந்தாமல் இது தவிர்ந்து போகலாம் அல்லவா?" என்று அவளை நிதானமாக இருக்குமாறு யோசனை கூறினாள் மரியம்.

'இவர்களுக்கு ஜாதகம், சாஸ்திரம் எல்லாம் எதற்கோ? பார்ப்போம். இது ஜாதகத்துக்கே ஒரு சோதனை. என் ஜாதகம் அவனுக்குப் பொருந்துமோ?' என்று மனத்துள்...கறுவினாள் சீதா.

"என் ஜாதகம் யாருக்கும் பொருந்தாத ஜாதகமாய் போய் ஒழியட்டும்; அதைப் பார்த்து "ஐயோ, இவளையா?"

என்று வரனைப் பெற்றவர்கள் எல்லாம் அஞ்சி அலறி ஓடட்டும்” என்று வாய்விட்டு வரம் கேட்பது போல், வானத்தையும், தூரத்தில் தெரியும் கோயில் கோபுரத்தையும் நோக்கிக் கைகளை ஏந்திக் கொண்டு வேண்டினாள் சீதா. அவளது அந்தக் கோலத்தைக் கண்ட மாரியம்மாள் மனத்தில் ஆண்டாள் திருமொழிகளின் வாசகம் ஒன்று நினைவில் ரீங்காரம் செய்தது:

“...உன்னி எழுந்த என்
தடமுலைகள்
மானுடவர்க்கு என்று
பேச்சுப் படின்
வாழ்கில்லேன் கண்டாய்
மன்மதனே!”

## 9

“உனக்கு அந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்குன்னா-பண்ணி வெச்சுடலாம்; தங்கமான மனுஷாளா இருக்கா. ஆனா, இப்பவே சொல்லிப் பிடறேன். நீ இந்த மாதிரி குடியும் கூத்துமா இருக்கறதெல்லாம் விட்டுடணும். என்ன சொல்றே? அவ கழுத்திலே தாலி கட்டின க்ஷணத்தி லேருந்து இந்தச் சனியனைத் தொடறதில்லேன்னு பிரதிக்ஞை பண்ணிண்டுடு...என்ன நான் சொல்றது?” என்று நயமாகவும் கண்டிப்புடனும், கையில் மதுக்கிண்ணத்துடன் உட்கார்ந்திருந்த மகனிடம் சொன்னவாறு அறைக் கதவைப் பற்றிக் கொண்டு நின்றாள் சுகுமாரனின் தாயார் பங்கஜவல்லியம்மாள்.

சுகுமாரன் ஏறச்செருகிய கண்களுடன் தாயாரை அன்புடன் பார்த்தான். ஒரு சிரிப்புடன் ஒரு கும்பிடு போட்டான்.

"அம்மா...சத்தியம் பண்ணச் சொல்றியா?" என்று குழறினான். அம்மாவுக்கு அவனது நிலையைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. இதுமாதிரி சமயத்தில் அவன் எவ்வளவோ சத்தியங்கள் கூறுவான். அதுபோல் இந்த வாக்கும் ஆகிவிடலாகாதே என்ற பயம் பிறந்தது. முகமறியாத அந்தச் சீதாவுக்காக பங்கஜவல்லியம்மாளின் பெண் மனம் கலங்கியது: "கண்ணா...நீ என் கையிலே அடிச்சு ஒண்ணும் சத்தியம் பண்ணவேண்டாம். நாளைக்கு ஒரு பொண் கண் கலங்கி நிற்கும்படியா நீ நடந்துண்டுடப் படாதேன்னுதான் சொல்றேன்...மத்தபடி உனக்கு எவ்வளவோ பெரிய இடங்களிலே பழக்கம்... பார்ட்டி, விருந்துன்னு ஆயிரம் இருக்கும். பெண்டாட்டி யோட அங்கெல்லாம் போனால் அதன் மதிப்பே வேறே...ஆத்துக்காரி சம்மதத்தோட குடிச்சால் அதுக்கு ஒரு அளவானும் இருக்கும்...சரி, மணியாறதே-சாப்பிட்டு டேன்... என்று சொல்லிவிட்டு, அவள் தன் அறையின் உள்ளே போனாள். அத்துடன் அவள் பொறுப்புத் தீர்ந்தது வீட்டிலுள்ள சமையற்காரர்கள், வேலைக்காரர்கள் எல்லாம் சேர்ந்து அவனைக் கவனித்துக் கொள்ளுவார்கள்.

இந்த வீடு மிகப் பெரியது. இருபதுக்கு மேற்பட்ட அறைகள்; வீட்டைச் சுற்றிலும் பெரிய தோட்டம். மாமரங்களும், தென்னை மரங்களும், காய்கறித் தோட்டமும், புஷ்பத் தோட்டமும், மாட்டுக் கொட்டில் நிறையப் பசுக்களும், கன்றுகளும் நிறைந்திருப்பதால் அவற்றைக் கவனித்துக் கொள்ளுகிற பணியாட்களும் நிறையவே இருக்கிறார்கள். நான்கு கார்கள்-டிரைவர்கள்-காம்பவுண்டுக்குள்ளே அவர்களில் சிலருக்குக் குடியிருப்பு கள்-அரண்மனை மாதிரி வீடும்-வாழ்க்கையும்-என்று சுந்தர சர்மா அடிக்கடி வாய் பிளந்து சொல்வது ஒன்றும் பொய்யல்ல.

சுகுமாரன் தாய்க்கு ஏக புத்திரன் என்றாலும் பங்கஜவல்லியம்மாளின் மூத்தாள் பெற்ற இரண்டு பிள்ளைகள், மருமகள்கள், பேரன், பேத்திகள் வீடு நிறைய உள்ளனர். சுகுமாரனின் இரண்டு அண்ணன்மார்களும் இவனோடு பேச்சு வார்த்தையை நிறுத்திக் கொண்டு வெகுகாலம் ஆகிறது.

மகேஸ்வரய்யரின் சொத்தில் சரிபாதி இவன் பங்குக்கும், பங்கஜவல்லியம்மாளுக்குத் தனியாக 'ஷேர்' களும், ஐசுவரியமும் சேர்ந்திருந்ததால் சுகுமாரனின் கை குடும்பத்தில் மேலோங்கியே இருந்தது.

சுகுமாரனுக்குத் தொழிலிலோ, குடும்ப கௌரவத் திலோ அக்கறை இல்லாதது கண்டும், தீய சகவாசங்களால் அவன் கெட்டழிவது குறித்தும் அந்த மூத்தாள் பிள்ளை கள் தன்னிடம் வந்து சொன்ன முறையீடுகளையெல்லாம் ஆரம்பக் காலத்தில் தான் உதாசீனப்படுத்தியதை நினைத்து இப்போது உள்ளூர வருந்துகிறாள் பங்கஜவல்லி அம்மாள். அவளை மாற்றாந்தாயாக அவர்களும் கருதியதில்லை. பங்கஜம் அம்மாளும் சுகுமாரன்தான் தன் பிள்ளை என்று தனிப்பாசம் கொண்டாடியதுமில்லை. பெற்ற தாய்க்கும் பெரிய தாயாக அவர்கள் தன்னை மதித்து அன்பு பாராட்டுவது-தன் புருஷனின் உதார குணத்துக்கு இன்றும் ஒரு சான்று என்று அடிக்கடி நினைந்து கண்களில் நீர் மல்குகிறாள் அவள்...

ஆனால் இளம் பிராயத்திலிருந்தே சுகுமாரன் இவர்கள் எல்லாரிடமிருந்தும் விலகியிருந்தான். அந்த அண்ணன்மார்களை விடவும் தான் ரொம்பப் பெரியவன் சிறந்தவன் - தனியானவன் என்ற மனோபாவத்தில் வளர்ந்தான். எல்லாருக்கும் செல்லமாய் வளர்ந்த சின்னத் தம்பி - வளர வளர, சில சீரழிவுகளுக்கு இரையாவது கண்டு திகைத்தனர் மூத்த சகோதரர்களான முத்துசாமி ஐயரும், சிவராம ஐயரும்....அவர்கள் என்ன செய்ய முடியும்? தங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக மனத்தளவில் இவனிடமிருந்து விலகிக்கொண்டனர்.

'அதுகூட இவனுக்குத் தெரியாது' என்று மகனை நினைந்த மனத்துயரில், உறக்கமில்லாமல் திரும்பிப் படுத்தாள் பங்கஜவல்லி அம்மாள்.

அறையில் மங்கிய விளக்கொளியில் தலைக்கு மேல் சுழல்கிற ஸீலிங்ஃபேனின் சத்தம் தூக்கத்துக்கு இடைஞ்சல் போலிருந்தது. அதை நிறுத்தினாள். ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துவிட்டு வந்து படுத்தாள். மாடியறைகளிலிருந்து வீசுகிற வெளிச்சத்தின் கீற்றுக்கள் தென்னை மரங்கள்மேல் பளீரிட்டுத் தெரிந்தது. அவுட் ஹவுஸில் தோட்டக்காரனின் மனைவி சிவகாமி, அழுகிற குழந்தையை அடக்குவதற்காகப் பெருங்குரல் கிளப்பித் தாலாட்டுப் பாடுகிறாள். அதைக் கேட்டுக்கொண்டே தானும் தூங்கி விடவேண்டும் என்று கண்களை இறுக்கி மூடிக்கொண்டாலும்-சிவகாமியைப் பற்றிச் சம்பந்தமில்லாமல் நினைப்புகள்...பங்கஜவல்லி அம்மாள் மறுபடியும் புரண்டு படுத்தாள்.

சிவகாமி ரொம்ப நல்ல குழந்தை. முன்பிருந்த தோட்டக்காரக் கிழவன் கிராமத்திலிருந்து தன் தங்கை மகள் – அனாதை என்று அழைத்து வந்த சம்பவம்...

'அப்போது அவர் இருந்தார்' – என்ற நினைவு... அவர் – அவரோடு அனுபவித்த இன்பங்கள், துன்பங்கள்...

'அவர் பெற்ற பிள்ளைகளில் அந்த இரண்டு பேரும் இவ்வளவு அன்பானவர்களாய், நல்ல ஒழுக்கமுடையவர்களாய் இருக்க, தன் வயிற்றில் பிறந்த இந்தப் பிள்ளை இப்படி ஏறுக்கு மாறாய் வளர்ந்திருப்பது என் வயிறு செய்த பாக்கியம்' என்ற பொருமல்...

தூக்கம் மட்டும் வரவில்லை. குழந்தை அடங்கிய பிறகும் சிவகாமி தாலாட்டில் லயித்துப் பாடிக் கொண்டிருப்பது எஜமானி அம்மாவுக்குக் கூட ஆறுதலாய், இதமாய் இருக்கிறது...

சிவகாமியைப் பற்றி நினைப்பு மறுபடியும்...

'அப்போது அவர் இருந்தார். தலையிலே ஈரிழைத் துண்டை முண்டாசாகக் கட்டிண்டு பூச்செடிக்குத் தண்ணி பாய்ச்சிண்டு...ஒரு நிமிஷம் சும்மா இருப்பாரோ? அவர் அந்தஸ்து என்ன, மதிப்பென்ன, அதையெல்லாம் அவர் லட்சியப்படுத்த மாட்டார்...தொப்பையும் தொந்தியுமா பூணூல் வேர்வையில் நனைஞ்சு ஒட்டிண்டுடும்-ஓடி ஓடித் தோட்ட வேலை செய்வார்...'

'தோட்டக்காரக் கிழவன் ரெண்டு நாளா இல்லே; கிராமத்துக்குப் போய்ட்டு வரேன்னு போனவன் இந்தக் குட்டியை-இத்தினூண்டு...ஆறு வயசிருக்கும்...முழங்கால் தெரியற மாதிரி ஒரு பாவாடையும், தொப்புள் தெரியற மாதிரி ஒரு சட்டையும்...கையிலே ஒரு கந்தல் மூட்டையும் வெச்சுண்டு கிழவனின், முழங்காலைக் கட்டிண்டு வந்து நிக்கறது!...கண்ணும் முகமும் மட்டும் அம்மன் சிலை மாதிரி பளீர்னு சிரிச்சுண்டு 'அனாதை'ங்கிற அறிமுகத்தோடு வந்த சிவகாமியை... ஜாதி பார்க்காமல், அந்தஸ்து பார்க்காமல், கன்னத்தைத் தொட்டு முத்தம் கொடுத்து கொஞ்சிண்டு...பொண் கொழந்தை இல்லேன்னு அவருக்கு ஒரு பெரிய குறை!

"குட்டி நன்னா இருக்கு...இருந்துட்டுப் போகட்டும் இங்கே இருக்கறதுகளோட....இதென்ன கொறத்தி மாதிரி பாவாடையும் சட்டையும் ...அடியே..." -ன்னு உற்சாகமாகக் கூப்பிட்டுண்டு திரும்பறார். 'அவரைப் பார்த்துண்டே அங்கேதானே நின்னுண்டிருக்கேன்..." என்று அந்த நாளை, நிகழ்ச்சியை, ஒரு சித்திரத் தொகுதியைப் புரட்டுவதுபோல் மனத்திரையில் காட்சி காட்சியாகக் கண்டு கொண்டிருந் தாள் பங்கஜவல்லி...

"இப்படித் தூங்காமலிருந்தால் என் உடம்புக்கு ஆகாதே'' என்ற முணுமுணுப்புடன் தனக்கிருக்கும் 'டயபடிக்ஸ்'நோய், ரத்த அழுத்தம் பற்றிய டாக்டரின் எச்சரிக்கை, அதில் மிக முக்கியமானது 'தூக்கம் கெடலாகாது' என்பதையும் நினைத்துக் கொள்ளுகிறாள்...

'சுகுமாரன் தூங்கியிருப்பானா? சாப்பிட்டு இருப்பானா?' என்ற வீண் கவலை வேறு வந்து குறுக்கிடுகிறது.

அவனைப் பற்றி ஒவ்வொரு பருவத்திலும் அவள் கேட்க நேர்ந்த செய்திகள்...

அவர் போன பிறகு இந்தச் சிவகாமியிடம் குடிவெறி யில் சுகுமாரன் ஒரு நாள் முறைதவறி நடந்து கொண்ட ஒரு சம்பவம்...அதன் பின்னர்தான் பெரியவன் முத்து சாமியின் கார் டிரைவர் கந்தசாமிக்கு எஜமானி என்கிற தோரணையோடு தானே முன் நின்று எல்லாம் செய்து திருநீர்மலைக்குக் காரில் அழைத்துச் சென்று திருமாங்கல்ய தாரணம் செய்வித்த புண்ணிய கைங்கர்யம்...

இன்று அந்தக் குட்டி சிவகாமியும் ஒரு தாயாகித் தாலாட்டுப் பாடுகிறாள் என்பதில் ஏற்படுகிற பூரிப்பு...

மணி பன்னிரண்டு அடிக்கிறது. தூக்கம் வராத நாட்களில் மட்டும் சாப்பிடுமாறு டாக்டர் கொடுத்துள்ள மாத்திரைகள் நினைவுக்கு வருகிறது.

விளக்கைப் பொருத்தி அறை முழுதும் திடீரென நிறைந்த வெளிச்சத்தில் கண்கள் கூச-கட்டிலில் இருந்த படியே ஷெல்ஃபிலிருந்த மாத்திரைச் சீஸாவை எடுத்துக் கொண்டாள். அந்தச் சந்தடியில் விழித்துக்கொண்ட தாதி எழுந்து வந்து அறை வாசற்படியில் நின்றாள்.

பங்கஜவல்லி அம்மாளைக் கவனித்துக் கொள்வதற் காக எப்போதும் உடனிருக்குமாறு நியமிக்கப்பட்டவள் இந்த மீனா. இவளையும் இவள் குடும்பத்தையும் நன்கு தெரிந்தவள் அம்மா. மீனா முப்பது வயதில் விதவையாகி விட்டவள். இப்போது இங்கு வந்து ஐந்து வருடமாகிறது. தாய், தகப்பன், சகோதரிகள், சகோதரர்கள்.. யாரிருந்து என்ன பயன்? அவ அப்பா கண்ணீரும் கம்பலையுமாக வந்து தன் கஷ்டங்களைச் சொல்லுவார். அந்த அளவு

என்னவோ ஒரு வகையில் எஜமானியின் வழியில் சொந்தம்...

இவள் கேட்காமலே மாத்திரை சாப்பிடுவதற்காகத் தீர்த்தம் எடுத்துத் தந்தாள் மீனா.

'நீ போய் படுத்துக்கோ' என்று சைகையால் அவளை அனுப்பிவிட்டு-மாத்திரையை விழுங்குவதற்கு முன் இன்னும் என்னவோ யோசித்தாள் பங்கஜவல்லி!

'சாயங்காலம் பெண் பார்க்கப்போனது, ஜாதகம் வாங்கிக்கொண்டு வந்தது-எல்லாம் முத்துசாமிக்கும் சிவராமனுக்கும் தெரியாது. காலையில் முத்துசாமியிடம் சொல்லி வைக்கவேண்டும். அவன்தானே வீட்டுக்குப் பெரியவன்! ஜோஸ்யர் குப்புசாமி சாஸ்திரிகளுக்குப் போன் பண்ணி வரச்சொல்லணும். ஜாதகம் பொருந்தி, பிராப்தமும் இருந்து, அந்த சீதா லக்ஷ்மி வந்த வேளையாவது சுகுமாரனைத் திருத்தி ராமனாக்கட்டும்! அவனுக்கென்ன? இந்தக் காலத்திலே எல்லாப் பசங்களும் இப்படித்தான் இருக்கா...இவனுக்கு வயசு முப்பத்தி ஏழாகிறது. அந்தப் பொண்ணுக்கும் இவனுக்கும் பதினாறு வயசு வித்தியாசம்... கொஞ்சம் அதிகம்தான்...அவருக்கும் எனக்கும் கூட அந்த வித்தியாசம்தான்...ஆனால், அவரா, இவன்? ஹ்ம்! ரெண்டாந்தரம் பண்ணிண்டார்ங்கறதைத் தவிர, ராமபிரானாச்சே அவர்...!'

புருஷனின் நினைவோடு, தெய்வத்தை வணங்கி மாத்திரை சாப்பிட்டுப் படுத்தபின் 'ராம...ராம...ராம' என்ற நாமத்தை மனத்துள் ஸ்மரித்தவாறு...

பங்கஜவல்லியம்மாள் எப்போது தூங்கினாளோ?

அதே இரவில்...

சீதாவும் மாரியம்மாளும் மாடியில் உள்ள தனியறையில் தூங்க விரும்பாமல், பேசிப் பேசிக் களைத்துப் போனாலும், இன்னும் பேச விரும்புகிற ஆர்வத்தால் அடிக்கடி வாஷ் பேசினில் முகம் கழுவிக்கொண்டு-ஒருவர்

ஓய்ந்தால் மற்றொருவர் தூண்டிவிடத் தொடர்ந்து பல் வேறு விஷயங்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

நட்பின் ஆதாரத்தோடு நம்பிக்கை கொண்டுவிட்ட இருவர்-அதிலும் ஒரே பாலினர், பருவத்தினர்-அந்தரங்க மாக அளவளாவ ஆரம்பித்துவிட்டால்? அது தரும் பரவசமும், ஆறுதலும், வாழ்வுக்குப் பொருள் சொல்லும்!

மாரியம்மாளின் முன்னால் 'சுந்தரி' பத்திரிகை பிரித்து வைக்கப்பட்ட நிலையில் 'ஹே, சீதே!' என்ற தலைப்பு தெரிந்தது...

அதைச் சற்று முன்னர்தான், சீதா அவளிடம் தந்து வாய்விட்டுப் படிக்குமாறு வேண்டிக் கொண்டதால், அவளும் படித்து முடித்திருந்தாள். படிக்கும்போது பல இடங்களில் மாரியம்மாளின் குரல் உணர்ச்சி வசப்பட்டுக் கம்மி அடைத்தது. கதையை முடித்தபின்,

"நான் இதை எழுதியவனைப்பற்றி யோசிக்கிறேன். இது யாருடைய குரல்? இவனும் இந்த ராவண சமூகத்தைச் சேர்ந்தவனா, இல்லையா? இது ராமனின் குரல் என்றால் இது பெண் மக்களுக்கு நம்பிக்கை தர வேண்டும். இது சீதையின் நிலைமை குறித்த அவலப் புலம்பல் மட்டுமே. அவளுக்கு விடுதலை என்கிற வாசகத்தையே காணோமே! ரொம்பவும் நம்பிக்கை வறட்சி மிகுந்த எழுத்து!" என்று தனது விமர்சனத்தை வழங்கினாள் மாரியம்மாள்.

'இது வெறும் விமர்சன அணுகல் முறை' என்று ஆங்கிலத்தில் சொன்னாள் சீதா: "இப்ப இந்தக் கதையை அல்லது இதை எழுதினவனை மதிப்பீடு செய்வது நம்ப வேலை இல்லை. இதன் மூலம் நமது பெண்களின் நிலையை நாம் புரிந்து கொள்ளுவதுதான் நம் வேலை; நமக்குச் சம்பந்தம் அவ்வளவுதானே! அப்படிப் பார்த்தால் இது சீதையைத் தேடுகிற-அவளை நம்புகிற ஒரு குரல்!-அது தெளிவு" என்றாள் சீதா.

மாரியம்மாள் அதில் இன்னும் ஏதோ குற்றம் கண்டு பிடிக்கிறவளைப் போல்,

"நாலாவது பக்கத்தில் ஆறாவது பாராவைப் படி!" என்று பத்திரிகையைச் சீதாவிடம் தந்தாள்.

'உடலையும் உழைப்பையும் சுரண்டி உன்னை ஒடாக்குகிற பழைய கொடுமையோடு, நமது புதிய ராவணர்கள் நீ உத்தியோகம் பண்ணிச் சம்பாதித்துத் தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார்களே- இதனை ஒரு பெருமையாகக் கருதி நீ மயங்குவதும்,'

'இந்த அசுரர்களுக்கு நாங்களும் சமம் என்று மன மயக்கம் கொள்ளுவதும்...' என்று சீதா தொடர்ந்து படிப்பதைக் குறுக்கிட்டு நிறுத்தினாள் மரியம்.

"இதற்கு என்ன அர்த்தம்? பெண்கள் பொருளா தாரச் சுதந்திரம் பெறுவதையும், ஆணுக்குச் சமமாய் உத்தியோகம் செய்வதையும்-மனமயக்கம் என்பது சரியா? பெண் மக்களின் விடுதலைக்கு ஒரு வழியும் இல்லை. ஆண்-பெண் சமத்துவம் என்பது மனமயக்கம் என்று புலம்புகிற ஓர் ஆணின் குரல்-உண்மையில் பெண்களை அவமதிக்கவே செய்கிறது" என்று உறுதியாகத் தன் கருத்தை, அந்தக் கதையில் உள்ள குறையை அடிக் கோடிட்டு நிறுவினாள் மரியம்.

சீதா, மாரியம்மாளின் முகத்தை ஆழ்ந்த சிந்தனை யுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஹே! ராமா! என்று நாம் இதற்குப் பதில் ஒன்று எழுதி அனுப்புவோமா?" என்று கேட்டாள் மாரியம்மாள்.

"எழுதி அனுப்புவதென்ன? நீ எழுதிக்கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்துவிடேன்" என்றாள் சீதா.

"ஐயோடி! என்னால் மட்டும் முடியாது. உன் உதவி ரொம்பத் தேவைப்படும்" தயங்கினாள் மரியம்.

"திருமதி சீதாவையும் கலந்து எழுதுவோம். ஏதாவது ஒரு புனை பெயர்லே பிரசுரமாகட்டும். நான்

அப்பாவோட பேசறேன். ஆனால் ஒண்ணு: நானே எழுதினாலும் என் பெயர்லே வரப்படாது" என்று நிபந்தனை விதித்தாள் சீதா.

"அதற்கு என்ன? சீதைக்கு ஒரு பேரா? மைதிலி, ஜானகி, வைதேகின்னு வரிசையாகக் குடுத்திருக்கானே இந்தக் கதையிலேயே" என்று 'ஹே சீதே'-யை மறுபடியும் புரட்டினாள் மரியம்.

"ஹே! ராமா!" என்று சீதாவின் இருதயம் கேவியது.

மணி மூன்று அடித்தது.

## 10

**சீ**தாவின் ஜன்ம நக்ஷத்திரம் மகம்.

"மாப்பிள்ளையோ பொண்ணோ - யாராவது ஒருத்தர் மக நக்ஷத்திரத்துலே பொறந்திருந்தால் போதும். அவாளுக்கு ஜாதகம், பொருத்தம் ஒண்ணும் பார்க்க வேண்டாம். அந்த நக்ஷத்திரத்துக்கு அப்பிடியொரு விசேஷம் பாருங்கோ. இந்த விசேஷம் வேற நக்ஷத்திரங்களுக்கும் உண்டு. அதில் இன்னொண்ணு மிருகசீரிஷம். மாப்பிள்ளைக்கு ஜன்ம நக்ஷத்திரம் மிருகசீரிஷம்! பலே! பலே! - இருந்தாலும் பத்தரை மாத்து சுவர்ணத்தை உரசிப் பார்க்கிறாப் போல, ஜாதி வைரத்திலே நீரோட்டம் பார்க்கிறாப்பிலே, இரண்டு ஜாதகத்துக்கும் பொருத்தங்கள் எப்பிடி இருக்குன்னு பார்த்தேன்...அடாடா!... என்ன சொல்றது. ராம-சீதா ஜாதகம் போலத்தான் பொருந்தி இருக்கு. இந்த வரனுக்கு இந்த வதுதான் ஸ்வாமி! நீங்க பெரிய எடிட்டர்... ஜர்னலிஸ்ட்...உங்களுக்குத் தெரியாத சாஸ்திரம் உண்டோ? இருந்தாலும் இதை சித்தப் பாருங்கோ ஸ்வாமி...நக்ஷத்திரம், கணம், மகேந்திரம், ஸ்திரி

தீர்க்கம், ராசி, ராசியாதிபதி...பத்துப் பொருத்தங்களிலே ஏழு சிரேஷ்டமாப் பொருந்தி இருக்கு...அடாடா...

பிழைப்புக்குப் பிச்சை எடுக்கிறவனைப் போல் அந்தப் பொய்ச் சோசியன் என்ன மாதிரி அதிரடிக் குரலில் அளந்து கொண்டிருக்கிறான்!

ஜாதகம் அமோகமாய்ப் பொருந்தி விட்டதாம்! அடுத்த முகூர்த்தத்திலேயே வச்சுண்டுடலாம்னு மாப்பிள்ளை ஆத்துக்காரா பிரியப்படறாளாம்.

மாடியறையில் மும்முரமாய் எழுதிக் கொண்டிருக் கிறாள் சீதா. கடந்த ஒரு வாரமாய் மாரியம்மாளுடனும், திருமதி சீதாவுடனும் பேசி விவாதித்து எடுத்துக்கொண்ட குறிப்புகள் நிறைந்த ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பார்த்து மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நினைவு கூர்ந்து, அதற்கான ஆதாரங்களை வேறு நூல்களில் தேடி, மனத்துள் அமைந்த வாக்கியங்களுக்கு எழுத்து வடிவம் கொடுக்க என்ன பாடுபடவேண்டியிருக்கிறது! ஒரு மணி நேரமாக உட்கார்ந்து எவ்வளவுதான் தோய்ந்து தோய்ந்து சிந்தனையில் மூழ்கினாலும் ஒரு பக்கம் கூட முழுசாக எழுதி முடிக்கவில்லை....

போன வார இதழ் சுந்தரியில் வந்திருந்த 'ஹே! சீதே'வை, அதன் தங்குதடையற்ற மொழியோட்டத்தை நினைத்து வியந்து ரசிக்கிறாள்!... பலமுறை படித்துப் படித்து அதன் பல பகுதிகள் அவளுக்கு மனப்பாடமாகி யிருந்தன. அதே நடையைத் தானும் 'காப்பி'யடித்த மாதிரி ஆகிவிடக்கூடாது, என்று மிகவும் கவனத்துடன் தூய தமிழ் நடையில் இதனை எழுத வேண்டும் என்று அவர்கள் மூவரும் தீர்மானித்துக் கொண்டதை நினைவுபடுத்திக் கொண்டாள் சீதா.

'ஓ! இராமா!' என்ற தலைப்பில் அதை எழுத அவர்கள் திட்டமிட்டிருந்தனர் அதன்படி முதல் பக்கத்தில் 'ஓ! இராமா' என்று பெரிய எழுத்தில் எழுதி

யிருந்தாள். சிநேகிதிகள் மூவரும் கூடித் தரித்துக் கொண்ட 'திருமகள்' என்ற புனை பெயரையும் எழுதி அந்தக் கதை?-கட்டுரை? - கடிதம்?...தொடங்கப் பட்டிருந்தது... இன்னும் ஒரு பக்கம் முடியவில்லை.

அதற்குள் ஜோஸ்யர் வந்து கீழே ஏதோ கதாகாலட்சேபம் செய்கிறவர் போல் அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கிறார். அதில் கவனம் திரும்ப சீதாவின் எழுத்துப் பணி தடைபட்டது.

சீதா எழுதுவதை நிறுத்திவிட்டு, அந்தச் சோதிடன் போகட்டும் என்று காத்திருந்தாள்.

அப்பாவுக்கு ஏனோ தன் ஆசை மகளின் மனம் மெய்யாகவே புரியாமல் இருக்கிறது என்று அறிந்து அவள் மனம் அப்பாவின் மீது ஒரு பக்கம் பரிவும் கொண்டது. தனக்கு விருப்பமில்லை என்று தெரிவித்து விடுவதற்கு இதுதான் தகுந்த சந்தர்ப்பம். இதற்கு மேல் விடக்கூடாது. எனினும் அப்பா வருத்தப்படுவாரோ? பட்டால் படட்டும். வாழ்க்கை முழுதும் ஒரு பெண் படப்போகும் வருத்தத்தை விட ஒரு அப்பா வருத்தப் படுவது மேன்மையானதாய் இருக்கும்; படட்டும்!

பெரிய பெரிய நமஸ்காரங்கள் போட்டுக் கொண்டு ஜோசியர் விடை பெற்றுத் தெரு வாசற்படியிலிறங்கும் வரை மாடியில் காத்திருந்து விட்டுக் கீழிறங்கி வந்தாள் சீதா.

இன்று அவளுக்கு வெளியில் செல்ல வேண்டிய வேலையொன்றுமில்லை. இருந்தாலும் மத்தியானத்துக்கு மேலே மாரியம்மாளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

மாடிப்படியிறங்கி வருகிற சீதாவைப் பொங்குகிற மகிழ்ச்சியுடன் பார்த்து "இப்பத்தான் ஜோஸ்யர் புறப்பட்டுப் போனார். அவர் சொன்னதையெல்லாம் நீ கேட்டையோ? அவர்தான் மைக் வெச்சுப் பிரசங்கம்

பண்றவர்போல் சொன்னாரே, ம்மாடியிலே கேட்டு தோன்னோ?... என்று குதூகலத்துடன் குழைந்து குழைந்து பேசினாள் அம்மா.

"நான் ஓர் இழவும் கேக்கலே-எனக்கு எழுதற வேலையிருந்தது" என்றாள் எரிச்சலுடன்.

"சீதா! தூ! வாயை அலம்புடி...என்னத்துக்கு என்ன வார்த்தை சொல்றதுன்னு வியவஸ்தை கெட்டுப் போச்சோ?" என்று கண்டித்த அம்மா, விபரீதமாக அப்பாவைப் பார்த்தாள்.

"என்ன சீதா, உனக்கு என்ன எரிச்சல்?... என்று கேட்டவாறே அப்பா அவளருகே வந்து கனிவுடன் அவள் முகத்தைப் பார்த்தார். "நிஜமா சொல்லு, உனக்கு இந்தக் கல்யாணம் சம்மதந்தானே?"

"அப்பா, எனக்குத் துளியும் சம்மதம் இல்லே... எனக்குக் கல்யாணம் இப்ப வேண்டாம். அதுவும் இந்தக் கல்யாணம் வேண்டவே வேண்டாம்."

"இந்த மாப்பிள்ளை வேண்டாம்னு நாம இப்ப ஒதுக்கினா அதுக்கு என்ன காரணம்னு கேட்பாளோன்னோ இவ்வளவுக்கும் அப்புறம்... ஏன்? உனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலே?...நான் உனக்கு நல்லதாகவும், உயர்ந்த இடமாகவும் பார்த்து அமைச்சுட்டதா சந்தோஷப் பட்டுண்டு இருக்கச்சே... நீ ஏன் இப்பிடி எங்களுக்கு வருத்தம் தர்ர மாதிரி பேசறே?..."

"இப்ப, 'இவ்வளவுக்கும் அப்பறம்'னு சொல்றேளே, 'எப்ப, எவ்வளவுக்கு அப்பறம்?'னு ஒண்ணும் எனக்குப் புரியலே... என்று முனகிக் கொண்டாள்.

-இருவரும் வழக்கம்போல் எதிர் எதிரே சாப்பிட உட்கார்ந்தனர்.

"அம்மா, ஒரு கல்யாணத்துக்கு ரெண்டு ஜாதகங்கள் பொருந்தி இருந்தால் மட்டும்போதுமோ? மனசு பொருந்தி

யிருக்க வேண்டாமா? இந்த சுகுமாரன் பெரும் பணக் காராங்கறதைத் தவிர வேற என்னத்திலே ஒசத்தியோ?...

அப்பா ஒன்றும் பேசவில்லை. யோசித்தவாறு மௌனமாக, சாப்பிடும்போது அடிக்கடி அவர் தமது மகளை விழியுயர்த்திப் பார்த்தார். சில பார்வைகளின் போது அவர்கள் இருவரது விழிகளும் சந்தித்தன. அம்மா இந்தச் சமயத்தில், தான் வாய் திறந்தால், புருஷனின் அனாவசிய வசவுகளுக்கு ஆளாக நேரும் என்ற அச்சத் தால் இவர்களிடையே நிகழப் போகும் சம்பாஷணைக் காகக் காத்திருந்தாள்.

சாப்பிட்ட பிறகு ஈஸிசேரில் உட்கார்ந்துகொண்டு கண்களை மூடி யோசித்தார். அப்பா, இந்தக் கல்யாணத்தின் மூலம் ஏற்படவிருக்கும் பலாபலன்களை இந்தப் பெண் உணரவில்லை...இவளுக்கு அதை எப்படி உணர்த்துவது என்றே யோசித்தார். தன்னைக் கடந்து போகும் சீதாவின் காலடியோசையால் கண் திறந்தார்.

"சீதா!" என்றதும் நின்றாள்.

"உன் மனம் தெரியாமல் இந்தக் கற்பனையை நான் வளர்த்துக் கொண்டேன் என்றா நினைக்கிறாய்? அப்பிடீன்னா, உன் மனசிலே வேற ஏதாவது எண்ணம் இருந்தால் சொல்லு அம்மா" என்று திறந்த மனத்துடன், தான் எதற்கும் தயார் என்ற நல்லுறுதியுடன் மெய்யாகவே மகளின் மனத்தை அறிந்துகொள்ளுவதற்காகக் கேட்டார் அப்பா.

"யூ மீன்-காதல்?" என்று கேட்டு விட்டு அப்பாவிடம் பேசுகிறோம் என்பதைக் கூட மறந்து-தனது சினேகிதிகள் நடுவே யாரையேனும் பரிகசித்து நகைப்பது போல்-அவரது அறியாமைக்காக அவர் முன்னே கையை நீட்டிக் கொண்டு கலகலத்துச் சிரித்தாள் சீதா.

உண்மையில் அவர் அப்படித்தான் ஏதோ நினைத்துக் கேட்டார். சுந்தர சர்மாவுக்கு, காதல் எனும்

அசட்டுத்தனம், காலித்தனம் எல்லாம் கதைகளிலும், பத்திரிகையிலும், சினிமாவிலும்தான் நடக்கும்; அதைப் பார்த்துச் சில அறிவற்ற ஜன்மங்கள் கெடலாம்; தன் பெண்களில் யாருக்கும் அந்த அசட்டுத்தனமோ, காலித்தனமோ நேராது என்ற பலமான நம்பிக்கை. முதல் இரண்டு பெண்களின் அனுபவங்களும் அவ்வாறே அமைந்ததால் இந்தப் பெண்ணும் தாம் பார்க்கும் வரனுக்கு நாணத்தோடும் மகிழ்ச்சியோடும் தலை தாழ்த்திக் கழுத்தை நீட்டிவிடுவாள் என்று நினைத்தது தமது கற்பனையோ என்று இப்போதுதான் அவருக்கு முதன் முறையாகத் தோன்றலாயிற்று.

அப்படியேதுமிருந்தால் தாம் அதைத் தடுக்கவோ, மகளின் விருப்பத்துக்கு மாறாக நடக்கவோ கூடாது என்று ஒரு நொடியில் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டார் அவர்.

“சொல்லு சீதா...நான் ரொம்பவும் முற்போக்கான வனாக நடந்துண்டுடுவேன். அவன் யாராக இருந்தாலும் ஜாதி, மதம், மொழி, தேசம் எதுவானாலும் பாராட்ட மாட்டேன். சீதைக்கு ஒரு ராமன் நிச்சயம் பிறந்திருப்பான். அவன் யாராக இருந்தாலும் பரவாயில்லை. ஒரு நீக்ரோவாக இருந்தால் கூட!...”

“போங்கோ-அப்பா” என்று பெருகி வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னாள் சீதா:

“நீக்ரோன்னா என்ன மட்டமா? அப்படியெல்லாம் இருந்தால் ரகசியம் என்ன வேண்டியிருக்கு, அதிலே? இந்நேரம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே...அப்படியெல் லாம் நான் பார்த்துப் பழகி மனசு பறிகொடுக்கற மாதிரி அப்ப புருஷ திலகங்கள் எவனும் இல்லே! நீங்க சொல்ற மாதிரி ஜாதி, மதம், மொழி, தேசம் எல்லாம் கடந்து ஆளைத் தேடி அலையணும்னு ஒருத்திக்குத் தலை எழுத்துமில்லை. அப்பிடி ஏதாவது ஏற்பட்டால் சரி. அப்பிடியெல்லாம் இல்லைங்கறதுக்காக?...கண்டவன்

தலையிலே பெண்களைக் கட்டிவிடறதோ? அதனாலே தான் அவா வாழ்க்கை நரகமாயிடறது... என்று தனது ஆராய்ச்சிக் கட்டுரையின் ஆதாரக் கருத்தை எடுத்துச் சொல்லிப் பெற்ற தகப்பனிடமே இவள் கற்ற வித்தையைக் காட்டுகிற பேதைமையைக் கண்டு சுந்தர சர்மாவும் மனத்துள் சிரித்துக் கொண்டார்.

"இந்தக் கல்யாணத்தை வேண்டாம்னு சொல்றதுக் காகவா நீ இப்படி ஒரு ஆராய்ச்சிப் படிப்பிலே இறங்கினே?...அடி அசடே! சில கருத்துக்களுக்காக வாழ்க்கையையே பணயம் வைக்கிற குணம் எல்லாருக்கும் ஒரு பருவத்திலே ஏற்படறதுதான். ஆனால் அனுபவத்திலே அது சாத்தியம் ஆகறது இல்லே...ஒரு கருத்துக்கு அர்ப்பணம்னு நினைச்சுண்டு, தேடிவர்ற ஐசுவரியத்தை உதைச்சுட்டுப் பிற்காலத்திலே வாழ்க்கையை வீணடிச் சுண்டமோன்னு அவாளுக்கே அப்புறம் தோணும்–அதைத் தான் சொல்றது 'பெண் புத்தி-பின் புத்தி'ன்னு. உன் தலை எழுத்து அப்படியில்லேன்னு நான் மட்டும் சொல்லலே... ஜாதகமும் சொல்றது...சாஸ்திரம், பெரியவா பிரீதி எல்லாத்தையும் மீறி நீ என்னத்துக்காக இந்தக் கல்யாணம் வேண்டாம்னு சொல்றே? யோசிச்சு சொல்லு. 'கன்வின்ஸ்' மீ! நான் உன்னை 'கம்ப்பெல்' பண்ணலே... என்னோட தீர்மானத்தை நீ மறுக்கலாம். ஆனால் நீ அதுக்காக சமாதானம் சொல்ல வேண்டாமா? அதுதானே நியாயம்? அநியாயமாகவும், பிடிவாதமாகவும் 'வேண்டாம்-வேண்டாம்'னு பட்டிக்காட்டுப் பொண் மாதிரி நடந் துண்டா பெத்தவாளும் பட்டிக்காட்டு மனுஷா மாதிரி நடந்துண்டுடறா...நாம அப்பிடியா? ம்...யோசிச்சு, உன் ஃபிரண்ட்ஸ்கிட்ட எல்லாம் கலந்து பேசி, இன்னிப் பொழுதுக்குள்ளே 'திஸ்-ஆர்-தட்'ன்னு தீர்மானமாகணும். ஐ கெந்நாட் வெய்ட்! நேரமாச்சு..." என்று மணியைப் பார்த்தார்.

வாசற்படிக்கு நேரே ஆபீஸ் கார் வந்து நின்றிருந்தது.

வழக்கம்போல் "என்னோட கார்ல வந்துடறியா?" என்றார் அப்பா.

"என் ஃபிரண்ட்" என்று சீதா ஆரம்பித்ததை முடிக்கு முன்பு அப்பா குறுக்கிட்டு, "அந்த வாழா வெட்டியோட ஒண்ணும் இதைப் பத்தியெல்லாம் நீ பேச வேண்டாம்- அவளைச் சொல்லிக் குத்தமில்லே-அவ அப்பன் இருக்கானே அந்தத் தடியன், பொய் சொல்லிக் கல்யாணம் பண்ணி வெச்சுட்டான்...என்ன பண்ணி யிருக்கான் தெரியுமோ?"

"ஸ்...போறும், எனக்கு வேண்டாததெல்லாம்" என்று காதைப் பொத்திக்கொண்டு போனாள் சீதா.

"ஏன்னா கண்ட கர்மத்தையும் அவள்ட்டே போய்ச் சொல்றேள்? இங்கே வாங்கோ: நேக்குக்கூட என்னமோ காதில் விழுந்தது... கோயில் பிரகாரத்திலே இதெல்லாம் எதுக்குன்னு வந்துட்டேன்...என்னவாம் சுசீலா சமாசாரம்?" என்று அம்மா வெற்றிலைத் தட்டுடன் அப்பா விடம் வந்தாள்.

மெல்லுவதற்குப் பாக்குடன் சுசீலா சமாசாரமும் சேர்ந்து சுந்தர சர்மா தம்பதிகளுக்குச் சுவை கூட்டியது!

## 11

"அப்பா மாடியிலே இருக்கா. நீ வந்த உடனே மாடிக்கு வரச் சொன்னா" என்று நீராவியின் அழுத்தத்தால் ஆவியும் ஓசையுமாகச் சீழ்க்கை அடிக்கும் பிரஷர் குக்கரின் இரைச்சலின் நடுவே, அப்போதுதான் வெளியிலிருந்து வந்து ஒரு தம்ளர் ஜலம் குடித்துக் கொண்டிருந்த சீதாவிடம் சொன்னாள் அம்மா.

"உன் ஃபிரண்ட்ஸ்கிட்ட எல்லாம் கலந்து பேசி இன்னிக்குப் பொழுதுக்குள்ளே 'திஸ் ஆர் தட்'ன்னு தீர்மானமாகணும்'ணு காலையிலே அப்பா சொன்ன குரலும், கடுமையும் அவளுக்கு நினைவில் வந்தது. சீதா மாடியறைக்குப் போய் உடை மாற்றிக் கொண்டே யோசித்தாள்...

இன்றைக்குப் பூராவும் அவள் இது குறித்து யாருடனும் பேசவில்லை. தனக்கு கல்யாணம் ஆகப் போவது குறித்து, அதில் தனக்கு விருப்பமில்லாதது குறித்து, தனது விருப்பத்தைப் புறக்கணித்துத் தனது பெற்றோர் எவனுக்கோ தன்னைத் தாரை வார்க்க மகிழ்ச்சியுடன் தயாராயிருப்பதைக் குறித்து எல்லாருடனும் பேசுவது அவளது சுய கௌரவத்துக்கு உசிதமாகப் படவில்லை. மாரியம்மாளிடம், தான் ஏற்கனவே சொல்லியிருப்பது போதும் என்று இன்று பகற்பொழுதில் ஒரு முறை நினைத்துக்கொண்டது தவிர, அப்பா எதிர் பார்த்துக் காத்திருப்பதற்கு இணங்க அவள் இதுபற்றி ஏதும் எவருடனும் கலந்து பேசிப் புதிய தீர்மானத்துடன் வரவில்லை...

புடவைக் கொசுவத்தின் மடிப்புக்களைச் சரி செய்து கொண்டு அறையிலிருந்து வெளிவந்தாள் சீதா. மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில்-அப்பா, தமக்கு அதிகம் பிடித்த மதுவின் துணையுடன் உட்கார்ந்திருக்கிறார். அந்தச் சூழ்நிலையில் அவரை அவள் எவ்வளவு காலமாய்ப் பார்த்து வருகிறாள்!

ஒரு காலத்தில் கடைக்குட்டியான சீதாவை மடியில் வைத்துக்கொண்டு, காமுவும், மீனாவும், அம்மாவும் சில சமயங்களில் பாட்டியும்கூடச் சூழ்ந்துகொள்ள அப்பா என்னென்ன கதைகள் சொல்லுவார்!

வால்மீகி ராமாயணம் பூராவும் குழந்தைக்கும் புரியற மாதிரி அப்பா சொல்லுவார்...

அப்போது அவர்கள் இதுமாதிரியான பெரிய மாடி வீட்டில் தனிக் குடித்தனக்காரர்களாக வசிக்கவில்லை. இதே மைலாப்பூரில் இன்னொரு தெருவில் நாலு குடித் தனங்களுள்ள ஒரு வீட்டின் மாடிப் போர்ஷனில் குடியிருந்தார்கள். அப்போதெல்லாம் கஷ்ட காலமாம். வறுமையாம். அதற்கு முன்பு இன்னும் மோசமான ஒரு சந்து வீட்டில் பத்து குடித்தனங்களுக்கு மத்தியில் வாழ்ந்த போதுதான் சீதா ஜனனமானாளாம்...அதையெல்லாம் சொல்லி அவளுடைய அப்பாவும் அம்மாவும், கடந்தகால கஷ்ட ஜீவிதத்திலிருந்து கரையேற உதவிய கடவுளின் அருளையும், கடைக்குட்டி சீதாவின் அதிர்ஷ்டத்தையும் எண்ணியெண்ணி நாள்தோறும் பக்தி சிரத்தையுடன் தெய்வ வழிபாடு செய்கிறார்கள்!...

சீதாவுக்கு அதெல்லாம் தனக்குச் சம்பந்தமில்லாத கதை போலிருக்கும். இவர்கள் என்னதான் அதைத் துன்பமயமான கடந்தகாலம் என்று நொந்துகொண்ட போதிலும் அதே காலம், அவளது துள்ளித் திரிகிற பருவமாக இருந்ததால், இப்போது நினைத்துப் பார்த்தாலும் அந்த எளிய வாழ்க்கை இதைவிடவும் இன்பமானதாகத்தான், நெஞ்சில் இனித்தது.

அப்பா அவள் வந்து நின்றதைக் கவனிக்கவில்லை. ஏதோ நினைவுடன், எங்கோ நிலா வெளிச்சத்தில் தெரிகிற தென்னை மரத்தில் நிலைத்த பார்வையுடன் அவர் பிரம்பு நாற்காலியொன்றில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னால் உள்ள வட்ட மேஜையில் பொன்னிறத் திரவக் கிண்ணியும், மதுப்புட்டியும் பார்க்க ரம்மியமாக இருந்தன. .அப்பாவுக்கு இதில்தான் என்ன இன்பானுபவம்! இந்த வாழ்க்கையின் இந்த இன்பத்துக்காகத்தான் இறைவனைத் 'தொழு தொழு'வென்று தொழுகிறார்...இப்போது கூடத் தூரத்தில் தெரிந்த கோபுரக் கலசத்தில் ஒளிர்கிற அவருக்குத்தான் மனத்துள் ஸ்லோகம் சொல்லியாகிறது...

சீதா, தான் வந்து நின்றிருப்பதை அப்பாவுக்குத் தெரிவிப்பதற்காக ஒரு முறை லேசாக இருமினாள்.

"ஓ! நீயா?" என்று திரும்பிப் பார்த்துச் சற்றுக் கழித்துக் கேட்டார்: "உங்கம்மா அப்பளாம் கொண்டு வரேன்னு போனாளே...

'நல்லவேளை, அப்பா தனக்காகக் காத்திருக்க வில்லை' என்று குதூகலத்துடன் 'அப்பளம்தானே? நான் கொண்டுவரேன்' என்று மாடிப்படிகளில் அவள் துள்ளி இறங்கும்போது-கீழ்ப்படியில் அம்மா கையில் அப்பளம் நிறைந்த தட்டுடன் நிலாவில் வருவதை நின்று ரசித்துப் பார்த்தாள் சீதா.

"அம்மா நீயும் மாடிக்கு வரயா?" என்று அழைத்தாள் சீதா.

"சித்தெ கழிச்சு வரேண்டியம்மா...இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு. இந்தா இதை வாங்கிண்டு போ..." என்று தட்டை மகளிடம் தந்துவிட்டு வேலை செய்து களைக்கிற அலுப்புடன் முனகிக்கொண்டே திரும்பிப் போனாள்...

அப்பா அனுபவிக்கிற 'சொர்க்கத்தை'யும் அம்மா அனுபவிக்கிற நரகத்தையும் மாடிப்படியின் நடுவே நின்று ஒரே சமயத்தில் பார்த்தாள் சீதா.

கேட்டால் 'அப்பாவின் சொர்க்கம் தான் அம்மாவின் சொர்க்கம்' என்று அம்மாவே சொல்லுவாள்.

அப்பாவின் முன்னால் அப்பளத்தட்டத்தை வைத்துத் தான் ஒன்றை எடுத்துக்கொண்டாள். இன்னொரு பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு நிலா வெளிச்சம் தன்மேல் நன்கு தழுவிப் பொழியும் வண்ணம் உட்கார்ந்தாள். அப்பாவின் பார்வை 'என்ன உன் தீர்மானம்?' என்று திடீரெனக் கேட்பதுபோல் சீதாவின் மீது பதிந்தது. அவள் அவரை வெறுமையாகப்

பார்த்தாள். மனத்துள்– 'அவர் வாய் திறந்து கேட்கட்டுமே...

"சீதா, நான் நினைக்கறேன், நீ எந்தப் பொண்ணும் சாதாரணமா சொல்லுமே, அந்த மாதிரி ஏதோ வேண்டாம் வேண்டாம்னு சொல்லிண்டிருக்கே...வேற ஒண்ணும் தீர்க்கமான காரணம் இல்லே...அதனாலே... பெரியவா அனுக்ரகத்தோட மேலே நடக்க வேண்டியதை நான் செய்யலாம்னு யோசிச்சிண்டு இருக்கேன்..."

"அப்பா" என்று அவரை அழைத்தபோது சீதாவின் குரல் கரகரத்தது. ஒருவகை நிர்க்கதியான உணர்ச்சியால் கண்கள் நீர் சுரந்தன; அழவில்லை.

"நீங்கள் எனக்குப் பார்த்திருக்கிற இந்த சம்பந்தம், வரன், மிஸ்டர் சுகுமாரன், எனக்கு எந்த விதத்திலும் பொருந்தினவர் இல்லே; அவரை நினைச்சால் எனக்குக் குமட்டறது!... என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த போது 'வேற எவனை நினைச்சால் இனிக்கிறது? அதை யானும் சொல்லு' என்று கேட்க வேண்டும்போல் இருந்தது அப்பாவுக்கு. ஆனால் அப்படிக் கேட்பது அனாவசிய மான, இல்லாத ஒன்றைக் குறித்த ரசக்குறைவான சச்சரவாகப் போகும் என்று நிதானித்தார் சுந்தரசர்மா.

...எனக்குப் பொருத்தமில்லாத, விருப்பமில்லாத ஒருத்தருக்கு என்னை நீங்க இவ்வளவு தூரம் வற்புறுத்தறது எதனாலேன்னு எனக்குப் புரியவே இல்லை..." என்று விரலை நெறித்துச் சுடக்கு எடுத்தவாறு சொன்னாள் சீதா.

சுந்தரசர்மாவின் மனத்துள் அவள் கேள்விக்கான பதில்–தான் சுகுமாரனுக்குச் சீதாவைக் கல்யாணம் செய்து கொடுக்க இவ்வளவு தூரம் விரும்புவதற்கான காரணம் தெளிவாக இருந்தபோதிலும், அதை எப்படி மகளுக்குச் சொல்லுவது என்று யோசித்த மௌனத்தில் சற்று நேரம் கழித்தார்.

"அதிகம் வளர்த்த விருப்பமில்லை எனக்கு...இது ஒரு தகப்பனின் கடமை" என்று அவளைப் பார்த்துச் சொன்ன

அப்பா, குனிந்த தலையுடன் கையிலிருந்த மதுக் கிண்ணத்தைப் பார்த்துக் கொண்டு சொன்னார்:

"நான் ஒண்ணும் பெரிசா சேத்து வச்சுடலே... ரெண்டு பொண்களுக்குக் கல்யாணம் பண்ணினதாலும், 'இலக்கியம் கருமாந்தரம்'னு போயி தரமான ஒரு பத்திரிகை நடத்தினதாலேயும்...இன்னித் தேதியிலே எனக்கு 'நாலு' ரூபாய்க்கு மேலே கடன் இருக்கு..."

நாலு என்றால் நாலு லட்சம் என்று அவள் புரிந்து கொள்ளுவாள் என்று நம்பாமல் உயர்த்திய நான்கு விரல் களை மடக்காமல் நீட்டிய நிலையிலேயே வைத்துக் கொண்டு "நாலு லட்சம்டீ... என்றார் குரலைத் தாழ்த்திக் கொண்டு. அம்மாவுக்குத் தெரியக் கூடாதாம்! தெரிந்தால் என்ன சிரச்சேதமா செய்து விடுவாள்? அழுவாள்... அம்மா அழுதால் அப்பாவுக்குப் பொறுக்குமோ?

"ஒரு காலத்திலே உங்க அம்மா சொல்லுவா-என்னடி உனக்கு வாழ்க்கையிலே பெரிய ஆசைன்னு கேட்டால் சொல்லுவா...'உக்ராண அறையில் ஒவ்வொரு பாத்திரத்தையும் துழவித் துழவித் தட்டிப் பார்த்துக் கொட்டாம, வெறும் பாத்திரத்தைக் கொட்டிப் பார்த்து ஏங்காம, எதைத் தெறந்தாலும்-கடுகும், சீரகமும், எண்ணெ யும், நெய்யும், அரிசியும், பருப்பும் இந்த ஆத்திலே எந்தக் காலத்திலே நெறைஞ்சு பார்க்கப்போறேனோ'ம்பா... தானும் குழந்தைகளும் வயிறாரச் சாப்பிடறதே எவ்வளவு பெரிய லட்சியமாப் போச்சு பாரு? அதுவே...ம்! அப்படியொரு காலம்...என் பத்திரிகையைப் பத்தி, நான் எழுதுகிற எழுத்தைப் பத்தியெல்லாம் தரக் குறைவானதுங் கறதிலே ரெண்டு அபிப்பிராயம் எனக்கு வாஸ்தவத்திலே கிடையாது. ஆனால் நானே அதை வெளியிலே சொல்லிண்டுட முடியுமோ? நான் பகவத் கீதைக்கு உரை எழுதினேன். விக்கலேடீ, சீதா. 'தாம்பத்திய சுகம் காண 100 வழிகள்'னு எழுதின புஸ்தகம் பத்துப் பதிப்பு வந்து இன்னும் பணம் தந்துண்டிருக்கு. சுந்தரசர்மா,

சுந்தரகாண்டம் எழுதினால் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். 'குமாரி சுந்தரி'ன்னு படுக்கையறைக் கதைகளும், சாந்தி முகூர்த்த வர்ணனைகளுமா வரிஞ்சு தள்ளினால் 'ஈஈ'னு இளிச்சுண்டு படிக்கறதுகள்...எதுக்கு சொல்றேன் இவ்வளவும்? கருத்துக்கள்-அதுவும் நல்ல கருத்துக்கள் நமக்கிருக்கிறது சொந்த வாழ்க்கையைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிக் கொள்றதுக்கா?"

கீழே பாட்டி, இருமுகிற சப்தம் கேட்டது.

"இதோ பாட்டி, இத்தனை வயசு வரைக்கும் அம் மான்னு சொல்லிக்கவானும் உயிரோடு இருக்காள்னா... ஆயுசு பலம், ஆண்டவன் அருள் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்; மாசம் அவளுக்கு டாக்டருக்கும் மருந்துக் கும் என்ன பில் ஆறது தெரியுமோ? எத்தனை செலவானா லும் அம்மா உயிரோட இருக்கணும்னு தானே ஆசைப்படு வான் ஒருத்தன்...ஆனா எல்லார்க்கும் முடியணுமே...? எது தேவலாம்? பெத்த தாயைப் பட்டினி போட்டுக் கொன்னுட்டு ஊருக்கு உபதேசம் பண்றதா...?

அம்மா வருகிறாளா, என்று நடுவில் ஒரு முறை பார்த்துக் கொண்டார். தன் அம்மாவுக்காக ஆகிற மருந்துச் செலவை ஞாபகப்படுத்தி விட்டால் இந்த அம்மா பொருமித் தீர்ப்பாளே...

ஒரு மனிதன் நல்ல மகனாகவும், மனைவியின் சாதாரண அல்ப தேவைகளைத் தீர்த்துவைக்கிற புருஷ னாகவும், இரண்டு பெண்களுக்கு மணமுடித்து வைக்கிற தகப்பனாகவும் இருப்பதற்கு இவ்வளவு ஆத்ம சீரழிவுக்கு ஆளாகவேண்டியிருக்கிற கொடுமையை நினைக்க நினைக்க சீதாவின் நெஞ்சு கொதித்தது. அவள் மௌனத் தையும் முகவாட்டத்தையும் கவனித்தார் அப்பா:

"அதெல்லாம் பழைய கதை அம்மா. இப்போ நமக்கென்ன குறைச்சல்?... உன் கல்யாணத்துக்கப்பறம் சுந்தரி பத்திரிகையின் எல்லாப் பொறுப்பையும் சுகு மாரன் எடுத்துண்டுடறதா நாங்க எல்லாம் பேசி ஒப்பந்தம்

கூடப் பண்ணியாச்சு... கல்யாணத்துக்கப்பறம் ஒரு நல்ல நாள்லே 'டாக்குமெண்ட்' 'ஸைன்' பண்ணிட்டா... 'அக்கடா'ன்னு ஜாலியா இருப்பேன். நீ சொல்ற மாதிரி ஏதாவது உத்தமமா எழுதிண்டு காலந்தள்ளி விடுவேன். இப்பத்தான் நெஜமாலும் 'குமாரி சுந்தரி'களே நேரே போட்டோவும் போட்டு, போஸும் குடுத்துண்டு கதை எழுத வந்துட்டாளே..." என்று தனது நிகழ்கால- எதிர் காலத் திட்டங்களை மகள் முன்னர் அவளது அங்கீ காரத்துக்காக விளக்கிச் சொன்னார்.

விஷயம் ரொம்ப தூரத்துக்குசென்று உறுதியாகி விட்டதை உணர்ந்தாள் சீதா.

'இந்தக் கல்யாணம் இல்லாவிட்டால் என்ன ஆகிவிடும்?' என்று யோசித்தாள் சீதா. அப்பா கடன் தொல்லையால் பத்திரிகையை இழக்க நேரிடும். இந்த வீடு கூட இல்லாமற் போய்விடலாம். மூன்று குழந்தைகளுடன் அந்தக் காலத்தில் வாழ்ந்த எளிய வாழ்க்கைக்கு நான்கு பெரியவர்களாய் இந்தக் குடும்பத்தினர் இறங்க வேண்டி நேரலாம். அப்பாவுக்குத் தினந்தோறும் ஸ்காட்ச் குடிக்க முடியாது. அம்மா போட்டிருக்கிறார்களே இந்த நகைப் பெருமை எல்லாம் இராது. மஞ்சளும் குங்குமமாய் மகிழ்ச்சியான எளிய அத்தகைய வாழ்வுக்குத் திரும்புவதை இவர்களில் யாரும் விரும்பமாட்டார்கள். முடியாது. அப்படி ஆவதை இவர்கள் வாழ்க்கையில் தோல்வி என்றும் வீழ்ச்சி என்றும் கருதி ஆத்மாவே நொறுங்கிப் போவார்கள்.

'இவர்களுடைய அல்ப, லௌகீக வாழ்க்கைக்காக இவர்கள் என் வாழ்க்கையைப் பலியிடுவது என்ன நியாயம்?' என்று சீதாவின் மனம் குமைந்தது.

அவளது நீண்ட மௌனம், சம்மதத்தை அல்லாமல், அவளது சம்மதமின்மையின் அடையாளமே என்று அப்பாவுக்குப் புரிந்தது. எனினும் ஒரு பொய்ச் சிரிப்புடன்,

"மௌனம் சர்வார்த்த சம்மதம்'னு வெச்சுண்டுட லாமா? ம்...ம்... எங்கே?" என்று மகளின் முகத்தைத் தலை சாய்த்துப் பார்த்தார்.

'இல்லை... என்பதற்கு அடையாளமாய் சீதா இடமும் வலமும் தலையை ஆட்டினாள்.

"இப்படி நீ பிடிவாதமா மாட்டேனுட்டா, நான் என்ன பண்ணமுடியும்? சொல்லு" என்று பரிதாபமான குரலில் கேட்டார் சுந்தரம்.

"அப்பா, நான் உங்களுக்கு ஒரு பாரமாயிருந்தால், மாரியம்மாளைப் போல் ஹாஸ்டலுக்குப் போயிடறேன்... எனக்கு வேண்டியதை நான் சம்பாதிச்சுக்க முடியும்" என்று திக்கித் திணறிச் சொல்லி முடித்தாள் சீதா.

அதைக் கேட்டபின் அப்பா சிறிது நேரம் மௌன மாய் இருந்தார். இரண்டு தடவைகள் ஒரே மடக்காக மது வருந்தினார். எழுந்து உலாவினார். மறுபடியும் வந்து உட்கார்ந்து கொண்டு சீதாவிடம் கண்ணீர் விட்டு அழுதார்; 'நாளைக்கு இத்தோட ஒரு பாட்டில் தூக்க மாத்திரைகளும் கொண்டுவந்து சாப்பிட்டுவிட்டு ஒரேயடி யாகத் தாம் தூங்கிவிடுவதாகவும், அதன் பிறகு அவள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும்' என்றும் ரொம்ப வும் 'மெலோடிரமாடிக்'காக மது மயக்கத்தில் அப்பா வருத்தப்பட்டது சீதாவுக்கு நெஞ்சில் தாங்க முடியாத வேதனையை உண்டாக்கியது.

"அப்பா, அழாதீங்கோ...சந்தோஷமாய் இருங்கோ" என்று அவர் கையைப் பற்றிப் பிடித்து ஆறுதல் சொன்னாள்:

"நீங்கள் ஒன்றும் பிராணஹத்தி செய்துகொள்ள வேண்டாம். அதைவிட 'சீதாபஹரணமே' உத்தமம்! அதற்கு முன்னால் ஒருதரம் அவரோடு சந்தித்து நான் பேசுவதில் உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இருக்காதே..."

"சீதா கல்யாணம்னு மங்கலமா சொல்லவேண்டியதை எதுக்கு அப்படிச் சொல்றே? சுகுமாரனை நீ சந்திச்சுத் தனியா மனம்விட்டுப் பேசி நன்னாத் தெரிஞ்சுண்டு சந்தோஷமா சம்மதம் தரப்போறே! இதிலே எனக்கு என்ன ஆக்ஷேபணை? நன்னா, பேஷா... நாளைக்கே வந்து உன்னைக் கார்லே அழைச்சுண்டு பீச்சுக்குப் போகச் சொல்றேன்... என்று மகிழ்ச்சியால் உரத்து ஒலிக்கும் கணவரின் குரலைக் கேட்டவாறே அம்மா வந்தாள்.

'மகள் சம்மதித்து விட்டாள்!' என்ற மகிழ்ச்சியில் நிலா வெளிச்சத்தில் நின்றிருந்த சீதாவை வந்து தழுவிக் கொண்டு 'கல்யாணமே வைபோகமே' என்று குழந்தை மாதிரி, சிறு குரலில் பாடினாள் அம்மா! சீதாவுக்குக் கண்கள் இருண்டன.

## 12

இரவெல்லாம் சீதா யோசித்தாள். அன்று காலை அந்த ஜோசியன் சவால் விட்டுப் பிரகடனம் செய்த குரல் மெய்யாகப் போகிற மாயையை எண்ணி அவள் பெருமூச்செறிந்தாள்; அப்பா இப்படியொரு அஸ்திரத்தைப் பிரயோகிப்பார் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. அந்தப் பொய்யான பயமுறுத்தலுக்கே அவள் மனம் பதறிப் போனாள்.

சிம்சுபா வனத்தில் ராக்ஷஸிகளால் சூழப்பட்ட சீதையைப் பற்றிய, வால்மீகியின் ஸ்லோகங்களை எடுத்துக் கூறிப் பொருள் சொல்லுகிற அப்பாவால் எப்படி இதற்குத் துணிய முடிந்தது... ஒரு நிமிஷத்தில், அந்த முடிவுக்குத் தானும் மனம் ஒப்பிவிட்டதை அவர்கள் தான்-அப்பாவும் அம்மாவும்-எவ்வளவு மகிழ்ச்சியோடு நம்பிவிட்டார்கள்!

என்பதை நினைக்க அவளுக்கு அவர்கள்பால் பரிவும் இரக்கமும் தோன்றியது. இவர்களின் செல்லக் குழந்தை யான தான் மட்டும் இவர்களிலிருந்து வேறாகிவிட்டது எதனால்? நடை முறையில் மெய்யாகவே ‘அப்பாவும் அம்மாவும் வேறு, தான் மட்டும் வேறு’ என்றாவதற்கே, அந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்கே, எவனையாவது அவள் புருஷனாக அடைய வேண்டும்- என்ற யதார்த்த நிலையைத் தனிமையின் இருளில் அவள் யோசித்து உணர்ந்தாள்.

அப்படி ஒருவனைக் கற்பிதமாய்க் கூட அவள் இது வரை வரித்துப் பார்த்ததில்லை. ‘சுயம்வர மண்டபத் துக்குப் போகுமுன்பே, அந்த இராமனை அந்தச் சீதை சந்தித்தாளாமே, அதுபோல் என் ராமனை, எங்கே போய் எவனென்று தேடுவேன்!...அப்படியொருவன் இல்லாத போது ஜாதகமும், பெற்றோரும் உறுதி செய்கிற இவனையே ராமன் என்று எல்லாப் பெண்களும் ஏற்கிற மாதிரி என் மனம் ஏன் ஏற்க மறுக்கிறது? என் மனம் ஏற்காவிட்டால், என்னை ஏந்திச் சுமந்து அபகரித்துச் சென்றாலும் அவன் எப்படி என் இராமன் ஆவான்?”

‘உன்னைச் சொந்தம் கொண்டாடவும், ஒருவனுக்குத் தாரை வார்க்கவும், பின்னொருவன் அபகரித்தோடவும், அடிமை கொள்ளவும்... என்ற ‘ஹே சீதே’ கதையின் வரிகள் நினைவில் ஓடின...

‘அபகரித்தோடுவது வரை நடந்து விட்டது அல்லது [illegible]க்கப் போகிறது என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அவன் என்னை எப்படி அடிமை கொண்டுவிடுவான்? அவன் எப்படி என்னை மாசு படுத்திவிட முடியும்? மானம் கெடுத்து விட முடியும்?’ என்று பலவாறு எண்ணித் திடப்படுத்திக் கொண்டாள். மறுபுறம் புரண்டு படுத்து வேறு விதமாகவும் யோசித்தாள்.

‘நான் என்னைப் பற்றி ரொம்பவும் அதீதமாக உயர் மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறேனோ...அப்பாவும் அம்மாவும்

மட்டும் என்னைத் தாழ்வாகவா மதித்துவிட்டார்கள்? சே, சே...என்னை அவர்களும் ரொம்ப உசத்தியாக நினைத்துத் தான், ரொம்ப உசந்த இடத்தில் என்னைச் சேர்க்கப் பார்க்கிறார்கள். அடடா என்ன உயர்வு? என்ன உசந்த இடம்!...'

திரும்பத் திரும்ப, புரண்டு புரண்டு யோசித்தாலும் ராவணன் புகழை அரக்கியர்கள் பாடினமாதிரி தான் சீதாவின் செவிகளில் சுகுமாரனைப் பற்றிய, இவர்கள் பேசுகிற புகழ்ப் பெருமைகள் ஒலிக்கின்றன...

நாளை பொழுது விடிந்ததும் அப்பா கல்யாண வேலைகளைத் தொடங்கி விடுவார்...

'**நா**ன்தான் சம்மதித்துவிட்டேனே..' என்று வாய் விட்டுத் தூக்கத்தில் சொல்லிக்கொண்டே எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள் சீதா. சித்தப் பிரமையுற்ற வளுடைய கண்கள் போல அவளது விழிகள் வறண்டு வெறித்திருந்தன...ஜன்னல் வழியே வீசித் தரையில் கிடந்த நிலா வெளிச்சத்தைப் பார்த்த போதுதான் அவளது நினைவுகள் விழித்தன. எழுந்து விளக்கைப் பொருத்தி மணி பார்த்தாள். விடிய இன்னும் நேரமிருக்கிறது...

'அப்பாவும் அம்மாவும் மனமொத்து வாழ்கிற மாதிரி நான் அந்தச் சுகுமாரனோடு வாழவா முடியும்?' என்றொரு நினைப்பும், உதடுகளைப் பிதுக்கி ஒரு மறுப்பு மாக வந்து படுக்கையில் உட்கார்ந்தாள் சீதா.

'ஒருவேளை நான் மனம் மாறிவிட்டால்? எல்லாரை யும் போல் முதலில் மறுத்து, பிறகு அப்படியே பதிவிரதா சிரோமணியாகி அவன்பால் மனம் பறிகொடுத்து விட்டால்?...

அத்தகைய நினைப்புக்காக, தனிமையில் தானே தன்னையே நோக்கிக் கலகலத்துச் சிரித்தாள் சீதா: 'அப்படியெல்லாம் நடந்தால் நடக்கட்டுமே!' என்று முனகிக்கொண்டாள். ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்ட

பிறகு இனி இந்தக் கல்யாணத்தைக் குறித்து வருந்தியோ, தனக்கு விருப்பமில்லை என்று வெறுத்தோ, எதுவும் எவரிடத்தும் சொல்லலாகாது என்று உறுதி பூண்டாள். எல்லாப் பெண்களைப் போலவும், அவளது அக்கா மார்களைப் போலவும் இருந்துவிட வேண்டியதுதானே?

அவள் அந்த அறையில் இருந்த புத்தக ஷெல்ஃப் களையும், அவளது நாற்காலி, மேஜையையும், அதன் மீது ஆராய்ச்சிக்காகக் கொணர்ந்து வைத்துள்ள நூல் நிலையப் புத்தக அடுக்கையும் வெறித்துப் பார்த்தவாறு மனத்துள் சொல்லிக் கொண்டாள்:

'படிப்பு, ஆராய்ச்சி, பட்டம் எல்லாத்தையும் இனிமே ஒரு மூலையில் மூட்டை கட்டிப்போட வேண்டியது தான். இந்தமாதிரி ஒரு கல்யாணம் பண்ணிண்டு நான் கல்யாணத்தைப் பத்தி ஆராய்ச்சி பண்றதைவிடக் கருமாந்திரத்தைப் பத்தி ஆராய்ச்சி பண்ணினால் பொருத்தமாயிருக்கும்' என்ற நினைப்பில் பற்களை நற நறவெனக் கடித்தாள்.

'மஞ்சள் பூசிண்டு, மடிசார் கட்டிண்டு, ஒத்தைப் பின்னல் போட்டுண்டு அடக்க ஒடுக்கமா நிக்க வேண்டியதுதான்.... அப்படித்தானே? இல்லே ஸ்கர்ட்டும் ப்ளவுஸும் ஒரு வேளைக்கு, சல்வார் கம்மிஸ், இன்னொரு வேளைக்கு, மடிசார் கட்டு சில விசேஷ சந்தர்ப்பங்களுக் குன்னு ஆத்துக்கார் பிரியம், மாமியார் பிரியம், அடுத்த ஊர்க்காராப் பிரியம்னு நேரத்துக்கு ஒரு வேஷம் கட்டிண்டு ... வேண்டி இருக்குமோ?...

எல்லாப் பெண்களையும் போல, அவள் அக்காமார் களைப்போல ஆவது என்றால் அப்படித்தானே!

எல்லாருக்கும் பொழுது விடிந்தது. சீதா படுக்கையில் ... சார்ந்து அப்பாவும், அம்மாவும் துயிலெழுந்து ...வதைப் பார்த்தாள்.

"என்னடி இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்டே?" என்று ...க்கு வந்து ஒரு முறை விசாரித்துவிட்டுப் போனார்

அப்பா. காலையில் கண் விழிக்கிறபோதே, சுகுமாரனுக்குப் போன் பண்ணித் தமது மகள் அவனோடு தனியாகப் பேச விரும்புவதைச் சொல்லி அவனை வீட்டுக்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணம்தான். 'சுகுமாரன் இந்த நேரத்தில் விழிக்கிற ஆளா, என்ன' என்ற நினைப்புடன் இன்னும் சில மணி நேரங்களுக்காகக் காத்திருந்தார் சுந்தர சர்மா.

'கறிகாய்க் கடைக்குப் போய் வந்த பிறகு போன் பண்ணவேணும்' என்று மனத்துள் குறித்துக் கொண்டார்.

**சா**யங்காலம் நாலு மணிக்குச் சுகுமாரன் வந்தான். அப்பாதான் அழைத்துக்கொண்டு வந்தார். சீதா எப்போதையும்விட எளிமையாக உடுத்திக்கொண்டாள். ஒரு நாகரிகத்துக்காக மலர்ந்த முகத்துடன்-சுகுமாரனை அவளது பெற்றோர் வரவேற்றபோது-தானும் வந்து கூடத்தில் நின்றாள். சுகுமாரன் ஜிலுஜிலு வென்று நறு மணங் கமழ்ந்து பரவ கண்ணைப்பறிக்கும் வெள்ளையில் யூனிபாரம் போன்ற ஸஃபாரியில் ஜொலித்தான். அவனது மேலங்கிப் பொத்தான்களில் 'கழுகு'ச் சின்னம் பளபளத்தது. என்ன அர்த்தமோ? அர்த்தம் பார்த்தா அலங்காரம் பண்ணிக் கொள்ளுகிறார்கள்? அவனது பிரேமில்லாதது போன்ற, கண்ணாடிச்சில்லு மூக்குக் கண்ணாடியின் மறைவில் திருகிச் சுருளும் அவன் பார்வை 'ஹே, சீதே! நானே ராவணன்' என்பதை எவ்வளவு மறைத்தாலும் அவளுக்கு மட்டும் தனிக்குரலில் முழங்குகிறது.

அம்மா உபசரித்ததை மறுக்க முடியாமல் அரைத் தம்ளர் காபி குடித்தார் 'மாப்பிள்ளை!' பாட்டி மெல்ல மெல்ல நகர்ந்து வந்து பூஜையறை வாயிற்படியில் முக்காடிட்ட தலையை நீட்டிக்கொண்டு இருந்தாள். உரித்த நுங்குகள் போன்ற வெள்ளி பிரேம் மூக்குக் கண்ணாடியினூடே அவளது கண்கள் உறுத்து உறுத்து நோக்கின: 'பையன் நன்னாத்தான் இருக்கான்' என்று மகிழ்ந்து கொண்டாள்.

ஆறு மணி ஆகிவிட்டது. அம்மாவும் அப்பாவும் வாசற்படி வரை வந்து வழியனுப்புவதுபோல் நின்றிருந் தார்கள். சீதா சுகுமாரனின் காரில் ஏறினாள். அவளைச் சிறை எடுத்ததே போன்ற மகிழ்ச்சியுடன் காரை ஸ்டார்ட் பண்ணினான் சுகுமாரன்.

"எங்கே போகலாம்?"

"பீச்சுக்கு... என்று சொன்னாள் சீதா.

கடற்கரைச் சாலையில் விளக்குகள் எரிந்தன...

சீதாவின் முன் கருங்கடல் இருண்டு விரிந்து பரந்து எல்லையற்றுக் கிடந்தது...

"என்னிடம் என்ன பேச வேண்டுமாம்?" என்று அவள் தோள் மீது கரம் வைத்தான் சுகுமாரன்.

"என்னைத் தொடாமல் பேசவேண்டும்" என்று மென்மையாய்ச் சொல்லி மிருதுவாக அவனது கரத்தை விலக்கினாள் சீதா.

சுகுமாரன் சிரித்துக் கொண்டே மணலில் சரிந்து உட்கார்ந்தான்.

"உன் அனுமதியில்லாமல் தொட மாட்டேன்" என்று புருஷத்வத்துடன் சொன்னான்;

"உட்காரு" என்றான் சைகையில்!

சீதா மணலில் ஒருபுறம் உட்கார்ந்தாள்.

"நீதான் சம்மதிச்சுட்டேன்னு உங்க அப்பா சொன்னாரே..."

"ஆமாம், நான் சம்மதிச்சுட்டேன்...அதனாலேதான் என்னை நீங்கள் கௌரவமா நடத்தணும்னு எதிர் பார்க்கிறேன்..."

"ஷ்யூர் ஷ்யூர்" என்று சொல்லிக்கொண்டே சிகரட்டைக் கொளுத்துவதற்காக 'லைட்ட'ருடன் மறுபுறம் திரும்பிக் காற்றுக்கு மறைவாய்க் கொளுத்திக் கொண்டு மறுபுறம் திரும்பிப் புகை ஊதினான் சுகுமாரன்!

*"நீங்க என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணிக் கணும்னு நினைச்சேள்...என்னை?" என்று 'என்னை'யில் அழுத்தம் கொடுத்துக் கேட்டாள். அவன், இருளில் ஒளி வீசுகிற அவள் முகத்தையே சற்று நேரம் பார்த்திருந்தபின்,*

*"உன் அழகுக்கு, அறிவுக்கு-என்னுடைய அந்தஸ் துக்கு ஏற்ற மனைவி நீதான்னு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நானே ஆசைப்பட்டேன். உனக்கும் ஆசை தானே?" என்றான்.*

## 13

செவிகளைத் தளிர்க்கையாலே
சிக்குறச் சேமம் செய்தாள்...
கவினும் வெஞ்சிலைக் கைவென்றிக்
காகுத்தன் கற்பினேனைப்

புவியிடை ஒழுக்கம் நோக்காய்,
பொங்குளரி புனிதர் ஈயும்
அவியினை நாய் வேட்டதென்ன,
என்சொனாய் அரக்க?...

*என்று ஆரண்ய காண்டத்தில், ராவணனிடம் சீதை. சினந்து மொழிந்த வாசகங்கள், முன் ஜன்ம நிகழ்ச்சி போல் அவள் நெஞ்சில் விம்மி அமிழ்ந்தன.*

*"ம்...உனக்கும் ஆசைதானே?" என்று மோகப் பரவசத்துடன் அவன் கேட்டது அவள் செவிகளில் அருவருப்புடன் ஒலித்தது. "ஆசைதானே?" என்ற சொற்கள் சீதாவின் செவிகளைச் சுட்டன.*

*குனிந்திருந்த முகத்தில் இமைகள் மட்டும் மேலேறி-திரையை விலக்கிப் பார்ப்பதுபோல்-அவனை அவள் பார்த்தாள். ஈனத்தனமான தசைத் தாபம் எரிந்து உருகி*

ஒழுகி வழிவது போன்ற இச்சைப் பார்வையுடன், இளித்த பற்கள் நிலாவில் மின்ன, ஏக்கம் காந்துகிற பெருமூச்சுடன் "ஆசைதானே?..." என்ற சொற்களுடன் தன்னை நெருக்கம் கொள்ளும் அந்த முகத்தைப் பார்த்தபோது அவளுக்கு, நேற்று மாதிரியே திடீரென நிலாவொளி இருண்டது...

"ஹே! ராவணா..." என்று அவள் உள்ளே ஓர் அலறல் எதிரொலித்ததே போல் அதிர்ந்தது.

"ஆசையா? எனக்கு யார் மீதும் எதன் மீதும் ஆசை யில்லை! ஆசை நல்லதுமில்லை..." என்று இருளில் வெறித்த விழிகளுடன் இவள் உபதேசிப்பதைக் கண்டு அவன் உரத்த குரலில் நகைத்தான்.

"ம்...ம்...எனக்குத் தெரியும்" என்று முனகியவாறு தோள்களைக் குலுக்கிக் கொண்டான். அவன் கண்கள் அவள் மீது இரண்டு அம்புகள் குத்தி ஊடுருவியதேபோல் இருந்தன.

"என்னை அப்படிப் பார்க்காதே!" என்று அலறலாம் போலிருந்தது சீதாவுக்கு. 'நான் பார்த்தால்தானே இவன் பார்வை தெரியப் போகிறது' என்ற நினைவோடு வேறு புறம் திரும்பி நிலாவைப் பார்த்தவாறே வாய் விட்டுச் சொன்னாள்: "விதியே! கொடியாய், விளையாடுதியோ?"

"ம்...ம்...என்ன சொன்னே?" என்று புரியாமல் .அவளைக் கேட்டான் சுகுமாரன்.

'ஓ! நான் முனகினது இவனுக்குக் கேட்டு விட்டதோ' என்ற விழிப்புடன் சிரித்தாள் சீதா: "ஏதோ வகுப்பறை ஞாபகம்...உங்களுக்கு இலக்கியத்தில் ஈடுபாடு உண்டோ?..." என்று அவனிடம் சம்பந்தமில்லாமல் கேட்டு மழுப்பினாள்.

"எதிலேயும் எனக்கு சீரியஸ் இன்வால்வ்மெண்ட் கிடையாது உன்னைப் பார்க்கிறவரைக்கும்...அன்னிக்கு நான் உங்காத்துக்கு வந்தேனே...கொஞ்சம் 'டிப்ஸி'யாத் தான் இருந்தேன்...உன்னைப் பார்த்தவுடனே, சும்மா ஒரு

*ஃபிளாஷ் அடிச்ச மாதிரி எல்லாம் தெளிஞ்சுடுத்து...ஓ! மைகாட், சுந்தர் ஸாருக்கு இப்பிடியொரு...ம்....ம்...என்ன சொல்றது...'' என்று தன்னை மறந்தலாகிரியில் உளறினான்...*

*“நீ எப்படியிருந்தே தெரியுமா?...பாதித் தூக்க மயக்கத்தில் நீ பார்த்த ஒரு பார்வை...அப்புறம் அந்த ரெஃப்ரிஜிரேட்டர் கிட்ட குனிஞ்சு, அப்படியே திரும்பி நின்னயே! குமாரி சுந்தரி எழுதற கதையும், அதுக்கு அந்தப் ‘பெ...’ போடற படமும் அப்பிடியே என் கண் முன்னாலே வந்து நின்னமாதிரி தெரிஞ்சுது...அதனாலே தான் ‘நீதான் குமாரி சுந்தரி’யோன்னு...”*

*–“நன்னா வழிஞ்சேளே!... என்று அவனைப் பரிகசித்தாள். எனினும் அவன் தன்னைப் பார்த்ததை, பேசியதை எண்ணி மறுபடியும் நாக்கைக் கடித்து நாணிச் சாம்பினாள் சீதா.*

*“சீதா!...உன்னையே, முதல்லெ நான் கல்யாணம் பண்ணிண்டிருந்தால்?...எவ்வளவு நன்னாயிருந்திருக்கும். இப்பகூட, கல்யாணத்துக்கப்பறம் குடிக்கறதை விட்டுடணும்னு அம்மா சத்தியம் வாங்கியிருக்கா...ஒரு குடிகாரனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறமேன்னு உனக்கு இருக்குமோன்னோ! எந்தக்குறையும் இல்லாமல் உன்னை ராணி மாதிரி வெச்சுண்டுடணுமாம்-அம்மா சொல்றா. மாட்டுப் பொண்ணுக்குன்னு ஒரு நகைக் கடையையே வச்சு பூதம் புதையல் காக்கிற மாதிரி காத்துண்டு இருக்கா...சீதா, நீ என்னோட சீதாவா ஆகறதிலே உனக்கு சந்தோஷம் தானே? ம்...ம்...*

*“ஸ்!” என்று சிறிதே விலகினாள் சீதா. ‘இவனது குடும்பப் பெருமைகளையும், செல்வச் செருக்குகளையும் அவள் மயங்கி வாய் பிளந்து கேட்டு இவனை இஷ்டபூர்வமாய், நாயகனாய் வரித்துக் கொள்ளுவாள்’ என்று எண்ணுகிற அவனது கீழ்மை அவளை அருவருத்து உடல் சிலிர்க்கச் செய்தது.*

*"நகை நட்டுகளும் பட்டுப்புடவைகளும், பணமும் காசும்தானா வாழ்க்கையில் ரொம்ப முக்கியம்?"* என்று அவனைப் பார்க்காமலே பேசினாள். அப்போது சீதா மனத்துள் நினைத்துக் கொண்டாள்: *'இது ரொம்ப சௌகரியமான வழி...முகம் கொடுக்காமல் பேசுவதே இவனிடம் இனி கடைப்பிடிக்க வேண்டிய முறை!'*

*"நகையும், பட்டுப் புடவையும் வாழ்க்கைக்கு முக்கியமோ இல்லையோ, எனக்குத் தெரியாது; ஆனால் பணம்தான் வாழ்க்கையில் ரொம்ப ரொம்ப ரொம்ப முக்கியம். வெல்த் இல்லேன்னா ஹெல்த் கூடப்போயிடும். அழகு, நாகரிகம், சந்தோஷம் எல்லாத்துக்கும் பணம்தான் ரொம்ப முக்கியம். கடவுள் அருளாலே நமக்கு அதிலே ஒரு குறையும் இல்லை. கடவுள் அருள்னு கையைக் கட்டிக்கிட்டு இருந்தால் முடியுமா? என்ன போட்டி, என்ன சூது! எவன் எவனுக்கோ கொட்டி அழுது எப்படி எப்படியெல்லாம் பாடுபட்டு ஒரு இன்ஸ்டிட்யூஷனை உருவாக்க வேண்டியிருக்கு! கொஞ்சம் தலையெடுத்த வுடனே, அங்கங்கேயும் ஒரு சிவப்புக் கொடியைக் கட்டிண்டு, போராட்டம், ஸ்டிரைக், கலவரம்னு ஆரம்பிச் சுடறா. இன்னிக்கு நாலு மணி வரைக்கும் ஒரு டிரிபியூனல் மீட்டிங்லே இருந்துட்டு வரேன்... ஒண்ணும் தீர்வாகலே... நாளைக்கும் அந்த இழவு இருக்கு... அது போகட்டும்! அந்த டென்ஷனைத்தான் 'விமன் அண்ட் வய்ன்லே' நான் ரிலாக்ஸ் பண்ணிண்டுடறேன். உன்னை மாதிரி ஒரு 'க்வீன்' கெடச்சால் அப்புறம் எதுக்கு வய்ன்?...அதைத் தியாகம் பண்றேன்-உனக்காக!"* என்று அவன் மறுபடியும் தனது அரிய பண்பை அவள் நன்கு உணரும் பொருட்டு அழுத்தம் தந்து சொன்னான்.

*'ஹோ!'* வென்று தன் பொருட்டு அலறும் சமுத்திர ஓசையில் லயமாகி இருந்தாள் சீதா. அவளிடம் அவன் சொன்னதையெல்லாம் அவள் கிரகிக்காமல் இல்லை.

அதையெல்லாம் தெரிந்துகொள்ளத்தானே அவனோடு இங்கே வந்திருக்கிறாள்...

“எனக்காக நீங்க எதையும் தியாகம் செய்யவேண் டாம்” என்றவாறு திரும்பி அவன் முகத்தை நேர்கொண்ட பார்வையுடன் தொடர்ந்து சொன்னாள்: “என்னாலும் உங்களுக்காக எதையும் தியாகம் செய்ய முடியாது...”

அவள் பேசுவது புரியாததுபோல் புருவங்களை உயர்த்தி அவளைப் பார்த்தான் சுகுமாரன். அப்போது அவனது மூக்குக் கண்ணாடிச் சில்லுகளில் இரண்டு நிலாக்கள் தெரிந்து சுடர் தெறித்தன...அவள் முன்பு போலவே வேறுபுறம் முகம் திரும்பிக்கொண்டாள்.

“ஸீ–தா... டார்லிங்” என்று ஆரம்பித்து அவளை அவன் ஆங்கிலத்தில் கொஞ்சினான். அவன் பேசியதை யெல்லாம் தமிழில் மொழியாக்கம் செய்து மனத்தில் பதித்துக் கொள்கிற பொறுமையுடன் அவள் அதைக் கவனித்த போதிலும் முகம் கொடுக்காதவளாகவே எங்கோ பார்த்தவாறிருந்தாள். மேலும் ஆங்கிலத்தில் இவன் தன்னிடம் பேசுவது அவளுக்கு உள்ளூர வெறுப்பையும் நகைப்பையும் ஏற்படுத்திற்று. உதடுகளை அழுந்த மடித்துச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள். எனக்குச் சிரிக்கவும் முடிகிறதே என்று சுய–இரக்கத்துடன் நினைத்து ‘ம்ஹ்ம்’ என்று தோளைக் குலுக்கிக் கொண்டாள். அவன் அவள் காலில் விழாத குறையாக– ஆரம்பித்து ஒரு பிச்சைக்காரன் மாதிரி அவளிடம் ஆசைப் பிச்சை யாசித்துக் கெஞ்சிக் கொண்டிருந்தான். இறுதியில் அவன் சீதாவிடம் கேட்டான்.

“என்னை நீ வெறுக்கிறாயா?...”

“உங்கள் வர்க்கத்தையே நான் வெறுக்கிறேன்... என்று மறுபடியும் அவன்பால் திரும்பி அமைதியாகச் சொன்னாள் சீதா.

“வாட் டூ யூ மீன்? ஆண் வர்க்கத்தையா?”

"நோ, நோ. பணக்கார வர்க்கத்தை!"

ஏதோ ஹாஸ்யம் கேட்டவன் போல் கடற்கரை மணலில் மல்லாந்து விழுந்து பெருங்குரலில் சிரித்தான் சுகுமாரன்.

"நீ என்ன, ஒரு கம்யூனிஸ்ட்?..."

"ம்..." என்று யோசித்து "நக்ஸ்லைட்!" என்றாள் சீதா.

"ஓ! தட் இஸ் நைஸ்! எனக்கு அவாளை ரொம்பப் பிடிக்கும். அதான் கரெக்ட்! திஸ் ஆர் தட்! ஒண்ணு நீ இருக்கணும், இல்லே நான் இருக்கணும்! வா, பாத்துடுவோம்...என்ன இருந்தாலும் வீரன்கள்..அப்பிடி கொம்பு சீவி விட்டாத்தான் முளையிலேயே கிள்ளி எறியலாம்...ஒரு கேப்பிட்டலிஸ்ட் புருஷனுக்கு ஒரு நக்ஸ்லைட் மனைவி-அந்த கான்ட்ராஸ்ட்லே இருக்கிற ஸிமிலாரிட்டி உனக்குப் புரியறதோ?" என்று ஓர் இன்ட்டலக்சுவல் ஹோதாவில் அவளைப் புகழ்ந்தான் சுகுமாரன். ஏதோ 'கம்யூனிஸ்டு' 'நக்ஸலைட்டு' என்று வார்த்தைகளைத் தெரிந்து வைத்துக்கொண்டு சொன்ன தல்லாமல் இவளுக்கு அது பற்றியெல்லாம் ஒரு மண்ணும் தெரியாது என்று புரிந்து கொண்டவனாக, "நீ என்ன பிரிவு மாணவி?" என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

"தமிழ் இலக்கியம்" என்று தமிழில் சொன்னாள்.

"அரசியல் ஈடுபாடு!..."

"இனிமேல் ஈடுபாடு கொள்ளலாமா என்று யோசிக்கிறேன்...

"சபாஷ்...என்னாலான உதவிகளைச் செய்ய நான் காத்திருக்கிறேன். நீ தேர்தலில் நிற்கலாம்-மந்திரி கூட ஆகலாம்... உனக்கு எந்தக் கட்சியின் கொள்கையில் நாட்டம்?"

"ஏன், அது ரொம்ப முக்கியமோ? எந்தக் கட்சியில் சேர்ந்தால் மந்திரியாகலாமோ, அந்தக் கட்சியில் சேர வேண்டியதுதானே!" என்றாள் சீதா. அவளது பேச்சு

வன்மைக்காக மறுபடியும் ஒரு ‘சபாஷ்’ போட்டான் சுகுமாரன்.

“உனக்குப் படிப்பிலேதான் ரொம்ப இன்ட்ரஸ்ட்னு சொல்லுவார் உங்கப்பா. நீ எவ்வளவு வேணுமானாலும் உன் படிப்புக்காகச் செலவழிக்கலாம். எந்த தேசத்திலே வேணுமானாலும் போய்ப் படிக்கலாம்...நான் ஒண்ணும் மடிசஞ்சித் தனமா நடந்துண்டுட மாட்டேன். முக்கியமா என் அந்தஸ்துக்கு ஏத்த மனைவி வேணும்ங்கறதுதான்... எவ்வளவோ பெண்கள் இருக்கா; நேராவே என்னை அப்ரோச் பண்ணியிருக்கா... பேரன்ட்ஸ் மூலமாகவும் அப்ரோச் பண்ணிண்டிருக்கா...எனக்கு அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்னு இருந்தவன் நான்–உங்கப்பா உன்னைப் பத்திப் புகழ்ந்து பேசிண்டிருப்பார்–அப்பல் லாம் கூட நேக்கு அந்த அளவு ஒண்ணும் தீர்மானமாகலே. ஆனா அன்னிக்கு உன்னைப் பார்த்தவுடனே...

‘–அந்த ராத்திரி, பாதித் தூக்க மயக்கம், ரெஃப்ரிஜி ரேட்டர் வெளிச்சம், அவள் குனிந்து நின்ற நிலை... குமாரி சுந்தரியின் கதை... ‘பெ...’யின் கவர்ச்சிப்படம்...

‘அடடா! என்ன ரசிகசிரோமணி’ என்று அவனறியாமல் தன் தலையிலடித்துக்கொண்டாள் சீதா.

“நீங்க முதல்லே அப்பாவை எங்கே, எப்போ சந்திச்சேள்?”

“ரொம்ப தர்ம சங்கடமான கேள்வி” என்று ஆங்கிலத்தில் சொல்லித் தயக்கத்துடன் சிரித்தான் சுகுமாரன்.

“ஓர் இரவு விடுதியில் மதுவும் மங்கையரும் நிறைந்த சூழலில் நான் அவரைச் சந்தித்தேன்” என்றான். “உங்கப்பாவுக்கு நகரத்தின் எல்லா மூலைகளிலும்– இருண்ட மூலைகளிலும் கூட–நண்பர்கள் ஏராளமாய் உண்டு.”

‘இதைப் போய்க் கேட்டிருக்க வேண்டாமே’ என்று நினைத்து உதட்டைக் கடித்துக்கொண்டாள் சீதா.

"இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கலேன்னா என்ன பண்ணுவேளாம்?"

"உனக்குப் பைத்தியம்னு நினைச்சுண்டு, கல்யாணம் முடிஞ்சதும் டிரீட்மென்ட் குடுப்பேன்-அப்புறம் நீ சம்மதிச்சுடுவே..."

"நான் சீரியஸாகவே கேட்கிறேன்"

"கேள். நானும் சீரியஸாவே சொல்றேன். நான் உன்னை ஏற்கெனவே வாங்கியாச்சு! இந்தக் கல்யாணத் துக்குச் சம்மதிச்சு, சந்தோஷமா இருக்கறதுக்கு உன் மனசைப் பக்குவப்படுத்திக் கொள்" என்று கண்டிப்பான குரலில் சொன்னான் சுகுமாரன்: "அவனவனும் இந்தக் காலத்திலே பொண்ணைப் பெத்துட்டு, வரதட்சிணையும் வெச்சுண்டு அலையறான்கள். நான் உன்னை நாலு லட்ச ரூபாய் குடுத்து வாங்கியிருக்கேனாக்கும்! 'வரதட்சிணை யெல்லாம் ஒண்ணும் வேண்டாம். அறிவும் அழகும் உள்ள ஓர் ஏழைப் பிராமணப் பொண்ணா இருந்தால் அவாளுக்குப் பணம் தந்து பெண் எடுத்துண்டுடத் தயாராயிருக்கேன்'னு ஒருநாள் சொல்லிண்டிருந்தேன்...

'ஸார்-நானும் ஏழைப் பிராமணன்தான்-எனக்கும் ஒரு பொண் இருக்காள்' என்று முழங்கையைச் சொறிஞ்சுண்டு உங்கப்பா சொல்லலேன்னா... இந்தப் பொக்கிஷம் எவனுக்கோன்னா பறிபோயிருக்கும்!" என்று அந்த நிகழ்ச்சியை, சுந்தரசர்மாவின் வேண்டுகோளை நினைத்துக்கொண்டு சொன்னான் சுகுமாரன்.

எட்டரை மணிக்கு சீதாவும் சுகுமாரனும் கடற்கரையிலிருந்து திரும்பினர். மைலாப்பூர் பக்கத்தில் திரும்பாமல் வேறுபுறம் அவன் காரைத் திருப்புவது கண்டு சீதா பதறிப் போனாள்.

"எங்கே போறேள்?"

சுகுமாரன் ஸ்டியரிங்கின்மேல் குனிந்துகொண்டு ஓரக் கண்களால் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"நம்மாத்துக்குப் போயிட்டு உன்னை உங்காத்திலே டிராப் பண்றேன். நான்தான் சொல்லியிருக்கேனே-உன் அனுமதியில்லாமல் உன்னை நான் தொடமாட்டேன்'னு!" என்று ஓர் கனவானின் தோரணையில் மிடுக்குடன் சொன்னான்.

சீதாவுக்கு அந்த வார்த்தைகள் மனத்துக்கு இதமும், மண-வாழ்க்கையில் போராடுவதற்கும் ஒரு நம்பிக்கையை யும் தந்தன.

## 14

ருஷ்ய மொழிப் பயிற்சி வகுப்பு முடிந்தபின் காத்ரீனாவும் மரியமும் அந்த ஏர்-கண்டிஷன்ட் அறையின் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்து சென்னையின் கோடை வெப்பத்தை அனுபவித்தனர். காத்ரீனா, மரியத்துக்கு விடை தந்துவிட்டு, உள்ளே தலையை இழுத்துக் கொள்ள நினைத்தவள், தனக்கு வந்த தபால்களில் மேலாகத் தெரிந்த அந்தப் பெரிய அளவு கல்யாணப் பத்திரிகையைக் கடிதப் பெட்டியிலிருந்து எடுத்துப் பார்த்தாள்.

"மரியம்..இதைப் பார்த்தீங்களா?" என்று கண் சிமிட்டலுடன் "உள்ளே வாங்க...இதுபற்றி நாம் பேச வேண்டும்... என்று கொஞ்சுதமிழில் அவளைக் கூப்பிட்ட வாறு உள்ளே திரும்பினாள் காத்ரீனா.

மகிழ்ச்சியினாலோ, சீதாவை நினைத்துப் பரிகசித்தோ சிரிப்பது போல் சற்று நேரம் இடைவிடாது சிரித்தாள் அந்த சோவியத் பெண்.

இருவரும் சற்று முன்பு படிப்பதற்காக உட்கார்ந் திருந்த இடத்திற்கே மீண்டும் வந்து அமர்ந்து கொண்டனர்.

"சீதா-எ டிபிகல் இண்டியன் கேர்ள்!" என்று ஆங்கிலத்தில் சொன்னாள் காத்ரீனா. மாரியம்மாள் அந்த வர்ண அலங்கார சோபிதம் கொண்ட 'டம்பத்' தனமான திருமண அழைப்பிதழைப் பெரிதாய் விரித்துப் பிரித்துப் படித்துப் பார்த்தாள். தனக்கும் விடுதி விலாசத்துக்கு இது போல் ஓர் அழைப்பிதழ் வந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

காத்ரீனா மறுபடியும் மணிகள் குலுங்குவதுபோல் சிரித்தாள். அவள் சிரிப்பதற்கான காரணம் மரியத்துக்குப் புரிந்தது.

அன்றைக்கு, சீதாவைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்றும், அதை அவள் தவிர்க்க விரும்புவதாகவும் இதே இடத்தில் உட்கார்ந்து சீதா சொன்னதையும், அதைத் தொடர்ந்து அன்று இரவு அவளுடன் மரியம் வீடு திரும்பு கிறபோதும், கபாலி கோயிலுக்குச் சென்றபோதும், பின்னர் அவள் வீட்டில் தானும் தங்கி இருந்தபோதும், இரவெல்லாம், இந்தக் கல்யாணத்தை மறுத்து, அவள் வீட்டை விட்டே வெளியேறிவிடப் போவதாகவும் கூறியதையெல்லாம் மாரியம்மாள் நினைத்துப் பார்த்தாள். ஆயினும் அதற்காக அவளுக்குச் சிரிப்பு வரவில்லை. ஐயோ பாவம், சீதாவுக்கு என்ன நேர்ந்தது? அவளே விரும்பிச் சம்மதம் தெரிவித்து விட்டாளோ?-அப்படி யானால் இது அவளது சிநேகிதிகள் பார்த்துப் பரிகாசம் செய்து சிரிக்க வேண்டிய ஒரு விஷயம் மட்டும்தானா? என்று எண்ணியபோதிலும், தானும் காத்ரீனாவுடன் சேர்ந்து நயமாகச் சிரித்தாள் மரியம்.

"என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் சீதாவைப் பார்த்து இரண்டு வாரங்கள் ஆச்சு...இன்னிக்குப் போய்ப் பார்த்துவிட்டு வரணும்" என்றாள் மரியம்.

காத்ரீனா மறுபடியும் அந்த அழைப்பிதழைப் பார்த்து "மரீயம்" என்று கிறீச்சிட்டுக் கூப்பிட்டாள்: "ஓ! இந்தத் தேதியில் நான் இங்கிருக்க மாட்டேனே... என்று அவள் தன் தாய்நாடு திரும்ப வேண்டிய அந்த மகிழ்ச்சி கரமான நாளை நினைத்து வருத்தப்பட்டாள். இந்த வாரத் துடன் காத்ரீனா இங்கு வந்து தங்கியிருந்து படிப்பதற்கான 'காலக்கெடு' முடிவடைகிறது. பிறகு இவள் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள, முற்றிலும் மாறு பட்ட இன்னொரு உலகப்பிரஜையாக மாறி விடுவாள் என்று நினைத்த மாத்திரத்தில் மாரியம்மாளின் கண்கள் பளபளத்தன. இந்த பத்து மாத காலத்தில் அவளுக்கு இந்த வெளிநாட்டுப் பெண்ணுடன் ஏற்பட்டுவிட்ட நெருக்கத் தால், இவளை என்றேனும் ஒருநாள் பிரிய வேண்டியிருக் கும் என்று தெரிந்த விஷயமே ஒருவகைப் பிரிவுத் துயருக்கு மாரியம்மாளை ஆட்படுத்தியது. இந்த உணர்வு அவளுக்கே வியப்பளித்தது.

"ஓ! நீங்கள் உங்கள் நாட்டுக்குப் போய்விடுவீர்கள்... இல்லையா?" என்று புதிதாகக் கேட்டாள் மரியம்.

காத்ரீனா அந்த நாளை எண்ணிய மகிழ்ச்சியுடன் இமைகளை ஒருமுறை அழுந்த மூடித் திறந்து 'ஆம்' என்றாள் ஒரு புன்னகையுடன்.

"மறுமுறை எப்போது வருவீர்கள்?" என்று ஏங்கிய பார்வையுடன் கேட்டாள் மரியம்.

"தெரியாது" என்று குழந்தை போல் தலையாட்டி னாள் காத்ரீனா. "மிஸ் மரியம், நீங்கள் வரவேண்டும் எங்கள் நாட்டுக்கு; வருவீர்கள் என்று நம்புகிறேன்..." என்று உற்சாகமாய் அழைத்தாள்.

அந்த உபசார வார்த்தைகளுக்காக நன்றி கூறினாள் மாரியம்மாள்.

"நான் எங்கள் நாட்டுக்குத் திரும்புவது குறித்து ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தேன்...இப்போது அதில்

கொஞ்சம் வருத்தம் கலந்துவிட்டதே!" என்று சீதாவின் திருமண அழைப்பிதழை இரண்டு கைகளிலும் ஏந்திப் பிடித்தவாறு சொன்னாள் காத்ரீனா: "சீதாவின் திருமண விழாவைப் பார்க்க முடியாதே! பாருங்கள், இதுமாதிரி தான் சில சமயங்களில், இரண்டு சந்தோஷங்கள் ஒரே சமயத்தில் ஏற்பட்டு, ஒன்று கொஞ்சம் வருத்தமாகக்கூட ஆகிவிடுகிறது!... என்றுகூறி ஒரு பெருமூச்சுடன் சிரித்த வாறே மரியத்தைப் பார்த்தாள்.

"உங்கள் திருமணங்கள்-சடங்குகள் எல்லாம் ரொம்ப ரசமாக இருக்கும் இல்லையா?" என்று மாரியம்மாளிடம் கேட்டாள் காத்ரீனா.

"அதிலும் பிராமணர்களின் திருமணச் சடங்குகள் எங்களுக்கே ரசமாக இருக்கும்...ஆனால் எனக்கு சீதாவின் மனம் நன்றாகத் தெரியும். அவளுக்கு இதில் துளியும் சந்தோஷம் இல்லை. பாவம், என்ன மாதிரி வருத்தப்படு கிறாளோ? நான் அவளைப் பார்க்க வேண்டுமே!' என்று பலவாறு சீதாவின் சோகத்தைக் கற்பனை செய்து கொண்ட மாரியம்மாள் பரபரத்தாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் மரியம்? சீதாவுக்குச் சந்தோஷமில்லாமலா இந்த அழைப்பிதழ் வந்திருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் காத்ரீனா.

'ஆம், என்று தலையாட்டிய மரியம் "இதுதான் எங்கள் பெண்களின் நிலை" என்று பெருமூச்செறிந்தாள்.

"சரி. திருமணத்துக்கு முன்னால் சீதாவை நாம் ஒரு முறை சந்திக்க வேண்டும்" என்றாள் காத்ரீனா.

"சீதாவுக்குச் சில பரிசுப் பொருட்கள் தரவேண்டும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் காத்ரீனா. உண்மையில் அவளுக்கு மாரியம்மாளின் உணர்ச்சிகளும், இந்த தேசத்துப் பெண்களின் நிலைமையும் ஆழமாக ஏதும் புரியவில்லை. பொதுவாக சமத்துவமில்லாத சமூகப் பெண்களின் நிலைமைகளை அவள் ஏட்டளவில்தான் அறிந்திருந்தாள்.

"திருமதி காத்ரீனா, நீங்கள் ஒரு பெண்ணாகப் பிறந்து இருப்பதைக் குறித்து, மகிழ்ச்சி அடைகிறீர்களா?" என்று திடீரெனக் கேட்டாள் மாரியம்மாள்.

இந்தக் கேள்விக்கு இவள் ஏன் இவ்வளவு ஆச்சரியத் துடன் இமைகள் விரிய, பெரிதாய் விழித்துப் பார்க்கிறாள் என்று புரியவில்லை மரியத்துக்கு.

"மிஸ் மரியம். இன்று காலையில், ஒரு சோவியத் பத்திரிகையில், இப்படியொரு கேள்விக்குப் பல தரப்பட்ட சோவியத் பெண்கள் பதில் தந்திருக்கும் ஒரு சிறப்புப் பகுதியை நான் படித்தேன்-அதே கேள்வியை நீங்கள் கேட்பது எனக்கு வியப்பாய் இருக்கிறது" என்று நிதானமாய் ஒவ்வொரு வார்த்தையையும் உச்சரித்துச் சொன்னாள் காத்ரீனா. அதற்கு மேல் தொடர்ந்து தமிழில் பேசுவது அவளுக்குச் சிரமமாயிருந்தது. `please allow me to explain in English' என்று ஆங்கிலத்தில் பேச அனுமதி கேட்டுக் கொண்டாள். ஒரு சிகரெட்டைப்பற்ற வைத்துக் கொண்ட பின் ஆங்கிலத்தில் சொன்னாள் காத்ரீனா.

"ஓர் உயிருக்கு வாழ்க்கை இன்பமானதா, துன்ப மானதா? இது அந்த உயிர் சம்பந்தப்பட்ட கேள்வி மட்டுமா என்ன? உயிரும் உலகமும்-அதாவது புற நிலைமைகள் சம்பந்தப்பட்டதும் ஆகும் அல்லவா? அப்படியானால் மனிதனின் இன்பமும் துன்பமும் அவனது சமூக வாழ்க்கை சம்பந்தப்பட்டது...இன்று காலையில் நான் அந்த சோவியத் சஞ்சிகையில் அந்தக் கேள்வியைப் படித்தவுடன், 'எனக்கே அதைப் பிர யோகித்துப் பார்த்துக் கொண்டு யோசித்தேன்... கேள்வி, சோவியத் பெண்கள் குறித்ததாயிற்றே! நானும் கூட ஒரு சோவியத் பெண் அல்லவா?" என்று ஆங்கிலத்தில் சொல்லியவாறே, ஒரு ஃபைலிலிருந்து டைப் செய்யப்பட்ட ஒரு காகிதத்தை எடுத்து மாரியம்மாளிடம் தந்தாள் காத்ரீனா:

"என்னிடம் ஒரு ருஷ்ய டைப்ரைட்டிங் மெஷின் இல்லை. அதனால் தான் ஆங்கிலத்திலேயே எழுதினேன்" என்று, தங்கள் இருவருக்கும் தாய்மொழியல்லாத ஒரு மொழியில் எழுதியிருப்பதற்காகச் சமாதானம் கூறினாள்; மாரியம்மாளிடம் தந்து அதை உரத்துப் படிக்கச் சொன்னாள்: "என்னுடைய ஆங்கில உச்சரிப்பை விட உங்கள் உச்சரிப்பு நன்றாக இருக்கும்!" என்று மாரியம்மாளைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினாள் காத்ரீனா.

மாரியம்மாள் தனது இனிமையான குரலில் மிகுந்த கவனத்துடன் வார்த்தைகளை உச்சரித்து ஒரு மாணவி போல் அதைப் படித்தாள்:

"ஒரு பெண்ணாகப் பிறந்ததற்கு நீ மகிழ்ச்சி அடைகிறாயா?-என்ற இந்தக் கேள்வியை என் தாய் அல்லது பாட்டியிடம் கேட்டிருப்போமானால் அவள் சொல்லி இருக்கக் கூடிய அந்தப் பதில் நமது இதயத்தைப் பிளந்து தள்ளும் தன்மையதாயிருந்திருக்கும்! அதற்கொப்பான, அல்லது அதனினும் கொடியதாய் நமது இதயங்களைச் சின்னாபின்னமாகப் பிளந்தெறியும் தன்மையுடைய ஒரு பதிலைத்தான் தற்காலத்திலும் சமத்துவமில்லாத நாடுகளில் வாழும் பெண்கள் சொல்லுவர்-ஆத்மாவும் உணர்வும் படைத்தவர்களாக இருப்பின்!

"ஒரு சோவியத் பெண்ணான நான் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ்கிற ஒரு புதிய சமூகப் பிரஜை என்பதால், ஆண்களை விடவும் சில சிறப்பான பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுகிறோம். சமூகத்தில் பெண்ணாகப் பிறந்தது குறித்து யோசித்தால் மிக மிக மகிழ்ச்சியாகவே உணர்கிறேன். ஆனால்-சமத்துவமற்ற பிற சமூகங்களில் வாழும் தற்காலப் பெண் மக்களின் நிலையை எண்ணினால் எனது இந்த மகிழ்ச்சி பூரணமற்றதாகி விடுகிறது. இந்திய இதிகாச நாயகி சீதை மிகவும் இனியவள். அமிர்த கலசத்துடன் பிறந்தவள். மகிழ்ச்சியின் வடிவேயான இலக்குமி அவள். அந்த சீதை அசோகவனத்தில் தன் உயிரைத் தரிக்க

விரும்பாமல் தற்கொலை செய்து கொள்ளும் எல்லைக்கே போய் விடுகிறாள்! உலகத்தில் பெண்களின் நிலை-அசோகவனத்துச் சீதைகளின் நிலைமையாக இருக்கும் வரை சோவியத் பெண்ணான நான் கொள்ளுகிற எனது மகிழ்ச்சி அடிக்கடி பூரணமற்றதாகி விடுகிறது...”

“இவ்வளவுதானா? இதில் இன்னும் கூட நீங்கள் என்னவோ எழுத வேண்டும்-குறையாக இருப்பது போல் எனக்குப் படுகிறதே” என்றாள் மரியம்.

“சும்மா-எனக்குத் தோன்றியதை எழுதி வைத்தேன்... நான் இதை ஒன்றும் பிரசுரிக்கப் போவதில்லை” என்று அந்த ஃபைலை வாங்கி மூடி வைத்தாள் காத்ரீனா.

“இன்றைக்கு நீங்க சீதாவைப் பார்ப்பீர்களா?”

“பார்ப்பேன்... என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் மரியம்.

“பார்த்தால் சொல்லுங்கள் நாளையோ, மறுதினமோ சீதாவை, அவர்கள் குடும்பத்தை-அவர்கள் வீட்டிற்கு வந்து சந்திக்க விரும்புகிறோம் என்று சொல்லுங்கள்” என்று மாரியம்மாளிடம் கேட்டுக் கொண்டாள் காத்ரீனா.

மாரியம்மாள் விடை பெற்றுக் கொண்டு எழுந்தாள். காத்ரீனா, மரியம் வெளியில் போவதற்காக அறையின் கதவைத் திறந்தாள். ஏர்கண்டிஷன் அறைக்குள் வெளியிலிருந்து உஷ்ணம் வீசிற்று. இந்த மண்ணின் கோடை வெப்பம் பொறுக்காமல் சீக்கிரமே கதவை மூடிக்கொள்ள விரும்பினாள் காத்ரீனா. மரியம் கையசைத்தாள்...

## 15

நேரிலும் தொலைபேசி மூலமும் பாராட்டு மொழிகளும், வாழ்த்துக்களும், ஆசிகளும் சுந்தரராம சர்மாவின் மேல் சொரிந்து பொழிந்து கொண்டிருந்தன...

சந்திப்பவர்களிடமெல்லாம் "நீங்க அவசியம் வந்துடணும்... என்று புன்னகை தேங்கிய முகமும் குவித்த கைகளுமாய் நாளெல்லாம் நின்றிருந்தார் சுந்தர சர்மா.

'பிடிச்சாலும் பிடிச்சார், சுந்தர சர்மா புளியங்கொம் பாய்ப் பிடிச்சார்' என்று, ஐந்து பெண்கள் பெற்றும் ஆண்டியாகாமல், 'சுந்தரி'யில் உதவி ஆசிரியராக இருக்கும் எழுத்தாளர் 'சோணங்கி' வெற்றிலைப் பாக்குப் புகை யிலைச் சாறு குழம்பிக் கொதிக்கும் வாயை அண்ணாந்து வயிறெரிந்து பாராட்டுவது புரிந்தாலும், புளியங் கொம்பைப் பிடித்த பூரிப்பில் புளகாங்கிதமாய்ப் புன்னகை செய்தார் சுந்தர சர்மா.

ஆபீசிலிருப்பவர்கள், பியூன் முதல் மானேஜர் வரை சுந்தரசர்மாவின் திறமையையும், சாதனைகள் புரிகிற சாதுர்யத்தையும் எப்போதையும்விட இப்போது புதிதாய்ப் புரிந்துகொண்டு ஒருவர்க்கொருவர் அவரைப் புகழ் கிறார்கள்.

சோணங்கி போல் சிலர் வயிற்றெரிச்சல் படுகிறார் கள் என்றாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ள முடியுமா?

வாயிலிருந்த தாம்பூலச்சாற்றை ஜன்னல் வழியாகத் துப்பிவிட்டு, சுந்தர சர்மாவின் தனியறையிலிருக்கும் வாஷ் பேஸினைப் போய் அசுத்தப்படுத்திவிட்டு, கையிலிருந்த ஃபைலைப் பிரித்தவாறு ஏதோ சொல்ல, குழைந்து நெளிந்து குறுகி வருகிற சோணங்கியிடம் "வாஷ்பேஸின் குழாயைக் கொஞ்சம் திறந்து விட்டுட்டு வாரும்... என்று எரிச்சலை அடக்கிக்கொண்டு சொன்னார் சுந்தரம்.

"ஐ ஆம் ஸாரி..." என்று பதறி அடித்துக்கொண்டு ஓடிப் போய், வாஷ் பேஸின் ரத்தக்களறியில் தண்ணீர்க் குழாயைத் திறந்து மூடிவிட்டு வந்தார்...

'நானும் பாத்துண்டுதானிருக்கேன். தினப்படி இவனுக்கு இது ஒரு வழக்கம்... வர்ரவன் வெளியிலேயே

துப்பிட்டு வரமாட்டானோ?...புத்தியைச் சொல்லணும்' என்று மனத்துள் சோணங்கியைக் கடிந்துகொண்டார் சுந்தரம். எனினும் முகத்தில் என்னவொரு வாத்ஸல்யம் கொழிக்கிற புன்னகை!...

"உட்காரும்...

பவ்யம், விசுவாசம், மரியாதை எல்லாம் சேர்ந்தொரு வடிவமெய்தியதுபோல் சுந்தரத்தின் எதிரே உள்ள கைகளில்லாத நாற்காலியில் உட்கார்ந்தார் சோணங்கி, சுந்தர சர்மாவின் மேஜையின்மீது, கண்ணாடிப் பரப்பின் உள்ளே காஞ்சி காமாட்சி, அபிராமி, குருவாயூரப்பன், வெங்கடாஜலபதி புடை சூழ நடுவில் காஞ்சி காமகோடிப் பெரியவாளின் எளிமை எடுத்த விசுவரூபம் போன்ற வண்ணப்படம்-ஒரு பூஜையறையே காட்சி தருவதைப் பார்த்து ஒவ்வொன்றையும் தொட்டுத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டார் சோணங்கி.

"ஓய்-இதை நீர் பார்த்ததில்லையே! இப்ப சமீபத்திலே ஓர் அன்பர் போயிப் பார்த்துட்டுக் கொண்டு வந்தார். தார்வார்லே முகாமாம்...அப்போ எடுத்திருக்கார்... லேட்டஸ்ட் ஃபோட்டோகிராஃப் ஆஃப் பெரியவா... 'கலர் டிரான்ஸ்பரன்ஸி'யிலேருந்து எடுத்ததாம்...இப்பிடி வந்து பாரும்...என்று தாமும் எழுந்து நின்றார். ஆச்சாரிய ஸ்வாமிகளின் அருள் ஒழுகும் திருவதனம் மிளிரும் படம் ஒன்றைக் காட்டி, கண்டு வணங்கி நின்றனர் இருவரும்...

"குருர் ப்ரம்மா குருர்விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ்வர:
குருர் சாக்ஷாத் பரப்ரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

"உங்களுக்கெல்லாம் என்ன ஸார்...பாக்யவான்கள்! தெய்வம் தெருத்தெருவா ஊர்ந்து தேசாந்திரம் போறது... நீங்க ஏரோப்ளேன்லே பறந்து போய் எட்டிப் பிடிச்சு தரிசனம் பண்ணிண்டு வந்துடுவேள்...எங்களைப் போல ஏழைகளுக்கு எப்ப கெடைக்கப் போறதோ, அவாளைத்

தரிசனம் பண்ற பாக்கியம்!...” என்று கண்களில் நீர் தளும்பக் கூறி முடிக்கும்போது அழுதே விட்டார் சோணங்கி.

“ஓய் ‘சோ’னா, நீர் என்ன இவ்வளவு சென்டிமென்ட்டலா இருக்கீர்?... பெண்ணோட கல்யாணம் நல்லபடியா நடக்கட்டும்... நான் போப்போறேன்... வறீரா? போயி வந்து அதைப் பத்தி ஒரு தரிசனக் கட்டுரை எழுதும்...உம்ம பாணியிலே...”

“ஸார்...என் தகப்பனார் போனப்பகூடக் கண் கலங்காத பாவி நான்... இங்கே தேனம்பாக்கத்திலே, காஞ்சிபுரத்திலே, கார்வேட் நகர்லேன்னு முகாம் பண்ணிண்டிருந்தாளே... அப்போவெல்லாம் மாசம் ஒரு தடவை எப்பிடியானும் போயி தரிசனம் பண்ணிண்டிருந்தேன்... அப்போ ஒரு தைரியம், திடம், என்னமோ ஒரு ஆறுதல் கிடைச்சுண்டு இருந்தது...இப்ப அஞ்சு வருஷத்துக்கு மேலே ஆறதோ?” என்று தாயைப்பிரிந்த குழந்தை போல் ஏக்கத்துடன் கேட்டார் சோணங்கி.

சோணங்கி சொல்லுவதில் உள்ள அனுபவ உண்மை சுந்தர சர்மாவும் அறிந்த, உணர்ந்த உணர்ச்சிதான். எந்தப் பிரிவின் ஏக்கமும் மிகவும் அஞ்ஞானமானதே! எனினும் இது அன்பினால் ஏற்படுகிற அஞ்ஞானம் மட்டும் அல்ல; ‘அவாளை’ப் பிரிந்திருக்கிற ஏக்கம் ஒருவகைக் குற்ற உணர்ச்சியின் உள்ளூறுத்தலாக அவர்கள் இருவரையுமே பொதுவில் வதைக்கிறது. அந்த உள்வாதனையைத் தான் மௌனமாக அவர்கள் இருவரும் பகிர்ந்து கொண்டனர்.

“ஸ்வாமி, வாசகர்களுக்கு நம் புத்தாண்டுப் பரிசு இது! சுந்தரி இஷ்யுவிலே அட்டையைத் திருப்பின உடனே முதல் பக்கத்திலே தனி ஆர்ட் ஷீட்டா வரப் போறது” என்று ஆச்சாரிய ஸ்வாமிகளின் வண்ணப்படத்தைக் காட்டி, உற்சாகமாகத் தமது ஐடியாவைப் பிரகடனம் செய்தார் எடிட்டர். ஸப்-எடிட்டரோ ஒரு எம்பு எம்பிக் குதித்து “அருமையான ஐடியா ஸார்... நான் முதல்லே

ஒண்ணு எடுத்து பிரேம் பண்ணிண்டுடப் போறேன்" என்று பாராட்டினாலும் மனத்துள் 'இந்த இதிலெல்லாம் ஒண்ணும் கொறைச்சல் இல்லே' என்று முனகிக் கொண்டார்.

"சரி. நீர் வந்த விஷயமென்ன?...காபி சாப்பிடறீரா? பட்டண்ணா வந்துட்டாரா" என்று கேட்டவாறே மேஜைக்கடியில் மறைவாயிருந்த காலிங் பெல்லின் பொத்தானை அழுத்த, வெளியில் மணியோசை கேட்ட ஆபீஸ் பையன் உள்ளே வந்தான்...

"பட்டண்ணா வந்திருந்தார்னா வரச் சொல். அவருக்கும் சேர்த்து காபி கொண்டுவா..." என்றார். அவன் கதவைத் திறந்துகொண்டு வெளியே போகுமுன், "கான்டீன்லே காராபூந்தி போட்டுண்டிருந்தான்... மணமா வீசித்து... சூடா இருக்கும், ரெண்டு பிளேட் கொண்டு வா" என்று வாயில் நீருறச் சொன்னார் சோணங்கி.

"காலையிலே ஆத்திலே சாப்பிடலியா?"

"அது ஆச்சு எட்டுமணிக்கே... இப்ப பதினோரு மணி யாறதே...சரி சரி... அமெரிக்காவிலேருந்து மாப்பிளை-பொண்ணெல்லாம் வராளோன்னோ, கல்யாணத்துக்கு...

"ஷ்யூர் ஷ்யூர்... வராமல்?... பதினெட்டாம் தேதி ஃப்ளைட்லே வரதா எழுதியிருக்கா... சரி, நீர் வந்த காரியத்தைச் சொல்லும்" என்று எடிட்டர் ஸ்தானத்தை நினைவூட்டி, சோணங்கி தம்மிடம் ரொம்ப நெருக்கம் கொள்வதை விலக்கி- நிறுத்தினார்.

சோணங்கி பணிவுடன் கையிலிருந்த ஃபைலைப் புரட்டி, எழுந்து மேஜையில் வளைந்து குனிந்து கொண்டு "அந்த 'ஹே சீதே!' எழுதியிருந்த பையன், ரெண்டாவது ஒரு கதை குடுத்தான்... அந்த அளவு இல்லேன்னாலும் மோசம் இல்லே... அப்புறம் தீர்மானிக்கலாம்னு போன வாரம் சொன்னேள்... இப்ப அவன் வந்து இருக்கான்... ரிடர்ன் பண்ணிடலாமான்னு கேக்கத்தான் வந்தேன்...

என்று ஸப்-எடிட்டர் சொல்லுவதை ரொம்பவும் பொறுப்புடன் கண்களை மூடிக்கொண்டு கவனித்துச் செவிமடுத்தார் எடிட்டர். நெற்றியில் ஒரு சுருக்கத்துடன் கண்களைத் திறந்து,

"அந்தக் கதை வெளிவந்து இப்ப எத்தனை வாரமாச்சு?" என்றார்.

"நாலு வாரம் ஆகுது ஸார்"

"இது என்ன கதை? அந்தக் கதைக்கு ரொம்ப ரெஸ்பான்ஸ் இருந்தது இல்லே..."

"ஆமாம் ஸார்...நன்னாவே எழுதியிருந்தான்."

"அதைப் பிரசுரிக்கறப்போ அவ்வளவு ரெஸ்பான்ஸ் இருக்கும்னு உமக்குத் தெரியுமோ?"

"நான் எதிர்பார்க்கலே ஸார்."

"ம்...இப்ப அவன் வந்திருக்கானோ?" என்று கேட்டபோது, மற்றொரு உதவி ஆசிரியர் பட்டண்ணா, ஆசிரியர் அறைக்குள் வந்து "நமஸ்காரம்" என்று வணங்கினார்.

பட்டண்ணா, சித்திர ராமாயணம், மகா பாரத விளக்கம், ஸ்தலபுராண மகிமைகள் எழுதுவதில் வல்லவர் என்று பேரெடுத்தவர்.

"வாங்கோ-பட்டண்ணா. உக்காருங்கோ. வேற ஒண்ணுமில்லே. நான் கல்யாண மும்முரத்திலே இருப்பேன்-இந்த மாசம் முழுக்க...நீங்கதான் கொஞ்சம் என் வேலையும் பார்த்துண்டுடணும்..ரெண்டு மூணு வாரத்துக்கு குமாரி சீரியலை நீங்களே எழுதுங்கோ..."

"அதுக்கென்ன, பேஷா! அது எப்பவும் உள்ளது தானே. இந்த ராவ் பாருங்கோ, இந்த சமயத்திலே 'அம்போ'ன்னு என்னை மட்டும் விட்டுட்டு லீவ்லே போயிட்டான். புருஃப் பூரா நானே பாக்க வேண்டியிருக்கு... அதான் உங்கள்ட்ட சொல்லணும்னு நினைச்சுண்டே வந்தேன். பார்ட் டைமா யாராவது நல்ல

பையன்கள் கிடைச்சால் பயன்படுத்திக்கலாமான்னு... 'ஹே! சீதே'ன்னு ஒருகதை எழுதினானே-'பாரதன்'னு புனைபேரு...அடிக்கடி வந்து போயிண்டிருக்கான்...வரச் சொல்றேன், பேசிப்பாக்கறேளா?" என்றார் பட்டண்ணா.

ரிஸப்ஷனில் ஒரு மணி நேரமாய் உட்கார்ந்து, கதையையாவது திரும்பப் பெற்றுக் கொண்டு போகலாம் என்று காத்திருக்கும் - குறுந்தாடியும், பெரிய கண்களுமாய் உட்கார்ந்திருக்கும் அந்த இளைஞனை ஆபீஸ் பையன் வந்து அழைத்தான்:

"ஸார், உங்களை எடிட்டர் ரூமுக்கு வரச் சொன்னாங்க."

'ஆசிரியர்' என்ற வெண்மையான எழுத்துக்கள் முகப்பில் அலங்கரித்த ஏர்கண்டிஷன்ட் அறையைத் திறந்து விட்டான் பையன்.

தோளில் மாட்டிய ஜோல்னாப்பை, தடித்த சாக்குப் போன்ற துணியில் தொளதொளத்த குர்த்தா, பைஜாமா, விரிந்த கண்களை இன்னும் பெரிதாகக் காட்டும் கருப்பு பிரேம் மூக்குக்கண்ணாடி, வரிசைப் பற்களில் மின்னிய புன்சிரிப்பு, 'நமஸ்காரம்' என்ற சொற்கள் சகிதம் எதிரில் வந்து நிற்கும் இவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும் என்று கணித்தார் சுந்தரசர்மா.

"உம்ம சொந்தப் பெயர் என்ன?" என்று பதிலுக்கு நமஸ்காரம் செய்வது போன்ற ஒரு பாவனையுடன் கேட்டார் சுந்தரம்.

பட்டண்ணா அந்த இளைஞனிடம் மிகுந்த பரிவுடன் இன்முகம் காட்டி ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னார். உட்கார்ந்த பிறகு தன் இயற்பெயரைச் சொன்னான் அவன்.

"ராமதாசன்"

"மிஸ்டர் ராம்தாஸ், நீங்க வேற ஏதாவது உத்யோகம் பாத்துண்டு, ஒரு ஹாபியாத்தானே எழுதுறீங்க?..."

“இப்ப நான் சமையற்கலைக் கல்லூரியிலே ‘டிப்ளமோ’ கோர்ஸ் படிச்சுண்டு இருக்கேன்... ஸ்டைஃபண்ட் கிடைக்கிறது...அப்புறம்தான் ஏதாவது பெரிய ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே வேலைக்கு டிரை பண்ணனும்... என்று மிகவும் அடக்கமாகப் பேசினான். ‘ஓ!’ என்று யோசித்தார் சுந்தரம்.

“ரொம்பப் பவர்ஃபுல் ரைட்டிங்!” என்று திடீரென்று ‘ஹே! சீதே’வை நினைத்துக்கொண்டு அவனைப் பாராட்டினார் பட்டண்ணா.

“நீர் படிச்சீரா?” என்று பக்கத்திலிருந்த சோணங்கியைக் கேட்டார்.

“ஓய்...கிண்டலா பண்றீர்?...நான்தான் அந்தக் கதையைப் படிச்சுட்டு முதல்லே ஓடிவந்து எடிட்டர்கிட்ட சொன்னவன்...” என்று அதைக் கண்டுபிடித்ததற்கு உரிமை பாராட்டினார் சோணங்கி.

காபி வந்தது. சாப்பிட்டார்கள்.

“பட்டண்ணாவுக்கு உதவியாக பார்ட் டைம் வேலை பார்க்கிறீரா? இந்தக் கதையை அடுத்த இதழ்லே பிரசுரம் பண்றது ஒரு பக்கம் இருக்கட்டும். உமக்கு ஸ்டைஃபண்ட் மாதிரி இது ஒரு நிரந்தரமான பாக்கெட் மணி மாதிரி கிடைச்சுண்டு இருக்கட்டுமே. என்ன சொல்றீர்?...” என்று கேட்டார் சுந்தரம்.

ராமதாசன் நன்றியுணர்ச்சியுடன் கரம் கூப்பி சம்மதத்தையும் தெரிவித்தான்.

“சரி. நீர் போகலாம். நாளைக்கு வந்து பட்டண்ணாவைப் பார்த்தால் போதும்” என்று அவனுக்கு விடை தந்து அனுப்பும் போது, ஆபீஸில் உள்ளவர்களுக்கெல்லாம் கல்யாண அழைப்பிதழ் தந்தது நினைவுக்கு வந்தது. ‘இவனும் அதற்குள் நம் பத்திரிகையைச் சேர்ந்தவன் ஆகி விடுவானே’ என்று எண்ணி,

"இந்தாரும் ராம்தாஸ்!" என்று கூப்பிட்டு, ஓர் அழைப்பிதழில் அவன் பெயரை எழுதித் தந்தார்.

"உம்ம கதையைப் படிச்சுட்டு ரொம்ப சிலாகித் தாள்... என் டாட்டர்! நீரும் அவசியம் கல்யாணத்துக்கு வரணும்" என்று புன்னகையும் பூரிப்புமாய் விடை தந்து வேலையும் தந்து அனுப்பினார் சுந்தரசர்மா!

"வேதியரைத் தொழும்,
வேந்தரைத் தொழும்
தாதியரைத் தொழும்
தன்னையேதான் தொழும்"

என்று பரதன் ராம பட்டாபிஷேகத்துக்கு முன் மகிழ்ச்சியில் திளைத்த வருணனையைப் பட்டண்ணா நினைத்துக் கொண்டார்.

## 16

**சீ**தாவுக்கும் சுகுமாரனுக்கும் திருமணம் நடந்தது. செல்வந்தர்கள், பிரபலங்கள், பட்டங்கள் தரித்தோர், பதவிகளில் இருப்போர், பலதரப்பட்ட அதிபர்கள், அதிகாரிகள், நட்சத்திரங்கள், நாடறிந்த தலைவர்கள், கலாபிமானிகள் எல்லோரும் வந்திருந்து அந்தப் பிரபல திருமணத்துக்குப் புகழ் சேர்த்தார்கள். தினசரி செய்தித்தாள்களின் பக்கங்களின் பெரும் பகுதி சீதா – சுகுமாரன் திருமணத்தை வாழ்த்தித் தொழில் அதிபர் களும், ஏஜண்டுகளும், குடும்ப நண்பர்களும் தந்திருந்த விளம்பரங்களால் நிறைந்திருந்தன.

நகரின் பிரதான சாலையில் அரண்மனை போன்ற தொரு-மரங்களும் பூந்தோட்டமும் சூழ்ந்த-ஒரு

மாளிகையில் அந்தத் திருமண விழா மூன்று நாட்கள் நடந்தது.

இசைக் கச்சேரிகள், நாட்டியங்கள், உபன்யாசங்கள் என்று நாளெல்லாம் மிகப்பிரபலமானவர்களைக் கொண்டு வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்தன.

மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு ஊர் கோலங்கள் தெருவில் மிக நீளமான-விளக்கு அலங்காரங் களுடன், வாண வேட்டுச் சத்தத்துடன் கோலாகலமாய் நடந்தன...

அந்த வாண வேடிக்கைகளும் வண்ண விளக்கு அலங்காரங்களும் நகரையே அதிர்ந்து அதிர்ந்து பிரகாசப் படுத்தின.

பட்டுப் புடவைகளும், வைர வைடூரியங்களும், பள பளக்கும் செழுமைகளும் அணி அணியாய்ப் படைபடை யாய்க் குழுமித் திமிறிக் குதூகலத்தில் மிதந்தன!...

மங்கல நாத முழக்கங்களும், மக்களின் சந்தடிகளும் குழம்பிக் கலந்து குமுறின...

கும்பல் கும்பலாய் விருந்தினர் கூட்டம் பெருகி வழிந்து வடிந்து கொண்டிருந்தது.

கும்மாளங்கள், உல்லாசங்கள், பரிகாசங்கள், குசலோ பரிகள், விருந்து உபசாரங்கள், வெகுமதிகள், வாழ்த்துக்கள், வேதகோஷங்கள், மந்திர முழக்கங்களுடன் வேதியர்கள் சூழ்ந்து தீ வளர்த்து, அக்னியைச் சாட்சி வைத்து, தேவர்கள், பித்ருக்கள், ரிஷிகள், ரிஷி பத்தினிகள் ஆசீர்வாதப் பெருமுழக்கத்துடன்-

புகையும் புழுக்கமும் இறுக்க, எங்கோ ஓர் இருட்டு குகையில், பாறையின் இடிபாடுகளில் தன்னை அமுக்கு வது போல் மூச்சு அடைத்தது சீதாவுக்கு; அவள் தலையில் இடி விழுந்ததே போன்ற கெட்டிமேளக் கெக்கலிப்புடன் சுகுமாரன் சீதாவின் கழுத்தில் மங்கலநாணைப் பூட்டினான்.

ஆயிரம் மின்னல்கள் ஒரே சமயத்தில் அவள் மீது பாய்ந்து தாக்கியதே போல்-

புகைப்படக் கருவிகளிலிருந்து வெளிச்சப் பொறிகள் அவள்மீது சிதறின...

அவனது அங்கவஸ்திரத்தின் முனையை அவளது முந்தானையில் முடிச்சிட்டு அவனைக் கரம்பற்றி அவள் தீ வலம் வந்தபோதும், இன்னும் பல சடங்குக் கழிப்பிலும் அவளைத் தீண்ட நேர்ந்த போதெல்லாம் 'என்னைத் தொடாமல் பேச வேண்டும்' என்று சீதா கேட்டதை நினைத்தான் சுகுமாரன்.

'உன் அனுமதியில்லாமல் உன்னைத் தொட மாட்டேன்' என்று, தான் சொன்னதையும் எண்ணி அவளைக் கடைக் கண்ணால் பார்த்து அவன் சிரித்தான்...

சீதா-எல்லாரையும் போல், இந்த விழாவின் நாயகி எவ்விதம் இருத்தல் வேண்டுமோ, அவ்விதமே இங்கிதமாய், இன்முகமாய், எல்லாரும் எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள்.

அமெரிக்காவிலிருந்தும் டில்லியிலிருந்தும் அவளது அக்காமார்கள், அத்திம்பேர்கள், அவர்களின் குழந்தைகள் எல்லாரும் வந்திருந்தார்கள்!

இந்தக் கடைக்குட்டிக்கு அடித்த அதிர்ஷ்டத்தை அனுபவித்துப் பூரித்தும், சில சமயங்களில் ஆற்றாது பொருமியும், அந்தச் சகோதரிகள் தன்னைப் பரிகாசம் பண்ணுகிற போது சீதா நாணி முகம் கவிழ்ந்து கன்னம் சிவந்தது போல் காட்டிக் கொண்டாள்.

அவர்கள் சீதாவை இழுத்து வைத்து வேளைக்கொரு அலங்காரம் செய்தபோது பொம்மைபோல் அலங்காரம் செய்து கொண்டாள். பட்டுப் புடவைகளை ஒன்று மாற்றி ஒன்று கட்டிவிடுவதற்கென்றே அவளைச் சுற்றிலும் பெண்கள் குழுமி நின்றனர். சாஸ்திரிகளும் சுமங்கலிகளும்

நலுங்கு என்றும், ஆரத்தி என்றும், ஊஞ்சல் என்றும் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் சீதா இணங்கினாள்...

சுகுமாரனின் தாய் பங்கஜவல்லியம்மாள் தனக்கு வாய்த்த நாட்டுப் பெண்ணின் நற்பண்புகளைப் புகழ்ந்து புகழ்ந்து, அவளைத் திருஷ்டி கழித்துத் தழுவிக் கொண்டாள்.

சீதாவின் வயதொத்த கன்னிப் பெண்களும், இன்னும் வயதுக்கு வராத பட்டுப்பாவாடை ஜம்பர் அணிந்த சிறுமிகளும்-தங்களின் வருங்கால-லட்சியக் கனவையே எதிரில் காண்போராய் விழிகள் விரிய சீதாவைப் பார்த்துப் பார்த்து நின்றனர்.

பாண்டு வாத்தியங்களும், நாதசுர-தவில் முழக்கங்களும் சுபமங்கலம் பாடின...

சுமங்கலிகள் நலுங்கு வைத்து லாலி பாடினர். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள், பெண் வீட்டுக்காரர்கள் என்று பிரிந்து கொண்டு பரிகாசப் பாடல்கள் பாடினர்-அந்தப் பழைய காலத்து மனிதர்கள். புதுசுகள் தலைவிரி கோலமாய் நின்று ரசித்தன...இதை, ஊக்குவித்து ஆர்ப்பாட்டங்கள் செய்தது ஒரு கூட்டம்.

மாலையில் நடந்த வரவேற்பில்தான் சீதா மாரியம் மாளையும் பிற சிநேகிதிகளையும் பார்க்க முடிந்தது...

சுகுமாரன் சூட்டணிந்து கொண்டு கையில் மலர்ச் செண்டுடன், பட்டும் நவரத்தினங்களும் சுமந்துகொண்டி ருந்த சீதாவுடன் அருகருகே அமர்ந்திருந்தபோது அவர் களின் பொருத்தத்தைக் கண்டு புகழாதார் இல்லை.

மரியத்தைத் தன்னருகே அழைத்து, அவள் காதில் "இந்தச் சந்தடியெல்லாம் அடங்கியபிறகு நாம் சாவகாச மாக ஒரு நாள் சந்திக்கவேண்டும்- வா, நான் சொன்னேனே, இது சீதாபகரணம்தான்" என்று சொல்லி வைத்தாள். பிறகு புன்முறுவலுடன் மாரியம்மாளுடன் சேர்ந்து போட்டோவுக்குப் போஸ் கொடுத்தாள்.

சற்று விலகி நின்று சீதாவைப் பார்த்த மாரியம் மாளுக்கு அவளது உள்ளமும்-உண்மை நிலைமையும் நன்கு தெளிவாயிற்று...ஆயினும் இவள் இனிமேல் என்ன செய்வாள்? ஒரு பெண் இதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்? என்றெல்லாம் தெளிவின்றிக் குழம்பினாள் மரியம்.

அப்பாவின் ஆபீஸைச் சேர்ந்தவர்களின் கும்பல் ஒன்று வெகுமதிப் பொருள்களைச் சுமந்து கொண்டு வந்தது. அவர்களில் பலர் பிரபலமானவர்கள். எழுத்தாளர்கள், ஓவியர்கள்.

“காமு... ஓடிவாயேன்-நீ கேட்டயே, தீர்த்த யாத்திரை பட்டண்ணா யாருன்னு? அதோ வரார் பாரு” என்று மகளைக் கூப்பிட்டுக் காட்டிய அம்மாவை, அவளது குதூகலத்தை, சீதா ஒரு நகைப்புடன் ரசித்துப் பார்த்தாள்.

“சீதா...நீ முக்கியமா அறிமுகம் செய்து கொள்ள வேண்டிய ஆளாக்கும் இவர்! இந்தாப்பா ராமதாஸ் இப்பிடி வாரும்! உம்ம அபிமான வாசகி, இவர்தாம்மா அந்த ‘ஹே! சீதே’ எழுதின பாரதன்...

என்று அறிமுகமான அந்த இளைஞனின் முகத்தை நிமிர்ந்து நேருற நோக்கினாள் சீதா.

ராமதாஸ் பதிலுக்கு ஒரு நமஸ்காரம் போட்டுவிட்டு, அவர்களுடன் சேர்ந்து போட்டோ எடுத்துக்கொள்ளக் கூடக் காத்திராமல் கும்பலில் மறைந்து போனான்.

அவனது குறுந்தாடியும், பெரிய கண்களும் சீதாவின் மனத்தில் நன்கு பதிந்து மீண்டும் தோன்றின... ‘ஹே! சீதே’ என்று ஒலித்த குரல் இவன் உள்ளிருந்து இவன் வழியே ஒலித்ததல்லாமல் அது இவனுடைய குரல் அல்ல என்று தோன்றியது.

‘நீயா? உன்னை நான் சிறிது காலத்துக்கு முன்பு கண்டிருந்தால்- ஒரு வேளை உன்னை நான் ராமனாக

வரித்திருப்பேனா?' என்ற ஒருவினாவும், 'இல்லை' என்ற பதிலும் அவளுள் எழுந்து அடங்கின.

'ராமன் இல்லை அது ஒரு concept. ராவணர்கள்தான் fact!... ராவணர்கள் தான் உண்டு. இவன் கூற்றுப்படி இவனும் ராவணனே!'

'ராமன் என்பது ஒரு வேஷம் என்றால் இதோ என் பக்கத்தில் உரிமையின் இறுமாப்புடன் வீற்றிருக்கிறானே, இவனே அந்த வேஷத்துக்கு மிகப் பொருத்தமானவன். அப்போது இவனுக்கேற்ற மாயா சீதை நானாயிருந்தால் என்ன? வேறு யாராயிருந்தால் என்ன?...'

இந்த விழாவின் நடுவே பற்றற்ற மனத்தோடு யாரோ போல் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சீதா, தானும் மரியமும் காத்ரீனாவுடன் சேர்ந்து எழுதத் தொடங்கிய 'ஓ! இராமா' என்ற கட்டுரையை முடிக்காமற் போனதை நினைத்துக் கொண்டாள்.

அதை எழுதியபோது, நமது சமூகத்துப் பெண் மக்களின் நிலைகுறித்துப் பெரிய அறிவு ஜீவி போல் அவள் பேசி, விவாதித்த அர்த்தமுள்ள ஆய்வுகள் எல்லாம்– வெறும் பிதற்றலாகிவிடுமா? அதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்க் கருத்துத்தானா? என்று எண்ணி, 'ஒரு போதும் அவ்விதம் ஆகாது! நான் ஜெயிப்பேன்... என்று தன்னுள் அடிக்கடி அவள் திடம் சொல்லிக் கொண்டாள்.

இந்த ஆடம்பரங்களும் பொருள் அழிப்பும், பெருந் திரளும், அறுசுவை உண்டியும், வேதமந்திர முழக்கங்களும், மதிரும் சங்கீதமும் அவளுக்கு அருவருப்பைத்தான் உள்ளூரத் தந்தன... அடிக்கடி தலை சுற்றி மயக்கம் வந்தது...

'இதுதான் இலங்காபுரி? இவர்களே இராக்கதர் கூட்டம்' என்றே அவள் மனத்துள் அந்த மயக்கத்தில் உருவங்கள் எழுந்தன.

பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் சுகுமாரனுக்குப் பத்துத் தலைகள் முளைத்ததைப் போலவும்,

எதிரில் இருப்பவர்களின் முகங்களில் திடீர் திடீரென கோரப்பற்கள் முளைப்பன போலவும்,

சாஸ்திரிகளின் கரங்களில் சூலமும் மழுவும் தோன்றுவது போலவும்,

அரக்கரும் அரக்கியரும் அரை நிர்வாணக் கூட்டம் கூட்டமாய் நின்று தன்னைச் சுற்றிக் குதித்தாடி, ஹுங் காரம் செய்து எரிகிற தீயிலே எறிந்து நடனம் இடுவது போலவும்,

பற்பல உருவகங்கள் சீதாவின் மன அரங்கில் தோற்றம் காட்டின...

இங்கு நடக்கும் எந்த நிகழ்ச்சியிலும் லவலேசமும் புனிதமோ, சத்தியமோ, ஒழுக்கமோ இல்லை என்பது அவள் மனத்தளவில் நன்கு நிரூபணமாயிற்று.

இங்கு ஓதப்பட்ட வேதமும் மந்திரங்களும் பொருளற்ற ஊளைகள்!

இங்கு ஓர் இக்கால அடிமைப் பெண், மிகப் புராதன மான சடங்குகளுடன், அங்கீகரிப்புடன் ஒரு நவீன முதலாளிக்கு விற்கப்படுகிறாள். அவள் மேல் 'மனைவி' என்ற முத்திரையும் குத்தப்படுகிறது!

இந்தப் பொய் உறவை ஏற்படுத்துவதற்கு இவ்வளவு கோலாகலங்கள் தேவையாயிருக்கின்றன போலும் என்று அடிக்கடி அவள் மனம் கசந்து சிரித்தது!

இந்தப் பொய்ம்மை நிகழ்ச்சிகள் யாவும் ஒரு முடிவுக்கு வந்து கூத்தாடிக் கலைந்த அரங்கம் போல் எல்லாம் ஓரிரு நாட்களில் வெறிச்சோடிப் போயின.

அந்த அரண்மனை போன்ற மாளிகையின் தோட்டத்தில் எச்சில் இலைகள் மலைபோல் குவிந்தன. நாய்கள் பட்டாளமும் ஊரிலுள்ள நரிக்குறவர்கள் படை

யும்தான் கல்யாணத்தின் கடைசி விருந்தினர்களாய்க் களேபரம் செய்து கூவிக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சியை மாடியறையிலிருந்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் சீதா.

அந்த மாடியறை ஓர் மகாராணியின் அந்தப்புரம் போல் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நறுமணம் கமழ் புகையும் மலரும் அறையுள் நாறின...

பலிபீடம் போல் ஒரு படுக்கை வேறு அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதைப் பார்க்கச் சகிக்காமல்தான் மாடி யறைக்கு வந்தவள் இந்தக் குறவர் கூட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் சீதா.

"மாப்பிள்ளை வந்தான் மாப்பிளை வந்தான் மாட்டு வண்டியிலே" என்று பாடித் தகர டப்பாவில் தாளம் தட்டிக்கொண்டு ஒரு குறத்தி வயிறு குலுங்க ஆடியதை சீதா ரசித்துக் கொண்டிருந்தபோது அறைக் கதவு பிசாசு சிரிப்பதுபோல் மர்மமாய்க் கிரீச்சிட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

ஒற்றைத் தலை ராவணன்போல் பட்டு அங்கவஸ் திரம் தோளில் வழிய, ஜவ்வாதுப் பொட்டும் தாம்பூலம் குதப்பிய வாயுமாய் வந்துகொண்டிருந்தான் சுகுமாரன்.

## 17

அவன் தன்னை நெருங்கி வர வர சீதா நகர்ந்து கொண்டேயிருந்தாள்... அவள் பார்வை மட்டும் 'நில்லுங்கள்' என்று கூவித் தடுப்பது போல் இருந்தது. அவன் அந்த அறையின் நடுவில் சற்று நின்று ஒரு சிகரெட் பற்ற வைத்தான்.

இவளது நாணமும் பின்னடைவும் அவனுக்கு ரசிக்கத் தகுந்ததாய் இருந்தது. அவளது கண்களில் தவிக்கிற மிரட்சி அவனுக்குப் பெண்மையின் பேரழகாய்த் தோன்றியது.

''உட்காரேன்... என்று இளித்தவாறு அந்த அலங்காரக் கட்டிலின் ஓர் ஓரமாய்ச் சாய்ந்து, வெல்வெட் தலையணையொன்றின் மீது முழங்கையை ஊன்றிப் படுத்தான் சுகுமாரன். பக்கத்திலிருந்த சோபாவில் அவள் உட்கார்ந்தாள். அவளுக்குத் தன் உடம்பு முழுதும் உள்ளூர நடுங்கிக் கொண்டிருப்பது அவமானமாய் இருந்தது. தனது பயத்தையும், நடுக்கத்தையும் அவனறியாமல் மறைத்துக் கொண்டு அவனை நேருற நிமிர்ந்து பார்த்தாள்.

அந்த ஒற்றைச் சோபாவில் உடம்பைக் குறுக்கிக் கொண்டு மேலாடைத் துணியை இழுத்து இரண்டு புஜங் களை மூடிக் கைகளை மார்பின் மேல் கட்டிக்கொண்டு அவள் உட்கார்ந்திருக்கும் கோலத்தைப் பார்த்து அவன் பரிதாபமாய்க் கேட்டான்.

"ஏன், நீ சந்தோஷமாக இல்லையா?"

''இல்லை'' என்று ஒரு வார்த்தையில் பதில் சொன்னாள்.

'ஏன்?' என்று சீதாவை அவன் மீண்டும் கேட்க வில்லை. யோசித்தான். தன்னைப்பற்றி இவள் ஏதேதோ கேள்விப்பட்டிருக்கக்கூடும். அதையெல்லாம் நினைத்துக் கோபித்துக் கொள்ளும் உரிமை படைத்தவள்தானே மனைவி என்று மனத்துள் ஒரு சிரிப்புடன் நினைத்துக் கொண்டான்.

'பாவம், சின்னப் பொண்ணு-தானே?' என்ற முனகலுடன் எழுந்துபோய் அந்த அறையை அடுத்துள்ள இன்னொரு அறையின் கதவைத் திறந்து,

"ஏ, சின்னப்பொண்ணு-உன்னை நான் இப்படிச் செல்லமாகக் கூப்பிடலாமா?-சீதா... இங்கே வந்து பார்?

இதான் என் ரூம்... என்று அழைத்துக் காட்டினான். அவளும் மார்பின் மேல் கட்டிக்கொண்ட கைகளைப் பிரிக்காமல் எழுந்து வந்து நின்று அவனது அலங்கார அறையைப் பார்த்தாள்.

ஆடம்பரமான உல்லாசம் தருகிற அலங்காரப் பள்ளிதான். அது சரி, இந்த வீட்டின் எந்த அறைதான் எளிமையாயிருக்கிறது! இந்த ஆடம்பர நெரிசலில் உயிரற்று எல்லாம் வெறிச்சென்று சிறைக்கோட்டம் போலிருக்கிறது என்ற நினைவுடன் சீதா அந்த அறையின் அலங்காரத்தை ரசித்துப் பார்த்தாள்.

சுகுமாரன் ஒரு பெரிய போட்டோ ஆல்பத்தை எடுத்து அவள் முன் நீட்டினான்:

"நம்ம கல்யாண போட்டோ-எல்லாம் ரெடியாகலே-ஒரு செட் ஆல்பம் போட்டுக் கொண்டு வந்தான்" என்று சொல்லிக் கொண்டே விளக்கருகே நெருங்குகிற பாவனையில் சீதாவின் உடம்போடு ஒட்டி நின்றான்.

"நான் என்னோட அறையில் கொண்டு போயிப் பாத்துண்டுடுவேன்" என்று அதைக் கையில் வாங்கி மூடிக் கொண்டு விலகினாள் சீதா. சுகுமாரனுக்கு இப்போது இது வெறும் நாணமோ வெட்கமோ இல்லை என்பது போல் 'சுருக்'கெனப் புரிந்தது. 'ம்...ஒண்ணும் தெரியாத சின்னப் பெண்தானே' என்று மறுபடியும் சமாதானப்படுத்திக் கொண்டான்.

"இன்னிக்கு நீ சந்தோஷமா இருக்கணும் 'சின் பொரன்' சீதா...நீ என்ன குழந்தையா? குழந்தைன்னாலும் இனி மேலும் குழந்தையாவே இருக்கலாமோ?" என்று அவன் தன்னிடம் சிருங்கார மழலை பேசுவதைக் கேட்க அவளுக்கு உடம்பெல்லாம் எரிந்தது.

அவள் அந்த ஆல்பத்துடன் தன் அறைக்குத் திரும்பினாள். அவன் அங்கிருந்தே அவளைப் பார்த்தான். இடைவெளிக் கதவை மூடிக்கொண்டு விட்டால் தானும் அவளும் தனித் தனியாகிவிட முடியும் என்ற

எண்ணத்துடன் தனக்குப் பின்புறமுள்ள இன்னொரு கதவைப் பார்த்தான். மாடியிலிருந்து கீழே செல்வதற்கு அங்கே இன்னொரு மரப்படி வழி இருக்கிறது. அது சுகுமாரனின் தாயார் பங்கஜவல்லியம்மாள் அறைக்குப் போகும் வழி. மாடிப்படியிறக்கத்தில் முன்னால் உள்ள சிறிய அறையில்தான் அம்மாவைக் கவனித்துக்கொள்ளும் நர்ஸ் மீனா படுத்திருப்பாள்-என்ற நினைவுடன் மூடிய கதவின் மேல் அவனது பார்வை சற்று நிலைத்தது "ம்... இனிமேலுமா? அதுவும் இன்னிக்கேவா... நோ! நோ!" என்று சிகரெட் புகையை ஊதியவாறு உதடுகள் பிரிய ஓசையில்லாமல் சொல்லிக்கொண்டான் சுகுமாரன்.

"உன் அனுமதியில்லாமல் உன்னைத் தொட மாட்டேன்" என்ற வார்த்தைகளைச் சீதாவிடம் மீற அவன் தயாராக இல்லை. அவன் அவளிடம் பொறுமையாகவும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ளவே விரும்பினான். ஆனாலும் இவள் இவ்வளவு இறுக்கமாக இருப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அவளுக்கும் தனக்கும் உள்ள வயது வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தான். இன்னும் பல வித்தியாசங்களையும் நினைத்துப் பார்த்தான். மூன்று நாட்களாகக் கல்யாண மும்முரத்தாலும், அம்மாவிடம் தந்த வாக்குறுதியை ஆரம்பத்தில் சில தினங்களாவது காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலும் தவிர்த்திருந்த மதுவின் அரவணைப்பு அவனுக்குத் தேவையாக இருந்தது-அதுவும் இந்த க்ஷணம் இவளை விடவும்....

அவனுக்கு என்ன? நினைத்தது நினைத்த மாத்திரத்தில் எதுவும் எங்கேயும் வந்து எதிரில் நிற்காதோ? இந்தச் சீதா தான் எட்டாத கனிபோல் ஏச்சம் காட்டி நிற்கிறாள்.

'எனக்காக நீங்க எதையும் தியாகம் செய்ய வேண்டாம். என்னாலும் உங்களுக்காக எதையும் தியாகம் செய்ய முடியாது' என்றாளே சீதா-அன்றைக்குக் கடற்கரையில் - அந்த வார்த்தைகள் வசதியாக அவன் நினைவில் இப்போது ஒலித்தன.

"வெரி வெல்!" என்று விரலைச் சொடுக்கிக்கொண்டு எழுந்தான். சற்று நேரம் உலவினான். ஒரு சிகரட்டைக் கொளுத்துவதற்குமுன், ஒரு மிடறு குடித்தே ஆகவேண்டும் என்று அவசரப்பட்டவன் போல் எடுத்த சிகரட்டைக் கொளுத்தாமல் அந்த வெறித்துப் பார்த்தவாறே வேறு ஓர் அறைக்குள் சென்றான். கண்ணாடித் தம்ளர்-பாட்டில் சல்லாப ஒலிகள் வெளியில் கேட்டன. இதழ்களில் படிந்த மதுவின் ஈரத்தை நாவில் சுவைத்துக்கொண்டே-கையில் ஓர் அழகிய மதுக்கிண்ணத்துடன் அவன் அறைக்குள்ளி ருந்து வெளியே வந்த போது, தூரத்திலிருந்தேனும் சீதா தன்னைக் கவனிக்கிறாளா என்று பார்த்தான்.

இல்லை. ஆல்பத்தைப் புரட்டிக் கொண்டு அந்த ஒற்றைச் சோபாவில் உட்கார்ந்திருந்தாள்.

ஆல்பத்திலிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டி ருந்த சீதாவின் பார்வையில் தரையில் தன்னெதிரே நீண்டு விழுந்த சுகுமாரனின் நிழல் தெரிந்தது. அவன் கையில் மதுக்கிண்ணத்துடன் நின்றான்: "நீதான் சொன்னயே... 'யூ வோண்ட் மைன்ட் திஸ்'னு"

"எஸ், ஐ வில் நெவர் மைன்ட் எனிதிங் யூ டு."

"ரியலி!"

தொடர்ந்து அவன் ஆங்கிலத்திலேயே கேட்டான்: "நீ சட்டப்படி இப்போது என் மனைவி... அவன் ஆங்கிலத்தில் உபயோகித்த வார்த்தை 'லீகலி!' என்பது.

"ஆமாம்; சட்டப்படி மட்டுமே!" என்றாள் சீதா.

"ஏன் சாஸ்திரப்படி கூடத்தான்!" என்றான் சுகுமாரன். "பொய்மைச் சாத்திரக் குப்பைகள்" என்று மனத்துள் சொல்லிக் கொண்டாள்: "இதோ இருக்கே அதுக்குத்தான் சாட்சி, போறாதோ?" என்று சொல்லிக் கொண்டே அந்த ஆல்பத்துடன் எழுந்து நடந்தாள்; அதை அவனது அறையில் கொண்டு போய் வைத்து விட்டு வந்தாள்.

'இவள் எவ்வளவு நாட்களுக்கு இப்படியே இருந்து விடப் போகிறாள்? கிணற்றுத் தண்ணீரை...என்று ஏதோ பழமொழி சொல்லுவார்களே...முடிந்த வரை இருக்கட்டும்' என்று அவனும் மிடுக்குடன் மனத்துள் முனகிக்கொண்டு மதுவை வெறியுடன் பருகினான்.

அவனது அறையிலிருந்து சீதா திரும்பியபோது நடுவில் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டபோது, அவன் காலியான மதுக்கிண்ணம் ஒரு கையிலும், புகையும் சிகரட் மறுகையிலுமாக-இரண்டு கைகளையும் விரித்து அவளை வழிமறிப்பது போல் நின்றான். ஒரு கணம் பதறிப்போனாள் சீதா: "நீங்கள் ஒரு கனவான் என்று நான் நம்புகிறேன்" என்று தமிழில் நிதானமாகவே சொன்னாள்.

"ஒரு கணவன் கூட!" என்று ஒற்றைக் கண் சிமிட்டலுடன் சொன்னான் சுகுமாரன்.

"ஆமாம்; சாஸ்திரப்படி, சட்டப்படி...என் சம்மதப்படி அல்ல!"

"ஓ! அப்படியொன்று இருக்கிறதா?" என்று சிரித்தான். அவள் போவதற்கு வழிவிட்டான். அவள் அந்த விசாலமான அறையின் சலவைக் கற்கள் பதித்த தளத்தில் நடந்து செல்லும் அழகை ரசித்துச் சொக்கி நின்றான். பின்னர் அறைக்குள் சென்று மதுவை நிரப்பிக் கொண்டு வந்தான்.

"டார்லிங்" என்று அவன் சீதாவைக் கூப்பிட்டுக் கொண்டே வந்து, அவள் எதிரில் அவளை வைத்த விழி வாங்காமல் பார்த்தவாறே அடிக்கடி மதுவைப் பருகி, நனைந்த உதடுகளை நாக்கால் தடவிப் பற்களால் கடித்தவாறு மேனிக் கொதிப்புடன் பெருமூச்சுயிர்த்தான்... கையில் மதுக் கிண்ணத்துடன் உலாவியவாறே யோசித்தான்... 'இவளை இன்றைக்கே அடைவது' என்ற இச்சையை மனத்துள் தள்ளிப் போடவேண்டியதுதான். நட்பு முறையில் இங்கிதமாக இவளுடன் முதலில் பரிச்சயம் கொள்ளவேண்டும்' என்று எண்ணினான்.

"நீ இந்த வீட்டையெல்லாம் முழுக்கப் பார்த்தையோ? இங்கே இருக்கறவாளையெல்லாம் உனக்குப் பிடிச்சிருக்கோ? எங்க அண்ணா ரெண்டு பேரும் மகாசாதுக்கள். எங்க மன்னிகள் உன்மேலே பிரியமா இருக்காளோ? அதுவும் எங்க விசாலம் மன்னிக்குப் பொண்ணே கிடையாதோன்னோ...?" என்று அவன் அம்மாமி மாதிரி வந்து குழைந்து பேசுவதும் அவளுக்குச் சகிக்கவில்லை. கேட்டதற்குச் சுருக்கமான பதிலும், கேட்டுக் கொண்டு இருப்பதற்கடையாளமாக 'உம்' கொட்டிக் கொண்டும் அவனோடு பொழுதைக் கொன்று கொண்டிருந்தாள் சீதா.

அவன் அவளைப் பார்வையால் தின்றுகொண்டும், மதுவைப் பருகிக் கொண்டும் சற்று நேரம் போக்கினான். அவளிடம் தான் மிகவும் நல்லவன் என்று காட்டிக் கொள்வதற்காக "குட்நைட் டார்லிங்" என்று தன் அறைக்குப் போனான் சுகுமாரன்.

"குட்நைட்! நான் இந்தக் கதவை இந்தப் பக்கம் தாழ் போட்டுண்டுடவா?" என்று கேட்டாள் சீதா.

ஒரு நிமிஷம் அவள் முகத்தை வெறித்தபின் சொன்னான் சுகுமாரன்: "ஓ எஸ்...உனக்கு அப்பத்தான் தூக்கம் வரும்னா-தாழ் போட்டுக்கோயேன்...ஆனால் ஒண்ணு: என்னிக்கு நான் உனக்கு வேணுமோ-அன்னிக்குத் தாழ் போட்டுக்காமல் இருந்துடுவியாம்! ஓ. கே..."

"ஓ கே."-அந்தக் கதவு இப்போது என்ன எக்களிப்புடன் கிறீச்சிடுகிறது. ஒரு சிறிய அதிர்வுகூட இல்லாமல் பக்குவமாய்த் தாழிட்டு மூடிய கதவின் மேல் சாய்ந்து கொண்டு,

"தெய்வமே!" என்று நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கடவுளை வணங்கினாள் சீதா.

**ந**ள்ளிரவில்-

"மீனா...மீனா... என்று பலமுறை படுக்கையில் புரண்டு திரும்பிக் கூப்பிட்ட பங்கஜவல்லியம்மாள்,

மெள்ள முனகியவாறு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். கல்யாண அசதியால் அவள் இன்று முன்னேரத்திலேயே தூங்கி விட்டாள். இப்போது தூக்க மயக்கத்தில் எதற்கோ 'மீனா, மீனா' என்று முனகி எழுந்தவள், எதையோ திடீரென உணர்ந்து விழித்தவாறு படுக்கையில் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். இப்போது, மீனாவைக் கூப்பிடவில்லை. மெள்ள எழுந்து வந்து மாடிப்படியில் உள்ள மீனாவின் அறையை எட்டிப் பார்த்தாள். விளக்கில்லாவிட்டாலும் ஜன்னல் வழி வீசிய சிறு வெளிச்சத்தில் மீனாவின் படுக்கை வெறிச்சென்று கிடப்பது தெரிந்தது.

"அடே...பாவி! இன்னிக்குமா?" என்று அலற முடியாமல், நெஞ்சில் அடங்கிக் குமைந்த் குமைச்சலால் குரல் வளையை யாரோ திருகுகிறாற்போல் பங்கஜவல்லியம்மாளின் விழிகள் பிதுங்கின; வாய் விபரீதமாய்க் கோணிற்று.... தலைசுற்றி விழும்போது அவள் சுவரையோ வாசற்படியையோ தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கலாம்... அவளுக்கு வந்த ஆவேசத்தில் பங்கஜவல்லியம்மாள் இரண்டு கைகளாலும் 'பெத்தேனே...பெத்தேனே' என்று வயிற்றில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு 'தடாலென'த் தரையில் வீழ்ந்தாள்...

இரவின் அமைதியில் எல்லாரும் திடுக்கிட்டு விழிக்கும்படி அவள் விழுந்த சத்தம் பேரோசையாய்க் கேட்டது!

## 18

**ந**ல்ல வேளையாகப் பங்கஜவல்லியம்மாளுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை; விழுந்தவேகத்தில் தலையில் பட்ட அடியினால் அவள் மூர்ச்சையாகி விட்டாள்.

ஆடை குலைவுற்று அலங்கோலமாய் மாடிப்படிகளில் ஓடிவந்த மீனாதான் முதலில் அவளைப் பார்த்துத் தூக்கினாள். "மாமீ...மாமீ..." என்று பதறிப் புலம்பியவாறு எஜமானியின் தலையையும் உடம்பையும், 'எங்காவது அடிபட்டு விட்டதோ' என்று தடவிப் பார்த்தாள்...

அதற்குள் எல்லாரும் வந்து விட்டார்கள்; வீடு பூராவும் உள்ள விளக்குகள் ஒவ்வொன்றாய் எரிந்தன. அறைகளின் கதவுகளும் அவ்வாறே திறந்தன...பங்கஜ வல்லியம்மாள் அறையை நோக்கி அந்த வீட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் மனிதர்கள் சிதறி ஓடிவந்தனர்.

மூத்தவர் முத்துசாமி ஐயர் டாக்டருக்குப் போன் பண்ணினார். சிவராம ஐயர், தாம் காரை எடுத்துக் கொண்டு போய் அழைத்து வருவதாகச் சொல்லி வெளியே ஓடிவந்தார்.

அவுட்ஹவுஸ் முன்னால் திண்ணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த டிரைவர் கந்தசாமியை அவன் மனைவி சிவகாமி உரத்த குரலில் கூவி எழுப்பினாள்:

"ஐயே, இன்னா மனுசன் நீ...அங்கே பெரியம்மாவுக்கு என்னமோ ஆயிடுச்சின்னு எல்லாரும் அலறிக்கினு கீறாங்க...நீ தூங்கறியே...எய்ந்திரு...ஐயே !..."

'பெரியம்மாவுக்கு என்னமோ' என்ற வார்த்தைகள் சவுக்கால் சொடுக்கியதுபோல் கந்தசாமியைத் துள்ளியெழ வைத்தன.

சிவராம ஐயர் கார் ஷெட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்...

"சாமி...அம்மாவுக்கு என்னங்க ஆச்சு?" என்று கேட்டுக் கொண்டே அவரிடம் ஓடினான் கந்தசாமி.

வீட்டிலுள்ள பிற வேலைக்காரர்களின் கும்பலோடு சேர்ந்து, வெளியிலிருந்து ஜன்னல் வழியாகத்தான் சிவகாமிக்குத் தனது அன்பான எஜமானியைப் பார்க்க முடிந்தது.

''ஏழுமலையானே...வெங்கடாசலபதி...கருமாரி அம்மாளே...காமாட்சியம்மாளே...'' என்று கண்ட தெய்வங்களின் நாமங்களை உச்சரித்துக் கொண்டு, கைகளை நெறித்தவாறு அழுதாள் சிவகாமி.

"ஏ! காத்துவுடுங்க...போங்க அந்தப் பக்கம்" என்று எல்லாரையும் விரட்டினாள். பிறகு தனக்குள்ள தனிப்பட்ட சொந்தத்துடன் ஜன்னல் வழியாக "அம்மா... அம்மா..." என்று நடுங்கும் குரலுடன் கண்மூடிக்கிடக்கும் எஜமானியைக் கண் திறந்து பார்க்குமாறு வேண்டி அழுதாள் சிவகாமி.

பங்கஜவல்லியம்மாளுக்கு எல்லாப் பணிவிடைகளையும் செய்த பின்னர் ஒரு மூலையில் நின்று வாயில் முந்தானையைச் சுருட்டி அடைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள் மீனா. குற்ற உணர்வாலும், அவமானத்தாலும் அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கண் விழித்ததும் பங்கஜவல்லி மாமி தன்னை என்னவெல்லாம் கேட்பாளோ? கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி விரட்டியடிப்பாளோ என்றெல்லாம் எண்ணி மீனாவின் அறிவும் மனமும் தவித்துக் கொண்டிருந்தன...அவரவர் பதைப்பில் எவரும் மீனாவைக் கவனிக்கவில்லை. 'அவளது வருத்தம் எஜமானி அம்மாளின் உடம்புக்கு என்னமோ ஆகிவிட்டதற்காகத்தான்' என்று – அவர்கள் அவளைக் கவனித்த போதும் மீனாவுக்கு ஆறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தினர். மீனா தன் விதிக்காகவும், தனது நிலைமைக்காகவும் நெஞ்சு வெடிப்பது போல் கரைந்து கரைந்து மௌனமாக அழுதுகொண்டே இருந்தாள்; அவளது நெஞ்சுச்சுமை அழுதால் தீருமோ?

சுகுமாரன் 'செத்தாரில் வேறல்ல'னாய் மாடியில் தனது தனியறையில் நனவுலக நடப்புகள் எதையும் உணரமுடியாத மயக்கத்தில் வெறியடங்கிய அசதியில் ஆழ்ந்து உறங்கிக் கிடந்தான்...

சீதாவும் தனது தனியறையில் நன்கு உறங்கினாள். திடீரென்று கீழே ஏற்பட்ட சந்தடிகளின்போது அவள் விழித்தாள். ஆனால் படுத்திருந்த இடத்தைவிட்டுக்கூட அவள் எழுந்திருக்கவில்லை. அவள் அங்கிருந்த இரட்டைச் சோபா ஒன்றில் சாய்ந்த நிலையில் படுத் துறங்கிக்கொண்டிருந்தாள். எதிரே அலங்காரம் செய்யப் பட்டிருந்த கட்டிலில் தொங்கிய பூச்சரங்கள் காற்றில் ஆடி ஆடி உதிர்ந்தவாறிருந்தன.

பங்கஜவல்லியம்மாளுக்கு உடம்புக்கு ஏதோ என்று மட்டும் சீதாவின் மனதுக்குப் புரிந்தது. அதுவும், வீட்டுத் தோட்டத்திலும் பின்கட்டிலும் கூடிப்பேசுகிற மனிதர் களின் சம்பாஷணையால் தெரிந்தது. தான் கீழேயிறங்கிப் போவதோ, இந்தக் கூட்டத்தில் போய் நின்று கொள்ளு வதோ அவளுக்கு அவசியம் என்று தோன்றாததால் சிறிது நேரத்தில் மறுபடியும் சீதா ஒரு குழந்தைபோல் தூங்கிப் போனாள்.

டாக்டர் வருவதற்கு முன்பாகவே மயக்கம் தெளிந்த பங்கஜவல்லி மாமியிடம் கூப்பிய கரங்களுடன் நின்று அழுதாள் மீனா. அறையில் கும்பல் கலைந்திருந்தது. பங்கஜவல்லி அம்மாளுக்கு நினைவு திரும்பியதும் அறையில் நின்றிருந்த ஒவ்வொருவர் முகத்தையும் பார்த்தாள். அவளுக்கு 'என்ன நடந்தது, தன்னைச் சுற்றிலும் ஏன் எல்லாரும் வந்து நிற்கிறார்கள், இவ்வளவு வெளிச்சமாயிருக்கிறதே ஏன்' என்று எதுவும் முதலில் விளங்கவில்லை.

முகத்தருகே குனிந்திருக்கும் மீனாவின் கலங்கிய கண்களைப் பார்த்த போதுதான் - பின்மண்டையில் விழுந்த அடியால் லேசாக வலித்த வேதனையுடன், சற்றுமுன் இருளில் நடந்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது...

"மாமீ...மாமீ... என்று அழைத்து விசும்புவதல்லாமல் வேறொன்றும் பேசமுடியாமல் தவிக்கிற மீனாவின்

தலையைத் தடவிக்கொடுத்த பங்கஜவல்லியம்மாள் "நீ என்னடி செய்வே? பாவிப் பெண் ஜன்மமே... என்று அவளைத் தட்டிக் கொடுத்துவிட்டு அழுதாள்.

டாக்டர் வருவதற்கடையாளமாகக் கார் சப்தம் கேட்கவே இருவரும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். அவர்களிருவரின் நிலையையும் பார்த்தவர்கள், பங்கஜவல்லியம்மாள் சாவதற்கு அஞ்சி அழுவதாகவும், அந்த மரணத்துக்குப் பிறகு, தாயைப் போல் அன்பு காட்டுகிற எஜமானியை இழந்து மீண்டும் அநாதையாகிப் போவோமோ என்று ஏங்கி மீனா அழுவதாகவும் நினைத்தனர்.

டாக்டர் வந்து பங்கஜவல்லியம்மாளின் உடல்நிலையில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை ஆராய்ந்தார். ரத்த அழுத்தம் பார்த்தார். இருதயத் துடிப்பைச் சோதித்தார். இன்ஜெக்ஷன் செய்தார். பிரிஸ்கிரிப்ஷன் எழுதிக் கொடுத்தார்.

"ஒன்றுமில்லை-அதிர்ச்சிதான். பயப்பட வேண்டாம்" என்று தைரியம் சொல்லிவிட்டுப் போனார்.

எல்லாரும் அவரவர் இடத்துக்குத் திரும்பினர். கதவுகள் ஒன்றன் பின் ஒன்றாய் மூடிக்கொண்டன. விளக்குகளும் அவ்வாறே அணைந்தன.

பங்கஜவல்லியம்மாளின் அறையில் மங்கிய இரவு விளக்கு எரிந்து கொண்டிருந்தது... மீனா, அவளது கால்களை அமுக்கியவாறு கண்ணீர் சொரிந்த வண்ணம் "மாமீ...மாமீ..."

"மீனா-வருத்தப்படாதே...உன் மேலே எனக்கு ஒரு வருத்தமும் இல்லை...அவனுக்குன்னு ஒருத்தி வந்தப்பறமும் இதெல்லாம் என்னடி?...அவனை நீ கேக்கப்படாதோ?... என்று பொருமினாள் பங்கஜம். அவளது குரல் ரகசியமாய் ஒலித்தாலும் அருவருப்பால் ஆக்ரோஷமாய் இருந்தது.

"சொன்னேனே, மாமீ... சொன்னேனே!..." என்று தலையிலடித்துக் கொண்டாள் மீனா. அவள் கையைப் பிடித்துத் தடுத்தாள் பங்கஜவல்லியம்மாள். மீனாவின் மீது தான் குற்றம் சுமத்துவதில் ஒருவித நியாயமும் கிடையாது என்று சுகுமாரனைப் பெற்ற தாய் மனம் நன்கு அறியும்...

மீனாவின் படுக்கை ஒருநாள் நள்ளிரவில் காலி யாகிக் கிடந்ததையும், இன்னொரு நாள் பூனையொன்று எலியைக் கவ்விக் கொண்டு போவது போல் அவளை அவன் துடிக்கத் துடிக்கத் தூக்கிக்கொண்டு மாடிப்படி யேறிப் போனதையும் கண்ட காட்சிகளைப் புருவமும் நெற்றிச் சுருக்கங்களும் நெளிந்து புரள-நினைவுத் திரையில் கண்டாள் பங்கஜவல்லியம்மாள்.

பல நாட்களில் தூக்க மாத்திரையைப் போட்டுக் கொண்டு அவள் சமாதி நிலையில் தூங்கிவிடுவதால் இந்தப் பாபக் காட்சிகளைக் காணாமலும்-அதுபற்றி நினைக்காமலும்-தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு வாழ்ந்தாள் அந்தத் தாய்; தானறிந்த ரகசியத்தை மீனா விடம் காட்டிக்கொள்ளவும் பயந்தாள். அந்தக் காரணம் பற்றியே மீனாவின் மேல் தனியான பிரியமும் பரிவும் காட்டினாள். அதனாலேயே-அந்த அன்புக்கும் ஆதரவுக் கும் நன்றியுடையவளாகவும், உண்மையானவளாகவும் இருக்கும் பொருட்டே ஒரு நாள் பங்கஜவல்லி மாமியிடம் ஒரு வாக்குமூலம் போல் நடக்கிற எல்லாவற்றையும் மனம் திறந்து கொட்டி விட்டாள் மீனா.

"இப்படியொரு திருட்டுத்தனமான உறவிலே எனக்குத் துளியும் விருப்பமில்லே மாமி. பயந்து பயந்து தினம் தினம் நான் சேத்தைப் பூசிண்டுடறேன் மாமி... வேற எங்கேயானும் போயிடலாம்னா... எங்கே போனாலும் என் விதி இப்படித்தானே இருக்கும். அந்த வதை இங்கேயே நடந்து தொலையட்டும்னு-மானத்துக்குப் பயந்து, அதுவும் இந்தாத்து மானத்துக்கு என்னாலே கேடு வந்துடப்படா தேங்கறதுக்காக, திங்கற சாதத்துக்கு என் தேகத்தைக்

அர்ச்சனை பண்ணணும்'னு தொந்திரவு பண்ணிண்டு இருப்பே. அந்த வரையில் எனக்கும் சௌகரியமாப் போச்சு... என்று அவன் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்கக் கேட்க பங்கஜவல்லியம்மாளுக்கு நெஞ்சில் துக்கம் பொங்கி மூடிய இமைகளினூடே வழிந்தது-தன் அன்பு மகனை இந்த அளவுக்குத் தான் மனத்தளவில் துறந்து விட்ட-மறந்துவிட்ட நிலைமை குறித்து அவள் மனம் துக்கமும் வேதனையும் அடைந்தது.

கண்ணைத் துடைத்துக்கொண்டு அம்மா நிமிர்ந்து உட்கார்ந்து எதிரே நிற்கும் சுகுமாரனைப் பார்த்து, இப்போதுதான் மயக்கத்திலிருந்து உணர்வு பெற்றவள் போன்ற பாவனையுடன் "சுகுமார்...இன்னிக்கு நோக்கு ஜன்ம நட்சத்திரம்னு நேக்கு ஞாபகம் இருக்கு. நீ ஆத்துக்கே வரலியே பத்து நாளா... நீ இன்னிக்கு ஆத்திலே இருப்பயோ மாட்டியோன்னுதான்...இந்த மயக்கத்திலேயும் நினைச்சுண்டு இருந்தேன்..." என்று சொல்லி அழுதாள்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணச் சொன்னால்–அழறியே...ம்ம்" என்று தாயின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டான். மீனா விபூதி கொண்டு வந்தாள். அம்மா மகனை ஆசீர்வதித்துத் திருநீறிட்டாள்.

"போறச்சே கபாலி கோயிலுக்குப் போயி ஸ்வாமி தரிசனம் பண்ணிண்டு போ...நீ தீர்க்காயுஸா, திடகாத்திரமா இருக்கணும்னு நானும் இங்கேருந்தே ஸ்வாமியை சதா பிரார்த்தனை பண்ணிண்டிருக்கேன்... சர்வேச்வரா....." என்று முனகி முனகிப் பேசிவிட்டு மெய்யாகவே அயர்ந்து விட்டாள் பங்கஜவல்லி அம்மாள்.

"ரொம்ப பேசாதீங்கோ...டாக்டர் சொல்லியிருக்காரோன்னோ!" என்றாள் மீனா.

சுகுமாரனும் சீதாவும் வெளியே வந்தனர்.

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்" என்று இனிமையான குரலில் மெல்லிய புன்னகையுடன் சுகுமாரனைப் பார்த்து வாழ்த்தினாள் சீதா.

லிருந்து படிகளில் இறங்கி வரும் சீதாவைப் பார்த்தார் சுந்தரசர்மா.

"வாங்கோ அப்பா!" என்று 'உரிமை'யுடன் தன் வீட்டுக்கு வந்த தகப்பனாரை வரவேற்றாளாம் பெண். சுந்தர சர்மா வாயெல்லாம் பல்லாய்ப் பூரித்து நிற்கிறார்!

"என்னம்மா, சந்தோஷமா இருக்கயா? உன் மாமி யாருக்கு உடம்புக்கு என்னவோன்னு போன் பண்ணினார் முத்துசாமி ஐயர்...என்ன ஆச்சு? அவர்-மாப்பிள்ளை எங்கே?" என்று விசாரித்தார் சுந்தர சர்மா.

ஏதோ இந்தப் பெரிய வீட்டுக்குரியவள் போல் வர வேற்று விட்டாளே தவிர, இப்போது அப்பா சொல்லுகிற எந்த விஷயத்திலும் தனக்குச் சம்பந்தமில்லாதிருப்பதை உணர்ந்து அந்த ஹாலில் வேறு யாராவது இருக்கிறார்களா என்று தேடிப் பார்த்தாள் சீதா.

காபி கொடுத்த மாமிதான் நின்றிருந்தாள்.

"என்ன ஆச்சு?" என்று அவளிடம் கேட்டாள்.

இரவில் நடந்த விருத்தாந்தங்களை அவளறிந்த விதமாய் விவரித்துச் சொன்னாள் அந்த மாமி.

"ஐயோ பாவமே! அடி ஏதாவது பலமாப் பட்டுட் டுதோ?...ஏன், கூட அந்த நர்ஸ் ஒருத்தியிருப்பாளே?" ...என்று விசாரித்தாள் சீதா.

"அவ தூங்கிண்டிருந்தா போலிருக்கு...பாத்ரூமுக்கு இருட்டிலே வழி தெரியாமல் போயிருப்பா...விழுந்துட்டா போலிருக்கு...."

இவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டவாறு சுகுமாரன் மாடிப்படிகளில் இறங்கி வருவதைப் பார்த்து–

"வாங்கோ...வாங்கோ" என்று எழுந்து நின்று வரவேற்றார் சுந்தரசர்மா.

"நமஸ்காரம் ஸார்" என்று சிகரெட் புகையும் கரத்தை உயர்த்தி மாமனாரை வரவேற்றான் சுகுமாரன்:

"என்ன, ராத்திரி அம்மா விழுந்துட்டாளா?" என்று இப்போதுதான் விஷயமறிந்த் சுகுமாரன் பங்கஜவல்லி யம்மாளின் அறைக்குப் போனான். கையில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு ஹவாய் செருப்பால் நசுக்கிவிட்டுச் சாவதானமாய் நடந்து போனான் சுகுமாரன்.

துணியும் துடைப்பமுமாய் அந்த மொசைக் தரையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த ஒரு வேலைக் காரப் பையன் அந்த மிதிபட்ட சிகரெட்டை எடுத்துப் போட்டுத் தரையை ஈரத்துணியால் துடைத்தான்.

சுகுமாரனைத் தொடர்ந்து சீதாவும் சுந்தரசர்மாவும் பங்கஜவல்லியம்மாளின் அறைக்குப் போயினர்.

வழியில் முத்துசாமி ஐயர் கையில் ஒரு பேரக் குழந்தையுடன் சுந்தரசர்மாவை நமஸ்காரம் செய்து வரவேற்றார்.

"ஒண்ணும் பயப்படும்படியா இல்லே...விழுந்த அதிர்ச்சிதான்...உள்ளே வாங்கோ" என்று 'மூத்தவன்' அழைத்த குரல் கேட்டுப் பங்கஜவல்லி அம்மாள் கண் திறந்து பார்த்தாள்.

வாசற்படியில் வந்து நின்ற சுகுமாரனைப் பார்க்க முடியாமல் அவளது கண்கள் கலங்கின. பங்கஜவல்லியம் மாள் தனது கண்களில் சுரந்த கண்ணீர்த் திரையில் மிதந்து தெரியும் மகனைக் கண்டு முகத்தை இருகைகளாலும் மூடிக் கொண்டாள்...

"அம்மா-உனக்கு ஒண்ணுமில்லே, பயப்படாதே என்று சொல்லிக்கொண்டே தாயின் படுக்கையோரமாய் உட்கார்ந்த சுகுமாரன்,

"மீனா எங்கே?" என்று திரும்பினான். அவளும் சுவரோரமாக நின்று அழுது கொண்டிருந்தாள்.

# 19

"அம்மா என்ன செத்தா போய்ட்டாள்? என்னத்துக்கு இப்பிடி மூலைக்கு மூலைக்கு நின்னுண்டு அழறேள்?" என்று மீனா அழுவதையும், அங்காங்கே வருத்தம் தோய்ந்த முகத்துடன் நிற்கும் பிற வேலைக்காரர் களையும் பார்த்து அதட்டினான் சுகுமாரன்.

'அழுவதுகூட ஒரு தப்பாகி விடுகிறதே... நான் இருந்தாலே தப்புத்தான். எனக்கு நாளோ இடமோ வரலியே- ஒரேயடியா போயிடறதுக்கு' என்று அழுகை யுடன் பொருமிக்கொண்டு மீனா அந்த இடத்தை விட்டே அகன்று போனாள்.

சீதா, பங்கஜவல்லியம்மாளின் பக்கத்தில் வந்து நின்றாள். அவளுக்கு இந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இன்னும் அந்நியர்களாகவே இருந்தனர். உடல் நலமில்லாமல் இருக்கிற எந்த ஒருவயோதிக ஸ்திரீ யையும் பார்ப்பதுபோல் அனுதாபமாய் மாமியாரைப் பார்த்தாள்.

பங்கஜவல்லியம்மாள் விழிகளை அகலத்திறந்து சீதாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்: 'அடீ' உத்தம மான பெண்ணே! இந்த நீசனை நீ தீண்டவும் மறுத்தா யாமே... இவன் ஒழுக்கங்கெட்ட தூர்த்தன் என்று உனக்கு எப்படியாவது தெரிந்து போயிற்றோ? இவனை மன்னித்து, நல்லவனாய் மாற்றி இவனுக்கு ஒரு நல்வாழ்க்கை தருவாய் என்றல்லவா நினைத்தேன்!...' என்று ஏக்கத்துடன் கெஞ்சுவது போலிருந்து பங்கஜம் சீதாவைப் பார்த்த பார்வை.

"உங்கப்பா வந்திருக்கார் போல இருக்கே... வாங்கோ... எனக்கு ஒண்ணுமில்லை-உக்காருங்கோ...இருட்டிலே போயி விழுந்து வெச்சேன்... பின் மண்டையிலே லேசா அடி...வயசாச்சோல்லியோ? தாங்க முடியலே, மயக்கம்

வந்துடுத்து...டாக்டர் வந்தார்; மருந்து, ஊசின்னு என்னமோ நடக்கறது..பெரியவன் ரொம்ப மனசு தாங்காதவன்...அடிச்சுப் புரண்டு டாக்டருக்குப் போன் பண்ணி, எல்லாருக்கும் சொல்லி அமக்களப் படுத்திட்டான் போலிருக்கு" என்று பங்கஜவல்லியம்மாள் சுந்தர சர்மாவிடம் நீளமாய், ஈனசுரத்தில் நிறுத்தி நிறுத்தி பேசிக்கொண்டே இருந்தாள்.

'இந்தப் பொண் வீட்டிலே காலடி எடுத்து வெச்ச வேளை'ன்னு ஏதாவது எல்லாரையும் போலப் பங்கஜம் அம்மாள் பேசிவிடுவாளோ என்று பயந்து கொண்டிருந்த சுந்தரசர்மாவுக்கு அவளுடைய பெருந்தன்மையான தோரணையைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலிருந்தது; கும்பிட்டார்.

"உங்கள் மனசுக்கும் குணத்துக்கும் பகவான்தான் பக்கத்திலிருந்து நீங்க விழறச்சே தாங்கிப் பிடிச்சிக் காப்பாத்தியிருக்கார்... என்று சம்மந்தி அம்மாளைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் சொன்னார் சுந்தரசர்மா.

சீதாவுக்குத் திடீரெனத் தன் தாயைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இந்தக் கல்யாணத்துக்கான பேச்சு வீட்டில் தொடங்கிய நாளிலிருந்து அவள் தன் தாயை விட்டுப் பிரிந்து விலகி வெகுதூரம் போய் விட்டாள் போலாகிவிட்டதை இந்த வினாடி ஆழ்ந்து உணர்ந்தாள் சீதா.

'அடி அம்மா நீயுமா?' என்று ஒருநாள் மனம் அதிர்ந்து நிராதரவாய் அவளை வெறித்துப் பார்த்தாளே சீதா-அந்த நிமிடம் முதல் தன் தாய் வேறு எந்தவொரு ஸ்திரீயும்போல், அந்நியமானவளாகத் தனக்குத் தோன்றினாலும் - இதெல்லாம் வெறும் தோற்றம்தானே?... 'அம்மா-நீ எப்படிப்பட்ட அம்மா' என்று மனம் கனிந்தது சீதாவுக்கு... இந்த க்ஷணமே அம்மாவைப் போய்ப் பார்த்தாக வேண்டும்...

"அப்பா நீங்க இங்கேருந்து ஆபீசுக்குப் போறேளா, ஆத்துக்குப் போறேளா?" என்று அப்பாவிடம் கேட்டாள் சீதா.

அப்பா யோசித்துச் சொன்னார்: "ஆபீசுக்குப் போய்ட்டு ஆத்துக்குப் போவேன்-ஏன்?" என்று புருவங்களை அவர் உயர்த்திச் சற்றுக் கண்டித்ததுபோல் கேட்டார்.

"நேக்கு-நம்பாத்துக்குப் போகணும், அம்மாவைப் பார்க்கணும்" என்று குனிந்த தலையுடன் குழந்தைபோல் சொன்னாள் சீதா. தனது தோற்றம் மனத்துள் சிரிப்பாய் இருந்தது அவளுக்கு.

உத்திரவும் அனுமதியும் வேண்டுமோ அவளுக்கு? அவள் நினைத்தால் இப்போதே, எங்கு வேண்டுமானாலும் அவள் போவதை எவர் தடுக்க முடியும்? ஆனாலும் பெத்தவாமேலே கூட மரியாதை இல்லாதவளா அவள்?

"நன்னாருக்கும்மா. உங்க மாமியார் உடம்பு இப்படி இருக்கச்சே...உங்கம்மாவுக்கு இப்ப ஒண்ணுமில்லே: ரெண்டு நாள் கழிச்சு நீ அங்கே வரலாம்... என்று குழந்தைக்குப் புத்தி சொல்லுகிற தோரணையில் பேசினார் அப்பா.

"சித்த நான் சொல்றதைக் கேப்பேளா?" என்று சுந்தர சர்மாவைக் கம்மிய குரலுடன் அழைத்தாள் பங்கஜ வல்லியம்மாள். வைரத்தோடு பளபளக்கும் அவள் செவி அருகே குனிந்து 'சொல்லுங்கோ' என்று பணிந்து கேட்டார் சுந்தரசர்மா.

"குழந்தை எப்பிடிப் பிரியப் படறாளோ, எங்கே இருக்கணும்னு, போகணும்னு, வரணும்னு நெனைக்கிறாளோ அதுக்கு யாதொரு தடையும் போடறது இந்தாத்து வழக்கமில்லே...எங்காம் உங்காம்னு அவ சொல்லலே பாருங்கோ... நம்மாத்துக்குப் போகணும்னு தானே சொல்றாள்! அதுவும் நம்மகம்தான்...என்னைப் பார்த்துக்க

இந்த வீட்டிலே ரொம்பப்பேர் இருக்கா... கொழந்தை, சீதா நீ மகராஜியா உங்காத்துக்குப் போயிட்டு வாடிம்மா...” என்று அனுமதியளித்தார் மாமியார் அம்மாள். மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்தவள்தான் இந்த மாமியார் எனும் மரியாதை உணர்ச்சி அவள் மீது ஏற்பட்டது சீதாவுக்கு.

சுகுமாரனைப் பார்த்தாள். அவன் கலகலவெனச் சிரித்தான்: “வாட் ஆர் யூ டாக்கிங்?...அது என்னோட கடமையில்லையா? நான் உன் அப்பாவை ஆபீசில் விட்டு விட்டு, உன்னையும் உங்க வீட்டிலே இறக்கிவிட்டு விட்டு வரலாமே?” என்று ஆங்கிலத்தில் சொன்னான் சுகுமாரன்.

“தாங்க்யூ” என்றாள் சீதா.

சீதாவை அவர்கள் ராணிபோல் கொண்டாடு வதைக் கண்டு பூரித்து விம்மினார் சுந்தர சர்மா. அவரது பூரிப்பும் விம்முதலும் சீதாவுக்குப் பரிதாபக் காட்சியாய்த் தோன்றிற்று. பாவம், அப்பா!... என்று நினைத்த மாத்திரத்தில் கண்கள் கரித்தன அவளுக்கு.

‘கமான்’ என்று அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான் சுகுமாரன். அவனும் அவளும் ஜோடியாய்ப் போய்க் காரில் ஏறுவதை வீட்டில் உள்ளோர் அனைவரும் ஒரு காட்சிபோல் ஆங்காங்கே நின்று பார்த்து ரசித்தனர். சுந்தரசர்மா பின்ஸீட்டில் ஏறிக்கொண்டார்.

அந்த வெள்ளை நிறக் கார் புறப்பட்டது. முதலில் சுந்தரி பத்திரிக்கை ஆபீஸில்-கேட்டைத் தாண்டாமல், தெருவிலேயே சுந்தர சர்மாவை இறக்கிய பின், கடற்கரைச் சாலை வழியாகச் சுற்றிக்கொண்டு மைலாப்பூர் வந்தது கார்...

அப்பாவை ஆபீசில் இறக்கிவிடுகிற வரை யாரும் ஒன்றும் பேசவில்லை.

நடுவில் ஒரு தடவை ‘டிராஃபிக் சிக்னலு’க்காக நிற்க நேர்ந்தபோது சுகுமாரன் சிகரெட பற்றவைத்துக்

கொண்டான். அப்போது சீதாவிடம் ஆங்கிலத்தில் நாகரிகமாய் அனுமதி கேட்டான். அதே நாகரிகத்துடன் அவள் அவனுக்குப் பதிலும் சொன்னாள். "என் மாமனார் இதையெல்லாம் பொருட்படுத்தமாட்டார்'' என்று ஆங்கிலத்தில் கூறிச் சிரித்தான்.

"மாப்பிள்ளை மாமனாருக்கு 'ஆஃபர்' பண்ணாமல் ஸ்மோக் பண்றதைத்தான்-ஆட்சேபிக்கிறேன்'' என்று ரொம்ப ஹாஸ்யமாகச் சொல்லிவிட்ட திருப்தியுடன் சிரித்தார் சுந்தரசர்மா.

"ஐ ஆம் ஸாரி" என்று சிகரெட் பாக்கெட்டையும் லைட்டரையும் பின் ஸீட்டுப் பக்கம் திரும்பி சுந்தரத்திடம் தந்த பின்-

அப்பாவை இறக்கி ஆபீசில் விடுகிற வரை யாரும் ஒன்றும் பேசவில்லை.

கடற்கரைச் சாலையில் வந்து கொண்டிருந்தபோது சீதாவுக்குத் தானும் தன் சிநேகிதிகளும் நின்றிருந்த பஸ் ஸ்டாப்பும், பன்னீர் மரத்தடி நிழலும், புல் தரையும், கடற்கரை மணற்பரப்பும் ஏதோ பழங்காலக் கதைகளை நினைவுபடுத்துவது போலிருந்தது. அந்த உணர்ச்சி அவளுக்குப் புதுமையாயிருந்தது. வாழ்க்கையில் ஓர் அத்தியாயம் முடிந்து மறு அத்தியாயம் தொடங்குவதும் கூட, ஒரு நாவலைப் போலவே எவ்வளவு வேகமாய்-ஒரு பக்கத்தைப் புரட்டுவது போலவே-திடீர் என்று தொடங்கி விடுகிறது என்று சீதா யோசித்துக் கொண்டிருந்தாள்.

சுகுமாரனும்கூட, கல்யாணத்துக்கு முன்பு ஒரு நாள் இந்தக் கடற்கரையில் வந்து இவளுடன் பேசிக் கொண்டிருந்ததை நினைத்தவண்ணம் காரோட்டிக் கொண்டிருந்தான்.

பக்கவாட்டில் அவளைத் திரும்பி அடிக்கடி பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய பார்வை தனது செவிமடலிலும், கழுத்தோரத்திலும், புஜத்திலும் ஊர்ந்து நமைச்சல் தருவது போலிருந்தது அவளுக்கு.

"சீதா, உன் அப்பாவை முதலில் எங்கே சந்தித்தேன் என்றதற்கு நான் அன்றைக்குச் சொன்னேனே, அதை வைத்து நீ ஏதேனும் அவரைத் தப்பாய் நினைத்து விட்டாயோ?" என்று கேட்டான் சுகுமாரன். அவனது கேள்வி புரியாமல் புருவத்தை உயர்த்தியவாறு அவனைப் பார்த்தாள் சீதா.

"அவர் அங்கெல்லாம் வருவார். அவரை அவாளுக் கெல்லாம் தெரியும்! ஆனால் அவர் தாமரை இலைத் தண்ணீர் போலத்தான்-பட்டும் படாமல் நழுவி விடுவார்...

'எதுக்கு அந்தக் கர்மத்தைப் பேச ஆரம்பிக்கணும்' என்று சீதாவின் மனம் சுளித்தது. இருந்தாலும் அவன் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டாள்.

சுகுமாரன் தொடர்ந்து சொன்னான்:

"உங்கப்பாகிட்ட எனக்குப் பிடிச்ச குணம் அவரோட ஃப்ராங்க்னஸ்! எந்த மாதிரி கம்பெனியிலே யும் அவர் பொருந்திண்டுடுவார்...ஆனால் தன்னைக் காப்பாத்திண்டுடுவார்...அவரை நான் ஒரு நைட் கிளப்லே பார்த்தேன்னு சொன்னதை நீ தப்பா ஏதாவது புரிஞ் சுண்டு இருப்பியோன்னு இப்ப தோணித்து...அப்படிப் பொருள் படும்படி நான் சொல்லியிருந்தால், அது மகா தப்பு. உண்மையில் அவர் ஏகபத்னி விரதன்...எங்களோட எல்லாம் எத்தனை மணி வரைக்கும் கூத்தடிச்சாலும் வீட்டிலே போய், ஆத்துக்காரி கையாலே கொஞ்சம் மோருஞ்சாதம் சாப்பிட்டாத்தான் நிம்மதியாத் தூக்கம் வரும்னு சொல்லுவார்" என்று சுந்தரசர்மாவைப் பற்றி அவன் இவ்வளவும் சொன்னதற்குக் காரணமும் நோக்கமு மாய் அவனது கடைசி வார்த்தைகள் ஒரு பெருமூச்சுடன் வெளிவந்தன. "சிலபேர்தான் மனைவி விஷயத்தில்

கொடுத்து வைத்தவர்கள்-அந்தச் சிலரில் உங்கப்பா ஒருத்தர்...'

சீதாவுக்கு தன் தாயை நினைத்து ஏனோ இப்போது கண்கள் சுரந்தன. அவளது சகோதரிகள் எல்லாரும் அவரவர் புக்ககத்துக்குப் போயிருப்பார்கள். அம்மா தனியாக, அந்த வீட்டின் அடுக்களையிலும் புழக்கடையிலும் உழைத்துக் கொண்டிருப்பாள் என்று நினைத்தாள்.

அம்மா படும்சிரமங்கள் எல்லாம் அப்பாவின்மீது அவள் வைத்துள்ள கண்மூடித்தனமான அன்பினால் தானே? அதேபோல் அப்பாவுக்கும் அவள் பால் உண்டு என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அதை அப்பாவின் சாமர்த்தியம் என்று மட்டுமே நினைத்திருந்தாள் சீதா. இப்போது இவன் சொல்லுவதைக் கேட்டால் அப்பாவுக்கும் அவள் மீது அதே விதமான கண்மூடித்தனமான அன்பு உண்டு போலும்...இந்தப் பெரியவர்கள் உறவு எல்லாம் சின்னவளான தனக்குப் புரியுமோ என்று மலைத்தாள் சீதா.

சுந்தரசர்மாவின் வீட்டு வாசற்படியில் சீதா இறங்கியதும் சுகுமாரன் புறப்படத் தயாரானான்; "உனக்கு எப்ப வரணுமோ அப்ப ஆத்துக்குப்போன் பண்ணிக் காரை அனுப்பச் சொல். நான் இருந்தால் நானே வந்து அழைச்சிண்டு போவேன்" என்றான்.

திடும் பிரவேசமாய் வந்து நிற்கும் மகளைப் பார்த்துவிட்டு உள்ளேயிருந்து ஓடிவந்தாள் அம்மா.

"என்னடி வாசல்லேயே நிறுத்திப் பேசிண்டு இருக்கே...மாப்பிள்ளையை உள்ளே வரச் சொல்லுடி.... வாங்கோ" என்று படபடத்தவாறு வந்து நின்றாள் அம்மா: "அவர் காலையிலேயே அங்கேதானே புறப்பட்டு வந்தார்."

"அம்மா கூப்பிடறாளே...வந்துட்டுப் போறேளா?" என்று அவன் பக்கம் திரும்பி உதடுகள் அசைவது தெரியாமல் கேட்டாள் சீதா.

"அம்மாதானே கூப்பிடறாள்? அதுக்கென்ன-நீ என்னை "வாங்கோ'ன்னு கூப்பிட்டால் வருவேன்" என்று கண்சிமிட்டலுடன் சொன்னான் சுகுமாரன். அதைக் கவனிக்காதவள் போல் சீதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கார் புறப்பட்டது.

## 20

"அம்மா! இங்கே வந்தப்பறம்தான்-நம்மாத்திலே இருக்கோம்னு நிம்மதியா இருக்கு...இரு கொஞ்சம் ஜலம் குடிச்சுட்டு வரேன்..." என்று உள்ளே ஓடி, ரெஃப்ரிஜி ரேட்டரைத் திறந்து ஒரு பாட்டில் தண்ணீரை 'மடக் மடக்' கென்று குடித்துவிட்டுச் சேலைத் தலைப்பால் மோவா யின் இரு புறமும் வழிந்த ஈரத்தைத் துடைத்துக்கொண்டு வருகிற சீதாவை வியப்புடன் மோவாயில்... கை வைத்த வண்ணம் பார்த்தாள் அம்மா.

"அது என்ன வீடா! பெரிய ஜெயில் மாதிரி-ஆஸ் பத்திரி மாதிரி, ரயில்வே ஸ்டேஷன்லே அப்பர் கிளாஸ் வெய்ட்டிங் ரூம்லே தங்கியிருக்கிற மாதிரி..ஜேஜேன்னு ஜனங்கள்...அந்த மாமி வேற ராத்திரி இருட்டிலே தடுமாறி விழுந்து வாரிண்டு படுத்துக் கிடக்கா...நமக்கென்ன ஆச்சுன்னு நான் ஓடி வந்துட்டேன்" என்று சொல்லிக் கொண்டு குழந்தைபோல் சோபாவில் பொத்தென்று விழுந்து புரண்டு இந்த வீட்டோடு சொந்தம் கொண்டாடிச் சிரித்தாள் சீதா.

அம்மாவுக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

"பாட்டி எப்படி இருக்காள்?" என்று நேற்றுகூடப் பார்த்தவளை, வெகு நாள் பிரிந்தவள் போல் இன்று விசாரிக்கிறாளே என்று சிரித்தாள் அம்மா.

சீதா மாடிக்குப் போனாள். தனது படிக்கும் அறைக்குள் போய் நின்று, புத்தக அலமாரி, மேஜை நாற்காலி எல்லாவற்றையும் பார்த்தாள். மேஜையருகே உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டி நடுவில் ஒரு பக்கத்தை ஸீரியஸாகப் படித்தாள்.

"அம்மா...தட்டு எடுத்து வையேன்...எனக்குப் பசிக்கிறது" ஒரு முறை குரல் கொடுத்தாள். தலைப் பின்னலை அவிழ்த்து உதறி முடிச்சிட்டுக் கொண்டு சீதா மாடிப்படிகளில் இறங்கி வந்ததைக் கண்டபோது, இவளுக்குக் கல்யாணம் நடந்ததும் இவள் இன்னொரு வீட்டுக்குப் போனதும் எல்லாம் ஒரு கனவோ என்பது போல் பொறி தட்டிப் பிரமை உண்டாயிற்று அம்மாவுக்கு.

குழந்தை 'பசிக்கிறது' என்று ஓடி வருவதைப் பார்த்து "வாடி...வா...நோக்குப் பிடிச்ச சமையல்...அப்பா காலையிலே அவசரமா வெளியே போனாரோல்லியோ? நேக்கும் சாப்பிடத் தோணலே...அவர் வரட்டும்னு எடுத்து வெச்சுட்டு காத்திண்டு இருந்தேன்... என்று தட்டும் தம்ளரில் தண்ணீரும் எடுத்து வைத்தவாறு மகளைப் பரிவுடன் அழைத்தாள்.

"இரு, ஒரு நிமிஷம்...மாரியம்மாளுக்கு ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன்...அப்புறம் அவள் யூனிவர்சிடிக்குப் போயிடுவாள்..." என்று சொல்லிக் கொண்டே முன் அறைக்கு ஓடிப் போன் பண்ணினாள் சீதா. டயல் சத்தம் கேட்கிறது. தொடர்ந்து,

"மிஸ் மரியம் வேணும்...ஆமாம். முப்பத்தி மூணாம் நெம்பர் அறை... இரண்டாவது மாடியிலிருந்து அவள் போனுக்கு வருகிற வரை காத்திருக்கிறாள் சீதா. அம்மா வாசற்படி வரை வந்து பார்த்துவிட்டு, 'அவள் பேசி விட்டு வரட்டும்' என்று திரும்பி வந்து ஹால் சோபாவில் அமர்ந்தாள். மரியத்துடன் பேசும் சீதாவின் குரல் வெளியிலும் கேட்கிறது.

*"ஹாய்-மரியம்! சீதா ஹியர்...எங்கே இருந்தா? எங்காத்திலே இருந்துதான்...நீ இன்னிக்கு ஃப்ரீயா? நானே வரேன் ஹாஸ்டலுக்கு...உனக்கு ஈவினிங் கிளாஸ் தானே? நான் மத்தியானம் ஒன் அண் டூ வரனே... நேர்லே பேசுவோம்... வேற ஏதாவது விசேஷம்...சோவியத் சீதா லெட்டர் எழுதியிருக்காங்களா?...அதுக்காகவே வரேனே... வேறயா? இருக்கு...ரொம்ப முக்கியமான விஷயம். நேரில் நிறைய.. பேசலாம் ஓ.கே...மீட் யூ-"*

அம்மாவுக்கு சீதாவின் போக்கில் ஏதோ புதுமை-பொய்யான - நடிப்பு போன்ற-அவளுக்குச் சற்றும் பொருந்தாத-அலட்சியப் படுத்துகிற தோரணை தென் பட்டது...சீதாவின் சந்தோஷம்கூட ஒருவித மேற்பூச்சுப் போல் அம்மாவின் உணர்ச்சிக்குத் தெரிந்தது.

*'எங்கே வந்தாளாம்? மாமியார்க்காரி கீழே விழுந்துட் டாள்-டாக்டர் வந்தார்னு கதையெல்லாம் சொல்லிண்டு... பொழுது ஒரு பக்கம் விடிஞ்சவுடனே பொறந்தாத்திலே வந்து நிக்கறதே இந்தப் பொண்! சும்மாயிருப்பார்களோ புக்காத்து ஜனங்கள்'* என்று பலவிதமாக மனம் அடித்துக் கொண்டது அம்மாவுக்கு.

சீதாவுக்குச் சாதம் பரிமாறினாள்... *"சீதா என்னடி இப்படிச் சாப்பிடுகிறாய்? என்ன அவசரம்?"* பலநாள் பட்டினி கிடந்தவள் போல் சீதா கை நிறைய அள்ளிவாய்-நிறைய நிறைய்ச் சாப்பிடுவதைக் கண்ட அம்மா, *"என் கண்ணே, நோக்கு நிஜமாலும் பசிதானடி... இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்கோ, கறிபோடவா?"* என்று உபசரித்தாள்.

*"எனக்கு அந்தாத்து சமையல் ஒண்ணும் பிடிக்கலே... சும்மா பேருக்கு ரெண்டு வாய் சாப்பிடறது...இன்னிக்கி காபி குடிச்சவுடனே இங்கேதான் வந்து உன் கையாலே சமைச்சதை சாப்பிடணும்னு நெனைச்சுண்டு வந்துட்டேன்..."*

"பேஷா வாடி அம்மா...தினம் வேணும்னாலும் வந்து நீ சாப்டுட்டுப் போ. எனக்கு சந்தோஷம்தான்...ஆனாலும் புதுசா கல்யாணமானவள் இப்படி ஒத்தையா ஓடிவரு வாளோ?...இப்ப வேற சாப்பிட்டத்துக்கப்பறம் வெளியே போகப் போறேங்கிறே! நாளைக்கு அவா ஒரு வார்த்தை சொல்லும்படியா ஆகப்படாது. பொண்ணை இப்படி வளர்த்து வெச்சிருக்காளேன்னு என்னைத்தானே ஏதேனும் சொல்லுவா..." என்று மகளுக்குப் புத்திமதி சொன்னாள் அம்மா.

சீதா கேட்டுக்கொண்டாள். சாப்பிட்டுக்கொண்டே யோசித்தாள். இது தன் வீடு என்று சொந்தம் கொண் டாடுவது எவ்வளவு பொய்யானது என்றும் அவளது மனத்துக்குப் புரிந்தது. அம்மாவை நிமிர்ந்து பார்த்து மனத்துள் சொல்லிக் கொண்டாள்: 'அம்மா' இது உன் வீடு-உனக்குத்தான் சொந்தம். உன் புருஷன்...சுந்தர சர்மா சம்பாதித்து வைத்த வீடு அவரது மனைவிக்குத்தான் சொந்தம். தாய்க்கு, மகளுக்கு எல்லாம் என்ன சொந்தம்? நம்ம சட்டம், சாஸ்திரம் எல்லாம் அப்படித்தான். பெண்டாட்டிக்குத்தான் எல்லாம் சொந்தம்னு சொல்லு கிறது' என்று யோசித்த சீதாவுக்கு...அப்படியென்றால் அந்தப் பெரிய வீடு தனக்குத்தான் சொந்தம் என்றும், தானே அதன் எஜமானி என்றும் நினைத்தபோது உள்ளூர நேர்ந்த பயத்தால் அவளுக்கு உடம்பு ஒரு முறை குலுங்கு கிறது...

'எனக்கு யாருமில்லை' என்று மனத்துள் சொல்லிக் கொண்ட சீதா 'எனக்கு வீடும் இல்லை; மனுஷாளும் இல்லை' என்று முனகிக்கொண்டே கை கழுவினாள்.

"குழந்தை எங்கே இருக்கணும் போகணும் வரணும்னு பிரியப்படறாளோ அதுக்கு யாதொரு தடங்கலும் இந்த ஆத்திலே கிடையாதுன்னு அந்தாத்துப் பெரிய எஜமானியே சொல்லிட்டார்" என்று பங்கஜவல்லி யம்மாள் சொன்னது போலவே நடித்துக் காட்டினாள்

சீதா. அவள் சொல்லிக் காட்டிய தினுசில் அம்மாவுக்குச் சிரிப்பு வந்தது.

"உன் மாமியார் ரொம்ப நல்லவள்; நீ அதிர்ஷ்டக் காரியடி!" என்று சீதாவின் கன்னத்தை வழித்து நெட்டி முறித்தாள் அம்மா.

சாப்பிட்டபின் சீதா மாடிக்குப் போனாள். உடை மாற்றிக்கொண்டாள். முன்பு போல்..யூனிவர்ஸிடிக்குப் போவதுபோல்...தோளில் ஒரு பையை மாட்டி அதில் ஏதோ சில புத்தகங்களை வாரிப் போட்டுக்கொண்டாள். தன் தோற்றத்தைக் கண்ணாடியில் நின்று பார்த்தபோது புதிதாக-பொருத்தமற்றதாக-கழுத்தில் சுற்றிக்கிடந்த அந்த மஞ்சள் சரடு தெரிந்தது. குளிக்கும் போதும் படுத்திருக்கும் போதும் அது ஒரு புதிய தொந்தரவாய்த்தான் இருக்கிறது. அதுவும் வெறும் நூல் கயிறு. நனைந்து போனால் கொஞ்சத்தில் காயாமல் துணியை வேறு கறைப்படுத்தி விடுகிறது... சே! கழுத்தைச் சுற்றி ஒரே கறை கறையாய்...

கழுத்திலிருந்து அந்த மஞ்சள் சரட்டைக் கழற்றிக் கையில் ஏந்தி ஏதோ ஒரு நூலாம்படையைப் பார்ப்பது போல் கண்ணாடிக்கு நேரே பிடித்துப் பார்த்தாள்... தோளில் தொங்கும் பைக்குள்-ஒரு காகிதத்தில் வைத்துப் பொட்டணமாய் மடித்துப் போட்டுக்கொண்டு வெளியில் புறப்பட்டாள்.

அவளைப் பார்த்து மகிழ்ந்து வழியனுப்புகிறபோது 'அம்மா தன் கழுத்தைக் கவனிக்கறாளா?' என்று சற்று அச்சத்துடன் பார்த்தாள் சீதா. அம்மாவுக்கு இருக்கிற சந்தோஷத்தில் எங்கே அதையெல்லாம் பார்க்கப் போகிறாள்? அவள் அதைப் பார்க்காததில் சீதாவுக்கு ஆறுதலாய் இருந்தது.

'என்னத்துக்கு அவர்கள் மனத்தை எல்லாம் நோக வைப்பானேன்?' என்ற நினைப்புடன் கழுத்தை மூடி மறைத்துக்கொண்டு அம்மாவிடம் விடை சொல்லிப் புறப்பட்டாள்.

பெண்கள் விடுதி வாசலில் சீதாவை வரவேற்க வந்து நின்றிருந்தாள் மாரியம்மாள்.

"ரூமுக்குப் போய்ப் பேசலாமா? எங்காவது வெளியில் போய்ப் பேசலாமா... உன் முக்கியமான விஷயத்தை?" என்று கேட்டாள் மரியம்.

"முதலில் ரூமுக்குப் போவோம். அப்புறம் எங்காவது வெளியில் போவோம்" என்று அவளுக்கு முன்னால் நடந்தாள் சீதா.

போகிற வழியில் அந்த விடுதித் தலைவி ஆபீஸ் ரூமில் எதிர்ப்பட்டாள்.

"மிஸஸ் சீதா... கங்க்ராஜுலேஷன்ஸ்...கல்யாணத் துக்கு வர முடியலேம்மா...அப்போ ஐ வாஸ் ஸீரியஸ்லி இல்!..மிஸ் மரியம் சொல்லலியா! ஹவ் இஸ் லைஃப்..." என்று விசாரித்தாள். எல்லாவற்றுக்கும் 'தாங்க்யூ... தாங்க்யூ' என்று பதில் சொல்லிக்கொண்டே நடந்தாள் சீதா.

மாடிப்படிகளில் ஏறிக் கொண்டிருந்தபோது எதிர்ப் பட்ட சில முகம் தெரிந்த-பெயர் தெரிந்த சினேகிதிகள் அவளுக்கு வாழ்த்துக் கூறினர். சிலர் பரிகாசமாய் 'ஹவ் இஸ் யுவர் ஹப்பி' என்று விசாரித்தனர்.

ஏதோ மிக முக்கியமான காரியமாய்ப் போகிற அவசரத்துடன் அவர்களுக்கெல்லாம் சுருக்கமாய் நன்றி சொல்லி விட்டு மாரியம்மாளுடன் அவளது அறைக்குள் வந்து கதவை மூடித் தாழிட்டாள் சீதா.

மாரியம்மாள் மின் விசிறியைச் சுழலவிட்டாள். வெயிலில் நடந்து, மாடிப்படியேறி வந்ததாலும், கல்யாண விசாரிப்புகளுக்கும் பதில் சொல்லி அசடு வழிந்த எரிச்சலாலும் சீதாவுக்கு முகமும் கழுத்தும் வியர்த்தி ருந்தது. நாற்காலியில் உட்கார்ந்த சீதா முந்தானையால் முகத்திலும் கழுத்திலுமிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டபோது மாரியம்மாளுக்கு சீதாவின் வெறுங் கழுத்து பார்வையில் பட்டு மனத்தில் சுருக்கென்றது.

'இவள்தான் இந்தக் கல்யாணத்தையே மறுக்கிறாளே?" என்ற நினைவு வந்தாலும் 'இதெல்லாம் என்ன விபரீத விளையாட்டு' என்றும் தோன்றியது மாரியம்மாளுக்கு.

"ஏய்! என்ன பார்க்கறே! கழுத்திலே தாலியைக் காணோமேன்னா?... அதனாலேதான் வேற யார் கண்ணிலேயாவது மாட்டிண்டுடப்படாதேன்னு ஓடி வந்தேன்" என்று சிரித்தவாறே பையிலிருந்த அந்தப் பொட்டணத்தை எடுத்து மாரியம்மாளின் முன் போட்டாள்.

"என்ன இது" என்று எடுத்துப் பிரித்தாள் மாரியம்மாள்.

"நான் ரொம்ப முக்கியமா உன்னிடம் பேச வந்தேனே அதுக்கான சப்ஜெக்ட்-கருப்பொருள்" என்று எகத்தாளமாய்ச் சொல்லிச் சிரித்தாள் சீதா. மாரியம்மாளும் சிரித்தாள்.

"ஒரு தடவை கட்டிக் கொண்டபின் இதைக் கழட்டி மடித்து வைத்துக் கொள்ளுவதால்...எல்லாம் பொய்யாகி விடாது...கழுத்திலேயே போட்டுக்கொள்" என்று அதை அவள் கழுத்திலேயே மாட்டினாள் மரியம். ஆழ்ந்த மௌனத்தில் சீதாவின் தலை குனிந்திருந்தது.

## 21

**சீ**தா பெரிய விழிகள் கலங்க நிமிர்ந்து பார்த்தாள். கண்ணாடியில் தெரிந்த அவளது தோற்றத்தை-கழுத்தில் அணிந்த தாலியின் கறை படிந்து நிற்கும் பரிதாபகரமான உருவத்தை வெறித்தவாறு சொன்னாள்.

"மரியம்...அதெல்லாம் பொய்தானடி. நான் அதைப் பொய்யாக்கிக் காட்டுகிறேன், பார். யார் எப்படி வேணு மானாலும், ஒரு பொய்யை மெய்ன்னு நினைச்சுண்டு போகட்டுமே, எனக்கென்ன? அதனாலே ஒரு பொய், உண்மையா ஆகிவிடுமோ?" என்று மார்பை வலியினால் அழுத்திப் பிடித்துக் கொள்ளுவது போல், அந்த மஞ்சள் சரட்டில் கொத்தாகக் கிடந்த மாங்கல்யத்தையும் பொன் மணிகளையும் கடகடவென்று ஓசையெழப் பிசைந்து கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்து போய் மரியத்தின் படுக்கையில் சாய்ந்தாள் சீதா.

மாரியம்மாளுக்குச் சீதாவின் கல்யாண வைபவக் கோலாகலங்கள் நினைவுக்கு வந்தன. இந்தச் சீதாவும் அந்தச் சுகுமாரனும் கழுத்தில் மாலையும் கையில் பூச்செண்டுமாக உட்கார்ந்திருந்த கண்கொள்ளாக் காட்சி... இவர்களின் பொருத்தத்தை ஒவ்வொருவரும் வாயாரப் புகழ்ந்து பேசிய மொழிகளும்...

அந்த இருவரின் பொருத்தத்தை சுகுமாரனின் அழகைப் பார்த்துத் தன் சிநேகிதியின் பொருட்டு மாரியம் மாளும் மகிழ்ந்து பாராட்டியபோது-அப்போதே சீதா, அவளை அருகே அழைத்துக் காதில் சொன்ன வார்த்தை களை மாரியம்மாள் தன் மன நிம்மதிக்காகப் பொருட் படுத்தாமலிருந்து விட்டாள் போலும்.

"இந்தச் சந்தடியெல்லாம் அடங்கிய பிறகு நாம் சாவகாசமாக ஒரு நாள் சந்திக்கவேண்டும்-வா, நான் சொன்னேனே-இது 'சீதாபகரணம்'தான்" என்று காதில் ரகசியம் போல் சொன்ன அந்த வார்த்தைகளை மீண்டும் இப்போது நினைவு படுத்திக்கொண்டாள் மாரியம்மாள். ஆனால் அதை அவள் பொருட்படுத்தி மதிக்குமாறு அந்தச் சூழ்நிலை இல்லை. இவள் மனம் இன்னும் ஒரு பொழுதில் மாறிவிடும் என்று மனத்துள் அன்றைக்குச் சிரித்துக் கொண்டாள் மரியம்.

ஆனால்-இதோ இந்தப் பெண் தாலியையும் அவிழ்த்துப் பொட்டணம் கட்டிக்கொண்டு வந்து தன்னெதிரில் நின்று 'அதெல்லாம் பொய்தான்' என்று அறுதியிட்டுக் கூறுவதன் அர்த்தம் புரியாமல்-சீதாவை ஒரு புதிர் போல் பார்த்தாள் மாரியம்மாள். இத்தனை நாட்களுக்குப் பிறகும் சீதா தனது நிலையை மாற்றிக் கொள்ளாமலிருப்பது அவளுக்கு வியப்பாகவும் விபரீதமாகவும் தோன்றியது.

சீதா தலையணையில் முகத்தைப் புதைத்து யோசித்துக் கொண்டிருந்தாள். அவளது தோளைப் பற்றிக் குலுக்கினாள் மாரியம்மாள். தான் அழுது கொண்டிருப்பதாக அவள் நினைக்கக்கூடும் என்று எண்ணிய சீதா நிமிர்ந்து எழுந்து தெளிவுடன் பளிச்சென்று அவளைப் பார்த்துச் சிரித்தாள்.

"சீதா நடந்ததெல்லாம் பொய்யின்னா அந்தப் பொய்க்கு நீ ஏன் உடன்பட்டே?"

"உடன்பட்டதாக நடிச்சேன்...

"அதுதான் ஏன்னு கேக்கறேன்? நீ ஏன் நடிக்கணும்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டாள் மாரியம்மாள்.

"எங்கப்பா, அம்மாவுக்கு நான் ஏதானும் நன்றிக் கடன் கழிக்க் வேண்டாமா? அவாளுக்கு இந்த உதவியை நான் செய்யலேன்னா அப்பா தற்கொலை பண்ணிண்டுடுவேன்னு சொன்னப்பறம்-அதை நான் நம்பலேன்னாலும்...அப்படியொரு வாழ்க்கைச் சரிவு அவருக்கு ஏற்படும்னு எனக்கே தோணித்து...நான் அவாகிட்ட, அவாளுக்காக ஒத்துண்டேன். அவாகிட்ட இருந்து விலகி என்னை நான் காப்பாத்திக்க முடியும்னு இப்பவும் நம்பறேன்..."

"நீ என்ன பேசறே சீதா?" என்று பொறுமையிழந்து குறுக்கிட்டாள் மரியம்:

"இனிமேல் நீ என்னத்தைக் காப்பாத்தி என்ன பிரயோசனம்? யார் தற்கொலை பண்ணிக்குவேன்னு பயமுறுத்தினாலும் 'நான் மாட்டேன்'னு உறுதியா சொல்லியிருக்கலாமே, நீ? இல்லேன்னா நிஜமாவே உன் மனசை மாத்திக்கிட்டு அதுக்கு நீ சம்மதிச்சிருக்கணும்.... இதில் போய் நடிச்சேன்கிறதும், இதைப் பொய் ஆக்கு வேன்னு வீரம் பேசறதும் என்ன நியாயம்? உன்னை நீயே damage பண்ணிக்கிட்டேன்னுதான் நான் சொல்லுவேன்? யாருக்கும் இதுமாதிரி விஷயத்திலே நடிக்கறதுக்கும் ஏமாத்தறதுக்கும் உரிமை கிடையாது. உன்னோட வாழ்க்கையோடும் இன்னொரு மனிதனின் வாழ்க்கை யோடயும் நீ ஒரு விபரீத விளையாட்டிலே இறங்கி இருக்கே?...இது ரொம்ப அபாயகரமானது; அவ்மான கரமானதும்கூட!" என்று கடுமையாகவும், கண்டிப் பாகவும் சீதாவுக்குப் புத்தி சொன்னாள் மாரியம்மாள்.

சீதாவுக்கு மாரியம்மாள் சொல்லுவது புரிந்தது: 'தன் பெற்றோருக்காக ஒரு பணக்காரனை-நேசிக்காமல் கல்யாணம் செய்து கொள்வது ஒழுக்கக் கேடான சமா சாரம் என்கிறாள் இவள். அதற்கும் மேல் பணத் தேவை பூர்த்தியான பிறகு இந்தக் கல்யாணத்தைப் பொய்யாக்கு வது ஒரு துரோகம் என்றுகூட இவள் நினைக்கலாம்.' சீதா பொறுமையுடன் மரியத்துக்குப் பதில் சொன்னாள்:

"நான் அவனிடம் நடிக்கவோ, அவனை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கறதாகவோ பொய் சொல்லலியே? ஒண்ணும் சொல்லாமல் இருந்தேன்னாகூட நீ சொல்ற மாதிரி அது ரொம்ப அவமானப்பட வேண்டிய விஷயம் தான். ஆனால் நான்தான் அவன் மூஞ்சிக்கு நேராகவே 'உன்னைப் பிடிக்கலே; நீ என்னைத் தொடக் கூடப் படாது'ன்னு சொன்னப்பறமும், அவன்தான் என்னை ஏற்கனவே வாங்கிப்பிட்டதாகச் சொன்னான். அதுக்கு மேலே நான் ஒண்ணும் செய்யறதுக்கில்லே. ஏதாவது செய்யறதுன்னாலும் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதம்

குடுத்த பிறகுதான் செய்ய முடியும்னு தெளிவாயிடுத்து... என்று நீளமாய்ச் சொல்லிக் கொண்டே வந்தவள்-மாரி யம்மாள் சொன்ன 'ஆபத்தானது' என்பதை நினைத்து, "பெண்களின் நிலைமை எப்படியிருந்தாலும் ஆபத்தானது தானே! லெட் மீ ஃபேஸ் இட்'னுதான் இதுக்குத் துணிஞ்சேன். இவனைக் கல்யாணம் பண்ணிண்டதாலே எனக்குப் பொறந்தகம் போச்சு....இந்தப் புக்ககம் எனக்கு என்னைக்கும் சொந்தமாகாது. நான் இப்ப ரொம்ப ரொம்பச் சுதந்திரமானவள்...அவன் எவ்வளவு கெட்ட வனானாலும் என்னண்ட மரியாதையைக் காப்பாத் திண்டுடுவான்னு நம்பறேன். அதுக்கு ஏதாவது பங்கம் வந்ததோ- 'இந்தாடா உன் தாலி'னு கழட்டி எறிஞ்சுட்டு நேரா இங்கேதான் வருவேன்...நான் உன்னண்ட பேசணும்னு வந்த முக்கியமான விஷயம் இதுதான். நீ உன் வேலை முடிஞ்சதும் ஹாஸ்டலை விட்டுப் போனாலும் நான் வந்து இருப்பேன்...

"அப்படியெல்லாம் ஒண்ணும் ஆக வேண்டாம்" என்றாள் மாரியம்மாள்.

"ஆகும்டி. ஆக்குவேன்டி" என்று ஆக்ரோஷமாகப் பக்கத்திலிருந்த மேசையின் மேல் குத்தினாள் சீதா.

"அப்புறம் நீ என்ன செய்வே?"

"என்னமும் செய்வேன். ஏதாவது ஒரு வேலை பாத்துண்டுடுவேன்...முடிஞ்சால் என்னோட 'தீஸீஸை'க் கம்ப்ளீட் பண்ணுவேன்...எப்பவாவது எங்க அம்மாவைப் போய்ப் பார்ப்பேன் அவ்வளவுதான்...

"உன்னுடைய வாழ்க்கையே இவ்வளவுதானா?" என்று வெறுமையாய்க் கேட்டாள் மரியம்.

"இதுக்கு மேலே ஒண்ணும் வேண்டாம்" இரண்டு கைகளையும் ஓசையெழத் தட்டிக் கும்பிட்டாள் சீதா.

"இந்தக் கல்யாணத்தை நீ மறுத்து விலகின பிறகு வேற கல்யாணம் பண்ணிக்கறதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"வேற கல்யாணம் பண்ணிக்க வேண்டிய நிலைமை வந்தால்-அதுக்காக இதை முறிச்சுண்டுடுவேன்...ஆனால் அதெல்லாம் அதுக்காக நடக்காது" என்றாள் சீதா.

சீதாவும் மாரியம்மாளும் .கான்டீனுக்குப் போய் டிபன் சாப்பிட்டார்கள். விடுதிக்கு முன்னாலுள்ள பூந்தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது தனது புகுந்த வீட்டைப் பற்றி, பங்கஜம் மாமியைப் பற்றியெல்லாம் சொன்னாள் சீதா.

"நீ ஏன் மிஸ்டர் சுகுமாரனை இந்த அளவு வெறுக்க வேண்டும்?" என்று திடீரென்று கேட்டாள் மரியம்.

"இல்லை மரியம்! நான் யாரையும் வெறுக்கவில்லை. எனக்கு அவன் புருஷன்னு பேரானப்பறம், அந்தப் பேரை மட்டும்தான் நான் சகிக்க முடியும். அவனை என் புருஷனாக நான் ஏத்துக்கவும் இல்லை. அவனும் என்னை வற்புறுத்தவும் இல்லை...அப்படி அவன் உரிமை கொண்டாடினால் நான் அவனை வெறுப்பேன்."

"உன்னை அவர் வற்புறுத்தினால்?"

"நான் தற்கொலை செய்து கொள்ளுவேன்; இல்லா விட்டால் வெளியேறிவிடுவேன். அதையெல்லாம் யோசித்து, அப்படியெல்லாம் ஏதேனும் ஆனால் உன் உதவி வேணும்னு நாடித்தான் நான் வந்தேன்... என்ற மரியத்தின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள் சீதா: "எனக்கும் யாரும் இல்லேடி மரியம்...உன்னைப் போல் சினேகிதிகள் உதவி இருந்தால் அது போதும்... என்று தனது நிராதரவான நிலைமையை எண்ணிக் கண் கலங்கினாள் சீதா.

"சோவியத் சீதாவின் கடிதத்தை நான் உனக்குக் காட்டவில்லையே!" என்று தனது கைப் பையிலிருந்த ஒரு கடிதத்தைத் தந்தாள் மரியம்.

அதில் சீதாவைப்பற்றி எழுதியிருந்த பகுதியைக் காட்டி, அதை முதலில் படிக்கச் சொன்னாள் மரியம்.

....நமது சீதாவின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. சீதாவுக்குத் திருமணத்துடன் இருந்த ஊடல் இப்போது தீர்ந்திருக்கும் என்று நம்புகிறேன். ஆம்; அல்லாமல் வேறென்ன? முன்பின் பழகாத அந்த வருங்காலக் கணவருடன் அவளுக்கென்ன ஊடல் இருக்க முடியும்? நமது அன்பிற் குரிய சிநேகிதி சீதா அவளுடைய 'ராம'னுடன் இனிது வாழ்வாள் என்று நம்புகிறேன். சீதாவைச் சந்தித்தால் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும். சீதாவை எனக்கு எழுதச் சொல்லவும். அவள் எனக்கு எழுதினால் நானும் எழுதுவேன்'...

"ராமன்!" என்று ஏளனமாய் முகம் சுழித்தாள் சீதா: "அது என்ன வெறும் பேரா? தடிராமன், தண்டச் சோத்து ராமன்கள் எல்லாம் ராமன் என்று பேர் வைத்துக் கொண்டால் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியாகி விடுவான்களா? சீதா என்று பேர் படைத்தவளுக்கெல்லாம் புருஷன் என்று பேரெடுத்துவிட்டால் அவனெல்லாம் ராமனா? விடு...நம் மீது கொண்ட நல்லெண்ணத்தாலும் நம்பிக்கையினாலும் அந்த சோவியத் பெண் நம்மையெல்லாம் உயர்வான வர்கள் என்று எண்ணுகிறாள். அந்த எண்ணத்தை நாம் ஏன் மாற்ற வேண்டும்? சீதா நலமாயிருக்கிறாள் என்று ஒரு வரி நீ எழுதினால் போதும். அவசியமானால் நானே அவளுக்கு விரிவான கடிதம் எழுதுவேன்" என்று அந்தக் கடிதத்திலிருந்த சோவியத் சீதாவின் முகவரியைக் குறித்துக் கொண்டாள் சீதா.

மாலை மணி நான்கு ஆகியிருந்தது.

"சீதா...அன்னிக்கு உங்கப்பா அறிமுகப்படுத்தி வெச்சாரே, மிஸ்டர் ராமதாஸ்-பாரதன், அந்த எழுத்தாளர்... 'ஹே! சீதே' எழுதினவர்..."

"சொல்லு, தெரியறது...

"அவர் அங்கேயே எனக்கு நண்பராயிட்டார். அவருக்கு ருஷ்ய மொழி படிக்கணுமாம். இந்தப் புது வகுப்பு இன்னியிலேருந்து தொடங்கறதனாலே அவரை வரச் சொல்லியிருக்கேன்...நீயும் வரலாமே...அவரைப் பார்த்துப் பேசேன்...ரொம்ப இன்ட்டரஸ்ட்டிங் சாப்... ஒரு நல்ல டைப்...

"இன்னொரு நாளைக்கு வரேன். அந்த ஆள் சுந்தரி ஆபீஸ்லேதான் இப்ப வேலை செய்றார்னு நினைக்கிறேன். சரி, உனக்கு வகுப்புக்கு நாழியாச்சு இல்லே" என்று புல்தரையிலிருந்து இருவரும் எழுந்து நடந்தனர் மாரியம்மாள் சீதாவை விடுதி வாசல் வரை வந்து வழியனுப்பினாள்.

ஆறு மணிக்கு வீடு திரும்பினாள் சீதா. அப்பா ஆபீசிலிருந்து வந்திருந்தார். மகளைப் பார்த்ததும் நிம்மதியாய் இருந்தது அவருக்கு.

"ஏண்டி உனக்குத் தலையெழுத்து! உன் வீடு நிறையக் கார்களும் டிரைவர்களும் இருக்கச்சே இப்படி பஸ்லே போயி வேர்க்க விறுவிறுக்க நடந்து வரே?" என்று மகளை வரவேற்றார்.

"நன்னாச் சொன்னேள்–அதான் என் தலை எழுத்து!" என்று சிரித்துக்கொண்டே மாடிக்குப் போனாள் சீதா.

மாடிப்படியில் நின்று திரும்பி அப்பாவைப் பார்த்துச் சொன்னாள்: "அப்பா, அந்தாத்துக்குப் போன் பண்ணி ஏழு மணிக்குக் கார் அனுப்பினால் போறும்'னு சொல்லிடுங்கோ..." என்றாள்.

அவளுக்குத் தெரியும், அந்த நேரத்தில் சுகுமாரன் வீட்டில் இருக்க மாட்டான் என்று.

## 22

இன்றும் நாளையும் இறந்து இறந்து பிறந்தன. இரவும் பகலும் புரண்டு புரண்டு சரிந்தன. நாட்கள் நகர்வதும் இல்லை; காலம் ஓடுவதுமில்லை. இலக்கும் பாதையும் இல்லாமல் சுழலுவதே இயல்பாகிப் போன இந்தப் புரளுதலில் எல்லையும் முடிவுமற்ற இந்த ஜகத் குழப்பத்தில் சிக்கிச் சீர்குலைந்து அழிந்து கரைந்து போவதல்லாமல் இந்த வெற்றுடம்பு வாழ்வில் இளமை என்ன? இன்பம் என்ன? என்ற விரக்தி சீதாவின் நெஞ்சுள் வைரம் பாய்ந்துவிட்டது!

தன்னை அவள் மிகச் சுதந்திரமானவள்ாக வைத்துக் கொண்டாள். அதேசமயம் சுகுமாரனின் மனைவி என்பதை ஓர் உத்தியோகம் போல, அதற்கு உரிய ஒருவகை உத்தியோக நேர்மையோடு வைத்துக் கொண்டாள். இதற்கெல்லாம் அடிப்படையாய் அவள் இந்த வாழ்க்கையுடன் பற்றற்ற சொந்தம் வைத்துக் கொள்ளப் பழகி விட்டாள், அறிவும் சிந்தனையும் நல்ல ஆத்மாவும் உடைய எவருக்கும் இது சாத்தியமே ஆகும்.

ஆனால் மற்றவர்கள்...

அதுவும் பங்கஜம் மாமி, அன்றைக்கு மாடிப்படியடியில் விழுந்தாளே, அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உடைந்து நொறுங்கி உருக்குலைந்து போய் விட்டாள். அவள் உடம்புக்கு வியாதியென்று ஏதும் இல்லாததால் டாக்டர்களையும் மருந்துகளையும் அவள் பிடிவாதமாய்ப் புறக்கணித்து விட்டாள். சாப்பாடும் தள்ளி விட்டது. எலும்பும் தோலுமாய் ஆகிவிட்டாள். சதா பூஜையும் ஸ்லோகமும், பகவான் நாமாவும் தவிர யாருடனும் அதிகம் பேசாத மௌனத்தில் ஆழ்ந்து விட்டாள் பங்கஜவல்லி. மீனா எப்போதும் போல் அவளுடனிருந்து சிசுருஷைகள் புரிகிறாள்.

சீதாவைப் பார்க்கும்போது மட்டும் பங்கஜவல்லியம் மாள் மாலை மாலையாய்க் கண்ணீர் உகுத்து மருகுகிறாள்... சுகுமாரனைப் பார்த்தால் கண்ணை மூடிக் கொண்டோ, வேறுபுறம் முகம் திருப்பிக்கொண்டோ பேசுகிறாள்... இதற்கெல்லாம் காரணம்: 'தனக்கும் இவள் மகனுக்கும் இன்ப வாழ்க்கை அமையாததும், அதனால் இந்தத் தாய் உள்ளத்துக்கு ஏற்பட்ட சோகம் இது!' என்றும் சீதா புரிந்து கொள்ள வேண்டுமாம்.

உதட்டில் நெளியும் புன்னகையுடன் மரியாதை யாகக் கை கூப்பிக்கொண்டு பங்கஜவல்லியின் பூஜை யறைக்கு வந்தாள் சீதா.

சீதா, சுகுமாரனின் துணையுடனோ, தனியாகவோ காலையில் ஒரு முறை தன் வீட்டுக்கு விஜயம் செய்வதும், தாயின் கையால் ஒரு வேளை சாப்பிடுவதும், பஸ்ஸில் ஏறிப் பயணம் செய்து மாரியம்மாளைப் போய்ச் சந்திப்பதும், லைப்ரரிக்குச் செல்வதும், படிப்பதும், எழுதுவதும் தனது அன்றாட அலுவல்களாய்க் கொண்டாள். ஆனால் மெய்யாக எதிலும் அவளுக்குப் பிடிப்பில்லை. சகடம் போன்ற வாழ்வை இழுப்பதும், தொழுவத்தில் வந்து படுப்பதும் எல்லா மனித மாடுகளுக்கும் பொதுதானே?

சில சமயங்களில் தனது 'மனைவி உத்தியோக'த்தின் நிமித்தம் இந்த அன்றாட அலுவல்களை அவள் ஒத்தி வைத்துக் கொள்ளவும் நேர்ந்தது.

அந்தச் சமயங்களில்-அவள் தன்னை ஓர் உயிருள்ள பிரேதம் போல் அலங்கரித்துக்கொண்டு அவனுடன் விருந்துகளுக்கும், விழாக்களுக்கும் போவாள். மாமியார் கொடுத்த பொன்னையும் வைரத்தையும் சுமந்து கொள்வதே போல், அவளுக்கு இயற்கை தந்துள்ள இனிய புன்னகையையும் ஏந்திக்கொண்டு அவனது நண்பர்கள் மத்தியில் அவனது கர்வத்தைக் காப்பாற்றுவாள். அவளது

அந்த நடிப்பை அவன் ரசித்து மயங்கியபோதிலும், அது ஒரு பொய் என்னும் உண்மை அவனுள் உறுத்தி உறுத்தி அவன் மனப்புழுக்கத்தில் பெருமூச்செறிந்து பொருமினான்...

சுகுமாரனுக்கு இதற்கெல்லாம் நேரம் வாய்ப்பது வர வர அரிதாகி விட்டது. அவன் தொழில் விஷயமாகவும், தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாலும் நாள் முழுதும் சூழப்பட்டிருந்தான். அவனது வாழ்க்கைச் சகடம் பொன்னிலும் செல்வத்திலும் புரண்டாலும் இழுக்கிற சுமை சுமைதானே? இரவில் குடிப்பதும், குடிவெறியில் இருட்டில் விளைகிற குருட்டுக் காமத்தைக் கொட்டித் தணித்துக் கொண்டு அவன் வீடு திரும்புகிறபோதும் சீதா தனது தனியறையில் தாழிட்ட கதவுகளுக்குப் பின்னால் நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்திருப்பாள்.

சில சமயங்களில் நள்ளிரவில் விழிக்கிறபோது சுகுமாரனது அறையில் விளக்கு எரிவது தெரியும். சீதாவுக்கு அவ்வளவுதான் தெரியும். பங்கஜவல்லியம்மாளுக்குத்தான் எல்லாம் தெரியும். அது காரணமாகத்தான் இந்தப் பேதைப் பெண்ணைப் பார்க்கும்தோறும் மனம் கலங்கி அழுகிறாள் அந்த மாமி.

**வ**ழக்கம்போல் வெளியில் புறப்படுவதற்கு முன் பூஜையறைக்கு வந்த சீதாவுக்குப் பிரசாதம் தந்தாள் மாமியார். பின்னாலேயே வந்தான் சுகுமாரன். அம்மாவின் உடம்பைப் பற்றியெல்லாம் அவன் விசாரிப்பதுமில்லை; கவலைப்படுவதுமில்லை. வெளியில் போவதற்கு அவன் வருவான். அம்மாவையும் பார்த்தது போலாயிற்று. போய் விடுவான். பகலில் அவனும் மீனாவும் யாரோவாகவும், இரவில் வேறாகவும் இருக்கிற ரகசியத்தை மனத்துள் வைத்துப் பொருமுகிற தாயின் உணர்ச்சிகள் சுகுமாரனுக்கும் தெரியாது. தனக்குத் தெரியும் என்று அவனுக்குத் தெரியக்கூடாது என்று மீனாவிடம் சத்தியம் வாங்கியிருக்கிறாள் அந்த மாமி.

"இன்னிக்கு நீ வேற கார்லேதான் உங்காத்துக்குப் போகணும். எனக்கு பத்துமணிக்கு ஒரு போர்ட் மீட்டிங் இருக்கு" என்று சொல்லிக்கொண்டே டிரைவரைத் தேடினான் சுகுமாரன்.

"பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று அவனை வழியனுப்பினாள் சீதா. அவன் அவளிடம் கையசைத்து விடைபெற்றுக்கொண்டு, காரோடு மறைகிறவரை காம்பவுண்டுக்குள் நின்றிருந்த சீதா டிரைவரையோ காரையோ எதிர்பார்க்காமல் கைப் பையைச் சுழற்றிக் கொண்டு 'பஸ்ஸிலேயே போகலாமே' என்ற தீர்மானத்தோடு நடந்தாள்.

அவள் காம்பவுண்டுக் கேட்டை நெருங்குவதற்கு முன்–ஜன்னல் வழியாக சீதாவைப் பார்த்த பங்கஜவல்லி மீனாவை அனுப்பி அவளைக் கூப்பிட்டு வரச் சொன்னாள்.

'எதற்காகத் தன்னைக் கூப்பிட்டு அனுப்புகிறாள்' என்று புரியாமலும், மீனாவை அது குறித்துக் கேட்காம லும் அவளைப் பின் தொடர்ந்து மாமியாரின் அறைக்கு வந்தாள் சீதா.

பங்கஜவல்லியம்மாள் மீனாவை வெளியில் போகுமாறு கண்ஜாடை காட்டினாள். மீனா போன பிறகு சீதாவை அருகே அழைத்து உட்கார வைத்துக் கொண்டு அவள் கரத்தைப் பிடித்து அன்புடன் வருடிக்கொண்டே சொன்னாள்:

"எனக்குத் தெரியும், நீ உங்காத்துக்குப் பஸ்ஸிலே போகப் புறப்படறே...இல்லியா? வேண்டாம்–நன்னா யிருக்காது. எங்காத்துக்கும் அவனுக்கும் அது ரொம்ப அவமானம். என்னத்துக்கு நீ அப்படிப் போகணும்? எங்கே போனான் கந்தசாமி?" ...என்று சற்றுக் குரலை உயர்த்திக் கூப்பிட்டாள்.

"இங்கதாம்மா இருக்கேன்" என்ற குரலுக்குப் பின்னால் ஓடிவந்தான் கந்தசாமி. அவன் தலையை

மட்டும் காட்டி விட்டுப் போனான். அவன் தலைமறைந்த பிறகு பங்கஜவல்லியம்மாளிடம் மெதுவான குரலில் சீதா சொன்னாள்:

"இதில் அவமானப்படறதுக்கு என்ன இருக்கோ? சரி, அது இந்தாத்து விஷயம். நான் எங்காத்துக்குப் போனப் பறம் பஸ்ஸிலே எல்லாம் போகலாமோன்னோ?"

"இந்தாத்து வரைக்கும் தான் நான் சொல்லலாம்...நீ இந்தாத்தைச் சேர்ந்தவளா நடந்துண்டுடுவேன்னு நம்பத் தான் செய்யலாம்...வற்புறுத்தவா முடியும்?" என்றாள் மாமியார்.

சீதா நன்றி தெரிவிப்பவள் போல் ஒரு புன்னகை யுடன் வந்து காரில் ஏறிக்கொண்டாள். அவன் வழக்கம் போல் மயிலாப்பூருக்குப் போகும் வழியில் திரும்பினான்.

"கந்தசாமி, வீட்டுக்கு அப்பறமா போகலாம். இப்ப நேரே பீச்சு ரோடுக்குப் போ" என்றாள். அவளுக்கு மாரியம்மாளைப் பார்த்து விட்டு, அவளுடன் காரிலேயே எங்காவது போக வேண்டுமானாலும் போனபின் வீட்டுக்குப் போகலாம் என்று தோன்றியது.

மாரியம்மாள் அடிக்கடி அந்த ராமதாஸைப் பற்றி இவளிடம் புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறாள். அவன் அறிவை யும் திறமையையும், ருஷ்ய மொழியை இவளிடம் அவன் கற்றுக் கொள்ளுகிற நேர்த்தியையும் புகழ்ந்து கொண்டே யிருக்கிறாள். இப்போதெல்லாம் வாரத்திற்கொரு நாள் அவனுடைய வீட்டுக்கே சென்று அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள் மாரியம்மாள்.

பெண்கள் விடுதி வாசலருகே கார் போய் நிற்பதற்கும், மாரியம்மாள் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

"நினைச்சேன். திடீரென்று இந்த நேரத்தில் வருகிறோமே-இவள் ராமதாஸ் வீட்டுக்குப் போயிருப்பா ளோன்னு நினைச்சேன். எங்கே, அங்கேதானே?" என்று

பரிகாசமாய்க் கேட்டாள் சீதா. காரின் கதவைத் திறந்ததும் மாரியம்மாளும் ஏறிக் கொண்டாள்.

"எங்கே போகிறோம்னு சொல்லு டிரைவர்கிட்ட" என்றாள் சீதா.

"ராமதாஸ் வீட்டுக்குத்தான், திருவல்லிக்கேணிக்குப் போங்க" என்றாள் மரியம்.

கார் போய்க் கொண்டிருக்கும்போது மரியம் சீதா விடம் சொன்னாள்; "வரவர எங்கள் பாடம் சரிவர நடப்பதே இல்லை. ஒரே அரட்டையாப் போச்சு...ஓ! அந்த ராமதாஸ்தான் என்னமாப் பேசுகிறார்!" என்று புகழ்ந்து கொண்டேயிருந்தாள்.

அவர்தான் 'சொல்லின் செல்வராயிற்றே' என்று 'ஹே சீதே' கதையை நினைத்துக் கொண்டு சொன்னாள் சீதா.

"இன்னிக்கு நீயும் வந்துட்டியா? பேசிண்டுதான் இருக்கப் போறோம். பாடம் பாடம்தான்'' என்று அலுத்துக் கொண்டாள் மரியம்.

"எனக்கு அவரிடம் நிறையவே பேச வேண்டும்" என்றாள் சீதா.

திருவல்லிக்கேணியில் ஒரு சிறிய சந்தில் முன்புறம் நாட்டு ஓடு வேய்ந்த, வாசல் திண்ணையில் குழந்தைகளும் பெண்களும் நிறைந்திருந்த ஒண்டுக் குடித்தனப் பகுதிகள் நிறைந்த ஒரு வீட்டின் முன்னால் கார் நின்றது.

சீதாவும் மரியமும் காரிலிருந்து இறங்கிக் கொண்டனர்.

"நீ வீட்டுக்குப் போகலாம்பா, வேணும்னா அப்புறம் போன் பண்றேன்'' என்று காரை அனுப்பி விட்டு இருவரும் அந்த வீட்டுக்குள் போயினர். கூப்பிய கரங்களுடன் ராமதாஸ் சீதாவை வணங்கி வரவேற்றான்.

## 23

**ப**ல குடித்தனங்கள் நிறைந்த அந்த வீட்டின் முன் போர்ஷனில் ராமதாஸ் ஓர் தனியறையிலும் பின் கட்டில் ஓர் அறையில் அவனது குடும்பத்ினரும் வாழ்கின்றனர் என்று தெரிந்தது சீதாவுக்கு. தரையில் விரித்திருந்த கோரைப் பாயில் உட்கார்ந்தனர் சீதாவும் மாரியம்மாளும். பாயில் இன்றைய தினப் பத்திரிகையும் இந்த வார சுந்தரியும் கிடந்தன. மாரியம்மாள் சுந்தரியையும், சீதா தினசரியையும் புரட்டியவாறிருந்தனர். ஒரு ஷெல்ஃபில் புத்தகங்கள்...தமிழ், இங்கிலீஷ், சம்ஸ்கிருதம்...ராமதாஸ் உள் பக்கம் போயிருந்தான். வரும்போது கையில் ஒரு செம்பில் தண்ணீரும் தம்ளரும் கொண்டு வந்தான். அறையின் சன்னலோரம் ஒரு சாய்வு நாற்காலியும், அதன் மடக்குக் கைகளின் மேல் எழுதுவதற்கான மரப்பலகையும் இருந்தன.

ராமதாஸ் தம்ளரில் தண்ணீரை ஏந்தி "ஜலம் வேணுமா?" என்றபோது சீதா பத்திரிகையிலிருந்த பார்வையை உயர்த்தினாள். அவனுக்குப் பின்னால் சுவரில் தொங்கிய ஸ்ரீ ஆஞ்சநேயரின் சித்திரம் தெரிந்தது. அந்தச் சித்திரத்தில், ஆஞ்சநேயரின் நீண்டு 'ஓ'மென உயர்ந்து வளைந்த வாலின் மேல் வரிசையாய் நாளெண்ணி வைத்திருந்த சிந்தூரத்திலகமும், புஷ்பங் களும் இவன் இதை வழிபடுகிறவன் என்று அவளுக்கு உணர்த்தின.

'ஆஞ்சநேயம் அதிபாடலானனம்... என்ற ஸ்ரீ ஹனுமான் ஸ்தோத்திரம் சீதாவின் மனத்துள் ரீங்காரம் செய்தது. 'அப்பா, என்ன கம்பீரமான சம்ஸ்கிருத உச்சரிப்புடன் சொல்லுவார்' என்று அவள் நினைத்துக் கொண்டபோது-சீதாவின் பார்வை தனது உபாசக மூர்த்தியிடம் லயித்திருப்பதைக் கண்ட ராமதாஸ்,

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருத மஸ்த காஞ்சலிம்..."

என்று பாடி வணங்கினான்.

ராமதாஸ் தந்த குளிர்ந்த ஜலத்தை வாங்கிப் பருகினாள் சீதா. நன்றி சொன்னாள். மரியத்துக்குச் செம்பிலிருந்த தண்ணீரை ஊற்றித் தானே கொடுத்தாள். ராமதாஸ் வாசலுக்கு நேரே முதுகைக் காட்டிக்கொண்டு அறை உள்ளேயிருக்கும் பெண்களை மறைத்த மாதிரி உட்கார்ந்து கொண்டான். அந்த அறை தெருப்புறத்தில் இருந்ததால் வீட்டுக்குள் வருவோரும் போவோரும் தங்களைக் கடந்து போகும் நடமாட்டத்தையும் சந்தடியையும் சீதா கவனித்தவாறிருந்தாள். குறுகுறுப்புள்ள விழிகளால் அறைக்குள் கூர்ந்து பார்த்தனர். காரில் வந்து இறங்கியபோதே அந்த வீட்டுக் குழந்தைப் பட்டாளம் இவர்களைக் கண்டு கொண்டு வந்து, சற்று நேரம் மொய்த்திருந்தபின் கலைந்து விட்டது...

ஒரு தட்டில் மூன்று தம்ளர்களில் நிறைந்த காபியை எடுத்துக்கொண்டு முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க விதவைப் பெண்ணொருத்தி வந்தாள்...

"டேய் ராமு...வழியிலே உக்காந்திண்டு இருக்கியே... சித்த நகந்துக்கோ" என்றதும் ராமதாஸ் எழுந்து வழி விட்டு நின்றான். சீதாவைப் பார்த்துப் புன்னகையுடன் வரவேற்றாள் அவள்.

"வா, வா...என் மூத்த சகோதரி அம்புஜம்... என்று அவளை ராமதாஸ் சீதாவுக்கு அறிமுகப்படுத்தினான். "இவா யார் தெரியுமோ... நம்ம பத்திரிகை எடிட்டர் ஸ்ரீமான் சுந்தர சர்மாவின் டாட்டர் சீதா" என்றான்.

'நல்ல வேளை வேறு மாதிரியாக அறிமுகம் செய்து வைக்காமலிருந்தானே' என்று நினைத்துக் கொண்டாள் சீதா. 'மாரியம்மாள் தன்னைப்பற்றி எல்லா விவரங்களை யும் இவர்களிடம் சொல்லியிருக்கலாம்' என்று யூகித்தாள்

சீதா. அம்புஜம் ரொம்பவும் அடக்கமானவளாக இருந்தாள். மாரியம்மாள் தினசரி வந்து போகிறவள் என்றாலும் அம்புஜம் அதிகம் யாருடனும் பேசியோ அளவளாவியோ பார்த்ததில்லை. வெள்ளிய புன்னகையுடன் 'வாங்கோ' என்பாள். 'ஏதாவது சாப்பிடறேளா?' என்று உபசரிப்பாள். 'போய் வருகிறேன்' என்று மாரியம்மாள் பின்கட்டுக்குப் போய்ச் சொல்லிக் கொள்ளுவாள். எத்தகைய கைக்காரியமாக இருந்தாலும் எழுந்து நின்று 'ஆகட்டும்' என்பாள். அம்புஜம் அக்கா இதற்கு மேல் பேசிப் பார்த்ததில்லை என்பதை மரியம் நினைத்துக் கொண்டிருந்தபோது காபி குடித்த தம்ளர்களை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள் அம்புஜம்.

நல்ல குணமும் அழகும் வாய்ந்த அவ்வளது விதவைக் கோலமும், ஆழ்ந்த மௌனமும் சீதாவுக்கு உள்ளூர அவள் பால் ஒருவகைப் பரிவு சுரக்கக் காரணம் ஆயின.

'உங்க குடும்பத்திலே யார் யார் இருக்கேள்? எத்தனை சகோதரிகள் உங்களுக்கு? இந்த விதவைத் தமக்கைக்குக் குழந்தைகள் உண்டோ? இவளை வைத்து ஆதரிக்கிற நீர் மகா உத்தமமான மனிதர்' என்றெல்லாம் ராமதாஸிடம் சீதாவின் மனம் மானசீகமாகப் பேசிக் கொண்டிருந்தது.

ராமதாஸ் சீதா கேளாமலே அவளிடம் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் சொன்னான்:

"மாரியம்மாள் உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்காங்க. என்னைப் பத்தியும் சொல்லியிருப்பாங்க... என்று இருவரையும் மாறி மாறிப் பார்த்து புன்முறுவல் செய்தான் ராமதாஸ். மூக்குக் கண்ணாடியுள் அவனது விழிகள் அதீதமாய்ச் சுடர்விட்டுப் பிரகாசித்தன...

"எங்கப்பா ஒரு சமையல்காரர்...இப்பவும் இருக்கார். வாரத்துக்கு ஒருநாள் ரெண்டு நாள் வருவார். மத்தபடி ஓட்டல்லேயே ஜாகை அவருக்கு. எனக்கு மொத்தம் நாலு

சகோதரிகள். அம்புஜம்தான் பெரியவள். இருபத்தைஞ்சு வயசிலே இப்படியாகி ஆத்தோட வந்துட்டா. நல்ல வேளையா குழந்தை குட்டி ஒண்ணும் ஆகலே. பெண் களுக்குப் புருஷன் ·இருந்தால் ஒரு மாதிரி கஷ்டம்; செத்தால் இன்னொரு மாதிரி கஷ்டம். இதில் இதுவே தேவலாம். மத்த தங்கைகள் ஒண்ணொண்ணும் ஒரு கதை. எனக்கு அடுத்தவள் வனஜான்னு பேர். யாரையோ 'லவ்' பண்ணினாளாம். அவன் யாராயிருந்தால் என்ன- அவள் இஷ்டப்படி அவனையே பண்ணிண்டு அவனோடேயே போகட்டும்னுட்டா அப்பா... அதேமாதிரி அவளும் போயிட்டாள். எங்கே போயிட்டா? இதோ அடுத்த தெருவிலே அந்தத் தையல்காரனோட வாழ்ந்துண்டு இருக்கா. என்ன வாழ்க்கை! என்ன காதல்! நெறையக் குழந்தைகள் பெத்துண்டா...சிரமப்படறா.... வந்து நின்னுண்டு பிழிய பிழிய அழறா. ஏன்தான் அப்பிடியெல் லாம் நடந்துண்டமோன்னு இப்பப் புலம்பி என்ன ஆகப் போறது? அவ புருஷன் ஒண்ணும் நல்லவனில்லே. அவன் வேற ஒரு கல்யாணம் பண்ணிண்டானாம். இவ அவனை என்ன பண்ண முடியும்? காசு வாண்டாம் பணம் வாண்டாம்-வந்து பாத்துண்டு இருந்தான்னா கௌரவமா இருக்குமாம்...அப்பிடித்தான் இருக்கான் போலிருக்கு... இன்னொரு தங்கை கிரிஜா, பொறந்தாத்திலே ஆறு மாசம் புக்காத்திலே ஆறு மாசம்னு இருப்பாள். புருஷன் குடிகாரன்... குதிரைப் பந்தய வீரன்!... போறாதா பொண்ணாப் பொறந்தவளுக்கு? போன மாசம்தான் ஊருக்குப் போனாள். பெங்களூர்ல இப்ப அவ புருஷனுக்கு உத்தியோகம். கடைசித் தங்கை கீதா; ஸ்கூலுக்குப் போயிருக்காள்-பிளஸ் ஒன் எழுதணும் இந்த வருஷம்... எங்க அம்மா மூணு வருஷத்துக்கு முன்னே போய்ட்டாள்... நான் இப்ப சுந்தரி பத்திரிகையிலே புரூஃப் ரீடர் உத்தியோகம் பார்க்கிறேன். தாங்க முடியலே...இந்த வேலைக்கு ஒரு நமஸ்காரம்னு விட்டுட்டு ஓடிவந்துடலா மான்னு ஒவ்வொரு நாளும் நினைக்கிறேன்...ஏதோ மாசா

மாசம் கெடைக்கிற வருமானத்துக்காகச் சகல அவமானங்களையும் பல்லைக் கடிச்சுத் தாங்கிக்க வேண்டியிருக்கு."

"ஏன்? என்னத்துக்கு?" என்று பதைத்தாள் சீதா. ராமதாஸ் அவள் தனக்காகப் பரிந்து பதைப்புறுவதைக் கண்டு சிரித்தவாறே சொன்னான்:

"அவா என்னை ஒண்ணும் அவமானப்படுத்தவோ, கஷ்டப்படுத்தவோ இல்லே...நீங்க சுந்தரியைப் படிக்கறதே இல்லே போலிருக்கு. எனக்கு அப்படியெல்லாம் எழுதியோ படிச்சோ பழக்கமில்லை. அதையெல்லாம் மூணு தடவை படிச்சுத் திருத்தணும்னு எனக்குத் தலை எழுத்து...சமயத்திலே ஆத்திரம் தாங்காமல் எனக்கு அழுகை வந்துடறது...ஒண்ணு சொல்றேன்; நான் மாமிசம் சாப்பிடறதில்லே. ஆனால் முகம் சுளிக்காமல் என்னாலே அதைச் சமைக்க முடியும்-பலவிதமான-முறைகளில் வறுத்தும், பொரித்தும்-'வெரைட்டி டிஷஸ்' பண்ணி டிப்ளமோ வாங்க முடியும். கசாப்புத் தொழிலைக் கூட நிஷ்காம்யமா என்னாலே செய்ய முடியும். ஆனால் எழுதறதும் படிக்கறதும் இவ்வளவு இழிவான காரியமானதைச் சகிக்க முடியலே...அதனாலே நான் ஒரு Five star hotel விளம்பரத்தைப் பார்த்து ஒரு மனுப்போட்டு வெச்சிருந்தேன். இன்னிக்கு இண்டர்வியூ இருக்கு... என்று மணி பார்த்தான் ராமதாஸ். பத்தாகி இருந்தது.

"எத்தனை மணிக்குப் போகணும்? எந்த ஹோட்டல்?" என்று விசாரித்தாள் மரியம்.

சீதா கேள்விப்பட்டிராத ஒரு ஹோட்டலின் பெயரைச் சொல்லி, "இண்டர்வியூ மத்தியானம் இரண்டு மணிக்குத்தான்-ஒன்றும் அவசரமில்லை. இன்னிக்கு அதனாலேதான் ஆபீசுக்கு லீவு போட்டுட்டேன்" என்றான்.

"அகில பாரத அசோகவனச் சீதைகாள்! உம்மில் யாரும் அரக்கியர் அல்லர். எனினும் உம்மில் யார் அந்த

சீதை?" என்று இவன் உரத்த குரலில் கேட்டிருந்தானே அந்தக் கதையில்...அதன் தாத்பர்யம், உட்கிடக்கை, பின்னணி எது என்று அவளுக்கு அவனது சொந்த வாழ்க்கையைப் பார்க்கையில்-இப்போது புரிந்தது.

"அவ அப்பா எழுதறது உட்பட இந்தப் பத்திரிகைக் கதை எதையும் படிக்க மாட்டாள் சீதா. ஆனால் உங்களுடைய 'ஹே சீதே' கதை இவளுக்கு அப்படியே மனப்பாடம்" என்றாள் மாரியம்மாள்.

"நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் அதுக்கு ஒரு தனி இடம் உண்டு" என்று புகழ்ந்துரைத்தாள் சீதா. ராமதாஸ் பணிவுடன் கரங்கூப்பியவாறு சொன்னான்: "நான் நல்ல சமையற்காரன்தான். தமிழும் சம்ஸ்கிருதமும் படிச்சிருக் கேன். எழுதறது சில ச்மயங்கள்லே அழுது தீர்த்துக் கொள்கிற மாதிரி ஓர் ஆறுதல் தர்ரது. அழுது தீர்க்க முடியாததை எழுதித் தீர்க்கலாமே! மத்தபடி எனக்கு இலக்கிய உலகில் எந்த இடத்தையும் பிடிக்கற நம்பிக்கையோ புகழும் பொருளும் சேர்க்கிற எண்ணமோ கிடையாதம்மா"

"சுந்தரி பத்திரிகையின் அனுபவத்தை மட்டும் வச்சு நீங்க இப்படி அவசரப்பட்டு முடிவு செய்துடவேண்டாம்" என்று வேண்டிக் கொண்டாள் சீதா.

"இது மட்டும் காரணம் இல்லை" என்று சொல்லி- இந்தப் பத்திரிகை உலக மனிதர்களை, அவர்களது நோக்கங்களை, ரசனைகளையெல்லாம் எண்ணி இதில் தன்னைப் போன்றவர்கள் 'குப்பை கொட்ட முடியாது' என்ற தீர்மானத்துடன் நம்பிக்கையற்ற குரலில் அவன் சிரித்தான்.

சுந்தரசர்மாவைப் பற்றி இவளிடம் பேசுவதற்கு அவனுக்குத் தயக்கமாயிருந்தது. என்ன இருந்தாலும் அவளுடைய அப்பா அல்லவா? என்று நினைத்தான். சீதாவுக்குத் தனது தகப்பனாரைப் பற்றியும் அவரது எழுத்துக்கள் குறித்தும் உயர்ந்த மதிப்பீடுகள் இருக்க

முடியாது என்றும் அவன் யூகித்தான். மாரியம்மாள் சீதாவின் சொந்த வாழ்க்கைப் பிரச்னைகள் பற்றியெல்லாம் ராமதாஸிடம் தெளிவாகப் பல சமயங்களில் சொல்லியிருக்கிறாள். மாரியம்மாள் அறிந்த அளவு அவனும் அறிவான்.

"அது சரி, நீங்கள் இருவரும் சேர்ந்து எழுதத் தொடங்கிய அந்த 'ஓ! இராமா' கதை என்ன ஆச்சு?" என்று கேட்டான் ராமதாஸ்.

"ஒண்ணு பாக்கிவிடாமல் ஒப்பிச்சிருக்கியே... என்று மரியத்தைப் பார்த்துக் கண்களால் சிரித்தாள் சீதா.

"ஆமாம் சீதா தினம் இவர் அதைப்பத்திக் கேட்பார்... அந்த ஃபைல் உன்கிட்டதானே இருக்கு...பை த பை-அது ரெண்டு பேர் இல்லே-மூணு பேர் சேர்ந்து எழுத ஆரம்பிச்ச ஒரு கலெக்டிவ் ஒர்க்! கூட்டு முயற்சி...!" என்று விளக்கினாள் மரியம்.

"எனக்கு அதைப் படிக்கணும்..." என்று ஆர்வத்துடன் சொன்னான் ராமதாஸ்.

"அப்பிடி ஒண்ணும் படிச்சுப் பார்க்கற அளவு நாங்க எழுதிடலே... 'ஹே சீதே' ராமனின் குரல் அல்லவே. ராம தாசனின் குரல்தானே? 'அவன் சீதையைத் தேடுவது யார் பொருட்டு? அந்த ராமன் எங்கே? அவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவனது லட்சணங்கள் என்ன? அவன் சொல்லியனுப்பிய சேதி என்ன? இராவண வதம் எப்போது? எங்களுக்கு மீட்சி எப்போது?" என்றெல்லாம் உங்களைக் கேட்பதுதான் அந்தக் கதையின் நோக்கம்... என்றாள் சீதா.

"பலே! பலே! அது ரொம்ப அற்புதமாயிருக்கும்... என்று கை தட்டினான் ராமதாஸ்...தட்டிய கரங்களைச் சேர்த்துக் கொண்டு நமஸ்கரித்தான்:

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்சலிம்

பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்."

என்று பாடினான்.

"எனக்கு வடமொழி புரியலியே!" என்றாள் மாரியம்மாள். ராமதாஸ் கம்பீரமான தமிழில் அந்த ஸ்லோகத்தை மொழி பெயர்த்துச் சொன்னான்.

## 24

'ராமதாஸ் பேசினால் கேட்டுக் கொண்டேயிருக்கலாம், என்று மாரியம்மாள் சொல்வாளே, அது எவ்வளவு உண்மையான, அனுபவ பூர்வமான புகழ்ச்சி என்று கண்டவள்போல் அடிக்கடி மரியத்தைப் பார்த்து விழிகளால் சிரித்துக் கொண்டாள் சீதா.

ராமதாஸ் வீட்டில் அந்த முதல் சந்திப்பின்போது சீதா அவனுடன் அதிகம் சம்பாஷிக்காமல் அவன் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். அன்று மத்தியானம் அவனுக்கும் இண்டர்வியூ இருந்ததால் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு மாரியம்மாளும் சீதாவும் ராமதாஸிடமும் அம்புஜத்திடமும் விடை பெற்றுக் கொண்டனர்.

அதன்பின்னர் அனேகமாக ஒவ்வொரு நாளும் அவளை ஏற்றிக்கொண்டு சுகுமாரனின் கார் மயிலாப்பூர் வீடு, மாரியம்மாள் ஹாஸ்டல் என்ற இரண்டு இடங்கள் மட்டுமல்லாமல் திருவல்லிக்கேணி நாகோஜிராவ் சந்தில் உள்ள ராமதாஸ் வீடு ஆகிய மூன்று இடங்களுக்கும் போக வேண்டியதாயிற்று.

அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் தொடர்ந்தும், அவர்கள் ராமதாஸ் வீட்டிலோ, கடற்கரையிலோ அல்லது

வேறு பொது இடங்களிலோ சந்தித்தனர். முடிவோ தீர்வோ அற்ற-ஆனால் முடிவும் தீர்வும் உடனடியாகக் காணவேண்டிய-ஒவ்வொருவர் வாழ்க்கையையும் உறுத்துகிற பொதுவான விஷயங்கள் பலவற்றைக் குறித்து அவர்கள் நீண்ட நேரம் விவாதித்தனர்.

ராமதாஸின் கருத்தும் உரையும் 'ஏதோ இது என் அபிப்பிராயம்' என்று புருவத்தைத் தூக்கிக்கொள்ளும் வகையில் அல்லாமல், பல நூல்களிலிருந்தும் பல மொழிகளிலிருந்தும் தகுந்த ஆதாரங்களோடும் மேற்கோள்களுடனும்-எல்லாவற்றுக்கும் சிகரமாய் வாழ்வின் உண்மைகளை நிலைநிறுத்தும் உத்வேகம் நிறைந்ததாயும் பிரசங்கம் போல் இருந்தது. சீதாவுக்கு அவனது கருத்துக்கள் அனைத்தும் ஏற்கத்தக்கவையாகவும், ஏற்கனவே அவள் தன்னுள் ஏற்றுக் கொண்டவை யாகவும் கூடச் சில இருந்தன. ஆனால் மாரியம்மாள் ஒவ்வொரு விஷயத்திலும் ராமதாஸுடன் எதிர்வாதம் செய்தாள். ஆயினும் அடிப்படையில் அவனோடு அவள் ஒன்றுபடவே செய்தாள்.

மூவரும் தோளில் மாட்டிய பைகளுடன் கடற்கரை மணற்பரப்புக்குச் செல்வதற்காகச் சாலையைக் குறுக்கே கடந்தபோது-ஒரு பஸ்ஸினுள்ளிருந்து சீதாவின் சினேகிதி சுசீலா கையசைத்தாள். மாரியம்மாளும் சீதாவும் அவளுக்குக் கையசைத்தனர். பஸ் கடந்ததும் சாலையின் குறுக்காக ஓடி எதிர் பிளாட்பாரத்தில் மூவரும் ஒன்றாகி மணலில் இறங்கிக் கடலை நோக்கி நடந்தனர். மேற்றிசை வெயிலின் கிரணங்களால் நீண்டு விழுந்த அவர்களது நிழல்கள் மணலில் மெல்ல நகர்ந்தன...

'சீதாவும் மாரியம்மாளும் ராமதாஸின் சகோதரிகளைப் பற்றியும், சற்றுமுன் பஸ்ஸில் கண்ட சுசீலாவைப் பற்றியும் நினைத்தனர்...

மாரியம்மாளுக்கும் சுசீலாவைப் பற்றித் தெரியும். 'அந்த வாழா வெட்டி' என்று அப்பா சொல்லும்

நிஷ்டூரமான குரலை சீதா நினைத்து இப்போது முகம் சுளித்துக் கொண்டபோது மரியம் ராமதாஸிடம் கேட்டாள்:

"காதலைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?"

"காதல்?" என்று நெற்றியும் புருவங்களும் சுழிய முணகுவதுபோல் கேட்டான் ராமதாஸ். சீதாவும் மாரியம் மாளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"ஆண்களுக்கும்-பெண்களுக்கும் ஏற்படுகிற உடற் கவர்ச்சியைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்?'' என்று சிரித்தான் ராமதாஸ்.

கடற்கரையில் கைக்கோத்தவாறும், இடையில் கை கொடுத்தணைத்தவாறும், தோளில் சாய்ந்தவாறும், தோணி நிழலில் ஒதுங்கியவாறும் உறவாடும் காதலர்கள் பலர் மாரியம்மாளின் கண்களில் தென்பட்டனர்.

'அவர்களுக்கெல்லாம் இன்பமான நல்வாழ்வு அமைவதாக!' என்று அவள் நெஞ்சம் காதலை வாழ்த்தியது.

"அது அப்படி இல்லை ராமதாஸ்" என்று மரியம் அவனுக்குக் காதல் பற்றி விளக்கம் கூறினாள்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்
புறத்தாற்றின் போஒய்ப் பெறுவதெவன்'

என்கிறோமே அந்த இல்வாழ்வுக்கு இன்றியமையாத இசைவாக, அன்பு ஊறும் இரண்டு இதயங்களின் ஈர்ப்பைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?" என்று ஒரு பண்டிதை போல் கேட்டாள் மரியம்.

ராமதாஸ் மரியத்தின் ஆவேசத்தைக் கண்டு புன்னகையுடன் சொன்னான்: "திருக்குறள் ஒருபோதும் சாரமற்ற வாதத்துக்குச் சாட்சியம் கூற வராது. நீங்கள் சொன்ன குறளையே எடுத்துக் கொள்ளுங்கள். அது எதை முக்கியம் என்கிறது? அறவழியே இல்வாழ்க்கையை

நடத்தினால்?-இல்வாழ்க்கை ஆற்றின்?-அந்த 'இன்'னில் தான் அந்தக் குறளின் சிறப்பு அடங்கியிருக்கிறது-பாருங்கள்: அறத்தாற்றின்=அறவழியில் புறத்தாற்றின்= வேறு வழிகளில், என்ற பொருளில்தான் 'இன்' வந்திருக்கிறது. ஆனால் 'இல்வாழ்க்கை ஆற்றின்' என்பதில் 'இல்வாழ்க்கை நடத்திடின்', 'நடத்த முடிந்தால்' என்றெல்லாம் வேறு பொருள் தருகிறது. அதனால் அறவழியில் இல்வாழ்க்கை என்பதே முக்கியம். அதர்ம வழியிலும், அறிவற்ற ஆசை வழியிலும் தசைக் கவர்ச்சியாலும் ஈர்க்கப்படுகிற இந்தக் காதலைப் பற்றி நான் என்ன தனியே ஒரு கருத்து சொல்ல வேண்டும்? அதைத்தான் ஒவ்வொருவரும் வாழ்வில் காணுகிறோமே. என்னைப் பொறுத்த வரை பெண்கள் என்பவர்கள் இன்பப் பெட்டகங்களோ எழிற்களஞ்சியங்களோ அல்ல. அவ்வாறெல்லாம் எழுதிப் படித்து நம்பிக்கை கொண்டு விட்டவர்கள் பெண்களை வெறும் போகப் பொருட் களாகத்தான் கருதி நுகர்ந்து-கசக்கி- எறிந்து விடுகிறார்கள்; அல்லது தாமும் அதிலேயே அமிழ்ந்து விடுகிறார்கள். இன்பமும், அன்பும் நம்மைச் சுற்றி எங்குமே தென்படாத — இந்த வறண்ட, கொடிய, இதயமோ இரக்கமோ அற்ற, வஞ்சகம் நிறைந்த, காசால் எதையும் அளந்து அள்ளிக் கொள்ளுகிற — கயமைச் சமூக வாழ்வில் ஒரு ஆணும் பெண்ணும் காதல் என்பது தங்கள் இதயத்தில் மட்டும் ஊறுவதாக எண்ணுவது ஒரு மயக்கமே; ஓர் சுய ஏமாற்றே. காலப்போக்கில் அது அவர்களின் பரஸ்பர ஏமாற்றமாகி விடுகிறது! அப்புறம் ஏமாந்தவர்கள் அந்த இதயங்களைக் கடித்து அட்டைபோல் ஒட்டிக் கொண்டு ஒருவரை ஒருவர் உறிஞ்சித் தீர்த்துக் கொள்வதுதான் இந்த வாழ்வில் இதுவரை நான் கண்ட காதல் வரலாறு! ஒரு பெண் ஓர் ஆணைக் காதலிப்பது என்பது மாரீசமானைக் கண்டு மயங்கியது போலத்தான்...!" என்று அவன் நீண்ட நேரம் சொல்லிக் கொண்டிருந்ததை மரியம் ஒரு மாணவிபோல் கேட்டுக் கொண்டிருந்தாள். இருந்தாலும் இவன் இது

விஷயத்தில் மிகவும் வறட்டுத்தனமான கருத்து கொண் டிருக்கிறான் என்றே அவள் மனத்துள் எண்ணினாள்.

"அப்படியென்றால் இந்தப் பரஸ்பர ஏமாற்றத்தில் சம பங்குள்ள பெண்ணை மட்டும் ஏன் சீதை என்கிறீர்கள்?' என்று கேட்டாள் சீதா.

"ஆமாம்; சமூக அதர்மத்தின் பிரதிநிதிகளான ஆண் வர்க்கத்தை நான் ராவணர்கள் என்கிறேன். அவர்களால் மனைவியாகவும் மக்களாகவும் கவர்ந்து கொள்ளப்பட்ட பெண்களை எல்லாம் நான் மாசற்ற சீதைகளாகவே பார்க்கிறேன். அவர்களே அந்தப் பொய் உறவில் மயங்கி விடுகிறபோது அந்தப் பெண்களை 'மாயா சீதைகள்' என்கிறேன்! இப்போது சொல்லுங்கள்-இந்த நிலைமை களில் ராமன் யார்? இந்த சமூக அதர்மத்தை அழிக்கும் வருங்கால இளைஞர்களில்தான் ராமதரிசனம் சாத்தியம். இந்தச் சமூகத்தில் ஏற்படப் போகிற அந்த ராவண வதத்துக்குப் பிறகுதான் அறம், அன்பு, காதல் ஆகிய பண்புகள் மனிதர் வாழ்வில் உரிய பொருளைப் பெறும்; தரும். அதுவரை இங்கு நடப்பதெல்லாம் சீதைகளின் சோக காண்டம் தான்" என்று சீதாவைப் பார்த்துச் சிரித்த வாறே சொன்னான் ராமதாஸ்.

"இந்த சமூக அதர்மத்தை அழிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று ரொம்பவும் அவசரமாக மரியம் கேட்டதை ராமதாஸ் ரசித்தான்...

மேற்கு வானம் சிவந்து கடற்கரை மணற்பரப்பு முழுதும் செவேலென்று சிந்தூரப் படிமங்களாய்க் காட்சி தந்தது.

"இப்போது நாம் ரஷ்ய மொழி வகுப்புக்குப் போக வேண்டும்" என்று மணலிலிருந்து எழுந்து நின்றான் ராமதாஸ்.

மூவரும் எழுந்து மணலில் நடந்தனர். சீதா பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டாள். சீதாவிடம் இன்றைய

உரையாடலுக்கு ஒரு 'தொடரும்' சொல்லிக்கொண்டு விடைபெற்ற மாரியம்மாளும் ராமதாஸும் பல்கலைக் கழகக் கட்டிடத்தை நோக்கி நடந்தனர். அவர்கள் இருவரும் ஜோடியாக நடப்பதை பஸ் ஸ்டாப்பிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் சீதா.

சற்றுமுன் ராமதாஸ் கூறிய பல விஷயங்கள் அவள் மனத்துள் மீண்டும் மீண்டும் கிளர்ந்தவாறிருந்தன.

"நாலு மணிக்கு மாப்பிள்ளை போன் பண்ணினார்" என்று சீதா வீட்டுக்குள் வந்ததும் வராததுமாய் அறிவித்தாள் அம்மா.

"என்னவாம்? எங்கேயிருந்து பண்ணினார்" என்று சுவாரஸ்யமில்லாது கேட்டுவிட்டு, ரெப்ரிஜிரேட்டரைத் திறந்து தண்ணீர் குடித்தாள் சீதா.

"எனக்கென்ன தெரியும்? நீ வந்ததும் ஆத்துக்குப் போன் பண்ணச் சொன்னார். ஆத்திலேயிருந்துதானா யிருக்கும்."

சீதா போனருகே போய் நின்று 'டயல்' எண்ணைச் சுழற்றுமுன் அம்மாவிடம் கேட்டாள்:

"அப்பா வந்தாச்சா?"

"வந்தாச்சு... மேல் மாடியிலே இருக்கா...

"ஹலோ...நான் சீதா பேசறேன்"

"ஹாய் டார்லிங்"

"போன் பண்ணேளாமே... இப்பத்தான் வந்தேன்– அம்மா சொன்னா...

"ஒண்ணும் இல்லே...இன்னிக்கு நேரத்தோட ஆத்துக்கு வந்தேன்–இருக்கயோன்னு பாத்தேன்... ஆத்துக்கு வரயா? வண்டியெடுத்துண்டு நானே வரேனே... எனக்கு இருக்கிற டென்ஷன்லே உன்னைப் பார்த்தால் கொஞ்சம் 'ரிலாக்ஸ்' ஆவேன்!...என்ன வரவா?"

"சரி" என்று ரிஸீவரை வைத்துவிட்டு மாடிக்குப் போனாள் சீதா-அப்பாவைப் பார்க்க.

மது-மதி-மந்தமாருதம் ஆகியவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கும் அப்பா மந்தகாசச் சிரிப்புடன் சீதாவை வரவேற்றார்.

"வா...வா...உட்காரு. மாப்பிள்ளை போன் பண்ணினாராமே...?"

"ஆமாம்...இப்ப வருவார் என்னை அழைச்சுண்டு போக."

"தென்? ஹவ் இஸ் லைஃப்? ஆர் யூ ஹாப்பி?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். சீதா கசந்த சிரிப்பொலியில் சொன்ன பதில் அவருக்குப புரியவில்லை; அவள் சொன்னது அவருக்குப் புரிவதற்காகவும் இல்லை.

"சீதா-வாழ்க்கையை 'இருக்கற மாதிரி' அனுப விக்கணும்...

கீழே சுகுமாரனின் கார் சத்தம் கேட்கிற வரை, அப்பா பேசுகிற சாரமற்ற விஷயங்களைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சீதா. சுகுமாரன் வரும் சத்தம் கேட்டது. அவன் நேரே மாடிக்கு வந்தான். "வாங்கோ வாங்கோ" என்று எழுந்து அவனை வர வேற்றுத் தனது நாற்காலியில் உட்கார வைத்தார். அவனுக்கும் ஒரு கிளாசில் ஸ்காட்சை ஊற்றினார்.

"ஜஸ்ட் ஒன் ஃபார் தி ரோட்" என்று அதை எடுத்து 'சியர்ஸ்' சொல்லிப் பருகினான் சுகுமாரன்.

சீதா கீழிறங்கிப் போனாள். சற்றுக் கழித்து அப்பா வும் சுகுமாரனும் இறங்கி வந்தனர். அம்மா முந்தானையை இழுத்துத் தோளை மறைத்துக் கொண்டு ஹாலில் வந்து மாப்பிள்ளையைப் பார்த்து மகிழ்ந்து நின்றாள்.

சுகுமாரனையும் சீதாவையும் காரில் வழியனுப்பி விட்டு, ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியுடன் பார்த்துப்

புன்னகை செய்து கொண்டனர் சர்மா தம்பதிகள்-ஒரே பூரிப்புத்தான்!

காரில் போகும்போது சுகுமாரன் ரொம்பவும் அலுப்புடன் சீதாவிடம் சொன்னான்:

"ஒண்ணும் சரிப்பட்டு வரலே; பேச்சு வார்த்தை யெல்லாம் முறிஞ்சு போச்சு. ஒரு தொழிற்சங்க லீடர் ரொம்ப அடமென்டா இருக்கான்... ஒண்ணும் ஸெட்டில் ஆகலேன்னா நாளைக்கு ஃபாக்டரி லாக்-அவுட்னு சொல்லிட்டு வந்துட்டேன்... என்றவன் சீதாவைப் பக்க வாட்டில் திரும்பிப் பார்த்தான். "ஐ ஆம் ஸாரி. உனக்கு ஒண்ணும் புரியலே, இல்லே? எங்க ஃபாக்டரி தொழிலாளிங்க பிடுங்கல்! -ஒரு வழிக்கும் வர மாட்டேன் றானுங்க..."

காருக்கு வெளியே நிலாவும் வெளிச்சமும் கடலில் மிதந்து பிரகாசமாய்த் தெரிந்தது.

"சீதா-நாம்ப ஹனிமூனுக்கு எங்கேயும் போகலியே... இந்தச் சள்ளையெல்லாம் இல்லாமல் எங்கேயாவது ஒரு வாரம் போயிட்டு வரலாம்-என்ன சொல்றே?" என்று ஆர்வமாய்க் கேட்டான் சுகுமாரன்.

'நீங்கள் அழைத்தால் நான் வரத்தானே வேண்டும்' என்பதுபோல் அவனைப் பார்த்து "ஆகட்டும்" என்றாள்.

'இதற்கு ஹனிமூன் என்ற பெயர் வேறா?" என்று நிலாவைப் பார்த்துத் தலையை அண்ணாந்து சிரித்தாள் சீதா.

## 25

**மா**ரியம்மாளும் ராமதாசும் வகுப்புக்கு நேரமாவ தால் ஓட்டமும் நடையுமாய் வந்து பல்கலைக்கழகக்

கட்டடத்தை அடைந்தனர். மரியம் வராந்தாவில் நின்று சற்று மூச்சிளைத்து, கடற்காற்றை ஆழ்ந்து சுவாசித்துக் களைப்பாற்றிக் கொண்டாள். ராமதாஸ் அவள் பக்கத்தில் நின்று அவளைப் பரிகாசமாய்ப் பார்த்து "இந்த ஓட்டத்துக்கு இப்படி மூச்சு வாங்குதே உங்களுக்கு?" என்று சிரித்தான். களைப்போ சோர்வோ இல்லாமல் எப்போதும் களிதுலங்கும் அவனது விழிகளைப் பார்த்து வியந்து புன்முறுவல் செய்தாள் மரியம்.

"பிராணாயாமம் செய்யணும். யோகாசனம் பழகணும்...இல்லேன்னா உடம்பு ஒரு சுமையாகத்தான் ஆயிடும்" என்று சொல்லிக் கொண்டே மாடியிலுள்ள வகுப்பறையை நோக்கிப் பாய்ந்து பாய்ந்து நான்கு- ஐந்து படிகளாகத் தாவித்தாவி அவன் மேலே போவதைப் பார்த்து 'சரியான ராமதாசன்தான்' என்ற நினைப்புடன் சிரிப்பு வந்தது அவளுக்கு. எனினும் வகுப்புக்குப் போகும் அவசரத்தில் அவளும் படிகளை முடிந்தவரை ஒன்றிரண்டாய்த் தாவித் தாவித்தான் ஓடினாள்.

மரியம் வகுப்பறைக்கு வருவதற்குள் ராமதாஸ் வகுப்பில் தன்னிடத்தில் போய் அமர்ந்திருந்தான்.

"குட்ஈவினிங்" என்று எல்லாருடனும் சேர்ந்து அவன் குரலும் ஒலிப்பதைத் தனியாகப் பிரித்து மரியத்தின் செவிகள் கேட்டன...

உடனே வகுப்பைத் தொடங்கினாள் மரியம். கரும் பலகையில் அன்றையப் பாடத்தைப் பற்றிய குறிப்புகளை வரைந்தாள். மாணவர்களும் தத்தமது குறிப்பேடுகளைப் புரட்டி அவற்றை எழுதிக் கொண்டனர்.

பின்னர் மரியம், அவர்களுக்குப் புதிய ருஷியப் பதங்களுக்குப் பொருளும், அவற்றை உச்சரிக்கும் முறைகளையும் பயிற்சி தந்து சொல்லிக் கொடுத்தாள். கரும்பலகையில் அவள் எழுதிய வாக்கியங்களைப் பார்த்து அவர்களை எழுதிக் கொள்ளுமாறு கூறிவிட்டு,

மேஜையின் மேல் அடுக்கி வைத்திருந்த 'ஹோம் ஓர்க்' நோட்டுகளைத் திருத்தத் தொடங்கினாள்.

"மன்னிக்க வேண்டும்" -ராமதாஸ் தனது தோள் பையிலிருந்து ஹோம்ஓர்க் நோட்டை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டுப் போய்த் தனது இருக்கையில் அமர்ந்து புதிய பாடத்தை எழுதிக் கொள்ள முனைந்தான். பின்னர் அவர்களுக்கு அவள் ஒரு பாடத்தைப் படித்துக் காட்டினாள். மரியத்தின் ருஷ்யமொழி உச்சரிப்பின் இனிமையில் அந்த மாணவர்கள் லயித்துக் கட்டுண்டு ஆழ்ந்திருந்தனர்.

"உலக மகா கவிகள் என்ற வரிசையில் அறிந்துள்ள கதே, புஷ்கின், பைரன் வரிசையில் வைக்கத்தக்க மற்றுமொரு பெயர் தாராஸ் ஷெவ்செங்கோ. அவரது காலம்: 1814–1861. நாற்பத்தேழு ஆண்டுகளே அவர் வாழ்ந்தார் எனினும் அவரது வாழ்க்கை பெருவாழ்க்கை யாகும். அக்கால ருஷ்யாவில் நிலவிய ஓர் பண்ணை அடிமைக் குடும்பத்தில் பிறந்தவர் ஷெவ்செங்கோ. அவர் ஓர் உக்ரைனியர். குழந்தைப் பருவத்திலேயே அவர் ஓவியம்வரையத் தொடங்கினார். தாராஸ் ஷெவ்செங்கோ எந்த அளவு ஒரு கவியோ அந்த அளவு ஓர் ஓவியரும் ஆவார். குழந்தைப் பருவத்தில் எல்லாரும் ஓவியம் வரைய ஆர்வம் காட்டுவது இயல்பே. எனினும் ஷெவ்செங் கோவின் ஓவியங்களில் உயிர்த்துடிப்பும் வாழ்க்கையின் ஓங்கார நாதமும் ஒலிப்பதை அனைவரும் கண்டு வியந்தனர்.

"ஷெவ்செங்கோவின் பதினாலாவது வயதில் அவரது கிராமத்தைச் சேர்ந்த ஓவியர்கள்–அவரது பண்ணை எஜமானர் அனுமதித்தால்–ஓவியக் கல்வி கற்றுத்தர விரும்பினர். அவர் நகர்ப்புறத்துக்கு–ஓவியம் பயிலும் பள்ளிக்கு வந்தார். அங்கேதான் அவர் தன்னோடொத்த பலர்–தன்னைப் போன்ற அடிமைகள் அல்ல என்பதையும் கண்டார். முதன் முறையாக அப்போதுதான் லத்தீன், போலிஷ், ருஷ்ய

மொழிகளைப்பேசும் அயல் முகங்களைக் கண்டார். தாராஸ் ஷெவ்செங்கோ உக்ரேனிய மொழியில் கவிதைகளும் எழுதலானார்.

"பின்னர் அவர் செயின் பீட்டர்ஸ் பர்க் நகருக்கு அவரது எஜமானரால் கொண்டு செல்லப்பட்டார். அந் நகரில் பல அவலங்களையும் கொடுமைகளையும் அவர் கண்டார். எனினும் பெருந்தன்மை மிகுந்த அவரது ருஷ்ய நண்பர்கள் சிலர் அவரது ஓவியத்தை விலைகொடுத்து வாங்கி, அந்தத்தொகையை அவரது எஜமானனுக்குத் தந்து-தாராஸ் ஷெவ்செங்கோவை அடிமைத்தனத்தி லிருந்து மீட்டனர். அவர் அகாதெமி ஆஃப் ஆர்ட்ஸ் எனும் உயர்கலைக் கழகத்தில் சேர்ந்து பயின்றார். தாராஸ் ஷெவ்செங்கோ தமது ஓவியங்களுக்காக இரு வெள்ளிப் பதக்கங்களும் கலைஞர் விருதும் அக்காலத்திலேயே பெற்றார். இவ்வாறு ஓவியக் கலையின் மூலம் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்ற தாராஸ் ஷெவ்செங்கோ தமது கவிதைகளின் மூலம் அக்கால ஜார் அரசின் கடும் கோபத்துக்கு ஆளானார். ஜார் அரசாங்கம் அவரது எழுத்துக்களை அச்சிட்டு வெளியிடாவண்ணம் பல தணிக்கை முறைகளைப் பிரயோகித்தது. ஓவியரான தாராஸ் ஷெவ்செங்கோ தமது கவிதைகளை அழகிய கையெழுத்துப் பிரதிகளாகவே தயாரித்து நண்பர் களிடையே உலவவிட்டார். நிரபராதியும் நேர்மையாளரு மான அவரை ஜார் அரசாங்கம் கைது செய்து கொடிய தண்டனைகளுக்கும் நாடு கடத்தலுக்கும் ஆளாக்கியது. ஜார் நிக்கொலாய்-அந்த மாபெருங் கவிஞரும், மகத்தான ஓவியருமான தாராஸ் ஷெவ்செங்கோவுக்கு அளித்த தண்டனைத் தீர்ப்பில் ஒரு திருத்தம் செய்தான். 'சிறை வாழ்வில் எழுதுவதற்கும், ஓவியம் வரைவதற்கும் தடை யிடப்படுகிறது.' எனினும் இவரது கவிதைகளில் ஒரு தொகுதியே 'சிறையிலிருந்து...என்ற தலைப்பில் படைக்கப் பட்டது.

"தாராஸ் ஷெவ்செங்கோவின் படைப்புக்களை உக்ரைனின் பொக்கிஷம் என்றாலும் அவை உலக மாந்தரின் உன்னதமான எதிர்காலம் குறித்த பொதுவான கனவு என்றே வருங்கால உலகம் போற்றிப் பாராட்டும்." இவை அனைத்தையும் அவள் ருஷிய மொழியில் சொன்னாள். கையிலிருந்த குறிப்பேட்டை அடிக்கடி பார்த்துக் கொண்டாலும் அவள் உணர்ச்சிகரமாகவே பாடம் நடத்தினாள்.

"அடுத்த வகுப்பில் நாம் தாராஸ்ஷெவ்செங்கோவின் படைப்பு ஒன்றைப் படிக்கப் போகிறோம். அந்த சிறு காவியத்தின் தலைப்பு: காத்ரீனா..." என்று முடித்தாள். மாரியம்மாளுக்குத் தனது ருஷ்ய மொழி ஆசிரியை காத்ரீனாவின் நினைவு வந்தது. அந்த நினைவுடன் அன்றைய வகுப்பு முடிந்தது.

"**நா**ன் வெளியூர்ப் பயணம் போகிறேன்...ஒரு வார மாகுமோ? ஒரு மாசமாகுமோ; ராமதாசைப் பார்க்கறச்சே சொல்லிடு" என்றாள் சீதா மரியத்திடம்.

சீதா, இன்று மரியத்தைப் பார்க்க வரும்போது ஞாபகமாக அந்த 'ஓ! இராமா!' ஃபைலைக் கையில் கொண்டு வந்திருந்தாள்.

"வெளியூர்னு ஒரு ஊரா? என்னிக்குத் திரும்பறோம்னு தெரியலேன்னாலும் எங்கே போறோம்னு தெரியவேண்டாமா?" அந்த ஃபைலைப் புரட்டி, சில பக்கங்களிலிருந்து காத்ரீனாவின் கையெழுத்தை நேச உணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்த மரியம் சீதாவிடம் பரிகாசமாய்க் கேட்டாள்.

சீதாவின் முகத்தில் கசந்த புன்னகை ஒன்று நெளிந்தது: "அவனுக்கு ஃபாக்டரியிலே என்னமோ தகராறாம்; கதவடைப்பாம்.... நான் என்ன ஒரு 'எம்ப்ளாயி' மாதிரிதானே? போலாமான்னான். போலாம்னேன்" என்று அவள் சொல்லுவதை முகத்தைச் சுளித்தவாறு

கேட்டாள் மரியம். அவளுக்கு ஒரு பெண், அதுவும் நாகரிகமும், நல்ல பண்புகளும் உடைய ஒரு உயர்குலத்துப் பெண் தன் கணவனை ஒருமையில் 'அவன் இவன்' என்று பேசுவதைக் கேட்க நாராசமாய் இருந்தது.

"நீ ஏன் அவரை 'அவன் இவன்'னு பேசறே? கேக்கவே நல்லாயில்லே" என்று முகத்தில் அடித்த மாதிரி சொன்னாள் மரியம்.

"ஓ! நான் அப்படியா சொன்னேன்?" என்று தன்னை யறியாமலே மரியத்துடன் பேசுகிற நெருக்கத்தில் தான் அவ்வாறு பேசிவிட்டதைச் சீதா உணர்ந்தாள்:

"அதனால் என்ன? என் மனசிலே என்ன மரியாதை இருக்கோ, அது தானே வார்த்தையிலும் வரும்...உன்னிடம் தானே பேசினேன்" என்று சமாதானமும் கூறினாள் சீதா.

"எங்கம்மா, எங்கப்பாவை 'அவன்' 'இவன்னு'தான் சொல்லும். எங்க பக்கத்திலே, அது அந்த சாதி வழக்கம். 'எம் பறயனைப் பாத்தியா?' என்று அம்மாவும், 'எம் பறச்சி எங்கே போய்ட்டா?' என்று அப்பாவும் பேசியதைக் கேட்டு வளர்ந்தவள் நான். அதனாலேதான், உன்னைப் போலவங்க அந்த மாதிரி பேசினா எனக்குப் பொருத்த மாவேயில்லே" என்றாள் மரியம்.

"சரி, இனிமே அப்படி உன்கிட்ட கூடப் பேசலே" என்றாள் சீதா:" அவர் சொல்றார்: "இது ஹனிமூனாம்!" என்று யாரோ மூன்றாம் மனிதர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் போல் அதைச் சொல்லிவிட்டு வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள் சீதா.

'சரி. இவளை அவன் உல்லாசப்படுத்தியும் இன்பமாக இவளுடன் பொழுது போக்கியும், அழகிய சூழலில் இவளுடன் பழகியும் இவளை மயக்கி மனமாற்றம் செய்து விடப் போகிறானோ?' என்று அவநம்பிக்கையுடன் சுகுமாரனின் மீது பரிதாபம் கொண்டாள் மரியம்.

'அவ்விதம் அவனால் தன் சிநேகிதியின் மனத்தை மாற்ற முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று

யோசித்தாள் மாரியம்மாள். அப்படிப்பட்ட எண்ணங் களை மரியத்தின் மனத்திலிருந்து அறவே துடைத்து விட்டிருந்தாள் சீதா. 'இவ்வளவு உறுதியாகச் சுகுமாரனிட மிருந்து விலகியும், அவனைத் தள்ளியும் வைத்திருக்கும் இவள் என்ன தைரியத்தில் அவனுடன் வெளியூர்ப் பயணம் புறப்படுகிறாள்!' என்பதை நினைத்து அஞ்சினாள் மரியம். 'அவனோ குடிகாரன்; அவனிடம் இவள் வேறு மனிதர் துணையில்லாமல் சிக்கி அவமானப்பட நேர்ந்தால்? ஏதேனும் விபரீதமாகி விட்டால்?' என்றெல்லாம் கற்பனை செய்தாள் மரியம்.

ஒருமுறை 'அவர் உன்னை வற்புறுத்தினால்?' என்று மாரியம்மாள் கேட்டபோது சீதா சொன்னாளே... அந்த வார்த்தைகளை நினைத்து உள்ளூர நடுங்கினாள் மரியம்.

"நான் தற்கொலை செய்து கொள்ளுவேன்."

சீதாவின் கையைப் பற்றிக்கொண்டு மரியம் மெதுவான குரலில் கேட்டாள். கேட்டு முடிப்பதற்குள் அவளால் தனது கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"சீதா...நீ எந்த நிலையிலும்...என்ன காரணத்துக்காக வும்...நீ அன்னிக்கு சொன்னயே...தற்கொலை பண்ணிக்கு வேன்னு-அப்படியொரு காரியத்தை நினைக்கவும் மாட் டேன்னு எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுப்பியா!... சீதாவின் புறங்கையின் மேல் மரியத்தின் கண்ணீர் சிதறியது. "ஐ ஆம் ஸாரி" என்று முந்தானையால் சீதாவின் கையைத் துடைத்தாள் மரியம். சீதா சிரித்தாள்;

"அப்படியொரு வாக்குறுதி தர்ற நிலையில் நான் இல்லை. ஆனால் நீ என்னை நம்பலாம். நான் ஒரு கோழை இல்லை. தற்காத்து, தற்கொண்டானையும் பேணி, தகை சான்ற சொற்காத்து வருவேன்-பாரடி என் தோழீ!" என்று சங்ககாலப் பெண் போல் குறள் மொழியில் பேசி, மரியத்தின் கண்ணீரைத் துடைத்துக் கன்னத்தைக் கிள்ளிச் சிரிக்க வைத்தாள் சீதா.

"உனக்கு எல்லா நலன்களும் உண்டாகட்டும்" என்று ருஷிய மொழியில் சீதாவை வாழ்த்தினாள் மரியம்.

மாரியம்மாளின் மேஜையின் மீது இருந்த அந்த ஆங்கிலப் புத்தகத்தை சீதாவின் விரல்கள் புரட்டின. 'தாராஸ் ஷெவ்செங்கோ: ஸெலக்டட் ஓர்க்ஸ்' என்று முனகிக்கொண்டே சில பக்கங்களைத் தள்ளியதும் "காத்ரீனா" என்ற ஒரு கவிதையின் தலைப்பைப் படித்ததும் முகம் நிமிர்ந்து மரியத்தைப் பார்த்தாள் சீதா.

"ஆம்; அது ஓர் உக்ரேனியப் பெயர்தான்: ஒரு காலத்து உக்ரைன் மக்கள் ருஷிய உயர் இனத்தால் ஒடுக்கப்பட்டிருந்தார்கள்...உக்ரைன் பெண்களுக்கு அவர் களது பெற்றோர்கள் 'மாஸ்கோகாரன்'களின் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருங்களடி பெண்டுகளா?" என்று எச்சரித்து வைப்பார்களாம்...

"இந்தக் காத்ரீனாவை மட்டுமாவது நீ படிக்க வேண்டும்-எடுத்துக்கொண்டு போயேன்" ...என்று கூறி அந்த புத்தகத்தை சீதாவிடம் தந்தாள் மரியம்.

``O lovely maidens, fall in love; but not with Moscovites... (ஓ! அழகிய பெண்களே, நீங்கள் காதல் வயப்படுங்கள்; ஆனால் மாஸ்கோகாரன்களிடம் மாட்டிக் கொள்ளாதீர்கள்!") என்று ஆரம்பமாயிற்று அந்தக் காத்ரீனாவின் கதை.

## 26

"ஓ! அழகிய பெண்களே... நீங்கள் காதல் வயப்படுங்கள்! ஆனால் மாஸ்கோகாரர்களிடம் விழுந்து விடாதீர்கள்! மாஸ்கோகாரர்கள் அந்நியர்கள். அவர்கள் உங்களைச் சரிவர நடத்த

*மாட்டார்கள். ஒரு மாஸ்கோகாரன் சும்மா ஒரு விளையாட்டுக்குக் காதலிப்பான். பிறகு விளை யாட்டாகவே சிரித்துக் கொண்டே விலகி விடுவான். அவன் தனது ஊரான மாஸ்கோவுக்கே போய் விடுவான். அந்த அழகிய காதலியைத் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் இரையாக்கிவிட்டு அவன் போயே போய் விடுவான்... இதை நீங்கள் அனுபவித்தே ஆகவேண்டும்....*

*ஓ! அழகிய பெண்களே! நீங்கள் காதல் வயப்படுங்கள்; ஆனால் மாஸ்கோகாரர்களிடம் அல்ல!"*

-இந்த இடத்தில் மரியம் பாடத்தை நிறுத்திவிட்டு ஷெவ்செங்கோவின் அந்தக் கவிதை உருவான காலத்தில் இருந்த ஜார் ஆண்ட மாஸ்கோவைப் பற்றி விவரித்துச் சொன்னாள்.

"மாஸ்கோகாரர்கள் என்று இச்சிறு காவியத்தில் குறிப்பிடப்படுவது ஜாரின் படைவீரர்களையே ஆகும். ஆரம்பத்தில் மாஸ்கோவைச் சேர்ந்தவர்களையும், பின்னர் எல்லா ருஷ்யர்களையும், ஜாரின் படையைச் சேர்ந்த எல்லாத் தேசீய இனத்தவரையும் உக்ரேனிய மக்கள் இவ்வாறு வெறுப்புடன் அக்காலத்தில் குறிப்பிட்டனர்; இந்தக் கவிதை எழுதப் பட்டகாலத்தில் இருந்த மாஸ்கோ, அதன் அரசும், படை வீரர்களும் நிறைந்த கொடுங் கோன்மைக் கோட்டையாக இருந்தது. இன்றைய மாஸ்கோ புது யுகத்தின் கேந்திரமாகப் பொலிகிறது. சகல அடக்குமுறைகளையும், அடிமைத் தனத்தையும் ஒழித் திருக்கிறது. சென்ற நூற்றாண்டில் அது ருஷியாவின் சகல பகுதி மக்களையும் அடக்கி ஒடுக்கி அழித்தது. அதனால் அந்த அளவு வெறுப்புடன் 'மாஸ்கோகாரன்' என்று அவர் களை அழைத்தனர்."

அதே நேரம்...

எங்கோ-நகரத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருபுறமும் மரங்களடர்ந்த, வெயிலும் நிழலும் கவிந்த

நெடுஞ்சாலையில் வேகமாய் விரைந்து கொண்டிருந்த அந்த மிக நவீனமான வெளிநாட்டுக் காரின் முன்புற சீட்டில் சுகுமாரனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சீதாவும் தாராஸ் ஷெவ்செங்கோ எழுதிய காத்ரீனாவின் கதையை ஆங்கிலத்தில் படித்துக் கொண்டிருந்தாள்.

"இளம் காத்ரீனா பெற்றோரின் எச்சரிக்கையைக் காது கொடுத்துக் கேளாமல், தனது நெஞ்சார்ந்த காதலை ஒரு மாஸ்கோகாரனின்பால் தந்தாள். அவள் உலகையே மறந்து ஒரு சோலையில் அவனைச் சந்திப்பாள். அந்த ஆணழகன்-மாஸ்கோகாரனிடம் மனம் பறிகொடுத்து அவள் தன் வாழ்வையே மண்ணாக்கிக்கொண்டாள்.

"காத்ரீனாவின் தாய் அவளுக்குப் பிறவியிலேயே அழகான முகத்தையும் கண்களையும் தந்திருந்தாள். ஆனால் தன் மகளுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தருவது எப்படி என்று அத்தாய் அறிந்திருக்கவில்லை" - இந்த வரிகளைப் பார்த்தபோது சீதாவுக்கு அம்மாவின் நினைவு வந்தது.

"எந்தத் தாய்தான் அதை அறிந்திருக்கிறாள்!' என்று மனத்துள் முனகியவாறே முகம் நிமிர்ந்தபோது அவளெதிரே நீண்ட நெடுஞ்சாலை முடிவற்று வேகமாகக் கிழிபடுவதுபோல் தெரிந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுகுமாரனைப் பார்த்தாள். அவன் மனத்துள் என்ன நினைவோ? என்ன கவலையோ? சாலையில் பதித்த பார்வையை மாற்றாமல் அவன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அந்தக் கார் எல்லா வசதிகளுடனும் இருந்தது. ஒரு பொத்தானை அழுத்தினால் இசையும், இன்னொரு பொத்தானை அழுத்தினால் குளுமையும் காரினுள் பொங்கி நிறைந்தது.

சீதா புத்தகத்தை மூடிவிட்டுத் தலைநிமிர்ந்து தன்னையும் வெளியேயும் பார்ப்பதைக் கவனித்தான் சுகுமாரன். அவனது விரல்கள் ஒரு பொத்தானை அழுத்த

இனிய நவீன மேற்கத்திய இசை ஒலித்தது. சீதாவின் செவிகளுக்கு அது புதுமையாகவும், முதலில் சற்று விநோதமாகவும் இருந்தாலும், சற்று நேரத்தில் அந்த இசையில் ஒரு லயமும், தாளக்கட்டும், பொருளும் புரியப் புரிய அவள் விரல்கள் முழங்காலின் மீது லேசாகத் தாளமிடுவதை ஓரக் கண்ணால் கவனித்தான் சுகுமாரன்.

காரின் பின்ஸீட்டில் புத்தகங்களும், பயணத்துக்கும் வேண்டிய சாமான்களும் இருந்தன. சுகுமாரன் தானே மேற்பார்வை செய்து பிரயாணத்துக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்திருந்தான். அவற்றில் சீதா தனக்கென்று கொண்டுவந்தது ஓர் அடுக்குப் புத்தகங்கள் மட்டுமே, ஞாபகமாக, ராமதாசின் “ஹே! சீதே” கதையையும்–அந்தப் பத்திரிகையிலிருந்து கத்தரித்து வைத்திருந்ததை–எடுத்து வந்திருந்தாள் சீதா. அது, இதோ இந்தக் ‘காத்ரீனா’ கதைப் புத்தகத்தின் நடுவில் இருந்து நழுவிய போது சுகுமாரன் அதைக் காற்றில் பறந்து விடாமல் பற்றிப் பிடித்து அவளிடம் தந்தான். அவன் அதை ஏதோ சாதாரண வெறும் காகிதம் என்று நினைத்தான்.

‘‘தாங்க்ஸ்’’ என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டாள் சீதா.

“இப்போ நாம எங்கே போயிண்டு இருக்கோம்?” என்று விசாரித்தாள் சீதா. சாலைக்கற்களில் இருந்த எழுத்துக்கள் வேற்று மொழியிலிருந்ததால் அவளுக்குப் புரியவில்லை.

“இன்னும் சில மணி நேரங்களில் நாம் பெங்களூரை அடைவோம்’’ என்று ஆங்கிலத்தில் சொன்னான் சுகுமாரன்: ‘‘நீ இதுக்கு முன்னாலே பெங்களூர் போயிருக்கயோ?”

“ம்ஹூம்...இல்லே.”

“அப்படியா!” என்று ஆச்சரியத்துடன் கேட்டான் சுகுமாரன்.

சாலையோரத்தில் இளநீர்க் காய்களைக் குவித்து வைத்துக்கொண்டு கிராமத்து மனிதர்கள் காரில் போகிறவர்களிடம் இளநீரை ஏந்தி நின்று சாப்பிடச் சொல்லி வேண்டினர். ஓரிடத்தில் சுகுமாரன் காரை நிறுத்தினான். சீதாவை இளநீர் சாப்பிடச் சொன்னான். சீதா காரிலிருந்து இறங்கிக் காலாறச் சற்று நடந்தாள். கிராமத்துப் பாமர ஜனங்கள் தன்னையும் அவனையும் கணவன் மனைவியாகக் கண்டு மனத்துள் ஆசீர்வதிப்பதையும், இவர்களின் பொருத்தத்தையும், அழகையும், அந்தஸ்தையும் செல்வத்தையும் கண்டு அவர்கள் மகிழ்ந்து பெருமூச்செறிவதையும் கண்டும் உணர்ந்தும் சீதா மனத்துள் அடிக்கடி சிரித்துக் கொண்டாள். இளநீர்க்காரனிடம் சுகுமாரன் தாராளமாகப் பணம் தந்தான். கூடியிருந்த சிறுவர்களுக்கெல்லாம் இனாம் தந்தான். இவர்கள் மீண்டும் காரில் ஏறும்போது அந்த எளிய மனிதர்கள் இந்தக் காரைச் சூழ்ந்து கொண்டு இந்தத் தம்பதிகளை வாழ்த்தி உற்சாகக் குரல் கிளப்பினர். அவர்களின் பாஷை புரியவில்லை சீதாவுக்கு.

"அவர்கள் என்னசொல்லி வாழ்த்தினார்கள் தெரியுமா?" என்று சிரிப்பை அடக்கிக்கொண்டு கேட்டான் சுகுமாரன். அவளுக்கு இப்போது இன்ன வார்த்தைக்கு இன்ன பொருள் என்று தெரியாவிட்டாலும் பொதுவாக இளம் தம்பதிகளைக் கண்டால் என்ன வாழ்த்துவார்களோ அதுபோல் ஏதாவதாக இருக்கும் என்று தோன்றியதால், "அதைத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவ்வளவு அவசியம் அல்ல" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தாள். சுகுமாரன் இசையின் ஒலியை மெலிதாக்கினான். கார் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"காத்ரீனாவின் தந்தை-வருத்தத்தையும் கந்தலையும் அணிந்தவர்-விளக்கைப் பார்க்க விழிகள் கூசியவரே போல், கோத்த கைகளும் குனிந்த தலையுமாய் உட்

*கார்ந்திருக்கிறார் ஒரு மேசையின் முன்னே...காத்ரீனாவின் தாய், வயோதிகமும், நரையும், வார்த்தைகளில் இழை யோடும் வேதனையுமாகக் கேட்கிறாள் மகளிடம்: "என் மகளே, எப்போது உனக்குத் திருமணம்? எங்கே உன் மணமகன்? எங்கே உன் தோழிப் பெண்கள்? எங்கேடி, சொல்லு! எங்கே மாப்பிள்ளை வீட்டார்? அவர்கள் ரொம்ப ரொம்ப தொலைவில் மாஸ்கோவில் இருக்கிறார் களோ! அப்படியானால் போ, அங்கே போய் அவர்களைத் தேடு. ஆனால் உனக்கு ஒரு தாய் இருப்பதாக அவர்களிடம் சொல்லாதே! உன்னைப் பெற்ற அந்தநேரம் சபிக்கப்பட்டது!-அது எனக்குத் தெரிந்திருந்தால்-அப் போதே அந்த வினாடியே விடிவைப் பார்ப்பதற்கு முன்னால் உன் விதிமுடிந்திருக்கும்...*

*"ம்...போ -மாஸ்கோவில் தேடு உன் மாமியாரை... தாயின் சொல்லைக் கேளாதவளே...அந்த உன் மாமியாரின் புத்திமதியையேனும் கேள் மகளே! போடி போ... உன் மாமியாரிடமும் போய் மருமகளாக உன்னை அழைத்துக் கொள்ளும்படிக் கெஞ்சு, போ! அந்த அந்நியர்கள் மத்தியிலேனும் மகிழ்ச்சியாய் இரு. போ! அந்தத் தொலை தேசத்திலிருந்து, இந்தப் பக்கம்-இங்கே-இனிமேல் எங்களிடம் திரும்பி வராதே! என் குழந்தை!* Do not come back to us, my child...

-இந்த இடத்தில் சீதாவுக்கு நெஞ்சில் துயரம் பெருகி வந்து குரல் வளையில் புரண்டது. கண்கள் சுரந்தன. ஆயினும் படிப்பதை நிறுத்தவோ, தள்ளிப்போடவோ முடியவில்லை. கண்களைக் கர்ச்சிப்பால் துடைத்து விட்டுக் கொண்டு, தொடர்ந்து படிக்கலானாள். அவள் என்னமோ படித்து உணர்ச்சிவசமாவதை சுகுமாரனும் கவனித்தான். 'காஸெட்'டிலிருந்து சோகமான சாக்ஸஃ போனின் கதறல் அவளது உணர்ச்சிகளுக்கு ஒலி வடிவம் தருவது போல் இழைந்தது.

–கார் மலைப்பாங்கான ஒரு பகுதியில் மாலை வெயிலின் பொன்னிறக் கிரணங்களால் தங்கரதம்போல் விரைந்து கொண்டிருந்தது. சுகுமாரன் ஸ்டியரிங்கின்மீது முழங்கையை ஊன்றிக்கொண்டு ஒரு சிகரெட்டைக் கொளுத்தினான்...

*சீதா புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டினாள்: அவளது மூக்கு நுனியும் மோவாயும் கன்னங்களும் உணர்ச்சிப் பெருக்கால் சிவந்து, மஞ்சள் வெயிலின் பொன்னிறத்தால் குழம்பி இருந்தன...சுகுமாரன் அவளைப் பார்ப்பதை அறியாதவளாய் அவள் காத்ரீனாவின் கதையில் தோய்ந்து கிடந்தாள்.*

*"ஓ! என் மகளே...நீ இல்லாமல் என்னை யாரே புதை குழியில் வைப்பார்கள்? உன்னையல்லாமல் வேறு யார்தான் என் உடல்மீது விழுந்து உன்னைப் போல் கதறுவார்கள்? என்னைப் புதைத்த இடத்தில் நீயல்லாமல் யாரே ஒரு காட்டுப் பூச்செடியை நடுவார்கள்? நீயில்லாத போது எனது இந்தப் பாவ ஆத்மாவுக்காக யாரே பிரார்த்தனை செய்வர்? என் ஒரே மகளே, அருமை மகளே–எனினும் நீ போ! போய்விடு. எங்களை விட்டுப் போடி!"*

*–நடுங்கும் கரங்களால் அந்தத் தாய் காத்ரீனாவுக்கு விடைதந்து ஆசியும் தந்தாள். 'கடவுள் உன்னைக் காக்க' என்று சொல்லி முடிக்குமுன் அவள் தரையில் விழுந்து மூர்ச்சையானாள்! அப்போது தான் காத்ரீனாவின் தலை நரைத்த தந்தை பேசினார்: "இன்னும் எதற்கு இங்கே நிற்கிறாய்?" என்றதும் தந்தையின் காலடியில் அழுது சரிந்தாள் காத்ரீனா.*

*"அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்—நான் செய்த தப்புக்கு....என் அருமை அப்பாவே, என்னை மன்னித்து விடுங்கள்."*

*"கடவுள் உன்னை மன்னிக்கட்டும். நன்மக்கள் உன்னை மன்னிக்கட்டும்" என்று கண்ணீர் உகுத்தார் அப்பா.*

–சீதாவுக்கு தசரதனின் சோகமும் புலம்பலும் நினைவுக்கு வந்தன.

"காத்ரீனா விடைபெற்றுக்கொண்டு போனாள். முதலில் அவளுடைய காதல் வளர்ந்த அந்தச் சோலைக்குப் போனாள்...கடவுளைத் தொழுதாள். தரையில் குனிந்தாள். ஒரு பிடி மண்ணை எடுத்தாள். கையில் எடுத்த மண்ணுடன் நிமிர்ந்து நின்று சொன்னாள்:

> ''விடை பெறுகிறேன். இனிமேல் இங்கு வரமாட்டேன். எனக்குத் தெரியும்... அது ரொம்ப தூரத்தில் இருக்கிறது. அங்கே அந்நிய மனிதர்களால் அந்நிய பூமியில் நான் புதைக்கப்படுவேன். அப்போது என் சொந்தத் தாய் நாட்டு மண் ஒரு பிடி என்னோடு இருக்கட்டும்! நான் இந்த வாழ்க்கையிலிருந்து விலகி ஒழிந்த பிறகு இந்த என் சொந்த மனிதர்கள் என் பெயரையே மறக்கட்டும். ஆனால்... ஓ! அவன் சொல்லுவானே–நான் அவனது தாய் என்று–அவன் சொல்லுவானே! நான் எங்கு போய் ஒளிந்து கொள்வேன்? தந்தையில்லாத, அநாதைக் குழந்தையுடன் நான் எங்கு போய்ப் புகலிடம் தேடுவேன்?" – என்று அழுதாள் காத்ரீனா.

–அதற்குமேல் சீதாவுக்குப் படிக்கச் சிரமமாயிருந்தது. புத்தகத்தைச் சற்று மூடினாள்.

சுகுமாரன் ஒரு பெரிய சாக்லட் டின்னைத் திறந்து தான் ஒன்று எடுத்துக்கொண்டு–அவளிடம் நீட்டினான்.

அவள் 'வேண்டாம்' என்று மறுத்துவிட்டாள்.

"ஏன்?"

"இனிப்பு சாப்பிடுகிற மனோநிலையில் இப்போது நான் இல்லை'' என்று கண்கலங்கியவாறு அவள் சொன்னாள். அவளைச் சந்தோஷப்படுத்துவதற்காக என்று நினைத்துக் கொண்டு அவன் இளித்துக்கொண்டே அவளிடம் சொன்னான். "அந்த இளநீர்க்காரி என்ன

சொன்னாள் தெரியுமா? உனக்கும் எனக்கும் தங்கச்சிலை மாதிரி ஒரு குழந்தை பிறக்கணுமாம்”

“நான் தான் சொன்னேனே, ஐ ஆம் நாட் இன்டரஸ்டட்” என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள் சீதா.

சுகுமாரன் ஏதோ ஹாஸ்யம் பண்ணிவிட்டமாதிரிப் பெரிதாகச் சிரித்தான்.

கார் கிறீச்சிட்டுக் கொண்டு மலைப்பாதையின் வளைவு ஒன்றில் வேகமாய்த் திரும்பியது.

## 27

“அவள் - காத்ரீனா-கையில் ஒரு சிசுவுடன் கிராமத்தின் வழியே நடந்தாள். மெதுவாக, நடக்க மறுத்துப் பின்னுகிற பாதங்களுடன் அவள் போனாள். தன்க்குப் பின்னால் தேங்கி நிற்கும் சொந்த கிராமத்தைத் திரும்பிப்பார்த்து ஒரு குழந்தை போல் ஏங்கி அழுதாள்...அவள் நீண்ட நேரம் துயரத்தால் அழுதாள். விடியற்காலைப் பனித்துளிகள் போல் அவள் விழிகள் கண்ணீரைச் சொரிந்தன.”

“அந்தப் புத்தகம் என்ன அவ்வளவு சுவாரஸ்ய மானதா? வந்ததிலிருந்து அதையே படிச்சுண்டு இருக்கே?” என்று சீதாவிடம் கேட்டான் சுகுமாரன்.

சீதா உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து ஜன்னல் வழியாக பிருந்தாவனம் வர்ணங்களையும் வெளிச்சத்தை யும் வாரியிறைத்துக் கொண்டிருந்தது தெரிந்தது. ஏராள மான மனிதர்கள், ஆண்களும் பெண்களுமாய் உல்லாசப் பவனிவரும் அந்த மனோரம்யமான சூழ்நிலையைச்

சிறிதும் பொருட்படுத்தாமல் எங்கேயும் உட்கார்ந்து ஏதேனும் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பவள் போல் உள்ள சீதாவின் பிடிவாதமான போக்கை சுகுமாரன் ரசித்தான். ஒருவேளை இவளது இயல்பே இப்படித்தானோ? உல்லாசங்களில் ஈடுபாடு கொள்ளாத இயல்பும் சிலருக்கு இருக்கக்கூடும் என்று அவன் முதன் முதலில் உணர்ந்தான். அவனுக்கென்ன துணையா இல்லை?

ஒரு பணியாள் மதுவும் கிண்ணமும் கொணர்ந்து வைத்துவிட்டுப் போனான்.

பெங்களூர் ஆகட்டும், மைசூர் ஆகட்டும், எங்கு போனாலும் சொந்த வீட்டில் இருப்பது போன்ற வசதிகள், பணியாட்கள் சகிதம் அவர்களின் வருகைக்காக காத்திருந் தன. எங்கே போனாலும் ஆங்காங்கே சென்னையிலிருந்து அவனைத் தொடர்பு கொண்டு சில சமயங்களில் காரியஸ் தரிடமிருந்தோ, ஆபீஸிலிருந்தோ செய்திகள் வந்தன. அது போன்ற சமயங்களில் 'காசிக்குப் போனாலும் என்னை பிடிச்ச கர்மம் தொலையாது' என்று முனகிக் கொண்டு அவளை விட்டுச் சற்றுப் பிரிந்தும் செல்ல நேர்ந்தது. அவளுக்கென்ன, அதனால் இன்னும் நிம்மதி.

> "காத்ரீனா தனது பச்சைச் சிசுவை மார்புறத் தழுவி, அழுகிறபோது முத்தம் சொரிந்து ஆறுதல் தந்தாள். குழந்தை தனது மெல்லிய கரங்களால் தாயின் மார்பைத் துழாவியது. இலைபடர்ந்த காடுகளுக்குப் பின்னால் எரியும் கோளமாய்ச் சூரியன் மறைய அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் சாலை வழி நடந்தாள்."

சுகுமாரன் எங்கோ வெளியே போயிருந்தான். வெளியே என்றால் அந்த மாளிகைக்கு வெளியே அல்ல. அங்கேயேதான் இன்னொரு அறையிலிருந்து சுகுமாரன் டெலிபோனில் ஆங்கிலத்தில் பெருங்குரலில் பேசிக் கொண்டிருக்கும் சப்தமும் கேட்டது சீதாவுக்கு.

அங்கே-சுகுமாரனின் தொழிற்சாலையில் ஏதோ தகராறு முற்றிப் போய்விட்டது போலிருக்கிறது. போலீஸாம், தடியடியாம்-நிரந்தரமாக விசேஷ போலீஸ் காவல் போடப்பட்டிருக்கிறதாம்...

"நோ! லெட் தெம் கோ டு ஹெல்... உங்களால் எப்படித் தீர்க்க முடியுமோ அப்படிச் செய்யலாம். கன்ஸல்ட் அதர் டைரக்டர்ஸ்...நாளைக்கா...வி வில் பி இன் கோவா. அநாவசியமா என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்-அன்லஸ் இட் இஸ் வெரி இம்பார்ட்டண்ட்.

"இந்த உலகம் விரிந்து பரந்தது; எனினும் பலருக்கு வீடில்லை. தனியொருவனுக்குத் தங்க இடம் இன்றிப் புகலிடம் தேடித் தவிக்க நேர்கிறது. எல்லையற்ற வள மிக்க பண்ணைகள் சிலருக்கு. எலும்பும் உடம்பும் ஒருநாள் விழுந்து மக்கிப் போகும் சொந்தமே இந்த மண்ணுடன் பலருக்கு?"

தான் தனிமையிலிருக்கிறோம் என்ற சுதந்திர உணர்வுடன் சீதா கையில் புத்தகத்துடன் அந்த மாளிகையின் மேல். மாடத்தில் உலாவிக் கொண்டே உரத்த குரலில் பரீட்சைக்குப் படிக்கிறவள் போல் படித்துக் கொண்டிருந்தாள்.

"On earth there is fortune
on whom does it shine?
on earth there is freedom
on whom does it shine?

"சீதா!" என்று உற்சாகமாக அழைத்தவாறு வந்தான் சுகுமாரன்: "நாம சாயங்காலம் கோவா போறோம். கோவா-என்ன மாதிரி இடம் தெரியுமா?"

படித்துக் கொண்டிருந்த சீதா அவனைப் பார்த்து 'ஓ. கே' என்றாள். அவள் மனத்துள் கோவாவைப் பற்றியோ வேறு உல்லாச நகரங்களைப் பற்றியோ எத்தகைய

கற்பனைகளும் ஈடுபாடும் இல்லை என்று தெரிந்தது அவனுக்கு.

பாதியில் வைத்துவிட்டுப் போயிருந்த ஸ்காட்சை எடுத்துக்கொண்டு அவள் எதிரே வந்து உட்கார்ந்தான். அவள் புத்தகத்தில் ஆழ்ந்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது.

'இந்தப் பெண் யாருடன் போட்டி போட்டுக் கொண்டு இப்படித் தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்கிறாள்!' என்று அனுதாபத்துடன் யோசித்தான் சுகுமாரன்.

> "ஓ! அவனை - காத்ரீனா காதலித்தானே அவனை- அவளது மகன் கைகளை ஆட்டி வரவேற்பானே அவனை - அவள் சந்திப்பாளா? அவனுடன் மட்டும் அவளிருந்தால் போதும்...

``don't you think... என்று ஆங்கிலத்தில் என்னவோ சொல்ல ஆரம்பித்தான் சுகுமாரன். புருவச்சுளிப்புடன் அவனைப் பார்த்தாள் சீதா.

"நாம ஒரு பொய்யான, 'அன்யூஷுவல்' வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கோம்னு நீ நினைக்கலியா?..." என்றான். சீதா அதற்குப் பதில் சொல்லவில்லை. 'இது புரிய உங்களுக்கு இவ்வளவு நாளாயிற்றா?' என்று நினைத்துக் கொண்டாள்.

> "அழுக்கும் கந்தலுமாய், முதுகில் ஒரு மூட்டையுடன் கையில் ஒரு கோலும் ஊன்றி மார்போடு அணைத்த மற்றுமொரு மூட்டையாக அந்தக் குழந்தையுடன், "ஐயா மாஸ்கோவுக்குச் செல்லும் நெடுஞ்சாலை எது? சொல்லுங்கள்."
>
> "மாஸ்கோ? இதுதான் பாதை அன்பே! அது ஒன்றும் அதிக தூரத்தில் இல்லை."

*"மாஸ்கோவுக்குத்தான். கடவுளின் பேரால் எனக்கு உதவுங்கள். நான் அங்கே போகவேண்டும்."*

*காத்ரீனாவின் நடுங்கும் கரத்தில் ஒரு செப்பு நாணயம் விழுந்தது. ஐயோ, அதை வாங்குவதற்குள் அவள் எவ்வளவு வேதனைப்பட்டாள்! அவள் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்? ஏனா? கையில் உள்ள அந்தச் சிசுவுக்காக...காத்ரீனா தன் மகனுக்காகக் கையேந்திப் பிச்சையெடுத்தாள்."*

"சீதா...நாம இப்படியே இருக்க முடியாது. மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வந்துடணும்...இதுவரைக்கும் ஏதோ விளையாட்டாக எடுத்துண்டு இருந்துட்டேன்... வாட் இஸ் யுவர் ரியல் ப்ராப்ளம்?"

"ப்ராப்ளம்?" என்று சுகுமாரனைப் பார்த்தாள். "எனக்கா? இட் இஸ் எடர்னல்! முடிவோ, தீர்வோ தெரியாதது...இப்ப என்னை வருத்திண்டிருக்கறது காத்ரீனாவின் பிரச்னைதான்..." என்றாள். அவள் படிக்கிற புத்தகத்தைப் பற்றிச் சொல்லுகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

"காத்ரீனா!" என்று அவன் திரும்பவும் சொன்னான்.

"ம்...! காத்ரீனாதான் - எனக்கு ஒரு ருஷிய சிநேகிதி- ஸாரி-ஒரு சோவியத் சினேகிதி இருந்தாள். இப்போது அவள் மாஸ்கோவில் இருக்கிறாள். அவள் நினைவாகப் படிக்க ஆரம்பித்தேன்...இட் இஸ் இன் இங்கிலிஷ்!" என்று வாய் விட்டுப் படித்தாள் சீதா.

"where's Katerina now?"

*காத்ரீனா இப்போது எங்கு இருக்கிறாள்? அவள் சாலையோரத்தில் உறங்கினாள். ஒவ்வொரு நாளும் கருக்கலில் எழுந்தாள். கால்கடுக்க நடந்தாள் - மாஸ் கோவை நோக்கி..பிறகு!... வெண்பனிச் சொரியலுடன் குளிர் காலம் வந்தது. பனிக்காற்று வீசியடித்தது. எனினும் அந்த பரிதாபத்துக்குரிய ஆத்மா*

*தள்ளாடியது...சற்று நின்றபோது-அவள் காண்பது என்ன? மாஸ்கோகாரர்கள்...அவர்கள் அணி வகுத்துச் செல்கிறார்கள்-படைப்பிரிவினர்.*

*ஓ! காத்ரீனாவின் தலை சுழன்றது. உடனே அந்தப் படைவரிசையை நோக்கிப் பாய்ந்து சென்றாள்.*

*"நல்லவர்களே! உங்களை வேண்டுகிறேன். சொல்லுங்கள். என்னுடைய இவான் உங்கள் மத்தியில் இல்லையா சொல்லுங்கள்."*

*"அந்தப் பெயரால் எங்களுக்கு யாரையும் தெரியாது" என்றனர்.*

*"இரு இரு-என் மகனே, அழாதே. எது வந்தாலும் வரட்டும், நான் நிற்க மாட்டேன்-நான் போவேன். உன் தகப்பனை நான் கண்டு பிடிப்பேன். உன்னை அவனிடம் தந்தபின்-என் கண்ணே, நான் மரித்துப் போவேன்."*

சீதா இங்கே நிறுத்தி எதிரில் உட்கார்ந்திருக்கும் சுகுமாரனைப் பார்த்தாள். புத்தகத்தைச் சிறிதே மூடி வைத்தாள். அவன் சற்றுமுன் கேட்டதற்குச் சரியாகப் பதில் கூறாமல் தட்டிக்கழித்து விட்டதை இப்போதுதானே நினைத்துப் பார்த்தாள்.

"நம்மால் தீர்க்க முடியாத எந்தப் பிரச்னையையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்?" என்றாள்.

"சீதா-வரவர உன்னைப் பாத்து எனக்கு வருத்தமா இருக்கே...நான் உனக்கு என்ன தப்பு பண்ணிட்டதாக நீ நினைக்கறே? அப்படியே அறியாமல் நான் எதுவும் செய் திருந்தாலும் அதுக்கு இப்ப செய்ய வேண்டிய பிராயச் சித்தம்தான் என்ன?" என்று மெல்லிய குரலில் கனிவுடன் கேட்டான்.

"என்னைப் பார்த்து நீங்களோ, உங்களைப் பார்த்து நானோ வருத்தப்பட என்ன இருக்கு? நாம் நம்ம வார்த்

தையைக் காப்பாத்திண்டு இருக்கோம்-இருப்போம்னு சந்தோஷப்படத்தான் வேணும்" என்றாள் சீதா.

"இது அர்த்தமில்லாத வாழ்க்கைன்னு தோணலே, உனக்கு?"

"ஓர் அர்த்தமும் வேண்டாம்" என்றாள் சீதா.

"ஓ! என்ன பணம் இருந்தும்-செல்வம், சொத்துக்கள், தொழிற்சாலைகள், பெரிய தொழில் அதிபர்னு பேர் வேற... இதெல்லாம் எதுக்கு? கொடி பிடிச்சிண்டு கோஷம் போட்டாலும், பட்டினி கிடந்தாலும் இந்த தொழிலாளிங்க மாதிரிகூட பெண்டாட்டி பிள்ளைங்க கூட வாழும் வாழ்க்கை யில்லாத இந்த 'எஜமான, வாழ்க்கை எதுக்கு?' - என்று விரக்தியுடன் யோசித்தான் சுகுமாரன்.

அவன் எழுந்து போய் வராந்தாவில் நின்று எங்கோ வெறித்தவாறு புகை பிடித்துவிட்டு வந்தான். மதுவை நிரப்பிக் கொண்டான். அவன் குடித்துக் கொண்டே இருந்தான். அவள் அதைக் கவனிக்கவே இல்லை. புத்தகத்தில் லயித்திருந்தாள். திடீரென்று சுகுமாரன் குரல் மிக நெருக்கமாக அவள் செவியருகே ஒலித்தது.

"சீதா-ஆர் யூ இன் லவ்? நீ வேற யாரையாவது காதலிக்கிறயா?" என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். ஓர் அலங்காரமான தூணில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டு சீதாவை நோக்கி கண்சிமிட்டியவாறு ஒரு நண்பனைப் போல் அவன் கேட்டான்.

"என்னிடம் நீ எதையும் ஒளிக்காமல் சொல்லலாம். டேக் மி அஸெ ஃபிரண்ட். அப்படியானால்கூட எனக்குச் சந்தோஷமே-ஐ வில் நெவர் மைண்ட். என்கிட்டசொல்... ஐ வில் ஹெல்ப் யு. டோன்ட் ஸ்பாயில் யுவர் லைஃப்..." என்று விலகி நின்றவாறே அவளிடம் பேசினான் அவன்.

சீதாவின் முகத்தில் திடீரென ஒரு பிரகாசம் மேலிட யோசித்தாள்: "அப்படியானால் என்னை விவாகரத்து செய்து விடுவீர்களா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள் சீதா. சுகுமாரனின் முகம் பேயறைந்தாற்போல் மாறியது.

## 28

**"நோ!"** என்று அலறினான் சுகுமாரன்: "சீதா... அது மட்டும் முடியாது. பிளீஸ்...நீ உன் விருப்பப்படி எப்பிடி வேணுமானாலும் இருந்துக்கோ. ஆனால், 'டைவோர்ஸ்' மட்டும் வேண்டாம். என்னாலே அதைச் சகிக்க முடியாது. நெவர்...நெவர்... என்று உரத்த குரலில் கத்தினான். தலையை உலுப்பிக் கொண்டு மேலும் கீழும் உலாவினான். குரலைத் தாழ்த்திக்கொண்டு அழுவது போன்ற குரலில் அவளிடம் கெஞ்சி வேண்டினான்: "என்ன காரணத்தை முன்னிட்டும் அப்படி ஒரு ஐடியா உன் மனசிலே வரவே கூடாது. அப்புறம்-என் அந்தஸ்து, பெருமை எல்லாம் போயிடும்...தென் ஐ வில் கமிட் ஸ்யூஸைட்! அது மட்டும் நடக்க வேண்டாம். சீதா, எனக்கு இந்த ஒரு வார்த்தையை நீ உறுதிமொழி மாதிரி சத்தியம் பண்ணித் தரணும்...நீ விவாகரத்து மட்டும் கேக்கறதில்லேன்னு...பிளீஸ், சீதா, பிளீஸ்" என்று அவன் பரிதாபமாய் அவளிடம் கைகூப்பி யாசித்து நின்றான்.

'இதற்காக இவன் ஏன் இவ்வளவு தூரம் பதைக்க வேண்டும்?' என்று சீதாவுக்குப் புரியவே இல்லை. அவன் பொய்யாக நடிப்பது போலிருந்தது அவளுக்கு. இது விவாகமானால் அல்லவோ இதை ரத்து செய்வதைப்பற்றி யோசிக்க வேண்டும்? ஆனாலும் வாழ்க்கை முழுதும் இப்படியொரு பொய்யுறவில் கட்டுண்டுதான் கிடக்க வேண்டும் என்ற மலைபோன்ற உண்மையும், அவளுள்

அதை நிலை நிறுத்திக் கொள்ள வாக்குறுதி வேண்டி நிற்கும் சுகுமாரனின் பிடிவாதமும் அவளை இது குறித்து ஆழ்ந்து யோசிக்க வைத்தன.

அவனை ஒரு புல்லைப் பார்ப்பது போல் துச்சமாக ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தாள் சீதா. "நமது ஹிந்து திருமணச்சட்டமே அங்கீகரிக்கிற இதை நீங்கள் இவ்வளவு மூர்க்கமாக மறுக்க வேண்டுவது என்ன நியாயம்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

"ஹெல் வித் யுவர் கான்ஸ்டிட்யூஷன்-அண்ட்-லாஸ்!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சபித்தான் சுகுமாரன். அவன் மனத்துள் அவனது தரத்துக்கேற்பவே அவளைப் பற்றி எண்ணங்கள் எழுந்தன. அவள் நிச்சயம் வேறு எவனோ ஒருவனிடம் மனம் பறிகொடுத்திருக் கிறாள் என்று சந்தேகம் கொண்டான் அவன். இவளை அந்த அளவு ஈர்த்துத் தன் வசமாக்கியிருக்கும் அந்த இல்லாத முகத்தை எண்ணி எண்ணிப் பார்த்துப் பெருமூச் செறிந்தான் சுகுமாரன். அவனது பார்வை அவளை ஊடுருவி அவள் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் ரகசியத்தைத் துருவித்துருவி அளப்பது போல் சீதாவின் மீது மொய்த்தது. அந்தப் பார்வை அவளுக்கு உடம்பில் நமைச்சலையும், மனத்தில் அருவருப்பையும் ஏற்படுத்திற்று.

"சொல்லு சீதா...நீ என்னிடம் சொல்லியாக வேண்டும். யார் அவன்? யார் அந்த மகா பாக்கியசாலி?... என்று அவன் திடீரென்று அவள் முன்னால் தோன்றி நின்று கேட்டான். அப்போதும் அவள் படித்துக் கொண்டு தானிருந்தாள். அவன் கேட்பதும் அவனது எண்ணங்களும் அவளுக்குப் புரிந்தாலும் அதற்குப் பதில் சொல்ல வேண்டு வது அவசியம் இல்லை என்று எண்ணினாள். அவன் எதையாவது நினைத்துப் புழுங்கட்டும் என்ற தீர்மானத் தில் அவனை மௌனமாக ஒருமுறை ஏறிட்டு நோக்கிய பின் இதழ்க் கடையில் நெளிந்த ஏளனச் சிரிப்புடன் அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவன் அவளிடம்

கோபித்துக் கொண்டவன் போல்-அவளது அலட்சியப் பார்வையால் எரிச்சலுற்றுத் தரையை ஓங்கி ஒரு மிதிமிதித்து விட்டுப் போனான்.

அறையுள், மேசையின் மீது அன்றையத் தபால் களைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனான் ஒரு பணியாள். சலவைக் கற்கள் பதித்த தளத்தில் உள்ள சதுரக் கற்களை எண்ணிக் கொண்டே ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை கூண்டுப்புலிபோல் உலவிக் கொண்டிருந்த சுகுமாரனின் மனத்தில் எண்ணற்ற இளம் வாலிப முகங்கள் தோன்றி-இவனோ, அல்லது இவனாக இருக்குமோ என்று யார் யாரையோ சீதாவின் காதலனாக வரித்து வக்கரிப்புகள் தோன்றியவாறிருந்தன. அவன் அவளறியாமல், தூரத்தே தூணோரமாக நின்று ஓரக் கண் விரித்துப் பொறாமை கொப்பளிக்க அவளைப் பார்த்தான்.

``Why not you rape her?" என்று அவனுள் ஒரு பிசாசுக் குரல் கிளு கிளுத்த நைச்சியச் சிரிப்புடன் உதட்டைச் சப்பிக் கொண்டு கேட்டவாறு நின்றது.

“இவள் உன் உடமை...உனக்குச் சொந்தமான இந்தத் தசைக் கோளத்தைப் பிடித்துப் பிசைந்து கசக்கிச் சாறு பிழிந்து உறிஞ்சித் தீர்க்கும் உரிமை படைத்தவன் நீ?- go, proceed..." என்று ஒரு சாட்டையில் அவனது முதுகுத் தண்டில் சுண்டி அடித்தது இன்னொரு பிசாசு...

ஆயினும், அவனுள் ஒரு கோழைப் பிசாசு, பேடிப் பிசாசு, அச்சப் பிசாசு என்று பலவும் தோன்றி அவனை ஆட்டி அலைக்கழித்து அடங்கவே வைத்தன! அவன் தனது ஏலாமைக்காகத் தனது பிறவியையும், ஜாதியையும் மனத்துள் பழித்துத் திட்டிக் கொண்டான்.

கையிலிருந்த ஸ்காட்சை உறிஞ்சியபின் அந்தக் கிண்ணத்தை ஓங்கித் தரையில் அறைந்தான்...கதவு அதிர்ந்தது அவன் வேகமாய் நுழைந்த அறையுள்ளிருந்து கண்ணாடித் தம்ளர் தரையில் மோதுண்டு சிதறிய சப்தம்

சீதாவின் முகத்தில் அறைந்தாற்போல் கேட்டது. அவனுக்கு வெறி பிடித்துவிட்டதோ? என்ற நினைப்புடன் அந்த அறைவாசலைப் பார்த்தாள். ஒரு கொங்கிணிச்சி-வேலைக்காரி-பதறி அடித்துக் கொண்டு துடைப்பமும் குப்பைக் கூடையுமாய் அறைக்குள் ஓடுவது தெரிந்தது. இப்போது அவனது பாதங்களின் சப்தம் மேல்மாடிக்குப் போகும் குறுகிய மரப்படியில் 'தங்தங்' என்று அதிர்ந்தது. சீதா புத்தகத்தைப் புரட்டினாள்:

"என்ன! மாஸ்கோகாரர்களா? எங்கே, மாஸ்கோ காரர்கள்? அதோ, அமைதியாய் இரு அன்பே, எங்கே அவர்கள்? அதோ பார்-நீயே உன் கண்களால்...

காத்ரீனா பறந்தோடினாள். அவள் தனது சக்தி யனைத்தையும் திரட்டிக் கொண்டு ஓடினாள்.

சாலையை அடைந்தாள்....அந்த சைன்யம் அவளருகே நகர்ந்தது. அவர்கள் குதிரைகளின் மேல் ஆரோகணித்துப் போய்க் கொண்டு இருந்தனர். அவள் பார்வை அவர்களில் அவனைத் தேடித் தவித்தது. அதைத் தலைமை நடத்திச்செல்லும் அந்தத் தளபதி...

"என் இவான்-அன்பே! என் அன்பே-கடைசியில் நீ வந்து விட்டாய்!"

அவள் அவனருகே ஓடினாள்...அவனும் வேகமாய் விரைகிறானே...அவன் அவளைப் பார்த்தான். பார்த்த மாத்திரத்தில் முகம் திருப்பிக்கொண்டான்.

"என் அன்பே, ஏன் நீ ஓடுகிறாய்? உனக்குக் காத்ரீனாவைத் தெரியவில்லையா? என்னை உனக்கு நினைவில்லையா? இங்கே பார்...என்னைப் பாரேன்... என் முகத்தைக் கிட்ட, குனிந்து பார்...நான்தான் காத்ரீனா உன் அன்புக் காதலி...ஏன்? நீ முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்!

ஓ!...இரு இரு...ஒரு விநாடி என் கண்ணா இரு...இதோ பார்-நான் அழவில்லை... அன்பே, உனக்கு என்னை அடையாளம் தெரியவில்லை...என் முகமெல்லாம் அழுக்கும், தூசியும்... கறுத்துப் போய் அடையாளம் தெரியாமல் ஆகிவிட்டேன்'' என்று முகத்தை இரண்டு உள்ளங்கைகளாலும் அழுத்தித் துடைத்து ''ஓ! இவான்... இது சத்தியம்...நான்தான் காத்ரீனா...என் குரல் கூடவா புரியவில்லை?" என்று அலறினாள்.

"மூளை கெட்ட முட்டாளே-வழி விடு...யாரடா அவன்? இந்தப் பைத்தியக்காரியை இழுத்துவிடு...

"கடவுளே! நீ என்ன செய்கிறாய்? நீ என்னை இப்படித் தள்ளிவிடக் கூடாது. நீ எனக்கு உண்மை யாக இருப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறாய்!"

"எதற்குத் தயங்குகிறாய் அடா! அவளை அப்புறப் படுத்து."

"யாரை? என்னையா அப்புறப்படுத்தச் சொல்லு கிறாய்? ஐயோ! நான் என்ன பாவம் செய்தேன்? உன்னுடைய காத்ரீனா தன்னை உனக்கு அந்த நிலா வெளிச்சத்தில் அர்ப்பணம் செய்தது தவிர என்ன பாவம் செய்தாள்? ஓ! இவான்...அந்த நம் உறவு அழகிய மகனாய் வந்து பிறந்து இருக்கிறது இவான். இப்போதாவது என்னை நீ கைவிடாதே-இவான் உன்னைச் சேர்ந்தவர்களை எல்லாம் நேசிப்பேன். நான் எல்லாவற்றையும் மறந்து விடுவேன். நான் உன்னை மனதார நேசித்தேன். உன் மகனைத் தாங்கிச் சுமந்தேன். புருஷனில்லாத தாய்! என்ன அவமானம்! நான் உன் அடிமையாய் இருக்கிறேன். என்னை விட்டுவிடாதே இவான்...என்னை மறந்தே விடு. ஆனால்...உன்னைக் கெஞ்சுகிறேன்-உன் மகனைக் கை விட்டு விடாதே இவான்...ஓ! என் அன்பே. கொஞ்சம் இரு- இதோ நான் அவனைக் கொண்டு வருகிறேன்-அன்பே இரு..."

காத்ரீனா ஒரு குடிசைக்குள் ஓடினாள். அந்தப் பொக்கிஷத்தை அள்ளிக்கொண்டு அதற்கு உரியவனிடம் ஓடி வந்தாள்-குழந்தை குளிரில் விறைத்து அலறியது.

"இதோ உன் மகன், வா, வந்து பார். எலும்பும் தோலுமாய் இருக்கும் இவனைப் பார், இவான்! நீ எங்கே போய்விட்டாய்?"

அவன் பறந்து போனான்-அந்த அப்பன் ஓடியே போனான்...

"ஐயோ-மகனே, இனி நான் என்ன செய்வேனடா? பெருந்தன்மைமிக்க மாஸ்கோகாரர்களே-உங்களைக் கால்பிடித்துக் கெஞ்சுகிறேன். இவனை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள்: கொண்டு போங்கள் இந்த மாஸ்கோகாரனை, உங்கள் தளபதியிடம் கொண்டு போங்கள்! அவனது மகனாக நீங்களேனும் இவனை ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த மாஸ்கோகாரனை அநாதை யாக்கிவிடாதீர்கள், கொண்டுபோங்கள். எனக்கு மட்டும் என்ன? நான்-இதோ இங்கே-இவனை-விட்டுவிட்டேன்.

காத்ரீனா அந்தக் குழந்தையைச் சாலை நடுவே கிடத்தினாள்.

"இங்கேயே இரு-உன் அப்பன் வருகிறவரை-இனி என்னாலும் முடியாது."

சுகுமாரன்-அவளை நெருங்கி வந்தவன்-விரல்களை நெறித்து முறித்துக் கொண்டு மறுபடியும் தன் அறைக்குள் போய்க் கதவை அறைந்தான். சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்த சீதாவைக் கண்டு அவன் பயந்து போய்ப் பல்லைக் காட்டியவாறு 'காற்று வீசி அடிக்குது' என்று பொய் சொன்னான்:

"நீ ஏதாவது சாப்பிடுகிறாயா?" என்று அவளை உபசரித்தான். காலிங்பெல்லை அழுத்திப் பணியாளைக் கூப்பிட்டு அவளை உபசரிக்கச் சொன்னான்.

"ஐ ஆம் ஆல்ரைட்" என்று சொல்லிக்கொண்டு கம்பீரமாக நடந்து காட்டினான். அவனது போக்குகள் விசித்திரமாக மாறி இருப்பதை உணர்ந்தாள் சீதா. குடி அதிகமாகிவிட்ட காரணமாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

சுகுமாரன்! திடீரென்று என்னவோ நினைத்துக் கொண்டு அவசர காரியமாக அறைக்குள் போய்ச் சற்று முன் வந்திருந்த கடிதங்களைப் பிரித்துப் படிக்கலானான்.

மேலாக ஓர் இன்லாண்ட் கடிதம் இருந்தது. மீனா–மெட்ராஸ்' என்று பின்புறத்தில் எழுதியிருந்தது.

'என்னவாம் இவளுக்கு?" என்ற நினைப்புடன்–அவளையாவது அழைத்து வந்திருக்கலாம்–இந்தச் சனியனுடன் மாரடிக்கறதைவிட....!' என்று முனகிக் கொண்டே கடிதத்தைப் பிரித்தான். கடிதம் ஒரு நர்ஸிங் ஹோமிலிருந்து எழுதப்பட்டிருந்தது. அவன் எதிர்பார்த் திருந்த 'கரு'மம் பிடித்த விஷயம்தான். இது மூணாவது தடவை. ஏற்கனவே அதற்கான ஏற்பாடுகள் நடந்திருப்ப தால் காதும் காதும் வைத்தாற்போல் மீனாவுக்குக் கரு வழிப்பு நடந்திருக்கும்–இதற்குக் கடுதாசி என்ன? தனியாக இருக்கும்போது கதறி அழுவாள் ஒரு தடவை...ஆறுதலும் அதுதான்; அழுகையும் அதுதான்! பாவம் மீனா. இந்தத் தடவை நிரந்தரமான சர்ஜரி ஏதாவது பண்ணிடச் சொல்லணும்..." என்ற நினைப்புடன் கடிதத்தைக் கசக்கி எறிந்தான்,

"சரி சரி, ஊருக்காவது திரும்பிப் போய்த் தொலையலாம்...இவளோட தேனிலவு கொண்டாடி நான் திளைச்சது போதும்...ஏய் யாரங்கே...ஈவினிங் பிளேன்லே மெட்ராஸ் போகணும்... என்று யாரிடமோ போனை எடுத்து உத்தரவு போடுகிற சப்தம் சீதா உட்கார்ந்திருந்த ஹாலில் எதிரொலித்தது.

குழந்தையைத் தெருவில் கிடத்திவிட்டு–வெறுங்காலு டன் காட்டுக்குள் ஓடினாள் காத்ரீனா–இவானை

வயிறு எரியச் சபித்துக்கொண்டே ஓடினாள். பனியில் ஓடி- பெருகிவரும் நீர்ப்பெருக்கில் மோதி வீழ்ந்தாள்...

"தெய்வமே என் ஆத்மாவை எடுத்துக்கொள்...ஏ காட்டாறே, இந்த உடம்பை நீ எடுத்துக்கொள்..."

ஒரு சிதறல்! சில குமிழ்கள்! இளம் காத்ரீனா ஏங்கித் தவித்த இடத்துக்குப் போயே விட்டாள்-காற்று ஊதி ஊளையிட்டது...

**மா**ரியம்மாள் வகுப்பறையில் காத்ரீனாவின் கதையை ருஷிய மொழியிலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்லிக் கொண்டிருந்தாள். ராமதாசின் கண்கள் சிவந்து கலங்கி இருந்தன. அவன் பேனாவைத் திறந்து எழுதினான்:

"ஒரு காலத்து மாஸ்கோ இராவணேஸ்வரமாக இருந்தது. அங்கே அரக்கர்களும் ராக்ஷஸர்களுமே ஆண் வடிவத்தில் திரிந்தனர். கோடிக் கணக்கான காத்ரீனாக் களைப் பலி கொண்ட அசுர பூமி அது. காத்ரீனாக்கள் இப்போது அங்கே அறவே இல்லை. அந்த இராவணேஸ் வரத்தை அவர்கள் தகர்த்துவிட்டார்கள்...அதனால் தானோ, நமது ருஷ்ய மொழி ஆசிரியை காத்ரீனா என்ற தமது பெயரை சீதா என்று மாற்றிக்கொண்டாள்? ஆம்; சீதை ஜெயித்தவள்-ஜெயிப்பவள்-இராவணர்களை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் பொசுக்குபவள் அல்லவா சீதை?" என்று தனது கட்டுரை நோட்டில் எழுதிக் கொண்டிருந்தான் ராமதாஸ்.

## 29

"**ஹா**ய்! மரியம்...

"சீதா!...எப்போ வந்தே? எப்படியிருந்தது உன் தேனிலவு? ஒரு வாரமாச்சு நாம் சந்திச்சு...எப்போ வரே"

"மற்றவை-நேரில்-மாலையில்" என்று சொல்லி ரிஸீவரை வைத்து விட்டுத் திரும்பிய சீதா, சுகுமாரன் தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டும் கவனிக்காதது போல் அவனைக் கடந்து போனாள்.

மாமியாரம்மாள் அறையில் யாரோ புதிதாய் ஒருத்தி நர்ஸாக வந்திருந்தாள்.

"மீனா எங்கே?" என்று கேட்டுக்கொண்டே மாமியாரை உடல்நலம் பற்றி விசாரித்தாள் சீதா; மாட்டுப் பெண்ணைப் பார்த்துப் புன்னகையுடன் சொன்னாள் பங்கஜவல்லி அம்மாள்:

"அவளும் ஒரு பெண் ஜன்மம்தானே! உடம்புன்னு ஒண்ணு இருக்கோன்னோ! என்னமோ வந்து படுத்துண்டாள். நான் படுத்துண்டா அவ பார்த்துப்பாள்... அவளைப் படுக்க வெச்சி பணிவிடை பண்ண யாரு இருக்கா? பாவம், தாயில்லாக்குழந்தை! வந்துடுவாள்; ரெண்டு நாள் ஆகும்... நீ எப்படி இருக்கே? ஸ்நானம் பண்ணிண்டிருக்கயோ?" என்று பொங்கிச் சுரக்கும் கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு கேட்டாள்.

'பின்னே? ஸ்நானம் பண்ணாம இருந்தால் பொழைப்பு நாறிப் போகாதோ?' என்று மனத்துள் முனகிக்கொண்டே ஒரு புன்னகையும் கண் சிமிட்டலுமாய் மாமியாரின் விசாரத்தை கேலி செய்தாள் சீதா.

ஒருவாரம் பார்க்காமலிருந்து-அதுவும் தேனிலவுப் பயணம் போய்விட்டு வந்திருக்கும் சுகுமாரனையும் சீதாவையும் அந்த வீட்டைச் சேர்ந்த எல்லாரும் வந்து ஏதோ ஒரு சமயம் கண்டு விசாரித்துச் சென்றனர். எல்லாருக்கும் பொய் கலந்த புன்னகையுடன் பதில் சொன்னாள் சீதா. சுகுமாரன் வந்தவர்களிடம் சில

சந்தர்ப்பங்களில் எரிந்து விழுந்தான்; சிடு சிடுத்தான். பங்கஜவல்லி அம்மாள், மீனா இல்லாத வெறுப்பில் அவன் அப்படி இருப்பதாக நினைத்துக்கொண்டு மனத்துள் அருவருப்படைந்தாள். 'இவளுக்குத் தெரிந்திருக்குமோ' என்ற சந்தேகத்துடன் சீதாவின் முகத்தையும் கண்களையும் அடிக்கடி ஊடுருவிப் பார்த்தாள் பங்கஜவல்லி.

இவர்கள் ஊரிலிருந்து வந்தபிறகு வீடே புதுக்களையுடன் கலகலப்பாகவும் இருப்பது போலிருந்தது. எப்படியோ மகன் சந்தோஷமாக இருக்கட்டும் என்ற நிம்மதியில் அவளும் கூட மீனாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள், மீனாவின் நிலையை முற்றிலும் அறிந்திருந்த பங்கஜவல்லி உள்ளூற அவள் மீது ரொம்பவும் பரிதாபம் கொண்டிருக்கிறாள், ஆயினும் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியுமோ? அவளைப் போய்ப் பார்க்க ஆசையிருந்தும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மீனாவின் வருகைக்காகக் காத்திருந்தாள்... 'அவ வயத்திலே வந்து அழியற சனியன் இவள் வயிற்றில் வந்திருக்கப்படாதோ?' என்று எண்ணி ஏக்கமாய்ப் பெருமூச்செறிந்தாள் பங்கஜவல்லியம்மாள்.

சுகுமாரன் தேனிலவுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்ததிலிருந்து தனது ஆயிரம் பிரச்னைகளில் மூழ்கிப்போனான். அடிக்கடி போனில் அவன் அலுவலகத்துடன் பேசினான். ஒரு மாதிரி அவனது தொழிற்சாலையில் கதவடைப்பு தவிர்க்கப்பட்டு ஒரு தாற்காலிக சமரசம் ஏற்பட்டிருக்கிறது போலும். ஆயினும் அவனுக்கு இந்தத் தொழிலாளர்களின் மீது நம்பிக்கை இல்லை.

"இன்னும் கொஞ்ச நாள் கழித்து வேதாளம் முருங்கைமரம் ஏறிக்கொள்ளுமே! அதன் குணம் எப்படிப் போகும்? வேலை செய்யறதுக்கா இருக்கானுங்க! போராடறதுக்குத் தானே இருக்கான்களாம்" என்று ஏளன

மாகப் பேசிக் கொண்டிருந்த சுகுமாரனின் பக்கத்தில் உட்கார்ந்து அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள் சீதா. சுகுமாரன் காரைத் திருப்பியவாறே கேட்டான்: "எங்கே மரியம் ஹாஸ்டலுக்குத்தானே?"

"ஆமாம், என்று சொன்ன சீதா, சற்றுமுன் அவன் பேசிக்கொண்டிருந்த தொழிற்சாலை பற்றி யோசித்தாள்: "எனக்கு உங்களோட நிறுவனங்கள் எதிலாவது ஒரு வேலை போட்டுக் கொடுங்களேன்!" என்று கேட்டாள். ரொம்ப 'காஷுவலா'கக் கேட்பது போலிருந்தாலும் அவளைப் பொறுத்தவரை உண்மையாகவே கேட்டாள். சுகுமாரன் தலையை அண்ணாந்து சிரித்தான்.

"இந்தப் பொண்டாட்டி உத்தியோகம் மட்டும் போறலியாக்கும்!" என்றான்: "இப்ப நீ பாக்கற உத்தி யோகத்துக்கே நான் உனக்குச் சம்பளம் தரலாம்" என்றான்.

"நான் சீரியஸாகவே கேட்கிறேன்" என்றாள் சீதா.

ஒரு விநாடி யோசித்தான்: "ஓ. எஸ். நீயே தேர்ந்தெடுத்துச் சொல்... ஆனால் நான் செய்கிற ஏதாவது ஒரு வேலையைத்தான் தரலாம்... கொஞ்சம் அவகாசம் கொடேன்...உனக்குத் தகுந்த மாதிரி ஒரு அப்பாயிண்ட் மெண்ட் தரேன்..." என்று யாரோ போல் பேசினான்.

அவன், தான் இனியும் அவளிடம் அவமானபடத் தயாராக இல்லை என்று மனத்துள் உறுதிபூண்டிருந்தான். இவள் மனம் தன்னைப் புருஷனாக அங்கீகரிக்காத வரைக்கும் தானும் இவளுக்காக ஏங்குவதில்லை என்று அவன் தன்னுள் திடம் சொல்லிக் கொண்டான். 'நீ என்ன பெரிய... லோகத்திலே இல்லாத தேவமகள்னு நெனைப்போ? உங்கப்பன்கிட்ட இப்ப ஒரு வார்த்தை சொன்னால் உன்னைவிட ரூபவதிகளை வரிசையாகக் கொண்டு வந்து நிறுத்துவான்!' என்றெல்லாம் இவள் முகத்தில் அறைந்தாற்போல் சொல்லிவிடலாமா என்று அவனுக்கு உதடுகள் துடித்தன. ஆனால் நாவு துணிய

வில்லை. பல்லைக் கடித்து முனகிக்கொண்டான். அவன் என்ன சொல்லுகிறான் என்று புரியாமல் சீதா அவனைக் கூர்ந்து பார்த்தாள். அவன் அவளைப் பார்த்துப் பொய்யாகச் சிரித்தான்.

"அது உன் பெயர் ராசின்னு நினைக்கறேன். சீதையின் புருஷன் சந்தோஷத்தை எப்போதாவது அனுபவித்தானா?" என்று அவன் தன்னை ராமன் என்று சொல்லிக் கொண்ட அபத்தத்தை ரசித்தாள் சீதா. இருந்தாலும் பேச்சு என்று வந்தபின் பேசிவிட வேண்டியதுதானே?

"கல்யாணம்கிற பேராலே சீதையை அபகரிச்சுண்டு போனவா எப்படி ராமனாக முடியும்? அவா ராவணன் கள்தான்!" என்றாள்.

"ப்ளீஸ் சீதா, ஸ்டாப் இட்! நான் உன்னை அபகரிச்சேன்னு எப்பிடிச் சொல்லலாம்?"

"நீங்களே சொல்லியிருக்கேள் கல்யாணத்துக்கு முன்னேயே...என்னை, விலைக்கு வாங்கினதாக! உண்டா, இல்லையா? அதற்கு என்ன பேர்? நீங்க அதுக்குப் பல லட்சங்கள் குடுத்து இருப்பேள் எங்க அப்பாங்கிற ராவணனுக்கு...என் உடம்புக்கு அவாதானே சொந்தம்? உயிரோடு உங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துட்டா... சரி சரி...இந்த உடம்பு உங்களுக்கு உழைக்கும்; தேயும்; அழியும். நீங்க கூலி கொடுத்து எத்தனை ஆயிரம் பேரை வெச்சிருக்கேள் உங்க தொழிற்சாலையிலே.... அது போல. ஆனா நாங்க போராடமாட்டோம். புண்ணியவதிகள்னு பேர் எடுத்துண்டு போய் சேருகிற வரைக்கும் தலைவிதி இதுதான். உங்க உடமைதானே? அதற்காக என்னைக் கூறு போட்டுக் கொல்றதுக்கு வேணுமானா உங்களுக்கு உரிமையிருக்கலாம்...ஆனால் ஒருபோதும் நீங்க என் ராமன் ஆக முடியாது. நோ... நோ... இல்லவே இல்லை" என்று மிகத் தெளிவாக ஏதோ வாதமன்றத்தில் நிறுவுகிற மாதிரி அறிவார்ந்த இணக்கத்துடன் அவனிடம் மிருதுவான குரலில் சொன்னாள். அவள் மடியில் மரியத்திடம்

திருப்பிக் கொடுப்பதற்காகக் கொண்டு வந்திருந்த தாராஸ் ஷெவ்செங்கோவின் கவிதைத் தொகுப்பும், அதனுள்ளே மடித்து வைக்கப்பட்டிருக்கும் 'ஹே! சீதே!' வும் இருப்ப தால் அவள் நினைவில் வந்த அந்த வாசகங்கள் அவள் மனத்தில் வரிவரியாய் ஒலித்தன...

"தென் ஹூ இஸ் யுவர் ராமா?" 'யார் உன் ராமன்?" கண்களில் ஆர்வம் கொப்பளிக்கக் கேட்டான் சுகுமாரன்.

சீதா சிரித்தாள். "நானும் தேடிக்கொண்டிருக் கிறேன்–" என்று பரிகாசமாய்ச் சொன்னாள்.

"உனது தேடலில் வெற்றி கிட்டுவதாகுக!" என்று அவனும் கேலியுடன் ஆங்கிலத்தில் அவளுக்கு 'ஆசி' கூறினான்.

கார் மரியத்தின் ஹாஸ்டல் முன்னால் நின்றது. ராம தாசும் மரியமும் இவளது வருகைக்காக வாசலில் காத்து நின்றனர். ராமதாஸ் காம்பவுண்டு ஓரமாய் உள்ள பொக்கை போல் இடிந்த மதிற்சுவரின் நடுவே உட்கார்ந்திருந்தான். வழக்கம்போல் டிரைவர்தான் சீதாவைக் கொண்டு வந்து விடுகிறான்' என்று எண்ணிய மரியம், சுகுமாரனைக் கண்டதும் அவனைப் பணிவுடன் வணங்கினாள். அவனும் பதிலுக்கு வணக்கம் கூறினான். காரருகே வந்த ராமதாசின்மேல் சுகுமாரனின் பார்வை நன்கு பதிவதை நிதானமாக ஒரு சிறு நகையுடன் பார்த்தாள் சீதா.

"இவர்தான் மிஸ்டர் ராமதாஸ்–என் அபிமான எழுத்தாளர் நீங்கதான் எதுவும் படிக்கறதில்லையே" என்று சுகுமாரனுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தாள்.

"நான் ஒரு சாதாரண சமையல்காரன் ஸார்–எழுதற தும் படிக்கறதும் இவர்களுக்கெல்லாம் எப்படியோ அப்படித்தான் எனக்கும்" என்று பணிவுடன் சொன்னான் ராமதாஸ்.

"உங்களோட பேசிண்டிருக்கறது ரொம்ப இன்ட்டரஸ்டிங்காத்தான் இருக்கும். சீதா சொல்கிற

மாதிரி எனக்கு இதுக்கெல்லாம் நேரம் ஏது?" என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தான். "ஐ டேக் லீவ்...கார் வேணும் கறச்சே ஆத்துக்குப் போன் பண்ணு... பஸ்ஸிலே போக வேண்டாம்." என்று அன்பான ஒரு கணவனைப்போல் கரிசனையுடன் சொல்லி அவளிடம் அவன் விடை பெற்றான் கார் மறைந்த பிறகு மூவரும் யூனிவர்ஸிடியை நோக்கி நடந்தனர்.

"எப்படியிருந்தது உன் தேனிலவுப் பயணம்?" என்றாள் மரியம்.

"தேனும் இல்லை, நிலவும் இல்லை. காத்ரீனாவின் கசந்த வாழ்க்கைதான் என்னை ஆக்ரமிச்சுடுத்து, ஓ! என்ன மாதிரி-நெஞ்சைப் பிளக்கறது அந்தக் காத்ரீனாவின் சோகம்..." என்று சொல்லி அந்தப் புத்தகத்தை மரியத்திடம் நன்றி தெரிவித்துத் திருப்பிக் கொடுத்தாள்.

"நீயும் இன்னிக்கு வகுப்புக்கு வாயேன். அதன் கடைசிப் பகுதிதான் இன்னிக்கு பாடம்... என்று சீதாவை அழைத்தாள் மரியம்.

"நான் அதைத் தமிழில் மொழி பெயர்க்கலாம்னு யோசிக்கறேன்" என்றான் ராமதாஸ்.

மரியமும் சீதாவும் ஒரே சமயத்தில் கைதட்டி ஆரவாரம் செய்து அவனை உற்சாகப்படுத்தினர்.

கடற்கரையை ஒட்டியுள்ள உட்புறச்சாலையில் பன்னீர் மரத்தடியில் அவர்கள் பேசி மகிழ்ந்து நடந்து செல்வதைப் பொறாமை தகிக்கும் விழிகளால் சுகுமாரன் பார்த்துக் கொண்டே மறுகோடியிலிருந்து திரும்பி வந்து இவர்களைக் கடந்து போனான். அவர்களில் யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

'ஒருவேளை இவன்தான் அவளது ராமனாக இருப்பானோ!' என்று சுகுமாரனின் புருவங்கள் நெரிந்தன.

## 30

**வா**ழ்க்கையில், தான் மனமறிந்து செய்த, மாற்ற முடியாத அசட்டுத்தனங்களிலேயே தலையாயது இந்த சீதாவைக் கல்யாணம் செய்து கொண்டதுதான் என்று மனம் வெதும்பினான் சுகுமாரன். அவளிடமும் அவள் தகப்பனிடமும் எந்தவிதப் பிரதிபலனும் காணாமல் தான் பெருந்தன்மையாக நடந்து கொண்டதெல்லாம் இவ்வளவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதை எண்ணி அவனுக்குக் கண்கள் கரித்தன.

'கல்யாணம்கிற பேராலே சீதையை அபகரிச்சுண்டு போறவாளெல்லாம் எப்பிடி ராமனாக 'முடியும்' என்ற அவளது இனிய-மிருதுவான குரலுடன், ஆழ்ந்த-வருத்தம் மிதக்கின்ற அவளது கண்களும் அவன் மனத்துள் பெரிதாய் விரிந்து 'ஹே! ராவணா!' என்றழைப்பது போல் இருந்தது.

ஆபீஸ் அலுவல்கள் ஆயிரம் அவனைச் சூழ்ந்து, பல அலுவலர்களும் பிரமுகர்களும் அவனோடு சந்தித்துப் பணிவும் மரியாதையும் பல்லிளிப்புகளுமாய் அவனைப் புகழ்ந்து ஆயிரம் ஆயிரமாயிரம் வார்த்தைகளில் முகஸ்துதி செய்த இரைச்சலினூடே மந்தர ஸ்தாயியில் 'நீ அரக்கன், பணத் திமிர்பிடித்தவன், ஒழுக்கம் கெட்டவன், ஏமாற்றுகிறவன், ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறவன், சமூகத் திருடன், திருட்டு வழிகளில் குவித்த செல்வங்களை மறைத்து வைத்திருப்பவன்' என்று ஒவ்வொரு சமயத்திலும் அவன் சகதர்மிணியே வந்து வந்து நின்று அவன் காதில் ஓதுவதுபோல் இருந்தது. அவன் நாளெல்லாம் சீதாவின் நினைவிலேயே, இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்றே குழம்பிக் கொண்டிருந்தான். எந்தக் குழப்பத்தினால் எது நிற்கும்? அவனது அன்றாட அலுவல் களை யாந்திரீகமாய் முடித்தான்.

மாலை மணி நாலாயிற்று. பகலெல்லாம் பல வேலைகளினூடேயும் இடைவிடாமல் மனத்துள் சஞ்சரித்துக் கொண்டிருந்த சுகுமாரனின் அந்தரங்க வாழ்வின் அவலங்களை மறக்க அவன் என்ன செய்ய முடியும், மதுக் கிண்ணத்தை முத்தமிடுவது தவிர? அதற்கென்ன குறை! ஆபீசிலாகட்டும், அலுவலகத்திலாகட்டும்-அவன் எங்கெங்கெல்லாம் சஞ்சரிப்பானோ அங்கெல்லாம் அவனது வீட்டில் உள்ள வசதிகளும், வீட்டில் கிட்டாத சுதந்திரமும் தருகிற முன்னேற்பாடுகள் எப்போதும் தயாராக இருக்கின்றன.

ஒரு பணியாள் டிரேயில் எல்லாம் கொண்டு வந்து அவன் முன் வைத்தான். இன்று ஏனோ வீட்டுக்குப் போகவோ, வெளியில் செல்லவோ, நண்பர்களைச் சந்திக்கவோ துளியும் விருப்பமற்றிருந்தது சுகுமாரனின் மனம்.

ஒரு மிடறு மது குடித்தவுடன் சீதாவின் நினைவு வந்தது. வீட்டுக்குப் போன் பண்ணினான். புதிய நர்ஸ் எடுத்தாள். சீதா வழக்கம்போல் வீட்டில் இல்லை. புதிய நர்ஸின் குரலைக் கேட்டு அவன் மனம் மீனாவை நினைத்தது. சில தினங்களுக்கு முன் குடிவெறியில், தான் கசக்கி எறிந்து விட்ட-நர்ஸிங் ஹோமிலிருந்து மீனா எழுதிய கடிதமும் அதில் கண்டிருந்த செய்தியும் அவனைத் தலை குனிந்து சிறிது வருத்தமாய் யோசிக்க வைத்தது.

ஊரிலிருந்து வந்தவுடன், அன்று மாலையே மீனாவைப் போய் நர்ஸிங்ஹோமில் பார்க்க வேண்டுமென்று தான் அவன் நினைத்திருந்தான். இப்போது மணி ஐந்துதானாகியிருந்தது. அந்த ஒரு கடமையை முடித்து விடுவோமே என்று நினைத்து நர்ஸிங்ஹோமுக்குப் புறப்பட்டான்.

அந்தத் தனியார் நர்ஸிங்ஹோமின் மரங்களடர்ந்த காம்பவுண்டுக்குள் சுகுமாரனின் கார் நுழையும்போதே

மூன்றாவது மாடியின் ஓர் அறையிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்த மீனா மகிழ்ச்சியும் பரவசமும் கொண்டாள். அவன் ஊரிலிருந்து வந்த இந்த மூன்று நாட்களாக அவள் ஒவ்வொரு விநாடியும் அவனை எதிர்பார்த்தும், எதிர்பாராமலும் சுகுமாரனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

தனது அவல நிலைக்காக அவள் மனம் ஒருபோதும் சுகுமாரனை மட்டும் குற்றம் சாட்டத் தயாராக இல்லை. ஏதோ ஒரு பலவீனத்தில், ஒரு நம்பிக்கையில், அவனது புறத்தோற்றத்திலும் பணப்புகழிலும் ஏற்பட்ட மயக்கத்தினால் அவளே அவன்பால் மனம் பறிகொடுத்த உண்மையைப் பங்கஜம் மாமியிடமும், பழிக்கு அஞ்சாத இவ்வுலகத்திடமும் மறைப்பதுபோல் தன் நெஞ்சறிய அவளால் மறக்கவோ, மறைக்கவோ முடியவில்லை. அவன் தன்னிடம் அன்பாகத்தான் இருக்கிறான் என்று அவள் உணரத்தக்க சம்பவங்கள் பல நிகழ்ந்தன. அவற்றை நினைத்து மனத்துள் சப்புக் 'கொட்டிக் கொள்ளுவதில் தனக்கு ஒரு சுகமேற்படுவதைத் தன்னிரக்கத்துடன் எண்ணிச் சிரித்துக் கொண்டாள் மீனா.

சிறிதும் எதிர்பாராதவிதமாக அவள் 'களுக்'கென்று சிரிப்புடன் தன்னை வரவேற்றதில் அவன் ஆறுதலடைந்தான். மீனாவின் முகம் வெளிறியிருந்ததால் மேலும் பொலிவுடன் தோன்றினாள். முகத்திலிருந்த சோர்வு இப்போது இவனைக் கண்டதும் மாறியதில் ஒரு சோபை பெற்றது. சுகுமாரன் அவள் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். அந்த அறையைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான்-எல்லா வசதிகளும் இருக்கின்றனவா என்று அறிவதுபோல். அவனை எதிர்ப்பட்ட நர்ஸ்களும் நர்ஸிங் ஹோம்பணியாளர்களும் மரியாதை காட்டி வணங்கிச் சென்றனர். ஓர் ஆயா உள்ளே வந்து, எதையோ எடுத்துக் கொண்டு போகும்போது அறைக் கதவை மூடிவிட்டுப் போனாள். கதவு மூடப்பட்ட

தும் சுகுமாரன் மீனாவின் மெலிந்த விரல்களைப் பற்றிக்கொண்டு "ஐ ஆம் சாரி" என்று முனகினான்.

"இட் இஸ் ஆல்ரைட்; நவ் ஐ ஆம் ஆல்ரைட்" என்று கம்மிய குரலில் சொன்னாள் மீனா.

"எப்ப வீட்டுக்கு வருவே?"

"எப்ப வேணுமானாலும் போகலாம்னா டாக்டர். நான்தான் ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு இருக்கேன்..."

"ஒரு வாரம் என்ன? ஒரு மாசம் இரு. உடம்பைப் பாத்துக்கோ. எதுக்காவும் கவலைப்படாதே... என்று அவளைத் தட்டிக் கொடுத்தான். "உங்காத்திலே இருந்து யாராவது வந்தாளா?"

"எல்லாரும் வந்தா; அவாளுக்கு ஒண்ணும் தெரியாது. ஏதோ உடம்புக்குன்னு நெனைச்சுண்டு இருப்பா. அப்படித்தானே? அது சரி..உங்க ஹனிமூன் டிரிப் எப்படி இருந்தது?" என்று கண் சிமிட்டலுடன் கேட்டாள் மீனா.

சுகுமாரன் பெருமூச்செறிந்தான். "ரொம்ப கசப்பா இருந்தது...கசந்தால் எதையும் துப்பிட வேண்டியது தானே? அவ என்னை ராவணன்ங்கிறாள். அப்பிடின்னா இவளுக்கு எவனோ ஒரு தடி ராமன் இருக்கான்னு தானே அர்த்தம்?"

"சிவா சிவா. அப்படியெல்லாம் ஒரு பொண்ணை அபவாதம் சொல்லாதீங்கோ... என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள் மீனா: "அவ ரொம்ப உத்தமமான குழந்தை."

"குழந்தையாவது கோட்டானாவது...அவள் ரொம்பவும் வரட்டுத்தனமான பிடிவாதக்காரி. புருஷாளை அவ மதிக்கிறதனாலேயே அவா ரொம்ப உத்தமம்னு அர்த்தமா? அதனாலேயே ரொம்ப உசந்தவாளா

ஆயிடுவாளா?'' என்று தணிந்தகுரலில் பொறிந்தான் சுகுமாரன்.

சுகுமாரனது நிலை உள்ளூற மீனாவுக்கும் வருத்தமாகவே இருந்தது. மீனா இவன்பால் ஏதோ ஒரு காலத்தில் ஈர்க்கப்பட்டிருந்த போதிலும், ஒரு ரகசியமான உறவில் வாழ்க்கை முழுவதும் சிக்கிக் கொள்வதில் திருப்தியோ மகிழ்ச்சியோ அடையவில்லை. வாழ்க்கை முழுவதும் இப்படியொரு பெரிய குடும்பத்தில் ஊழியம் செய்பவளாகவே இருந்து அவள் மானத்தோடும், மரியாதையோடும் வாழ்ந்து கழித்துவிட முடியும்; மானம் கெட்ட ரகசிய வழிகளில் ஒரு பெண் அனுபவிக்கத்தக்க சந்தோஷம் என்று ஒன்றுமே இல்லை என்று பல நாள் யோசித்த பிறகுதான் சுகுமாரன் ஒரு கல்யாணம் செய்து கொள்ளுவதன் மூலம் தனக்கு விடுதலைகிட்டும் என்று தீர்மானித்தாள் மீனா. ஆனால் மறுபடியும் தானே அவனுக்கு நிரந்தரமாகி விடுவதில் மகிழ்ச்சியடைவதா, வருத்தமடைவதா என்று புரியாத மௌனத்தில் யோசித்தவாறிருந்தாள் மீனா.

''சரி, அவள் எப்படியிருந்தால் சந்தோஷமா இருப்பாளோ அப்படியே இருந்துட்டுப் போகட்டும். அதுக்காக அவமேலே ஏதாவது பழிபோட்டுடாதீங்கோ...'' என்று அவனை வேண்டிக் கொண்டாள் மீனா. இவளிடம் சீதாவைப் பற்றி இவ்வளவு சொல்லியிருக்க வேண்டாமோ என்று நினைத்துக் கொண்டான். எங்கேயும், ஆம்பிளைகள் விஷயத்தில் இந்தப் பொம்மனாட்டிகள் எல்லாமே ஒண்ணுதான்'' என்று நினைத்துக் கொண்டான்.

''சரி, விடு. உடம்பைப் பார்த்துக்கோ'' என்று புறப்பட்டான். அவன் தன்னை வந்து பார்த்ததில் அந்த அபலைப் பெண்ணுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. போகும்போது அவன் கன்னத்தில் முத்தமிட்டு விடை தந்தாள் மீனா.

**சு**குமாரன் வீடு திரும்ப மனமில்லாமல் எங்கெங்கோ திரிந்து விட்டு எட்டு மணிக்கு ஒரு ஃபைவ் ஸ்டார்

ஹோட்டலில் போய்த் தங்கினான். அரண்மனை மாதிரி அலங்காரங்களுடன், அரண்மனைப் பணியாளர்கள் போல் உடைதரித்த சிப்பந்திகள் அவனை வரவேற்றனர்.

அறைக்குள் வந்ததும் ஒரு முறை குடித்தான் சுகுமாரன். தனிமையில் இருப்பதற்கும் பிடிக்கவில்லை. போன் ரிஸீவரை எடுத்து சுந்தர சர்மாவின் நம்பரைச் சொல்லி கனெக்ஷன் கேட்டான்.

"ஹலோ யார் பேசறது?" என்ற மாமியாரின் குரலைக் கேட்டதும் மரியாதையுடன், "நான் சுகுமார் பேசறேன்" என்றான்.

அவ்வளவுதான்; மாமியார் அம்மாள் ரிஸீவரை வைத்து விட்டு ஓடினாள். மாடிப்படிகளை நோக்கி, "உங்களைத்தானே! வாங்கோ...மாப்பிள்ளை போன்லே இருக்கார்..." என்று இரைந்து கத்திய சப்தம் இந்தப் பக்கம் சுகுமாரனுக்குக் கேட்டது.

சுந்தர சர்மா இடுப்பிலிருந்து நழுவிய வேட்டியை இறுக்கிக் கொண்டு அவசரமாகவே வந்தார்.

"யாரு...மாப்பிள்ளையா? சௌக்கியமா? நானே வரணும்னுதான் இருந்தேன். இப்பத்தான் சீதா வந்துட்டு ஆத்துக்குப் புறப்பட்டாள்."

"நான் ஆத்திலேருந்து பேசலே...நம்ப...ஹோட்டல் லேருந்துதான் பேசறேன்"-என்றதும் சுந்தர சர்மாவுக்கு நெஞ்சில் எட்டி ஓர் உதை விட்டாற் போலிருந்தது. அந்த ஹோட்டல்-இந்த நேரம் என்றால் அதற்கு என்னென்ன அர்த்தங்கள் என்ற அனுபவத்தால்... அவனுடன் இருந்து அனுபவித்தவரல்லவா அவர்?

"என்ன மாப்பிள்ளை?" என்று சுந்தர சர்மா தயக்கத் துடன் இழுத்தார்.

"மாப்பிளையுமாச்சு, வேப்பிலையுமாச்சு! வண்டி யனுப்பறேன். நேர்லே வாங்கோ...வரேளா? வாங்கோ ஸார்-ரொம்ப நாளாச்சு!" என்று முன்புபோல்-நடுவில்

ஏற்பட்ட புதிய உறவை ரத்து செய்து விட்டவன் போல்– அவன் பேசுகிற தோரணை அவருக்கு விபரீதமாக ஒலித்தது.

“ஒரு வேளை தண்ணி அதிகமாயிட்டு இருக்குமோ? எதுவானாலும் நான் போய்த்தான் தொலைக்கணும்” என்ற தீர்மானத்துடன் ரிஸீவரை வைத்து விட்டு, “என்னமோ அவசர காரியமா மாப்பிளை கூப்பிடறார். கார் வரும்; நான் போய்ட்டு வந்துடறேன்” என்று பட படப்புடன் சட்டையை மாட்டிக்கொண்டு புறப்படத் தயாரானார் சுந்தரசர்மா.

கடிகாரத்தில் மணி எட்டரை ஆகியிருந்தது.

## 31

சுந்தரசர்மா வீடு திரும்பும் போது இரவு மணி ஒன்றாகி விட்டது. பாட்டி இரண்டு மூன்று தடவை ‘சுந்தரம் வந்தாச்சா?’ என்று விசாரித்தாள். அவளையோ அவள் குரலையோ பொருட்படுத்தாத அம்மாள் சற்று எரிச்சலுடன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டாள். தெருவில் கார் சத்தம் கேட்டவுடன் அம்மா ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். வழக்கமாக வெளியிலிருந்து வந்தவுடன்... அதுவும் இதுபோல் நேரம் கழித்து வந்தால்–வந்தவுடன் அம்மாவின் அறை வாசற்படி யருகே நின்று அம்மா தூங்கிவிட்டாளா, மருந்து சாப்பிட்டாளா என்றெல்லாம் விசாரிக்கும் சுந்தரம், இன்று, யார் முகத்தையாவது பார்த்தாலோ, யாரிடமாவது பேச வாய்திறந்தாலோ, எங்கே கதறி அழுதுவிடுவோமோ என்று அஞ்சி மேல் துண்டால் வாயை அழுத்திக்கொண்டு தடதடவென மாடிக்கு ஓடினார்.

சில சமயங்களில் அளவு தெரியாமல் குடித்துவிட்டு வந்து வாந்தியெடுப்பாரே-அதுபோல் என்னவோ என நினைத்துக் கொண்டு முகச்சுளிப்புடன், 'எதிலும் ஒரு நிதானம் வேணும். நம்ப உடம்பு, நம்ப வயசு தாங்குமான்னு யோசிக்காமல், கிடைக்கறதேன்னு ஊத்திண்டு அவஸ்தைப் படுவானேன்?' என்று மனத்துள் முனகிக் கொண்டு "ஏதாவது சாப்பிட்டேளா? கொஞ்சம் மோர் கரைச்சுக் கொண்டு வரட்டா?" என்று ஆதரவாகக் கேட்டாள்.

மாடிப்படி ஏறிக்கொண்டிருந்த சுந்தர சர்மா தனது சிவந்து கலங்கும் கண்களால் மனைவியை வெறித்துப் பார்த்தார். இப்போது அவரால் எதுவும் பேச முடியவில்லை. நெஞ்சை அழுத்தும் துயரம் தொண்டையை நெருக்கித் திருகுவதுபோல் வலித்தது. "கொஞ்சம் ஐஸ் வாட்டர்" என்று பாதியைச் சொல்லி, மீதியைச் சைகையால் காட்டி விட்டு மாடிக்குப் போய்ப் படுக்கையில் குப்புறப்படுத்து முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டார். அவர் புஜமும் முதுகும் துடிதுடித்துக் குலுங்கின...

அவர் இருமுகிறார் என்று நினைத்த அம்மா கையில் கொண்டு வந்த குளிர்ந்த ஜலத்தை ஒரு புறம் வைத்து அவர் பக்கத்தில் படுக்கையில் உட்கார்ந்து "என்ன பண்றது உடம்பு? வரும்போதே என்னமோ மாதிரி இருந்தேளே...' என்று அவர் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

'இவள் ஒன்றுமே தெரியாத குழந்தையாக இருக்கிறாளே...சீதாவைப் பற்றித் தான் சற்று முன்னர் அறிய நேர்ந்ததையெல்லாம் இவளிடம் சொல்லலாமா?' என்றெண்ணியவாறே முகத்தைத் தலையணையில் அழுத்தித் துடைத்துக் கொண்டு எழுந்து அவள் முகத்தைப் பார்த்தார்.

"ஏன்? என்னமோ மாதிரி இருக்கேள்...மாப்பிள்ளை யோட இருந்துட்டு நேராத்தானே வரேள்?...ஆபீசுக்குப் போயிருந்தேளோ?" என்று பலவாறு யோசிப்பது போலவே அம்மா அவரது வாட்டத்தைக் கண்டு துருவித் துருவிக் கேட்டாள்.

சுந்தர சர்மா மடமடவென்று ஒரு கிளாஸ் ஐஸ் வாட்டரை ஒரே மூச்சில் குடித்தபின்னரும் உள்ளே தகிக்கும் கொதிப்பு அடங்காமல் வெப்பமாய்ப் பெருமூச்சு விட்டார்.

"இவனுக்கு நம்ம பொண்ணைக் குடுத்திருக்கப் படாது" என்று பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னார்.

"ஏன், என்னத்துக்கு அப்படிச் சொல்றேள்? சீதாவைப் பார்த்தேளோ? பொண் என்னமாவது சொன்னாளா? என்னன்னா அப்படிப் பாக்கறேள்?" என்று அவரைத் தொட்டு உசுப்புவது போல் உலுக்கினாள் அம்மா.

சற்றுமுன் அந்த ஆடம்பர ஓட்டலில் எவளோ ஒருத்தியின் மடிமீது கால்போட்டுச் சாய்ந்து கொண்டு, கையில் விஸ்கி கிளாசும், புகையும் சிகரெட்டுமாக விரலை நீட்டி சுகுமாரன் பேசிய பேச்சுக்களை, செவி பொறுக்காத குத்தல் வார்த்தைகளை நினைக்கிறபோது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது அவருக்கு. அதையெல்லாம் எப்படி இவளிடம் அவரால் சொல்ல முடியும்? ஆனாலும் விஷயத்தைச் சொல்லிவிட வேண்டுமே!

"உன் பொண்ணுக்கும் அவனுக்கும் கல்யாண முகூர்த்தம்தான் நடந்திருக்கு; அவாளுக்கு இன்னம் சாந்தி முகூர்த்தம் ஆகலியாம்!" என்றார்.

'சரிதான், இவருக்கு இன்னிக்கு டோஸ் கொஞ்சம் அதிகம்தான் போலிருக்கு' என்று ஒரு சிரிப்புடன் நினைத்துக் கொண்ட அம்மா, சாந்தி முகூர்த்தம் நடந்த

நாள் நட்சத்திரத்தையெல்லாம் குறிப்பிட்டு "மறந்துட்டேளா?" என்று பரிகாசம் செய்தாள்.

"அசடே!" என்று அவளது அறியாமைக்காகக் கடிந்து கொண்டு விளக்கினார் சுந்தர சர்மா. "உன் பொண் அவனோட படுக்க முடியாதுன்னுட்டாளாம். மீறி வந்து தொட்டியானா பிராணஹத்தி பண்ணிப்பேன்னுட்டாளாம்..... அவளண்ட இவனுக்குக் கையாலாகலே; என்னண்ட வந்து முட்டிக்கிறான்...ராஸ்கல்... என்று மறுபடியும் பொங்கினார். அப்போதுதான் அம்மாளுக்கு விஷயத்தின் விபரீதத் தன்மை லேசாக உறைத்தது.

"அதெப்படி? ஒரு பொம்மனாட்டி அப்படி சொல்லுவாளோ? ஒரு புருஷனும் அதுக்காக விட்டுடுவானோ? என்னடி இது எல்லாம் இந்தக் காலத்திலே ஒரே கூத்தா இருக்கு...அதுக்கு உங்களை என்ன பண்ணச் சொல்றாராம் மாப்பிள்ளை!"

"ம்... என்று உறுமலுடன் மனைவியைப் பார்த்தார்; "என்ன பண்ணச் சொல்றான்னா கேக்கறே? காரை எடுத்துண்டு போயி கண்ட கழுதைகளையும் கூட்டிண்டு வந்து விடுடாங்கறான்...

"நன்னாருக்கு... கர்மம்! வேற ஒரு பொண்ணு நமக்கு இருந்து, அதை கட்டி வைக்கச் சொன்னால் கூட நியாயம்... இதென்ன அநாசாரமான பேச்சு... என்று அதை வெறும் பேச்சென்று தள்ளிவிட்டாள் அம்மா. அவள் பேதைதானே?

"கார்த்தாலேகூட நினைச்சேன்... 'ஏண்டி ஸ்நாநம் பண்ணிண்டிருக்கயா'ன்னு கேக்கணும்னு...நேக்கு அவளோட அப்பிடியெல்லாம் பேசிப் பழக்கமில்லே... பெரியவரெண்டு பேரும் கொஞ்சம் மனம் விட்டுப் பேசுங்கள்...இவள் ரொம்ப லஜ்ஜைப்படுவாள்... உத்தமமான பொண்கள் புருஷனைக் கண்டு பயப்பட்டு ஒதுங்கித்தான் இருப்பா...இது தெரியாத மனுஷனா இருப்பார் போலிருக்கு மாப்பிள்ளை...நாளைக்கு சீதா வரட்டும்...

நான் அவளோட பேசி புத்திமதி சொன்னா கேப்பாள்... சீதா.. இதுக்காக அவர் உங்களோட கோவிச்சுக்கறதும் நீங்க பெரிசா வருத்தப்படறதும் வேடிக்கையாத்தா னிருக்கு!" என்று விஷயத்தை லேசாக ஊதித் தள்ளிவிட்டு, விளக்கை அணைத்தாள் அம்மா, அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. "மணி ஒண்ணோ, ஒண்ணரையோ?" என்று முனகியவாறே புருஷனின் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். அவர் கண்களை மூடிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்ததைத் தூக்கம் என்று நினைத்தாள். போர்வையை இழுத்து அவர் மீது போர்த்திவிட்டாள்.

அப்பா சீதாவைப் பற்றி வியப்புடன் யோசித்தார். ஒரு பக்கம் அவளது உறுதியும், திடசித்தமும் அவர் மனத்துள் பெருமிதமாகவும் இருந்தது. இன்னொரு பக்கம் வீணாக வாழ்க்கையைப் பிரச்னையாக்கித் தனக்கும் மற்றவர்க்கும் சங்கடம் தருகிறாளே என்று கலக்கமாகவும் இருந்தது. எதற்கோ மனைவியிடம் பேச நினைத்து "லட்சுமி" என்றழைத்தார் சுந்தரம். அவள் அயர்ந்து உறங்கி விட்டாள் என்று தெரிந்தது. புரண்டு படுத்துக்கொண்டார். மனசிலும் செவியிலும் சுகுமாரனின் ஏளன வார்த்தை களும் அவமதிக்கிற கேலியும் அடிக்கடி தோன்றி ஒலித்து அவரைத் தூங்கவிடாமல் வாட்டின. அவன் அந்த எவளோ ஒருத்தியின் முன்னால் சொன்னானே-ஒரு பெரிய சிரிப்புடன்...அவளும் கூடச் சேர்ந்து சிரித்தாளே...

"மிஸ்டர் மாமனார்...இன்னும் நீங்க எனக்கு மாமனார் ஆகலே...ஸ்டில் யு ஆர் எ மாமா... என்று கண் சிமிட்டலுடன் அவனும் அவளும் சிரித்த சப்தத்தைக் கற்பனை செய்து, நிஜம்போல் திடீரெனக் கேட்டு அவர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். அந்த அதிர்ச்சியில் அம்மா விழித்துக் கொண்டு "என்ன, என்ன" என்று பதறினாள். தம்மைச் சமாளித்துக் கொண்ட சுந்தரம் "ஒண்ணுமில்லே..." என்று படுத்துக் கொண்டார்.

அவரது குழப்பத்தையும் வருத்தத்தையும் உணர்ந்து அவரைச் சமாதானப்படுத்தினாள் அம்மா.

"தூங்குங்கோ...மனசை அலட்டிக்காதீங்கோ..."

"காலையிலே சீதா ஆத்துக்கு வருவாளோன்னோ?" என்று அம்மாவிடம் ஏக்கமாய்க் கேட்டார் அப்பா.

"வருவாள், வருவாள்...நான் அவளோட பேசறேன். எல்லாம் சரியாயிடும். நீங்க நிம்மதியாத் தூங்குங்கோ" என்று அவர் முதுகில் தட்டிக்கொடுத்தாள். சுந்தர சர்மாவின் மூடிய இமைகளினூடே கசிந்த கண்ணீர் ரகசியமாகத் தலையணையில் வடிந்தது.

ஓ! அவர்தான் சீதாவை எப்படியெப்படியெல்லாம் அறிவும் பண்பும் சுதந்திரமும் உடைய லட்சியப் பெண்ணாக, அந்த செல்ல மகளை, சின்னக்குட்டியை, கடைசிக் குழந்தையைச் சீராட்டி வளர்த்தார்! 'கடைசியில் காசு பணத்துக்கு ஆசைப்பட்டு, பணக்கார இடம் என்பதற்காக ஒரு பதரிலும் பதரான இந்தப் பாவிக்குக் கொடுத்து அவளது வாழ்வைப் பாழ்படுத்திவிட்டோமே' என்கிற குற்ற உணர்வு அவர் மனத்துள் விஷ முள்ளாய் உறுத்திற்று. எங்காவது போய்த் தனிமையில் வாய்விட்டு அலறி அழவேண்டும் போலிருந்தது. தெய்வங்களை, முன்னோர்களை, ஆசார்யாளை எண்ணித் துதித்து மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஒருவாறாகத் துக்கத்தை மறந்து தூங்கிப் போனார் சுந்தர சர்மா.

**கா**லையில் சீதா வந்தாள். வாசலில் கார் நின்றதும் ஆவலுடன் காத்திருந்த சுந்தர சர்மா ஓடிவந்து வரவேற்றார். காரில் முன் ஸீட்டில் டிரைவர்தான் இருந்தான்.

"வா, வா...எங்கே மாப்பிளை வரலியா?" என்று மகளிடம் பொய்யாகக் கேட்டார்.

"அவரை எங்கேயோ காணோம்...நான் பார்த்து ஒரு வாரமாச்சு..." என்று யாரையோ பற்றி யாரோ சொல்லு

வதுபோல் சொல்லிவிட்டு உள்ளே போனாள் சீதா. அவள் பின் புறத் தோற்றத்தைப் பார்த்து, 'இவள் தேவதை மாதிரி இருக்கிறாளே! அந்தப் பயலுக்கு இவள் பொருத்தமில்லை தான்' என்று கர்வத்துடன் நினைத்துக் கொண்டார். அடுத்த விநாடி 'அவனுக்குத்தான் என்ன? ராஜாதான். புத்திகோணிப் போனவன்...இந்தப் பெண் புத்திசாலி, அவனை நேராக்குவாள்னு வசதியா நினைச்சதுக்குக் கடைசியில் இப்படியாச்சே...இதை எப்படி இவளோடு பேசுவது? தீர்ப்பது?' என்று புரியாத சங்கடத்தில் தலையைச் சொறிந்துகொண்டு, தூணில் சாய்ந்து நின்றார் சுந்தரசர்மா.

அம்மாதான், மகளுக்குச் சாதம் பரிமாறிக் கொண்டே பேசினாள்: "புருஷாளுக்கு அன்பினாலேயும், அவாளுக்கு சந்தோஷம் தர்ரதனாலேயும்தான் குடும்பம் சுகப்படும்; பெண்களுக்குக் கீர்த்தி ஏற்படும்..." என்று உபதேசம் மாதிரி ஆரம்பித்தவள், குரலைத் தாழ்த்திக் கொண்டு ரகசியமாகக் கேட்டாள்.

"ஸ்! இதிலெல்லாம் ஏதாவது பிராப்ளம்னா நான் லேடி டாக்டரைக் கன்ஸல்ட் பண்ணிண்டுடுவேன்... என்று அம்மாளை வாயடைத்தாள் சீதா.

அம்மா மௌனமாக அவள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். ஓரிருமுறை சீதா சாப்பிடு கிறபோது விழியுயர்த்தி அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் மின்னிய குறுகுறுப்பு 'எனக்கு உன்னைப் பற்றி எல்லா விஷயமும் தெரியும்' என்பது போல் அவளது பார்வை எது குறித்தோ அறிய விரும்பி அவளைத் துருவி எடுப்பதுபோல் இருந்தது.

"நீ உன் புருஷனோட சந்தோஷமா சல்லாபமா இருக்கிற மாதிரியே தெரியலையேடி சீதா" என்று கன்னத்தில் ஊன்றிய கையுடன் உடைத்துக் கேட்டாள் அம்மா.

"நான் சந்தோஷமாத்தான் இருக்கேன். உங்க சல்லாபத்துக்கு என்ன அர்த்தமோ நேக்குத் தெரியாது... என்று கையில் மோரை ஊற்றி உறிஞ்சினாள் சீதா.

"புருஷனோட சந்தோஷத்தையும் ஒரு பெண் மதிக்கணுமோன்னோ?" என்று நயமான சிரிப்புடன் கேட்டாள் அம்மா. புருவங்கள் நெரிய. 'என்ன சொல்கிறீர் கள் நீங்கள் எல்லாரும்?' என்பதுபோல் ஒருமுறை எதிரில் நின்ற அம்மாவையும், கூடத்துத் தூணில் சாய்ந்து நின்றி ருக்கும் அப்பாவையும் பார்த்தாள் சீதா. இவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது; எதையோ குறித்து விசாரணை நடத்துகிறார்கள் என்று ஒரு விநாடியில் சீதாவுக்குப் புரிந்தது.

'தெரியட்டும், தெரியவேண்டியதுதானே? நீங்க எல்லாரும் சேர்ந்து பண்ணிவச்சுட்டாப்பிலே அவன் எனக்குப் புருஷனாயிடமாட்டான், நானும் அவனுக்குப் பொண்டாட்டி ஆயிடமாட்டேன்னு எல்லாரும் தெரிஞ்சுக்கோங்கோ' என்று மனத்துள் முனகிக் கொண்டாள் சீதா.

அவள் சாப்பிட்டு முடிந்து ஹாலுக்கு வரும்போது பின்னாலேயே வந்த அம்மா, புருஷனிடம் முறையிடுவது போல் சொன்னாள்:

"அவ ஏதாவது பிடிகுடுத்துப் பேசறாளா பாருங்கோ... என்னத்துக்காம் ஒருத்தன் ஊரையெல்லாம் கூட்டி வாண வேடிக்கை நடத்தி இவ்வளவு தடபுடலா கல்யாணம் பண்ணிண்டிருப்பான். யோசிக்க வேண்டாமோ?"

"அம்மா" என்று கண்களை மூடிக்கொண்டு அழுத்தலாக அழைத்தாள் சீதா. அந்த அழுத்தலில் 'நிறுத்து உன் பேச்சை' என்ற அதிகாரத் தொனியும் இழைந்தது. கண்களைத் திறந்து "அப்பா" என்று இருவரையும் விளித்துத் தீர்மானமாகச் சொன்னாள்:

"இனிமே இதுபத்தி-அதாவது ஒரு புருஷனோடு ஒருத்தி, அல்லது நான் அவரோட எப்படி இருக்கணும்னு என்னண்ட நீங்க பேசுவேள்னா நான் இங்கே வந்து போயிண்டிருக்கறதை ஒரேயடியா நிறுத்திக்க வேண்டி யிருக்கும். இந்த உடம்பைப் பெத்து வளர்த்து, ஒருத்தன் கிட்ட தாரை வார்த்ததோட உங்க கடமை தீர்ந்துபோச்சு. இனிமேல், இதுக்குமேல் என் சொந்த வாழ்க்கையிலே இன்னொருத்தர் தலையிடறதை, பெத்தவாளேன்னானா லும், என்னால் சகிக்க முடியாது. அது ரொம்ப அநாகரிகமாயில்லே? நீங்களே சொல்லுங்கோ அப்பா..." என்று அம்மாவைப்பற்றி அப்பாவிடம் நியாயம் கேட்கிற குழந்தை மாதிரி கொஞ்சியவாறு கேட்டாள் சீதா.

"அப்படியெல்லாம் எங்களைக் கோவிச்சுக்காதே அம்மா...எப்பவும் போல் வந்து போயிண்டு இரு. ஈஸ்வரன் தான் எல்லாருக்கும் நல்ல புத்தியைத் தரணும். ஈஸ்வரோ ரக்ஷது" என்று கடவுளை வணங்கினார் சுந்தரசர்மா.

"அப்பா, ஐ ஆம் சாரி. அம்மாவை மிரட்டறதுக்காகச் சொன்னேன்...நான் எப்பவும் இங்கே வருவேன் அப்பா. கண்டமாதிரி எதுக்கு இந்த அம்மா என்கிட்ட பேசணும்? ...அம்மா...என் சந்தோஷம், இன்னொருத்தர் சந்தோஷம் எல்லாத்துக்கும் நீ எதுக்காம் கவலைப்பட்டுண்டு இருக்கே.. அம்மா...அம்மா..." என்று அம்மாவின் தலையோடு தலை முட்டி குழந்தைபோல் அவளையும் சமாதானப்படுத்தி விட்டுப் புறப்பட்டாள் சீதா. "அம்மா... அப்பா...வரேன்" என்று அவள் காரில் ஏறினாள். "சீதா யூ ஆர் கிரேட்" என்று வாய்விட்டுக் கூவினார் சுந்தர சர்மா.

"அடியே! அவ மனுஷப் பெண் இல்லேடி. இந்தக் காலத்திலே காணமுடியாத தேவதை! ஏதோ நம்ம வயத்திலே பொறந்துட்டதேன்னு சீதாவை சாமானியமா நினைக்காதே. கடவுள் அவளுக்கு அனுக்ரகம் பண்ணணும்னு பிரார்த்தனை செய்யலாமே தவிர, அவளுக்குப் புத்தி சொல்ற யோக்யதை நமக்கேது?

யாருக்குத்தான் உண்டு, அந்த யோக்யதை?'' என்று மனைவி யிடம் மனம் நெகிழ்ந்து சொன்னார் சுந்தரசர்மா.

## 32

சுந்தர சர்மாவை அழைத்துக்கொண்டு போவதற்காக ஆபீஸ் கார் வந்து வாசலில் நின்றது. வயதான டிரைவர் ஏழுமலை இறங்கி வந்துநின்று சர்மாவைக் கும்பிட்டான். பதிலுக்கு "வா ஏழுமலை...உள்ளே வா, லட்சுமி, ஏழுமலைக்கு காபி குடேன்" என்று அவனை அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

"காபி வேணாங்க..சில்லுனு தண்ணி குடுங்க..." என்று ஹாலுக்கு வந்து பேன் காற்றில் வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டான் ஏழுமலை.

"மோர் சாப்பிடறயா?" என்று கேட்டுக்கொண்டே மடியிலிருந்த வெற்றிலைத் தட்டை எடுத்து சோபாவில் வைத்துவிட்டு உள்ளே போய் ஏழுமலைக்கு மோர் கொண்டு வந்தாள். அம்மா தந்த வெற்றிலையை மென்று கொண்டே கண்களை மூடி யோசனையுடன் சோபாவில் பிடரி படிய அண்ணாந்து சாய்ந்திருந்தார் சர்மா.

ஏழுமலை, அம்மா தந்த மோரை வாங்கி ஒரு முழம் உயர்த்தி வாயில் ஊற்றிக் கொண்டு, கும்பிட்டுத் தம்ளரைக் கொடுத்தான்.

"வச்சுடு" என்று சொல்லி அம்மா கைவேலையாகப் போகிறவள் மாதிரி உள்ளே போய்விட்டாள். ஏழுமலை வாசலில் போய்க் காரருகே நின்றான். அம்மா ஒரு செம்பில் தண்ணீருடன் வந்து, ஏழுமலை வைத்த தம்ளரின் மேல் கொட்டினாள்-அதன் பிறகு தான் அதைத் தொடமுடியும் அவளுக்கு.

சர்மா அண்ணாந்தபடியே யோசித்திருந்தவர்-ஏழு மலை இன்னும் அருகில்தான் நிற்கிறான் என்று நினைத்து 'ஏழுமலை' என்று அழைத்தவாறு பார்த்தார். அவன் சற்றுத் தள்ளி வாசலில் நின்றிருப்பதை உணர்ந்து எழுந்து வாசலுக்கு வந்தார். மேலே ஷர்ட் அணியாமல், பூணூலும் ஈரிழைத் துண்டுமாய் அவர் வந்ததும் 'இன்னும் இவர் புறப்படத் தயாராகவில்லை' என்று புரிந்து கொண்டு, அந்த வார சுந்தரியைப் பிரித்தான் ஏழுமலை.

"இன்னக்கி எனக்குக் கார் வேணாம். நீ போகலாம்" என்றார். இதை அவர் சாதாரணமாகச் சொல்லவில்லை. தொண்டை கம்மி அடைக்க, கண்கள் கலங்க, தனது உணர்ச்சிகளை அவன் அறியாவண்ணம் மறைத்துக் கொண்டு சொன்னார். எனவே அவனும் தயங்கினான்.

"ஐயா லீவுன்னு சொல்லிடவா?"

"அதெல்லாம் ஒண்ணும் சொல்லவேண்டாம். நான் மத்தியானம் வரேன்..."

"கார் கொண்டு வரணுங்களா?"

"வேணுமானால் போன் பண்றேன்...ஐ ஆம் நாட் வெல், சரி, நீ போ" என்று சொல்லிவிட்டு அவன் புறப்படு முன் அவர் உள்ளே போய்விட்டார்.

"ஏன்னா, நீங்க ஆபீஸுக்குப் போகலியா?" என்று நெற்றியைச் சுருக்கிக்கொண்டு வாசலிலிருந்து புறப்படுகிற காரைப் பார்த்தாள் அம்மா.

சர்மா அம்மாவின் முகத்தைப் பார்த்து ஒரு பெருமூச்சுடன் சொன்னார்:

"போகாமல் முடியுமா? போவேன். மெதுவாப் போறது...இவா கார்லே எதுக்குப் போகணும். பஸ்லே போறேன்...அடே! இவன் காரையும் இவன் பத்திரிகையை யும் கண்டுதான் பொறந்தேனோ? பட்டண்ணா, சோணங்கி மாதிரி தானே நானும் ஒரு கூலி எழுத்தாளன்? -கார் என்ன வேண்டிக் கிடக்கு, கார்!" என்று

அவசரத்துடன் படபடத்தவாறே சட்டையை மாட்டிக் கொண்டார்.

“கொஞ்சம் ஜலம்” என்று புறப்படுவதற்குத் தயாராய் கட்கத்தில் இடுக்கிய தோல் பையுடன் அவர் வாசலில் நின்றிருந்த கோலம் நாற்பது வருடத்துக்கு முன்னால் பஸ்ஸிலும், நடந்தும் திரிந்தலைந்த அந்த ஏழை எழுத்தாளர் சுந்தரத்தை அம்மாவுக்கு நினைவுபடுத்தியது.

‘இவருக்கு இன்னிக்கு என்னவோ கோவம்! கோவம்னா காரை அனுப்பிச்சுட்டு ஆத்திலே இருக்க வேண்டியதுதானே? இவர் வீறாப்பைக் காட்றதுக்குப் பஸ்ஸிலே போகப் போறார். வரும்போது ஒரு பாட்டிலையும் பிடிச்சுண்டு கார்லேதான் வருவார்-பார்க்கறேனே!’ என்று மனத்துள் பேசிக்கொண்டே அவரை பரிகாசமாகப் பார்த்தவாறு ஜலம் தந்தாள் அம்மா.

சுந்தர சர்மா அவள் முகத்தைக் கூடக் கவனிக்காமல், நரை பரவிய அடர்ந்த புருவங்கள் ஒன்றை ஒன்று நெருக்க, குனிந்த தலையுடன் எதையோ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

“ஜலம் கேட்டேளே” என்ற அம்மாவின் குரல் கேட்டு நிமிர்ந்தார். தண்ணீரைக் குடித்தபின்,

“சரி, நான் போய்ட்டு வரேன்... என்று தம்ளரை அம்மாவின் கையில் தந்து திரும்பும்போது அம்மாவின் குரலை மட்டும் கேட்டார்:

“பாருங்கோ... நீங்க ஒண்ணும் பஸ்ஸிலே போகாதேங்கோ...ஒரு டாக்சியிலேயானும் போங்கோ” என்று அவர் செவிபட உரத்துக் கூறி, “என்ன இதெல்லாம்... வந்த காரை அனுப்பிச்சுட்டு... என்று புருஷனை மனத்துள் கடிந்து கொண்டாள்.

வாசற் கதவை தாழிட்டு விட்டு உள்ளே போனாள். மாமியாருக்குப் பணிவிடை செய்ய வேண்டும். குழந்தை மாதிரி குளிப்பாட்டி, ஆடை மாற்றி, உணவு தந்து...

'பாவம், அம்மாவுக்கு எவ்வளவோ வேலைகள்! நாள் முழுக்க எல்லாருக்காகவும் உழைக்கிறாள்...அதுவும் எத்தனை வருஷமாய்? எவ்வளவு காலமாய்? அவளுக்கு உலகமே தெரியாது. பாசம்...பாசம்! அதிலே வழுக்கி வழுக்கி விழுந்து உழல்றது தவிர அவளுக்கு என்ன தெரியும்! வேற என்ன வேணும் அவளுக்கு? அவளிடம் நான் அப்படிக் கடுமையாகப் பேசி இருக்க வேண்டாம். பாவம்-அம்மா முகம் எப்படி வாடிப் போச்சு...அம்மா அதையெல்லாம் உடனே ஈரக் கையை அழுத்தித் துடைச்சுப்பாளே, அதுமாதிரி துடைச்சுண்டுடுவாள்... இருந்தாலும் எனக்காக அவள் வருத்தப்படறவளா ஆயிடுவாளோ?

'இவளுக்கென்னவாம்? நான்தான் சந்தோஷமா இருக்கேன்னு சொல்றேனே...எப்படி என் மனசை அவள் புரிஞ்சுக்கற மாதிரி நான் அவளோட பேசுவேன்! என் மனசை யாராவது புரிஞ்சுண்டுடுவாளா? புத்தி கெட்டவள்னும், தலைக்கனம் பிடிச்சவள்னும்தான் சொல்லுவா. எல்லாம் போகப் போகக் கொழுப்படங்கித் தொழுவத்துக்கு வரும்னு தான் நினைப்பா...

'அம்மாகூட, அப்படி நினைப்பாளா? அம்மா, ஆட்டுக்குட்டி எல்லாரும் இந்தக் காலத்திலே, இந்த வாழ்க்கையிலே பொம்மனாட்டியைப் பத்தி அப்படித் தான் நினைப்பா... இந்த வாழ்க்கையை மாத்தணும்னு நிஜமாவே நினைக்கறவாளுக்குத்தான் நான் ஏன் இப்படித் தன்னந்தனியா சிக்கிண்டு போராடறேன்னு தெரியும். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் கூட நிச்சயம் புரியும். அதுக்கு ஒரு நேரம், ஒரு மனோநிலை எல்லாம் கூடி வரணும். என்ன அவசரம்... என்று, காலையில் தன் பெற்றோரிடம் இதுவரை இல்லாத முறையில் தான் கடுமை காட்டியதற்காக சீதாவின் மனம் நாளெல்லாம் அலைமோதியது.

ஒருமாத ஓய்வுக்குப் பிறகு மீனா வந்து பங்கஜவல்லி யம்மாளுக்குப் பணிவிடை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டாள்.

"என்ன மீனா, உனக்கு உடம்புக்கு என்ன? இப்ப எப்பிடி இருக்கே?' என்று விசாரித்தவாறு மாடிப்படி யிறங்கி வந்தாள் சீதா.

"ஒண்ணுமில்லே...ஒரு சின்ன ஆப்ரேஷன்... D. அன் C..." என்று சொல்லிவிட்டுக் கையில் இருந்த டிரேயுடன் பங்கஜவல்லியம்மாள் அறைக்குப் போனாள் மீனா. சீதாவுக்கு, 'அது என்ன ஆபரேஷன், அந்த இரண்டு எழுத்துக்களின் விளக்கம் என்னவென்று தெரியாவிட்டா லும், ரொம்பவும் தெரிந்தவள் போல் தலையை ஆட்டிக் கொண்டாள்.

"ஹாய் டார்லிங்," என்று இன்னொரு மாடிப்படி வழியாக இறங்கி வந்து கொண்டிருந்த சுகுமாரனின் குரல் கேட்டு சீதாவும் பதிலுக்கு "குட்மார்னிங்" என்றாள்.

அவன் பல நாட்களாக அவள் கண்ணில் பட வில்லை. இப்போது திடீரென்று பார்க்கையில் யாரோ போல் புதிதாகத் தோன்றினான். அவன், அகலமாய் ஜரிகைக் கரையிட்ட பட்டு வேட்டியும், பட்டு ஜிப்பாவும் அணிந்திருந்தான். விரல்களுக்கிடையே புகையும் சிகரெட்டைத் தரையில் போட்டு மிதித்து விட்டு பங்கஜ வல்லி அம்மாளின் அறைக்குப் போய் வழக்கம் போல் சாமி கும்பிட்டான். அம்மாவைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவள், இவன் வந்து நிற்பதைப் பார்க்கக்கூடாது என்பதற்காகவே, மயக்கமாக, அலுப்பாக இருப்பவள் போல் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

"அம்மா...அம்மா... bless me அம்மா. இன்னிக்கு எனக்கு ஜன்ம நட்சத்திரம்னு இந்த ஆத்திலே யாருக்கும் ஞாபகம் இல்லே...உனக்கும் மறந்து போச்சா? பாவம், நீ உடம்பு சரியாயிருந்தேயானா, 'கோயிலுக்குப் போகணும்,

குடுக்கறேன்-உங்க பிள்ளைக்கு... மாமீ! அவருக்கு சீக்கிரமா ஒரு கல்யாணம் பண்ணிப்பிடுங்கோ மாமி... அப்பவாவது எனக்கு நிம்மதி பிறக்கும்... என்று மீனா சகல உண்மை களையும் திறந்து தன்னிடம் சொன்னதெல்லாம் பங்கஜம் அம்மாளின் நினைவிலிருந்து அகன்று விடவில்லை. அதையெல்லாம் அனுசரித்துத்தான் சுகுமாரனுக்குச் சிறிதும் பொருத்தமில்லாத சீதாவைப் பேராசையுடன் முடித்து வைத்தாள் அந்தக் கோடீஸ்வரி.

"ஏண்டி? சீதா தனியாவா படுத்துண்டு இருக்கா?"

"ஆமாம்...அவள் மாட்டேன்னுட்டாளாம்."

"ஏன்? என்னடி இது அக்ரமம்...நாள் பார்த்துதானே சாந்திக் கல்யாணம் வெச்சா.... சுமங்கலிகள்!"

"நாளும் நட்சத்திரமும் பார்த்தால் போதுமா? அந்தப் பொண் இவரைக் கிட்ட அண்ட விடாம விரட்டறாளாம், சின்னப் பொண்ணுதானேங்கிறார்... என்ன பாவம் பண்ணி நான் இந்தக் கதிக்கு ஆளானேனோ?...இது என்ன பாவம் பாருங்கோ" என்று இரவெல்லாம் புலம்பினாள் மீனா.

எஜமானியம்மாள் தூங்குவதும், விழிப்பதும், அழுத வண்ணமிருக்கும் மீனாவுக்கு ஆறுதல் கூறுவதுமாய் இரவைக் கழித்தாள்.

**கா**லையில் பங்கஜவல்லியம்மாளுக்கு உடல்நிலை சரியில்லை என்னும் சேதி பரவி சொந்தக்காரர்கள், தெரிந்தவர்கள் என்று பலரும் நேரிலும், போனிலும் விசாரித்த வண்ணமிருந்தனர்.

சுந்தரசர்மா போன் பண்ணி விசாரித்துவிட்டு நேரிலேயே கண்டு செல்வதற்காக ஓடி வந்துவிட்டார்.

அப்பா வந்திருக்கிற விஷயம் தெரிந்தபோது சீதாவும் மாடியிலிருந்து இறங்கி வந்தாள். வரவேற்புக் கூடத்தில் வேலைக்கார மாமியொருத்தி கொண்டுவந்து தந்த காபியை அப்பா பருகிக் கொண்டிருந்த போது மாடியி

"தாங்க்யூ...என்னோட நீயும் கோயிலுக்கு வரலாமோன்னோ? வாட் இஸ் யுவர் புரோகிராம்?"

"சந்தோஷமா வரேன். கோயிலுக்குப் போயிட்டு நீங்க என்னை எங்காத்திலே விட்டுடுங்கோ..."

"கமான்... என்று உற்சாகமாக அவளுக்குக் காரின் கதவைத் திறந்துவிட்டு அவனும் வந்து உட்கார்ந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். கார் புறப்படும் போது அவளைப் பக்கவாட்டில் ரசித்துப் பார்த்து, "உனக்கு எப்போ பிறந்த நாள்?" என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

"அடுத்த மாசம்-இதே நட்சத்திரம்" என்றாள்.

"ஆமாமாம். நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே நட்சத்திரம், உத்தமப் பொருத்தம்னு எல்லாம் அள்ந்தானில்லே அந்த ஜோஸ்யன்! அவன்தான் நான் பிறந்ததுக்கு ஜாதகம் கணிச்சவனாம்-பாஸ்டர்ட்!" என்று திட்டினான்.

'ஐயோ! பிறந்த நாளதுவும் என்னத்துக்குப் பெரிய வாளை வையணும்' என்று நினைத்துக் கொண்டாள் சீதா. ஆயினும் 'அவனைத் தடுக்கவோ புத்தி சொல்லவோ நான் யார்?' என்று நினைத்தவளே போல் ஓடுகிற காரிலிருந்து தெருக் காட்சிகளை வேடிக்கை பார்க்க முகம் திருப்பிக் கொண்டாள்.

"உனக்கு வரப்போறது எத்தனையாவது பிறந்த நாள்?" என்று அவளிடம் பேச்சுக் கொடுத்தான் சுகுமாரன்.

"வெற்றிகரமான இருபத்திரண்டாவது ஆண்டு விழா... என்றாள் ஆங்கிலத்தில்.

"ஷ்யூர் ஷ்யூர்...ஐ ஆம் கோயிங் டு ஸெலபிரேட் இட் லைக் எ க்வீன்ஸ்...I am going to celebrate it like a Queen's... என்று பிரகடனம் போல் சொன்னான்.

"எஸ்...எ க்வீன் வித் அவுட் எ கிங் Yes, A Queen without a King" என்று முனகிக் கொண்டு கலகலத்துச் சிரித்தாள் சீதா.

## 33

**வீ**ட்டை விட்டுப் புறப்பட்ட சர்மா எங்கெங்கோ சுற்றினார். தனது பொருளாதார நிலைமைகளையெல்லாம் எங்காவது தனித்து நடந்துகொண்டே யோசித்தால்தான் வேறு சிந்தனைகளின் இடைஞ்சல் இல்லாமல் கிரமமாக இவரால் எண்ணிப் பார்க்க முடிகிறது.

இப்போது அவருக்கு மாதம் இரண்டாயிர ரூபாய் சம்பளமும், அதற்குமேல் தொடர்கதை எழுதுவதற்கு ஆண்டுதோறும் இரண்டு பெரிய தொகை சன்மானங் களும் கார், டெலிபோன் வசதிகளும் சுந்தரி பத்திரிகை யின் எடிட்டர் என்கிற முறையில் கிட்டியிருப்பவைதான். ‘சுந்தரியுடன் உள்ள உறவை அறுத்துக் கொண்டு இந்த வசதிகளுடனோ, அல்லது இவை இல்லாமலோ தன்னால் இன்னும் உள்ள குறை காலத்தை வாழ்ந்து காட்ட இயலுமா?’ என்று ஒரு முறைக்கு நூறுமுறை திரும்பத் திரும்ப யோசிக்கத்தான் வேண்டியிருந்தது.

லஸ் கார்னரில் கட்கத்தில் பையுடன் அவர் நடந்து கொண்டிருந்தபோது அவர் பக்கத்தில் பிளாட்பாரத்தை ஒட்டியவாறு டாக்ஸி ஒன்று மெள்ள வந்து நின்றது.

“ஐயா கார்லே போவீங்களே... கார் என்னாங்க ஆச்சு?” என்று கேட்டபடி அவருக்குக் கதவைத் திறந்தான் டாக்ஸி டிரைவர்.

தன்னை அந்த டாக்ஸிக்காரனுக்குத் தெரிந்திருப்பது குறித்து அவர் மனத்துள் பெருமிதம் ஏற்பட்டது. டாக்ஸிக்குள் உட்கார்ந்தபிறகு தன்னை அங்கிருந்த கடைக் காரர்கள் கவனித்தபோதும், ஓரிருவர் தன்னை அடை யாளம் தெரிந்துகொண்டு வணக்கம் தெரிவித்த போதும் அவர் முகத்திலிருந்த கவலைக் குறிகள் மாறின. மகிழ்ச்சியுடன் அவர்களுக்குப் பதில் வணக்கம் செலுத்தினார்.

டாக்ஸி புறப்பட்டது. டிரைவர் தன் முன்னால் உள்ள சிறிய துண்டுக் கண்ணாடியைச் சரி செய்து அதன் வழியே பின்னால் உட்கார்ந்திருக்கும் சுந்தர சர்மாவைப் பார்த்து,

"என்னா சார் ஆச்சுது, நம்ப கார்?" என்று விசாரித்தான்.

"அது நம்ப கார் இல்லேப்பா. ஆபீஸ் கார். இப்ப நான் சொந்த வேலையாய் போறேன். திருவல்லிக்கேணிக் குப் போ!" என்று சுருக்கமாகச் சொன்னார்.

வழக்கமாகக் காரிலேயே செல்கிற ஒருவன் ஏதோ ஒரு காரணத்துக்காக எல்லாரையும் போல் நடந்தோ வேறு பொது வாகனங்களிலோ சென்றால், அவனைத் தெரிந்தவர்கள் எல்லாம் அவனிடம் மிகவும் அனுதாபத்து டன் 'கார் என்னாச்சு?' என்று கேட்கிற கேள்வியையும், 'என்னப்பா ஆச்சு, உன் நிலைமை?' என்று அந்தரங்கமாக வினவும் அதன் உட்பொருளையும் சுந்தர சர்மா ரொம்ப 'வேதாந்தமாக' யோசித்துப் பார்த்தார்.

'அதுவும் என்னைப் போல் சிறிது பிரபலமானவன், எழுத்தாளன், கலைஞன் எல்லாம் கொஞ்சம் வசதி படைத்தவுடன், சாதாரண மனிதர்கள் மட்டும் அல்லாது, தன்னை யொத்த தனது சகாக்களே இவன்களைக் கண்டு பொருமுகிற அளவுக்குப் பளபளத்து விடுகிறான்கள்! அடேயப்பா, இவன்களுக்குத்தான் என்ன கர்வம்! என்ன அலட்சியம் என்ன இறுமாப்பு! என்ன வீறாப்பு! இவனே இவனது தனித்துவத்தால், திறமையால் இதையெல்லாம் பெற்று விட்டானாம்...இவனே இவனது இனத்தின் 'இது'வாம்...திலகமாம்!

'இந்தப் பளபளப்பில் மயங்கி எல்லாரும் அப்படித் தான் என்று சொல்லுவான்கள்! எல்லாரும் சொல்லச் சொல்ல அதுவே ஒரு மெய்போல் இந்த 'அவன்'களை மயக்கித் தொலைக்கும். தானே உருவாக்கியதாக நம்பிய அந்தப் பொய் பிறர்மூலம் பிரதிபிம்ப தரிசனம் காட்டும்

போது எவன்தான் அந்த மயக்கில் மயங்கிப் போக மாட்டான்.

'பளபளப்பு இரவல்தானே? எவனோ தருவது தானே? திறமை, மேதைமை எல்லாம் இன்னொருவரால் இனம் காணப்படுவதுதானே?... ஆனால் இந்தப் பளபளப்பு இவன் அவன் என்ற பேதமில்லாமல்-அவன் என்னைப் போல் ஓர் ஏழாந்தர எழுத்தாளனாயினும் சரி, உண்மையான இலக்கிய வேந்தனாயினும் சரி-சொற்ப காலத்தில்- அற்பாயுளில், இந்த மவுசு மாறிப் போகிறதே! கருந்திட்டுக்களாக, ஒரு காலத்தில் இருந்த பளபளப்பின் அருவருக்கத்தக்க குழிப் புண்களின் வடுக்களாக அவை மாறித்தான் போகிறது...இதை எவன் மறுப்பான்? இன்று இதை மறுப்பவன் வாழ்க்கையில் இன்னும் சிறிது பொறுத்து இதை அறியக் கடவன்!

'அதனால்தான் நமது சாமானிய மக்கள்-சாமானிய மக்கள் என்றால், இதோ இந்த டாக்ஸி டிரைவர் அதாவது பளபளப்பை வேடிக்கை பார்க்கிறவர்கள்-பளபளப்பான வாழ்க்கையை ஒரு கனவு போன்ற லட்சியமாக மட்டுமே கொண்டவர்கள், கார்களில் போகிறவர்களை உற்று உற்றுப் பார்க்கிறவர்கள், இந்தப் பிற்காலப் பிரபலங்களின் -ஒருகாலத்திய உற்ற நண்பர்களாய் இருந்து உறுதுணை செய்தவர்கள்-அந்தச் சாமானியர்களின் அனுபவத்தில் எல்லாப் பிரபலங்களும் ஒருநாள் பவிசிழந்து, ஒரு விபத்தில், முன்பு போலவே தெருவுக்கு வந்து நிற்பதை நிறையவே பார்த்து இருக்கிறார்கள் இந்தச் சாமானியர்கள்.

'என்ன சார், கார் என்ன ஆச்சு?' என்று கேட்கிற ஒருவரின் குரலில் இருக்கிற ஆதங்கம் இந்தச் சமூகத்தின் அறிவார்ந்த கணிப்பின் எதிரொலி அல்லவோ? 'என்ன, உனக்கு அந்த நேரம் ஏற்பட்டுவிட்டதா?' என்று, சாமானியர்களின் குரல் சற்றுக் கேலியுடனே இந்தப் பிரபலங்களைக் கேட்கிறது. கேலியோ, கிண்டலோ- அதுவே சத்தியத்தின் குரல். எனக்கு அந்த நேரம், அந்தப்

பக்குவம் வந்தாச்சு...என்னத்துக்காம் இனியும் இந்தப் பத்திரிகையும், பேரும், பளபளப்பும்? உள்ளூர அவமானப் பட்டுண்டு வெளியிலே பெருமிதமா நடந்துண்டு... போறுமே...இந்தப் பொய்ப் பெருமை!"

-திருவல்லிக்கேணியில் ஒரு பிரதான சாலையில் ஒரு பதிப்பகத்தின் முன்னால் டாக்ஸியை நிறுத்தி இறங்கிக் கொண்டார் சுந்தர சர்மா.

அவரைக் கண்டதும் அந்தப் பதிப்பகத்தின் அதிபர் கண்ணப்பன் செட்டியார் இரண்டு கைகளையும் முகத்துக்கு நேரே கூப்பி எழுந்து நின்று 'வாங்கோ சார்' என்று குரல் எடுத்து உற்சாகமாய் வரவேற்றார்.

"எங்கே ஸார்-ரொம்ப. வருஷமாச்சு, இந்தப் பக்கம் நீங்க வரதே இல்லை...உக்காருங்க. காபி சாப்பிடறீங்களா டேய் பையா...போயி ரெண்டு காபி கொண்டுவா" என்று-கல்லாவிலிருந்து சில்லறை எடுத்துத் தந்தார்.

"அப்புறம் சொல்லுங்க சார். உங்க மக கல்யாணத் திலே பார்த்தது. பொண் சௌக்கியமா இருக்கா?" என் றெல்லாம் அன்னியோன்னியமாய்க் குசலம் விசாரித்தார் செட்டியார்.

ஏதேதோ பழைய நினைவுகளில் தோய்ந்த சுந்தர சர்மா நன்றியுணர்ச்சி மின்னும் விழிகளால் மௌனமாய்ச் செட்டியாரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சார்...நீங்க ரொம்ப சாதாரணமா சும்மா ஒரு உபசாரத்துக்கு ரொம்ப நாளாச்சுன்னு சொல்லிட்டேள்! நான் அந்த ரொம்ப நாள் சமாசாரங்களை அப்பிடியே நெனைச்சுப் பார்க்கறேன்...இதை ஏதோ புஸ்தக வியாபாரம் செய்கிற இடமா நான் நினைக்கலே சார்...எப் பேர்ப்பட்ட இலக்கிய ஜாம்பவான்கள் எல்லாம் இங்கே உக்காந்து வெத்தலை சீவல் போட்டுண்டு, காப்காவையும், இலியா எரன்பர்க்கையும், ஜீன்பால் சாத்ரேயேயையும், கம்பனையும், வள்ளுவனையும், ஆழ்வாராதிகளையும்,

வால்மீகியையும் சங்கரரையும் இழுத்துவெச்சி சல்லாபம் பண்ணிண்டிருப்பா...அடாடா! இந்த மாதிரி இடத்திலே அடிக்கடி சஞ்சாரம் பண்றதுக்கு ஒரு யோக்யதை, தகுதி வேண்டாமா? இத்தனை காலம் எனக்கு அது இல்லே, இப்ப வந்திருக்கு-வந்துட்டேன்...பையனை அனுப்பி வெத்திலை சீவல் வாங்கிண்டு வரச் சொல்லுங்க..நம்ப பழைய நண்பர்களில் யார் யார் இப்ப வந்துண்டு இருக்கா...” என்று காபியை ஆற்றிக் கொண்டே இளமை திரும்பியவர் போல் உற்சாகத்துடன் விசாரித்தார் சர்மா.

பல வருஷங்களுக்குப் பிறகு திடீரென்று, சற்றும் எதிர்பாராதவிதமாக சுந்தர சர்மாவைத் தமது பதிப்பகத் தில் பழைய நண்பராகவே காண்பதில் செட்டியாரும் மிகவும் குதூகலமடைந்தார்.

அந்த இலக்கிய ஜாம்பவான்களில் பலர் அமரர் களாகி அதே இடத்தில் படங்களாக வரிசையாய் அமர்ந்து இப்போதும் தங்கள் நினைவைச் சர்மாவின் மனத்துள் சுரக்கச் செய்தனர்.

புத்தக ஷெல்ஃப்களில் ஒரு வரிசையில் அக்காலத் தில் சுந்தரம் எழுதிய புத்தகங்களின் வரிசை ஒருபால் இருப்பதைப் பார்த்து அவற்றை எடுத்து ஒவ்வொன்றையும் எத்தனையாவது பதிப்பு என்று பார்த்துத் தெரிந்துகொண் டார்.

இதெல்லாம் நல்ல புத்தகங்கள். மகாத்மா காந்தியைப் பற்றி.. ஒரு கட்டுரை நூல், இரண்டொரு சிறு கதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுப்புகள், வால்மீகி யும் கம்பனும் எனும் ஆராய்ச்சி நூல்...அதையெல்லாம் ஒரு காலத்தில் தாம் எழுதியதை நினைக்கப் பெருமைதான். ‘அதெல்லாம் சரி, இதை மட்டும் நம்பினால் இவர்களைப் போல் இந்நேரம் நானும் அமரராகி இருக்கலாம்’ என்று நினைத்துப் பெருமூச்செறிந்து கொண்டார். அக்காலத்தில் தாம் எழுதிய அந்தப் புத்தகங்கள் பல பதிப்புகள் வந்து இப்போதும் விற்பனையாவதில் ஒரு திருப்தி.

"செட்டியாரே...எனக்கு ராயல்டி தொகை எவ்வளவு இருக்கும், கணக்கிலே?" என்று இதுகாறும் தாம் கவலைப் படாதிருந்ததை நினைவுபடுத்திக் கொள்ளுவது போல் கேட்டார் சுந்தரம்.

"இதோ இப்பப் பார்த்துச் சொல்லுகிறேன்-டே பையா! அந்த அஞ்சாம் நம்பர் பேரேட்டை எடு..." என்றார். செட்டியாரின் மனம் எதிரிலிருக்கும் சுந்தர சர்மாவைப் பற்றி யோசித்தது.

"இன்னிக்கு உங்களுக்கு ஆபீஸ் இல்லையோ? இப்படி விச்ராந்தியா வந்துட்டீங்க?... என்று என்னமோ சந்தேகம் ஏற்பட்டதால் கேட்டார்.

"சுந்தரி பத்திரிகையின் எடிட்டர் உத்தியோகத்தை விட்டுடலாம்னு மனசளவிலே நான் தீர்மானம் பண்ணிட்டேன்...அது விஷயமா யார்ட்டேயாவது பேசணும்னு நினைச்சப்போ உங்க ஞாபகம்தான் வந்தது..." என்றார்.

"ஆமாம் சார் -பர்ஸனலா என் அபிப்பிராயத்தைக் கேட்டீங்கன்னா அப்பிடியொரு பத்திரிகைக்கு நீங்க ஆசிரியரா இருக்கறதனாலேதான் உங்க எழுத்தே ரொம்ப வக்கரிச்சுப் போயிட்டது - ஸாரி, இப்படிச் சொல்றதுக்காக மன்னிக்கணும். உங்க 'கப்பாஸிடி' என்னான்னு எனக்குத் தெரியும். நான் போட்ட உங்க புஸ்தகங்களே அதுக்கு சாட்சி.

"இப்ப நீங்க எழுதறீங்களே, இதெல்லாம் புஸ்தகமா போட முடியாது சார்...அதனாலே சுந்தரி பத்திரிகையை விட்டுட்டா உங்களுக்கு ஒண்ணும் பெரிய தார்மீக நஷ்டமில்லே. பொருளாதாரமா எப்படியிருக்கும்னு யோசிச்சுக்குங்க...முன்ன மாதிரி நல்ல புத்தகங்கள் எழுதினா அதையும் கூட ஒரு மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிடலாம்..." என்றார் செட்டியார்.

இதற்கிடையில் பையன் அஞ்சாம் நெம்பர் பேரெட்டைக் கொண்டுவர, அதில் முப்பத்திரண்டாம்

பக்கத்தைப் புரட்டி, 'திரு. சுந்தரம்' என்ற தலைப்பிட்ட பக்கத்தைப் பார்த்து, "போன மாசம் முடிய உங்க ராயில்டி தொகையிலே ஏழாயிரத்து முன்னூறு, ரூபா, நாற்பத்தைந்து காசு இருக்கு... எப்ப வேணும் உங்களுக்கு?" என்று புன்முறுவலுடன் கேட்டார் செட்டியார்.

"உங்க கிட்டயே இருக்கட்டும்....நீங்க சொன்னது போல மறுபடியும் உன்னதமான எழுத்துக்கள் என்னிட மிருந்து பிறக்க சரஸ்வதி அருள் செய்ய வேணும்" என்று வாய்விட்டு வேண்டிக் கொண்டார் சர்மா.

"அது ஏன் அப்படி?" என்று எதையோ யோசித்து அறியாமையுடன் கேட்டார் சர்மா.

"எது?" என்றார் செட்டியார்.

"இப்ப நான் இந்த சுந்தரிப் பத்திரிகையிலே எழுதற கதையெல்லாம் ஏன் புஸ்தகமா போட முடியாதுங்கறேள்?"... தெரிஞ்சுக்கலாமோ?"

"ஓ! அதுவா! இது ஒரு தொழிலானாலும் சேவை யானாலும் ஐம்பது வருஷமா இந்தப் புத்தகம் வெளியிடற தொழிலிலே இருக்கறதனாலே இதைப் பத்தி நான் சொல்றதை நீங்க நல்ல ஸ்பிரிட்லே புரிஞ்சுக்கணும்" என்று பீடிகையுடன் ஆரம்பித்தார் செட்டியார். அவர் பேச ஆரம்பித்தாரானால் எப்போதுமே இங்கு வரும் இலக்கிய ஜாம்பவான்கள் எல்லாம் மரியாதையுடன் வாயை மூடிக் கேட்டுக் கொள்வார்கள். அவ்வளவு விஷயம் இருக்கும் அவர் பேச்சில். அவர் ரங்கூனில், இந்திய தேசிய ராணுவத்தில், சுபாஷ் போஸின் அருகாமையில் இருந்து இந்த தேச வாழ்க்கையை அனுபவித்த பின்னணி உடையவர். தமிழில் புலமையும், பிற மொழிகளில் பரிச்சயமும் உடையவர். தாம் பதிப்பிக்கிற புத்தகங்களைப் படித்துத் தேர்ந்தே வெளியிடுவார். சில சமயங்கள் பதிப்பகத்தார் குறிப்பு என்ற தலைப்பில் மிக அருமையான கட்டுரையே எழுதி விடுவார். அவர் சொல்லுவதில்

சாரமிருக்கும் என்பதால் கவனமாய்க் கேட்டுக் கொண்டார் சுந்தர சர்மா. செட்டியார் சொன்னார்:

"ஐயா, ஒரு புத்தகம் எதற்காகப் பதிப்பிக்கப் படுகிறது? ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைமுறையினரும் படித்துப் பயன்பெறும் நோக்கத்தினாலும் நடைமுறையினாலும் பதிவு செய்யப் படுவதனாலேதான் புத்தகம்கிற ஒரு சமாசாரப் பதிவு உருவாகிறது. என்ன, சரி தானே?"

...சரிதான்."

"ஆனால் உங்கள் பத்திரிகை எதற்காக அச்சாகிறது? அதில் எழுதுகிற உங்களின் துப்பறிகிற, உணர்ச்சியைத் தூண்டுகிற எழுத்துக்களின் நோக்கமென்ன? வாசகனுக்கு விறு விறுப்பு ஊட்டி ஏமாற்றுவது என்பதைத்தவிர? ஏமாற்றுவது என்றால் நல்ல அர்த்தத்தில் சொல்லுகிறேன். உங்கள் சஸ்பென்ஸ் என்பது சமத்காரத்தின் இன்னொரு பெயர்தானே? இதைப் பாமரர்கள் ரசிப்பார்கள். ஒரு தடவைதான் ரசிப்பார்கள். இதற்குப் பதிவு என்ன, ஆவணக் காப்பு என்ன?...நானும் ஓரிரண்டு தாட்சண்யத் துக்காகவும், விற்றால் லாபம்தானே என்பதற்காகவும் போட்டுப் பாத்தேன். வாசகர்கள் புஸ்தகத்தைப் பார்த்து, 'ஓ! இதுவா...நான் பத்திரிகையிலே வரும் போதே பார்த்தேன், trash' என்று தான் தீர்ப்பளிக்கிறார்கள்; தேங்கிப் போகிறது. மெதுவாகப் போகிறது. ஒரு பதிப்பு போனாலே பெரிய விஷயம். எனவே இந்தமாதிரி trash ஒரு பத்திரிகைக்கு இன்றியமையாத் தேவையாகக் கூட இருக்கலாம். அது ஒரு நூல் நிலையத்தில் எதற்கு? வேண்டுமானால் எங்காவது ரெஃபரன்ஸுக்கு இருக்கலாம். ஒவ்வொருவர் வீட்டிலும் மனத்திலும் அவை இடம் பெறாது; பெறவும் கூடாது. அதனால்தான்–அதை நீங்கள் விட்டொழிப்பதில் எனக்குச் சந்தோஷமே" என்றார்.

செட்டியாரின் பேச்சைக் கேட்டு சுந்தர சர்மாவுக்கு ஒரு புத்துணர்ச்சியும், நம்பிக்கையும் பிறந்தது.

'இந்தச் செட்டியாருக்கு லட்சம் லட்சமாய்ச் சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் நம்மைப்போன்ற பிரபலங்களுக்கு ஏற்படுகிற அற்பாயுள் பளபளப்பின் சாயல்கூட இவரிடம் கிடையாதே!' என்று நினைத்துக் கொண்டார் சுந்தரம்.

'இங்கே ஒரு ஏழாயிர ரூபாய் இருக்கு...மாசா மாசம் ஐநூறு வாங்கிண்டால்கூட ஒருவருஷம் தள்ளும்...ராஜி னாமா பண்ணினா அங்கேருந்து எந்த ஜர்னலிஸ்டுக்கும் கிடைக்கிற மாதிரி ஏதாவது கிடைக்கும். இந்தச் செட்டி யார் மாதிரி துல்லியமா அது எவ்வளவுன்னு கணக்குச் சொல்ற யோக்யதை ஏது அவன்களுக்கு? உத்தேசமா இருபத்தையாயிரம் வரும்...போறும். அதை வாங்கி பேங்கிலே போட்டுட்டு இவர் சொல்றமாதிரி ஏதாவது உன்னதமா, முடிஞ்சால் எழுதறது!...இதான் தீர்மானம். இதைப்போயி லட்சுமி கிட்ட புரியும்படியா இணக்கமா சொல்ல வேணும்.'

"நான் வரட்டுமா...அடிக்கடி வருவேன்... என்று சுந்தர சர்மா எழுந்ததும் செட்டியாரும் எழுந்து நிற்க இருவரும் ஒருவரையொருவர் உள்ளார்ந்த நட்புடன் வணங்கிக் கொண்டனர்.

**சு**குமாரனின் ஆபீஸ் அறையில் டெலிபோன் மணி ஒலித்தது.

"எஸ்..."

"நான் P. A. பேசறேன்..."

''சுந்தரியிலேருந்து பட்டண்ணா உங்களோட பேசணுமாம்....

"ம்...பேசச் சொல்லு."

"குட்மார்னிங் ஸார். நான் பட்டண்ணா பேசறேன்....

"குட்மார்னிங்"

"மிஸ்டர் சுந்தர சர்மா ரெண்டு நாளா ஆபீசுக்கு வரலே....கார் போயித் திரும்பி வந்துடறது. இன்னக்கி ஒரு ராஜினாமா லெட்டர் குடுத்து விட்டிருக்கார்....அது விஷயமா உங்களுக்கு முன்னாலே தெரிவிச்சுடலாம்னு தான் போன் பண்ணினேன்....

"ஐ...ஸீ.... என்று மோவாயைச் சொறிந்து எதையோ நினைத்துத் தன்னுள் சிரித்துக்கொண்டபின் "கீப் இட் இன்பெண்டிங்....அப்புறம் இந்த மேட்டர் விஷயமாய் நான் பேசறேன்" என்று ரிஸீவரை வைத்துவிட்டு, இது குறித்து என்ன செய்யலாம் என்கிற யோசனையில் சிகரெட்டில் ஆழ்ந்து புகையுறிஞ்சினான்.

## 34

**சீ**தாவிடம் சுகும்ரரன் சுந்தரி ஆசிரியர் பொறுப்பை சுந்தரசர்மா ராஜினாமா செய்துவிட்டதைச் சொன்னான். அதைச் சொல்லுவதற்காகவே சீதாவின் அறையில் வந்து நின்றிருப்பதை, அங்கிருந்த சோபாவில் உட்காராமல் அவளுக்கு உணர்த்தினான் அவன். சீதா நிலைக் கண்ணாடியின் முன் நின்று ஈரக்கூந்தலைத் துவட்டி கொண்டிருந்தாள்.

'நல்லது' என்று நினைத்துக் கொண்டாள் சீதா. ஆனால் அப்பாவின் ராஜினாமா குறித்து இவன் குழப்ப மடைந்திருக்கிறான் என்பதைக் கண்டுகொண்டு "என்ன காரணமாம், திடீரென்று?" என்று கேட்டாள்.

இதற்கிடையில் சீதா கூந்தலை ஆற்றிக்கொண்டிருந்த அழகில் லயித்து நின்ற சுகுமாரன், அவளது கேள்வியும் அதற்குரிய பதிலும் புரியாமல் வெறுமெனத் தோள்களை

உயர்த்தி "கடவுளுக்குத்தான் தெரியும்" என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

ஒரு மரியாதைக்காக, நின்றவாறே பேசிக் கொண்டிருந்தவனை. "உட்காருங்கள்" என்றாள். "தாங்க்யூ" என்று உட்காரப்போனான் சுகுமாரன். அதற்குள் சீதா உதடுகளில் பற்றிக் கொண்டிருந்த சீப்பு, அவள் கொண்டையிடுகிறபோது நழுவிக் கீழே விழுந்தது. சுகுமாரன் அந்தச் சீப்பை எடுத்து அவளிடம் நீட்டினான். "தாங்க்யூ" என்று அதை ஒரு புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள் சீதா.

வந்து பேச ஆரம்பித்த விஷயத்தை மாற்றித் திடீரென அவன் சீதாவின் பிறந்தநாள் விழாவை பற்றிப் பேசினான்:

"சீதா...நாம உன் பிறந்த நாளை இந்த வீட்டிலேயே தான் கொண்டாடப் போகிறோம். முதலில் ஏதாவது ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல்லே வச்சுக்கலாம்னு நினைச்சேன்...அது வேண்டாம். அது சரி, நான் என்னோட நண்பர்கள் எவ்வளவு பேரை ஜோடியாகவும் தனியாகவும் உனக்கு அறிமுகம் பண்ணி வெச்சிருக்கேன்! உனக்கு இந்த மரியத்தையும் அந்த 'குக்' அவன் பேரென்ன, ராமதாஸ்? அவனையும் தவிர வேறயாரும் நண்பர்களே கிடையாதா? இருக்கணுமே! உன் பிறந்தநாள் விழாவிலே அவர்களை எல்லாம் எதிர்பார்க்கிறேன்...நீ எல்லாரையும் அழைக்கணும்... என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

சீதாவுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி இமயத்துக்கு அப்பால் இருக்கிற திருமதி காத்ரீனாவின் நினைவும் இன்னும் சில முகங்களும் பெயர்களும் மனத்தில் ஓடின. அவள் யோசிப்பதைப் பார்த்து இன்னும் சிறிது நம்பிக்கையுடன் சொன்னான் சுகுமாரன்.

"ஆமாம் உனது எல்லா சினேகிதர்களையும்-ஆண்கள்-பெண்கள் எல்லாரையும் நீ அழைக்க வேண்டும்" என்று அழுத்தமாய்ச் சொன்னான்.

சீதா யோசித்தாள். தனக்கு யாரேனும் ஆண்கள் சினேகிதர்களாக எப்போதேனும் இருந்திருக்கின்றனரா என்று, அனைவரும் கோவணம் கட்டாத சிறு குழந்தைகள் தான் மனத்தில் நிழலாடினர். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"எனக்கு ஒரு அண்ணாவோ 'தம்பியோ இருந்திருந்தால் அவா சினேகிதா யாராவது எனக்கு சிநேகமாயிருக்கலாம். இப்ப, அன்னிக்கு அறிமுகம் செய்து வச்சேனே, ராமதாஸ், அவர் ஒருத்தர்தான்... அப்புறம் அப்பாவுக்குத் தெரிஞ்சவா சிலபேரைத் தெரியும்- அவாளை எப்பிடி எனக்கு சினேகிதர்கள்னு சொல்ல முடியும்?" என்று யோசித்தவாறே பேசினாள்.

அவள் யோசிப்பதை, அவள் பேச்சை, அவள் கூந்தலை, அதை அவள் பின்னிக்கொள்ளுவதை, பொட்டிட்டுக் கொள்ளுவதை-அவளது செயல்-ஒவ்வொன்றையும் ரசித்துப் பார்த்தான் சுகுமாரன். அவள் எப்போதுமே அவனைப் பார்க்காமலே அவனுடன் பேசவும் அவனது பேச்சைக் கேட்கவும் பழகிவிட்டாள். எனவே அவனது பார்வையை-அதன் ஏக்கத்தை அவள் கவனிக்கவும் இல்லை; பொருட்படுத்தவும் இல்லை.

'ஒரு நிமிஷம்-வந்துட்டேன்' என்று அவனிடம் சொல்லிவிட்டு வேறு ஓர் அறைக்குள் சென்று உடை மாற்றிக்கொண்டு வந்தாள். ஒரு சாதாரண, வெளிர் நீலமும்-வெண்மையும் கலந்த கைத்தறிச் சேலையை அவள் உடுத்திக் கொண்டு வருவதைக் கண்டு அவன் மனத்துள் முனகிக் கொண்டான்: 'ஹவ் சிம்ப்பிள் அன்ட் கிரேஸ்ஃபுல்!' சுகுமாரன் ஒரு பெருமூச்சுடன் எழுந்தான்.

"நான் உன்னோட வரலே. வந்தா உங்கப்பாவைப் பார்க்க வேண்டியிருக்கும். நான் அவரை ஆபீசிலே பார்த்தால்தான் இதை எல்லாம் பேசமுடியும்... நீ வேற கார்லே போ உங்காத்துக்கு...நான் அப்புறமா அவருக்குப் போன் பண்ணிப் பேசிண்டுடுவேன்... சீதா, உங்கப்பா கிட்ட நீயும் சொல்லு. நமக்குள்ளே என்ன இருந்தாலும்

நம்மோட இருக்கட்டும். உறவை முறிச்சுண்டு வெளியே போறதுங்கறது எந்த விஷயத்திலேயும் சரியில்லே... என்ன, சரிதானே?'' என்று அவள் முகத்தைப் பார்த்தான் சுகுமாரன்.

"ம்...நான் அவர்ட்டே பேசிப் பார்க்கறேன். எனக்கு இது விஷயமா இப்ப நீங்க சொல்லித்தான் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே அவள் கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு புறப்படத் தயாரானாள்.

"என்னப்பா, நீங்க ஆபீசுக்குப் புறப்படலியா?'' என்று கண்களைச் சிமிட்டியவண்ணம் சுந்தர சர்மாவிடம் கேட்டவாறு அவர் பக்கத்தில் அந்த இரட்டை சோபாவில் வந்து உட்கார்ந்தாள் சீதா. அவர் என்னவோ சொல்ல முயன்றபோது,

"எல்லாம் எனக்குத் தெரியும். அம்மாவுக்குக் கூடத் தெரியாது இல்லியா அது?" என்று சீதா, கேட்பது, ஏதோ கை வேலையாக இருந்த அம்மாவின் காதில் விழ அவளும் இவர்களைப் பார்த்தாள்.

''என்ன அவசரம்? மெதுவா சொல்லலாம்னு இருக்கேன். இதோ இப்ப சொல்லிடறேனே...அடீ! நான் சுந்தரி பத்திரிகை எடிட்டர் ஷிப்பைத் தொலைச்சித் தலை முழுகிட்டேன். போறுமோ?'' என்று அதனால் தான் ஒன்றும் பாதிக்கப்படாதவர் போல் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

அம்மா மோவாயில் கை வைத்துக் கொண்டு அவரை வியப்புடன் பார்த்தாள்: 'இது என்ன கிறுக்குத்தனம்!' என்று கேளாமல் கேட்கும் பார்வை.

''பார்த்தியா சீதா...இப்பிடித்தான் எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன்"னு செஞ்சுடுவார். என்னடாப்பா ரெண்டு நாளா கார்லே போகலியே-மசமசன்னு ஆத்துலே உக்கார்ந்து மோட்டு வளையைப் பார்த்துண்டு இருக்கே

ளேன்னு நினைச்சேன். வேலையை விட்டுட்டேளா? உத்தமம்!.... பட்டண்ணாவுக்கு அடிச்சது யோகம்! ஏன்னா இப்படி அவசரப்பட்டு ஒண்ணொண்ணும் பண்றேள்?" என்று புருஷனைச் செல்லமாய்க் கடிந்து கொண்டாள் அம்மா.

"எதுவும் இன்னும் முடிவாயிடலே அம்மா..." என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு அப்பாவின் முகத்தைப் பார்த்தாள் சீதா,

"என்னைப் பொறுத்தவரைக்கும் அது முடிஞ்சு போன விஷயம்!" என்று முறுக்குடன் சொன்னார் சுந்தர சர்மா.

"அது எப்பிடிப்பா-ரெண்டு தரப்பும் சேர்ந்து பண்ணிக்கிற ஒரு ஏற்பாட்டிலே திடீர்னு ஒருத்தர் விலகிக் கறது பொறுப்பில்லாத காரியம் இல்லியா? விலகறது விலகுங்கோ. அதுக்கு ஒரு முறை இருக்கோன்னோ? அதான் அவர் சொல்றார், நமக்குள்ள என்ன இருந்தாலும் நாமே பேசித் தீர்த்துண்டுடலாம்கிறார். நீங்களும் ரீ கன்ஸிடர் பண்ணுங்கோன்னு சொல்லச் சொன்னார்-மிஸ்டர் சுகுமாரன்" என்றாள் சீதா.

"முடியாதம்மா. எனக்கு இதனாலே பல நன்மைகள் ஏற்படப் போறது. அறுவது வயசுக்கு மேல் என் வாழ்க்கையில் ஒரு உன்னதமான திருப்பம் ஏற்படப் போறது. நான் ஏதோ கோபத்திலே ராஜினாமா கடுதாசி எழுதினது வாஸ்தவம் தான்....ஆனால் இப்ப தோணறது, நீ சொல்ற மாதிரி ஒரு முறையோட, கோபதாப மில்லாமலே விலகிடறதுதான் எனக்கு நல்லது. என் ராஜினாமாவை ஏத்துண்டு என்னைக் கணக்குத் தீர்த்து அனுப்பிடச் சொல்லு-அவனை" என்று இரண்டு கை களையும் ஓசையெழத் தட்டிக் கும்பிடு போட்டார் அப்பா.

"அப்பா, இதோ பாருங்கோ...நான் ஒண்ணும் உங்களை அங்கேயே இருந்தாகணும்னு வற்புறத்தறதா நினைக்க வேண்டாம். எனக்கும்தான் இதில் ரொம்ப

சந்தோஷம். ஆனால் உங்களுக்குள்ளே ஏற்கனவே என்ன ஒப்பந்தம்னு எனக்குத் தெரியாதே. கடைசி வரைக்கும் நீங்களே எடிட்டரா இருந்து அந்தப் பத்திரிகையை நடத்திக் குடுக்கறதாக ஏதாவது ஒப்பந்தம் உண்டோ?" என்று விசாரித்தாள் சீதா. அம்மாவும் அது பற்றிய விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தால் காதைத் தீட்டிக் கொண்டு நின்றாள்.

'இதெல்லாம் இவர் எங்கே என்னண்ட சொல்றார்' என்று அம்மா மனத்துள் முணுமுணுத்துக் கொள்ளுவதை சீதா ஒரு பார்வையில் உணந்தாள்.

"நான் சுந்தரியை ஆரம்பிச்சது, அதுக்காக நான் படாதபாடு பட்டுப் பணம் சேர்த்தது, கடன் வாங்கினது, ஏமாந்தது எல்லாம் பழைய கதை. இந்த சுகுமாரனுக்கும் நமக்கும் என்ன ஒப்பந்தம்கிறதுதான் இப்ப முக்கியம். சுந்தரியின் மேலே நாலு லட்சம் கடன் இருந்தது. அதை எப்பிடியெப்பிடியோ சமாளிச்சி இருக்கலாம். ஆனால் இவன் பெரிய இன்டஸ்டிரியலிஸ்ட்; பல தொழில்கள்லே பணத்தை முடக்கிப் போடக் கூடியவன்; இவனே, தான் இதை ஏத்துண்டு என்னை வர்க்கிங் பார்ட்னரா வச்சுண்டுடறதா முதல்லே சொன்னான். அப்புறம் நான்தான், 'இந்த வம்பே வேண்டாம். நீங்களே முதலாளியா இருங்கோ. நான் எடிட்டரா இருந்துண்டு சம்பளம் வாங்கிண்டுடறேன்'னேன். என்னை ஒண்ணும் அவன் சம்பளக்காரனா நடத்தலே. நான்தான் அதுக்கு சம பாத்யதை உடையவன்கிற ஹோதாவிலே எல்லாரும் நினைக்கும்படியாத்தான் வச்சிருக்கான். ஒரு தலையீடும் கிடையாது. ஆனாலும்–எங்கே உறவு இருக்கோ அங்கே உத்தியோகம் பாக்கறது நன்னாருக்காது. என்ன இருந்தாலும் அவன் ஒரு முதலாளிதானே?....

"இந்த யோசனை முன்னே இருந்திருந்தா உத்தியோகம் பாக்கற இடத்துலே உறவு வச்சுண்டுடாமல் இருந்திருக்கலாமே..." என்றாள் அம்மா.

"அறிவு கெட்ட காரியம்தான். செஞ்சுட்டேன்...அதுக்காக இப்ப வந்த அறிவை விட்டுடணுமோ?" என்று அப்பா அம்மாவிடம் சத்தமாகக் கேட்டார்.

"இதோ பாருங்கோ...எனக்கு என்ன போச்சு? உங்களுக்கு எது சரியோ, உத்தமமோ, அதுவே நேக்கும் சரி, நேக்கும் உத்தமம்னு இத்தனை வருஷமா வாழ்ந்தாச்சு... நீங்க எதையும் யோசிச்சு செய்வேளே-இப்ப ஒண்ணொண்ணும் செஞ்சுட்டப்பறம் யோசிக்கறேளேன்னேன்...இனிமே நமக்கென்ன, பேசாமல் ஆத்தோட இருங்கோ, போறும் இந்த அலைச்சலும் அங்கலாய்ப்பும்!" என்று அம்மா அவரை சமாதானப்படுத்தினாள்.

சீதா அவர்களின் சச்சரவையும் சமாதானத்தையும் பார்த்து ரசித்தாள்.

'இந்த அம்மாவும் அப்பாவும் எவ்வளவு அன்யோன்யமான நண்பர்கள்! கணவன்-மனைவி என்பதற்கும் மேலாக அதுவும் சேர்ந்த இந்த அத்யந்த நட்பு எல்லாருக்கும் அமையுமோ! இவர்கள் இருவரும் இவர்கள் பெற்ற குழந்தைகளை விடவும் தம்மளவில் ஒருவருக்கொருவர் குழந்தைகளாகவே இருப்பதற்குக் காரணம்- இவர்கள் குழந்தைப் பருவத்திலேயே கணவன் மனைவியாகி விட்டதனால் தானோ? சண்டையும் சச்சரவும் எல்லாமே விளையாட்டாகவே இருக்கிறது இவர்களிடம்! ஆனால் அந்த விளையாட்டெல்லாம் இந்தக் காலத்துக் குழந்தைகளிடம் நடக்காதே!' என்று யோசித்த சீதா, இது தனது ஆராய்ச்சிப் படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒன்று என்று மனத்துள் குறித்துக் கொண்டாள்.

அம்மா அங்கிருந்து நகர்ந்ததும் அவள் பக்கத்தில் இல்லை என்பதை இருபுறமும் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்டபின் அப்பா குரலைத் தாழ்த்திக் கொண்டு மகளிடம் சொன்னார்:

"சீதா...உன்னோட நிலைமையும் எனக்கு நன்னாப் புரியறது. நான் உனக்கு ஒண்ணும் புத்தி சொல்லப் போற

தில்லே...வேண்டாத பந்தங்கள்னு அறிவுக்குத் தெரிஞ்சப் பறம் அதை வெட்டிப் போட்டுடறதுதான் விவேகம். ஹிந்து மாரேஜ் ஆக்ட் கொஞ்சம் சிக்கலானது தான். என்ன, இன்னும் கொஞ்சம் 'டைம்' ஆகணும்பான். நான் யாராவது ஒரு வக்கீலைக் கலந்து பேசட்டுமா? நீ தயாரா விவாகரத்துக்கு? சொல்லு 'சீதா, என்னைக் கேட்டால் அதுதான் சரின்னு சொல்லுவேன்...என்ன?'' என்று சீதாவின் தோளை உலுப்பினார் அப்பா.

சீதா குனிந்த தலையுடன் கீழுதட்டைக் கடித்த வண்ணம் தர்ம சங்கடத்தில் சிக்கியவளாய் யோசித்தாள்.

"நோ" என்று ஒரு நாள்–அந்தத் தேனிலவுப் பயணத் தில், மைசூரில், அந்த அரண்மனையின் சுவர்களில் மோதி எதிரொலிக்கும்படி அலறினானே சுகுமாரன், அந்தக் குரலை இப்போது அப்படியே மீண்டும் கேட்டாள் சீதா:

"சீதா அது மட்டும் முடியாது. ப்ளீஸ், என்னாலே அதைச் சகிக்க முடியாது. நெவர்...நெவர்"...

## 35

அப்பா சீதாவைத் தனியே மாடிக்கு அழைத்துச் சென்று வெகு நேரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவளிடம் பேசினார். அவளது மௌனத்தைக் கண்டு நமது பெண் களுக்கே உரிய மரபு வழிவந்த கூச்சத்தினால் விவாக பந்தத்தை ரத்து செய்துவிட அவள் தயக்கம் காட்டுகிறாள் என்று எண்ணிய சுந்தரசர்மா விவாகரத்து பற்றித் தமது நவீன கருத்துக்களையெல்லாம் அவளிடம் விளக்கினார். அவளது வாழ்க்கை தனது அறியாமையினால் பாழ்பட்டு விட்டதை அவளிடமே கூறிக் கண்ணீர் சிந்தினார். அப்பா வின் வருத்தம் அவளுக்குப் புரியக்கூடியதாக இருந்தாலும்

இப்போது இவ்வளவுக்கும் பிறகு பொருத்தமாயில்லை. அவளுக்குச் சிரிப்புக்கூட வந்தது. ஆனால் சிரிக்கவில்லை.

கடைசியில் மிகவும் லேசாக மனத்தை வைத்துக் கொண்டு அப்பாவிடம் கேட்டாள் சீதா:

''அப்பா-நம்ம இந்து திருமணச் சட்டப்படி, ஸ்பெஷல் மாரேஜ் ஆக்ட்படி இருக்கிற நியாயமெல்லாம் கிடக்கட்டும். விவாகரத்துபோல ஃபிரண்ட்ஷிப்பை ரத்து செய்து கொள்றது நியாயமாகுமா? அவர் எனக்கு நண்பர் மாதிரி, ஜஸ்ட் ஏ ஃபிரண்ட்!"

"ஆனால்...அவன் ஒரு நல்ல நண்பன் இல்லே... என்று கடுகடுப்புடன் சொன்னார் சர்மா. சீதா இப்போது அப்பாவின் இந்தக் கடுகடுப்பைக் கண்டு மணிகள் குலுங்குவதுபோல் சிரித்தாள்.

"நல்ல நண்பனாவது கெட்ட நண்பனாவது? நட்பு யாரோடும் யாருக்கும் ஏற்பட்டுவிடும். ஒருவர் நல்லவராக இருப்பது, கெட்டவராக இருப்பது அவரவர் சொந்த விஷயம். அல்லது சமூக விஷயம். எத்தகைய கொடிய வனும், சமூக விரோதியும் கூட ஒரு மனிதன் என்கிற முறையில் மிக உத்தமமான ஒருவருக்கு உற்ற நண்பராக இருக்க முடியும்; இருக்கலாம்...அப்படியொருவகை பந்தமற்ற நட்பை நான் சுகுமாரனோடு ஏற்படுத்திக் கொண்டுவிட்டேன்; ஏற்பட்டு விட்டது"-அப்பாவைப் பார்த்துச் சிரித்தபின் அவளுள் ஏற்பட்ட சிந்தனை மிகவும் தெளிவாய் இருந்தது.

"பிரச்னை ஏதும் இல்லாதபோது பிரச்னைக்குரிய விவாகரத்து பற்றி நாம் பேசவேண்டாமே! எனக்கு அப்படி ஏதாவது பிரச்னை ஏற்பட்டு உதவி வேணும்னா பெத்தவாளான உங்களைவிட்டு நான் யாரிடம் போவேன்?... நான் சந்தோஷமா இருக்கேன்...நீங்க என்னைப்பத்தின கவலையை விடுங்கோ'' என்று அப்பாவுக்குத் தைரியம் சொன்னாள்.

அப்போது கீழேயிருந்து டெலிபோன் மணி ஒலிக்கிற ஓசை கேட்டது, சீதா மாடிப்படிகளில் இறங்கி ஓடி வந்தாள்.

டெலிபோனில் சுகுமாரன் பேசினான்.

"சீதா நீயா? புறப்பட்டிருப்பியோன்னு நினைச்சேன்...

"அப்பாவோட பேசிண்டிருந்தேன். இதோ புறப்படப் போறேன்" என்று இடது கையிலிருந்த ரிஸீவரை வலது கைக்கு மாற்றிக்கொண்டு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

"என்ன சொல்றார் அப்பா?

"இதோ வரார். நீங்களே பேசுங்கோ.... என்று அருகில் வந்து நின்ற சுந்தர சர்மாவிடம் ரிஸீவரைத் தந்தாள் சீதா.

"நமஸ்காரம்...

"நமஸ்காரம்...

"இன்னக்கி நம்ப 'மந்த்லி மீட்டிங்' இருக்கே... வாங்கோ... கார் வரும். வந்தால் எல்லாம் நேர்லே பேசி முடிவு பண்ணுவோமே! ஓ கே...பிளீஸ்...

**சு**ந்தரி பத்திரிகை மாடியில் உள்ள அந்தப் பெரிய ஹால் 'கான்ஃபரன்ஸ் ஹால்' என்று அழைக்கப்பட்டது. சுவர்களும், 'ஸீலிங்'கும் குளுகுளுவென்று வெளிர் நீலநிறத்தில், ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அந்த ஹாலின் நடுவில் நீளமான பெரிய மேஜை. அதன் இரு மருங்கிலும் ஒரு வரிசையில் பத்துப்பேர் அமர்வதற்கான பளபளப்பான குஷன் நாற்காலிகள். விவாதத்தின் போது உடனுக்குடன் வேண்டியவற்றைக் கொண்டுவரப் பணியாளர்கள், பத்திரிகையின் நிர்வாக அலுவலர்கள், ஆசிரியர் குழுவினர், ஓவியர்கள், அச்சகம் சம்பந்தப்பட்டவர்கள்

எல்லாரும் மாதாந்திரக் கூட்டம் தொடங்கும் நேரத்தைப் பார்த்துக் காத்திருந்தனர்.

சுந்தர சர்மாவும் சுகுமாரனும் வரவேண்டும். இரண்டு மணியாக இன்னும் பத்து நிமிஷம் இருக்கிறது.

சுகுமாரன் தனது தனியறையில் இன்றைய கூட்டத்திற்கான விஷயங்கள் உள்ள ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஃபைலில் மேலாக-முதல் விஷயமாக, சுந்தர சர்மாவின் ராஜினாமா கடிதமிருந்தது. அப்புறம் மாதாந்திர ரிப்போர்ட், காகித விலையேற்றம் காரணமாகப் பத்திரிகையின் விலையைக் கூட்ட வேண்டும் என்கிற மானேஜரின் யோசனை இத்தியாதி விஷயங்கள்...

வழக்கமாக சுந்தரி பத்திரிகையின் மாதாந்திரக் கூட்டங்களின் போது சுகுமாரன் மானேஜிங் டைரக்டர் ஸ்தானத்தில் பிரசன்னமாகிப் பிரதானமாய் வீற்றிருப்பான். அங்கு நடக்கிற பலவிவாதங்கள் அவனுக்குப் புரிவதுகூட இல்லை. ஏதோ, பிரச்னைக்கு ஆழ்ந்த தீர்வு காண யோசித்துக் கொண்டிருப்பவன் போலக் கண்களை மூடிப் புருவத்தைத் தேய்த்தவாறு சில சமயங்களில் கவனிப்பான். அனேகமாக வேறு ஏதாவது அவன் மனத்தில் ஓடிக் கொண்டிருக்கும்.

எல்லாரும் பேசுவார்கள்; விவாதிப்பார்கள். எல்லாருடைய பேச்சுக்கும் விவாதத்துக்கும் தகுந்த பதில்களை சர்மாதான் அளிப்பார். தீர்மானமும் முடிவும் அவர் செய்வதையே இறுதியானதாக சுகுமாரன் அங்கீகரிப்பான். இந்தத் துறையில் எல்லா அனுபவமும் உடையவர் அவர்தான். அவரை நம்பி, அவருக்காகவே இந்தப் பத்திரிகையை அவன் ஏற்றுக் கொண்டான். இப்போது அவரை அனுப்பிவிட்டு இதை எப்படி நடத்துவது? சுந்தரியையே நிறுத்தி விடலாமா? என்றெல்லாம் யோசித்தான் சுகுமாரன்.

அறைக்கதவு லேசாகத் தட்டப்பட்டது சுந்தரசர்மா கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

"வாங்கோ...இன்னும் பத்து நிமிஷம் இருக்கு- மீட்டிங்குக்கு. அதுக்கு முன்னே தனியா நாம் பேச வேணுமேன்னு நினைச்சுண்டிருந்தேன்-உக்காருங்கோ சார்" என்று அவரை வரவேற்றான் சுகுமாரன். முகத்தைத் தூக்கிக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தார் சர்மா. சுகுமாரனும் தர்மசங்கடமான மௌனத்தில் ஓரிருமுறை தனது தாழ்ந்த விழிகளை உயர்த்தி அவரைப் பார்த்தான்.

"ஸார்...ஐயாம் வெரி சாரி...அன்னிக்குக் குடிவெறியிலே, எனக்கிருந்த மனக்குழப்பத்திலே ஏதாவது உளறி இருப்பேன். நீங்கதானே சொல்லுவேள்- 'அந்த நேரத்தில் நடக்கற எதையும் அப்புறம் ஞாபகப்படுத்திக்கறது நாகரிகமில்லே'ன்னு...உங்க மனசை வருத்தப்படுத்தினதுக்கு என்னை நீங்க மன்னிக்கணும்...அதுக்காகப் போயி ராஜினாமா செய்யறதெல்லாம் நன்னாயில்லே. உங்க ராஜினாமாவை நீங்க வாபஸ் வாங்கிண்டுடணும்...எனக்கு இருக்கிற சுமைகளும் பிரச்னையும் போறும்...பிளீஸ் ஹெல்ப் மீ" என்று ஆங்கிலத்தில் அவரிடம் இணக்கமாகப் பேசினான் சுகுமாரன்.

"நான்-நீங்க சொன்ன மாதிரி அன்னிக்கு நீங்க என்னமோ பேசிட்டேள்ன்னு ஒரு கோவத்திலேதான் ராஜினாமா கடுதாசி எழுதினேன்...அப்புறம் யோசிச்சுப் பார்த்ததிலே இதையே ரொம்ப சுமுகமா, நல்லபடியா, உங்களுக்கும் சிரமமில்லாமல் செய்துண்டு-நான் ரிடையர் ஆயிடறதுதான் நல்லதுன்னு தோணறது. எனக்கு ஒண்ணும் அந்தக் கடுதாசியை வாபஸ் பெத்துக்கறதிலே கௌரவப் பிரச்னை ஏதும் கிடையாது. நீங்களே அதுக்குத் தகுந்த ஏற்பாடு பண்ணி என்னை விடுவிக்கணும்னு கேட்டுக்கறேன்" என்றார் சர்மா.

"சரி. இப்ப உங்க ராஜினாமாவை நான் ஏத்துண்ட தாகவே இருக்கட்டும். உங்க இடத்துக்குத் தகுதியான இன்னொருத்தரை நீங்களே பார்த்து நியமிக்கிற வரைக்கும் 'ஆக்டிங் எடிட்ட'ரா இருங்கோ. அப்புறம்? சீக்கிரமே ஒரு புது எடிட்டரை அப்பாய்ன்ட் செய்றதாக இன்னிக்கு மீட்டிங்லே முடிவு பண்ணிடலாம்... என்று கண்களை மூடிமூடி யோசனை செய்த பின்னர் சொன்னான் சுகுமாரன்.

சுந்தரசர்மா அதற்கு மறுப்பேதும் சொல்லவில்லை.

"மணி இரண்டாகிறது. கான்ஃபரன்ஸ் ஹாலுக்குப் போவோம்" என்று எழுந்தான் சுகுமாரன். அவனுக்கு அறைக் கதவைத் திறந்து, அவன் வெளி வந்தவுடன் அவனைத் தொடர்ந்து நடந்தார் சுந்தரம். ஆபீஸ் பியூன் ஒருவன் சுகுமாரனின் ஃபைலை எடுத்துக் கொண்டு அவர் களுக்கு முன்னால் ஓடினான்.

பட்டண்ணா, சோணா மற்றும் பல உதவி ஆசிரியர்கள் பரிவாரங்களுடன் கான்ஃபரன்ஸ் ஹால் நிறைந்திருந்தது. சுகுமாரனோடு சுந்தரசர்மா வருவதைப் பார்த்ததும் "மாமனாரும் மருமகனும் ராசியாயிட்டாப் பிலே இருக்கே" என்று 'சோணா'வின் காதில் முனகினார் பட்டண்ணா.

சுகுமாரன் வந்ததும் வழக்கம் போல் அனைவருக்கும் மேஜையின் மேல் காபி பரிமாறப்பட்டது. விவாதங்களின் போது இடையிடையே காபியும், வெற்றிலை சீவலும், சிகரெட்டும் அங்கே வழங்கப்படும். கூட்ட இறுதியில் இனிப்பு கார வகைகளுடன் ஒரு டீ பார்ட்டியும் நடக்கும்,

காபியை ஒரு மிடறு பருகியபின் ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு முன்னாலிருந்த ஃபைலைப் புரட்டி,

"எடிட்டரின் ராஜினாமா குறித்து" என்று அறிவித் தான் சுகுமாரன். எல்லாருமே அவனது முடிவைக் கேட்க

ஆவலாயிருந்தனர். அதிலும் பட்டண்ணா தமது படபடப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள் வேண்டியிருந்தது.

"மிஸ்டர் சுந்தரசர்மாவுக்கு ஓய்வு தரணும்கிறதிலே நம்ம யாருக்கும் இரண்டு அபிப்ராயம் இருக்க முடியாது. அதுக்காக அவர் திடீர்னு ராஜினாமா செய்ய வேண்டியது அவசியமில்லை. மிக சீக்கிரம் வேறு தகுதியும் திறமையும் உடைய ஒரு புதிய ஆசிரியரை நியமிக்கிறவரை மிஸ்டர் சுந்தரசர்மா ஆக்டிங் எடிட்டரா இருக்கவேணும்னு கேட்டுக்கறேன்–என்ன ஸார்? நீங்க என்ன சொல்றேள்?" என்று எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் சொல்லி சர்மாவிடம் அவர் கருத்தென்ன என்றறிய தமிழில் கேட்டு முடித்தான் சுகுமாரன்.

"நீங்க சொல்றபடியே செய்யலாம். அந்தப் புது எடிட்டர் யார்னும் இப்பவே முடிவுபண்ணிப்பிடலாமே... என்று பட்டண்ணாவை மனத்தில் நினைத்துக் கொண்டு சொன்னார் சர்மா.

கையிலிருந்த பென்சிலை அகன்ற நெற்றியில் வைத்து உருட்டியவாறு யோசித்துக் கொண்டிருந்த சுகுமாரனின் நினைவில் ஒரு பிரகாசமும் நெற்றியில் அதன் பிரதிபலிப்பும் பளீரிடக் கண்களைத் திறந்து ஒரு மலர்ச்சியுடன் சொன்னான் சுகுமாரன்.

"சுந்தரியின் புது எடிட்டர் யார்னு தீர்மானம் ஆயிடுத்து ஆனால்...அதில் ஒரு சஸ்பென்ஸ்? அது அடுத்த கூட்டத்திலே விளக்கப்படும். அடுத்த விஷயம்?' என்று ஃபைலைப் புரட்டினான் சுகுமாரன்.

சுந்தரசர்மாவுக்கு அந்த சஸ்பென்ஸில் ஒளிந்திருக்கும் பெயர் எதுவாக இருக்கும் என்று அறிந்து கொள்ள ஆர்வம் அதிகமாயிற்று. எனினும் தனக்கு விடுதலை நிச்சயம் என்பதில் நிம்மதியும் பிறந்தது.

## 36

மரியமும் சீதாவும் ராமதாஸின் வீட்டுக்கு வந்த போது, பிளஸ் ஒன் எழுதப்போகிற தன் தங்கை கீதாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந் தான் ராமதாஸ். சற்று முன்புதான் ஆஞ்சநேய பூஜை முடித்திருந்தான் போலும். நெற்றியில் சிந்தூரமும் காதில் ஒரு பூவும் அணிந்திருந்த அவனது தோற்றம் மாரியம்மாளுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. ராமதாஸ் இவர்கள் இருவரையும் கண்டு வெள்ளைச் சிரிப்புடன் வணக்கம் சொல்லி வரவேற்றான். இவர்கள் வந்ததைச் சாக்காகக் கொண்டு, புத்தகங்களை எடுத்து வைத்துவிட்டு எழுந்த கீதாவை உட்கார வைத்து, "நீ படியேன்... எங்களுக்காகப் பாதியிலே பாடத்தை நிறுத்திட்டேளே!" என்று ராமதாஸிடம் கேட்டாள் சீதா.

"ம்...அவளுக்கு ஒண்ணும் சொல்லிக் கொடுக்க வேண்டாம். சும்மா எனக்கொரு இன்ட்ரஸ்ட்... உங்களுக்குத் தோணுமா, வாழ்க்கை முழுவதும் மாணவர் களாகவே நாம் இருந்திருக்கப் படாதான்னு?" என்று தனது இளமைக் கால மாணவப் பருவத்தில் மனம் ஆழ்ந்து கண்களைச் செருகிக் கொண்டு கேட்டான் ராமதாஸ்.

"அது, அவர்கள் எப்படிப்பட்ட பிரில்லியன்ட் மாணவர்கள் என்பதைப் பொறுத்தது" என்றாள் மரியம்.

"ஏன், நாமெல்லாம் பிரில்லியன்ட் ஸ்டூடண்ட்ஸ் தானே? எங்க கீதா கிளாஸ்லே எப்பவுமே முதல் மாணவி" என்று பெருமையாகத் தங்கையைப் புகழ்ந்தான் ராமதாஸ்.

அந்தப் பதினைந்து வயதுச் சிறுமியின் முகத்திலும், கழுத்து நரம்புகளிலும் நாணம் சிவந்து படர்ந்ததை சீதாவால் பார்க்க முடிந்தது. சீதா அவளையே வைத்த கண் வாங்காமல் ரசித்துப் பார்த்தாள். இந்த கீதாவைப்

பார்க்கிறபோது இந்த வயதில் மாணவியாகத் தான் இருந்ததெல்லாம் நினைவில் ஓடியது.

இங்கு வர நேர்ந்தபோதெல்லாம் கீதாவைச் சீதா பார்த்திருக்கிறாள். அநேகமாய் அது கீதா பள்ளிக்கூடம் புறப்படுகிற நேரமாகவோ, அல்லது சீதா ராமதாஸின் வீட்டிலிருந்து புறப்படுகையில், கீதா பள்ளிக்கூடத்தி லிருந்து திரும்புகிற நேரமாகவோ இருக்கும். கண்களும் மனமும் கரங்களும் குவிந்த ஒரு வணக்கம், 'கோடி செம்பொன் கொட்டியது போன்ற' குறுநகையுடன் சிந்தும் சில சொற்கள்-இவைதான் கீதா என்றறிந்திருந்தனர் சீதாவும் மரியமும்.

இவள் வகுப்பில் எப்போதுமே முதல் மாணவி என்ற விஷயத்தை அறிந்தபோது "அண்ணனைப் பாராட்டுவதா, தங்கையைப் பாராட்டுவதா அதற்கு?" என்று கேட்டாள் மரியம்.

"அண்ணனைத்தான்!" என்று மெல்லிய குரலில் கீதா சொன்னதற்காக மரியம் கைதட்டி "எவ்வளவு நல்ல அன்புத் தங்கை!" என்று புகழ்ந்து சொன்னாள். சீதாவின் மனம் தனக்கு ஒரு அண்ணா இல்லாமைக்காக உள்ளூர ஏக்கப் பெருமூச்செறிந்தது. ஆனாலும் இந்த ராமதாஸை, கீதாவை, மரியத்தை, சுசீலாவை, காத்ரீனாவை உடன்பிறவாச் சகோதர சகோதரிகளாகப் பெற்றிருப்பதை நினைத்து கண்களில் ஒரு பிரகாசத்துடன், "நீங்களும் மாணவப் பருவத்தில் எல்லா வகுப்பிலும் முதல் மாணவராயிருந்தீங்களா?" என்று ராமதாஸிடம் கேட்டாள் சீதா.

"ம்...அப்படியொண்ணுமில்லே-நான் நடுத்தர மாணவன்தான்...வீட்டிலே பாடம் படிக்க நேரம் இருக்காது. வகுப்பிலே பாடத்தைக் கவனிக்க முடியாமல், வேலை செய்த களைப்பிலேயே தூக்கம் வரும்...இந்த லட்சணத்தில் முதல் மாணவனா வேற ஆக முடியுமோ?... ஃபெயில் ஆனதில்லே! நான் ரொம்பக் குறைஞ்ச வயசிலே

எஸ்.எஸ்.எல்.ஸிக்கு வந்துட்டேன். ஒரு வருஷம் பரீட்சை எழுதாமல் வீட்டிலே இருந்தேன். சாயங்காலத்திலே பீச்சிலே சுண்டல், முறுக்கு விக்கறது...ஆனாலும் அந்த மாணவப் பருவம் ரொம்ப நன்னாத்தான் இருந்தது... ஆமாம். நீங்க எத்தனை வயசிலே எஸ்.எஸ்.எல்.ஸி பாஸ் பண்ணினேள்?'' என்று இதுவரை பேசாமலிருந்த மரியத்தைக் கேட்டான் ராமதாஸ்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுமுன் எதையோ நினைத்து வாயைப் பொத்திக்கொண்டு அண்ணாந்து கலகலத்துச் சிரித்தாள் மரியம். அந்தச் சிரிப்பைக் கண்டு அவள் சொல்லப் போவதை ஆர்வத்துடன் எதிர் பார்த்தாள் கீதா.

"நான் என்னோட பதினைந்தாவது வயசு வரைக்கும் எங்க ஊர்லே மாடு மேய்ச்சிக்கிட்டு இருந்தேன்... என்றாள் மரியம்.

''அப்படியா, ம்...அப்புறம்?'' என்று வடிவாய் அமைந்த தனது மோவாயை முன்னால் ஏந்தியவாறு கேட்டாள் கீதா.

''அப்புறம்...பதினைந்தாவது வயசிலே அஞ்சாம் வகுப்பிலே சேர்ந்து படிக்க ஆரம்பிச்சேன். நல்ல வேளையா ஃபெயில் ஆகாமல் ஒவ்வொரு வருஷமும் தப்பிச்சேன். ஆமாம், ஃபெயில் ஆனாக்கா மறுபடியும் மாடு மேய்க்கவோ, சாணி பொறுக்கவோ போக வேண்டியதுதான்னு சொல்லியிருந்தாங்களே... எப்படியோ படாதபாடு பட்டுப் படிச்சி வெளியே வந்தால் போறும்னு ஆயிடுச்சு. அதனாலேதான் சொல்றேன். அதெல்லாம் மாணவர்களைப் பொறுத்து அமையுதுன்னு. மகிழ்ச்சிகர மான பருவம்னு நெஜம்மா சொல்றதுன்னா-எல்லாரும் பயமுறுத்தினாங்களே, அந்த மாடு மேச்ச பருவம்தான்னு இப்ப தோணுது என் அனுபவத்திலே'' என்றாள் மரியம்.

கீதாவுக்கு ஏனோ கண்கள் கலங்கின. அதைக் கண்ட சீதா சூழ்நிலையைக் கலகலப்பாக்குவதற்காக மரியத்திடம்

"ஏன்? இப்பகூட நீ போகலாமே, மாடு மேய்க்க, சாணி பொறுக்க? யார் தடுக்கறதாம்?" என்று வம்புக்காகக் கேட்டாள்.

"முடியாது சீதா: நம்ம் வசதிக்காக, அல்லது வளர்ச்சிக்காக நாமே ஒரு வாழ்க்கையை இழந்துட்டோமே யானால் மறுபடியும் அது கிடைக்காது சீதா. இப்பவும் நான் போயி மாடு மேய்க்கலாம்...ஆனால் அந்த மகிழ்ச்சி கிட்டாது இப்போ" என்று பெருமூச்சுடன் சொன்னாள் மரியம். 'அது ஏன் அப்படி?' என்று சீதாவுக்குப் புரியவில்லை.

"இவளுக்கு மாடுமேய்க்கப் போக முடியவில்லையே என்று எவ்வளவு ஏக்கம்!" என்று மரியத்தைப் பரிகசித்துச் சிரித்தாள் சீதா.

இவ்வளவு நேரமாக உள்ளே கைவேலையாய் இருந்த அம்புஜம் இவர்கள் வந்திருப்பதை அறிந்து "வாங்கோ" என்ற குரலுடன் வந்து சீதாவை அழைத்துக் கொண்டு போனாள்.

இவர்கள் மூவரும் சம்பாஷணையில் ஆழ்ந்து இருந்தனர். அப்போது அங்கே திடீரென்று அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் பிரசன்னமானார். அவரைக் கண்டதும் ராமதாஸ் எழுந்து நின்று, "வாங்கோ அப்பா" என்றான்.

சீதாவும் மரியமும், வந்திருப்பவர் ராமதாஸின் தந்தை என்று ஒரு நொடியில் புரிந்து கொண்டு அவருக்கு வணக்கம் செய்தனர்.

"இவா ரெண்டு பேரும் என் ஃபிரண்ட்ஸ்... மிஸ் மரியம், மிஸஸ் சீதா" என்றான் ராமதாஸ்.

"எனக்கு மாருதின்னு பேரு. 'ஐயர், சாஸ்திரி', பட்டமெல்லாம் ரொம்ப நாளைக்கு மின்னயே விட்டுட்டேன். எனக்குப் பூணூல் கிடையாது. கடவுள் நம்பிக்கை கிடையாது" என்று தாமே பேசுவதுபோல்

சொல்லிக் கொண்டு இவர்களோடு உட்கார்ந்து கொண்டார்.

கையில் ஒரு தோல் பை நிறைய கனமாக என்னமோ வைத்திருந்தார். தொளதொளத்த கதர் சட்டையும், முழங்காலுக்கு மேலேறிய வேட்டியும் அவரை மிகவும் எளிமையானவராய்க் காட்டின. அந்தப் பையைப் பிரித்து அதிலிருந்த புத்தகங்களை இவர்களுக்குக் காட்டினார்.

எல்லாம் சோவியத் பிரசுரங்கள்.

"ஒரு காலத்திலே மாருதி கேப்னு கேள்விப்பட்டிருக் கேளோ-பைகிராஃப்ட்ஸ் ரோடிலே...அது நம்மதுதான். அப்புறம் அங்கேயே சரக்கு மாஸ்டரா ஆகும்படியா ஆயிடுத்து. இப்ப ஓட்டல் தொழிற்சங்க வேலை. இந்தப் புத்தகங்களைப் பரப்பறது ஒரு லட்சியம்...சும்மா 'ரஷ்யாக்காரன் புத்தகம்'னு சொல்லிவிட்டாப் போறாது. நம்ம பாஷையை அவன் படிச்சு, நம்ம பாஷையிலே உலக இலக்கியங்கள் என்ன, விஞ்ஞானப் புத்தகங்கள் என்ன...விலையைப் பாருங்கோ...எண்பது காசுக்குக் காலிக்கோ பைண்டிங்..இந்த மாதிரி முதல்லே புஸ்தகம் போடச் சொல்லுங்கோ பார்ப்போம்..." கனத்த குரலில் பொறிந்து தள்ளிக் கொண்டே பல புத்தகங்களை எடுத்து இவர்களின் முன் வைத்தார்.

டால்ஸ்டாயின் கதைத்தொகுதி. அதில் 'க்ருட்ஸர் ஸொனாட்டா' என்ற கதை இருக்கிறது. யாரோ சொல்லி எப்போதோ படிக்க எண்ணியிருந்தாள் சீதா. அந்த ஆங்கிலப் பதிப்பு ஒன்று, மாதர்கள் பற்றி லெனின்: கலையும் வாழ்க்கையும்-பிளக்கனோவ் எழுதியது-தமிழ் மொழி பெயர்ப்பு ஆகிய மூன்று புத்தகங்களை சீதா அவற்றிலிருந்து எடுத்துக் கொண்டு அதற்கான பணத்தைத் தந்தாள்.

உள்ளிருந்து வந்த கீதா அப்பாவைப் பார்த்துவிட்டு "அக்கா, அப்பா வந்திருக்கா" என்று சந்தோஷத்துடன் கூவினாள்.

"இரு. இதோ நானே வரேன்" என்று எழுந்து உள்ளே போனார் அப்பா. கீதா பின்னாலேயே ஓடினாள்.

அப்பா போன திசையைப் பார்த்துக்கொண்டே ஒரு புன்னகையுடன் சொன்னான் ராமதாஸ்:

"இப்படித்தான் காற்று மாதிரி வருவார்-போவார்...மாருதி சாஸ்திரினு ரொம்பப் பொருத்தமான பேர்...ஊருக்கு உழைப்பதே யோகம் அவருக்கு."

"இதோ பார் அம்புஜம், நேக்கு காபி கீபி ஒண்ணும் வேண்டாம்...இப்ப பத்துமணிக்கு ஒரு ஜெனரல்பாடி கூட்டம்...பக்கத்துத் தெருவிலே; இப்பிடி வந்து தலையைக் காட்டிட்டு ஓடிடலாம்னு வந்தேன்..." என்று அப்பா அம்புஜத்திடம் சொல்லிக் கொண்டிருப்பது வாசல் வரை கேட்டது.

"ஒரு முக்கியமான விஷயம்" என்று ஆரம்பித்த மரியம், சீதாவிடம் திரும்பி "ஏன், நீயே சொல்லேன்" என்றாள்.

"எனக்குப் பொறந்தநாள் வரப்போறது. அன்னிக்கு எங்காத்திலே ஒரு விருந்து. நண்பர்கள் எல்லாம் வரணுமாம்."

"பேஷ் பேஷ்! முன்கூட்டியே பிறந்த நாள் வாழ்த்துக்கள்....என்னிக்கு வரணும்?' என்று உற்சாகமாய் கேட்டான் ரர்மதாஸ்.

"அதுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கு. விஷயம் என்னன்னா நெறைய் ஃபிரண்ட்ஸ் வேணும். நான் எங்க ஹாஸ்டல்லே இருக்கிறவங்களையெல்லாம் அழைச்சிருக்கேன். நீங்க உங்க ஃபிரண்ட்ஸ் எல்லாரையும் எங்க சார்பிலே அழைக்கணும்... என்றாள் மரியம்.

"வாட் இஸ் தி ஐடியா... என்று தாடியைச் சொறிந்தான் ராமதாஸ்.

"மிஸ்டர் சுகுமாரன், சீதாவுக்குக் கல்யாணமாகி வருகிற முதல் பிறந்தநாளை சீதாவின் நண்பர்கள்

எல்லாருடனும் பெரிசாக கொண்டாட ஆசைப்படறார். அவளுக்கு அவ்வளவு நிறைய நண்பர்கள் ஏது? நம்மாலே முடிஞ்ச உதவி செய்வோமே. விருந்துதானே?" என்று விளக்கம் கூறினாள் மரியம்.

"அதற்கென்ன? எங்க ஓட்டல்லே இருக்கிற வானரப் படைகளையெல்லாம் அழைச்சுட்டாப் போச்சு. வேறு காலேஜ் ஃபிரண்ட்ஸும் இருக்கா. எல்லாரையும் சந்திக்க இது ஒரு சான்ஸ்...இல்லையா?" என்றான் ராமதாஸ்.

சுகுமாரன் வீட்டு மேல்மாடியில் பலதரப்பட்ட இளைஞர்கள், நிலவொளிபோல் குளுமை தரும்படி அலங்காரம் செய்யப்பட்ட சரம் சரமான விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் கும்பல் கும்பல்களாய் நின்று சிரித்துக் கலகலத்து உல்லாசமாய் சீதாவின் பிறந்தநாளைக் கொண்டாடினர்.

எங்கிருந்து வருகுதோ என்று எல்லாரும் திரும்பித் திரும்பித் தேடும்படியாக அற்புதமான வயலின் இசை காற்றில் அலையலையாய் மிதந்தது.

சிலர் மதுக்கிண்ணங்களையும், சிலர் பழரசக் கிண்ணங்களையும் ஏந்தி நின்றனர். வெள்ளுடை தரித்த பணியாளர் கைகளில் ஏந்திய 'டிரே'களுடன் விருந்தினர்களுக்குக் கிண்ணங்களைத் தந்து உபசரித்த வண்ணம் கும்பலின் ஊடே புகுந்து திரிந்தனர். அந்த வெய்ட்டர்களில் பலர் ராமதாஸின் நண்பர்கள். ராமதாஸ் விசேஷமாக இன்று மேனாட்டுப் பாணியில் சூட் அணிந்து கொண்டிருந்தான். அவன் கையில் பழரசக் கோப்பை இருந்தது. வெண்ணிற சூட் அணிந்து கையில் மதுக் கோப்பையுடன் அவனை வரவேற்றான் சுகுமாரன். ராமதாஸின் கையில் இருந்த பழரசத்தைப் பார்த்து, "என்ன இது, நீங்கள் மது அருந்தவில்லையா?" என்று வியப்புடன் கேட்டான் சுகுமாரன்.

"இல்லை" என்று புன்னகையுடன் தலையாட்டினான் ராமதாஸ்.

''சீதாவின் நண்பர்களில் குடிப்பவர்கள்கூட இருப்பார்களோ என்று நான் சந்தேகப்பட்டேன்" என்ற சுகுமாரன் அங்கு மதுக்கிண்ணங்களுடன் நின்றிருந்த வேறு சிலரைக் கண்டு திருப்தியானான்.

''நான் என்னோட நண்பர்கள் யாரையும் அழைக்கவே இல்லை. இவர்கள் எல்லாரும் சீதாவின் நண்பர்கள் மட்டுமே என்று யாரிடமோ சுகுமாரன் சொல்லிக் கொண்டிருப்பதை ஒரு கண் சிமிட்டலுடன், மரியமும் ராமதாஸும் ரசித்தனர்.

அந்தக் கும்பலில் ஒருவருக்கொருவர் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று இன்னொருவர் கவனிக்க முடியாதபடி இன்னிசை பொழிந்து கொண்டிருந்தது.

பங்கஜவல்லியம்மாளும் மீனாவும் சேர்ந்துகொண்டு ஒரு மணி நேரத்துக்குமுன்னர் ஆரம்பித்த சீதாவின் அலங்காரம் இன்னும் முடியவில்லை. நகைக் கடை, பட்டுப் புடவைக் கடை இரண்டும் ஒன்றானது போன்ற அறையிலிருந்த தனது தோற்றத்தை நிலைக் கண்ணாடியில் கண்டு தானே மனத்துள் சிரித்துக் கொண்டாள் சீதா.

"ஆச்சா...போறுமா" என்று மீனாவிடம் கேட்டாள் சீதா.

"போறும்டியம்மா, இந்தக் காலத்துப் பொண்கள் நகை போட்டுக்கறதுக்கே கூச்சப்படறாளே... என்று அதிசயித்துக் கொண்டாள் பங்கஜவல்லி. மருமகளின் பிறந்தநாளைக் கொண்டாடுவதில் பங்கஜவல்லியம்மாள் கொஞ்சம் தெம்பும் உற்சாகமுமாய் இருந்தாள். அவள் மனத்துள் 'இந்தக் கொண்டாட்டங்கள், உல்லாசங்கள் மூலமாவது சீதாவுக்கும் தன் மகனுக்கும் மெய்யான உறவு விளையலாகாதா' என்ற விருப்பம் ஒரு பிரார்த்தனை போல் அடிக்கடி ரீங்கரித்தது.

பங்கஜவல்லியம்மாளும் பட்டுப் புடவை உடுத்திக் கொண்டிருந்தாள். அந்தப் பெரிய வீடு முழுதும் ஆடம்பரமில்லாத கல்யாணக்கோலம் பூண்டிருந்தது.

எல்லாரும் கூடியிருந்த மேல் மாடிக்கு சீதா ஒரு ராணி போல் வந்து நின்று ஒளி வெள்ளத்தில் ஜொலித்தபோது அனைவரும் அவளுக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூறி, கரவொலி எழுப்பினர்.

மதுக்கிண்ணங்கள் உரசப்பட்டன. அவற்றில் இரண்டு கிண்ணங்களில் ஒன்று சுந்தர சர்மாவுடையது. மற்றொன்று சுகுமாரனுடையது.

சுகுமாரன் சுந்தரசர்மாவின் காதில் ரகசியமாக சொன்னான்:

"சுந்தரி எடிட்டர் யாருங்கிற சஸ்பென்ஸை, டின்னர் டேபிளில் உடைக்கப் போகிறேன். நீங்க அதை ஆமோதிக்கணும்கறதுக்காகத்தான் முன்னாலேயே சொல்றேன். அந்தப் பெயர்: மிஸஸ் சீதா சுகுமாரன்...

## 37

**வி**ருந்து மேஜையின் இருமருங்கிலும் நீளமான வரிசையாக அனைவரும் அமர்ந்திருந்தனர். விருந்தளிப் பவர்கள் என்ற முறையில் சுகுமாரனும் சீதாவும் நடுவில் அமர்ந்திருந்தனர். சுகுமாரனின் வலது பக்கத்தில் சுந்தர சர்மாவும் சீதாவின் பக்கத்தில் திருமதி சுந்தர சர்மாவும் அமர்ந்திருந்தார்கள். லட்சுமி அம்மாளின் பக்கத்தில் இவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்த பங்கஜம்மாள் சாப்பிடும் நேரம் வந்ததும், தனக்கு மருந்து சாப்பிடவும், ஓய்வு கொள்ளவும் நேரமாகிவிட்டது என்று சொல்லி எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு மீனாவின் கைத்தாங்கலுடன் உள்ளே போனாள்.

விருந்து தொடங்குமுன்னர் எழுந்து நின்று "நண்பர்களே" என்று ஆங்கிலத்தில் அழைத்தான்

சுகுமாரன், அந்த அழைப்பைத் தொடர்ந்து நிலவிய அமைதியில் அவர்கள் அனைவரும் தன்னைக் கவனிப்பதை நன்கு பார்த்துக் கொண்ட சுகுமாரன், "சுந்தரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக சீதாவை நியமிக்கிறோம். இளம் தோள்களின் மீது முதிர்ந்த பொறுப்புக்களை சுமத்த நேரம் வந்தாகி விட்டது" என்று சொல்லிப் புன்னகையுடன் பக்கத்திலிருந்த சுந்தர சர்மாவைப் பார்த்தான். அப்போதே விருந்தினர் அனைவரும் கரவொலி செய்தனர். எல்லாரும் ஓய்ந்த பிறகும் மாரியம்மாளும் ராமதாஸும் கைதட்டிக் கொண்டிருப்பதை தூரத்திலிருந்து சீதா கவனித்தாள். அது யார்? ராமதாஸின் இடது பக்கத்தில்-தூய வெள்ளை நிற ஜிப்பாவும், பளீரென்று வகிடு பிரிந்த பெரிய நெற்றிக் கடியில் உள்ளத்தை ஈர்ப்பதை போன்ற பார்வையுடனும்...

சுந்தர சர்மா எழுந்து நின்றார். அவருக்குப் பொதுவாக நாலு வார்த்தை பலர் மத்தியில் பேசுவது என்றாலே நடுக்கமும் உளறலும் ஏற்பட்டுவிடும். இப்போது மதுவின் கிறக்கமும் மகிழ்ச்சிப் பெருக்கும் சேர்ந்து அவர் நாவைப் புரள வொட்டாமல் தடுத்தன. கூப்பிய கரங்களுடன் சற்று நின்று தமிழில் பேசுவதா, ஆங்கிலத்தில் பேசுவதா என்று தடுமாறி, "எனக்கு இரட்டிப்புச் சந்தோஷம்" என்றார். சீதா பொறி கலங்கி அமர்ந்திருந்தாள். சுயநினைவுடன் தான் இவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்தனரா என்று சந்தேகிக்கிறவள் போல் புருவங்கள் நெறிய சர்மாவைப் பார்த்தாள். சுகுமாரன் சீதாவிடம் திரும்பி,

"நீ ஏற்கெனவே என்கிட்ட ஒரு வேலைக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கே....வாய் மூலமாத்தான். ஒரு தகுந்த சந்தர்ப்பம் வரும்போது அது கவனிக்கப்படும்னு சொல்லியிருந்தேன்...இதைவிட நல்ல நேரமும், உனக்கு இதை விடத் தகுதியான நல்ல வேலையும் இருக்கிறதாக எனக்குத் தெரியலே. பிளீஸ் அக்செப்ட் திஸ்" என்று

சீதாவின் காதில் குனிந்து தாழ்ந்த குரலில் அவளை வேண்டினான் சுகுமாரன்.

மாப்பிள்ளையும் பெண்ணும் மிகவும் அன்னியோன்ய மாக ரகசியம் பேசிக் கொள்வதைக் கண்டு மகிழ்ந்து போனாள் லட்சுமி அம்மாள். சீதாவின் காதில் சுகுமாரன் பேசியதை ரசித்தவாறே பங்கஜவல்லியம்மாளைக் கொண்டு விட்டு வந்த மீனா திரும்பி வந்தாள். சுந்தர சர்மாவுக்குச் சுகுமாரனை நினைக்க நினைக்க மனத்துள் பரிதாப உணர்ச்சி மிகுந்தது.

"இவன் எவ்வளவு பெருந்தன்மையானவன். சீதாவை இவன் எவ்வளவு நேசிக்கிறான்" என்று எண்ணியவாறே மகளைப் பார்த்தார். தகர்க்க முடியாத பாறை போல் 'சீ...சீ-பாறை சரியில்லை' என்று நினைத்து தலையை உலுப்பிக் கொண்டார் சர்மா. உருக்க முடியாத தங்கச் சிலை போல் உறுதியாய் உறைந்துவிட்டாற் போலிருந்த சீதாவின் முகத்தை வெறித்துப் பார்த்தார்.

'இவனை ஏன் இவள் கட்டோடு வெறுக்கிறாள்? இவன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதும், புன்னகை செய்வதும், இவன் அம்மா இவளுக்குப் பூட்டிவிட்டிருக் கிறாளே அத்தகைய ஆபரணங்களில் ஒன்றாக இவன் கட்டிய தாலியைச் சுமந்து திரிவதும்-எல்லாம் வெறும் நடிப்பா? பொய்யா? ஏன்? இந்தப் பெண் பொய்யான வாழ்க்கையைப் பொய்யாய், நடிப்பாய் ஆக்கிக் கொண்டிருக்கிறாள்? இது அவலமில்லையோ? பாவம் சுகுமாரன்! இவனைப் போல் எனக்கு ஒரு மகன் இருந்திருந்தால்?.... அவன் என்னதான் கெட்டவனாக இருந்தாலும் -அவனுக்கு ஒருத்தி சீதாவைப் போல் வந்து வாய்த்து இப்படி வதைத்தாளானால் என் மனசு தாங்குமோ? சுகுமாரன் இவளிடம் இவ்வளவு பெருந் தன்மையாக, இவ்வளவு நாகரிகமாக, இவ்வளவு அன்பாக இருக்கிறானே, சீதா இது உனக்கு நியாயமாகுமாடி? நீ பெண்ணில்லையோ? துர்க்கையோ? காளியோ? ஆனால்

உன் முகத்தில் பால் வடிகிறதேடி! உன் மனசில் ஏன் இவ்வளவு வன்மம்? இவ்வளவு விஷம்? வேண்டாம்டி வீண் பிடிவாதம்...உன்னை அவன் எவ்வளவு கௌரவப் படுத்துகிறான். ஒரு ஹிந்து ஸ்திரீ இப்படி துஷ்டையாக இருக்கலாமோ? லோகத்திலே பெண் பாவம்னு தான் சொல்லக் கேட்டிருக்கேன், இது ஆண்பாவம்டி அம்மா!' என்று சுந்தரசர்மாவின் நிலையற்ற நெஞ்சு சுகுமாரனுக்காக நெக்குருகி, இந்த விருந்தின் இரைச்சலும் மகிழ்ச்சியும் நிறைந்த ஆரவாரத்தின் நடுவே அலறிக் கொண்டிருந்தது.

சீதா இதழ்களில் தேங்கிய நிரந்தரமான புன்னகையுடன் ஜொலித்துக் கொண்டிருந்தாள்.

"இவர் டாக்டர் கிரிதரன்-மிஸ்டர் சுகுமாரன்-மிஸஸ் சீதா" என்று அவனை ராமதாஸூம் மரியமும் ஒரு சேர அழைத்து வந்து மிகவும் முக்கியமான, மிகவும் விசேஷமான ஒரு மனிதன் என்பது போன்ற மரியாதையுடன் அறிமுகம் செய்து வைத்தனர்.

கிரிதரன் பார்வைக்கு ஒரு டாக்டரைப் போல் தோற்றமளிக்கவில்லை. இவன் கைகளுக்கு ஒரு ஆபரேஷன் கருவியை விட, ஒரு வீணை மிகப் பொருத்தமானதாக அமையும் என்று தோன்றியது.

சீதாவும் டாக்டர் கிரிதரனும் ஒருவரையொருவர் வணங்கிக் கொள்ளவோ வாழ்த்துக் கூறிக்கொள்ளவோ மறந்தவர்கள் போல், இதற்கு முன்பே அறிமுகமும் பரிச்சயமும் கொண்டிருந்தவர்கள்போல், சேர்ந்து பிரிந்து ஏதோ ஒரு விருந்தில் எதிர்பாராது சந்தித்துக் கொண்டவர்கள் போல், பேச முடியாமல் கட்டுண்டு அவனுள் அவளுமாய், அவளுள் அவனுமாய் ஐக்கியமாகி ஒருவரை ஒருவரின் உள்ளம் ஈர்க்க நோக்கியவாறு இமைகளை நொடிக்கவும் மறந்திருந்த ஸ்தம்பிதம் சுகுமாரனின் முதுகுத்தண்டில் சாட்டைபோல் விழுந்தது...உயர்ந்த ஆடைகளுக்குள் அவன் உடல் ஒரு புழுவைப் போல் நெளிந்து சுருண்டது.

"சீதா'' என்ற அசட்டுச் சிரிப்புடன் அவள் முழங்கையைச் சீண்டி அவளது லயிப்பைக் குலைத்தான் சுகுமாரன்.

'யூரேகா! நான் கண்டுகொண்டேன்'என்று அவனது பார்வை பெரிதாய்க் கூக்குரல் கொடுத்தது சீதாவுக்கு மட்டுமே கேட்டது.

சீதா ஒரு புன்னகையுடன் தனது மெய்மறந்த நிலையை உணர்த்தியமைக்காக சுகுமாரனுக்கு நன்றி சொன்னாள்.

கல்யாணத்துக்கு முன்னால் அந்தக் கடற்கரைச் சந்திப்பின்போது ஆசை யோடு சீதாவின் தோளை அவன் ஸ்பரிசித்தானே, அப்போது-

"என்னைத் தொடாமல் பேசவேண்டும்" என்று அவனிடம் இவள் வேண்டிக் கொண்டதையும்,

"உன் அனுமதியில்லாமல் தொடமாட்டேன்" என்று சுகுமாரன் இவளிடம் சொன்னதையும் நினைத்துக் கொண்டாள்.

ராமதாஸும், கிரிதரனும் சற்றுத் தள்ளியிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தனர். மாரியம்மாளைத் தன் பக்கத்திலேயே இருத்திக் கொண்டாள் சீதா.

"உன்னைப் பார்த்தால் ஒரு தேவதை மாதிரி இருக்கு சீதா" என்று சீதாவின் காதில் ரகசியமாகப் புகழ்ந்து சொன்னாள் மரியம்.

"தேவதைகளுக்கு இறக்கைகள் உண்டு அல்லவா?" என்று கிரிதரன் மீது வைத்த பார்வையை மாற்றாமல் மரியத்திடம் கேட்டாள் சீதா.

சீதாவின் பார்வை, ராமதாஸும் கிரிதரனும் உட்கார்ந்திருக்கும் இடத்தையே அடிக்கடி நாடிற்று...அதை சுகுமாரனின் பார்வை ஒரு தடவைகூடக் கவனிக்கத் தவறவில்லை.

மாரியம்மாளின் செவியில் குனிந்து மறுபடியும் சீதா சொன்னாள்:

"நம்ம ராமதாஸ் இன்னைக்கு ஸூட்டும் கோட்டும் போட்டுண்டு வந்திருக்கறதைப் பாரேன்...ஆனால் அந்த டாக்டர் வெறும் வெள்ளை ஜிப்பாவும் வேட்டியுமாய் எவ்வளவு எளிமையாயிருக்கிறார்...உனக்கு அவரை முன்னாலேயே தெரியுமா?..." என்று சீதா ரகசியமாய்க் கேட்கிற கேள்விகளை மரியத்தின் பார்வை சுகுமாரனுக்குக் காட்டிக் கொடுத்தது...

இதையெல்லாம் கவனிக்கிற நிலையில் இல்லாத சுந்தர சர்மா விருந்து போஜனத்தில் முனைந்திருந்தார். ராமதாஸுக்கு இதெல்லாம் புரியாது. உலகத்தைப் பற்றி யோசிக்கிறவனுக்கு அதில் லயிக்க நேரம் ஏது? மற்றவர்கள் அவரவர் தத்தம் மகிழ்ச்சியில் குதூகலமாகக் களி வெறியுடன் பேசிக் கொண்டிருப்பதால் அவர்களில் யாரும் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. சீதாவுக்கும் கிரிதரனுக்குமிடையே பார்வைகள் பட்டுத் தெறிப்பதையும், புன்னகைப் பூச்செண்டுகள் மாறி மாறி எறியப்படுவதையும், அல்லாமல் வேறெதையுமே காணவில்லை சுகுமாரன்.

சுகுமாரனின் நெற்றியிலும் புருவக் கொடிகளிலும் வியர்வை முத்துக்கள் சரம் கட்டி, முகமெல்லாம் வேர்த்து வழிந்தது. மீனா அவனுக்கு ஒரு டவலைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் கையில் மதுக்கிண்ணம் இருந்ததால் அவளே அவனது நெற்றியிலிருந்த வியர்வையை மெல்லத் துடைத்து விட்டாள்-

"தாங்க்ஸ்" என்று டவலை வாங்கிக் கொண்டான் சுகுமாரன்.

"நான் இன்னிக்கு எங்காத்துக்குப் போகப் போறேன்" என்று ஒரு கண்சிமிட்டலுடன் சுகுமாரனிடம் சொல்லி விட்டு, "சந்தோஷமாக இருங்கள்" என்று கண்களால் வாழ்த்தினாள் மீனா. அவளுக்கு ஏனோ இன்று சீதா

மனம் மாறி விடுவாள் என்றொரு திடமான நம்பிக்கை பிறந்திருக்கிறது. ‘ஒரு வகையில் அது மெய்தான்!’ என்பதுபோல், மீனா திடீரென்று பார்த்த சமயத்தில் சீதா வெட்கத்தால் முகம் சிவந்து தலைகுனிந்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

“சீதா உன் கையைப் பிடித்துக் கொள்ள என்னை அனுமதி” என்று அவள் காதில் ரகசியமாக, ஜுரத்தில் நடுங்குகிறவன் போன்ற குரலில் ஆங்கிலத்தில் கெஞ்சினான் சுகுமாரன்.

யாரோ ஓர் அன்னியன் தன்னிடம் வந்து பேசியதைப் போல் நினைவுகள் கலைந்து சுகுமாரனைப் புதிதாகப் பார்த்தாள் சீதா.

அதற்குள் அவளது கரத்தை அவன் இறுகப் பற்றிக் கொண்டான். அவனது இறுகிய பிடிப்புக்குள் அவளது கை நடுங்கிக்கொண்டிருந்தது.

“அதனால் என்ன?” என்று மனத்தால் அவனது ஸ்பரிசத்தை விலக்கி உடலால் அனுமதித்தாள்-ஒரு நாகரிகத்துக்கு; என்ன இருந்தாலும் இவன் ஒரு கனவான் இல்லையா? அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை இவனது ‘சீமாட்டி’ யான எனக்கும் உண்டாமே? – என்று சீதாவின் மனத்துள் ஓர் எண்ணம் ஓடிற்று.

நேரம் ஆக ஆகக் கூட்டம் கலைந்தது. எல்லோரும் ஒவ்வொருவராய் வந்து சுகுமாரன் தம்பதியிடம் விடை சொல்லிக் கொண்டு போயினர்.

ராமதாஸ், மரியம், டாக்டர் கிரிதரன் மூவரும் ஒன்றாக வந்து விடை பெற்றுச் சென்றனர். அவர்களை வழியனுப்ப வாசல் வரை போய்விட்டு வந்தாள் சீதா.

சற்று நேரத்துக்கு முன் சோபிதச் சந்தடியுடன் இருந்த அந்த இடம் வெறிச்சென்றிருந்தது. தூரத்தில் பணியாட்கள் நாற்காலிகளையும் மேசைகளையும் இழுத்து ஓசையெழுப்பிக் கொண்டிருந்தனர்.

மேல்மாடியில் தனியாக உட்கார்ந்திருந்தான் சுகுமாரன். கூத்தாட்டவைக்குழாம் அற்றதுபோல் சூனியமான பிரகாசத்தில் சீதா தன்னைக் கடந்து போவதை மௌனமாகப் பார்த்தான் சுகுமாரன். அவன் கையில், வாயில், மனத்தில், எங்கும் ஒரே புகை மண்டலம், சூழ்ந்திருந்தது.

'அவளுக்கென்ன? போய்த் தாழிட்ட தனியறையில் தானும் 'அவன்' நினைவுமாய்ப் படுத்துக் கொள்ளுவாள்' என்று சுகுமாரனின் மனம் பொருமிற்று.

தன்னைக் கடந்து காற்றில் மிதப்பவள்போல் போய்க் கொண்டிருக்கும் சீதாவைக் கனிவுடன் கூப்பிட்டான்.

"சீதா!"

மெதுவாக நடந்து வந்து அவனருகில் நின்றாள்.

"நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கோ! ம்...

"உனக்கு டாக்டர் கிரிதரனை முன்னமேயே தெரியும்...

உதடுகளை மடித்துக் கொண்டு சிரித்தாள் சீதா...

"ஆம்...ஐ ரைட்...அவன், ஐ ஆம் ஸாரி...அவர், உன் ஃபிரண்ட், யுவர் லவர்!...ஆம் ஐ ரைட்" என்று ஆர்வமாய் ஏதோ அதற்காகப் பூரிப்படைந்தவனைப் போல் சொன்னான் சுகுமாரன்.

"நான் அவரை இந்த ஜன்மத்தில் இப்போதுதான் சந்தித்தேன்..." என்று எங்கோ பார்த்த விழிகளுடன் சொன்னாள் சீதா.

## 38

**சீ**தா கூறியதை வியப்புடன் நம்பினான் சுகுமாரன். அவளைத் தான் அநாவசியமாகச் சந்தேகிப்பதாய். சீதா

தப்பெண்ணம் கொண்டு விடக்கூடாதே என்ற நினைப்பில் அசட்டுத்தனமாய்ச் சிரித்து அந்த விஷயத்தை மழுப்பி விட்டு எழுந்தான்.

"சரி, நீ எப்போது உன் புதிய பொறுப்பை ஏற்கப் போகிறாய்? உனக்கு சந்தோஷம்தானே," என்று சுந்தரி பத்திரிகை எடிட்டர் பொறுப்பைப் பற்றி அவளிடம் பேசியவாறே புல் வெளியில் நடுவே அமைந்த பாதையில் நடந்தான். அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த சீதா அவனிடம் சொன்னாள்: "ஒரு வகையில் எனக்குச் சந்தோஷமாக இருந்தாலும் எந்தவித முன் அனுபவமும் இல்லாமல் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியுமோன்னு பயமாகவும் இருக்கு."

"அதுக்குத்தான் உங்கப்பா இருக்காரே, நான் உன்னை ஆசிரியராக்கினதுக்குக் காரணமே மிஸ்டர் சுந்தர சர்மாவை விட்டு விடாமல் இருக்கத்தானே! அவருடைய வழிகாட்டுதலில் நீ அவரை விடத் திறமையான ஆசிரியரா ஆயிடுவேன்னு நான் நம்பறேன்" என்றான் சுகுமாரன்.

"ஒரு பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையுமே நான் ஆரம்பம் முதல் கற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு ஒன்றுமே தெரியாது அது பற்றி...ஆனாலும் சுந்தரி பத்திரிகையில் பல மாறுதல்களை நான் செய்யத்தான் வேண்டியிருக்கும்...உண்மையைச் சொல்லட்டுமா? சுந்தரியைப் பத்தி எனக்கு உயர்ந்த அபிப்பிராயம் கிடையாது... என்றாள் சீதா. சுகுமாரன் சிரித்தான். 'இவள் எவ்வளவு 'ப்ளன்ட்'டாக எதையும் சொல்லி விடுகிறாள்!' என்று நினைத்தான்.

"எனக்கு அபிப்பிராயம் எவ்வளவு உயர்வா இருக்கு சுந்தரியைப் பத்திங்கற கவலையே கிடையாது. என்னுடைய இன்ட்ரஸ்ட்டெல்லாம் சர்க்குலேஷன் எவ்வளவு உயருதுங்கறதுதான்...மெஷினுக்குத் தீனிபோட வேணும். அதுதான் முக்கியம்..." என்றான்.

"நான் எதையும் எழுத்துக்களில் படிக்கறதே இல்லை. எல்லாம் இலக்கங்களில்தான்...என்னுடைய அளவு கோலின்படி மிக மதிப்பு வாய்ந்த புத்தகம் 'செக்புக்' தான்!" என்று 'அமெரிக்காவில்' என்ற ஒரு புத்தகத்தில் ஒரு நவீன முதலாளி பேசுவதாக அவள் படித்திருந்த ஒரு கருத்தை இப்போது நினைவூட்டிக் கொண்டாள் சீதா.

இரவு மணி பதினொன்றாகியிருந்தது. பொதுவாக சீதா இவ்வளவு நேரம் விழித்திருப்பத்தில்லை: தன் பொருட்டுப் பேச்சுத் துணைக்காக, புகை போல் கவிகிற பனிமூட்டத்தில், குளிர்நீல வெளிச்சத்தில் புல்தரையில் நின்று கொண்டிருக்கும் சீதாவைப் பார்த்து, "குட்நைட்" என்று திடீரென விடை தந்துவிட்டு திரும்பி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் சுகுமாரன்,

"விட்டது போதும்' என்று மகிழ்ந்தவளாய் "தாங்க்யூ ஃபார் எவ்ரிதிங்...குட்நைட்" என்று சொல்லி விட்டு விரைந்தோடிப் போனாள் சீதா.

சுகுமாரன் அகலமான புல்வெளியில், நியான் விளக்கின் நீல வெளிச்சத்தில், டின்னர் ஸூட் அணிந்த கோலத்துடன் புகையூதிக் கொண்டு நிற்பதை மாடியறைச் சன்னலின் திரைச் சீலையை இழுத்துவிடச் சென்ற போதுதான் பார்த்தாள் சீதா.

ஒரு பணியாள் டிரேயில் மது நிறைந்த கிண்ணத்தை அவனிடம் ஏந்தினான். கிண்ணத்தை எடுத்துக் கொண்டு தலைநிமிர்ந்து மாடியறைச் சன்னலில்-சீதாவின் அறையில் விளக்கு எரிவதை சுகுமாரன் பார்த்த மாத்திரத்தில் அது அணைந்தது.

'சீதா-நீ என்னை ராவணன் என்கிறாய்! ராவணன் என்னடி தப்பு செய்தான்? தன் உயிரை, தன் உறவை, தன் ராஜ்யத்தை அல்லாமல்-தன் சகல பெருமைகளுக்கும் மேலாக அவ்ன் சீதையை நேசித்தான்; ஆசித்தான்; அவன் எவ்வளவு உயர்ந்த காதலன்...அப்படித்தானே, ஒருவேளை நீ இந்த டாக்டருடையவோ, அல்லது வேறு

எவனுடையவோ காதலியாக இருந்து நான் கவர்ந்து வந்து விட்டேன் என்பதனால்தானே என்னை ராவணன் என்கிறாய் சொல்லு...ஆனால் ஒன்று-அந்த ராவண னுக்குப் பத்துத் தலை இருந்தும் ஒன்றில்கூட புத்தி யில்லாமல் போய்விட்டது! 'போடி உன் ராமனிடமே' என்று இப்போதுகூட விரட்டி விடுவேன் நீ இன்னொருவனின் மனைவியாக இருந்தால்...அதே காரணத்துக்காகத்தான்- எனக்கு மனைவியாக நீ இருப்பதனால்தான் நான் உன்னை விடவே முடியாது. சீதா-நெவர்-நீ யாரோடும் குலாவு...உன் சந்தோஷத்துக்கு நானோ எனக்கு நீயோ தடையில்லையே!...'

"சீதா!... என்ற பெருமூச்சுடன் மாடியறையைப் பார்த்தான். பனிப்படலம் அதிகமாகிக் கவிந்து பார்வையை மறைப்பதை உணர்ந்து, மணியும் அதிகமானதைப் பார்த்து சுகுமாரனும் தன் அறைக்குப் போனான்.

அவன் மனத்துள் ஒரு சிறு சபலம் தோன்ற, தனக்கும் அவளுக்குமிடையே நிரந்தரமாய்த் தாழிடப்பட்டிருந்த அந்தக் கதவின் தாழ்ப்பாள் இன்று ஒருவேளை திறந்து வைக்கப்பட்டிருந்தால்?...

அவன் மனத்தில் மீனாவின் கண்சிமிட்டலும், 'சந்தோஷமாயிருங்கள்' என்ற வாழ்த்துப் புன்னகையும் தோன்றின, விரல்கள் நடுங்க அந்தக் கதவை ஆர்வத்துடன் தள்ளிப் பார்த்தான்...எப்போதும்போல் அது உறுதியாய்- அடைத்துத் தாழிடப்பட்டுத்தான் இருந்தது...கண்ணாடி யில் தெரிந்த தனது பிம்பத்திடம் நாக்கை நீட்டிப் பரிகாசம் செய்து விட்டுப் படுக்கையில் தொப்பென விழுந்தான் சுகுமாரன்.

**சு**ந்தரி பத்திரிகை அலுவலகத்தில் நடைபெறும் மாதாந்திரக் கூட்டத்தில் சுகுமாரனின் பக்கத்தில் பத்திரிகையின் ஆசிரியர் என்ற ஹோதாவில் உட்கார்ந்

திருந்தாள் சீதா. அவள் முன்னால் இந்த ஓராண்டுக்காலப் பத்திரிகையின் ஃபைல் இருந்தது. கடந்த சில தினங்களாக அவள் அதிலேயே மூழ்கியிருந்தாள். ஒவ்வொரு இதழையும் பரிசீலிப்பது போல் படித்து ஆராய்ந்து தனியே குறிப்புகள் எழுதி வைத்திருந்தாள். இவற்றில் ஓர் இதழில்தான் 'பாரதன்' என்ற பெயரில் ராமதாஸ் எழுதிய 'ஹே சீதே' வெளியாகியிருந்தது. அது குறித்து,

"இதற்கு இணையான எழுத்து இந்த ஆண்டில் ஒன்றும் பிரசுரமாகவில்லை. இந்த ஆசிரியரின் வேறு எழுத்துக்களும் சுந்தரியில் பிரசுரமாகவில்லை. இதை எழுதிய திரு. ராமதாஸ் அதற்குப் பிறகு சிலகாலம் இங்கு பணி புரிந்திருக்கிறார். பத்திரிகையின் நோக்கமும் செயற்பாடும் தமது லட்சியத்துக்கு உகந்ததாயில்லை என்ற காரணம் சொல்லி அவர் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டிருக்கிறார். அவரை மீண்டும் நமது பத்திரிகைக்குக் கொண்டு வரவேண்டும். அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுவேன்" என்று எழுதி வைத்திருந்ததை அவர்கள் முன்னிலையில் படித்துக் காட்டினாள். அதை அவள் படித்துக் கொண்டிருக்கும் போதே பட்டண்ணாவும் 'சோனாவும்' ராமதாஸின் திறமைகளைக்குறித்து வியந்து கொண்டனர். 'ஹே! சீதே' வுக்கு நிறைய பாராட்டுக் கடிதங்கள் வந்ததை நினைவுபடுத்தினர்.

"அந்தப் பொறுப்பை எடிட்டர் ஏத்துண்டுடற பட்சத்தில் எங்களில் யாருக்கும் ஆட்சேபணையில்லை" என்று இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு சொன்னார் சுந்தர சர்மா.

"இரண்டு: நம்ம பத்திரிகைக்கு வருகிற கையெழுத்துப் பிரதிகள் குறித்து நிறையப் புகார்கள் இருக்கு. அதில் முக்கியமானது என்னவென்றால், சிலவற்றைப் படிக்காமலே திருப்பியனுப்பியதற்கான சான்றுகளுடன் வந்த கடிதங்கள்...சரி, கடந்தகால

நடைமுறைகள் எப்படியிருப்பினும், இனிவரும் எல்லாக் கையெழுத்துப் பிரதிகளையும் ஆசிரியரின் பார்வைக்குக் கண்டிப்பாக அனுப்பவேண்டும் என்ற புது மரபை வகுத்துக் கொள்ளுவது...

"மூன்று: ஆசிரியர் குழு வழக்கம் போல் இயங்க வேண்டும். அதாவது, பிரசுரத்துக்கு ஏற்றவற்றைத் தேர்ந்தெடுத்தல், வடிவமைத்தல், சித்திரம் வரைதல், எடிட் செய்தல் ஆகியன. எனினும், இறுதியாக அச்சேற்றப் படுவதற்குமுன் எல்லாவற்றையும் ஆசிரியரின் பார்வைக்கு அனுப்பி, பார்த்ததற்குச் சான்றாக ஆசிரியரின் கையெழுத்து எல்லா ஃபாரங்களிலும் இருக்குமாறு கண்டிப்பாகப் பார்த்துக் கொள்ளுவது" என்று இந்தக் கூட்டத்தில் தான் தெரிவிக்க வேண்டிய தீர்மானங்களை முன் கூட்டியே ஆய்ந்து எழுதிக் கொண்டு வந்து இவள் மாதாந்திரக் கூட்டத்தில் படிக்கின்ற முறைமையே அனைவருக்கும் பிடித்திருந்தது.

சுகுமாரன், சீதாவின் தீர்மானங்களுக்காகவும் அவள் அலுவலகத்தில் செயல்படும் புதிய முறைகளுக்காகவும் அவளை எல்லார் முன்னிலையிலும் பாராட்டினான்.

சுகுமாரன் பேசும்போது சொன்னான்: "எனக் கொன்று தோன்றுகிறது. சீதாவுக்கு இருக்கிற லட்சியங் களுக்கும் ஆர்வத்துக்கும் தனியே பெண்களுக்காக வென்றே ஒரு புதிய பத்திரிகை ஏன் ஆரம்பிக்கக் கூடாது? ஒரு கருத்து என்றால் அதில் ஒரு பயன் இருக்க வேண்டும். அடுத்த மாதம் புதிய மெஷின்கள் வரப்போகின்றன. உங்கள் லட்சியங்கள் அந்த யந்திரங்களின் சக்கரத்தைச் சுழலவைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஆங்கிலத்தில் வருகிற மாதிரி, மேல்நாடுகளில் இருப்பதுபோல ஒரு நவீன பத்திரிகை...பெண்களுக்காகவே-ஒரு பேர் சொல்லுங்கோ பார்ப்போம்... என்றான் சுகுமாரன்

"என்ன இருந்தாலும் தூண்டில்காரனுக்கு தக்கை மீதே கண் என்பார்கள். முதலாளிக்குத் தொழிலபி

விருத்தியின் மேலேதான் கண்" என்று சுகுமாரனைப் பாராட்டினார் சுந்தர சர்மா.

எல்லாரும் என்னென்னமோ பெயர்களை யோசித்து, யோசித்து அந்த உத்தேச மாதர் பத்திரிகைக்கு நாமகரணம் சூட்ட ஒரு மணி நேரம் முயன்றார்கள்.

கடைசியில், "சுதந்தரி" மகளிர் நல மாத இதழ் என்று ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டினாள் சீதா.

"சுதந்தரி...சுதந்தரி" என்று எல்லாரும் பலமுறை சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொண்டனர்.

"அப்பிடின்னா என்ன அர்த்தம்?" என்று கேட்டான் சுகுமாரன்.

"சுதந்திரமான பெண்" என்று ஒரு அர்த்தம்... தெளிவா புரியறதே" என்று சிலாகித்துத் தமது சம்மதத்தைத் தெரிவித்தார் சுந்தர சர்மா.

"கடைசியாக..." என்று தனது குறிப்பில் கண்டிருந்த விஷயத்தை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தாள் சீதா.

அந்தக் கூட்டத்தில் பேசித் தீர்மானிக்கிற முடிவு களையும், ஒவ்வொருவரின் கருத்தையும் உடனடியாகக் குறித்துக் கொள்ளுகிற 'ஸ்டெனோ' எழுதி முடித்து விட்டாளா என்று கவனித்துக் கொண்டு மேலே சொன்னாள் சீதா.

"எப்போதும் எனது எழுத்து வேலைகளுக்கு உதவியாக இருக்கிற எனது சினேகிதி மாரியம்மாளை எனது அந்தரங்கக் காரியதரிசியாக நியமித்துக் கொள்ள வேண்டும். அதற்கான அனுமதியை மானேஜிங் டைரக்டரிடம் பெறவேண்டும்" என்று முடித்தாள் சீதா.'

"வாட் அபௌட் திஸ் ஸ்டெனோ?" என்று அருகிலிருப்பவளைக் காட்டிக் கேட்டான் சுகுமாரன்.

"நான் சொன்னது ஸ்டெனோ இல்லை. கூட்டாசிரி யர். கோ-எடிட்டர் வேலைகளைச் செய்யறதுக்கு ஒரு பி.ஏ." என்று விளக்கினாள் சீதா.

பென்சிலை நெற்றியில் வைத்து உருட்டியவாறே யோசித்தான் சுகுமாரன்...

"ஓ.கே. க்ராண்டட்" என்று கண்களை மூடிக் கொண்டே சொன்னான்: "சுதந்தரி ஸ்டாஃப்லே போட்டுக்கோ அவங்களை" என்றான்.

அன்றையக் கூட்டம் முடிந்ததும் சுந்தர சர்மாவும் சீதாவும் ஒரே காரில் கிளம்பினார்கள். சர்மாவை வீட்டு வாசலில் இறக்கிய பின்.

"அப்பா, நான் போயி மரியத்தையும் ராமதாஸையும் பார்க்கணும். ஆத்துக்கு நாளைக்கி வரேன்னு அம்மாகிட்ட சொல்லுங்கோ" என்று எங்காவது அம்மாவின் தலை தெரிகிறதா என்று வீட்டுக்குள் பார்த்தாள் சீதா.

"காணோம்-சரிப்பா...திருவல்லிக்கேணிக்குப் போ" என்றாள் டிரைவரிடம், கார் நகர்ந்தது.

காரில் மகள் வருவாள் என்று எதிர்பார்த்து மாடியிலிருந்து கொடியில் கிடந்த துணிகளுடன் இறங்கி வந்த அம்மா, காரிலிருந்து இறங்காமலே அவள் போவதைக் கண்டு "ஏன் சீதா வரலே" என்று கணவரின் அறைக்குள் எட்டிப் பார்த்துக் கேட்டாள்.

"அடடே இப்ப என்ன? அவ என்ன சாதாரண சீதாவா! சுந்தரி-சுதந்தரின்னு ரெண்டு பத்திரிகைக்கு எடிட்டர்-இன்-சார்ஜாக்கும் உன் மகள்..." என்று குதூகலமாய்ச் சொன்னார்.

"சுந்தரி, சுதந்தரி, நிரந்தரியே" என்று லாலி பாடும் ராகத்தில் பாடிக் கொண்டே ஒரு ஸ்காட்ச் பாட்டிலின் கழுத்தைத் திருகித் திறந்தார் சுந்தர சர்மா.

## 39

"மிஸ்டர் ராமதாஸ்...உங்களை நம்பித்தான் இந்தப் பொறுப்பை நான் ஏத்துண்டேன். 'இந்தப் பத்திரிகையின் நோக்கமும் செயற்பாடும் உங்கள் இலட்சியத்துக்கு

உகந்ததாக இல்லை'ன்னு காரணம் சொல்லி நீங்க ராஜினாமா செய்திருக்கீங்கன்னு உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்பறேன். இப்போ உங்கள் லட்சியத்துடன் ஒத்துழைக்க அந்தப் பத்திரிகையே முன்வரும்போது நீங்க நழுவறது நன்னாயில்லே...நீங்க இந்தப் பத்திரிகைப் பொறுப்பிலேருந்து தப்பிக்க முயல்வது உங்கள் லட்சியத்திலே இருந்தே நீங்க தப்பிக்கறதாகும்... சொல்லுங்கோ, என்ன உங்கள் லட்சியம்? கொள்கை? திட்டம்?..ம்-கம்-ஆங் !"

பூனை மாதிரி இருந்த சீதா பொறுப்பும் கடமையும் வந்த பிறகு எவ்வளவு நம்பிக்கையுடன் அதிகாரத் தோரணையுடன் பேசுகிறாள் என்று வியந்து பார்த்துக் கொண்டிருந்தாள் மரியம்.

"சொல்லேன் மரியம்... என்று மாரியம்மாளைச் சிபாரிசு செய்யச் சொன்னாள் சீதா. அவர்கள் மூவரும்-நடுவில் சீதா-கடற்கரைச்சாலையில் நடைபாதை ஓரமாக உள்ள கல்வாழைச் செடிகளின் பின்னணியுடன் பாதையோரத்தில் சிமெண்ட் கட்டையின் மேல், பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர். சீதா காரை மரியத்தின் ஹாஸ்டலுக்கு வரச் சொல்லியிருந்தாள். இவர்களுடன் பஸ்ஸிலேயே போவது ராமதாசை சுந்தரிப் பத்திரிகையில் மீண்டும் சேர்ப்பதற்காகப் பேசத்தான்.

"இவர் ரொம்பத்தான் 'பிகு' பண்ணுகிறார்" என்று மரியத்திடம் புகார் செய்தாள் சீதா.

"அப்படியில்லை. ஒரு பத்திரிகையில் வேலை செய்கிற மனோநிலையே எனக்கு மாறிப் போய் விட்டது. நானே எழுதுவதைவிட மேலான பிறமொழி இலக்கியங் களைத் தமிழாக்கம் செய்தால் போதும் என்று இருக்கிறது வர-வர... என்று மெல்லிய குரலில் சொன்னான் ராமதாஸ்.

"அதெல்லாம் உங்கள் சுதந்திரம். உங்களை நாங்க எழுதச் சொல்லி வற்புறுத்தறமா? உங்க ஒத்துழைப்பும்

உடனிருப்பும் ரொம்ப அவசியம்...இந்த உதவியை நீங்க மறுப்பானேன்?..."

"ஒரே காரணம்தான்...எனக்குச் சமையல் தொழில் இதைவிட மேலானதுன்னு அனுபவத்தாலே தெரிஞ்சுடுத்து" என்று சிரித்தான் ராமதாஸ்.

"சுதந்தரி-பெண்களுக்கான பத்திரிகை-நீங்கள் உங்கள் நவீனமான சமையல் கலை பற்றி எழுதினால் கூடப் போதுமே" என்றாள் சீதா.

"சமையல் பகுதியெல்லாம் உண்டோ?" என்று கிண்டலாகக் கேட்டான் ராமதாஸ்.

'வாழ்க்கை என்னதான் நவீனமானாலும் மனுஷர்ளுக்கு வாயும் வயிறும் இல்லாமலா போய்விடும்?" என்று சிரித்தாள் சீதா.

மரியம் சிரிப்பினிடையே குறுக்கிட்டுச் சீதாவுக்கு நன்றி சொன்னாள்: "என்னைப் பொறுத்தவரைக்கும் நீ எனக்கு உத்தியோகம் தந்திருக்கிற உதவிக்கு வாழ்க்கை முழுதும் கடமைப்பட்டிருக்கிறேன் சீதா. ஏன்னா, இங்கே படிப்பு முடிஞ்சாச்சு...'ஊருக்கே "திரும்பிப் போறதா? இங்கேயே ஏதாவது உத்தியோகத்துக்கு மனுப்போட்டுட்டு அலையறதா'ன்னு யோசிக்கிற நேரத்திலே நீ கடவுள் மாதிரி வந்து உதவி செய்திருக்கே..." என்று சீதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் மரியம்.

"நமக்கு நிஜமாகவே கடவுள் செய்கிற உதவி ராமதாஸ் அவர்களின் மனத்தை மாத்தறதுதான்... என்று ராமதாஸைப் பார்த்தாள் சீதா. அவன் குனிந்த தலையுடன் யோசித்துக் கொண்டிருந்தான்.

பத்திரிகை அனுபவத்தின் கசப்பான உணர்ச்சிகளை அவன் மனம் அசை போட்டுக் கொண்டிருந்தது. பொறாமையும் பொய்ம்மையும் இழிந்த ரசனையும் இச்சகமும் நிறைந்த அந்த உலகத்தை யாரால் மாற்ற முடியும்? அது மாற்றமடையாமல் இந்தப் பெண்களின்

மேல் கொண்ட தாட்சண்யத்துக்காக மறுபடியும் அந்தக் காகிதக் காட்டிலும் கறுமைச் சேற்றிலும் போய் மாட்டிக் கொள்ளுவதா? என்று ராமதாஸ் குழம்பியவாறிருந்தான்.

"இதோ பாருங்கோ-இந்த முயற்சி சரிப்பட்டு வரலேன்னா, நீங்க எப்ப வேணுமானாலும் முன்னே மாதிரி ஒரு ராஜினாமா கடுதாசி எழுதி வச்சுட்டுப் போயிடலாம். நானும் அதையே செய்வேன் அப்போ! ஆனால் அப்படியெல்லாம் நடக்க வேண்டிய அவசியம் வராதுங்கற நம்பிக்கையோட தொடங்குவோம்... எந்த ஒரு காரியத்திலேயும் வெற்றியோ தோல்வியோ ஏற்படலாம். ஆனால் அந்தக் காரியத்தைத் தொடங்கறவங்க நம்பிக்கையோட இருக்கணும். நீங்க நம்பிக்கை இழந்துட்டீங்களோன்னு நினைக்க வருத்தமாயிருக்கு. நாம ஒண்ணு சேர்ந்து இந்தப் புதிய முயற்சியை ஆரம்பிப் போம்...ஸ்ரீ ராமஜயம்னு சொல்லி ஒப்புத்துக்கோங்கோ" என்று வற்புறுத்தி ராமதாஸை ஸ்ரீ ராமஜயம் சொல்ல வைத்த மகிழ்ச்சியில் அவனுடன் கை குலுக்கினாள் சீதா. மரியம் கைதட்டினாள், பஸ்ஸும் வந்தது.

**"ஸ்!** நேரம் காலம் கிடையாதா?" என்று பகல் பதினோரு மணிக்கு சுகுமாரனின் கரங்களில் சிக்கிக் கசங்கிக் கொண்டிருந்த மீனா சிணுங்கினாள்.

"காதல் பண்றதுக்கு நேரமாவது காலமாவது!" என்று அவளை மேலும் இறுகத் தழுவினான் சுகுமாரன்...

வெறியடங்கி இறுக்கம் தளர்ந்து அவளிடமிருந்து விலகி வந்து அவளைப் பார்த்தவாறே முனகினான்:

"எனக்கு ஒரு நர்ஸ்! அவளுக்கு ஒரு டாக்டர்! ஏய் மீனா! உனக்குத் தெரியுமா? ஒரு ரகசியம்-நான் கண்டுபிடிச்சுட்டேன். அன்னிக்கு விருந்திலே சீதாவோட நண்பர்களிலே ஒரு டாக்டர் வந்தானே, ஜிப்பா போட்டுண்டு..."

"நான் உங்களைத்தான் பாத்துண்டு இருந்தேன்... என்று ஆடைகளைச் சரிசெய்து கொண்டே புன்னகை யுடன் சொன்னாள் மீனா.

"அவன்தான்...அவனும் சீதாவும் பார்த்துண்ட பார்வையிலே கண்டு பிடிச்சுட்டேன். அவன்தான் அவளோட....

"ஸ்...ஏதாவது கற்பனை பண்ணிண்டு சொல்லா தீங்க... சீதா ஒண்ணும் அவ்வளவு கீழ்த்தரமான பொண் இல்லே" என்றாள் மீனா.

"இதிலே என்ன கீழ்த்தரம் – மேல்த்தரம்? இட் இஸ் லவ்! காதலுக்குக் கண் கிடையாது; அறிவு கிடையாது; தராதரம் கிடையாது; வயசு கிடையாது; வயசு பொருத்தம் கிடையாது; நேர்மை கிடையாது; ஒழுக்கம் கூடக் கிடையாது. அதையெல்லாம் மீறினது.... எல்லா வரம்புகளையும் தாண்டறதுக்குப் பேர்தான் காதல்–"

"நம்ம காதலைப் பத்தி சொல்றேளா?" என்று வருத்தத்துடன் கேட்டாள் மீனா.

"ஆம்படையானும் பொண்டாட்டியும் தவிர மத்தவா பண்ற காதலுக்கு என்ன பேர்? அதைக் காதல் இல்லேன்னு சொல்ல முடியுமோ? ஆம்படையான் பொண்டாட்டி தவிர மத்தவா காதல் பண்ணப்படா துன்னு தடுக்க முடியுமோ? இந்த மாதிரி விஷயத்திலே எல்லாம் நான் ரொம்ப நவீனமானவன்; முற்போக்கான வன். ஆம்படையானுக்கும் பொண்டாட்டிக்கும் பொருத்தமில்லாம–காதலிக்க முடியாமல் போயிடுதுன்னு வச்சுக்கோ. அவங்க வசதியா வேற துணையை ரகசியமா தேடிண்டுடத்தான் வேணும். வேற வழி? இந்த விஷயத்தை மனிதாபிமானத்தோடு பார்க்கணும். அப்புறம் ஆம்படை யான் பொண்டாட்டிங்கற சமூக பந்தத்தைக் காப்பாத்திண்டுடணும். எனக்கொண்ணும் அந்த டாக்டர் மேலே பொறாமை ஏற்படலே. சீதாவின் வாழ்க்கையை

நான் வீணாக்கிட்டேனோங்கற உறுத்தல் ஒண்ணு இருந்ததோன்னோ? அது போச்சு. ஆனால் அது நிஜந்தானான்னு உறுதியாகற வரைக்கும் கண்டுண்டுடாம இருக்கணும். நான் சொன்னதை ஞாபகம் வெச்சுண்டு இரேன்...உனக்கே புரியும்... என்று மீனாவைப் பிடித்து உட்காரவைத்து அவளிடம் விஸ்தாரமாகத் தனது காதல் பற்றிய தத்துவத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொன்னான் சுகுமாரன். அதற்கு மேல் அவனிடம் சீதாவைப் பற்றி நல்லபிப்ராயம் கூறப் பயந்தாள் மீனா. இவன் இவ்வளவு சொல்லிய பிறகு 'இருக்குமோ' என்று எண்ணலானாள் மீனா.

**ரா**மதாஸ் விடைபெற்றுச் சென்ற பின்னர் காருக்காகக் காத்திருந்த மரியமும் சீதாவும் பெண்கள் விடுதி காம்பவுண்டுக்குள் புல்தரையில் அமர்ந்திருந்தனர்.

சீதாவுக்கு டாக்டர்...கிரிதரனின் நினைவு வந்தது. அவனைப் பற்றிய நினைவு அவளுக்கு அடிக்கடி வருகிறது. ஓரிரு முறை டாக்டர் கிரிதரனைப் பற்றி ராமதாஸிடம் அவள் விசாரித்ததை மரியமும் கவனித்திருக்கிறாள். யாரும் அதற்குத் தனி முக்கியத்துவம் தரவில்லை. 'தரவில்லையா, தருகிறார்களா? இவர்களுக்கு என் மனத்தின் புதிய சலனங்கள் புரிகிறதா, புரியவில்லையா?' என்று எண்ணியவள் போல் விழியுயர்த்தி மரியத்தைப் பார்த்து "நீ அதன் பிறகு அவரை-டாக்டர் கிரிதரனைப் பார்க்கவில்லையா?" என்று திடீரென்று கேட்டாள் சீதா.

"ம்...நேற்று மாலை ராமதாஸுடன் பார்த்தேன். உன்னைப் பற்றி விசாரித்தார்!"

சீதாவின் முகம் சிவந்தது. இனிய நினைவுகளால் மனம் நிறைந்து புன்னகை பூத்தாள். கிரிதரனின் நினைவு முகம் வெறும் வெளியில் சிரித்தது போன்ற பிரமை...

"அவரைப் பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாது. டாக்டர் கிரிதரன்கிறதைத் தவிர...ஆனால் மிஸ்டர்

*சுகுமார் சொல்றார்–அவரை எனக்கு ரொம்ப நாளாத் தெரியுமாம். அவர்தான் என் காதலராம்...அது ஒண்ணும் எங்கள் முதல் சந்திப்பு இல்லையாம்... என்று சீதா சிரித்துக் கொண்டே சொல்லுவதை வியப்புடன் பார்த்தாள் மரியம்.*

*"இப்படி அபாண்டமா சொன்னதைக் கேட்டு உனக்குக் கோபம் வரலியா?" என்று வெகுண்டாள் மரியம்.*

*சீதா மறுபடியும் சிரித்தாள்.*

*"நிஜமாகவே அப்படி இல்லியே.... அப்படியிருந் திருந்தால் நன்னாருக்குமேன்னு தோணித்து. எனக்குக் கோபம் வரலே...அவர் இன்னம் அப்பிடி ஏதாவது சொல்லிண்டே இருந்தால்கூடக் கேட்டுண்டு இருந் திருப்பேன். எனக்குச் சந்தோஷமாத்தான் இருந்தது. எனக்கு அவரைப்பத்தித் தெரிஞ்சுக்க வேணும் போலவும் இருக்கு. ரொம்பத் தெரியும் போலவும் இருக்கு. நான் அவரை மறுபடியும் சந்திப்பேன்" என்று தன்னை மறந்து சீதா சொல்லிக் கொண்டிருக்கையில் கார் வந்தது. மரியம் ஒன்றும் பேசவில்லை. அவள் மனம் அதிர்ந்து போய், அந்தப் பதட்டம் மெல்ல மெல்லத் தணிந்து கொண்டிருந்தது. கட்டிய கணவன் இராவணனாகவும், நடுவில் வந்தவன் இராமனாகவும் மாறுகிற, மாற்றுகிற இந்தக் கலிகாலச் சீதையைப் பற்றி மிகவும் நடுக்கத்துடன் "ஹே! கலிகாலச் சீதே"...என்று இரைந்தது. சற்று நேரம் மௌனமாய் யோசித்துக் கொண்டிருந்தாள் மரியம்.*

*திடீரென, அவளுக்கு உடனடியாக ராமதாஸைப் போய்ப் பார்க்கவேண்டும் போலிருந்தது. ஒரு பக்கம் சீதாவின் கார் திரும்பியதும் மறுபக்கம் மரியம் பஸ்ஸைப் பிடிக்க ஓடினாள்.*

# 40

"ஒரு விபரீதம் நடந்து போச்சு... என்று ரகசியமான குரலில் ராமதாஸிடம் சொல்லிவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்த கீதாவைப் பார்த்துத் தனது படபடப்பை அடக்கிக்கொண்டு பொய்யாகச் சிரித்தாள் மரியம்.

"இந்த லோகத்திலே நடந்தா ஏதாவது விபரீதம் இல்லேன்னா விசித்திரம்தான் நடக்கும். என்ன சமாசாரம்?" என்று அவள் ரகசியமாகச் சொன்னதைப் பகிரங்கமாக்குவது போல் சிரித்தான் ராமதாஸ்.

'உமக்கென்ன, நீரோ நைஷ்டிக பிரம்மச்சாரி. இந்தப் பெண்கள் படுகிற அவஸ்தைகளை மட்டுமே நீர் அறிந்து கண்ணீர் விடுகிற மாதிரி எழுதிவிடுவீர். சுதந்திரம்கிற பேரிலும், நாகரிகம்கிற நினைப்பிலும் இந்தப் பெண்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்கிற கொடுமைகளுக்கு யார் அழுவது' என்று மனத்துள் பேசிக்கொண்டாள் மரியம்.

"வாங்களேன் கொஞ்சம் வெளியில் போய் வரலாம்... உங்களோட பேசணும்" என்றாள்.

"எங்கே போகலாம், பீச்சுக்கு?"

"ம்"

"கீதா, அக்கா காபி கீபி கலந்துடப்போறா. எங்களுக்கு வேண்டாம்னு சொல்லிடு. ம்...கிளம்புங்கோ" என்று புறப்பட்டான் ராமதாஸ். அவள் நிஜமாகவே கலவரப்பட்டிருப்பதை அவன் கண்டுகொண்டான்.

வீட்டிலிருந்து தெருவிலிறங்கியதுமே டாக்டர் கிரிதரனைப் பற்றி ராமதாசிடம் பேசினாள் மரியம். டாக்டர் கிரிதரனைப் பற்றி எனக்குச் சொல்லுங்க...அவர் உங்க நண்பர்ங்கிறதைத் தவிர-பெண்கள் விஷயத்திலே அவர் உங்களைப் போன்றவர்தானா?"

"அந்த ஹே! சீதே...கதை ஏழுதினேனே, அது அவனுடைய புலம்பல்தான். ஆனால் அவன்...சீதையைத் தேடாத ராமன். தேடிப் பிரயோஜனம் இல்லைங்கறான். அப்புறம் அவனுக்கு சீதையைத் தேட நேரமும், இல்லை. இந்த நேரத்திலே அவன் கிளினிக்லே போயிப் பார்த்தால் நமக்குத் தலை சுத்தும்... நசநசன்னு குழந்தைகளும் வயசானவாளும்...அந்தக் குப்பத்து நோயாளிகளின் கூட்டத்தில் நாள் முழுதும் அவன் செய்கிற வேலைகளின் மத்தியில் யாராவது ஒரு நர்ஸ்தான் அவனுக்கு சீதையாக வருவாள் என்று நான் பரிகாசம் செய்வதுண்டு..." என்று மரியத்தின் பக்கம் திரும்பிப் பார்த்துச் சொல்லுகிறபோது சாலையைக் கடக்க வேண்டியிருந்தது.

"போய் உட்கார்ந்துகொண்டு விரிவாய்ப் பேசலாம் அவனைப்பற்றி...கிரிதரன்! அவனைப் பற்றிப் பேசுவது எனக்கு அமிர்தம் சாப்பிடுவதுபோல்... என்றான் ராமதாசன்.

மணலில் போய் உட்கார்ந்ததும் மரியம் கேட்டாள்; "அவருக்குப் பெற்றோர்கள்? குடும்பம்?" என்று கேட்டுப் பாதியில் நிறுத்தினாள். அவன் பதில் சொல்லுவதற்கு முன் தொடர்ந்து, "உங்களுக்கு அவர் எப்படி நண்பரானார்? பாலிய கால நண்பரா? படிக்கும்போதா?"

'இப்படி ஒரே சமயத்தில் கேட்டால்?' என்பதுபோல் விழியுயர்த்தி அவளைப் பார்த்தான் ராமதாஸ்.

"நீங்கள் ஒவ்வொன்றாகவே-விரிவாகச் சொல்லுங் கள். நான் ஒரே சமயத்தில் கேட்டுவிடுகிறேன்" என்று கூறி அவன் பேசப்போவதைக் கேட்க அவள் மௌன மாயினாள்.

"கிரிதரனுக்குத் தாய் இல்லை. அப்பா இருக்கிறார். சின்னம்மாவுக்கு வேறு குழந்தைகள் இருக்கவேணும். அது பத்தி நான் சரிவரத் தெரிஞ்சுக்கலே. அவனுக்குச் சொந்த ஊர் கும்பகோணம். எங்கப்பாவும் அவங்க அப்பாவும் நண்பர்கள். எங்களுக்கும் பூர்வீகம் அந்தப்பக்கம்தான்.

எங்கப்பா ஹோட்டலை மூடினப்புறம் ஒரு மெஸ்ஸிலே சமையல் பண்ணிண்டிருந்தார். கிரிதரன் பட்டணத்துக்கு, மருத்துவம் படிக்க வந்தப்போ அந்த மெஸ்ஸிலேயே தங்கிண்டிருந்தான். அப்போ ஒரு நாள் இவனை ஆத்துக்கு அழைச்சிண்டு வந்து, 'என் நண்பனின் மகன்'னு அறிமுகம் செய்து வச்சார். அப்பல்லாம் கிரிதரனுக்கும் அரசியலில் ஈடுபாடு இருந்தது. அப்பாவும் அவனும் மணிக்கணக்கிலே பேசிண்டிருப்பா. அப்பா தன்னோட கட்சியிலே கூட அவனைச் சேர்த்திருந்தார்...அவன் தனக்கு அதெல்லாம் ஒத்து வரலேன்னு கொஞ்ச நாள்லே விட்டுட்டான். ஆனாலும் அவனுக்கு இப்பவும் அரசியலிலே ரொம்ப ஈடுபாடு உண்டு. நிறைய படிப்பான்-ம்...அப்புறம் என்ன கேட்டீங்க?" என்று நிறுத்தினான் ராமதாஸ்.

"பெண்கள் விஷயத்திலே?...

"பெண்கள்-ஆண்கள் எல்லார் விஷயத்திலும் அவன் நல்ல டாக்டர்; நல்ல நண்பன். ஆனால் என்னைப் போல் பிரம்மச்சரியத்தை ஒரு விரதமாகக் கொண்டவன் இல்லே. அதைப்பத்தி நாங்க நிறையவே பேசியிருக்கோம். அவன் பெண்களை உயர்வா மதிக்கிறவன், குழந்தைகளை நேசிக்கிறவன், சுருக்கமா சொல்றதானா உயர்ந்த மனிதாபிமானி."

"வில் ஹி ஃபால் இன் லவ் வித் ஸம்ஒன்" என்று-அவன் யாரிடமாவது காதல் வயப்படுவானா?"-ஆங்கிலத்தில் கேட்டாள் மரியம்.

ராமதாஸ் கடற்கரை வெளியில் அண்ணாந்து சப்தமாய்ச் சிரித்தான்.

"அதில் பிரச்னை என்னன்னா, ரொம்பப் பெண்கள் அவன் மீது காதல் கொள்ளுவார்கள்...அதுதான் பிரச்னை...

"காதல் என்றாலே பிரச்சினைதானே?" என்றாள் மரியம்.

"இந்தக் குறிப்பிட்ட விஷயம் பற்றி இப்போது நான் சொல்லுவதெல்லாம் கிரிதரனுடைய கருத்துக்கள்- அதாவது நாங்க பேசிக்கொண்டபோது அவன் சொன்னவை! ஒருமுறை இதே வார்த்தைகளை அவனிடம் சொன்னேன், 'காதல் என்றாலே பிரச்சனைதான்'னு அவன் அதைப் பலமாக மறுத்தான். 'பிரச்சினைகள் இல்லாத-ஏற்பட முடியாத-ஏற்படாத உறவுக்குப் பேர்தான் காதல்! பொருந்தாக் காதல், உடற்கவர்ச்சிக் காதல், ஒருதலைக் காதல். ஒவ்வாக் காதல், இவை மூலம்தான் பிரச்சினைகள் வருகிறதாம். பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி விலகுவது என்று இதற்குப் பெயரில்லை யாம். அவன் சொல்லுவான், 'பிரச்சினைகளைத் தீர்க்க எண்ணுகிறவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையைப் பிரச்சினைகளினால் சோதித்துக் கொள்ளுவதில்லை' என்று.

"அது சரி, நான் எதற்கு இவ்வளவும் கேட்கிறேன் என்று நீங்கள் கேட்கவே இல்லை?" என்றாள் மரியம்.

"அதுதான் என்னவோ விபரீதம் என்றீர்களே-என்ன அது?"

"சீதா அவரையே நினைத்துக் கொண்டிருக் கிறாளாம்...

"அதில் என்ன தப்பு?"

"ஷீ இஸ் இன் லவ்,"

"வாட் இஸ் ராங் அபவுட் இட்...

"சீதா கல்யாணமானவள்...

"அந்தக் கல்யாணத்தின் மூலமா அவர்களுக்குள்ளே எந்த உறவும் அவர்கள் அளவில் ஏற்படலே; ஏற்படாதுன்னு நீங்கதானே ஒரு தடவை என்னிடம் சொன்னீங்க! இந்தக் கல்யாணம் எப்படி அவங்களோட தார்மீக உரிமையைப் பறிக்க முடியும்?"

"என்ன அது தார்மீக உரிமை?"

"காதலிக்கிற உரிமை. இப்பவும் அவங்க ஒரு கன்னிப் பெண்தானே?"

"ஆனாலும் இது எப்படி சரியாகும்...சாத்யமாகும்?" என்று குழம்பினாள் மரியம். "சீதாவின் சொந்த வாழ்க்கையைப் பற்றி நீங்கள் கிரிதரனிடம் பேசியிருக்கிறீர்களா?"

"ஆமாம், அதுவும் சீதாவின் பிறந்தநாள் விருந்துக்குப்பிறகு அடிக்கடி பேசியிருக்கிறோம்."

"உங்கள் நண்பர் திருமணமான ஒருத்தியிடம் கீழ்த் தரமாக நடந்து கொள்ளமாட்டார் என்று நம்புகிறேன்."

"இதில் என்ன கீழ்த்தரம், உயர்தரம்?" என்று தலை நிமிர்ந்து கேட்டான் ராமதாஸ். "ஒருவேளை அவர்கள் இருவருக்கும் மனமொத்துப் போனால்-சீதா செய்ய வேண்டுவது ஒரு விவாகரத்துதான்" என்றான்.

டாக்டர் கிரிதரன் கிளினிக் இருக்கும் கிருஷ்ணாம் பேட்டைப் பகுதியில், ஒரு பகுதியில், தெருவெல்லாம் அசுத்தம் செய்யும் இடமாகவும், சமையல் செய்யும் இடமாகவும் அந்த மக்கள் பாவித்து வாழ்ந்து வருகிற படியால் அங்கே நோய்களுக்கும் நோயாளிகளுக்கும் குறைவில்லாமல் எப்போதும் அந்த கிளினிக்கின் முன்னால் ஏழை மக்கள் காத்து நிற்பது நிரந்தரக் காட்சியாகிவிட்டது. 'கிளினிக் மூடியிருக்கும் அல்லது திறந்திருக்கும், கூட்டம் எப்பவும் இருக்கும் போலும்' என்று நினைத்துக் கொண்டு அந்தச் சிறிய சந்தில் காரை நிறுத்தினான் சுகுமாரன்.

காலை 7 மணி முதல் 11 மணி வரை, மாலை 4 மணி முதல் 9 மணி வரை என்று எழுதப்பட்டிருந்த நேரத்தையும் கைக்கடிகாரம் காட்டும் நேரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான் சுகுமாரன்.

'இன்னும் மணி நாலாகவில்லை. டாக்டர் உள்ளே தான் இருக்கிறார்' என்று நோயாளிகள் பேசிக் கொண்டார்கள்.

சுகுமாரன் 'காலிங்பெல்'லை அழுத்தினான்.

இடைவிடாத பணிகளின் மத்தியில் சிறிதே ஓய்வு கொள்ளுவதற்காக ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த டாக்டர் கிரிதரன் தெருவில் கார் வந்து நிற்பதையும் சுகுமாரன் இறங்கி வருவதையும் பார்த்துவிட்டு வேகமாய் வந்து கதவைத் திறந்தான்.

"வாங்க வாங்க..." என்று கை கூப்பி வரவேற்றான். மருந்துகளின் நெடி வீசுகிற அந்த கிளினிக் தூய்மையாய்ப் பளிச்சென்றிருந்தது.

மகாத்மா காந்தியின் படம் ஒன்று. அதனடியில் "நமது தந்தை" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததைப் படித்துக் கொண்டே டாக்டருடன் அவரது அறைக்குள் போனான், சுகுமாரன்.

"உட்காருங்கள்" என்று சொல்லி விட்டுத் தனது நாற்காலியில் போய் உட்கார்ந்தான் கிரிதரன்.

அவனுக்குப் பின்னால் மருத்துவஞானி ஹிப்ப கிரட்டஸின் உறுதிமொழி பெரிய பெரிய எழுத்துக்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட படம் அழகிய பிரேமிட்டு மாட்டப்பட்டிருந்தது.

சுகுமாரன் அந்த உறுதி மொழியை ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட கிரிதரன் அவனிடம் பேசி இடையூறு செய்யாமல் அவனையே கவனித்தான்.

சுகுமாரன் அதை வாய்விட்டுப் படித்தான். அவன் ஆங்கிலத்தில் படிப்பதை கிரிதரன் மனத்துள் தமிழாக்கம் செய்தான்...

"ஹிப்பகிரட்டஸின் உறுதிமொழி:

## 41

"அப்போலோ, அஸர்ஃபியஸ், ஹைஜியா, பனேஷியா ஆகிய தேவ மருத்துவர்களையும், தேவாதி தெய்வங்களையும் எனது சாட்சிகளாக வைத்துக் கொண்டு இந்தப் பிரமாண சத்தியவாக்கை மொழிகிறேன்.

''எனது சக்திக்கும் அறிவுக்கும் இசைய இப் பிரதிக்ஞையை நான் நிறைவேற்றுவேனாக! எனது செயல் திறமைக்கும், அறிவுத் திறனுக்கும் ஏற்ப மருத்துவ சாத்திரத்தின் சட்ட ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பேனாக! எனது நோயாளிகளின் நலனை மட்டுமே நாட்டத்தில் கொள்ளுவேனாக! அவர்களுக்குத் தீமை பயப்பதும், ஆரோக்கியத்துக்குப் புறம்பானதுமான அழிவுச் செயல்களிலிருந்து முற்றாக விலகியிருப்பேனாக!

"தாமே வேண்டிக் கேட்டுக் கொண்டாலும் ஓர் உயிரைக் கொல்லுவதற்காக நஞ்சு தராமலிருப்பேனாக! அவ்விதமான ஒரு யோசனையை யார் தந்த போதிலும் நான் அதைச் சிபாரிசு செய்யாதிருப்பேனாக! ஒரு பெண்ணின் கருவைச் சிதைப்பதற்காக அறுவைக் கருவியை நான் ஒரு போதும் பிரயோகிக்காமல் இருப்பேனாக!

"தூய்மையாகவும் புனிதமான எண்ணங்களோடும் உன்னதமான மருத்துவ ஜீவனத்தில் நான் வாழ்ந்திருப்பேனாக!...

"ஒரு நோயாளியின் நலன் பொருட்டு, சிகிச்சைக்காக மட்டுமே பிறர் மனையுள் பிரவேசிக்கிற நான், குறும்புத் தனங்களிலோ, துரோகச் செயல்களிலோ ஈடுபாடு கொண்டு இழிவடையாதிருப்பேனாக!

"நோயாளிகளின் வாழ்க்கையில் நான் கண்டு கேட்டு அறிந்த, பிறர் அறியத் தகாத அவர்களது ரகசியங்களை– அது எனது மருத்துவப் பணியுடன் தொடர்புடையது

ஆயினும், அல்லாது போயினும்-காப்பாற்ற வேண்டிய ரகசியங்களைக் காட்டிக் கொடுக்காதிருக்கவும் கடவேன்.

"நான் ஆணையிட்டு உறுதி மொழிகிற மகோன்னதமான இந்த சபதங்களை மாசுறாது காப்பாற்றுகிற பட்சத்தில், எக்காலத்திலும், எச்சந்ததியினராலும் வணங்கப்படுகிற இந்த மருத்துவக் கலையை ஜீவனோபாயமாய்க் கொண்டு என் சொந்த வாழ்க்கையை சீரிய முறையில் துய்க்கும் நற்பேறு பெறுவேனாக! மாறாக, நான் எனது ஆணைகளிலிருந்து பிறழ்வேனாகில் அந்த நற்பேறும் பிறழ்ந்து...

-அதற்குமேல் எதிர் மறையாய் வந்த மொழிகளை இவன் முன்னால், இவன் கேட்கப் படிப்பது கூடப் பொருந்தாது என்று நினைத்தவன் போல் கிரிதரனின் முகத்தைப் பிரமிப்புடன் பார்த்துப் புதிதாகப் புன்னகை செய்தான் சுகுமாரன். சுகுமாரனின் கண்கள் அவனறியாமல் பனித்திருந்தன. வியர்த்திருந்த நெற்றியை கைக்குட்டையால் துடைத்தவாறு நெஞ்சில் ஏதேதோ நல்லுணர்ச்சிகள் எல்லாம் ஒரே சமயத்தில் சுரந்து கனக்க, தான் வந்த காரணம் புரியாமல் வாயடைத்து உட்கார்ந்திருந்தான் சுகுமாரன்.

"இங்கே நான் புகை பிடிக்கலாமா?" என்று அனுமதி கேட்டான். கிரிதரன் சுத்தமாக இருந்த ஓர் 'ஆஷ் டிரே'யை தள்ளி அவன் முன் வைத்தான்.

தன் முன் நீண்ட சிகரட் பெட்டியை ஒரு புன்னகையால் மறுத்தான் கிரிதர்.

"ஆஷ் டிரே வைத்திருக்கிறீர்கள்..." என்று அந்த ஆஷ் டிரேயை ஒரு குழந்தை போல் ரசித்துக் கொண்டே கேட்டான் சுகுமாரன்.

"உங்களை மாதிரி புகை பிடிக்கிற சில 'பேஷண்ட்'கள் வருகிறார்களே! சரி, உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

"ஜஸ்ட் ஃபார் எ...ஜெனரல் செக்-அப்!...

"ஏன் அப்பிடி ஒரு செக்-அப் வேணும்னு தோணித்து உங்களுக்கு?" என்று கேட்டுக் கொண்டே ரத்த அழுத்தம் பரிசோதிக்கிற கருவியை எடுத்து வந்து சுகுமாரனின் அருகில் வைத்து, 'ஸ்டெத்'தை எடுத்து மாட்டிக் கொள்ளுமுன் சுகுமாரன் சொன்ன காரணத்தைக் கேட்டுச் சிரித்தான் கிரிதர். "எப்பிடி எப்பிடி இன்னொரு தடவை சொல்லுங்கள்..."

"சும்மா இருந்தால் தலை சுத்தறது...குடிச்சால் சரியாயிடறது...நான் வேடிக்கைக்குச் சொல்லலே டாக்டர்...எனக்கு ஏதாவது ப்ராப்ளம்னா இதான்... குடிச்சாத்தான் ஐ கெட் மை ஓன் பெர்ஸனாலிட்டி!"

"எல்லாம் உங்க கற்பனைதான் சார்" என்று சொல்லிவிட்டு சுகுமாரன் ரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தான். பரிசோதனைகள் முடிகிறவரை அவன் ஒன்றும் பேசவில்லை. சுகுமாரன் கிரிதரனைப் பற்றி யோசித்தவாறே பரிசோதனைகளுக்கு உட்பட்டான்.

"ஐ ஆம் சாரி. அது உங்கள் கற்பனை இல்லை. ஸ்லைட் ஹைப்பர் டென்ஷன் இருக்கு...கொஞ்ச நாள் நிறுத்த முடியுமா! இல்லேன்னா அளவைக் குறைக்கப் பாருங்க...கொஞ்சம் வெயிட்டைக் குறைக்கணும். ஆர் யூ எ 'நான்-வெஜிடேரியன்?'..."

"எஸ்-வெரிமச்!" என்று சிரித்தான்.

"கொழுப்புச் சத்துள்ளதைத் தவிர்க்கணும்...புகை பிடிக்கறதை நிறுத்தினால் உத்தமம். குறைச்சுக்குங்கோ..."

சுகுமாரன் பொறுப்பற்ற சிறுவனாயிருந்த போது பங்கஜவல்லியம்மாள் தனக்குப் புத்தி சொல்கிறதைக் கேட்டுச் சிரிப்பானே, அது போல் சிரித்தான்.

"நான் எங்கே சாப்பிடுகிறேன், என்ன சாப்பிடு கிறேன் என்றெல்லாம் நிதானிக்கிற நிலையிலா இருக்கிறேன்..."

"இனிமேல் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொள்ளுங்கள் ஸார், இவ்வளவு நவீனகால மனிதரான நீங்கள் உங்கள் உடம்பு விஷயத்தில் ஒரு பாமரன் மாதிரி இருக்கிறது ஆச்சரியமா இருக்கு."

"மருந்துன்னாவே பத்தியம், கட்டுப்பாடுகள்னு ஆயிடறது. நமக்கு சாத்தியமில்லே...நான் எப்படின்னா, கண்டது காட்சி, கொண்டது கோலம்கிற கொள்கையிலே நம்பிக்கை உடையவன்...அதனாலேதான் உங்களைப் போல இருக்கிற லட்சிய மனுஷர்களைப் பார்த்தால் ஒரு...ஒரு...என்ன சொல்றது...கையெடுத்துக் கும்பிடலாம்னு தோணறது...என் உடம்பைப் பத்திக் கவலையில்லை...

"ஒரு டாக்டருக்கு 'உடம்பு-நோய்-ஆரோக்கியம், இவ்வளவு தான் முக்கியம். நோயும் ஆரோக்கியமும் பொதுவான விஷயமா இருக்கிற போது உடம்பு மட்டும் எப்பிடி 'உன்னுடையது என்னுடையது'ன்னு தனி விஷயமா இருக்க முடியும்...

சுகுமாரன் நெற்றியில் சுருக்கம் விழ யோசித்தான்.

"ஏன்னா...இந்த உடம்பு அனுபவிக்கிற சந்தோஷம், அனுபவிக்காத ஏக்கம் இதெல்லாம் தனித் தனி விஷயமா. தனிப்பட்டவர்கள் செய்கிற கர்மாவா இருக்கிறதனாலே...

"இப்படி நினைக்கிறவங்கதான் தங்களுக்கு வருகிற நோய்கள் தெய்வங்களிடமிருந்து வருகிற தண்டனைகள் என்று நினைத்தார்கள்...ஏன், சில நோய்களைத் தெய்வம் தந்த வரம் என்று கொண்டாடுகிற மூடத்தனம் கூட இருந்ததாம். கொஞ்சம் முன்னே படித்தீர்களே-ஹிப்ப கிரட்டஸ்-அவர் அதையெல்லாம் மறுத்தார்...

"சொல்லுங்கள் டாக்டர்...நானே கேட்கணும்னு நினைச்சேன். இங்கிலீஷ் தெரியறதனாலே பல விஷயங்களைப் பத்திப் படிக்கிறமே தவிர, அதைப் பத்தி நமக்கு ஒண்ணுமே தெரியலே... இதுக்குத்தான் 'பொது அறிவு'ன்னு பேரு...அறிவுன்னா, சிறப்பா, குறிப்பா இருக்க

வேணாமோ? அப்பத்தானே நீங்க டாக்டர்?...நான் இன்டஸ்ட்ரியலிஸ்ட்? அது போகட்டும்; ஹிப்ப கிரட்டஸைப்பத்திச் சொல்லுங்கோ... என்று அவனிடம் பேசிக் கொண்டிருந்த குதூகலத்தில் தனது இயல்புக்கு மாறாக அதிகம் பேசினான் சுகுமாரன்.

''மருத்துவ சாத்திரத்தின் பிதாமகர் என்று கருதப்படும் இவரது காலம் கி.மு. 460. ஏதென்ஸ் உள்ளிட்ட கிரேக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் மருத்துவப்பணி புரிந்தும், தனது சீடர்களுக்கு அதைக் கற்பித்தும் வாழ்ந்து வந்த இந்த ஞானியின்-இந்த உறுதிமொழியைத்தான் இன்றும் மருத்துவ சாத்திரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளு கிறார்கள்... ஒரு சடங்குபோல!'' என்று சொல்லிச் சிறிது யோசித்து ''பிளாட்டோ இவருக்கு சமகாலத்தவர்'' என்று முடித்தான் கிரிதரன்.

வெளியில் காத்திருக்கும் நோயாளிகளுக்காகக் கதவு திறக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கிளினிக்கின் பணியாளர்கள், ஒரு நர்ஸ் ஆகியோர் வந்து தத்தமது பணிகளைச் சித்தம் செய்தனர். டாக்டரின் கண்களைச் சந்தித்தபோது வணக்கம் செய்தனர்.

டாக்டர் கிரிதர் சுகுமாரனுக்கான 'பிரிஸ்கிரிப் ஷனை' யோசித்து யோசித்து எழுதினான்.

''இதிலே ஒண்ணும் பத்தியம், கட்டுப்பாடெல்லாம் கிடையாது. சில வைட்டமின்கள்...அப்புறம் ரத்த அழுத்தத்துக்கான சில மாத்திரைகள்... உங்க நர்ஸ்கிட்ட நான் சொல்லிடறேன்... ஒழுங்கா மருந்து சாப்பிட வேண்டியது உங்க பொறுப்பு. நான் சொன்னபடி சாப்பாட்டு விஷயத்திலேயும் கொஞ்சம் கவனம்...

'இதெல்லாம் நடக்கிற விஷயமா? நர்ஸ் எப்பவும் என்னோட இருக்க முடியாதே... என்று நினைத்துக் கொண்டு அந்த பிரிஸ்கிரிப்ஷனை வாங்கிக் கொண்டான் சுகுமாரன். இன்னொரு கையில் தொங்கிக் கொண்டிருந்த பணப்பையிலிருந்து பணத்தை எடுத்தவாறு சொன்னான்.

"உங்களுக்கு கொடுக்கிற பணம் எவ்வளவானாலும் அது உங்களுக்கு இல்லைன்னு தெரியும்-பிளீஸ் அக்ஸெப்ட்'' என்று தாராளமாக அனேகமாகப் பையிலிருந்த பெருந்தொகை முழுவதையும் கொடுத்தான்.

"பணம் கொடுக்கறதும் வாங்கறதும் பெரிசில்லே... பயன் பெறணும். நீங்க என்னோட பேஷன்ட் மட்டுமில்லே; நண்பரும் கூட... என்று மருந்துகளைத் தவறாமல் சாப்பிட்டு உடம்பைப் பார்த்துக் கொள்ளுமாறு வேண்டினான் கிரிதரன்.

"பயனும் பெரிசா இருக்கணும் இல்லே!... என்று எதையோ நினைத்தவன் போல் சொன்னான் சுகுமாரன்.

நோயாளிகள் உள்ளே வருவதற்கான கதவு ஒரு பக்கம் திறக்கப்படுகிற போது சுகுமாரன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். அவனை வழியனுப்புவதற்காக கார் வரை வந்தான் கிரிதரன்.

"என் உடம்பைப் பத்தி ஒண்ணும் கவலை இல்லே ஸார்...நீங்க சொன்னீங்களே...உங்கள் நண்பன்னு-அந்த நட்புக்காகத்தான் வந்தேன். உடம்பு சந்தோஷத்தை அனுபவிக்கறதுக்குத்தானே-முடிஞ்சவரைக்கும்?" என்றும் வேதாந்தம் பேசினான் சுகுமாரன்.

"நமக்கு சந்தோஷம் தருகிற இதே உடம்பு நமக்குத் துன்பமும் தந்து விடக்கூடாதே...அப்படியானால் நாம நம்ம உடம்புகிட்டேயே நன்றி காட்டலேன்னுதானே அதுக்கு அர்த்தம்...இதுபத்தி நாம இன்னொரு சமயம் நிறையப் பேசுவோம். இந்த நட்புக்கு ரொம்ப சந்தோஷம்" என்று சுகுமாரனின் கையைக் குலுக்கும்போது பார்த்தான் டாக்டர் கிரிதர். சிகரெட்டை ஏந்தும் சுகுமாரனின் அந்த இரண்டு விரல்களும் புகைக்கறை படிந்து மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்துடன் அசிங்கமாய் இருந்தன. 'இந்த விரல்களே இப்படியென்றால், இவனுள்ளே எவ்வளவு புகை மண்டி எவ்வளவு கறை படிந்து இருண்டு கிடக்கும்!' என்று கற்பனை செய்தான் கிரிதர். அந்த இருளினூடே,

'கடலினும் பெரிய கண்கள் அம்மா' என்று அன்று கண்டு வியந்து நின்ற சீதாவின் பெரிய விழிகளும் முகமும் கிரிதரனுக்கு நினைவில் தெரிந்தன.

கார் போயிற்று. கடமை அழைத்தது. டாக்டர் கிரிதரன் நோயாளிகளின் நீண்ட வரிசையைப் பார்த்து, தனக்கு வணக்கம் சொன்னவர்களுக்கெல்லாம் தலையசைத்துக் கொண்டே திரும்பி வந்தான்.

## 42

"சுதந்தரி பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ராமதாஸும் மாரியம்மாளும் இடம்பெற்ற சில மாதங்களுக்குப் பிறகு...அந்தப் பிரபல வார இதழ் பிறந்தது. பத்திரிகைக்கு எதிர்பார்த்ததைவிட உற்சாகம் மிகுந்த வரவேற்பும் இருந்தது; விற்பனையும் பெருகியது. பல வருஷங்களாக எத்தனையோ வித நெருக்கடிகளுக்கும் சோதனைகளுக்கும் இலக்காகிவளர்ந்துள்ள பழம்பெரும் பத்திரிகையான சுந்தரியின் விற்பனை அளவை எட்டிப் பிடிக்கிற மாதிரி சுதந்தரியின் சர்க்குலேஷன் சில வாரங்களிலே கூடி வருவதைப் பத்திரிகையின் நிர்வாக இலாகாவினர் மகிழ்ச்சியுடன் வந்து வந்து சீதாவிடம் புள்ளி விவரக் கணக்குகளோடும் பாராட்டுதல்களோடும் தெரிவித்தனர்.

ஒரு பத்திரிகையில் ஆசிரியராக இருந்து பணிபுரிகிற அனுபவம் இனிமையாகவே இருந்தது சீதாவுக்கு. பிற பணிகள் போல ஏதோ குறிப்பிட்ட நேரத்துக்குப் போனோம், வேலையை முடித்து விட்டு வந்தோம் என்று இதிலிருந்து சற்றே விலகி ஓய்வு கொள்ளவே முடியாது...குறிப்பிட்ட நேரத்துக்கும், அதற்கு அதிகமாக வும் கூட அலுவலகத்தில் வேலையிருக்கும். அதன் பிறகு

அதைப் பற்றித் தலை நிறைய கவிந்துள்ள யோசனைகளும், திட்டங்களும் இரவெல்லாம் தூங்கவிடாமல் மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கும்.

ஒரு பத்திரிகை ஆசிரியர் தொழிற்சாலைக்குப் போய் பாடுபடுகிற உடல் உழைப்புத் தொழிலாளியாகவும், அறிவால் உழைத்து இரவுபகல் பணிபுரியும் ஓர் மூளை உழைப்பாளியாகவும் ஒரே சமயத்தில் இருவேறு கூறுகளாகிக் கூட்டுப்பணி புரியவேண்டும். அது மட்டுமா? எல்லாவற்றையும் கட்டி மேய்க்கிற மேஸ்திரி வேலை செய்ய வேண்டும். நள்ளிரவில், 'இந்நேரம் மூணாவது ஃபாரம் ரெடியாயிருக்கும்...அதிலே முப்பதாவது பக்கத்திலே ஒரு பாக்ஸ் மேட்டர் எழுதிக் குடுத்தேனே-அதைப் போட்டிருப்பாளோ'ன்னு சந்தேகம் வந்துடும். அப்புறம் தூக்கம் வராது. டெலிபோன் பண்ணி ரெஃபர் பண்ணித் தெரிஞ்சுண்டாத்தான்...அடுத்த கவலைப்பட முடியும்.

அதுக்கப்புறம் இன்னொரு கவலை, சந்தேகம், அதுவும் இல்லேன்னா ஒரு புதிய திட்டம், ஒரு சுவையான பகுதி. ஒருசூடான விவாதம்னு என்னமாவது இன்னொரு விஷயம் மண்டையிலே புகுந்துண்டு குடைய ஆரம்பிச்சுடும். அப்படி ஆரம்பிச்சுட்டா அந்தத் திட்டத்தை நிறைவேற்றிப் பத்திரிகையிலே பார்க்கிற வரைக்கும் ஒரு படபடப்பு; அமைதியின்மை; அதுக்குப் பிறகு ஒரு நிறைவு; ஆனால் மறுபடியும் 'இன்னொரு புதுமை இன்னொரு புதுமை'ன்னு எவ்வளவு கொடுத்தாலும் வாங்கி வாங்கி ஜீரணம் பண்ணிட்டு, வாரா வாரம் வாயைப் பிளந்துண்டு நிற்கிற இந்தப் பத்திரிகை அரக்கியிடம் சிக்கிக் கொண்டது போல் திணறவும் செய்கிறாள் சீதா.

"தொழிற்பண்ணைப் பெரும்நிதியும், அதில் பல்லோர் துணையுமிருப்பதால் இந்த அரிய காரியத்தை என்னால் வெற்றிகரமாகச் சமாளிக்க முடிகிறது' என்று

அடக்கத்துடன் எண்ணி உளப்பணிவும் கொள்ளுகிறாள் அவள்.

ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிய குறிப்புகளைக் காலையிலேயே போன் மூலம் மரியத்துக்குத் தெரிவித்துவிடுகிறாள் சீதா. ஆயினும் அவற்றைச் செய்து முடிக்க ஒரு நாளின் இருபத்திநான்கு மணி நேரங்கள் போதுமானதாகவில்லை. அப்படி எஞ்சி விடுகிற வேலைகளை மறுநாள் காலை வீட்டிலே செய்து முடித்து கொண்டுதான் அலுவலகத்துக்கு புறப்பட முடியும். அப்படிப்பட்ட நாட்களில் அதிகாலையிலேயே சீதா தனது அலுவல்களை ஆரம்பிக்க வேண்டியதாகி விடுகிறது.

**கா**லை ஆறரை மணிக்கு மரியத்தை அழைத்து வரக் காரை அனுப்பி விட்டு, வீட்டிலுள்ள அவளது அலுவலறையில் கையெழுத்துப் பிரதிகள் நிறைந்த ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தாள் சீதா.

மரியம் வந்தாள்.

"குட்மார்னிங்..."

"குட்மார்னிங்"

"இன்னிக்கு முதலில் செய்ய வேண்டிய வேலை?"

-மரியத்தின் கையிலிருந்த குறிப்புப் புத்தகத்தின் தாள்கள் சரசரத்துப் புரள...

"ராமதாஸ் எழுதியிருக்கிற 'சமையல் கலை'க் கட்டுரைப் பகுதிக்கு ஓர் அறிமுகக் கட்டுரை அல்லது ஆசிரியர் குறிப்பு எழுதணும்..."

"மரியம்...'சமையல்கலை'ங்கிற தலைப்புக்குப் பதிலா வேறு ஏதாவது யோசிச்சுச் சொல்லு...அது ரொம்ப 'ஸ்டேலா' இருக்கு... 'சமையல் ஒரு கலை'... என்று யோசித்து அதையும் மனத்திலேயே தள்ளுபடி செய்தாள்.

அப்போது சமையற்காரப் பாட்டி இவர்களுக்குக் 'காபி' கொண்டு வந்தாள்.

"பாட்டி...நம்ப பத்திரிகையிலே சமையல் கலையைப் பத்தி எழுதப் போறோம்...நீங்க சம்பந்தப்பட்ட விஷயமாச்சே! பொருத்தமா ஒரு தலைப்பு சொல்லுங்களேன்" என்று பாட்டியின் வாயைக் கிளறினாள் சீதா. ஆமாம், ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பொறுத்தவரை எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அதைப் பத்திரிகைக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும். உண்மையில் அரிய யோசனைகள் பல சாமானிய மனிதர்களால்தான் முன் மொழியப் படுகின்றன என்று சீதா தனது குறுகிய காலப் பத்திரிகை அனுபவத்திலேயே பயின்றிருந்தாள்.

"எவ்வளவோ பொருத்தமா சொல்லலாம்..'சூடும்-சுவையும், 'சாப்பிட வாங்கோ, 'நளபாகம்" என்று பாட்டி படபடவென்று தலைப்புகளாகப் பொரிந்தாள்.

"நம்ம ஆசிரியர் குழுவிலே பாட்டியையும் சேர்த்துக்கலாம் போலிருக்கே" என்று பாட்டியின் வாக்குச் சாதுரியத்தை வியந்தாள் மரியம்.

"நேக்கு எழுத்து வாசனை கிடையாதம்மா... பொஸ்தகமெல்லாம் யாரையானும் படிக்கச் சொல்லிக் கேட்பேன்...இப்ப புதுசா போடறேளே...சுதந்தரி ரொம்ப நன்னாருக்கு... என்று பாட்டியும் பத்திரிகையைப் பாராட்டினாள்.

"சாப்பிட வாங்கோ'ங்கற தலைப்பு நன்னா இருக்கு இல்லே....பாட்டி சொன்ன தலைப்பு..." என்று அவள் காபி தம்பளர்களுடன் போன பிறகு அதையே அங்கீகரித்தாள் சீதா.

"ஒரு பாட்டி சாப்பிடக் கூப்பிடுகிற மாதிரி தலைப்பும் படமும் போடச் சொல்லணும்... ம்... எழுதிக்கோ..."

"இனிமே எழுதறது ஆசிரியர் குறிப்பு...முதல் பாரா..."நமது வீட்டில் உள்ள சமையல் அறையைச் சாமானியமான, வெறும் அடுப்பூதும் பெண்கள் அடைந்து கிடக்கிற இடமாக எண்ணி விடாதீர்கள். அது ஒரு விஞ்ஞானக் கூடம். அங்கே ரசாயனம், பௌதிகம், தாவர இயல், விலங்கியல், பொறியியல், மருத்துவம், சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய எல்லாப் பிரிவுகளும் சங்கமிக்கின்றன. அங்கிருந்துதான் இந்தக் கலைகள் யாவும் தொடங்கின போலும். சமையல் ஓர் விஞ்ஞான பூர்வமான கலையாக இக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அக்கலையில் தேர்ச்சி பெற்ற ஓர் சிறந்த எழுத்தாளரான பாரதனின் 'சாப்பிட வாங்கோ' தொடர் இவ்விதழில் ஆரம்பமாகிறது சூடாகவும் சுவையாகவும் சுய தன்மையோடும் எழுதும் பாரதனின் இலக்கியப் படைப்புகளை இது காறும் சுவைத்து வந்த வாசகர்களுக்கு இது புதுமையான ஒரு விருந்தாக அமையும். இக்கட்டுரையில் வரும் சந்தேகங்களை வாசகர்கள் எழுதி சுதந்தரியில் விளக்கங்களும் பெறலாம்'-போறாதோ? நறுக்குத் தெறிச்ச மாதிரி இருக்கணும். அறிமுகமே வளவளன்னு இருக்கப்படாதோன்னோ? ஓ.கே... அடுத்து?"

மரியத்தின் கையில் உள்ள குறிப்புப் புத்தகத்தின் ஏடுகள் சரசரவெனப் புரண்டன.

**கா**லை ஒன்பது மணி வரைக்கும் சீதா டிக்டேட் செய்வதை யந்திரம் போல் எழுதிக் கொண்டிருந்தாள் மரியம்.

ஒன்பது மணிக்கு எழுத்து வேலை முடிந்து இருவரும் அறையிலிருந்து வெளி வரும்போது ஹாலில் எதிர்ப் பட்டான் சுகுமாரன்.

"ஹாய்...டார்லிங்...குட்மானிங் மிஸ் மரியம்" என்று இருவரையும் குதூகலமாய் வரவேற்றான் சுகுமாரன்.

மரியம் அவனுக்கு 'வணக்கம்' கூறினாள்.

"சீதா, நீ ரொம்பக் கடுமையா வேலை செய்யறே...நீ இன்னும் ஒருத்தரை உதவிக்கு வெச்சுக்கறது நல்லது. பாவம், மிஸ் மரியத்துக்கு ரொம்ப ஸ்டிரெயின்!" என்று அனுதாபமாய் மரியத்தைப் பார்த்தான் சுகுமாரன். சீதாவுக்கும் அதே உணர்ச்சிதான் ஏற்பட்டது.

"ஆமாம்; நான் உன்னை ரொம்ப வேலை வாங்கத்தான் செய்கிறேன்..." என்று மன்னிப்பு வேண்டுகிற குரலில் மரியத்திடம் சொன்னாள் சீதா.

"ஆமாம்...நாம ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய்யறது உண்மைதான்...ஆனால் இதிலே எவ்வளவு சந்தோஷம் இருக்கு!... என்று தனது அதிகப்பட்ட வேலைகளுக்காக மகிழ்ச்சி அடைந்தாள் மரியம்.

"அதுதான் கலைகள் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கும் மத்த வேலைகளுக்கும் உள்ள வித்தியாசம்" என்றாள் சீதா.

"கலையானாலும், கலப்பைப் பிடிக்கிறதானாலும் கடுமையான வேலையினாலே உடல் களைச்சுப்போகும் இல்லியா? அதனாலேதான் ஓய்வும் வேணும்னு டாக்டர்கள் சொல்றா..." என்றான் சுகுமாரன், கிரிதரனை நினைத்துக் கொண்டு.

தான் சொல்ல வந்த விஷயத்தை சீதா மரியத்திடம் விளக்கினாள்:

"உதாரணமா ஒருத்தி விறகு பிளக்கிறான்னு வெச்சுக்குவோம். கோடாலியை எடுத்து முதலில் பிளக்கும் போது அவள் வேகமாகவும் பலமாகவும் உற்சாகமாகவும் ஆரம்பிப்பாள்...போகப்போக உடம்பு களைச்சுப் போகும். வேலையும் சோர்ந்து போகும்-இல்லியா? ஆனால் அவளே நாட்டியம் ஆடறா, டென்னிஸ் ஆடறான்னு வெச்சுக்கோ, ஆரம்பத்திலே கொஞ்சம் சோர்வு தட்டினாலும், மந்தமாயிருந்தாலும், இறுதியிலே வேகமும் உற்சாகமும் அதிகமாயிடறது இல்லியா? உடல் களைப்பு

அப்போ தெரியறது கூட இல்லை. கலை சம்பந்தப்பட்ட கடுமையான உழைப்பிலே என்னதான் களைப்படைஞ்சாலும் அதிலே இப்படி ஒரு "டானிக்' இருக்கு. இல்லையா ம்ரியம்?" என்று சீதா சொன்னதைக் கேட்டு சுகுமாரனும் ஆமோதித்தான். 'ஓ! இவள் ஒரு பத்திரிகை ஆசிரியையே ஆகிவிட்டாள்' என்று மனத்துள் புகழ்ந்து கொண்டான் சுகுமாரன்.

"சீதா...உன்னைப் பார்க்கவே முடியலே, பார்த்தாலும் பேச முடியலே...நீ ரொம்ப பிஸியாக இருக்கியேன்னு சொன்னேன்...உன் ஃபிரண்ட் டாக்டர் கிரிதரன் இப்ப எனக்கும் நெருங்கின நண்பராயிட்டார்!" என்று டாக்டர் கிரிதரனைப் பற்றி அவன் சொல்ல ஆரம்பித்ததும் ஓர் இங்கிதம் கருதி அங்கிருந்து அகன்றாள் மரியம்.

"நீ எப்பவாவது அவரோட கிளினிக்குக்குப் போயிருக்கியோ? இல்லேன்னா அவசியம் போகணும்; அதைப்பத்தி நீ உன் பார்வையிலே எழுதணும். அது எல்லாருக்கும் பயன்படும். அவர் ஒரு முன்மாதிரியான டாக்டர். எனக்கும் எவ்வளவோ டாக்டர்களை தெரியும்...இவர் ஒரு லட்சிய டாக்டர்... அவரும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைக்கிறார். 'மத்தவங்களை மட்டும் ஓய்வு எடுத்துக்கச் சொல்றீங்களே, உங்களுக்கு ஓய்வே கிடையாதா, டாக்டர்'னு கேட்டேன், 'உண்டு, உண்டு. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எனக்கு ஓய்வுதான். எப்பவாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை பூரா என்னோட இருந்து பாருங்கோ'ன்னார். அடுத்த வாரம் நான் போகலாம்னு நினைச்சேன். அப்ப உன்னையும் கூப்பிடலாமான்னு நினைச்சேன்...எப்படி? உனக்கு நேரம் இருக்குமா?'' என்று கண்ணைச் சிமிட்டியவாறு நன்னயத்துடன் கேட்டான் சுகுமாரன்.

சீதாவின் கண்களில் நன்றி உணர்ச்சி மின்னியது.

“ம்ஹும்! எனக்கு இந்த ஞாயிற்றுக்கிழமை முடியாது. வேணுமானா அடுத்த ஞாயிற்றுக்கிழமை போகலாம்” என்று நெஞ்சுள் பொங்கியெழுந்த ஆர்வத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள்.

‘அவரைப் பற்றி எழுது’ என்று சுகுமாரன் சொன்ன வார்த்தைகள் அர்த்தமுள்ள ஒரு தூண்டுகோலாய் அவள் உள்ளத்தில் சின்னதாய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் சிறு விளக்கின் சுடரைத் தூண்டிவிட்டாற் போலிருந்தது.

## 43

“சுதந்தரி”யின் ஆசிரியர் குழு மாதாந்திரக் கூட்டத்தில் அடுத்த மாத இதழ்கள் பற்றிய விவாதத்தின் போது மருத்துவச் சிறப்பிதழாக ஓர் இதழை வெளியிடும் யோசனையை முன்மொழிந்தாள் சீதா.

“இது சம்பந்தமா நான் சொல்ல விரும்பறது என்னன்னா?” என்று சொல்லி நிறுத்தித் தன்னை எல்லாரும் கவனித்த பின்னர் சுகுமாரன் தொடர்ந்தான். “ஒரு மருத்துவச் சிறப்பிதழ் வெளியிடறது ரொம்ப நல்ல யோசனை, அதுக்காக நீங்க பல்வேறு டாக்டர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அந்தக் கட்டுரைகளை எல்லாம் மொத்தமா மேற்பார்வை செய்யறதுக்கும்–மருத்துவ சம்பந்தமா ‘ஆதன்ட்டிக்கா’ ஆலோசனைகள் சொல்றதுக்கும் நம்ப எல்லாருக்குமே பொதுவான நண்பரான டாக்டர் கிரிதரனை இருக்கும்படியாக கேட்டுக்க வேணும்; அவர் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்...”

“அந்தப் பொறுப்பை நீங்க எடுத்துக்குவேள்னா மகிழ்ச்சியோடும், நன்றியோடும் நாங்க ஒப்புத்துக்கிறோம் இது மிகவும் உதவிகரமான யோசனை” என்ற சீதா, இந்த

விஷயங்களைப் பக்கத்திலிருந்த ஸ்டெனோ குறித்துக் கொள்ளுகிறாளா என்று கவனித்தாள்.

"டாக்டர் கிரிதரனுக்கு ஒரு லெட்டர் டைப் பண்ணி மீட்டிங் முடியறதுக்கு முன்னே கொண்டுவரச் சொல்லு மரியம்-நான் கையெழுத்துப் போட்டுட்டா, இன்னிக்கே அனுப்பிச்சுடலாம்...

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை, நானும் சீதாவும் டாக்டர் கிரிதரனோடு ஒரு ஓய்வு நாளைக் கழிக்கறதா இருக்கோம். இப்ப, நாம எல்லோருமே அன்னிக்கு அவரோட இருந்தால் நம்ம மருத்துவச் சிறப்பிதழுக்கு ஒரு விசேஷக் கட்டுரை தயாரிக்கலாம்னு நினைக்கிறேன். போட்டோகிராபரையும் வரச்சொல்லுவோம்..." என்றான் சுகுமாரன்.

"அடாடா! நான்தான் வரமுடியாது; அடுத்த வார இதழ் பொறுப்பு என் தலையில் விழுந்திருக்கிறதே" என்று முனகிக் கொண்டான் ராமதாஸ்.

-ஆமாம்: ஒரு மாதத்தின் நான்கு இதழ்களையும் உருவாக்குகிற பொறுப்பும் எல்லோருக்கும் உண்டு என்றாலும் குறிப்பாக ஒவ்வொரு துணை ஆசிரியர் ஒவ்வொரு இதழுக்கும் முழுப் பொறுப்பேற்கவேண்டும் என்ற தீர்மானம் உருவான கூட்டத்தில் சுகுமாரன் கலந்து கொள்ளவில்லை.

"ராமதாஸ் ஏன் நம்முடன் வர முடியாதாம்?" என்றான் சுகுமாரன்.

அந்த ஸ்டெனோ அதற்கான காரணத்தை, அதற்கு முன் நிகழ்ந்த கூட்டத்தின் தீர்மானத்தை சுகுமாரனின் காதருகே குனிந்து விளக்கிச் சொன்னாள்.

அந்தத் தீர்மானத்துக்காக அவன் பாராட்டுணர்வுடன் சீதாவைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

அன்றையக் கூட்டம் முடிவதற்கு முன்பு, பல டாக்டர்களுக்கும், சுகாதார நிலையங்களுக்கும் பேட்டி

காணவும் கட்டுரைகள் வரையவும் அனுமதி கேட்டு எழுதப்பட்ட கடிதங்கள், நகல்களுடன் ஆசிரியரின் கையெழுத்துக்காக மேஜையில், சீதாவிடம் வைக்கப் பட்டது. அதில் மேலாக இருந்த கடிதம் டாக்டர் கிரிதரனுக்கு எழுதப்பட்டிருந்தது. அது வெறும் மாமூல் கடிதம்தான். கையெழுத்திடுவதற்கு முன், தன் கைப்பட அக்கடிதத்தின் கீழே சிறிய எழுத்துக்களில் சீதா எழுதினாள்.

"அன்புள்ள நண்பருக்கு, தங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் ஒருமுறை சந்தித்த பிறகு, மீண்டும் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் வரும் என்று காத்திருந்தேன். அந்த சந்தர்ப்பம் வந்திருப்பதாகக் கருதுகிறேன். சுதந்தரிப் பத்திரிகையின் மருத்துவச் சிறப்பிதழுக்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் மனமுவந்து வழங்குவீர்கள் என்று நம்புகிறேன்; பிற நேரில்-சீதா."

கிரிதரன் அந்தக் கடிதத்தைக் கண்டு மன நிறைவும், மகிழ்ச்சியும் அடைந்தான். கடிதத்தாளின் தலைப்பில் வரிசையாக அச்சடிக்கப்பட்ட தொலைபேசி எண்களைப் பார்த்து 'எடிட்டோரியல்' செக்ஷனுக்குப் போன் பண்ணினான்.

"வணக்கம்-சுதந்தரி..."

"வணக்கம். நான் டாக்டர் கிரிதரன் பேசறேன். மிஸ்டர் ராமதாஸ் வேணும்."

"கொஞ்சம் இருங்கள், பார்க்கிறேன்...அவர் இன்னும் வரலே ஸார்...ஏதாவது 'மெஸேஜ்' இருந்தா சொல்லுங்க...

"எடிட்டர் இருக்காங்களா?"

"இருக்காங்க-ஒரு நிமிஷம்."

"டாக்டர் கிரிதரன் லைன்லே இருக்கார்."

"பிளீஸ்-குடு."

"வணக்கம்-நான் சீதா பேசறேன்."

"வணக்கம்...உங்க கடிதம் வந்தது. ரொம்ப சந்தோஷம். இதிலே நானும் பங்கெடுத்துக்க வாய்ப்புத் தந்ததுக்கு ரொம்ப நன்றி..."

"ரொம்ப மகிழ்ச்சி!..." சீதாவுக்கு அதுக்கு மேலே என்ன பேசுவது என்று புரியாமல் குரல் அடைத்துப் போயிற்று.

"அப்புறம், மிஸ்டர் சுகுமாரன் சொன்னாராமே உங்களிடம்? வர ஞாயிற்றுக்கிழமை 'ஒரு டாக்டரின் ஓய்வு நாளைக் கவனிக்க' என்னோட வரப்போறதைப்பத்தி... நீங்களும் வரலாமே...நானே போன் பண்ணி உங்களை அழைக்க வேணும்னு நினைச்சுண்டு இருந்தப்ப உங்க கடிதம் வந்தது..."

அவசியம் நான் வருவேன்...'ஒரு டாக்டரின் ஓய்வு நாள்'னு ஒரு சிறப்புக் கட்டுரை எழுதறதா தீர்மானம் பண்ணியிருக்கோம்...உங்க உதவி ரொம்பத் தேவைப்படும்..."

"ஓ! அது என் கடமை இல்லியோ?"

"ரொம்ப நன்றி..."

"ஞாயிறு சந்திப்போம் நன்றி..."

சீதா பேசி முடித்து முகம் சிவந்து, நெற்றி வியர்க்க ரிஸீவரை வைத்தபோது எதிரில் வந்து ராமதாஸ் நின்றிருந்தான்.

"டாக்டர் கிரிதரன்தானே?" என்று அவன் கேட்டது தனது உணர்ச்சிகளை அவன் புரிந்துகொண்டதனாலோ என்று அவள் மேலும் முகம் சிவந்தபோது,

"வரவேற்பிலே சொன்னா: 'டாக்டர் கிரிதர் போன்லே இருக்கார்-உங்களைத்தான் கேட்டார். நீங்க இல்லேன்னதும் எடிட்டர் கிட்ட பேசிண்டிருக்கார்'னு" என்று விளக்கியவாறே எதிரிலிருந்த நாற்காலியில் சீதாவின் மேசைக்கு முன்னால் உட்கார்ந்தான் ராமதாஸ்.

சீதா மேசையின் மீது இருந்த போர்டில் உள்ள பொத்தானை அழுத்தினாள்.

சில வினாடிகளில் மரியம் அறையுள் தோன்றினாள். ராமதாசும் மரியமும் வணக்கம் சொல்லிக்கொண்டனர். ராமதாஸின் பக்கத்திலிருந்த இன்னொரு நாற்காலியில் குறிப்புப் புத்தகத்துடன் உட்கார்ந்தாள் மரியம்.

ஞாயிற்றுக் கிழமை அதிகாலை ஆறுமணிக் கெல்லாம் சுகுமாரனின் கார் டாக்டர் கிரிதரனின் கிளினிக்கின் முன்னால் 'பிக்னிக்' போகிற ஆயத்தங் களுடன் வந்து நின்றது. புறப்படத் தயாராக வாசலிலேயே நின்றிருந்த கிரிதரன், காரிலிருந்த சீதாவையும் மரியத்தையும் உள்ளே வருமாறு அழைத்தான். மரியமும் சீதாவும் கைகூப்பிய வண்ணம் வந்தனர். அவர்களை உள்ளே அழைத்துச் சென்று கிளினிக்கைச் சுற்றிக் காண்பித்தான் கிரிதரன்.

பெரிய பெரிய எழுத்துக்களில் எழுதி, பிரேமிடப் பட்டிருக்கும் 'ஹிப்பகிரட்டஸின் உறுதிமொழி'யை மரியமும் சீதாவும் நின்று படித்தனர்.

''மரியம், இதை அப்படியே ஆங்கிலத்தில் எழுதிக்கொள், அப்புறம் மொழிபெயர்த்துக் கொள்ளலாம் என்று உத்தரவிடுவது போல் சொன்னாள் சீதா.

"சிரமப்பட வேண்டாம். நான் தருகிறேன்" என்று சொல்லி அறைக்குள் சென்று ஒரு மருந்து கம்பெனியின் அன்பளிப்பு அட்டையைக் கொண்டு வந்து தந்தான் கிரிதரன்.

சீதா-அந்த அழகிய முறையில் அச்சடிக்கப்பட்ட அட்டையைப் பிரசுரித்த-மருந்துக் கம்பெனியின் முயற்சியைப் பாராட்டினாள்.

கிரிதரன் சிரித்தான்: ''இதெல்லாம் வெறும் விளம்பரப் பகட்டு. இதன் அர்த்தம் தெரிந்தோ இந்த

உறுதிமொழியை நம்பியோ இதை அவங்க வெளியிடற தில்லை.”

புருவங்கள் நெறிய அவனைப் பார்த்தாள் சீதா. அவளது பார்வையில் கேள்வியோ, சந்தேகமோ அல்லாமல், அவன் சொன்னதைக் குறித்து அவளுள் ஏற்பட்ட தெளிவே தெரிந்தது.

“மருத்துவக்கலை எவ்வளவு மேலானது, உயர்வான துன்னு நீங்க எழுதறதை விடவும் அவசியம் என்னன்னா, அது அவ்வளவு மோசமான வியாபாரமாகவும் சமூகத் தீமையாகவும்கூட மாறிண்டுவரது நம்ம தேசத்திலேங் கறதுதான்; அதைப் பத்தி நீங்க அதிகம் அழுத்தம் தந்து எழுதணும்...”

அவன் சொல்லுவதை மனத்துள் குறித்துக் கொள்ளுவதைப் போல் கேட்டுக் கொண்டாள் சீதா.

அப்புறம், அவன் வாழும் சிறிய குடித்தனப் பகுதியை அவர்களுக்குக் காட்டினான். இன்று அந்த சமையல்கார ராமனுக்கு விடுமுறையாம். சமையலறையைப் பற்றி என்னமோ சொல்லுகிற மாதிரி பேசிக் கொண்டே நொடியில் அவர்கள் மூவருக்கும் காபி தந்தான் கிரிதரன். காபியை உறிஞ்சிக் கொண்டே விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள் மரியம்.

“மன்னிக்கவும்-நாம எங்கே போகப்போறோம்னு சொன்னீங்கன்னா ஆபீசுக்கு ஒரு போன் பண்ணி, போட்டோ கிராபரை நேரே அந்த இடத்துக்கு வரச்சொல்லிடலாம்” என்று அவனது பேச்சில் இடைமறித்துப் பணிவாகக் கேட்டாள் மரியம்.

டாக்டர் கிரிதரன், தான் சொல்லப்போவதை ஆர்வமாய் எதிர்பார்க்கும் சுகுமாரனைப் பார்த்துச் சிரித்தான்.

அவர்கள் அனைவரும் உல்லாசமாகப் பொழுது கழிக்க பிக்னிக் செல்வதுபோல ஏதோ நினைக்கிறார்கள் என்பதை நினைக்க அவனுள் இன்னும் சிரிப்பு வந்தது.

"ஆமாம், உங்களுக்கே அதை நான் இன்னும் சொல்லலே இல்லே...ரொம்ப அற்புதமான இடம்; ஒரு சின்ன மலையடிவாரம்...ஏரிக்கரை மேடு, அதன் மேலே ஏறிப் பார்த்தால் பெரிய ஏரி...ஒரு 'பிக்னிக் ஸ்பாட்' மாதிரிதான் இருக்கும். இங்கிருந்து இருபது மைல் தள்ளி..." ஓர் ஊரின் பேரைச் சொல்லி "லெப்ரஸி ஸெனடோரியம்-" என்றான்.

சுகுமாரன் அதிர்ச்சி அடைந்தான்! "லெப்பர்?"

"ஆமாம். தொழுநோயாளிகளின் விடுதி! அங்கே என் நண்பர்கள் டாக்டர்களாயிருக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் அந்த டாக்டர்கள் மட்டுமல்லாமல், அந்த நோயாளி நண்பர்களும் என்னை எதிர்பார்த்திருப் பார்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் சுகுமாரன் முற்றிலும் பின்வாங்கி விட்டான்! "ஐ ஆம் ஸாரி டாக்டர், நான் வரலே டாக்டர்...எனக்குத் தாங்க முடியாது, குமட்டும்...மன்னிச்சுக்கணும். நான் டிரைவரை உங்களோட அனுப்பறேன்...ஐ ஆம் ரியலி ஸாரி...ஐ கென் நாட் ஸ்டாண்ட் இட்..." என்று பரிதாபமாக மன்னிப்புக் கேட்டவாறு உட்கார்ந்து விட்டான்.

"நீங்கள்?" என்று சீதாவையும் மரியத்தையும் பார்த்தான் கிரிதரன்.

"நாங்கள் பத்திரிகைக்காரர்கள். ஒரு டாக்டருக்கு உள்ளதுபோல் எங்களுக்கும் சில கவசங்கள், கடமைகள் உண்டு. மேலும் மருத்துவத்தின் சிறப்பே நோயாளிகளைக் கனிவோடு காண்கிற பார்வைதானே? எங்கள் மருத்துவச் சிறப்பிதழில் தொழுநோயாளிகளைப் பற்றி எழுதுவோம் என்று நான் நினைக்கவே இல்லை. இது ரொம்ப முக்கியமானதுதான். நாங்கள் வருகிறோம்..." என்றாள் சீதா.

"ஓ. கே. போகும் போது என்னை ஆத்திலே விட்டுடுங்கோ" என்று குழந்தைமாதிரி சொன்னான் சுகுமாரன்.

அனைவரும் புறப்பட்டார்கள்.

## 44

அந்த ஞாயிற்றுக்கிழமையை உல்லாசமாக-டாக்டர் கிரிதரன், சீதா, மரியம், போட்டோகிராபர் புடைசூழ-எங்கேனும் இயற்கைச் சூழ்நிலையில் கழிக்கலாம் என்றிருந்த சுகுமாரன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான். ஏமாற்றங்களுக்கெல்லாம் அவனுக்கு மாற்று மதுவின் துணைதான்.

பங்கஜவல்லியம்மாளுக்கு உணவு கொடுத்து மருந்து கொடுத்து கொஞ்சம் கண்ணயரச் செய்துவிட்டு மீனாவும் வந்தாள்...அவனுக்குத் துணையாக!

ஒரு மணி நேரத்துக்கு முன்பு அவன் வந்த காரில் ஒரு டிரைவரைப் போட்டு அனுப்பிவிட்டுக் குனிந்த தலையுடன் அவன் மாடிக்குப் போகும் போதே பார்த்தாள் மீனா. 'போகிற வழியில் இவருக்கு 'மூட்' மாறியிருக்கும்' என்று நினைத்துக் கொண்டாள்.

பாட்டிலையும் கிளாஸையும் வைத்துக்கொண்டு கையில் புகையும் சிகரட்டுடன், மீனா வந்ததைக்கூடக் கவனியாமலிருந்தான் சுகுமாரன்.

அவன் பார்வைக்கு நேரே வந்து நின்றாள் மீனா. இருவரும் ஏதோ நினைவுகளுடன் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை செய்து கொண்டனர்.

"உட்காரு...

"ஏக தடபுடலா எங்கேயோ 'பிக்னிக்' போறதா கிளம்பினேள்! நீங்க மட்டும் தனியா திரும்பிட்டேளே?"

"இட் இஸ் ஆல்ரைட்! நான் போறது அவ்வளவு முக்கியமில்லே. அவா ஏதோ சானடோரியத்துக்குப் போயிப் பார்த்துப் பத்திரிகையிலே எழுதப் போறாளாம்" என்று சொல்லி விட்டு விஸ்கி பாட்டிலைத் திறந்தான் சுகுமாரன். மீனா அவனுக்கு அதை கலக்கிக் கொடுத்தாள். கையில் ஏந்திய கிளாஸைப் பார்த்தவாறே-டாக்டர்

கிரிதரன், தன்னைக் குடியை நிறுத்தும்படியும், முடியாவிட்டால் குறைத்துக் கொள்ளும்படியும் கூறிய யோசனையை நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

"என்ன நீங்களே சிரிக்கறேள்?"

"நீ, டி. ஹெச். லாரன்ஸின் 'லேடி சாட்டர்லிஸ் லவர் படிச்சிருக்கியா?"

"படிச்சதில்லே, கேள்விப்பட்டிருக்கேன்... 'நொட்டோரியஸ்னு"

"சேசே! அதிலே ஒரு மனுஷனின் மனோபாவம்–அதுவும் ஒரு பிரபுவின் மனோதர்மம் நன்னா சொல்லியிருக்கு...சீமாட்டி சாட்டர்லி அழகி, யுவதி. சாட்டர்லி பிரபு கிழவன். அவனுக்குத் தன் சீமாட்டி இன்னொருத்தனின் ஆசை நாயகியா இருக்கிறதைக்கூட ஒத்துக்க முடியும்...ஆனால் அந்தச் சீமாட்டி அதுக்காக ஒரு ஆட்டிடையனைக் காதலிக்கறதைப் பொறுக்க முடியலே, அந்தப் பிரபுவுக்கு...இந்த ஸைக்காலஜி உனக்குப் புரியறதா?"

"புரியாமல் என்ன? ஒழுக்கம் கெட்டாலும் அந்தஸ்தோட கெடணும்னு நினைக்கிற ஸைக்காலஜி தான்" என்று சிரித்தாள் மீனா. "அதுசரி. இப்ப ஏன் உங்களுக்கு அந்த நினைப்பு வந்ததாம்?"

"லேடி சுகுமாரன்ஸ் லவர்–எல்லாவிதத்திலேயும் ரொம்ப உயர்ந்தவன்" என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டு நையாண்டியாகச் சொன்னான் சுகுமாரன்.

"நீங்க உங்க சந்தேகத்தை உறுதிப்படுத்தறீங்களா? இல்லே, நெஜமாகவே அப்படியா?" என்று ஒருவகை மனக் குறுகுறுப்புடன் கேட்டாள் மீனா.

"ம்...அப்படி ஆகணும்னு நான் விரும்பறேன்" என்றான் சுகுமாரன்.

"அபத்தம்! அப்படி ஏதானும் இருந்தால் அதை நீங்க கண்டுக்காமல் இருக்கறதுகூட எனக்குப் புரியறது. நீங்க

ஏன் அப்பிடி விரும்பணும்? இது கேக்கறதுக்கே நன்னா இல்லே...

"உன்னோட நான் மனசுவிட்டுப் பேசறதனாலே சொல்றேன்...எல்லார் கிட்டயும் போயி 'டாம் டாம்' அடிக்கறேனா, என்ன? அவா ரெண்டு பேருக்கும் அறிவு, குணம், மனசு எல்லாம் பொருத்தமா இருக்கு...சீதாவோட வாழ்க்கையிலே நான் தலையிட்டதுதான் விபரீதம், அதுக்கு நானே பரிகாரம் பண்ணிவச்ச நிம்மதி...இந்த விஷயத்தை விடு...அந்த டாக்டர் என்ன மாதிரியான 'லவ்வபிள் பெர்ஸன்' தெரியுமா? என்று சுகுமாரன் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்கையில், இவனது குணம் நம்பமுடியாததாகத் தோன்றியது அவளுக்கு. இதில் ஏதேனும் உள்நோக்கம் இருக்கலாமோ? என்று சந்தேகமாக அவனைப் பார்த்தாள் மீனா. இப்படியும் ஒரு புருஷனா?

"இதோ பார் மீனா...எதையும் ரியலிஸ்டிக்கா பார்க்கணும். சீதா எனக்கு இல்லேங்கற விஷயம் என்னைப் பொறுத்த வரைக்கும் தீர்மானமாயிடுத்து. எனக்கும் அவ வேண்டாம். 'சோஷலி' அவள் எனக்குப் பொண்டாட்டி ஆயிட்டப்பறம் அவளோட சந்தோஷம், துக்கத்துக்கு நான் தானே பொறுப்பு! இப்ப சொல்றேன்: எதுக்கு 'லேடி சாட்டர்லி'ஸ் லவரைப் பத்தி நினைச் சேன்னு! தராதர மில்லாமல் வேற எவனோடயாவது நாளைக்கு ஒரு விவகாரம்னு ஆயி அதிலே வர பிரச்னைகளைவிட, டாக்டர் கிரிதரனைப் போல ஒரு தகுதியானவனோடு அவளுக்கு ஒரு ஃபிரண்ட்ஷிப் இருக்கறதைத்தான் நானே விரும்பறேன்...வாட் இஸ் ராங்...?"

இவன் குடித்துவிட்டுப் பேசினாலும், காதல், ஆண்-பெண் உறவுகள் குறித்த அவனது சொந்தக் கருத்துக்களைத்தான் தெளிவாகச் சொல்லுகிறான் என்று புரிந்தது மீனாவுக்கு. வேறென்ன செய்வது? எங்கோ கோணலாகிப் போன வாழ்க்கையை வாழ்ந்து தீர்ப்பது

என்றால் கோணலுக்கு தகுந்த கொள்கையை மனிதர்கள் வகுத்துக்கொள்ளுகிறார்கள் போலிருக்கிறது என்று இந்த நிலைமையை ஓர் அவலமாகவே உணர்ந்தாள் மீனா. இவன் ஏன் சீதாவை விவாகரத்து செய்துவிடக்கூடாது என்று யோசித்த மீனா. இது பற்றி ஏதேனும் தான் பேசுவது அத்துமீறியதாகி விடும் என்று அஞ்சி மெளன மாயிருந்தாள். இவருக்கு சீதாவைப் போன்ற ஒருத்தி பேருக்காகவேனும், மனைவியாக இருந்தாகவேண்டும் போலும் என்று எண்ணினாள்.

அன்று முழுதும்-சில சமயங்களில் பங்கஜவல்லி யம்மாளின் அறைக்கு இரண்டொருமுறை சென்று அவளைக் கவனித்த நேரம் போக-பகலெல்லாம் சுகுமாரனோடு இருந்தாள் மீனா.

சுகுமாரன் அன்று வழக்கத்துக்கு விரோதமாகக் குறைவாகவே குடித்தான். டாக்டர் கிரிதரன் தனக்குச் சொன்ன மருத்துவ ஆலோசனைகளை நினைவூட்டிக் கொண்டான்...இந்நேரம் டாக்டர் கிரிதரனும் சீதாவும் எங்கேயிருப்பார்கள், என்னென்ன பேசி மகிழ்ந் திருப்பார்கள் என்று பலவிதமான கற்பனைகளில் மிதந்தான் சுகுமாரன்.

டாக்டர் கிரிதரனையும் மரியத்தையும் அவரவர் இடத்தில் இறக்கி விட்டபின் மாலை ஆறு மணிக்கு சீதா வீடு திரும்பினாள்.

அவள் வருவதை மாடியிலிருந்து பார்த்தான் சுகுமாரன். அதுவரை அவனோடு இருந்த மீனா விடை பெறுகிறவள் போல் எழுந்தாள்.

“அதனால் என்ன, நீ உட்காரு...சீதா வரட்டும். அவளோட அனுபவங்களைச் சொல்லுவாள். நீயும் இருந்து கேள்-உனக்குப் புரியும்” என்று கண்ணைச் சிமிட்டி இனிமையாக அவளிடம் சொன்னான் சுகுமாரன்.

"இல்லை, எனக்கு வேலை இருக்கு" என்று அசடு வழிந்தவாறு போனாள் மீனா.

தான் அவளைச் சந்தேகிக்கக்கூடும் என்று கூடச் சந்தேகிக்காத சீதாவின் குணம் சுகுமாரனுக்கு விந்தையாயிருந்தது. காரிலிருந்து அவள் இறங்கி வரும்போது களைப்படைந்தவள் போல் காணப்பட்டாள்.

"ஹாய்! டார்லிங். ஹவ் வாஸ் தி டே?" என்று குதூகலமாக மாடியிலிருந்தவாறே அவளைப் பார்த்துக் கூவிக் கேட்டான் சுகுமாரன்.

"கொய்ட் யூஸ்ஃபுல்!...தாங்க்யூ!" என்று அண்ணாந்து பார்த்துக் கூறிய பின், ஒரு புன்னகையுடன் உள்ளே போனாள் சீதா.

நாள் முழுதும் மிக உற்சாகமாய் இருந்த போதிலும் பலரையும் கண்டு பேசிக் குறிப்புகள் சேகரித்த அலைச்சலில் அவள் மிகவும் களைப்பாகவும் இருந்தாள்...

அன்றையப் போதில் ஏற்பட்ட அனுபவங்களை அசைபோட்டுக் கொண்டு அரை மணி நேரத்துக்குக் குறையாமல் 'ஷவரி'ல் நின்று குளிக்க வேண்டும் போலிருந்தது சீதாவுக்கு.

டாக்டர் கிரிதரனும் சீதாவும் மிக அன்னியோன்ய மான, வெகு கால நண்பர்களைப்போல பல விஷயங்கள் குறித்து அன்று பூராவும் பேசிய பேச்சுகள், நின்றிருந்த இடங்கள், மௌனமான பார்வைகள், பொருள் பொதிந்த புன்னகைகள் பல மீண்டும் மீண்டும் கோர்வையற்று அவளுள் சித்திரங்கள் போல் தோன்றி ஒன்றின் மீது ஒன்றாய் அடுக்கடுக்காய்க் கவிந்து கொண்டிருந்தன.

இலக்கியம், சமூகம், சமூக உறவுகள், மருத்துவம், மக்கள் நலன், அரசியல் என்று ஒவ்வொன்றைப் பற்றியும் டாக்டர் கிரிதரன் சொன்ன கருத்துக்கள் எல்லாமே உன்னதமாயும் ஒப்பத்தகுந்தனவாயும் இருந்தன சீதாவுக்கு.

அவன் சொல்லும் போதே சீதா பல விஷயங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டாள் சீதா..

அந்த சானடோரியத்தின் டாக்டர்களும், பணியாளர்களும் மட்டும் அல்லாமல் அங்கு சிகிச்சை பெறும் அந்தத் தொழுநோயாளிகளும்கூட டாக்டர் கிரிதரனிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அவள் மீண்டும் மீண்டும் மனக்காட்சிகளாகக் கண்டு கொண்டிருந்தாள்.

'ஷவரி'லிருந்து தண்ணீர்த் தாரை சீறி வர்ஷித்துக் கொண்டிருந்தது.

சீதா வருவாள்-அவளிடம் அந்த அனுபவங்களை யெல்லாம் கேட்கலாம் என்று காத்திருந்து விட்டு அவளைக் காணாமல், அவளை எதிர்பார்த்தவாறே உலவி நடந்து அறை வாசலில் வந்து நின்றான் சுகுமாரன். மூடிய கதவுகளுக்குப் பின் நீர்த்தாரை பொழிகிற சத்தமும், சீதாவின் இனிய குரல் ஏதோ ராகத்தை 'ஹம்' செய்யும் நாதமும் வெளியில் கேட்டன.

## 45

"நீ வரதுக்கு முன்னே நானும் மீனாவும் 'லேடி சாட்டர்லி'ஸ் லவரைப் பத்திப் பேசிண்டிருந்தோம். நீ படிச்சிருக்கியோ?'' என்று சீதாவிடம் கேட்டான் சுகுமாரன்.

மேல் மாடியில் விளக்கலங்காரங்களும், பூந்தொட்டி களில் பூத்துக் குலுங்கும் பல வண்ண மலர்களும் சூழ நடுவில் அவனும் மீனாவும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஈரக் கூந்தலைத் துவட்டிய' டவலுடன் மாடிக்கு வந்த

சீதாவையும் அழைத்துத் தங்களுடன் அமரச் சொன்னான் சுகுமாரன்: "உட்காரு"

சீதா உட்கார்ந்தாள். அவள் 'லேடி சாட்டர்லி'ஸ் லவரைப் பற்றி யோசித்தாள். அந்த ஆங்கில நாவலின் சுருக்கப்பட்ட பதிப்பு ஒன்றை, அவள் எப்போதோ பார்த்திருக்கிறாள். அதைப்பற்றிப் பிறிதொரு சமயத்தில் பேசவேண்டிய அளவுக்கு அவள் அந்தக் கதையை மனத்தில் பதித்துக் கொள்ளவில்லை. பொதுவாக அதன் கதை தெரியும். அது அவ்வளவு ரசமானதாகவும் இல்லை அவளுக்கு.

"எனக்கு ஆங்கில இலக்கியத்தில் அவ்வளவு ஈடுபாடு கிடையாது, ஏதோ பாடத்துக்குன்னு படிச்சதைத்தவிர..." என்று அடக்கத்துடன் சொன்னாள் சீதா.

"அதனாலே பரவாயில்லே...எப்படி இருந்தது உங்க 'டிரிப்'? நீங்க என்னை இங்க வீட்டிலே இறக்கி விட்டுட்டுப் போனதிலேருந்து நடந்தது ஒண்ணொண்ணும் அப்படியே படம் பார்க்கிற மாதிரி தெரியும்படியா நீ சொல்லணும்...ம் கம்-ஆன்" என்று உற்சாகத்துடன் கிளாஸில் மதுவை நிரப்பிக்கொண்டான் சுகுமாரன்.

"அதைத்தான் நான் எழுதப் போறேனே... எழுதினப்பறம் முதல்லே உங்களுக்குக் காட்டிட்டு அச்சுக்கு அனுப்பறேன்...

"நோ...நோஅதெல்லாம் உங்க ஜர்னலிஸபிஸினஸ். எனக்கு அது வேணாம். அது முக்கியமில்லேன்னு சொல்லலே-அதைத்தான் நான் பத்திரிகையிலே வந்தப்பறம் படிப்பேனே! நான் கேட்கறது என்னான்னா, நீ எழுதாத, எழுத அவசியமில்லாத உன் 'பெர்ஸனல் எக்ஸ்பிரியன்ஸ்' உன் நண்பர்களைப்பத்தி குறிப்பா நம்ம டாக்டரும் அவருடைய நண்பர்களும் உங்களுக்குச் செய்த உதவிகளைப்பத்தி...நான் சொல்றது உனக்குப் புரியும்னு நெனைக்கிறேன்..." என்று அவன் சுற்றிச் சுற்றி வளைத்து

எதையோ அவள் மனத்துள் துழாவுவதுபோல் பேசினான். மீனா தர்மசங்கடத்துடன் இருக்கையில் நெளிந்தாள்.

சீதாவைப் பார்க்கையில், இவள் மட்டும் எப்படி விகல்பமில்லாமல் வெள்ளையாக தூயமனத்துடன் இவர் பேசுவதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டிருக்கிறாள் என்று மீனா உள்ளூர வியந்தாள். அவனது இங்கிதமற்ற பேச்சைக் கேட்காமல் அங்கிருந்து போய் விடவே அவள் மனதார விரும்பினாள். ஆனால் அந்த எஜமானன் ஏற்கெனவே அவளுக்கு உத்தரவு போட்டிருந்தான்: "நீ இன்றிரவு என்னோடுதான் இருக்கிறாய்! ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காதே! கூட இருந்து பார். நாம் அவளுக்கு ஒரு வகையில் உதவி செய்வதற்காகத்தான் சொல்கிறேன் இரு..."

அவளுக்கென்ன? அவன் வீடு, அவன் பாடு...என்று தன்னை எல்லாவற்றுக்கும் தயார்ப்படுத்திக் கொண்டு மீனா தனது எஜமானனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவன் சீதாவின் முன்னால் தன்னை அடிக்கடி தட்டியும் தொட்டும் பேசுகிற போது மீனாவுக்கு உடம்பு கூசிக் குன்றியது.

சீதா இவர்களது சல்லாபங்கள் எதையுமே கவனித்தவள் போல் தெரியவில்லை. அவள் டாக்டர் கிரிதரனைப் பற்றி அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்:

"என் வாழ்க்கையிலேயே ரொம்ப அர்த்தமுள்ள நாள்...மனுஷ உடம்புக்கும், மனுஷாளுக்கும் உள்ள சொந்தத்தைப் பத்தி என்னை யோசிக்க வைத்த நாள் இது...டாக்டர் கிரிதரன் சாதாரண ஒரு டாக்டர் மட்டும் இல்லே. எங்கள் நண்பர்களிலே ஒருவர்போல அவர் நமக்கு அறிமுகமாயிருந்தாலும்-எங்களுக்கெல்லாம் அவரே தலைவர்னு பல சமயங்களிலே நான் இன்னிக்கு நினைச்சேன். இது போன்ற நாட்கள் இன்னும் பல வரும்னு நினைக்கிறப்போ, கடவுளுக்கு நன்றி சொல்லவே தோணுது" என்றாள்.

"நன்றி-எனக்கு இல்லையா?" என்று குழந்தைத் தனமாய்க் கேட்டான் சுகுமாரன்.

"நன்றிக்கு உரிய கடவுள் எல்லாருள்ளேயும் இருக்கிறார்..." என்று புன்னகையுடன் சொன்னாள் சீதா.

"அது சரி, நாள் பூராவும் அந்த ரோகிகள் விடுதியிலேயேவா இருந்தீங்க?...கொஞ்சம் சந்தோஷமா ஓய்வா இருக்க அவருக்கும் எங்கேயும் சந்தர்ப்பம் கிடையாதா" என்று டாக்டர் கிரிதரன் மேல் உள்ள உண்மையான கரிசனையுடன் கேட்டான் சுகுமாரன். அதற்கு மேலாக ஏதேனும் அவள் மூலம் கிரிதரனைப்பற்றி அறிந்து கொள்ளவும் அவன் மனம் துடித்தது.

"நீங்கள் அங்கே வர அருவருப்படையறது உங்க கற்பனைதான். அவர்களிலே ரொம்பப் பேரை நீங்க பிச்சைக்காரங்களாக, அந்த நோயைக் காட்டி வயிறு வளர்க்கறவங்களாகவே பார்த்ததினாலே அவங்களைப் பற்றி உங்க மனசிலே அருவருப்பான சித்திரமே இருக்குன்னு நினைக்கிறேன்...அந்த விடுதிகளிலே இருக்கிற வங்களைப் பார்த்தப்போ ரொம்பத் தூய்மையான துறவிகளின் குடிலில் இருக்கிற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது" என்றாள்.

"பிச்சைக்காரனாயிருந்தாலும், கோடீஸ்வரனாக இருந்தாலும் அது அஞ்சத்தகுந்த, அருவருப்பைத் தருகிற நோயல்லவா?" என்று ஆங்கிலத்தில் சொன்னான் சுகுமாரன்.

"எல்லா நோய்களும் அஞ்சத் தகுந்தவை தானே? ஆனால் நோய்களைவிட அஞ்சத் தகுந்தவை மனிதனின் குணங்களே."

"அப்படியில்லை. இது அங்கத்தைச் சிறுகச்சிறுகத் தின்று உருவத்தை விகாரப்படுத்துகிற கொடிய நோய்" என்று உடம்பை நெளித்துக் கொண்டான் சுகுமாரன்.

"கொடிய நோய்தான்! ஆனால் பார்த்தாலே தொற்றிக்கொள்ளுமோ? அப்படித்தான் ரொம்பப் பேர் நினைக்கிறார்கள். தொழு நோய்களில் பலவிதம் உண்டு. எல்லாவற்றுக்குமே இக்காலத்தில் மருந்தும் சிகிச்சையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். பொதுவாக அவர்களின் அங்க நுனிகள் உணர்ச்சி குறைந்து போவதால் அவர்கள், தாமே அதிகம் அழுத்தம் தந்தும் தீயில் பட்டும் அங்கம் குறைவது தெரியாமலே இழந்து போகிறார்கள். இந்த நோயை மனுஷ வரலாற்றிலிருந்தே அகற்றும் நாள் வெகு தூரத்தில் இல்லை. மனிதர்கள் மீது கொண்ட அன்பினால் தான் நோயாளிகளை நாம் அதிகமாக நேசிக்க வேண்டியிருக்கிறது. டாக்டர் கிரிதரனைப் போன்ற டாக்டர்கள் அதற்காக என்னென்ன ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?'' என்று வியந்து சொல்லிக் கொண்டிருந்தாள் சீதா.

"நோயைப்பற்றி இவ்வளவு போதும்-டாக்டரைப் பற்றிச் சொல்லு. மற்றதெல்லாம் உன் கட்டுரைகளுக்கு ரொம்ப உதவியாக இருக்கும். நீ ரொம்ப உற்சாகமாக நாள் முழுதும் இருந்திருந்தாலும் வீட்டுக்கு வரபோது ரொம்பக் களைப்பாயிருந்தே...இல்லே மீனா...நீ கவனிச்சயோ?'' என்று சொல்லிக்கொண்டே மதுக்கிறக்கத்துடன் இளித்தான் சுகுமாரன்.

சீதாவுக்கு அவனிடம் சொல்லி விடவேண்டும் போல் உதடுகள் துடித்தன. மனத்துள் முனகிக் கொண்டாள்.

'அந்த உற்சாகம், டாக்டர் கிரிதரனைக் காரிலிருந்து இறக்கி விட்டதும் அவருடனேயே போய் விட்டது போலும்!"

சீதாவின் அந்தரங்கம் எதையோ அறிந்து விட்டது போல், அதீத சந்தோஷத்துடன் சுகுமாரன் நிறையவே குடிக்க ஆரம்பித்து விட்டான்.

மீனா ஒருமுறை அவனுக்கு டாக்டர் கிரிதரனின் ஆலோசனையை நினைவூட்டி குடிப்பதைக் குறைத்துக் கொள்ளும்படி வேண்டினாள்.

"ம்...விடு, நோயிலேயும் விபத்திலேயும் சாகறதை விட, சந்தோஷமா குடிச்சுட்டு செத்தா என்ன தப்பு? இந்தத் தத்துவம் டாக்டர்களுக்குப் புரியாது" என்று சிரித்தான் சுகுமாரன்.

'இவன் குடிவெறியில் உளற ஆரம்பித்து விட்டான்' என்று மனத்துள் சிரித்துக்கொண்டே, அங்கிருந்து போவதற்காக எழுந்தாள் சீதா.

"டார்லிங், எங்கே புறப்பட்டுட்டே?..."

"நீங்க சொன்னமாதிரி நான் ரொம்பக் களைப்பாய்த் தானிருக்கேன்... என்றாள் சீதா.

"நாம இன்னிக்கு ஒண்ணா சாப்பிடலாமே...மீனா நீயும்தான்..." என்று தடுமாறியவாறே எழுந்தவன் மீனாவின் தோள்மீது கையூன்றி நின்றான். "சரி வாங்க-டைனிங் ஹாலுக்குப் போவோம்" என்று அவனைக் கைத்தாங்கலாய்ப் பிடித்துக் கொணடாள் மீனா.

சீதா சற்றுத்தள்ளி விலகி நின்று கொண்டாள். அவள் தன்னை அஞ்சி ஒதுங்குவதைக் கண்டு சுகுமாரன் அண்ணாந்து வானத்தைப் பார்த்துச் சிரித்தான்... வானத்தில் முழு நிலவு அவனைப் பார்த்துச் சிரிப்பதே போல்-சூழ்ந்திருந்த மேகக் கூட்டங்களின் மத்தியிலிருந்து-அவசரமாய் வெளிவந்து கொண்டிருந்தது.

"ஓ! பாரேன்...நிலா எவ்வளவு பிரகாசமாயிருக்கு...ஏ யாரங்கே...மாடி லைட்டையெல்லாம் ஆஃப் பண்ணுடா, நிலாவை ரசிக்கலாம்...டைனிங் ஹாலுக்கு ஒண்ணும் போக வேண்டாம்...இன்னிக்கு நிலாச் சாப்பாடு சாப்பிடுவோம்...ஏ! யாரங்கே?" என்று உத்தரவிடுவதற் காகக் கூவினான்.

சற்று நேரத்தில் மாடியில், நிலா வெளிச்சத்தில் அவர்கள் மூவரும் விருந்து சாப்பிடுவதற்காக வேலை யாட்கள் அங்கும் இங்கும் ஓடி ஏற்பாடுகள் செய்தனர்.

'விருந்து' முடிவதற்கு நள்ளிரவு ஆகும்போலிருந்த தால் சீதா குனிந்த தலையுடன் சாப்பிட்டு முடித்தாள். அவனுக்கு நன்றியும், 'குட்நைட்'டும் சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் புறப்பட்டாள். சுகுமாரன் மீனாவின் தோளில் சாய்ந்து கொண்டு சீதாவுக்கு 'குட்நைட்' சொன்னான்.

அப்போதுகூட சீதாவின் வெள்ளை மனம் அவர்களைப்பற்றி ஏதும் வித்தியாசமாக எண்ணவில்லை. அவன் குடித்து விட்டு இதுமாதிரி சரிந்துசரிந்து விழுந்தால் மீனாவைப்போல் மனிதாபிமானத்துடன் தன்னால் அவனுக்கு உதவி செய்ய முடியாது என்பதால், அவளுக்கு நன்றியுணர்வோடு "மன்னித்துக்கொள்ளுங்கள், எனக்குக் களைப்பாயிருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போனாள் சீதா.

ஆனால் சீதாவின் அந்தப் 'பேதைமை' அதிக நேரம் நீடிக்கவில்லை. அவள் தன் அறைக்குச் சென்று தனிமையில் டாக்டர் கிரிதரனின் குரலை மானசீகமாகக் கேட்டவாறே, நிலாவைப் பார்ப்பதற்காக அறையின் ஒரு ஜன்னலைத் திறந்தபோது–

நிலா வெளிச்சத்தில் நிலைமறந்து பிணைந்து புரளும் சுகுமாரனையும், மீனாவையும் நேருறப் பார்த்தபோது– அப்படிப்பட்ட காட்சிகள் அவள் சினிமாவில்கூடப் பார்த்ததில்லை–அவளுக்கு வியப்பும் சிரிப்பும் வந்தது. ஓசையில்லாமல் திறந்த கதவை மூடிவிட்டு உதட்டைக் கடித்தவாறு அங்கேயே நின்றிருந்தாள் சீதா...

'ஓ! பட்டத்து அரசியாக நான்; படுக்கைக்கு அரசி மீனாவோ... என்று நினைக்க நினைக்க சீதாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

எனினும் அவள் சிந்தித்தாள். அதுவும் விதவை மீனாவைப் பற்றி அனுதாபத்துடன் யோசித்துக் கொண்டே தூங்கிப் போனாள்.

## 46

"பாவம் மீனா! எவ்வளவு காலமாய் இந்த ரகசிய மானபங்கத்துக்கு உட்பட்டு வருகிறாளோ? இவள் ஒருவேளை இவனது வற்புறுத்தலுக்கு மனமில்லாமல் இணங்குகிறாளோ? எவ்வளவு காலமாய் இவர்களுக்குள், இத்தகைய உறவோ?' என்பதையெல்லாம் அவளிடமே கேட்டுத் தெரிந்துகொண்டு அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் சீதா.

காலையில் ஆபீசுக்குப் புறப்படு முன் பங்கஜவல்லி யம்மாளின் அறையில் மீனாவைப் பார்த்தபோது இரவில் கண்டகோலம் சீதாவுக்கு நினைவு வந்தது.

"மீனா...நீங்க எப்பவாவது சாவகாசமா இருக்கும் போது என்னை வந்து பாருங்க. உங்களோட ஒரு முக்கியமான விஷயமாப் பேசணும்" என்று பங்கஜவல்லியம்மாளின் காதில் படாமல் அவளைத் தனியே அழைத்துச் சொல்லி விட்டுப் புறப்பட்டாள் சீதா.

மீனாவைத் தனியே அழைத்து அவளிடம் சீதா பேசியதை, நகர முடியாமல் படுக்கையில் கிடக்கும் பங்கஜவல்லியம்மாள் ஓரக் கண்களால் கவனித்தாள். அவளது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. மீனாவையோ மற்ற யாரையோ இப்படித் தனியே அழைத்து ரகசியம் பேசுவது சீதாவின் இயல்பு அல்ல என்று தெரிந்து கொண்டிருந்த பங்கஜவல்லியம்மாள், மீனா வந்தவுடன், "என்னவாம்? என்ன சொல்லிட்டுப் போறா?" என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டாள்.

அவள் மனத்தில் நேற்று நாள் முழுதும், இரவும் பகலும் 'இவள் அவனோடு' இருந்தது நினைவுக்கு வந்தது.

"ஒருவேளை சீதாவுக்குத் தெரிந்து விட்டதோ?" என்று பங்கஜவல்லியின் மனம் துணுக்குற்று அவள் உடலில் ஒரு படபடப்பு ஏற்பட்டது.

"நேத்திக்கு உங்க பிள்ளை அடிச்ச கூத்திலே அவங்களுக்கு எல்லாம் தெரிஞ்சுட்டிருக்கும். அதுபத்தி ஏதாவது கேக்கணுமோ, என்னவோ? தனியா என்கிட்ட முக்கியமா எதுவோ பேசணும்னு சொல்லிட்டுப் போனாங்க" என்றாள் மீனா; இந்த நிலை மீனாவுக்கு உள்ளூர தர்ம சங்கடமாகவும், அவமானமாகவும் இருந்தது. அழுகை அழுகையாய் வந்தது. மீனாவைப் பார்க்க அம்மாவுக்குப் பரிதாபமாயிருந்தது.

பக்கத்தில் குனிந்த தலையுடன், வருத்தத்தால் துடித்த உதட்டை அழுந்தக் கடித்துக்கொண்டு நிற்கும் மீனாவின் கையை, பலவீனத்தால் நடுங்கும் கரங்களால் பற்றிக் கொண்டு, "நீ எதுக்கும் பயப்படாதே. உனக்கென்னடி? இவள் கட்டின புருஷனை இப்படி நிஷித்தம் பண்ணிட்டு, கட்டறுந்த மாடாத் திரிஞ்சிண்டிருந்தால் அவன் அப்படித்தான் இருப்பான்னு தெரிஞ்சுண்டு வாயை மூடிண்டு போவாளா? என்னன்னு கேழ்ப்பாளாம்! என்னத்தைக் கேட்டு இவ என்ன பண்ணிடுவாளாம்!" என்று மீனாவின் சமாதானத்துக்காக ஏதோ சொல்ல வந்த பங்கஜவல்லி அம்மாளுக்கு மெய்யாகவே கோபம் மூண்டு உதடுகளும் கன்னத்துச் சதைகளும் துடித்தன...

அவளது படபடப்பு அதிகமாவதைக் கண்ட மீனா, "மாமி...நீங்க சமாதானமா இருங்கோ...உங்களுக்குப் பிரஷர் அதிகமாயிடும்" என்று எச்சரிக்கிறபோதே தனக்கு ரத்தக் கொதிப்பு அதிகமாகிவிட்டதை உணர்ந்த பங்கஜவல்லி கண்ணை மூடிக்கொண்டு தலையணையில் சாய்ந்தாள்.

மீனா அவளது நாடியைப் பரிசோதித்து, மாத்திரையைக் கொண்டு வந்து தந்தாள்; கண்ணாடித்

தம்ளரில் தண்ணீர் எடுத்து வந்து அவளுக்குப் புகட்டி தனது நர்ஸ் பணியை முடித்துவிட்டு, ஆற அமர ஒரு பக்கம் வந்து உட்கார்ந்து, தான் பெண்ணாய்ப் பிறந்து படுகிற அவமானத்தை எண்ணிக் கண் கலங்கினாள்.

**சா**யங்காலம் ஆபீசிலிருந்து காரில் வந்து இறங்கிய போது, வெளியே புறப்பட்ட மீனா எதிர்ப்பட்டாள். சீதா காரை நிறுத்தி நந்தவனம் போன்ற வீட்டின் முன்புறத் தோட்டத்திலே ஓடுபாதையில் காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டாள். சீதாவும் மீனாவும் அந்தத் தோட்டத்தின் பாதையில் நடந்தவாறே அடிக்கடி பக்கவாட்டில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட போது சீதாதான் அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

"நான் உங்களோட என்ன விஷயமாப் பேசக் கூப்பிட்டேன்னு தெரியுமோ?"

"தெரியும்...

-மீனாவின் கண்கள் கலங்குவதைக் கண்ட சீதாவின் மனம் 'சுருக்'கென வலித்தது.

"சரி, நான் உங்களோட பேசணும்னு நினைச்சதே உங்க நலனை உத்தேசித்துதான்...என் அக்கா ஒருத்தி பேருகூட மீனாதான்..." என்று சொல்லி அவளைப் பார்த்துப் புன்னகை செய்தாள் சீதா. டில்லியிலோ, அமெரிக்காவிலோ இருக்கிற அந்தத் தமக்கையரை நினைத்துக் கொண்டதற்குக் காரணம் மீனாவின் வயதை சீதா தன் மனத்துள் கணித்ததுதான்.

"உங்களுக்கு முப்பது வயது இருக்குமா? நீங்க எப்ப விதவையானீங்க...எவ்வளவு காலம் திருமண வாழ்க்கை, அவர் என்னவாக இருந்தார்?" என்று வரிசையாக மனத்துள் யோசித்தபின் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கேட்டாள் சீதா. சில விஷயங்களை இலக்கணச் சுத்தமில்லாமல் கூட இன்னொரு பாஷையில்

பேசிக்கொண்டால் இங்கித்க் குறைவு ஏற்படுவதில்லை என்று நினைத்துக் கொண்டாள் சீதா. 'விசித்திரம்தான்!'

"எனக்கு முப்பத்தியாறு வயசு. இருபது வயசிலே கல்யாணம். அவர்... இங்கே ஜி. ஹெச். லே 'மேல் நர்ஸா'யிருந்தார். ஜாதகம், சாஸ்திரமெல்லாம் பாத்துப் பெரியவாள்ளாம் ஆசீர்வாதம் பண்ணி செஞ்சு வெச்சதுதான். ரெண்டு வருஷத்திலே அந்த வாழ்க்கை அல்பாயுஸாப் போயிடுத்து. நம்ம பெண்கள் எல்லாரையும் போல - புருஷனை நேசித்தாலும் நேசிக்காவிட்டாலும் - அவன் செத்துப் போனப்புறம் அவனுக்காக விதவையா வாழ்ந்தால் தானே ஒரு பெண்ணுக்கு மரியாதை?-நானும் அதுபோல் விதவையானாலும் நெத்தியிலே பொட்டு வெச்சுக்கறதையோ, எனக்குப் பிடிச்ச பூவைச் சூடிக் கறதையோ நிறுத்தலே, என்ன நியாயம்னு சொல்லுங்கோ, புருஷன் கட்டின தாலியையும், புருஷசுகத்தையும்-"

'புருஷ சுகம்' என்ற வார்த்தையைக் கேட்டு-அதன் பொருளற்ற அபத்தத்தை எண்ணிப் புருவங்களை ஒருமுறை நெறித்து உயர்த்தினாள் சீதா.

மீனா சொல்லிக்கொண்டிருந்தாள்.

"-புருஷ சுகத்தையும் ஒருத்தி நீக்கிடலாம். ஆனால் இந்தப் புருஷனைப் பார்த்தா ஒரு பொண் பொட்டும் பூவும் வெச்சுண்டா? அந்தப் புருஷன் போனதும் அதைப் பறிக்கறது என்ன நியாயம்னு எனக்குத் தோணித்து. என் நியாயம் புரியாதவா' என்னைச் சந்தேகப்பட்டா! இவா சந்தேகம் என்னை என்ன பண்ணும்?னு நான் ஒழுக்கமா, தலை நிமிர்ந்து வாழ்ந்துண்டு, நர்ஸ் கோர்ஸ் முடிச்சு உத்தியோகம் சம்பளம்னு வந்தப்பறம் ஒரு விதவைங்கற நினைப்பே இல்லாமல்தான் இருந்தேன்...இந்தாத்துக்கு வந்தப்பறம்தான்... என்று தனது விருத்தாந்தத்தைச் சொல்லி நெடுநேரம் பேசியதனாலோ, அல்லது இந்த இடத்தில் என்னமோ நெருடியதனாலோ சற்று நிறுத்திப் பெருமூச்செறிந்து கொண்டாள் மீனா.

இருவரும் ஒரு பன்னீர் மரத்தடியில், பசும்புல் தரையில் வந்து நின்றனர்; அருகே இருந்த சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஓர் இரும்பு பெஞ்சின் மீது நடுவில் நிறைய இடைவெளி விட்டு ஆளுக்கொருபுறம் ஒருவரை யொருவர் தீர்க்கமாகப் பார்த்தவாறு உட்கார்ந்தனர்.

தோட்டக்காரன் இவர்களுக்காக வராந்தாவிலிருந்த 'சுவிட்ச் போடு'க்கு ஓடி, படபடவென்று சுவிட்சுகளைப் போட்டான். தோட்டத்து விளக்குத் தூண்கள் ஒளிச்சட்டிகளை ஏந்தியவாறு ஆங்காங்கே நின்றன...

"பிறகு? இது எப்போ, எப்படி நேர்ந்தது? வற்புறுத்தலுக்கு இணங்கியா? அல்லது நீங்களும் விரும்பிய உறவா? அது எப்படி இருப்பினும் உங்கள் எதிர் காலத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இந்த மாதிரி மனிதர்களின் உறவு இப்படியே நிலையானதா யிருக்கும் என்றா நினைக்கிறீர்கள்? நீங்கள் ஏதாவது செய்தாக வேண்டுமே! நீங்கள் ஏன் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு அவரிடம் கேட்கக் கூடாது?"

"ஐயோ! அதெப்படி முடியும்? அவரிடமிருந்து என்னை விடுவிப்பதற்கோ, அல்லது என்னிடமிருந்து அவரைப் பிரிப்பதற்கோ பங்கஜம் மாமி செய்த ஏற்பாடுதான் உங்கள் கல்யாணம். அதன்பிறகும் எனக்கும் நிம்மதி கிட்டாமல் போனதற்கு ஒருவகையில் நீங்கள் காரணம்" என்று மீனாவும் ஆங்கிலத்தில் சொன்னாள்.

சீதா, புருவங்கள் நெறியாமல் பெரிய விழிகளை மட்டும் அகலமாய்த் திறந்து மீனாவைப் பார்த்தாள்: 'ஓ! நான் எப்படி இந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று இவள் அறிந்திருக்கிறாள்' என்று எண்ணினாள் சீதா.

"நம் காரியங்களுக்குக் காரணம் யார்?'னு கண்டு பிடிக்கறது இருக்கட்டும். அதனாலே ஒரு பயனும் இல்லே. அதை நான் கேட்கவும் இல்லே" என்றாள் சீதா.

"மன்னிக்கவேணும். நான் சொல்ல வந்தது என்னான்னா, நீங்க அவருக்கு...ஒரு நார்மல் குடும்ப வாழ்க்கையைத் தந்திருந்தால் எனக்கு அது எவ்வளவோ உதவியாயிருந்திருக்கும் இல்லையா?" என்று அதே விஷயத்தை இன்னும் இணக்கமாய் விளக்கினாள் மீனா.

"நிச்சயமா யாருக்கும் உதவியாக இருந்திருக்காது. முதல்லே நீங்க சொன்ன பூ, பொட்டு, தாலி விவகார மெல்லாம் புரிகிறமாதிரி 'புருஷ சுகம்'கற சமாசாரம் எனக்குப் புரியலே. போகட்டும். நானும் அந்தச் சேற்றிலே விழறதனாலே உங்களுக்கு என்ன உதவி செய்திருக்க முடியும்? இந்த மாதிரி மனிதர்கள்-ஒழுக்க ரோகிகள்-'மாரல் லெப்பெர்ஸ்' கிட்ட பெண்களான நம்மதான் ஜாக்கிரதையோட பழகி நம்மைக் காப்பாத்திக்கணும். தமிழ்லே பெண்களின் இயல்பான அந்த ஜாக்கிரதை உணர்ச்சிக்கு 'நிறை'ன்னு பேரு. ஒருத்தியை உடல் வலு படைச்ச ஒரு ஆண்மிருகம் 'சிறை'யெடுத்தாலும் அவனாலே அழிக்க முடியாத அவளோட மன உறுதிக்குப் பேர்தான் 'நிறை'. இந்த ராவணன் என்னைச் 'சிறை' யெடுத்தது போலவே, உங்களை 'நிறை' யழிச்சுட்டான். சரி, உங்களுக்கு இந்த வாழ்க்கை சந்தோஷந்தானே? இதில் உள்ள கள்ளத்தனம்-ரகசியம்-பரபுருஷ உறவுங்கற விஷயங்களைத் தவிர மத்தபடி இதில் உங்களுக்கு ஏதும் பிரச்னை உண்டா?"

"பிரச்னையே அதுதானே?" என்று உள்ளங்கையைப் பார்த்துக்கொண்டு முனகினாள் மீனா.

சீதாவும் யோசித்தாள். "பங்கஜவல்லி மாமிக்கு எல்லாம் முன்னயே தெரியும்...இல்லியா?"

"ஆமாம். நன்னாத் தெரியும். ஆனா அம்மாவுக்குத் தெரியும்னு பிள்ளைக்குத் தெரியாது."

"ம்...ரொம்ப மரியாதைக்காரர்கள்!" என்று சீதா கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி ஏழாகியிருந்தது. இந்த விவகாரத்தில் மீனாவோடு ஒரு மணி நேரம் தனது நேரத்தைச் செலவிட்டது போதும் என்றிருந்தது சீதாவுக்கு.

"உங்களுக்கு நான் உதவ முடியும் என்று நம்புகிறேன்" என்று எழுந்து மீனாவிடம் கைகுலுக்கிவிட்டுப் போனாள் சீதா.

மீனா அவள் போவதையே பார்த்தாள். சீதா வேகமாய் நடந்து புயல் போல் பங்கஜவல்லியம்மாளின் அறையுள் நுழைந்தாள்...

தொடர்ந்து போய் என்ன நடக்கிறது என்று பார்க்கலாமா என்று நினைத்த மீனா 'அது உசிதமில்லை' என்று நினைத்து வெளியே போனாள். இரவு வந்தால் பங்கஜம் மாமி அவளிடம் என்ன நடந்தது என்று சொல்லாமலா இருந்துவிடுவாள்.

"இப்பொழுதுதானே போனாள்?...அதற்குள் வந்துட்டாளே மீனா" என்று நினைத்தவாறு படுக்கையில் புரண்டு திரும்பிப்பார்த்த பங்கஜவல்லி அம்மாள் தன் எதிரே நின்ற சீதாவையும் அவள் பார்வையையும் கண்டபோது தன் வயிற்றில் என்னவோ புளி கரைப்பது போல் உணர்ந்தாள்.

## 47

தயவு தாட்சண்யம் இல்லாமல், பாரபட்சம் பாராட்டாமல், தீர்க்கமாய் எதையும் யோசிக்கவும், கனல்போல் நெஞ்சு கொதிக்கவும் பழகியிருந்த சீதா இதுவரையிலும் பெரியவர்களை மரியாதைக் குறைவாகவோ மனம் புண்படும்படியோ பேசப் பயின்றதே இல்லை.

பங்கஜவல்லியம்மாளை நேருக்கு நேர் விரல் நீட்டி அவள் கேட்க நினைத்த கேள்விகளெல்லாம் அவளுள் குமுறின. வாய் வழியே ஒரு சொல் வெளிவரவில்லை. உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்திருந்தன; சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்த பாவத்தில் கண்களை மூடி நிதானம் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள் சீதா. துடைப்பதற்காக மூடிய கண்களுடன், சேலைத் தலைப்பில் முகம் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் சீதாவைப் பார்த்து கலவரமடைந்த குரலில் கேட்டாள் பங்கஜவல்லி அம்மாள்:

"என்னம்மா சீதா...உடம்புக்கென்ன? தலை வலிக்கிறதா?"

"என் உடம்புக்கோ தலைக்கோ ஒன்னும் இல்லை" என்று வெட்டினாற்போல் கூறி முகம் நிமிர்த்திக் கிழவியைப் பார்த்தாள் சீதா. அவள் முகத்தில் நிலவிய உணர்ச்சி கோபமா? வருத்தமா? வெறுப்பா? அவமதிப்பா? அருவருப்பா? என்று புரியாமல் தவித்தாள் பங்கஜவல்லி.

'உனக்கு உன் மகனின் எல்லா துர் நடவடிக்கைகளும் தெரியும். அவன் இந்த வீட்டுக்குள்ளே இந்த விதவையுடன் ரகசிய உறவு கொண்டு வாழ்வது தெரிந்தும் அதையே நீ அங்கீகாரம் செய்து அந்த அபலைக்கு வாழ்வு தந்திருக்கலாமே! ஏன் நீ அப்படிச் செய்யாமல் என் வாழ்வுடன் விளையாட உன் துர்ப்புத்திரனை ஏவினாய்?... என்றெல்லாம் அவள் மனத்துள் அவளது குரலே மோதி மோதி எதிரொலித்தது.

'துர்ப்புத்திரனான என் மகனை நல்வழிப் படுத்துவேன்னு நம்பித்தானே, என்னமோ நினைச்சு உன் வாழ்க்கையோட நான் விளையாடிட்டேன்...நீயும் ஒரு தாயாகி, உனக்கும் ஒரு மகன் பிறந்து அவன் இப்படியொரு நிலையிலே இருந்து பார்த்தால் உனக்குப்

புரியும். ஒரு தாய்ங்கிற முறையிலே என் காலத்தைச் சேர்ந்த எந்தப் பெண்ணும் என்ன செய்வாளோ அதைத்தாண்டி அம்மா நானும் செஞ்சுட்டேன்...நீ புதிய காலத்தின் புதுமைப் பெண்ணுன்னு எனக்குத் தெரியாமல் போச்சு...இப்ப உனக்கும் வசதிதானே? அவன் எவளோடவோ எக்கேடும் கெட்டு சந்தோஷமா இருந்துட்டுப் போறான்! நீ ஏன் இதைப்பத்தி ரசாபாசம் பண்ண வந்திருக்கே?' என்று பங்கஜவல்லி அம்மாளின் மனமும் உள்ளூர ஓலமிட்டு அவளிடம் மன்றாடிக் கொண்டிருந்தது.

–இருவரும் பேசவே இல்லை. ஒருவரை ஒருவர் பார்த்த பார்வையில் விளைந்த வெம்மை பொறாமல் பங்கஜவல்லியம்மாளின் பார்வை கடைசியில் தாழ்ந்து போயிற்று. 'பாவம்! இவளைப் போய் புண்படுத்து வானேன்' என்று அவள் பால் பரிவே வந்தது சீதாவுக்கு. அதேபோல்ஒரு பரிவு இவளுக்கு ஏன் மீனா விஷயத்தில் ஏற்படக்கூடாது? என்று யோசித்த சீதா...உணர்ச்சிகள் சமனப்பட்ட நிலையில், பக்கத்தில் இருந்த அந்த வார சுந்தரியைப் பார்த்து, எடுத்துப் புரட்டினாள்.

"அடுத்த இதழ்லே ஒரு விவாத அரங்கு ஆரம்பிக்கலாம்னு...பழைய காலத்து வயதான விதவைப் பாட்டிகள், புதிய காலத்து விதவைகளுக்குச் சொல்லும் ஆலோசனைகள் தான்...அந்த விவாதத்தின் நோக்கம். நீங்களும் இதெல்லாம் படிக்கறேளே...ஒரு வாசகர்ங்கிற முறையிலே நீங்க என்ன சொல்லுவேள் இதைப்பத்தி?" என்று அவள், மனத்தில் உறுத்திக் கொண்டிருந்ததற்குச் சம்பந்தமே இல்லாத எதுபற்றியோ இவள் கேட்டதாய் உணர்ந்தாள் பங்கஜவல்லி. ஆனால் சற்று யோசித்ததும் 'இவள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டது மட்டுமல்லாமல், அதெல்லாம் எனக்குத் தெரியும் என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறாள். என்ன சாதுரியமாய் இவள் சுற்றி வளைத்துத் தொடுவதற்கு

'விதவா மணம்' பற்றிப் பேசுகிறாள்!' என்று மனத்துள் சீதாவைப் பாராட்டிக் கொண்டாள் பங்கஜவல்லி.

"அது பாரம்மா...விதவைகள் பிரச்சனைங்கறது ஒவ்வொரு காலத்திலேயும், ஒவ்வொரு ஜாதி ஆசார முறைகளுக்கேற்பவும் அமைஞ்சிருக்கு. எப்படிப் பார்த்தாலும் இது பெண்களுக்கு ஒரு கொடுமைதான். விதியேன்னு ஏத்துண்டு விதவையா இருந்தவாளும் உண்டு. நிஜமாவே துணையைப் பிரிஞ்ச சோகத்திலே துறவியானவர்களும் உண்டு. இது ரெண்டுமே எல்லாக் காலத்திலேயும் உண்டு. ஆனாக்க, மறுமணம் பண்ணிக்கறது நம்ம மரபு இல்லே" என்று தெளிவாகத் தான் கருத்தைத் தெரிவித்தாள் பங்கஜவல்லியம்மாள்.

"துறவு மனம் இருந்தால் அவங்களைப்பற்றிப் பேச்சே இல்லை. துணைங்கறதே சேத்து வைக்கறதுதானே? அந்தப் பிரிவில் சோகமிருந்தால் நாளடைவிலே மறைஞ்சுடறது. ஒரு துணையை மறுபடியும் நாடறதும் கூட மனுஷ இயல்புதானே? இப்ப மறுமணம்கூட நம்ம சமூகத்திலே புது மரபா ஆயிண்டு வரது இல்லியா?"

"லோகத்திலே என்னதான் நடக்கலே?" என்று முணுமுணுத்தாள் பங்கஜவல்லியம்மாள்.

'லோகத்திலே நடக்கறது இருக்கட்டும். இந்தாத்திலே நடக்கறதுக்கு நியாயம் வழங்க வேண்டாமோ?' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்ட சீதா, அந்த வார்த்தைகள் வெளியில் வராமலிருக்கத் தடுப்பவள் போல் உதடுகளை அழுந்த மூடிக்கொண்டாள்!

'விதியேன்னு ஓர் இளம்பெண் விதவையாயிருந்தாலும் விடுவார்களா கொழுப்பெடுத்த ஆண்கள்-அதுவும் பணக்காரக் கொழுப்பெடுத்த பயல்கள்! மேலும் தங்களை அண்டியிருக்கிற அந்த மரபார்ந்த விதவைகளை விபச்சாரிகளாக்கலாமா, இந்தப் பாவிகள்! இப்படி எங்கேயானும் லோகத்திலே நடந்தாலும் ஓர் ஆத்திலே நடக்கவிடலாமோ? அந்த அகத்திலே மங்கலம் தங்குமோ?

மரியாதை வாழுமோ? உங்கள் பவிஷுக்கு மரபு ஒரு கேடு!' என்று சீதாவின் மனம் அலறி அலறிக் குமைந்தது என்றாலும் தன் தாயை விடவும் வயதில் மூத்த இந்தக் கிழவியிடம் அத்துமீறி எதையும் பேசிவிட அவள் மனம் துணியவில்லை.

"நீங்க யோசிச்சு வையுங்க...மரியம் வந்து நீங்க சொல்றதை எழுதிண்டுடுவா..." என்று சொல்லி விட்டு அங்கிருந்து அகன்றாள் சீதா.

அறைக்குள் போனதும் டாக்டர் கிரிதரனுக்கு டெலிபோன் செய்தாள்.

மருத்துவச் சிறப்பிதழ் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், புகைப்படங்கள் ஆகியவற்றை டாக்டரின் பார்வைக்கு 'அனுப்பி வைத்தது வந்து சேர்ந்ததா?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

"அதுக்குத்தான் போன் பண்ணினேன். நீங்க 'பிஸி'யா இருக்கிற நேரமாச்சே..." என்று அவனிடம் அதிக நேரம் பேச மனமிருந்தும் தயங்கினாள் சீதா.

"பரவாயில்லை. இங்கே, அதிசயமா இன்னிக்கு அவ்வளவு கூட்டம் இல்லை."

"இப்ப என்ன பண்ணிண்டிருக்கீங்க?"

"காளிதாசனின் மேகதூதம் எதிரே இருக்கு புரட்டிண்டு இருக்கேன்...

சீதாவும் அதைப் படித்திருக்கிறாள். பிரிந்திருக்கும் காதல் உள்ளங்களுக்கு நிரந்தரமாகத் தூது சொல்லிக் கொண்டிருக்கும் மேகதூதத்தின் கவிதை வரிகள் அவள் மனத்துள் ரீங்கரித்தன.

"நான் அதை சம்ஸ்கிருதத்தில் படிச்சதில்லை... அப்பா படிக்கக் கேட்டிருக்கேன்... சம்ஸ்கிருதத்திலே, நான் தமிழ்லே படிச்சிருக்கேன். நீங்க?"

"எனக்குக் கொஞ்சம் சுமாரா சம்ஸ்கிருதப் பயிற்சி உண்டு" என்று அடக்கத்துடன் சொன்னான் கிரிதரன்.

"உங்களோட என்னென்னமோ பேசணும்னு தோண்றது...ஆனா நேர்ல பார்த்தால் பேச முடியலே..."

"டெலிபோன்லே முடியுமா? ம்...முடியாதுன்னா முடியும் போது பேசறது."

"ம்... என்றாள் சீதா.

"இப்ப ஓய்வாத்தானிருக்கேன். பேசலாமே."

"என் சொந்த விஷயங்களைப் பத்திப் பேசறதுக்குப் போன் சரியில்லை. நேரிலேயே பேசுவோம்...அடுத்த ஞாயிறு சானடோரியம் போவோமில்லையா? அப்ப பேசலாம்" என்றாள் சீதா.

"சரி. மிஸ்டர் சுகுமாரன் இருக்காரா?" என்று விசாரித்தான் கிரிதரன்.

"தெரியலை. நான் இப்பத்தான் வந்தேன். பார்த்துச் சொல்லவா?"

"வேண்டாம். சும்மாதான் கேட்டேன். நீங்க அனுப்பிய கவர் இன்னும் பிரிக்கப்படாமல் இதோ இருக்கு. நாளைக்கு வந்து வாங்கிண்டு போறேன்னு சொல்லிட்டுப் போனான் உங்க ஆபீஸ் பையன்."

"முடிந்தால் அதை வாங்கிண்டு போக நானே வந்தாலும் வருவேன்."

"வெல்கம்!"

போனை வைத்த பின், உணர்ச்சி வசமாகித் தன் உடம்பு நடுங்கிக் கொண்டிருப்பது கண்டு வியப்படைந் தாள் சீதா.

"என்ன பேசப் போகிறேன்...எனக்கு என்ன பிரச்னை? எனக்கு என்ன வேண்டும்?..." என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட பின் "அவரோடு

பேச வேண்டும்” என்று வாய்விட்டுத் தனிமையில் சொல்லிக் கொண்டாள் சீதா.

## 48

“இந்தப் பேட்டியிலே கலந்துகொண்டு ஆலோசனை சொல்கிறவங்க யாருடைய பேரையும் நாங்க வெளியிடறதாக இல்லை. அதனாலே நீங்க தயங்க வேண்டாம். சரி. கேள்விகளை நான் படிக்கறேன். நீங்க சொல்ற பதிலை எழுதிக்கிறேன். களைப்பா இருந்தால் சொல்லுங்க. நிறுத்திக்கலாம். இன்னொரு சமயம் வந்து மீதியை எழுதிக்கறேன்” என்று விளக்கியவாறு பங்கஜவல்லியம்மாளின் அறைக்குள் வந்து அமர்ந்தாள் மரியம்.

“நீங்க எத்தனை வயதில் விதவை ஆனீர்கள்? எத்தனை குழந்தைகள்?’ போன்ற கேள்விகளைக் கேட்காமலே அறிந்து எழுதிக் கொண்ட மரியம்,

“இளம் வயதில் விதவையாகிற பெண்களைப் பார்க்கும் போது, நம்முடைய மகளைப்போல் கருதி அவர்களைப் பற்றி நீங்கள் அனுதாபப்படுவதுண்டோ?”

“அனுதாபப்படறது உண்டு; நான் பொண் பெக்காதவ பாரு. ‘ஐயோ பாவம், இந்தப் பெண்ணின் தலை எழுத்து இப்படியாச்சே’ன்னு வருத்தமாய் இருக்கும். என்வயிற்றில் பெண் பிறக்காததால் அவர்களை என் மகள்போல் பொய்யாக எனக்கு நினைக்க முடியலே.”

“அப்போ, ஒருத்தி இளம் வயதிலே விதவையா யிடறது அந்தப் பெண்ணின் தலைஎழுத்து என்கிறீர்களா?”

“ஆமாம்...”

“அந்தத் தலைஎழுத்தை இக்காலத்திலே மாத்தி எழுதிக் கொள்கிறார்களே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?”

“இந்தக் காலத்திலே அது ஒண்ணும் பெரிய தப்பு இல்லே. ஆனாலும் எல்லாருக்கும் அது சாத்தியமாகாது. சரியுமாகாது.”

“மனைவியை இழந்தவர்கள் இரண்டாம் தாரமாக மணம் செய்து கொள்கிறபோது இளம் விதவைகளையே அவர்கள் தேர்ந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரு யோசனையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?”

பங்கஜவல்லியம்மாளின் கண்ணிமைகள் சுருங்கின. தன் மகன் சுகுமாரன்கூட முதல் மனைவியை இழந்தவன் என்கிற விஷயத்தையே மறந்திருந்தவளுக்கு இந்தக் கேள்வி அதைக் கிளறி விட்டது போலாயிற்று. அவள் அது குறித்துச் சிறிது யோசித்தாள்.

“இந்த யோசனை அவாவாளுக்கே வந்தால் நல்லதுதான். ஆனா பெத்தவாளே ஒரு பையனுக்கு அப்படி நடத்தி வைக்க முடியாது...அதை நினைச்சுக்கூட பார்க்க முடியலே... என்றாள் பங்கஜவல்லி.

“இளம் விதவைப் பெண்ணுக்கு மறுமணம் செய்து வைக்கிறதைப் பற்றி?”

“இதுவும் அவா அவா மனசைப் பொறுத்தது.”

“இளம் விதவைகள் மறுமணம் செய்துகொண்டு வாழறதை விரும்புவார்களானால் பெற்றோர்களே முன்வந்து செய்யலாம் இல்லையா?”

“எல்லாப் பெற்றோர்களாலும் முடியாது. பெற்றோர்கள்னா அவா மட்டும் யாரு? அவாளும் இந்த லோகத்தைச் சேர்ந்தவாதானே. அப்படியெல்லாம் நடந்தால் தடுக்கமாட்டா. தடுக்க முடியாததை எல்லாம் நடத்தியா வைக்க முடியும்!”

“இன்னொரு தடவை சொல்லுங்க. அப்படிப்பட்ட மறுமணம் தங்கள் பெண்ணுக்கோ பையனுக்கோ நடந்தால் பெற்றவர் தடுக்க மாட்டார்கள். அப்படித் தானே?” என்று எழுதியவாறே கேட்டாள் மரியம்:

“பொதுவா இளம் வயதில் வைதவ்யம்கறதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”

“எந்த வயதிலேயும், விதிவசமா ஒரு பெண் தன் புருஷனை இழந்துட்டா, ‘இத்தோட போறும் இந்த வாழ்க்கை’ன்னு ஆத்மார்த்தமான ஒரு சந்நியாச வாழ்க்கை வாழ்ந்துடறது உத்தமம்னுதான் நான் நினைக்கிறேன். ஆனால் இந்தக் காலமும், மனுஷாளும், அவா தலையிலே இருக்கிற கருத்துக்களும், அவா பேசற பேச்சும் சிந்தனையும் ஒரு இளம் விதவையின் மனஉறுதியை ரொம்பத்தான் சோதிக்கறதுகள்...அந்த உறுதியில்லாதவா மறுமணம் செய்து கொண்டால் தப்பில்லைன்னு சொல்லுவேன்!”

“அப்படின்னா எது தப்புன்னு சொல்றீங்க?”

பங்கஜவல்லியம்மாள் தான் சொல்ல நினைப்பதைக் கோர்வைப்படுத்திக் கொண்டு சொன்னாள்: ‘வைதவ்ய உறுதியுமில்லாமல், இந்தக் காலத் தைரியமுமில்லாமல் ரகசியமா மனசாலேயும் உடம்பாலேயும் கெட்டுப் போறதுன்னா... யாராயிருந்தாலும் அது தப்புத்தான்...

“அப்படின்னா, இளம் விதவைகள் ஒழுக்கத்துடன் கௌரவமா வாழனும்னா மறுமணம் அவசியம்கிற கருத்தை நீங்க ஆதரிக்கிறீங்கன்னுதானே அர்த்தம்?”

“ஆமாம்” என்று மௌனமாய்த் தலையாட்டினாள் பங்கஜவல்லி. பேட்டி முடிந்ததும் விடை பெற்றுக் கொண்டு போனாள் மரியம்.

மரியம் போன பிறகும் பங்கஜவல்லியம்மாள் அந்தப் பேட்டி குறித்தே சிந்தித்தாள்.

சீதாதான் இதையெல்லாம் தன்னிடம் கேட்பதற்கு மரியத்தைத் தயார்ப்படுத்தி அனுப்பியிருக்கிறாள் என்று புரிந்தது அவளுக்கு. 'நல்லவேளை, இந்தப் பேட்டியின் போது மீனா இல்லை' என்று நினைத்துத் திருப்தி கொண்டாள் பங்கஜவல்லி.

**ம**ரியத்துடன் காரில் அலுவலகம் போகிற வழியில் "டாக்டர் கிரிதரன் கிளினிக்குக்குப் போப்பா" என்று டிரைவரிடம் சொன்னாள் சீதா. மரியம் பக்கவாட்டில் திரும்பி சீதாவைப் பார்த்தாள். சீதாவின் முகம் நிர்மலமாய், கண்கள் பிரகாசமாய் இருப்பதேபோல் அவள் எண்ணங்கள் மேலானவையாய் இருக்கின்றன என்பதில் மரியத்துக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆயினும் இவளது வாழ்க்கையில் நடக்கிற நிகழ்ச்சிகளும் இவள் சொல்லுகிற ஒவ்வொரு சேதியும் மரியத்துக்கு அதிர்ச்சி தந்தே வந்திருக்கின்றன. அதில் ஒன்று, அவள் கடைசியாக சீதாவின் மூலம் அறிந்த சுகுமாரன்-மீனா விவகாரம். ஒரு முகச் சுளிப்புக் கூட இல்லாமல், தான் துளியும் சம்பந்தப்படாத யாரோ இருவர் பற்றிய கதை போல், நல்லெண்ணத்துடன் எப்படி இவளால் இந்த விஷயத்தை அணுக முடிகிறது என்று வியந்தாள் மரியம். சுகுமாரன்-மீனா இருவருக்கும் மறுமணம் செய்து வைப்பதன் மூலம் தனக்கு விடுதலை கிட்டும் என்று சீதா நம்புவது மரியத்துக்குப் புரிந்தது. சீதாவின் இந்த முயற்சி வெற்றி பெற வேண்டும் என மரியமும் விரும்பினாள்.

கிரிதரனின் கிளினிக்கை அவர்கள் அடைந்தபோது வழக்கம்போல கைக்குழந்தைகளுடன் நிற்கிற குப்பத்துப் பெண்களின் கூட்டம் நிறைந்திருந்தது. நோயாளிகளைப் பரிசோதிக்கிற ஸ்கிரீனுக்கு மறைவில் ஒரு குழந்தையின் வீறிட்ட அலறலும், 'இஞ்செக்ஷன்' செய்தபின் குழந்தைக்குச் சமாதானம் சொல்லிக் கொஞ்சுகிற கிரிதரனின் குரலும் வெளியில் கேட்டது. கையில்

சிரிஞ்சுடன் வெளிப்பட்ட டாக்டர், சீதாவையும் மரியத்தையும் கண்டு உற்சாகத்துடன் வரவேற்றான்.

"ஒன்றும் அவசரமில்லை. நாங்கள் காத்திருக்கிறோம்" என்றாள் சீதா. இருவரும் டாக்டர் மேசையின் எதிரே இருந்த இரண்டு நாற்காலிகளில் அமர்ந்தனர்.

ஒரு வேலையாளை அனுப்பி, தான் ஏற்கெனவே பார்த்து வைத்திருந்த மருத்துவச் சிறப்பிதழ் கட்டுரைகளையும், படங்களையும் கொண்டு வரச் சொல்லி விட்டு, நோயாளியின் வரிசையில் நின்றிருந்த ஒரு கிழவியை அழைத்துப் பரிசோதித்தான் கிரிதரன்.

கிழவிக்குக் காது செவிடு. எனவே உரத்த குரலில், அவளை அவன் விசாரித்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கிழவி தனது உடம்பு பற்றி மட்டுமல்லாமல் தனது நெடிய வாழ்க்கையில் நேர்ந்த பல குறைகளையும் அவனிடம் சொல்லிப் புலம்பினாள். கிரிதரன் அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி மருந்து கொடுத்து ஒரு குழந்தையைத் தேற்றுவதுபோல் தைரியம் கூறி அனுப்பினான். போகும்போது அந்த ஏழைக் கிழவி கிரிதரனின் கால்களைத் தொட்டு ஈரம் கசிகிற தனது கண்ணிமைகளில் ஒத்திக் கொண்டு, "ஸ்ரீ ராமச்சந்திர பிரபு. புருஷோத்தமன்..." என்றெல்லாம் புகழ்ந்தவாறே போனாள். சீதாவுக்கு அந்தக் காட்சி மெய்சிலிர்ப்புத் தந்தது.

அங்கே வரிசையாய் அமர்ந்திருந்த ஏழைமக்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் பார்த்தாள் சீதா. இவர்களுக்குத்தான் இந்த டாக்டரின் மீது எவ்வளவு நம்பிக்கை! எவ்வளவு அன்பு!...

நடுவில் ஒரு தடவை வந்து தான் பார்வையிட்ட கட்டுரைகளைப் பற்றிப் புகழ்ந்து சொல்லிவிட்டுப் போய்த் தன் பணிகளில் மறுபடியும் முனைந்தான் கிரிதரன்.

"வந்த வேலை முடிந்தது. புறப்பட வேண்டியது தானே?" என்பதுபோல் சீதாவைப் பார்த்தாள் மரியம். அதை கவனிக்காத சீதா கிரிதரனையே பார்த்துக் கொண்டிருந்தாள். தானும், அதோ, அவன் பக்கத்தில் இருந்து அவனது பணிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறாளே-அந்த நர்ஸ், அது போல ஆகி விடலாகாதா? என்று கற்பனை செய்தாள் சீதா. 'இந்த கிரிதரன் மக்களின் அன்பை மலை மாதிரி சுமக்கிறார்- இவரே புருஷோத்தமன், என்று மனத்துள் சொல்லிக் கொண்ட சீதா "எது மனிதனை, உத்தமனாக- புருஷோத்தமனாக ஆக்குகிறது?" என்று வாய் விட்டுக் கேட்டாள். அவள் கிரிதரனின்மேல் வைத்த பார்வையை மாற்றாமல் கேட்ட பாவனை, தனக்குள்ளாக அவள் தனி மொழி பேசிக் கொள்வது போலிருந்தது மரியத்துக்கு. தனது கேள்விக்கு அவளே பதில் சொல்லிக் கொண்டாள். "அன்பு, சேவை, துன்புறுவோர்க்குத் துணையாய் நிற்பது-இதெல்லாம்தான்."

தாங்கள் இருவரும் அங்கே வந்து அரைமணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டதை உணர்ந்த சீதா புறப்பட்டாள்.

கிரிதரனுக்கு நன்றி சொல்லும்போது அவனோடு கைகுலுக்கினாள் சீதா.

வரும் வழியிலும், ஆபீசுக்கு வந்த பிறகும் அவள் மௌனமாக ஏதோ நினைவுகளில் அமிழ்ந்தவள் போல் காணப்பட்டதால் மரியமும் அவளிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.

"எனக்கு ஒரு சோதனை வந்திருக்கு" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்த மரியம் ஒரு கடிதத்தை எடுத்து சீதாவிடம் நீட்டினாள்.

புரூப் திருத்திக் கொண்டிருந்த சீதா, மாரியம்மாள் என்ற பெயரில் முகவரி எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை

மேலாகப் பார்த்தாள். புரூப் திருத்திக்கொண்டே "என்ன சோதனை? விஷயத்தைச் சொல்லு"என்றாள்.

மரியம், சீதா புரூப் திருத்தி முடிக்கும்வரை காத்திருந்தாள். கிராமத்திலிருந்து வந்திருக்கும் அந்தக் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தபோது வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள் மரியம்.

"எங்கள் ஆசை மாரியம்மாளுக்கு உன் மாமனும் மாமியும் எழுதின கடுதாசி. சமாசாரம் என்னன்னா, இப்பவும் உன் முறை மாப்பிள்ளையும் என் மூத்த மகனுமான மண்ணாங்கட்டி கண்ணாலங் கட்டினா உன்னைத்தான் கட்டிக்கறதுன்னு காத்துக்கிட்டு இருக்கான். நீ என்ன தான் படிச்சாலும் உத்தியோகம் பார்த்தாலும் இப்படியே எம்மாங் காலம் இருப்பே? நம்ப தோல் மண்டி சாயபு எஜமான்கிட்டயும் உன் கண்ணால விசயமாப்பேசி, அவுரு சம்மதத்தோடதான் எழுதறோம். வரப் போற தைமாதம், பெரியவங்க முன்னாலே கண்ணாலம் நடத்த நாள் குறிச்சு எழுதறோம். நீ நல்லபடியா கண்ணாலத்துக்குத் தயாரா ஊர் வந்து சேரணும்...இப்படிக்கு உன் மாமன் செங்கேணி."

மரியம் வாய்விட்டு படித்துக் காட்டினாள்.

"ஏய்! எனக்கு நீ சொல்லவே இல்லியே-உனக்கு ஒரு முறை மாப்பிள்ளை இருக்கிற விஷயத்தை!... என்று பரிகாசம் பண்ணினாள் சீதா.

''முறை மாப்பிள்ளை-பேரைக் கவனிக்கலே? மண்ணாங்கட்டி!'' என்று சொல்லிச் சிரித்தாள் மாரியம்மாள்.

"ஒரு பேர்லே என்ன இருக்கு இங்கிலீஷ்லே 'வுட்' 'ஸ்டோன்'னு எல்லாம் இல்லியா? அது சரி, வாட் இஸ் ஹீ?' என்று விசாரித்தாள் சீதா.

'அதுக்குப் படிப்பு கிடிப்பு ஒண்ணும் கிடையாது. நான் சாணி பொறுக்கிக்கிணு இருந்தப்ப 'அது' மாடு

மேச்சிக்கினு என்னைச் சுத்திக்கினு கெடக்கும்... அப்பல்லாம் எனக்கும் 'அது' மேலே பிரியமாத்தான் இருந்திச்சு-" என்று அவள் சொல்லச் சொல்ல, மரியம் என்கிற இந்தப் பட்டதாரிப் பெண் பரட்டைத் தலையும் இடுப்பில் சாணிக் கூடையுமாய் மாறி எதிரில் நின்று பேசுவது போலிருந்தது சீதாவுக்கு-ஒரு சிரிப்புடன் கேட்டாள்: "அது என்ன 'அது அது'ன்னு?"

"அப்படியே பேசி நினைச்சுப் பழக்கமாயிட்டுது" என்று வெட்கத்துடன் சிரித்தாள் மரியம்.

"சரி, என்ன உன் முடிவு?"

"முடிவு நான் ஏற்கெனவே பண்ணி இருக்கறதுதான். அது யாரையாவது திருமணம் பண்ணிக்கிட்டா ரொம்ப சந்தோஷம். நான் திருமணம் இல்லாம சுதந்திரமா வாழ்ந்துடுவேன். திருமணம் பண்ணிக்கிறதுன்னா 'அதை'-" என்று நிறுத்தி நாக்கைக் கடித்து 'அவரைத்தான்' என்று திருத்திச் சொன்னாள் மரியம்.

"ஆனால்...இப்ப நான் படிச்சு உயர்ந்த நிலைமைக்கு வந்தப்புறம் அந்த வாழ்க்கை எப்படியிருக்குமோன்னு பயமா இருக்கு"

"பயம் என்ன இதில்?...நீ அந்த மனுஷாளைவிட உயர்ந்திருக்கிறது உண்மையானால் நீ பயப்படுவானேன்?"

"பயம்னா...ஒரு அசூசை...படிக்காத பாமரப் புருஷன் என்னை எப்படி நடத்துவானோங்கிற பயம்தான்...அந்த அவமதிப்பான வாழ்க்கையைப் பத்தி ஒரு அருவருப்பு..."

"இதுக்கெல்லாம் அர்த்தமில்லே, மரியம். ஏதோ ஒரு காலத்திலே ஒன்றை உண்மையாகவே நாம விரும்பி யிருந்தால், பின்னர் நாம மாறினால் அந்த விருப்பமும் மாறி விடுமோ? உனக்கு விருப்பம்தான்னா வேற புறக்காரணங்களைப் பொருட்படுத்தாதே. படிக்காத புருஷனுக்குப் படிச்ச மனைவி அமையறது, அவன் படிச்சவனாகறதுக்கு ஒரு வாய்ப்புத்தானே?...உனக்குத்

தெரிஞ்சதையெல்லாம் அவனுக்குக் கற்பிக்கறதையே நீ வாழ்க்கையாக்கிக்கணும் உனக்கு எல்லா நலன்களும் பெருக வேண்டும்" என்று வாழ்த்தி மரியத்தின் கரத்தைப் பற்றிக் குலுக்கினாள் சீதா.

மரியத்தின் கண்களிலிருந்து ஏனோ கண்ணீர் பெருகி வழிந்தது. ஆயினும் அவள் சீதாவைப் பார்த்துக் கண்ணீருடன் புன்னகை புரிந்தாள்.

"தாங்க் யூ சீதா..."

## 49

"நான் சீதா-நீங்கதானே பேசறேள்?"

"ஹாய் டார்லிங்"

"ஃப்ரீயா இருக்கேளா? பிஸீயா இருக்கேளா?"

"என்ன விஷயம்? உனக்காக ஃப்ரீயாக்கிக்கறேன்."

"உங்களோட ரொம்ப முக்கியமா-அந்தரங்கமா பேசணும்."

"ஓ எஸ். வித் பிளஷர்! நான் வரவா? நீ வரயா?"

"நீங்களே வாங்கோ..." என்று ரிஸீவரை வைத்த பின், தனது அலுவலக அறையில் தனிமையில் உட்கார்ந்திருந்தாள் சீதா.

'மாரியம்மாள் ஊருக்குப் போயிருக்கிறாள். வருவாளாம். வந்தால் வரவு; வராவிட்டால் நினைவு. எவ்வளவோ சினேகிதர்கள் எவ்வளவோ பேருக்கு ஏற்படுகிறார்கள். பாலிய சகிகள்; பள்ளிக்கூடத் தோழிமார்; உடன் பிறந்தோர்; உற்றார் பெற்றார் உறவினர் எல்லாருமே ஒருவகை சினேகிதம் தான்; மனசுக்கு இதம் தரும் ஒரு நினைவுதான்' என்று எண்ணமிட்ட சீதா, தனது

சோவியத் சினேகிதி காத்ரீனாவை நினைத்துக் கொண்டாள்...

இன்னும் சற்று நேரத்தில் வரவிருக்கும் சுகுமாரனைக் கூட ஒரு சினேகிதனாகவே பாவித்து அவனுக்காக அவள் காத்திருந்தாள். அவள் முன்னால் மேசையின் மேல் இரு தினங்களுக்கு முன் வெளியான அந்த வாரத்திய 'சுதந்தரி' இதழ் இருந்தது. அதன் அட்டையில் 'இளம் விதவைகளுக்கு-சிறப்பிதழ்' என்று சிவப்புப் பட்டையில் எழுத்துக்கள் ஜொலித்தன. அட்டைப்படம்-ஓர் அழகிய, பால் வடியும் பால்ய விதவைப் பெண்ணின் முகத்தில் மூடிய பெரிய விழிகளில் படிந்த இமைகள் பிரதானமாய் மிளிர அச்சிடப்பட்டு, பல்லாண்டுக்காலப் பெண்குலத்தின் சோகத்தை நிரப்பிக் கொண்டிருந்தது. சீதாவின் விழிகள் அதைச் சற்று நேரம் வெறித்தன.

அவள் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டினாள். பலதரப்பட்ட இளம் விதவைகளின் இதயக் குமுறல்கள் பல பேட்டிகளாகவும், கட்டுரைகளாகவும், கடிதங்களாக வும் அதனுள் நிரம்பி இருந்தன. அவர்களின் கருத்துக்களும் விவாதங்களும் புரட்சிகரமானதாகவும் அதே பொழுதில் புழுங்கித் தவிக்கிற பொருமல்களாகவும் இருந்தன.

இன்னொரு பகுதியில் வயது முதிர்ந்த வெகுகாலமாய் வைதவ்ய விரதத்தை அனுசரித்து வருகிற பெரிய மனுஷிகளின் ஆலோசனைகளும் அறிவுரைகளும் அவர்களின் சிலரது படத்துடன் வெளியாகியிருந்தன. அவற்றில் சிலரது படங்கள் வெளியிடப்படாமல், பெயர் வெளியிட விரும்பாதவர்களின் வரிசையில் "இளம் வயதில் மனைவியை இழந்த ஒரு தொழிலதிபரின் விதவைத் தாயார்"என்ற குறிப்புடன் பங்கஜவல்லியம் மாளின் கருத்துக்கள் ஒரு நடுப்பக்கத்தில் பெரிதாகப் 'பெட்டி' கட்டிப் பிரசுரமாகியிருந்தது.

ஆபீஸ் பையன் எழுந்து நின்று சலாம் செய்து அறை கதவைத் திறக்க உள்ளே வந்த சுகுமாரனை ஒரு புன்னகையுடன் வரவேற்றாள். சீதா.

"இந்த வாரம் சுதந்தரி' படிச்சீங்களா?' என்று கேட்டாள்.

"'இல்லை" என்று தலையசைத்த சுகுமாரன் "வர வழியிலே கடைகளிலே தொங்கறதைப் பார்த்தேன். என்ன விசேஷம் இதிலே?" என்று தன் முன் சீதா நீட்டிய பத்திரிகையை வாங்கிப் புரட்டினான்' ஒரு மாதர் நலப் பத்திரிகைக்கு அவசியமான 'சப்ஜெக்ட்' தான் என்று நினைத்துப் புன்னகை புரிந்த வண்ணம் அதன் பக்கங்களை ஒரு முறை புரட்டிப் பார்த்தான்.

"இந்த நடுப்பக்கத்தில் இருக்கிறதை மட்டுமாவது படித்துப் பாருங்கள்" என்று அந்தப் பக்கத்தைப் பிரித்து அவனிடம் மறுபடியும் பத்திரிகையைத் தந்தாள் சீதா. பெயர் வெளியிட விரும்பாத வரிசையில் தந்திருந்த விளக்கத்தை படித்த மாத்திரத்தில் அது தன் தாய் பங்கஜவல்லியம்மாள் தான் என்று அவன் கண்டுகொண்டான்.

"மனைவியை இழந்தவர்கள் இரண்டாந்தாரமாக மணம் செய்து கொள்கிறபோது இளம் விதவைகளையே அவர்கள் தேர்ந்து கொள்ளவேண்டும் என்கிற யோசனையைப் பற்றி உங்கள் கருத்து என்ன"

"இந்த யோசனை அவாவாளுக்கே வந்தால் நல்லதுதான், ஆனால் பெத்தவாளே ஒரு பையனுக்கு அப்படிப் பாத்து நடத்தி வைக்க முடியாது. அப்படிப்பட்ட மறுமணம் தங்கள் பெண்ணுக்கோ பையனுக்கோ நடந்தால் பெற்றவர்கள் தடுக்க மாட்டார்கள்...

அப்புறம் இன்னொரு இடத்தில் பங்கஜவல்லி யம்மாளின் குரலே உறுதியாக ஒலிப்பது போலிருந்தது அவனுக்கு.

"பழைமை உறுதியுமில்லாமல், புதிய தைரியமுமில்லாமல் ரகசியமா மனசாலேயும் உடம்பாலேயும் கெட்டுப் போறதுன்னா, யாராயிருந்தாலும் அது தப்புத்தான்."

"அப்படி விதவைகளைக் கெடுக்கற ஆண்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"அது மகா பாபம்!"

"இளம் விதவைகள் ஒழுக்கத்துடன் கௌரவமா வாழணும்னா மறுமணம் அவசியம்கிற ஒரு கருத்தை நீங்க ஆதரிக்கிறீர்களா?"

"ஆமாம்" என்ற பங்கஜவல்லியம்மாளின் முத்தாய்ப்புடன் அந்தப் பேட்டி முடிவுற்றது.

திடீரென்று சீதா மந்தர ஸ்தாயியில் கேட்டாள்.

"நீங்கள் ஏன் மீனாவை மறுமணம் செய்து கொள்ளக் கூடாது?" என்று அவன் விழிகளை நேருக்கு நேர் உறுத்துப் பார்த்தாள்.

மிகவும் சாமர்த்தியசாலி என்று அவனும் நினைக்கிற இவளது அசட்டுத்தனம் சுகுமாரனுக்கு இப்போது நகைப்பையே உண்டாக்கிற்று.

'ஏதோ என் அம்மா அனுமதிக்க மாட்டாள் என்பதற்காகத்தான் மீனாவை கல்யாணம் செய்து கொள்ளாமல், இப்படி கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறேன் என்று நினைக்கிற இவளது எண்ணத்தையும் அந்த அம்மா அனுமதியைப் பகிரங்கமாகவே பெற்றுத் தந்து விட்ட இவளது காரியத்தையும் நான் பாராட்ட வேண்டுமாம்! அடி பைத்தியக்காரி!' என்று அவன் உள்ளூர அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் மௌனமாய்த் தனது கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாமல் இருக்கும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்ன, நான் கேட்டதுக்கு ஒண்ணும் பதில் இல்லை?” என்று மீண்டும் வினவினாள்.

“நோ ஆன்ஸர்!” என்று தொடங்கி அவன் ஆங்கிலத்தில் சொன்னான்:

“என்னைப்பத்தின ரகசியம் உனக்குத் தெரிஞ்சு இருக்குன்னா அதை நீ காப்பாற்ற வேணும்னு நான் எதிர்பார்க்கிறேன். அது போலவே உன் அந்தரங்கங்களை நானும் காப்பாத்துவேன். மீனா விவகாரம் உனக்குத் தெரிஞ்சதன் மூலம் நீ புரிந்துகொள்ள வேண்டியது இவ்வளவுதான். மற்றப்படி உன் கருத்துக்கள்–லட்சியங்களை எல்லாம் இந்த மாதிரி பத்திரிகையின் மூலம் நீ உலகத்துக்கு உபதேசம் பண்ணலாம்; எழுதலாம்; அச்சடிக்கலாம்; பத்திரிகை அமோகமா விற்பனையாகும். மற்றப்படி உன் வாழ்க்கையோட நீ விளையாடற மாதிரி நான் விளையாடிக் கொள்ளத் தயாராயில்லை...

“இன்னும் சொல்றேன் கேளு. நீ உன்னைச் சுற்றி ஒரு கோடு கிழித்துக் கொண்டு என்னை அத்துமீறி வராதேன்னு சொல்ற மாதிரி என் விஷயத்திலேயும் நீ வரம்பு மீறி இது மாதிரி வந்து யோசனை சொல்றது சரியில்லைன்னு நினைக்கிறேன்.”

“ஓ! மீனா பாவமில்லையோ?”

“பாவம்தான்...நான்கூட ஒரு பாவம்தான். இந்தப் பாவங்களுக்கு பகிரங்க முத்திரை குத்திப் புனிதமாக்குகிற காரியத்தை நீ ஒன்றும் மேற்கொள்ள வேண்டாம்...

“நீங்க அவளோடு ஒரு புருஷனும் மனைவியும் போல வாழ்கிறபோது அதைப் பகிரங்கப்படுத்திண்டால் என்ன கெட்டுப் போயிடுமாம்?”

“ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்” என்று பொறுமை யிழந்து சொன்னான் சுகுமாரன். “அவளே அதை யெல்லாம் கேட்கறது சரியில்லேன்னு, இருக்கிற வாழ்க்கையிலே திருப்தியாயிருக்கும்போது நீ ஏன்

இன்னொருத்தர் விவகாரத்திலே-உனக்கு சம்பந்தமில்லாத விவகாரத்திலே தலையிடறே?"

"நீங்க மீனாவை மறுமணம் செய்து கொண்டால் ஒழிய, அந்த வீட்டுக்குள்ளே நுழையறதுக்கு என் உடம்பு கூசும்!" என்று உறுதியாகச் சொன்னாள் சீதா.

"ஓ! அப்புறம் அது உன் விருப்பம்!" என்று கைகளைக் கோத்து மோவாயை ஏந்தியவாறு சீதாவைப் பார்த்தான் சுகுமாரன்!

"சீதா...நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கக் கூடாதுன்னு ஆயிரம் தடவை உணர்ந்தாச்சு...நிம்மதியும் சுகமும் இல்லாத ஒரு மனுஷனா ஆனது தவிர அதனால எனக்கு ஒரு பயனும் இல்லை. இதற்காகவெல்லாம் வருத்தப்படலே நான்-இப்பவும் நம் சொந்த வாழ்க்கை எப்படி சொந்தமில்லாத ஒரு வாழ்க்கையா போயிட்டாலும் ஒருத்தர்க்கு ஒருத்தர் உதவியா இருக்கணும்னுதான் நான் விரும்பறேன். மீனாவுக்கு என் மூலமா ஒரு குழந்தை பிறக்கறதைக் கூட நான் விரும்பலே. அதே சமயத்திலே உனக்கு ஒரு குழந்தை யார் மூலம் பொறந்தாலும் அதை என் குழந்தையாக நான் உலகத்துக்குப் பிரகடனப்படுத்துவேன்...

"நான் சமீபத்திலே தெலுங்குலே ஒரு ராமாயணம் இருக்கறதாக் கேள்விப்பட்டேன். உனக்குத் தெரியுமோ? தெரியாதோ?... அதிலே ராவணனுக்கு சீதையைத் தூக்கிண்டு வந்தது பெரிய தப்புன்னு தெரிஞ்சு போச்சு. அவ மேலே இருந்த ஆசை போயிடுத்து. அவன் கடைசியிலே என்ன நினைக்கிறானாம்? எப்படியாவது ராமனை ஜெயிச்சு அவனுக்கே சீதையை வெகுமதியாக் குடுக்கணுமாம்...

"ஆனால் கடைசியிலே ராமனாலே வதம் பண்ணப் பட்ட ராவணனும் கும்பகர்ணனும்தான் சீதையின் வயிற்றிலே லவ-குசர்களாகப் பொறந்தார்களாம்.

அதுமாதிரி, நீ என்னை ராவணன்னு சொன்னாலும் அந்த மாதிரி ராவணனாத்தான் இருக்க விரும்பறேன்-நான்" என்று மனம் விட்டுப் பேசினான் சுகுமாரன்.

"சீ, சீ இது என்ன நியாயம்? அரக்கத்தனமான, மிருகத்தனமான நியாயமா இருக்கு. நீங்க நினைக்கிற மாதிரியும், இருக்கிற மாதிரியும் எல்லாராலேயும் இந்த நியாயத்தை ஏத்துண்டு ஒழுக்கமில்லாத வாழ்க்கை வாழ முடியாது..."

"ஒழுக்கம்-என்ன ஒழுக்கம்? நம்ம சவுகரியத்துக்கு ஏற்ற மாதிரி வாழ்க்கையை அமைச்சுக்கறதுதான் முக்கியம்!"

"உங்களிடமிருந்து நான் முற்றிலும் மாறுபடுகிறேன்... என்றாள் சீதா.

இருவரும் வெகுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தனர்.

சுகுமாரன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். அவனுக்குக் குடிக்கவேண்டும் போலிருந்தது.

"சரி, வீட்டுக்குப் போகலாம்" என்று எழுந்தான்.

"நான்தான் சொன்னேனே?...அது புனிதமான வீடு அல்ல. நான் அங்கே வரமுடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் சீதா.

"ஓ!" என்றொரு சிறு நகையுடன் அவளைத் திரும்பிப் பார்த்தான் சுகுமாரன். உணர்ச்சியற்ற பாவைபோல் உட்கார்ந்திருந்தாள் சீதா.

"மிஸஸ் சுகுமாரன்...நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம். எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் நீ ஏத்துண்டு இருக்கிற கடமைகளை நீ செய்வேன்னு நம்பறேன், நீ எங்கே இருந்தால் என்ன?...சௌகரியமாய் சந்தோஷமாய் இரு. இனிமேல் இது மாதிரி அபத்தமான யோசனைகள் எதுவும் எனக்கு வேண்டாம். போறும்-உன்னிடமிருந்து நான் எதுவும்

எதிர்பார்க்கவில்லை" என்று அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அவளிடம் கையை ஆட்டி விட்டுப் புறப்பட்டுப் போனான்.

வாசலில் சீதாவுக்காகக் காரும் டிரைவரும் காத்திருந்தனர். சுகுமாரன் தன் காரில் ஏறித் தனியே போனான். அவனுக்குக் கோபமோ வருத்தமோ இல்லை. குடிக்கவேண்டும் போலிருந்தது. மீனாவின் துணை வேண்டும் போலிருந்தது. இந்த சீதா 'வேண்டாம்' என்றுதான் எப்போதோ ஆகிவிட்டதே! இப்போது அந்த 'வேண்டாம்' வேண்டவே வேண்டாமாயிற்று!

இரவு எட்டு மணி வரைக்கும் சீதா தனிமையில் தனது அலுவலக அறையில் உலாவிக் கொண்டிருந்தாள்.

எட்டு மணிக்குப் பின்னர் கைப்பையுடன் புறப்பட்டு வெளியே வந்தாள். போர்டிகோவில் தனக்காகக் காத்திருக்கும் டிரைவரைப் பார்த்து "எனக்குக் கார் வேண்டாம், நீ காரைக் கொண்டு போயி வீட்டிலே விட்டுட்டுப் போகலாம்" என்று அனுப்பிவிட்டு 'எங்கே போகலாம்?' என்று குனிந்த தலையுடன் யோசித்தவாறே நடந்தாள்.

அலுவலகங்களில் பணிபுரிந்து விட்டு, தோளில் தொங்கும் பையுடன் அவளைப் போல் நாலைந்து பெண்கள் அந்த பஸ்ஸ்டாண்டில் நின்றிருந்தனர். அவர்களோடு சேர்ந்து நின்று கொண்டு விவேகாநந்தர் இல்லம் போகிற பஸ் வருகிறதா என்று பார்த்தாள் சீதா.

## 50

**சீ**தாபிராட்டியார் கூட ராவணனின் சிறையில் பதின்மூன்று மாத காலம் இருந்தாளாம்...இந்த சீதாவுக்கு

அந்தச் சிறையிலிருந்து ஓராண்டுக்குள்ளாக விடுதலை கிடைத்து விட்டது. பகைமையும், வெறியும், கொலையும், அழிவும் இல்லாமல் கிட்டிய விடுதலை...

இந்த விடுதலைக்குப் பிறகு எங்கே போவது என்று திகைத்த சீதா பஸ்ஸிலிருந்து இறங்கி ராமதாஸின் வீட்டிற்குப் போனாள். சாயங்காலம் அவனை ஆபீசில் சந்தித்த போது 'இன்று உங்கள் வீட்டுக்கு வரப் போகிறேன்' என்று சொல்லியிருந்தால்... அவன் இவளுக்காக இந்நேரம் வீட்டில் காத்திருப்பான். ஆனால் அப்போது இந்த நிலைமை அவளுக்கு ஏற்படவில்லையே!

சீதா ராமதாஸின் வீட்டிற்கு வந்தபோது அவன் இல்லை. அவனது தமக்கைதான் வரவேற்றாள். முன்னறையில் வழக்கம்போல் தங்கை கீதா படித்துக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்ட சீதா, தன்னைப் பார்த்து விட்டுக் கைவேலையைப் போட்டபடி வந்து நிற்கும் அம்புஜத்திடம் சொன்னாள்: "எனக்கு ஒண்ணும் அவசரமில்லை. இன்னிக்கு நான் உங்காத்திலேதான் இருக்கப் போறேன்...வேலையெல்லாம் முடிச்சுட்டு வாங்கோ, ராமதாஸ் வரபோது வரட்டும்" என்றாள்.

"எனக்கும் ஒண்ணும் வேலையில்லை. சப்பாத்திக்கு மா பிசைஞ்சுண்டு இருந்தேன்-இதோ வந்துட்டேன்" என்று சமையல் உள்ளுக்கு ஓடிப் பிசைந்து வைத்த மாவையும் அப்பளக் குழவி-மணையையும் எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்து இவர்களுக்கு துணையாகத் தானும் உட்கார்ந்து கொண்டாள் அம்புஜம்.

சீதாவுக்குத் தானே அந்தச் சப்பாத்தியை மணையில் குழவியால் பரத்தித் தர வேண்டும்போல் ஆசையாயிருந்தது. அது மாதிரியான உக்ராணப் பணிகளில் முன்பெல்லாம் அம்மாவுக்கு அவள் துணையாயிருந்த நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணிப் பார்த்து ஏங்குகிற அளவு, தான் தனது பிறந்த வீட்டுக்கு அந்நியமாகி

விட்டிருந்ததை உணர்ந்தாள் சீதா. சீதாவின் ஆசைக்காக அவளிடம் குழவியையும் மணையையும் தள்ளி வைத்தாள் அம்புஜம். சீதா ஒரு குழந்தை மாதிரி உதட்டை மடித்துக் கொண்டு சப்பாத்தி மாவு உருண்டையைக் கவனமாய் வட்டமாக்கிப் பரத்தினாள். பழக்கமில்லாமல் அவள் அதிக நேரம் எடுத்துக் கொண்டு சிரமப்பட்டாலும் சமமாகவும் சரியாகவும் சப்பாத்தியிடுவதை சகோதரிகள் இருவரும் குதூகலத்துடன் பார்த்து ரசித்தனர்.

"பேஷ்! பத்திரிகை எடிட்டர் வேலையைவிட இது கஷ்டம்னு தெரியறதா?" என்று கேட்டுக்கொண்டே ராமதாஸ் உள்ளே வந்தான்.

'இரவு மணி ஒன்பதாகப் போகிறது. எதிர்பாராமல் இந்த நேரத்தில் நான் இங்கு வந்திருப்பதை குறித்து இவன் ஆச்சரியப்படப் போகிறான்' என்று நினைத்திருந்த சீதாவுக்கு அவன் சாதாரணமாக எப்போதும் போலத் தன்னை வரவேற்றது சிறிது ஏமாற்றம் தந்தது. எனினும் சீதா, தானே அவனிடம் உற்சாகத்துடன் சொன்னாள்: "நான் சிறைமீட்சி அடைந்து விட்டேன்...எனக்கு விடுதலை!"

ராமதாஸ் முகம் மாறி யோசித்தான்.

"என்ன நடந்தது, சொல்லுங்கள்!"

"எல்லாம் நல்லதாகத்தான் நடந்தது; அப்புறம் சொல்கிறேன்...விவரமாய், இன்னிக்கு ராத்திரி நான் இவாளோட பேசிண்டே உங்காத்திலே கழிச்சுடுவேன். மரியத்தோட ஹாஸ்டல் ரூம் சாவி என்னிடம்தான் இருக்கு. இன்னிக்கு அதுக்கு நேரம் இல்லே, நாளையிலேருந்து நானும் அந்த 'ஓர்க்கிங் வுமன்ஹாஸ்டல்' உறுப்பினர்களிலே ஒருத்தியாயிடுவேன்..." என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சீதா.

"இப்பத்தான் நானும் கிரிதரனும் உங்களைப் பத்திப் பேசிண்டிருந்தோம். நான் அங்கேருந்துதான் வந்தேன்" என்றான் ராமதாஸ்.

கிரிதரனும் ராமதாஸும் தன்னைப் பற்றி என்ன பேசிக் கொண்டார்கள்? என்ன பேசிக் கொள்வார்கள்?" என்று யோசித்தாள் சீதா.

"அவர் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்?" என்று மட்டும் கேட்டாள்.

"பொதுவாகவே நமது பெண்களை அவன் அசோகவனத்துச் சீதைகள் என்றுதான் நினைக்கிறான். அதிலும் உங்களைக் குறிப்பாக 'இராமனில்லாத சீதை' என்று இன்றைக்குக்கூடப் பேசும்போது சொன்னான்" என்றான் ராமதாஸ்.

"சரி. ராமன் என்பவன் யார்? சீதை என்பவள்– ஒழுக்கம், கற்பு, உறுதி, சோதனைக்கு உட்படுதல், சோகத்தைச் சுமப்பவள் என்றெல்லாம் நமக்குப் புரிகிறது. அது போல் ராமன் என்பவன் யார்?" என்று அவள் ஏதுமறியாதவள் போல் கேட்டாள்.

வால்மீகியும் கம்பனும் விவரித்துள்ள ராம பிரதாபங்களை யோசித்து ஒரு பிரசங்கமே செய்யத் தயாரானான் ராமதாஸ். அவனைக் கையமர்த்தி விட்டு சீதாவே சொன்னாள்:

"ஆயிரம் பிரதாபங்கள் ராமனுக்கு உண்டு. ஆயினும் சீதையை சிறை மீட்பவனே ராமன்...அது ஏதோ ஒரு தனிமனித சாதனையல்ல, ' இக்காலச் சமூகப் பொருளில் 'சீதை சிறைமீட்சி' என்பது பெண் விடுதலையே ஆகும். அது ஒரு பெண்ணை ஒருவன் அழைத்துக் கொண்டு ஓடி விடுவது அல்ல. விடுதலை என்பது ரொம்பவும் சமூகம் சம்பந்தப்பட்ட விஷயம். எனவே பெண்ணடிமை ஒழிந்த ஒரு வாழ்க்கை ஏற்படுகிற வரை ராமனும் சீதையும் அருகருகே இருந்தால்கூட அவர்களிடையே மகா சமுத்திரம் போன்ற பேதங்கள் சூழ்ந்து அவர்களைப் பிரித்தே வைக்கும்...சுந்தரகாண்டத்தில் ராமன் இல்லவே இல்லை. இராவணாதிகளும் அரக்கிகளுமே உண்டு. அங்கே ஒரு திரிசடை உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக

ராமதூதன் உண்டு. சுந்தரன் என்பதே அனுமனின் பெயர்தானே?” என்று இடையில் ஒருமுறை கேட்டாள். அவள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தாள். அவள் சொல்லுகிற வாசகங்களின் உட்கிடக்கை ஒவ்வொன்றும் ராமதாஸுக்குப் புரிந்தது.

...அதனாலே சுந்தரகாண்டத்துச் சீதை ராமனில்லாத அசோக வனத்துச் சீதைதான். ஆனால் நம்பிக்கையில்லாத, தைரியமில்லாத சீதையல்ல. ராமன் உண்டு என்கிற, சிறைமீட்சி உண்டு என்கிற நம்பிக்கையும் உறுதியும் உடையவள்?” என்று கிரிதரனின் கருத்தை நிறைவு செய்தாள் சீதா.

அம்புஜம் வந்து இவர்களை இரவு போஜனத்துக்காக உள் கட்டுக்கு அழைத்துச் சென்றாள். பல குடித்தனங்கள் நிறைந்த அந்த வீடு இரவு பத்து மணியாகியும் சந்தடி மிகுந்திருந்தது. ரேடியோக்களும் டிரான்ஸிஸ்டர்களும் ஒவ்வொரு வீட்டிலும் சினிமாப் பாடல்களைப் பொழிந்து கொண்டிருந்தன. குழந்தைகள் பொது முற்றத்தில் நிலா வெளிச்சத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். இவ்வளவுக்கும் மத்தியில் ஏதோ தபஸ் செய்கிற மாதிரி எதனாலும் பாதிக்கப்படாமல் கீதா தனது படிப்பில் ஆழ்ந்திருந்தாள்...

“வா, சாப்பிடலாம்” என்று சீதா கீதாவை அவள் தோள் மீது கை போட்டு அழைத்துச் சென்றாள். ‘இந்தப் பெண் குழந்தைகளின் எதிர் காலத்திலாவது பெண்களின் தலைவிதி மாற வேண்டும்’ என்று பிரார்த்தனை செய்து கொண்டாள்.

“ஓ! அழகிய பெண்களே...நீங்கள் காதல் வயப்படுங்கள். ஆனால் மாஸ்கோகாரர்களிடம் அல்ல!” என்று ஒரு காலத்தில் உக்ரேனியப் பெண்களை எச்சரித்த அந்தக் கவியின் வாசகங்களும், சோவியத் சீதாவின் நினைவும் தோன்றின சீதாவுக்கு.

"ஏன் தாராஸ் ஷெவ்செங்கோ அவ்வாறு 'மாஸ்கோகாரர்களைக் காதலித்துவிடாதீர்கள்' என்று எச்சரித்தார்?" என்று ராமதாஸைக் கேட்டாள் சீதா. அவன் அந்தக் கவிதையின் வாசகத்தை உக்ரைன் மொழியிலேயே உச்சரித்துக் காண்பித்தான்.

"நீங்கள் மிக வேகமாக இன்னொரு மொழியைக் கற்றுக் கொண்டு விடுகிறீர்கள். எனக்குத் தமிழைத் தவிர-சம்ஸ்கிருதம்கூட ரொம்பச் சிரமம்..." என்று அவனைப் பாராட்டிச் சொன்னாள் சீதா.

"உக்ரேனிய மொழிக்கும், ருஷ்ய மொழிக்கும் வரிவடிவம் ஒன்றே, ஆனாலும் இரண்டும் வேறு வேறு பாஷைகள்..." என்று மொழி நயம் பேசலானான் ராமதாஸ்.

"மொழிகள் இருக்கட்டும் நான் அந்த எச்சரிக்கையைப் பற்றிப் பேசுகிறேன்" என்று தன் பக்கத்தில் சாப்பிட உட்கார்ந்திருக்கும் கீதாவும் கவனிக்கும் பொருட்டுத் தெளிவாகச் சொன்னாள் சீதா:

"அது ஏதோ ஒரு மொழியில், ஏதோ ஒரு காலத்தில், யாரைப் பற்றியோ, யாருக்கோ, யாரோ விடுத்த எச்சரிக்கையாகப் படவில்லை. பண பலம், அதிகாரம், மாதரை அடிமைகொள்ளுதல், விபசாரத்துக்கு விழா நடத்திப் புனிதப் படுத்துதல், பெண்களை இழிவுபடுத்தி நுகர்ந்து எறிகிற 'ஆண்மை' இதெல்லாம் நிலவுகிற எந்தவூர்க்காரனைப் பற்றியும் எக்காலத்துப் பெண்களும் மிகவும் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்று அது இன்றும் நமக்குச் சொல்லவில்லையா?" என்று கேட்டாள் சீதா.

கீதா குனிந்த தலை நிமிராமல் இவர்களது சம்பாஷணையைக் கிரகித்தவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"சீதா...நான் மொழிகளை மட்டும் தான் படித்திருக் கிறேன். நீங்கள் சமீப காலத்தில் நிறையவே படித்து

நிறையவே சிந்திக்கிறீர்கள்'' என்று பாராட்டினான் ராமதாஸ்.

"படிப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் ஏதாவது பயனிருக்க வேண்டுமென்றால் அதை வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டும் இல்லாவிட்டால் படிக்காமல், எதையும் அறியாமல் பாமரப் பெண்களாகவே இருந்து விடலாம்...இந்தக் காலத்தில் படித்த பெண்கள்-அறிவுள்ள வர்கள் அதனால் தான் சுயேச்சையாக இருந்துவிட விரும்புகிறார்கள்...அத்தகைய சுயேச்சையான வாழ்க்கைக்குப் படிப்பும் உத்தியோகமும்தான் ஆதாரம். ஆனால் அதையே பணயமாக வைத்து சற்றுத் தரமான அடிமைகளாகத் தங்களை ஆக்கிக் கொண்டு பல பெண்கள் அவதிப்படுகிறார்கள்...இல்லையா?'' என்று கேட்டாள் சீதா.

"அது எப்படி சீதா முடியும்? என்னதான் படிப்பும், உத்தியோகமும் இருந்தாலும் கல்யாணம் குழந்தை குட்டினு இருந்தால்தானே ஒரு பெண்ணுக்கு அழகு'' என்றாள் இவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்த அம்புஜம்.

"அந்த 'அழகைப்' பற்றித்தானே இவ்வளவு பேச்சும்! பெண் சுதந்திரமாகப் பிறர் தயவின்றி ஒரு பிரஜையாக வாழும்போது, அத்தகைய பெண்களின் தொகை ஒரு சமூகத்தில் பெருகும்போது இந்தக் கல்யாணங்களின் தன்மையே மாறிப்போகும்...அந்தச் சமூக மாற்றம் நிகழும் வரை இந்த நிலைதான். எந்த வாழ்க்கையிலும் உயர்ந்த லட்சியம் வேண்டும். அதனால்தான் இந்தக் காலத்து இளைஞர்கள் பலர் நம்ப ராமதாஸைப் போலவும், டாக்டர் கிரிதரனைப் போலவும் திருமணமில்லாமல் வாழ்கிறார்கள். அதுபோலப் பெண் மக்களும் இருக்கத்தானே வேண்டும்? அப்படி இருப்பவர்கள்தான் அந்த மாற்றத்தை உண்டாக்க முடியும்-மற்றபடி எவ்வளவோ தனிப்பட்டவர் கல்யாணம் பண்ணிண்டு

மனமொத்து வாழலேன்னா நான் சொல்றேன்?'' என்றவாறு சாப்பிட்டானதும் கையலம்ப எழுந்தாள் சீதா.

அன்றிரவு சீதாவும் ராமதாஸும் அம்புஜமும் வெகு நேரம் பல விஷயங்கள் குறித்துச் சம்பாஷித்தவாறு கழித்தனர். சீதா நேரத்தோடு படுக்கப் போய்விட்டாள்.

மறுநாள் சீதாவுக்குப் பொழுது புதிதாய் விடிந்தது! காலை நேரத்தில் சுப்ரபாத நாத ஊற்று எங்கிருந்தோ மெல்லெனச் சுரந்து விண்ணெலாம் பரவி வழிந்தது. பூந்தொட்டியில் வளர்க்கும் தனது செல்ல ரோஜாவுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தாள் சீதா.

தனது வாழ்க்கையின் புதிய அத்தியாயம் ஒன்றைத் துவக்கிவிட்ட குதூகலத்தில் சீதா அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த, ராமதாஸின் சகோதரிகளில் ஒருத்தியாய்த் தன்னை உணர்ந்தாள்.

தன்னைச் சேர்ந்தவர்கள், ஆப்தர்கள் நிறையப் பேர் இருப்பதாகவும், தனக்கு எண்ணிறந்த சகோதரர்களும் சகோதரிகளும் புடைசூழ இருப்பது போலவும் உணர்ந்து 'தான் தனியாகி விடவில்லை' என்பதை உறுதியாக அவள் மனம் பிரகடனம் செய்தது.

அம்மா அப்பாவையும் சிறிது காலம் கழித்து ஒரு நாள் பார்த்துத் தனது முடிவை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று அவர்கள் மீதுள்ள அன்பால் நினைத்துக் கொண்டாள். தனது சினேகிதி சுசீலாவை, 'வாழா வெட்டி, வாழா வெட்டி' என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த அப்பாவுக்கு அவரது மகளின் நிலையே நன்றாக இடித்துப் புத்தி சொல்லட்டும்! சீதாகூட ஒரு வாழா வெட்டிதான்–ஆமாம், சுந்தரகாண்டச் சீதாப் பிராட்டிகூட வாழாவெட்டிதான்! இங்கே வாழ்ந்து வெட்டுவதைவிட வாழாமல் வெட்டுகின்ற சுசீலாவின் வாழ்க்கை ஒன்றும் கெட்டுப் போகவில்லை...அவளையும் பார்க்கவேண்டும்-பாட்டியைக் கூடப் பார்த்து ரொம்ப நாளாச்சு...என்று நினைத்துக் கொண்டே ராமதாஸுடன்

தோளில் தொங்கும் பையோடு ஆபீசுக்குப் புறப்பட்டாள் சீதா.

இப்பொழுதெல்லாம் சீதா பஸ்ஸில்தான் பிரயாணம் செய்கிறாள்; பாதசாரிகளுடன் நடந்து போகிறாள்.

தோளில் மாட்டிய பையுடன், தலையில் கனக்கிற சுமையுடன்-பேதையாய், பெதும்பையாய், அரிவையாய், தெரிவையாய், மங்கையாய், மடந்தையாய், பேரிளம் பெண்ணாய்-எத்தனை யெத்தனை சீதைகள்! இவர்களுக்கும் இவர்களது ராமர்களுக்கும் இடையே ஒரு சமுத்திரமே புரண்டு கோஷிக்கிறதே!...

சுதந்தரிப் பத்திரிகை ஆசிரியரின் அலுவலக அறைக்குள் ராமதாஸ் கையில் ஒரு ஃபைலுடன் வந்து, தான் புதிதாக எழுதியுள்ள நாவலின் கையெழுத்துப் பிரதியை 'ஆசிரியரி'ன் பார்வைக்கு வைத்தான்.

ஃபைலின் மேல் பக்கத்தைப் புரட்டியதும் "ஹே! சீதே!...நீ எங்கிருக்கிறாய்?" என்ற அலறலுடன் ஆரம்பமாயிற்று பாரதனின் 'சுந்தரகாண்டம்' என்ற தலைப்புடைய அந்தப் புதிய சமூக நாவல்.

**முற்றும்**